
0152901
40
9152301





OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1939
MADRAS

215290

REGD. No. M. 2913. ARYADHARMAM Estd. 1915
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1½
தனிப்பிரதி ஒரணா.
மாதிரிப் பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்யஃ பரிபாலயந்தாம் யாய்யேன மார்கேண மஹீம் மஹீசாஃ ।
கோப்ராஹ்மணேப்யஶ்ஶுபமஸ்து நித்யம் லோகாஸமஸ்தாஸுகினோ பவந்து ॥

விளம்பர விபரம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஞ ஆனி-மீ 22உ 1939-ஞ ஜூலை-மீ 6உ | வா-27

ஆலயப்பிரவேசச் சட்டம்

'நாடெங்கும் எதிர்த்துப் பிரசாரம் செய்க'

ஸநாதனிகள் ஒருங்கு சேரவேண்டும்

மதுரை ராவ் சாஹேப் என். நடேசய்யர் அவர்கள் அறிக்கை

அகில இந்திய வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்கம், சென்னை மாகாண வர்ணச்ரமஸ்வராஜ்ய சங்கம், மதுரை தர்மசாஸ்திர சபை, முதலிய ஸபைகளின் தலைவரும் பிரபல ஸநாதன ப்ரமுகருமான ராவ்சாஹேப் ஸ்ரீ என். நடேசய்யர் விடுவித்த அறிக்கையாவது:—

"ஹரிஜனசேவா சங்கத்தார்கள்" என்று சொல்லிக்கொண்டு நமது சகோதரர்களில் சிலர்கள் சென்ற ஒரு மாதகாலமாக ஆலயப் பிரவேசக்கிளர்ச்சி விஷயமாக அதிவேகமாக ப்ரசாரம் செய்துவருவது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஸ்ரீ குருவாயூர் ஆலயத்தை பஞ்சமர்களுக்குத் திறந்துவிட வேண்டுமென்ற ஆரம்பிக்கப்பட்ட 1932ஞ்ச தீய பிரபல ப்ரயத்னங்களும் அவகளே அனுஸரித்த இந்திய சட்டசபைகளில் கொண்டுவரப்பட்ட சட்ட மஸோதாக்களும் வியர்த்தமாகப்போனபின், எப்படியாவது குருவாயூர் ஆலயத்தை திறந்த விடவேண்டுமென்ற நீசமானகோக்கத்துடன் "மலபார் ஆலயப் பிரவேசச்சட்டம்" நிறைவேற்றப்பட்டதும், எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். ஆனால் பல காரணங்களை முன்னிட்டும் முக்கியமாக கள்ளிக்கோட்டை ஸாமூரின் ராஜா (Zamorin) அவர்கள், கொல்லங்கோடு வாசு தேவராஜ அவர்கள், பாலக்காடு சங்காரா யணய்யர் அவர்கள், வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்கங்கள் முதலானவர்களின் தீவிரப்ரயத்னங்களினால் மேற்படிசட்டம் ஸர்டிபிகேட்டிற்கு வராமல் மிருதப்ராயமாயிருக்கிறது.

குருவாயூர் ஆலயப்பிரவேசத்தை நிறுத்திக்கொண்டு அவர்கள் இப்பொழுது ஏதோ சூக்ஷ்மமான யுக்திசெய்து அந்த குருவாயூர் ஆலயத்திற்கு பதிலாக மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயத்தையும், ஸ்ரீரங்கம் ரெங்கநாதஸ்வாமி ஆலயத்தையும், குறிவைத்திருக்கிறதாகத் தெரியவருகிறது. மலையாள ஆலய பிரவேச சட்டம் போன்ற சட்டமில்லாமலே மேற்படி ஆலயங்கள் இரண்டையும் எவ்விதமாவது ஒரு வாரம், பத்து தினங்களுக்குள் பஞ்சமர்களுக்குத் திறந்து விடவேண்டுமென்ற தீர்மானத்துடன் இடைவிடாமல் ஒவ்வொரு நகரங்கள் ராஜாங்கள்தோறும் சென்னை மாகாண மந்திரிகளும், காரியதரிசிகளும், மற்றமுள்ளோரும் சம்மேளனங்கள், கூட்டங்கள், உபன்யாஸங்கள் மூலம் செய்துவருகிறார்கள். இது விஷயம் தினசரி பத்திரிகைகள் வாயிலாக நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். வைஸ்ரிகிரிஷ்டான சென்னை பிரதானமந்திரியும் அதற்குப் பூர்ணமாக ஆதரவு அளித்து, மதுரையில் பகிரங்கமாக உபன்யாசம் செய்திருக்கிறார். அதன் ஸாரம்சம் யாதெனில், "ஆலய டிரஸ்டிகளும், எக்ஸிகியூடிவ் ஆபீசர்களும் நிர்பயமாக பஞ்சமர்களுக்கு ஆலயத்தை திறந்துவிடலாமென்றும், பஞ்சமர்கள் நிர்பயமாக ஆலயங்களில் பிரவேசிக்கலாமென்றும், அப்படி செய்வதினால் இவில், கிரிமினல் நியாயஸ்தலங்களில் ஸ்தனிகளில் எவரேனும் கடவடிக்கைகள் கடத்தம்பகஷத்தில் தானே முன்னணியில் நின்று ஒரு வரத்திற்குள் சட்டத்தை மீறி வேற்றி அவர்களை ரக்ஷிப்பதாயும் சபதம் கூறியிருக்கிறார்."

இந்த நிலைமையில் நாம் செய்யவேண்டியதென்ன என்பதை சொல்லவும்வேண்டுமா? சாதாசட்டம் நம்முடையவிட்டை கொளுத்தி நம்முடைய ஸ்நீகளே பரதிஷ்டத்தை இழக்கச்செய்து பாதகிக்கும் நிலைமையை அடையும்படி செய்துவருகிறது. ஆலயப்பிரவேச சட்டம் நம் ஆலயங்களுக்கு தீனவத்து ஜாதி தர்மம், வர்ணதர்மம் ஆசிரமதர்மங்களை தவம்ஸம்செய்ய ஏற்பட்டிருக்கிறது என்பது நிண்ணயம். இப்பொழுதாவது நம் முடைய நித்நிலையிலிருந்து எழுந்திருந்து நம் முடைய தர்மங்களையும் கரப்பாற்றிக்கொள்ளாமல் உதாசினமாக இருக்கலாமா? இவ்விதமான ஆபத்து முன் ஏற்பட்ட காலங்களில் நாம் ஒன்றுகூடி மதுரை டவுன் ஒவ்வொரு தெருவிலும் இதமுக்கியமான இடங்களிலும் தினந்தோறும் கூட்டம்கூடி ஸ்ரீர்சிகன்செய்து ஒருவிதமாக நமது கரியத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமில்லவா? இப்பொழுது இருக்கும் சமயம் முன்னைவிட மிகவும் நெருக்கடியாக இருப்பதால் முன் முயற்சிகளுக்கு பதின்மடங்கு மேல் தீவிர மானமுயற்சியுடன் நாம் தினந்தோறும் கூட்டம் கூடி பிரசாரம் செய்யவேண்டியது முக்கிய கடமையாக இருக்கிறது. ஆகையால் எல்லோரும் நம் உடல், பொருள், ஆவியனைத்தையும் இக்கரியத்திற்கு ஈடுபடுத்தி அமளி அடங்குகிறவரை ஒவ்வொரு கனமும் கடைபெறும் கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு வினயத்துடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத விஷயமாக மதுரையில் ஜூலை 22, 23உ களிலும் கும்பகோணத்தில் ஆகஸ்டு கடைசியிலும் மஹாநாடுகள் கடைபெறும்.

பல் வியாதிகள் கவனிக்கும் இடம்:— T. B. சிதாராம், டென்டிஷ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

நம்பிக்கை

(ஸ்ரீ எஸ். வைதீஸ்வர அய்யர், கல்கத்தா)

கடமைக்கு நிருத்தியைக்கொடுப்பது நம்பிக்கை. நிருத்தியில் அல்ப நிருத்தியும் பூர்ண நிருத்தியும் இருக்கிறது. பழங்கள் சாப்பிட்டால் சிறிது நிருத்தி. ஆஸல், இன்னொரு காளும் இடைக்குமென்று நம்புகிறோம். இதே மாதிரி எல்லா வியவகாரங்களிலும் நிருத்தியும் நம்பிக்கையும் இருக்கிறது. தனதான்ய புத்ரமித்ர களத்ராதிகளும், சீர்த்தியும் செல்வாக்கும் நிறைந்திருந்தால் மிகவும் அதிக நிருப்திதான் ஸாமர்த்யத்தில் தனக்கும் பிறருக்கும் நம்பிக்கை. ஆயினும் அவைகளை எவ்விதம் ரக்ஷிப்பது, ஸ்தாதிகன் ரக்ஷிப்பார்களா என்றெல்லாம் விசாரமும் கூடவே இருக்கிறது. யில்கள், டிரஸ்டிகள், ஏற்படுத்துகிறான். எல்லாம் ஒழுங்காய் நடக்குமென்றும் தவறினால் சந்தர்பாரே சாக்காருக்குத்தெரிவித்து ஒழுங்கு படுத்துவாரென்றும், நம்புகிறான். அழிவுள்ளவைகள் காலக்ரமத்தில் கேடுறுவது உலக இயல்பாதலால் அவன் நிருப்தியும் நம்பிக்கையும் பூர்ணமானதல்ல. எது அழித்து அழித்து நிரும்பவும் விரும்பப்படுகிறதோ அதெல்லாம் அல்ப நிருப்தியே கொடுக்கும். எது அழியாததோ எதை அடைந்தால் வேறு ஒன்றில் விருப்பமில்லையோ அதுவே பூர்ண நிருப்தியைக் கொடுக்கும். கடவுளே அழியாதவர். அவரை அடைவதே பூர்ண நிருப்திக்கு இடம். பூர்ண நம்பிக்கையே கடவுளை அடையச்செய்யும். பூர்ண நிருப்தியைக் கொடுக்கும். ஆகவே கடவுளை நம்புவதே நம்பிக்கை.

உலகமெல்லாம் கடவுள் சொத்து, தன்னொத்து விஷயமாய் அவர் வேத சாஸ்திரங்கள் எனும் உயில் எழுதி வைத்திருக்கிறார். தாய், தந்தை, குரு, அரசன், மூத்தோர் எனும் டிரஸ்டிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார். இவ்வைவரும் உயிலின் பிரகாரம் நடக்கப்பட்டவர்கள். அவ்விதம் நடக்கவில்லை. சர்க்காரும் கவனிக்கவில்லையென்றால் நாம் அழிவில்லாத வரும் பெரிய சர்க்காருமாகிய முதல்வனிடமே முறையிட வேண்டும். குழந்தைகள் தம்மேலடிருக்கும் வரையில் தாய் தந்தையர் அவர்களுக்கு கடவுள் நம்பிக்கையையும் நல்லொழுக்கங்களையும் கற்பிக்கவேண்டும். குரு வித்யான்தானங்களிலுள்ளவைகளைப்போதிக்கவேண்டும். மூத்தோர் சிறுவர்களுக்கு வழிகாட்டிகள். அவர்கள் தவறுதல்களைகவனித்து திருத்தி சந்தேகங்களை விலக்க வேண்டும். அரசன் அரவர் கடமைகளைச்செய்து வரும்படி பரிபாலிக்க வேண்டும். அரசன் இவ்வாறு பரிபாலிக்காவிட்டால் பொதுஜனங்கள் பலாத்காரமாகவும் வேறுஅரசரை ஏற்படுத்திக்கொள்ளலாம். இதவும்சாதியமில்லையானால் கடவுளிடமே முறையிடுவதே முறை.

அனந்த காலம் முதல் நாஸ்திகர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கையும் திருப்தியும் இல்லாதவர். மகாபலி சக்ரவர்த்தி மூவுலகமும் ஜயித்தானபிறகும் தனது ஆசாரயரைப் பார்த்து "இன்னும் ஜயிக்க வேண்டியது பாக்கி யிருக்தால் சொல்லும்", என்று புஜந் தட்டினான். "பாக்கி இருக்கிறது அதுதானே", என்ற சமதமாதிகளைக் குறிப்பிட்டார் ஆசார்யர். ஒரு காரியத்திற்காக ஒரு சமயம் கடவுளை நம்புவதண்டு. பிறகு இல்லை கடவுள் நம்பிக்கை பூர்ணமாய் இல்லாததால் உலசத்தார் திருப்தி இல்லாமல் திரிகிறார்கள். அவர்களுக்கு வேத சாஸ்திரங்களிலும் நம்பிக்கை இல்லை.

பிரத்யக்ஷமாய் புலப்படுவதையே நம்பவேண்டும் என்றால் தாய் தந்தை விஷயத்திலும் நம்பக் கூடாது. பிறர் சொல்லித்தான் பெற்றோரை அறிகிறான். பரீக்ஷை செய்த பிறகே நம்பவேண்டுமென்றால் ஒவ்வொருவனும் தானே டீக்ஷை செய்த பிறகே நம்பவேண்டும். "அவன் சொன்னான்". என்பதைக்காட்டிலும் அது பொய்யாயிருக்காது என்று சொல்வது போல நமது வேத சாஸ்திரங்களிலும் நம்பிக்கையிருக்கவேண்டும். முன்பரீக்ஷைசெய்கிறவர்களும் புதிதாய்ஒன்றைகண்டுபிடிப்பதற்கு 'இது" என்றுவைத்துக்கொள்வோம் என்று ஒரு ஆதாரத்தை நம்பினால்தான் மேலே பரீக்ஷிக்க முடியாது. உபமானங்களால் எல்லா விஷயங்களையும் அறிவிப்பதைக் கண்டோம். "பால்" என்பது வெள்ளையாய்—கொக்கு போல்— இப்படி—என்று கையைக்காட்டிய விதமாய் முடியும். நேடியே பெட்டியைத் திறந்து பார்த்தால் பிரமிக்கிறோம். இதெல்லாம் மனிதன் கண்டுபிடித்ததாதனே என்று வியக்கிறோம். அத்தமனிதனுடைய சக்திகளையே நிறந்து பார்க்கக்கூடுமானால் வேறு என்ன வேண்டும். அவ்விதம் மனிதன் தன்னையே பார்க்கக்கூடுமென்று வழிகாட்டுவதே வேத சாஸ்திரங்கள்.

பிரம்மணர்கள் வேத சாஸ்திரங்களை தங்களுக்குள்ளேயே வைத்திருந்தார்கள் என்பது அபவாதமேயன்றி உண்மையில்லை. வேத சாஸ்திரங்களின் ஸாரங்களெல்லாம் திருக்குறளில் இருக்கிறது. திருவள்ளுவர் பிராம்மணனுக்குப்பிறந்தார் என்றாலும் அத்தகப்பன் உடன்படிக்கையின் பிரகாரம் பிறந்த நிமிஷமே பிரித்து போய் விட்டான். ஆகையால் அவர் உபதேசிக்கவில்லை. தாயுமானவர்

"எங்கணும் வியாபி நீயென்று சொலு
மியல் பென்றா—இருக்காதி வேதமலம்
சொல்லால் முழுக்கியதா..... கன்றுவதிர்
தேன்".....(கருணாகரக்கடவுள்)

"வல்லதமிழறிஞர் வரின் அங்கனே
வடமொழியின் வசனங்கள் சிறந்த புகல்
வேன்". (சித்தர் கணம்)

என்று பாடியிருக்கிறார். இவர்களுக்கு வடமொழியோடு வேத சாஸ்திரங்களையும் பிரம்மணரே கற்பிக்கிறார் என்பது வெளிப்படை. அக்காலத்தில் கல்வியை தற்காலம் போல் வியாபாரம் செய்யவில்லை என்பது உண்மை. எவன் யோக்யதை உள்ளவனோ, எவன் முக்த ஆவதுடையவனோ அவனுக்கே கற்பிக்கப்பட்டது. த்விஜர்களை ஏதிரே வைத்து த்விஜரல்லாதாருக்கும் வேதங்கூட கற்பிக்கலாமென்றுசாஸ்திரமிருக்கிறது. ஜீவன் அனுபவதலால் கர்ம விசேஷத்தால் தீழ்ப்பிறவிகளை எடுப்பதால் ஜன்மாந்திர வாஸனையைக்கொண்டு அநேமேதாவிகளாயிருப்பவர்கள் மேலும் மேலும் ஸ்ப்பிறவியிலும் கற்பதற்கு அதிகாரிகளேயாவர். வேதசாஸ்திரங்களை ஸம்ஸ்காரமில்லாதவர்களுக்குக் கற்பித்தால் விபரீதமாகமுடியும். நிரௌபதி ஐவர்களை மணக்கவில்லையா என்றும், யயாதியின் புத்ரி ஐந்து நடலை விவாஹாத்தை செய்யவில்லையா, என்றும், பிள்ளையில்லாதார் வேறு புருஷனை நாடவில்லையா, என்றும் யார் யாரை அடிக்கிறார், யார் யாரைச்சேருகிறார், எல்லாம் ப்ரம்மம் என்றும் மேற்கோள் கூறுகிறார்கள். இவைகளை நம்புகிறவர்கள் அக்காலத்திருந்த நியமங்களையும் மந்திர சக்தியையும் நம்பவேண்டும். நிரௌபதியை அக்னி குண்டத்திலிருந்த. உண்டாக்கியது போல் ஒரு ஸ்திரீயின் தோஷத்தை விலக்கி கன்னிகை பருவத்தைக்கொடுப்பதும் அரிதல்ல. நிரௌபதி அக்நியிலிருந்து உண்டானதாலும் நியமத்துடன் ஒவ்வொரு வருஷம் ஒரே பதியுடனிருந்ததாலும் அவளுக்கு ஏவறு ஒரு சாக்ஷியம் இல்லாததாலும் அவளுக்கு தோஷமில்லை.

அவளுக்கு ஈசுவரப்ரஸாதம் கிடைத்தது போல் இன்னொருவருக்கு கிடைக்குமானால் பேசலாம். 600 வெள்ளைக்குதிரைகளை ஒரு தக்ஷிணையாய் யாசித்ததற்கு யயாதி தன் மகளைக்கொடுத்து அதன்மூலம் பெறலாமென்றான். அத்தக்காரியத்திற்காக அந்தப் பொருளை உபயோகப்படுத்திக்கொண்டான். யயாதியின் மகள் ஒருவனுடைய பொருளாக இருந்து அவன் சொல்படி உபயோகப்பட்டாளேயன்றி ஸ்வதந்தரமாக விவகாரத்த செய்யவில்லை. புத்ரோத்பத்தி விஷயத்தில் நியமம் மிகவும் கடினம். அறியாதவர்கள் பேசுவது கூடாது. லிகிதர் தன் தமையன் தோப்புப்பழத்தைச் சாப்பிட்டதற்கு தானே அரசனிடம் சென்று கைகள் வெட்டப்பட்டதும், குமாரிலபட்டர் பௌத்தர்கள் கொள்கையைக் கண்டனம் செய்வதற்காக அவர்கள் சிஷ்யராயிருந்த ஏற்பட்ட குருத்ரோஹத்திற்காக உமிக்காந்தலில் உயிர் நீத்ததும் அவர்கள் சொல்லக்கூடாதார்கள். இக்காலத்தில் தர்பிரசாரங்கள் அதிகரித்துவிட்டதால் வேதசாஸ்திரங்களின் உண்மைப்பொருளை எல்லாருமறிய விளக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

"Tamil Studies" என்ற புஸ்தக ஆசிரியர் "முன்காலத்தில் உண்டான ஏராளமான நீதி நூல்களைப்பார்த்தால் அநீதியும் பொய்யும் அக்காலத்தில் அதிகமென்று தெரிகிறது" என்று எண்ணுகிறார். இதவும் ஒருவிபரீதம். இக்காலத்தில் ஸத்யம் தாண்டவமாடுவதால் நீதிநூல்கள் இல்லை. அநீதிகளே அதிகம் என்பது எண்ணமா? ஒவ்வொரு காலத்திலுமுள்ள கடையுடைபாவனை அவ்வக்காலத்தில் எழுதப்பட்டவைகளின்மூலம் அறியலாகும் என்ற ஆராய்ச்சிக்காரர் கொள்கைக்கு அவர் செய்யும் அர்த்தம் இது போலும். அத்திச்சூடிபோன்ற நூல் இக்காலத்தில் எவரும் எழுதமுடியாது என்பது நிஜமாகும். ஏனெனில் நம்பிக்கை, அனுபவம், பாவனை இவை இருந்தாலன்றி எழுதமுடியாது.

100 வருஷங்களுக்குமுன் தனக்குவியல்களை மேனாடுகளுக்குக் கொண்டுபோன கப்பல்களில் சில முழுகிவிட்டன. அக்காலத்தில் அதை வெளிப்படுத்தக்கூடிய சாதனங்கள் இல்லை. தற்காலம் ஒரு வீடு மாதிரி உள்ள பெரிய இரும்புக்கூண்டையே கடலடியில் இறக்கிவைத்து அதனுள் ஆயுதங்களோடு மனிதர்கள் வேலை செய்யக்கூடும். ஆகவே, அத்தப் பொருளுக்காக கப்பல் மூழ்கிய இடங்களைத் தேடித்திரிவதுடன் சிறிது வெளிப்படுத்தியும் இருக்கிறார்கள். இதனால் என்ன விளங்குகிறது? கடவுள் என்ற வஸ்துவில்லாத பொருள் இருக்கிறது. அதை நம்பினவர்கள் ஸாதனைகள் செய்து அடையலாம் என்பதே. ஸாதனை இல்லாமல் எதவும் முடியாது. ஸாதனை இல்லாததால் 100 வருஷகாலமாய் முழுகிக்கிடந்ததை எடுக்க முடியவில்லை. ஆனால் நம்பியிருந்தார்கள். நம்பிக்கையே ஸாதனைக்குத்தூண்டுகோல்.

அநேகப்பொருள் படைத்தவருக்கும் கஞ்சிக்குப் பறக்கிறவனுக்கும் நம்பிக்கையும் வேண்டாம் கடவுளும் வேண்டாம். என்று சொல்லலாம். அவ்வாறிருக்கும் தனவான்களை, கஞ்சியில்லாதவர்களுக்கும், அவ்விருவருமே உலகத்திலுள்ள சண்டைச்சச்சவு புத்தங்களுக்கும் காரணம். பொருளுள்ளவர் அது கீலிப்பதற்கும், விருத்தியாவதற்கும் விருத்தியாவதற்கும் பொருளில்லாதவர் வயிற்றுக்கும் இக்காரணங்களாலேயே காமக்ரோதங்களும் பொய் திருட்டுக்களும் உண்டாகின்றன. ஜன்மாந்திரத்தில் பாபம் செய்து ஏழையாயுள்ளவர்களை தல்வழிப்படுத்தவே புண்யம் செய்தவர்களிடம் தனம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை உலகத்தோர் அறிவாரபின் எல்லாருக்கும் கன்மையுண்டு "செலிக்குணவில்லாத போது சிறிது வயிற்றுக்குமீயப்படும்" என்ற திருவள்ளுவர் உபதேசத்தின் பிரகாரம் எல்லாருமிருந்தால் இம்மையே ஸ்வர்க்கமாகும்.

(தொடர்ச்சி 11-பக்கம் பார்க்க)

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்காராரியார் ஸ்வாமிகளுக்கு அளிக்கப்பட்ட
உபசாரப் பத்திரங்கள்

குடந்தை அத்வைதஸ்பா அளித்த உபசாரப் பத்திரம்:—

भो महात्मानः ! द्वाविंशता वत्सरैः आसेतोः आच वाराणसीतः इमं भारतं देशं प्राचीनेन पथा सञ्चरमाणानां अखिलाः पुण्यनदीः अखिलानि च क्षेत्राणि सेवित्वा संपूर्णवाराणसीयात्रामनोरथानां प्रत्यागच्छतां पावनदर्शनानां श्रीचरणानां दर्शनेन अधुना नगरवासिनो जनाः द्विस्तावन्तं आनन्दं विन्दन्ते, यावन्तं भगवतः श्रीरामचन्द्रस्य वनात् प्रत्यागच्छतो दर्शनेन साकेतवासिनो जनाः अविन्दन्त ।

श्रीचरणा हि तत्र तत्र ग्रामेषु जनपदेषु नगरेषु देशेषु च महत्तपः महान्तं नियमं महतीं च श्री चन्द्रमौलीश्वराराधनशैलीं आस्थाय अविगणित स्वशरीर परिश्रमं अनालोचित निरन्तरसञ्चरण प्रयासं च क्वचिद्वाङ्मुखामृत वर्षणेन, क्वचिच्चानुष्ठापनेन, क्वचित् धार्मिकजन प्रोत्साहनेन, क्वचित् पण्डितमण्डलीपरितोषणेन, कुहश्चिच्च मौनावलम्बनेन, यथायथं जनेभ्यो धर्मानुपदिशन्तः नूनं परमाचार्या एवं एते कृतनूतनावताराः इति सर्वैरुत्प्रेक्ष्यमाणाः स्मारयन्ति "यदा यदाहि धर्मस्य ग्लानिर्भवति भारत । अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम्" ॥ इति श्री भगवद्गीतावचनमन्वितथम् ।

यद्यपेतु करालकलियुगानलज्वालाजाल लेलिह्यमानधर्माङ्कुरेषु समयेषु श्री चरणाः इमां यात्रां नाचरिष्यन् तदा मन्ये सर्वत्र धर्मकथैव दत्तजलाञ्जलिरभविष्यत् ।

किं बहुना श्री परमाचार्य प्रतिष्ठापितः श्री कामकोटि पीठः एष्वेव समयेषु श्रीचरण महिम्ना महतीं समुन्नतिमधिगमितः या अन्येषां मनोरथमपि अतिगता ।

तादृशानां एतेषां श्रीचरणानां स्वागताभिनन्दन समयं लभमाना सेयं अद्वैत वेदान्तसभा धन्यमात्मानं मन्यते दिनञ्चेदं सुदिनम् ।

या किल सभा पञ्चचत्वारिंशतः संवत्सरेभ्यः प्रागनेकैः प्रत्नैः पण्डितरत्नैः अस्मिन्नेव श्रीमठे उप्तबीजा ततश्च अंकुरिता पल्लविताकोरकिता पुष्पिता अथ च श्री चरणाश्रयणेनैव फलिता एवं परिमण्डलिता इदानीं प्रकाशते । याच एषमः अचिरात् प्रचलिष्यन्ती लब्धश्रीचरणसन्निधाना प्रकृष्टां सुषमां प्राप्स्यति इति शम् ॥

ஸ்ரீமடம் வித்வான் ஸ்ரீ ஜகதீசசாஸ்திரிகளால் கோடுக்கப்பட்ட உபசாரப்பத்திரிகை :—

१. पम्तरक्षादीक्षान्वीक्षणमात्रेण
शिक्षितविपक्षान् ।
श्रीकामकोटिपीठाधिष्ठातृन्
सद्गुरूत्तमस्यामः ॥

२. तीर्थानि क्षेत्रवर्ष्माण्यपि कलिकलुषाण्युद्धर न्नात्मसङ्गात्
भङ्गीभिर्देशनाना निखिलजन मनोमोहजालं विधून्वन् ।
लोकक्षैमैकदीक्षागुरु रुरुकरुणः श्रीमदाचार्यवर्यः
सान्द्रानन्दा न्विधत्ते चिरविरहकृशा न्दासभूता न्स्वदृष्टया ॥

३. शीतरम्यकरुणावलोकनैः
शिष्यवर्गमभिरक्षितुं पुनः ।
स्वागतेन वय मागता न्गुरून्
वागतीतविभवा नुपास्महे ॥

४. निर्वर्त्य विजययात्रां
नियमै र्निर्धूतशिष्यकालुष्यः ।
तुष्यन् शिष्यार्थनया
सत्वर मत्रेत्य सद्गुरु र्जयति ॥

५. जगद्गुरु र्जङ्गमचन्द्रमौलिः
जनस्य निश्रेयसमार्गदर्शी ।
जयाय भूयादिह धार्मिकाणां
अधार्मिकाणा मपि शिक्षणाय ॥

६. कल्याणहेतु र्जगतः प्रतिष्ठा
धर्मस्य विज्ञानविशुद्धमूर्तिः ।
ईशानकारुण्य विवर्तरूपा
निरामया दीव्यतु सद्गुरूणाम् ॥

७. श्रीकामकोटीप्रभुभिः पुराणैः
प्रतिश्रुता या बहुतीर्थयात्रा ।
आपूर्य तां सम्प्रति सद्गुरु र्नः
तुष्टिं सरीसर्टिं विशिष्ट एषः ॥

ஸ்ரீராமமந்திரம் அத்வைத வேதாந்த பாடசாலை அத்யாபகர் ஸ்ரீ. ஆங்கரை ரங்கஸ்வாமி சாஸ்திரிகளால் படித்துக்கோடுக்கப்பட்ட உபசாரப் பத்திரிகை;—

१. अद्वैतामृतवारिधे यतिपते श्रीकामकोटीपते
नित्यानन्दनिरञ्जनात्मविषयं बोधं श्रितेभ्योदिशन् ।
भक्तिं बालशशाङ्क शेखरपदे लोकस्य संवर्धयन्
जीयादाशशिभास्करं च भवतः पादाब्जपांसुर्गुरो ॥

२. अन्तेवासिजनोद्धतावतितमां बद्धादरः श्रीगुरो
श्रीमच्चन्द्रकलाधरत्रिपुरसुन्दर्यर्चनातत्परः ।
लोके दुर्मतनिग्रहं च कलयन् कुर्वन् दिशां निर्जयम्
साक्षादादिमशङ्करो विजयसेद्वैतमास्थापयन् ॥

३. अज्ञानध्वान्तभानो यतिधरणिपते कामकोटीमठेश
श्रीमन् बोधाब्धिचन्द्र श्रितजनकरुणापूरदुग्धाम्बुराशे ।
पापक्षोणीधराणां कुलिशगुणमणिक्ष्माधरेन्द्राश्मतत्व-
प्राकाश्यैकप्रदीप प्रभवतु भवते मामकीनः प्रणामः ॥

४. आसेतोराच काशीतलमवनितलं क्षेत्रतीर्थादनेन
प्रादक्षिण्यक्रमात्त्वं खलुसकलमपि प्राप्यततत्स्थलेषु ।
आस्थाप्याद्वैतमेतत्प्रतिमतनिवहं दूरमुत्सार्य मानैः
प्राप्तः श्रीकुम्भघोणं पुनरपिभगवन् भागधेयाद्विरात्नः ॥

५. तत्तादृग्भाग्ययुक्ताः वयमतिमहितं ते पदाब्जं प्रपन्नाः
भक्ताना मार्तिभङ्ग प्रथितगुणयुतं भूरितापाभिभूताः ।
अध्यारभं चाधिदैवं शमय यतिपते नोऽधिभूतञ्चतापं
देवे रुष्टेपि रक्षां कलयति गुरुरित्यन्विताथं वचोस्तु ॥

६. श्रीचन्द्रशेखर यतीन्द्रपदारविन्द-
युग्मे निमग्नधिषणः खलु रङ्गनाथः ।
श्रीराममन्दिरलसन्निगमान्तपाठ-
शालाबुधोऽर्पयति सद्गुरु पञ्चरत्नम् ॥

७. श्रीमच्छङ्करदेशिकेन्द्र चरणाम्भोजैक भृङ्गायित-
स्वान्तस्याश्रितकल्पपादपनिभस्या ध्यात्मविद्याविदः ।
सुब्रह्मण्यविभूतमस्यमहित श्रुत्यन्त पाठाल्या-
चार्येणार्पित पञ्चरत्नमिदमस्त्वाचार्यतुष्ट्यै शुभम् ॥

ஸ்ரீ ராமேஸ்வரம் தேவஸ்தான பாடசாலை வித்யார்த்தி ஸ்ரீ. நாராயணஸ்வாமியால் அளிக்கப்பட்ட வந்தனப் பத்திரிகை:—

१. श्रीकाञ्ची नगरेन्द्र मध्य विलस च्छ्रीकाम कोटी गतान्
नैजासेतुहिमाचलान्त विजय व्याजाज्ञनान्रक्षतः ।
धर्मस्थापन दीक्षितान् शिवपदाम्भोजैक सक्तात्मनः
वन्दे दीन शरण्य पाद युगळान् श्रीचन्द्र मौळीन्गुरून् ॥

२. कृताराति भङ्गं सदाचार्यतुङ्गम्
कृतेशैकसङ्गं कृपार्द्रान्तरङ्गम् ।
भजे वेदशृङ्गाब्ज भृङ्गं शुभाङ्गम्
गुरुं निर्जितानङ्ग मिन्दृतमाङ्गम् ॥

३. कृताधर्म शोषं, शिवाभिन्नवेषम्
बुधानान्तु तोषं खलानामतोषम् ।
तपो दान सद्धर्म धेन्वोघ घोषम्
जगत्पुण्यकोषं सदाचार्यमीडे ॥

४. समाराधित श्रीशशांकोत्तमाङ्गम्
शुभे कामकोटी सुपीठे लसन्तम् ।
पवित्रैः स्वपादाब्ज जन्यैः परागैः
दिशः पावयन्तं भजे लोक पूज्यम् ॥

५. श्रीकाम कोटीशमीशावतारम्
शिवाद्वैत भावं चिदानन्द पूर्णम् ।
गुणानां शरण्यं वरेण्यं गुरूणाम्
भजे पापजाताद्विवज्रायमाणम् ॥

६. स्वागतं भुवनचार्य स्वागतं धर्मरक्षक ।
चन्द्रमौळि गुरो पूज्य चिरं पुरमलङ्कुरु ॥

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்

மேலும் பல விடங்களில் மஹத்தான உபசாரம்

சாதுர்மாஸ்ய ஆரம்பவைபவம்

கண்கூடாகாண்கி.

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் சென்றவராம் விபரமுங்கிழமை ஸ்ரீமடத்திற்கு பிரவேசம் செய்த பிறகு அன்று பிரஸ்தாவித்த ஸ்ரீமான் எம். கே வைத்தியநாதய்யரவர்கள் கிரஹத்திற்கு இரவு பிரதோஷபூஜையை முடித்துக்கொண்டு எழுந்தருளினார்கள் அப்பொழுது ஸ்ரீமான் அய்யர் வர்கள் தமதகுடும்பத்தார்களுடனும், கண்பர் களுடனும் ஸ்ரீஸ்வாமிகளை வரவேற்று உப சரித்தார்கள் ஸ்ரீஸ்வாமிகள் அங்கு சிறிது நேரம் தங்கிவிட்டு ஸ்ரீமடம் திரும்பினார்கள்.

மறுநாள் வெள்ளியன்றுகாலையில் ஸ்ரீஸ்வாமிகள் நித்யகர்மானுஷ்டானங்களை முடித்த பிறகுபலடியிலுள்ள அரண்மனைகிருஷ்ணபாகவதர் ஸந்திரத்திற்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்கள் யானைகள், குதிரைகள், எடுபிடி முதலியவைகளுடன் பெரியபல்லக்கில் கம்பீரமாக ஸ்ரீஸ்வாமிகள் ஊர்வலமாகப்புறப்பட்டார்கள்.

கூட்டம் வெகு அதிகமாயிருந்தது. வரவேற்புக்கமிட்டியார் வெளியிட்டிருந்தபடி ஸகாழி ரயகன்தெரு, பத்புரிஅக்ரஹாரம், வாணுதரை, எக்ஸ்டென்ஷன் முதலியதெருக்கள் வழியாக ஊர்வலம் சென்றது.

சகாழிநாய்க்கன்தெருவன்முக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீ வித்வாதய்யர்பூர்ணகும்பத்துடன் ஸ்வாமிகளை வரவேற்று ஒரு வெள்ளி பஞ்சபாத்திரத்தைப் பாதகாணிக்கையாக சமர்ப்பித்தார். பலவீடுகளில் பூர்ணகும்பம் கொடுக்கப்பட்டது.

பின்னர் "ஆர்யதர்மம்" தினை ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ எல்.எஸ். மணி அய்யர் ஸ்ரீசங்கராசாரியபரசுவாமிகளைப் பூர்ண கும்பத்துடன் தரிசித்தார். "ஆர்யதர்மம்" பத்திரிகையையும் ஆர்ட்பேப்பரில் ஸ்ரீகுவாமிகள் விஜயத்தைப் பற்றி பிரசுரித்த ஸ்ரீஆச்சார்யாள் படமொன்றையும் ஸ்ரீகுவாமிகளிடம் வணக்கத்துடன் சமர்ப்பித்தார். ஸ்ரீகுவாமிகள் அதைப் பெற்றுக்கொண்டு ஸ்ரீமணி அய்யரை ஆசீர்வதித்து அனுக்ரஹம் செய்தார்கள்.

மிடிதெருக்களில் ஒவ்வொருகிரஹத்திலும் ஸ்ரீஸ்வாமிகளுக்குப் பழம், கற்பூரம் முதலிய உபசாரங்கள் ஸமர்ப்பிக்கப்பட்டன.

ஊர்வலம் ரயிலடிஸந்திரம் சென்றவுடன் ஸௌராஷ்டிரகனவான்களில் ஒருவருமான ஸ்ரீமான் கோவிந்ததாஸ், கோதண்டராமய்யர் ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளை வெகு பக்தி சிரத்தையுடன் வரவேற்று உபசரித்தார்கள். அச்சமயம் அங்கு கூடியிருந்த ஜனக்கூட்டத்திற்கும் உத்ஸாஹத்திற்கும் அளவில்லை.

அன்று மத்யனம் அந்தஸந்திரத்தில்மேற்படி ஸ்ரீ கோவிந்ததாஸய்யரால் பிக்ஷை நடத்திவைக்கப்பட்டு பிரம்மணஸ்தர்பணமும் பலமாக நடந்தது.

பிறகு மாலை 4மணிக்கே ஸ்ரீஸ்வாமிகள் பரிவாரங்களுடன் மேற்படி ஸந்திரத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டார்கள். ஸௌராஷ்டிர கனவான்களான ஸ்ரீமான் எ. ராமய்யர் ஸ்ரீ கோவிந்ததாஸய்யர் முதலியவர்கள் பிரார்த்தனைக்கிணங்கி ஸௌராஷ்டிரப்பெரிய தெரு வழியாக ஊர்வலம் சென்றது. ஒவ்வொரு வீட்டுவாசலிலும் தேங்காய், பழம், காணிக்கைகள் கொடுக்கப்பட்டன. ஊர்வலம் மேலக்கடலலங் குடித்தெரு வழியாகச்சென்று உச்சிப்பிள்ளைபார் கோவில் போய் மேற்கு முகமாகத்திரும்பிச்சென்றது.

ஸ்ரீஸோமேச்வர்வாமி கோவில் அதிகாரிகள் ஸ்ரீஸ்வாமிகளை உபசரித்து கோவில் மரியாதைகள் வழங்கினர். பிறகு போலீஸ்ஸ்டேஷன்வாசல் வந்ததும் ஏராளமாகப்போலீஸார் கூடிஸ்வாமிகளை தரிக்கவந்தனர். ஸ்ரீஸ்வாமிகள் சற்று அங்கு பல்லக்கை நிறுத்தி போலீஸாருக்கு விபூதி வாழைப்பழம் பிரஸாதம் அநுக்ரஹித்தார்கள்.

பிறகு ஊர்வலம் கடைத்தெரு வழியாகச் சென்றபொழுது கூட்டம் தாங்கமுடியாதிருந்தது. கோலியப்பமுதலியார் அக்ரஹாரம் சென்று ஸ்ரீஸ்வாமிகள் பல்லக்கிலிருந்து இறங்கி காவிரி நதியில் ஸ்நானம், ஸந்த்யை முதலிய நித்ய கர்மக்களை முடித்துக் கொண்டார். பிறகு அக்ரஹாரவாஸிகளின் சார்பாக உபசாரப்பத்திரம் வாசித்தளித்தனர் (உபசாரப்பத்திரம் வேறிடத்தில் பிரசுரமாயிருக்கிறது) அக்ரஹாரம் அழகாய்அலங்கரிக்கப்பட்டிருந்தது. பிறகு ஸ்ரீஸ்வாமிகள் பல்லக்கில் ஏறியவுடன் போகிகளுக்குப் பதிலாக அக்ரஹார வாஸிகளான பிரம்மணர்களே பல்லக்கை வஹித்துக்கொண்டு ஸ்ரீஸ்வாமிகளை எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோனார்கள். பலயிடங்களில் பூர்ணகும்பம் கொடுத்து மரியாதை செய்தார்கள். மிகப்பெரியதும், அகேக வைதிக, லௌகிக பிரமுகர்களும் அடங்கிய அந்த அக்ரஹாரத்தையிட்டு ஊர்வலம் வெளிக்கிளம்ப வெகுநேரமாயிற்று.

பிறகு ஊர்வலம் காமாக்ஷிஜோஸ்யர்தெரு வழியாக ஸ்ரீமடம் சென்று முடிவுபெற்றது.

சாதுர்மாஸ்ய ஆரம்பம்

சனிக்கிழமை சாதுர்மாஸ்ய, வியாஸ பூஜைகள் ஆரம்பிக்கப்படுவதை முன்னிட்டு காலை முதலே ஜனங்கள் மீராடி பரிசுத்த உடை தரித்து ஏராளமாக ஸ்ரீமடத்தில் கூடிவிட்டார்கள். வெளியூர்களிலிருந்தும் வைதிக வைதிகப் பிரபலஸ்தர்கள் ஏராளமாக வந்திருந்தனர். ஆந்திரதேசத்திலிருந்து பல பண்டிதர்களும். கனவான்களும் இதற்கென்றே வந்திருந்தனர். அன்று நடக்கவேண்டிய பிருத்வீக்ரஹணம் முதலிய லௌகிக வைதிக கார்யங்களும் முறைப்படி நடைபெற்றன.

ஸ்ரீஸ்வாமிகள் வபகம் செய்து கொண்டு காவிரியில் மீராடி அதேக ஸ்நேஹ ஸ்நிதிகள் புடைசூழ ஊர்வலமாக வந்த காட்சி வெகு ரமணீயமாயிருந்தது.

வழக்கப்படி நடக்கவேண்டிய பூஜைகள் நடந்து ஒவ்வொருவருக்கும் ஸ்ரீஸ்வாமிகளே கரில் தீர்த்தம்கொடுத்தார்கள். பிரம்மணசுதர்பணம் ஆரம்பிக்கையில் மணி 5 ஆகிவிட்டது.

இவ்வளவு காழிகையில் விட்டபேதிலும் எள்ளிடஇடமில்லாமல்கூட்டம் நின்றுகொண்டிருக்கிறது.

வித்வத் ஸபை ஆரம்பம்

ஞாயிற்றுக்கிழமையன்று கும்பகோணம் பாங்கி மானேஜிங் டைரக்டராகிய ஸ்ரீமான் எள். மஹாலிங்கய்யர் அவர்களால் பிக்ஷை நடத்தப்பட்டது. அன்றுகாலை தூஜைகள நடக்கும் "வித்வத் ஸபை" ஸ்ரீஸ்வாமிகளின் முன்னிலையில் ஆரம்பமாயிற்று.

மஹாமஹோபாத்யாய சாஸ்திரி திலகம் பிரம்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் முதலிய அனேகவித்வான்கள் கூடியிருந்தார்கள். ஆங்கில பிரம்மஸ்ரீ ரங்கஸ்வாமி சாஸ்திரிகள் வைத்யரத்ன சாஸ்திரிகள் முதலியவர்கள் வாக்பர்த்தம் செய்தார்கள்.

பிறகு ஸ்ரீஸ்வாமிகள் அட்வகேட் ஸ்ரீமான் ஜி. வி. வெங்கடராமய்யர் அவர்கள் கிருஹத்திற்குப் பாத பூஜைக்காக எழுந்தருளித் திரும்பினார்கள்.

பூஜை, தீர்த்த விநியோகம், ஸாரத்தான, முதலியவை முடிந்தபின் ஸ்ரீமான் மஹாலிங்கய்யர் குடும்பத்தினரும், பாங்கி உத்யோகஸ்தர்களும், ஸ்ரீஸ்வாமிகளை கடஸ்கரிக்க, ஸ்ரீஸ்வாமிகள் மேற்படியார்களுக்கு மங்கிராக்ஷதை வீபூதி, குங்குமம், பிரஸாதங்கள் கொடுத்து அநுக்ரஹித்தனர்.

நிங்கட்டிழமை யன்று இவ்வூர் கனவானை ஸ்ரீமான் எ. ஸுப்பிரமண்ய அய்யர் அவர்களால் பிக்ஷை நடத்திவைக்கப்பட்டது.

ஒவ்வொருதினமும்காலையில் வித்வத்சபை வாக்பர்த்தங்களும், மாலையில் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமமும் அதற்கு ஸ்ரீவத்ஸவ்பாஷ்ய சார்யார் செய்தருளியுள்ள பாஷ்யமும் கொஞ்சம் பாராயணம் செய்யப்படுகிறது. ஸாயங்காலத்தில் பிரபல பண்டிதர்களுடைய உபந்யாஸங்களும் நடைபெறுகிறது.

நிங்களன்று போலகம் ஸ்ரீராமசாஸ்திரிகள் "அத்வைதமே எல்லாவற்றிற்கும் ஏற்றது", என்ற விஷயத்தைப்பற்றி பிரஸங்கித்தார். ஸ்ரீஸ்வாமிகள் இன்னும் பொன விரதமனுஷ்டித்துவருகிறார்கள். இது கீடிக்கு மென்ற தெரிகிறது. நகரமெங்கும் ஒரே குதூகலமாயிருக்கிறது.

நினசரி ஆயிரக்கணக்கில் பொது ஜனங்கள் ஸ்ரீசங்கர மடத்துக்கு இரவேனைகளும் வந்து போய் கொண்டிருக்கிறார்கள்.

பிரதம உபாகர்ம

தோழப்பரின் தெளிவான அபிப்பிராயம்.

ஸ்ரீ அஹோபிலமடத்திலிருந்து வெளியான அபிப்பிராயத்தில் மிதன ஆஷாடி விஷயமாக தோழப்பர் அபிப்பிராயம் வெளியிடப்பட்டவில்லை உபகர்மப்பிரகாணத்தில் இல்லாவிட்டாலும் ஜயந்தி நிர்ணயப்பிரகாணத்தில் கரம் பர்த்த வாக்யத்தை இங்கு குறிப்பிடுகிறோம்.

கிணு சூஷாஜ்யூர்வாணு ஜூஷ்யூர் வஜ்ஜவ வ்யாவிஜ்யூர் ஸ்ராவணீகெஹ்ந தயூம் ஶிஷ்டமஷ்யாயாவெ உவாசஉ, ..ஆவஜெஜ் கவிஹா கிவெம் றொகெ ஸிஷ்டாஜ்ஞாஷாகூ ஆஷ்டூ ஜ்ஞாஷ ஸ்ராவணீகெஹ்ந தயூம் ஶிஷ்டமஷ்யாயாவெ உவாசஉ?

என்ற வாக்யத்தினால் மிதன ஆஷாடியில் உபகர்ம அதஷ்டானமானது சிஷ்டாசாரத்தில் காணப்பட்டதாகவோ, கேட்கப்பட்டதாகவோ, இஷ்டமானதாகவோ இல்லை என்று ஆச்சர்யத்துடன் குறிப்பிடுகிறார் இதன் அர்த்தமென்ன? அ. ரா.

பட்டஸ்ரீ நாராயண சாஸ்திரிகளின் காவ்யங்கள்

(ஸ்ரீ ஆர். ராமச்சந்திரன், மைலாப்பூர்)

"ஸ்ரீபிரம்மவித்யா" பத்திராதிபரான ஸ்ரீ சீனி வாசசாஸ்திரிகளின் கனிஷ்ட பிரதரான பட்டஸ்ரீ நாராயண சாஸ்திரிகளால் இயற்றப் பட்ட காவ்யங்கள் அநேகம். இவர் ஓர் மஹாகவி. இவருடைய கவனம் ஸ்ரீவேதாந்த தேசிகர், வேங்கடாத்வரி முதலிய மஹாகவி களின் நீதியைப் பின்பற்றும் 10 96 காடகங் களும் 20 காவ்யங்களும் இவர் எழுதிய தாகத் தெரியவருகிறது. தான் எழுதிய க்ரந்தங்களின் எண்ணிக்கையை "சுரம்யபூ மென்னும்" காடகத்தில் பின்தாவணியில் ஒரு ச்லோக ரூபமாகக் கூறியிருக்கிறார்.

பதினேட்டாவது வயதிலேயே 8-பாஷை களைப் பண்டித்யமும் சிறந்த கவித்வ சக்தி யும் பெற்ற விளங்கினர். இந்த நூற்றாண் டின் முதலில் விளங்கின வித்வான்களின் மத்தியில் சிறந்த பண்டித்யத்துடன் பிர காசித்தார். இவ்வளவு பெரிய வித்வ னுடைய க்ரந்தங்களில் வெகு சில க்ரந்தங் களே அச்சிடப்பட்டிருக்கின்றன. கலிவிதா னனம் சூரமயூரம் முதலிய இரண்டு மூன்று டங்களே பிரசுரிக்கப் ட்டிருக்கின்றன. மிகு ந்த க்ரந்தங்கள் அவருடைய உரவினர்கள் ஏ. வரிடத்திலாவது இருக்கலாம். 'ஸ்வப்பராக்ரம ஸாஹஸ்ரீ" என்ற ஆச்சரியமான ஓர் ஸ்தோ த்ரத்தையும் இவர் இயற்றியிருக்கிறார். ராமா யணத்திலுள்ள ஆதாரமாகக் கொண்டு உதா ஹரணங்களுடன் ஆயிரம் ச்லோகங்கள் எழு தியிருக்கிறார்.

மேற்கூறிய விஷயங்களெல்லாம் பிரசீன பண்டிதர்களுக்கு கன்றாகத் தெரியும். இம் மஹாவித்வான் விருத்தாந்தம் இக்காலத்தி யவர்களுக்கு கன்றாகத் தெரிவதில்லை. இவ ருடைய க்ரந்தங்களைப் பற்றியும் அதிகமாகத் தெரிவதில்லை. ஆகவே, பிரபுக்களும் வித் வான்களும் இவ்விஷயத்தில் கவனம் செலு த்த வேண்டும். கற்காலத்திய வித்வான் களையும் கன்றாக ஆதரிக்க வேண்டும். அவர் களுடைய க்ரந்தங்களைப் பரவச் செய்ய வேண்டும். காளிதாசன், பவபூதி முதலான பிராசீன கவிகளின் காவ்யங்களையே நிரும் பத்திரும்பப் படித்துக் கொண்டு தற்காலத் திய க்ரந்தங்களைப் படிக்காமல் உதாசீனமாக இருத்தலால் ஸம்ஸ்கிருத பாஷை அபிவிருத் தியடையாது. "புராணமித்யேவ ந ஸாது ஸர்வம்" என்ற காளிதாசனின் நியாயத்தை உண்மைப் படுத்த வேண்டும். பழைய க்ரந் தங்களையும், கன்றாகப் படிக்க வேண்டும். புதிய க்ரந்தங்களையும் கன்றாகப் பிரசாரப் படுத்த வேண்டும்.

மேலும் இன்னொரு விஷயத்தைக் கவ னிக்கவேண்டும். ஒரு வித்வான் 10 க்ரந் தங்களை எழுதினால் காலக்கிரமத்தில் ஒன்று இரண்டு புத்தகங்களே பிரசாரத்தில் இருந்து வருகின்றன. மற்றவைகள் நாசமடைந்து விடுகின்றன. ஆகவே மேல் நாடுகளில் "complete works" என்று ஒரு கவியின் க்ரந்தங்களை யெல்லாம் கோட்டி மொத்தமாக பிரசுரிப்பது போல் நம் காட்டிலும் பிரசுரிக்க வேண்டும். இதற்குப் பிரபுக்களின் உதவி வேண்டும். அவர்கள் நம் நாட்டுக் கலாபி விருத்தியின் பொருட்டுச் செலவு செய்ய வேண்டும். கொளரவப் பட்டங்கள், தேர்தல் கள் முதலிய சாரமற்ற விஷயங்களில் பணத் தைச் செலவுசெய்வதைக்காட்டிலும் நம் நாட்டுக் க்ரந்தங்களைப் பிரசுரிப்பதில் க்ரத்தை எடுத்து கொள்ளலாம். ஸ்ரீமத்தத்திலும் ஆயுர்வே மான க்ரந்தங்களைப் பிரசுரித்த சமயம் "ஸ்ரீமந்தம்" க்ரந்தத்தைத் தமிழ் மொழி பெயர்ப் பித்த சமயத்தில் அதே புத்தகங்களைத் தமிழ் நாட்டிலுள்ள பிரபுக்களும் வித்வான்களும் வாங்கி படிக்க வேண்டும். இதற்

ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகள்

(ஸ்ரீ C. S. தீக்ஷிதர், கும்பகோணம்)

ஜென்மாந்தர சுகிர்த விசேஷத்தால், நாம் அனைவரும் செய்த பூர்வ புண்ய வசத்தால், கைலாஸவாஸியான ஸாக்ஷாத் பரமேசுவரனே நம் முன்னிலையில், கும்பகோண க்ஷேத்திரத் தில் அநுகூலமாய் ஸஞ்சரித்துக் கொண்டி ருக்கும் 28-6-39 புதன்கிழமை இரவு வரவேற்று, தரிசிக்கும்படி யான பாக்கியம் நமக்கு கிடைத்தது. அந்த வரவேற்பு எப்படி இருந்தது என்று சேரில் பாரதியவர்களுக்குத்தான் தெரியும். வர்ணிப் பதற்கென்றால் முடியவில்லை. ஒட்டகை, யானை, குதிரை, மேளம், பாண்டு வாத்தியம், வான வேடிக்கை, அற்புதபல்லக்கு, ஆனந்த பக்த கோஷ்டி, வீட்டுக்கு வீடு பூர்ண கும் பம், சுற்பூர ஹாரத்தி, இவ்வித வைபவங்க ளுடன், என் குருநாதனே, திரும்பி நம் கர் ரில் பார்ப்போமா என்று கிலேசப்பட்டுக் கொண்டிருந்தவர் துயர் தீர தரிசிக்கியம் நீங்கி சம்பத்து உண்டாய் நாம் அனைவரும் சுகமாயும், சௌக்கியமாயும் இருப்பதற்கு, கஷ்டப்படும் ஒரு உத்தமமான சத்புருஷரை வரவேற்கும் பாக்கியம் கிடைத்த காரமே சிலாக்கியர். பாபுவைப் பார்த்தவுடன் அவ ர்கள் காலில் விழுந்து வந்தனம் செய்தவர் அநேகர். ஆனந்த பரவசம் பொழிந்த, சென்ற பாதையெல்லாம் பின்வந்தவர் அநே கர். எங்கள் தெருவுக்கு வரவேண்டும். எங் கள் வீட்டுக்கு வர வேண்டும் என்று அழைத் தவர் மற்றும் பலர். இரவு சுமார் 10மணிக்கு புறப்பட்ட ஊர்வலம், மறுநாள் விடியும்பொ முது மஹாமகக்குளம் மேல்கரை அடைந்தது.

கும்பகோணத்திலிருந்து விஜய யாத்திரை யாய் புறப்பட்டு 22 வருஷ காலம் க்ஷேத்ரா டனம் செய்து கொண்டு, ஸ்ரீ ஜம்புகேசுவர க்ஷேத்ரத்தில், ஸ்ரீ அகிலாண்டேச்வரிக்கு ஸ்ரீ தாடங்கப்பிரதிஷ்டையைச் செய்து, முடி த்து, கும்பகோணத்தில் லக்ஷார்ச்சனை, லக்ஷ தீபம், லக்ஷபிரமாண சக்தர்ப்பணி இவைகளை நடத்தி, காசி யாத்திரையை விமர்சையாகச் செய்து, ராமேசுவரம் சென்று, சேதுஸ்நா னம் பண்ணி, ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்கள் கர் தேசத்தின் க்ஷேமத்தின். பொருட்டு, ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் ரத கைங்கர்யத்தையும் ஆல ம்பும்பாபிஷேகத்தையும் கூடிய சீக்கி ரம் செய்த முடிக்க வேண்டுமென்ற புண்ய சங்கல்பம் கொண்டு அதை உத்தேசித்தே "மௌன விருதமும்" கொண்டிருக்கிறார்கள்.

நமது பகவத் பாதாளிடமிருந்து அனுக் கம் பெற்ற ஸ்ரீ சங்கரகோடிகளைக் கேட்டால் அவர்களுடைய வசீகரமான தோற்றமும், காருண்யமான பார்வையும், பயப்படாதே என்று காட்டும் கைகளின் பெருமையும், அந்தப் பாததூளி என் மேல் விழாதா என்று ஆவலாய் நிற்கும் பக்தர்களின் கூட்டமும், இவைகளே நேரில் பிரதி ஒவ்வொரு கிமிஷமும் சமீபத்தில் நின்று பார்க்கும் என் னால் வர்ணிக்கமுடியவில்லை. அவர்கள் இக் கும்பகோண க்ஷேத்ரத்தில் தங்குவதாய் தேகித்திருக்கும் நாட்கள் 90ல், சென்ற நா ட்கள் போகப் பாக்கி நினங்களிலும் அவர்க ளுடைய தர்சனவிசேஷத்தால் நாம்கோறும் ஸகல பல்லன்களையும் நிச்சயமாய் அடைய லாம். அகில புவன கர்த்தாவாய்,எல்லா உயர் க்கும் கருணை வடிவமாய், எங்கும் நிறைந்து விளங்கும் ஸாவேகவன், கைலாஸ வாஸி யான ஸாக்ஷாத் பரமேசுவரன் அன்று சிவ குரு ஆர்யாம்பாள் என்னும் உத்தம தம்பதி களுக்கு, மலையாளத்தில் உள்ள காலடி க்ஷே த்ராதனில் 2500 வருஷங்களுக்கு முன் புத் ரனாய் பிறந்த பாலனாய் இருக்கும் பெரமு தே பற்பல லீலைகளைக்காட்டி, முதலை காலை பிடித்த விபாதத்தால், தாயாரிடம் அனுமதி பெற்று சன்யாஸம் வாங்கிக்கொண்டு, திக்கு விஜயம் செய்து 'சிவமதத்தை' க்ஷாப்பற்றி "ஹரேஷ்ண காஞ்சி" என்று பெயர் பெற்று விளங்கி வரும் சிவபெருமானுக்கு இரண்டு கண்கள் போல் விளங்குவது 'காசி, காஞ்சி' என்றவைகளால் 'காஞ்சிபுர க்ஷேத்ரத்தில் இக்கேக உடலை விட்டு, ஈசன்கு ஸிஷ்யர்களை ஏற்படுத்தி, அது முதற்கொண்டு இன்று வரையில் அழியாமல் விளங்கி வரும் ஸ்ரீ காஞ் கொமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்க ராசாரியா ஸ்வாமிகள் அவருக்கு பரம்பரை யில் 68வது பட்டத்தில் 'ஆதிசங்கர பகவத் பாதாளே 'பரமேசுவரன்'. அத்தப் பரமசிவ னே இப்பொழுது பீடத்தில் அமரும் பிரபு அவர்களை நாம் அனைவரும் கேரில் கண்க ளால் காணும் பாக்கியத்தைப் பெற்றோம்.

(தொடரும்)

ஸ்ரீ சங்கர சரிதை

இலவச பிரசுரம்

ஒரு வேண்டுகோள்.

"ஸ்ரீ சங்கர சரிதை" என்னும் ஒரு சிறிய புஸ்தகத்தை நாம் வெளியிட உத்தேசம். இப் புத்தகம் ½ டெம்மி அளவு சுமார் 50 பக்கங் கள் கொண்டதாயிருக்கும். ஸ்ரீ சங்கரரின் உருவப்படமும், ஸ்ரீ காஞ்சி கம்கோடி பீடாதிபதி ஸ்ரீ சங்காசாரியார் உருவப்பட ங்களும் ஆர்ட் பேப்பரில் பிரசுரித்துப் புத்த கத்தில் இணைக்கப்படும். (தமிழ், சமஸ்கிருதம் ஆங்லம்) மூன்று பாஷைகளில் ஸ்ரீ சங்கர சரிதைபைச் சுருக்கமாகப்பிரசுரிக்கப்படும். ஸ்ரீ சங்கர அவதார காலம், சங்கர நிக் விஜ யம், மடஸ்தாபனம், ஸ்ரீ சங்கர குரு பரம்ப ரை, சங்கர உபதேசங்கள் யாவும் சுருக்கமா வெளியிடப்படும். இத்தப் புத்தகத்தை தமிழ் நாடெங்கும் இலவசமாக வழங்குவதாக இருக்கிறோம். முதல் பதிப்பாக 5000 இதழ் கள் வெளியிடப்படும். இதற்காக ஏற்படும் சிலவுகளை ஆன்றோர்களிடமிருந்து வசூலிக்க விரும்பும். நமது வேண்டுகோட் கிணங்கி அன்பர்கள் தங்கள் இஷ்டப்படி தன் கொடை நமக்கு அனுப்பலாம். தன்கொடை யாளர் பெயர்கள் புத்தகத்திலும் வெளியிடப் படும் ஸ்ரீ சங்கரரைப் பற்றி அநேக புத்தகங் கள் இதுவரையில் வெளிவந்திருக்கலாம், ஆனால் சுருக்கமாக எழுதி, இலவசமாக வழ ங்கவேண்டியே இத்தப் புதியபுத்தகம் வெளி யிடப்படுகிறது. புத்தகம் ஜூலை மீ 31உ க்குள் வெளியிடப்படலாம். அன்பர்கள் அத்தத்தேதிக்குள் நமக்கு ஆதரவு அளித்தால் நலமாயிருக்கும்.

இங்ஙனம், தங்கள் பணிவுள்ள,
எல். எஸ். மணி அய்யர், உதவி ஆசிரியர்,
"ஆர்யதர்மம்", கும்பகோணம்.

தாக ஒவ்வொரு ஆஸ்திகரும் "ஆரியதர்மத் நிற்குப்" பல விதத்திலும் ஆதரவு அளிக்க வேண்டும். இங்கிலீஷ் புத்தகங்களை வாங்கு வதிலும், பிரசுரிப்பதிலும் மோஹம் குறைய வேண்டும். இதனால் மேல் நாட்டிற்கே பணம் போய்ச் சேருகிறது. நம்முடைய க்ரந்தங்கள் கூடினித்து கலாஞானமும் குறை வுபடுகிறது.

பட்டஸ்ரீ நாராயண சாஸ்திரிகளின் க்ரந் தங்களைப் பற்றிச்சிந்திக்கும் பொழுது மேற் கூறிய அபிப்பிராயங்கள் ஒவ்வொரு வருக்கும் கட்டாயம் தோன்றும். அறிஞர்களும், பிர புக்களும் ஒன்று சேர்ந்து அபூர்வமான க்ரந்தங்களைக் கண்டு பிடித்துப் பிரசுரித்தல் வேண்டும்.

செய்தித் திரட்டு

"அம்பட்டன்" என்று சொல்லாதே.

"அம்பட்டன்" என்ற பெயரை எடுத்து விட்டு "மருத்துவர்" என்று கூறவேண்டும் என்று தென்னிந்திய மருத்துவர் சங்கத்தி னர்கள் விரும்பினர்கள். அரசாங்கத்தினர் மருத்துவ மறபினர்களின் அபிப்பிராயத்தை அறிந்தபின்பு முடிவான அபிப்பிராயத்தை தாகக் கூறியுள்ளார்கள். 1939ஹு செப்டம் பர்மீ 1உக்குள் சர்க்காருக்கு மருத்துவ மகாஜனங்கள் மஹஜரை சமர்ப்பிக்கலாமாம்.

20 நிமிஷங்களில் நடந்ததாம்.

வடாற்காடு ஜில்லாபோர்டின் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களின் கூட்டம் ஜூலை 1உ இரவு 9மணிக்கு கூடிற்றும். கூட்டம் இரவு 2-45 மணிக்கு முடிந்ததாம் 5 மணி நேரம் விவாதித்தபின் 120 தீர்மானங்கள் ஒவ்வொன்றாக ஒருஅங்கத்தினர் பிரேரேபித் தாராம். 20 நிமிஷங்களில் 120 தீர்மானங் களும் நிறைவேற்றப்பட்டதாம்.

ஜலத்துக்குப் பஞ்சமில்லை.

சென்னையில் மழைபெய்து வருகிறது. புழலேரியில் 3 அடி ஜலம் அகரித்திருக் கிறது. தண்ணீர் மட்டம் 33.07 அடியாக இருக்கிறது.

இந்தியா மோட்டாரில்..... .....?

"இந்தியாவில் மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்து குறைந்த விலையில் விற்க லாம்" என்று சமீபத்தில் சனம் னர். விஸ்வேஸ் வரய்யா அன்று கூறினர். இதனை ஒட்டி அவர் சமர்ப்பித்த நிட்டத்தை பம்பாய் சர்க் கார் பரிசீலனை செய்து வருகிறார்கள். ஸ்ரீ பி. பி. அத்வானி என்ற ஒரு பிரபல என்ஜி னீர் இதனை ஒட்டி வெளி நாடுகளுக்குச் சென்று இந்திய மோட்டார் தொழிலுக்கு வெளிநாட்டுக்கம்பெனிகள் எத்தகைய உதவி செய்யக்கூடுமென்பதை அறிந்து வருவார்.

பதிலுக்குப் பதில்

இலங்கையில் இந்தியர்கள் அதிகப்பட்டு வருகிறார்கள். ஆனல் இலங்கைசாமான்களை மட்டும் இந்தியர்கள் லக்ஷக்கணக்கில் வாங்கி ஆதரவு தந்து வருகிறார்கள். நிருவாகக் சமஸ்தானத்து சர்க்கார் 1—7—39 முதல் இலங்கையிலிருந்து வரும் புகையிலைக்கு ஏற் பட்டிருந்த இறக்குமதி வரியை உயர்த்தி விட்டார்கள்.

பாங்கிகள் சட்டத்தை திருத்துக.

அடிக்கடி பாங்கிகள் முறிவதால், அதைத் தடுக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டு மென்று பம்பாய் பாங்கர்கள் கூறுகிறார்கள். "பாங்கிகள் சட்டத்தை" உடனே திருத்த வேண்டுமென்று பொக்கிஷ இலாகவுக்கு ரிஸர்வ்பாங்கி கவர்னர் ஸர் ஜேம்ஸ் டெய்லர் எழுதியிருக்கிறார்.

டிக்கெட்டுக்குப் பணமில்லையா ?

பர்த்வான் ரயில்வே ஸ்டேஷனில் சென்ற வாரம் ஒருவர் டிக்கெட் இல்லாமல் வந்தார். அவரை அதிகாரிகள் சோதித்தார்கள். அவ ரிடம் ரூ 2,000 இருந்தது. ரயில் வே மாஜிஸ்ரேட் விசாரித்தார். அதற்கு அக்க கபர் தன் தகப்பனாரிடமிருந்து அத்த பணத் தை வரங்கி பாங்கியில் போட கொண்டுவந்த தாகக் கூறினர். விசாரித்ததில் இது உண்மை பென்று புலப்பட்டது. டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்ததற்காக ரூ 50 அபராதம் விதிக்கப்பட்டது.

ஹைதராபாத் சத்யாக்ரஹம்.

ஹைதராபாத் சத்யாக்ரஹம் முடிந்த பாடில்லை. பம்பாயிலிருந்து 13 சத்யாக்ரகிகள் பண்டிதராம்கிவான்ஜி தலைமையில் ஜூலை 1உ ஹைதராபாத்துக்கு வந்தார்கள். அவர்களை அதிகாரிகள் கைதுசெய்தனர்.

"ஹரதகூஷிணைக்கு" வழி பிறந்தது.

வடமேற்கு எல்லைப்புறமாகாணத்து சட்ட சபையில் "வரதகூஷிணை" யை ஒழிக்க ஒரு மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. இத்த மசோதா சட்டமனல் இது எல்லா சமூகத்தினரையும் கட்டுப்படுத்தும். வர தகூஷிணை வாங்கினல் 6மீ தண்டனையோ அல் லது ரூ. 1000 அபராதமோ அல்லது இரண் டும் சேர்ந்தோ விதிக்கப்படுமாம். வரதகூஷிண கொடுக்கிறவனுக்கும், கொடுக்கத் தூண்டுப வனுக்கும் 3மீ தண்டனை அல்லது ரு. 500 அல்லது இரண்டும் சேர்ந்தோ தண்டனை விதிக்கப்படும். இந்த மசோதாவை ஸ்ரீ லாலசேட்சந்திர கொண்டு வந்திருக்கிறார்.

நால்வரை தாக்கிய மோட்டார்.

ஜூலைமீ 1உ சென்னை நிரவல்லிக்கேணி சேப்பாக்கம் லடகோடியில் 2951 M. C. மோட்டார் ஒரே சமயத்தில் நான்குபேர் களின் மீது மோதிற்று. பாதசாரிகளுக்கு கடுமையான காயங்களுக்குட்படுத்திவிட்டு ஒரு தூரச்சக்கரவண்டியின் மீது மோதி விட்டதாம். இவ்வளவு கடத்தும் மோட்டா ருக்குச் சேதமில்லை.

காரியக்கமிட்டியை எதிர்க்க

காங்கிரஸ் காரியக்கமிட்டியை எதிர்க்க ஜூலை-மீ 3உ ஸ்ரீ சுபாஷ் பாபு ஜனப் ஜின் னுவையும், டாக்டர் அம்பேத்காரையும் பேட் டிகண்டு பேசினர். "முன்னேற்றக்கட்சி" யுடன் ஒத்துழைக்கும்படி அவர்களை கேட் டுக்கொண்டாராம்.

ஆலயத்தில் காணேம் ?

டெல்லி ஜைனக் கோவிலிருந்து ஐந்து விக் ரகங்கள் காணவில் போய்விட்டன. இதற்காக ஜைன பத்தர்கள் (ஸ்ரிரிகள்உள்பட) உண்ணு விரதம் அனுஷ்டித்து வருகிறார்கள். காணுமற் போன விக்ரஹங்கள் 1923ஆல் 2 லக்ஷ ரூபாய்செலவில் பிரதிஷ்டை செய்யப்பட்டது

ஒரு பத்திரிகையின் சரடு

22—6—39 யதார்தவசனி பிரதியில் 4வதுபக்கத்தில், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடா திபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளைப் பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறது "ஸ்ரீ சந்திரமௌளீசுவரஸ்வாமியையும், பிரபல அணிகலன்களையும் வடக்கின் கண் கண்காக திப் பிரதேசத்தில் தத்தஞ்செய்துவிட்டு உயி ரற்ற உடல்போலவும், கண்களற்ற முகம் போலவும் இதுபோது தமிருக்கை அடை கின்றார்கள் எனக் தெரிகிறது". இது கொஞ் சம் கூடாடக்காத விஷயம். பலநூற்றுண்டு களாகப் பூஜை செய்யப்பட்டு வரும் சந்திர மௌளீசுவரலிங்கம் தான் இப்பொழுதும்ஸ்ரீ சுவாமிகளிடத்தில் விளங்கிவருகிறது. எதை உத்தேசித்தோ இத்தப்பத்திரிகை ஒரு பொய் மூட்டையை அவிழ்த்த விட்டிருக்கிறது. நான் கங்காயாத்திரையின் சமயத்தில் கூட வேயிருந்தவனுகையால் மிகவும் தப்பானவிஷ யத்தை பத்திராதிபர் வெளியிட்டிருக்கிறு என்று அநேக கோடிபக்தர்களுக்குத் தெரி பிக்க முன்வருகிறேன்.

அ. சின்னஸ்வாமி சாஸ்திரிகள்,
காசி ஹிந்து யுனிவர்ஸிடி ஆசிரியர்,
திருப்பதி.

பாங்கி கலைக்கப்பட்டது

தென்னற்காடு ஜில்லா கூட்டுறவு பாங்கை ஜூலை-மீ 2உ கூட்டுறவு ரிஜிஸ்ரார் கனம் ஸ்ரீ எஸ். ஏ. வேங்கட்டாரமன் எம். ஏ. ஐ. ஸி. எஸ். கலைத்விடுமாறு உத்திரவிட்டிருக் கிறார். பாங்கி கிரவகம் சரிவர கடக்கவில்லை யென்றும், கையில் வைத்தக்கொண்டிருக்க வேண்டிய பணங்கள் சரிவர கையிருப்பில் வைத்தக்கொள்ளப்படவில்லையென்றும் கார ணம் காட்டப்பட்டிருக்கிறது.

முன்னேற்றக்கட்சி

ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் "முன்னேற்றக் கட்சி" களுக்கு நாள் வதுவுற்று வருகிறது. இங்கியாவின் கனபாகங்களில் கிளைகள் ஏற்படுத்தப்பட்டன. கட்சிக்கு ஸ்ரீ சுபாஷ் தலைவர், உபத்தலைவர் ஸ்ரீசர்தார் சார்துல்சிங், பொது காரியதரிசி.லாலா சங்கரலால், காரிய தரிகள்-பண்டித ஹிருதயநாத கிருவேதி ஸ்ரீ நரிமன், பொக்ஷிதார்-ஸ்ரீ எஸ். டி. பிரேக். ஏழு அங்கத்தினர்கள் கொண்ட கமி ட்டி ஏற்படுத்தப்பட்டது. கட்சிக்கு த் தனியே ஒரு ஆங்கில தினசரி தூம்பிக்கப் பட்டிருக்கிறது. இத்தக் கட்சியைக்கண்டு காங்கிரஸ்காரர்களுக்கு காடெக்கும் பாபரப்பு எற்பட்டிருக்கிறதாம். பம்பாயில் சென்ற வாரம் ஸ்ரீ சுபாஷ் பாபுவுக்கு மகத்தான வரவேற்பு நடைபெற்றது. ஊர்வலத்தில் 2 லக்ஷம் ஜனங்கள் கலந்துகொண்டார்கள். 3-மணி நேரம் பேசுவதற்கு கிடைப்பட்ட தாம். முன்னணிகட்சிக்கு மும்முரமாக பம்பாயில் வரவேற்பு கடத்தது.

"திருஷ்டி" கட்டுரையில் பிழை திருத்தம்

"ஆர்யதர்மம்" வாரப்பத்திரிகை 1939ஹு ஜூலைமீ 2உ தேதி (பிரமாதி ஹு ஆனிமீ 8உ) இதழில் (பு. 24 ஸ 25) 7ம் பக்கம், மூதல் பத்தி யில் ஸ்ரீ எஸ். வைதீஸ்வர அய்யர், கல்கத்தா அவர் களால் எழுதப்பட்ட 'திருஷ்டி" என்ற கட்டுரை யில் ..... "200 வருஷங்களுக்கு முன்" என்று பிரசுரிக்கப்பட்டிருப்பது தவறு. "2000 வருஷ ங்களுக்கு முன்" என்றிருக்க வேண்டும். நேயர்கள் திருத்திப் படிக்கவும். [ஆர்யதர்மத்தில் இனி அச்சு பிழைகள் ஏற்படா வண்ணம் பார்த்துக்கொள்ள படுமென்று நேயர்களுக்கு உறுதி கூறுகிறோம். ஆசிரியர் ஆ. த.]

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்
பிரமாதி-வரு ஆனி-மீ 22உ

மதமும் ராஜீயமும்.

சிறந்த ராஜரீதிக்குட்பட்ட எந்த தேச ராஜ்ய நிர்வாஹத்திலும், ராஜீயத்தால், மதத்திற்குத் தீங்கு ஏற்படக்கூடாதென்ற முக்ய தத்வம் அடிப்படையாயிருக்க வேணு மென்பதை ராஜீய நிபுணர்கள் ஒப்பியதே. அப்படியே ஸகல தேசங்களிலும் இன்று வரையில் நடந்துவந்திருக்கிறது. நமது புராதன ராஜ நீதிகளும், இதை வற்புறுத்துகின்றன. பிரசீன, நவீன தேச சரித்திரங்களிலும் இதற்கு பரிபூர்ணமான ஆதாரமுண்டு.

ராஜீய நன்மைகள் அவ்வப்போது ஏற்படும் மாறுதலிக்கொண்டு அடிக்கடி மாறுபடக்கூடியவை. இன்று நன்மையாகத் தோன்றினவை நாளை தீமையாக நினைக்கப்படலாம். இன்று நிலையாயிருப்பது நாளை கல்லதாக நினைக்கப்படலாம். அந்த நிலைமைக்கேற்றபடி மாறுதல் செய்துகொள்ள ராஜீயத்தில் இடமுண்டு. ஆனால், மதவிஷயம் இத்தகையதன்று. அது சாஸ்வதமான அஸ்திவாரமுள்ளது. அதை ஆதாரமாகக்கொண்டே மதத்தை கவனிக்க வேண்டும். ஸ்வாமி விவேகானந்தர் சொல்லியதை போல் மதமானது தெய்வ ஆக்ஞை என்றே நாம் கருதுகிறோம். அது மனிதபுத்திக்கும், மனிதர் இயற்றும் சட்டநிட்டங்களுக்கும் மேற்பட்டது. அவைகளிலிருந்து மதத்தைச்சீர்குலைக்க முயற்சிப்பது தெய்வத்தையே அவமதிப்பதாகும். ஸ்திரமற்றதும், அல்பமானதுமான ராஜீய நன்மையை உத்தேசித்து சாச்வதமான மதக்கட்டுபாட்டை உடைப்பது தேசத்தின் ஸமூஹ வ்யவஸ்தையைப் பாழாக்கும் பெரும் குழப்பத்தையும், அமைதியின்மையையும் உண்டாக்கக் கூடியது. இந்த தத்வத்தை ஒப்புக்கொண்டதாலேயே உலகத்தில் எங்கும் மதம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஆனல், இந்திய ஸ்தாபத்தப்பட்டவரையில் நிது காலமாக, அதாவது தேசத்தில் காங்கிரஸ் அதிகாரம் ஏற்பட்டதுமுதல், அநேகம் காங்கிரஸ் மந்திரி நிர்வாஹம் ஏற்பட்டது முதல், ஹிந்துமதத்திற்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்தைசொல்லிமுடியாது. வெகுஅல்பமான ராஜீய நன்மைகளையுத்தேசித்து மதத்தைப் பாழாக்கப் பெரும் தீங்கு ஏற்பட்டிருக்கிறது.

மஹம்மதிய, கிருஸ்தவ மதம் விஷயங்களில் இந்தத் தன்பம் இல்லாவிட்டாலும், ஹிந்துமதத்தைப் பற்றியவரையில் பெரும் அபாயம் ஏற்பட்டுவிட்டது. பிரத்யக்ஷமானது. மததர்மங்களைப்பற்றிப்பேச பரத்யப்பட்ட கணக்கற்ற மதாசார்ய பீடங்கள் நிறைந்த இந்த தர்மதேசத்தில் அப்பெரியார்களின் வார்த்தைகள் கேட்கப் படுவதில்லை. அவர்களுடைய அபிப்பிராயம் நிட்டமாக அலக்ஷ்யம் செய்யப் படுகிறது. கல்வி, கேள்வியற்றத் நிரியும் ஒரு சிறிய காங்கிரஸ் கார்ர் கூட நமது மதத்தைப்பரிஹஸிக்கவோ, பரிஷ்கரிக்கவோ, மதத்தத்வத்தைப் பற்றி அபத்தம் பேசவோ, தனிவு கொண்டிருப்பதனிட மதத்திற்கு வேறு அபாய முண்டோ? இந்த நிலைமையானது நாளுக்கு நாள் முற்றி வருவதுடன் கவர்ன்மெண்டை கடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்களும் மேற்கண்டபடி பொறுப்பற்ற நிலைமையில் நடக்க முற்பட்டிருப்பது மிகவும் விபரீதமாயிருக்கிறது. ஸமீபகாலமாக காங்கிரஸ் மந்திரிகளே வெகு தீவ்ரமாக ஆலயப் பிரவேச பிரசாரக் களர்ச்சியில் இறங்கியிருப்பது பரும் அறிந்ததே. ஆலயப்பிரவேசம் இன்று முற்றிலும் மதசம்பந்தமான விஷயமென்பதும், அது சாஸ்திர பிரமாண மொன்றலேயே நிர்ணயிக்கப்பட வேண்டிய விஷயமென்பதும் தெளிவானது. அத்தகையபெரிய விஷயத்தை, காங்கிரஸ் வாதிகள் தாங்களாக அவச்ய மென்று நிர்ணயித்துக் கொண்ட ஒரு சிறிய ராஜீய நன்மைக்காகப் பாழாக்க, மந்திரிகளே முயற்சிப்பதும், பயமுறுத்துவதும் பெருத்த அநியாயமாயிருக்கிறது. சாஸ்திர அபிப்பிராயத்தைப்பற்றி இவ்விஷயத்தில் இனி ஒடுத்துக்காட்டுவது பிரயோஜனமற்ற கார்யமாயிருப்பதால் வேறு பல வழிகளாலும் இந்த அநிக்ரமத்தைத் தடுக்கவேண்டியது ஹிந்துஸமூஹத்தின் அவஸ்யக் கடமையாயிருக்கிறது.

ஸ்ரீமான் காந்தி ஆலயப்பிரவேச விஷயத்தில் பொதுஜன அபிப்பிராயம் ஸாதகமாக மாறும்படி பிரசாரம் செய்யவேண்டும் என்றும், பலாத்காரமாக ஆலயப்பிரவேசம் கூடாதென்றும் எச்சரித்திருக்கிறார். ஆயினும், நமது பிரதம மந்திரி என்ன சொல்லுகிறார்? ஜனங்கள் வெகு சீக்கிரத்தில் மனமாறுதல் காட்டவேண்டுமாம்! ஆலயப்பிரவேசத்தைத் தடை செய்தால் எட்டு நாளில் சட்டம் செய்துவிடுவேனென்று பயமுறுத்துகிறார்! கத்திமுனையைக்காட்டி ஸாதுஜனங்களை பயமுறுத்துவது உண்மையான அஹிம்ஸையாகுமா? ஹிந்து ஸமூஹத்தில் மிகப்பெரும்பாலான ஜனங்களுடைய நீண்டகால உரிமையைப் பற்ப்பதும் அவர்களுக்கு இஷ்டமில்லாததுமான ஒரு அநீதியைச் சட்டநிர்ப்பந்தமூலம் அவர்களிடத்து நிறைவேற்றுவதும் ராஜநீதியாகுமா?

தேசியக்கொடியையும், வந்தேமாதர கீதத்தையும், ஒருவர் ஆக்ஷேபித்தால் கூட பொதுஸ்தலத்தில்உபயோகப்படுத்தக்கூடாதென்று காந்திஜி சொல்லுவதாக ராஜாஜி சென்னைக் கூட்டத்தில் பெருமைசொல்லிக்கொண்டார். இத்தகைய நியாய புத்தி படைத்த காந்திஜி கோடிக்கணக்கான ஜனங்களால் எதிர்க்கப்படும் ஆலயப்பிரவேசத்தை மட்டும் பலாத்காரமாக செய்து முடிக்க ஸம்மதிக்கிறாரா? தேசியக்கொடியையும், வந்தேமாதரத்தையும் எதிர்ப்பவர்கள் மகம்மதியர்களையால் அவர்கள் விஷயத்தில் மீறி காரணமாக தனி நியாயம் உண்டு போலும்? ஸாதக்களான ஹிந்துக்களுக்கு வேறு நியாயம்? என்ன நீதி?

காங்கிரஸ் மந்திரி ஸபை ஏற்பட்ட பின் ஜமீன்தார், பணக்காரர், நிலச்சுவான்தார், முதலாளிகள், வியாபாரிகள் போன்ற பல வகுப்புரிடையே மிகுந்த அதிருப்தி நிலவுகிறது. காங்கிரஸ் ஆதரவில் தங்கள் ஸொத்து ஸ்வதந்திரங்களுக்கும், உரிமைகளுக்கும் பங்தோபஸ்து இருக்கதென்ற முடிவு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

மத உரிமையைப்பற்றி தார்மிகர்களுடைய வாதங்களே இது காறும் அலக்ஷியப் செய்து வந்தவர்களெல்லாம் இப்போது அதன் நிஜ யத்தை உணர ஆரம்பித்துள்ளார்கள். நாங்கள் உரிமைக்கு பாத்ரகம் ஏற்பட்ட பிறகு தான் அவர்கள் விழித்துக்கொண்டார்கள். ஆகையால், இப்போது நம் தேசத்தில் ஓர் பக்வமான நிலைமை ஏற்பட்டு வருகிறது. இச் சமயம் எல்லா உரிமையாளர்களும் சேர்ந்து எல்லாஜாதி மதஸ்தர்களுமடங்கிய புதிய ராஜீயக்கக்ஷியை ஏற்படுத்தி காங்கிரலின் தீவ்ர போக்கைத் தடுக்க வேண்டியது அவச்யமாகிறது.

அதில் முக்யமாக மத விஷயத்தை ராஜீய த்திலிருந்து பிரித்துவிடவும், மதத்திற்குத் தக்க பாதுகாப்புளிக்கவும், ஸரியான வகை செய்யப்படவேண்டும். ஸ்ரீமான் ஸுபாஷ் போஸும் இச்சமயம் இதை வற்புறுத்த முன் வந்திருக்கிறார். அவருடைய கக்ஷியில் இது ஒரு முக்ய அம்சமாயிருக்குமாம். மதத்தின் மீதுள்ள அபிமானத்தினால் அவர் இப்படிச் செய்யவில்லை. ஆனல் மத உரிமையை ராஜீயத்தில் கலக்கக்கூடாதென்ற ராஜநீதியே இதற்கு ஆதாரமாகும். இச்சமயம் மதாபிமானிகள் தீவ்ரக்கிளர்ச்சி செய்தால் தக்க பலன் கிடைக்கும்.

தர்ம யுத்தம் ஆரம்பம்

மதுரையில் மாபெருங் கூட்டம்

ஆலயப்பிரவேசச் சட்டம் கண்டிக்கப்பட்டது

ஸநாதன தலைவர்களின் கர்ஜனை

[நமது விசேஷ நிருபர்]

மதுரைமாநகரில் ஜூலை-மீ 3உ இரவு ஏழுமணிக்கு மதுரை ஸநாதனதர்ம வித்யாலய மண்டபத்தில் ஒருமாபெருங்கூட்டம் கூடிற்று.

மதுரை நீதி வழக்கற்ஞர் ராவ்சாகேப் ஸ்ரீ N. ரடேசய்யர் அவர்கள் தலைமைவஹித்தார்.

ரவ்பகதூர் ஆர். கரிமிம்ம அய்யங்கார், ஸ்ரீமான்கள் டி. எஸ். ராமஸ்வாமி ஐயங்கார், ஜி. எ. வித்வநாத சாஸ்திரிகள், சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள், சீதாராம சாஸ்திரிகள், பி. ராம சாமி ஐயங்கார், எம் வெங்கட்டராமய்யர், ஆரூவழகம் ஐயங்கார் முதலிய ஸநாதனபிரமுகர்கள் "ஆலயப்பிரவேசச்சட்ட"த்தைக் கண்டித்து கடைமுறையில் சட்டத்தை ஒழிக்க வழிதேடவேண்டுமென்று பொது ஜனங்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

தலைவர் ஸ்ரீரடேசய்யர்முடிவுரையில் "ஹரிஜனசாஸ்திரத்திற்கு விரோதமாய் ஆலயப்பிரவேசச்சட்டம் ஏற்பட்டிருக்கிறதென்றும், ஆதித்நாவிடர்கள் ஆலயங்களுக்குப்போனல் மழை பேய் விடுமென்றும், ஆலயப்பிரவேசச்சட்டம் அநியாக விஷமக்காரர்களினல் ஏற்பட்டிருக்கிறதென்றும் பொது ஜனங்கள் நிஷமாகச்சட்டத்தை எதிர்த்து போராடவேண்டுமென்றும்".....கூறினர்

மதுரையில் நிகரில் கூட்டங்கள் கூட்டி, ஆலயப்பிரவேச விஷயமாக அறிக்கைகள் தொடர்ந்தும் வழங்கப்படுவதென்றும் தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறியது.

ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் குடந்தைக்கு விஜயம் செய்த பொழுது கீழ்கண்ட உபசாரப்பத்திரம் குடந்தை மகாஜனங்களின் சார்பாகஸ்ரீ. C, S, தீக்ஷிதரால் வாசித்தளிக்கப்பட்டது:—

ஆத்ம தாகம் மேலிட்டு, ஆன்மாக்கள் ஆண்டவனை அடையும் மார்க்கம் அறியாமல் உழலுங்கால், அன்பு கசிந்தொழுகி, பேரின்ப வெள்ளப் பெறுக்கெடுத்து, ஷண்மத ஸ்தாபனாசார்யாளின் பீடத்தில் மர்ந்து, ஆன்மாக்கள் உய்யும் வண்ணம், சத்தியமும் அன்பும் பறைசாற்றி, மகாமகப் பெருமை வாய்ந்ததும், காவிரி, ஹரிசொல் என்னும் இரண்டு நதிகள் மாலையாய் ஓடுவதும், அனேகம் சிவ, விஷ்ணு ஆலயங்கள் அமைய பெற்றதும், யுகப்பிரளய காலத்தில் கும்பம் வந்து தங்கியதால் கும்பகோணம் எனப்பெயர் பெற்றதும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்களின் வம்ச பரம்பரையான வாசஸ்தலமானதுமான, இப்புண்ய நகருக்கு ஜகத்குருவே வருக வருக! பிரபுவே வருக வருக! சம்போ சங்கர மஹாதேவ! வருக வருக!

உலகமெங்கும் அஞ்ஞானம் குடிகொண்டிருக்கும் சமயம்! ஹிந்து மதம் சீர்குலைந்திருக்கும் சமயம்! அனைவரும் இவ்வுலகப் பொருள்கள் நித்தியமென்று நினைத்திருக்கும் சமயம். தாங்கள் எழுந்தருளி ஞான வெளிச்சத்தால் அஞ்ஞான இருளை அகற்றி, என்றும் இம்மதம் மாறுத நிலையில் இருக்குமாறு, காயக்லேசம் செய்து சரீரத்தை வெறுத்து, ஆகாரத்தை தள்ளி, பகல் இரவு ஜனக்கம் இல்லாமல் "லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து" என்று நாங்கள் அனைவரும் க்ஷேமமாயிருப்பதற்காக தாங்கள் ஒருவர் நினைசெய்து கங்கணம் கட்டிக்கொண்டு கற்று, மழை, வெயில், குளிர், ஒன்றையும் லட்சியம் செய்யாமல் சென்ற 20 வருஷங்களாய் யாத்திரை செய்துவிட்டு, பிரபு திரும்பி வருவாளோ! கும்பகோணத்தில் தங்குவாளோ என்று நாங்கள் அனைவரும் எதிர்பார்த்துக்கொண்டு மழை முகம் காணாத பயிர் போலும், கன்றை விட்டுப்பிரிந்த பசுப்போலும் தவித்த சமயத்தில், அஞ்சாதே! இதோ வந்து விட்டேன், இவ்வருஷம் சதுர்மாஸ்யம், வியாஸ பூஜை இவைகளை உங்கள் க்ஷேத்திரத்தில் செய்து விடுகிறேன் என்று கருணைபுரிந்த பசுபதியே— நீலகண்ட ப்ரபோ, சங்கரகுரோ! வருக!! வருக !!!

குடந்தை டவுன்ஹைஸ்கூல் தமிழ் பேராசிரியர் ஸ்ரீ. ஊ. சா. வேங்கடராமன் வாசித்தளித்த உபசாரப்பத்திரம்:—

உலகெலாம் பேற்று மலகிலாக் கவினுர்
குமரியே இமயமே குணகுட கடலே
என்றிவை யொருங்கே கன்னான் கெல்லாம்
தன்னிய பழம்பெரும் புகழொடு மன்னிய
சிச்சால் பாத தேசச் சிறப்புள்
தலைநிறத் ததகம் மலிவிலாக் கொள்கையே
அத்நிருக் கொள்கையா மத்துவி தப்பொருள்
தன்னே புலனினர் தன்ன ருணர்வான்
வேண்டிப் பூவல மேற்கொண் டாண்டான்
டமைதரு வனவா மிமையவர் போற்றும்
மூர்த்நியே தலமே தீர்த்தமே யென்றிவை
தம்மைக் கண்டும் வந்தும் படித்தும்
செப்பிய தலதெறிக் கொப்பி படிபல
விரதமேற் கொண்டும் வரனைப் பேற்றியும்
விஜயயாத நிரையினே யுநிதமாச் செய்யத்
நிருவிரா மேசத் நிருப்பதி முதலாச்
சிரிய வரண வரியின் காறும்
சென்முமாச்ச சால நியாயத் தொன்றிய
படிபடி உரிக டம்மைப் பாவனர்
ஆக்கக் கருதிய வாதவன் மாகி
யாத்நிரை முற்றி நலேக் தாண்டு
கழித்தீண் டடியேம் கானிய விழைந்தே
காட்சி யளிக்கக் கருணையெ டடைக்கணே
குடமூக் கிடமாக் கொண்டுயர் மடத்துவாழ்
காம கோடி பீடத் தமர்ந்த
ஒப்பிலாக் குருவே செப்பிய நிலைார்
சற்சனர் போற்றும் விற்பனர்க் கொருவ
சற்குரு மணியே தமர்ந்தனு ளாய
பொய்ப்பொருள் விலக்கி மெய்ப்பொருள் விளக்கும்
நிப்பிய தேசிக இப்புவி வாழ்நர்க்
நிருவினைக் கட்டு மிருப்பாற் பொன்னுல்
ஆயிய தனிகளென் நாரய்ந் தவையொரீஇப்
பற்றற முயலுக வென்றிடித் தாரைக்கும்
பற்பல நூல்க டம்மைப் பல்கால்
படித்துப் படித்த பழவினைப் பயனுல்
உடலுக் குழைத்நிங் குழன்முழன் றுலேன்
உயிருக் குறுநிய வொன்றையுஞ் செய்கலேன்
என்னினு முலகிற் றக்கில் நில்லாச்
சிவன் முத்தரைச் சேவித் நிடுவோர்
சன்மப வனாராய்த் நிகழுவ னெனமறை
முழங்குக் முண்மையி னுழன்றிடி யேன்
அத்தகு முத்தர படிகளைக் கருநியுள்
அன்புட னடிபடிக் நின்புறு தன்மையின்
கவலெருங் கனன்றேன் றவலரும் புகழ்சேர்
சங்கர பகவத் பாதரே மானச்
சகமுழு துவக்கத் தவத்தறை முற்றிச்
சார்த்தவ சோங்கத் தேர்த்தப தேசம்
செய்தருள் புரியுஞ் சங்கர சேகர
இன்நிர சாஸ்வதீ பர்வதீ யகற்றற்
கென்னுளக் கருத்தை கின்நிருச் சங்நிதி
தன்னில் விரித்தேன் றமியேன்
பின்னைப் பேறுறப் பேணியாண் டருளே!

குடந்தை மஹா ஜனங்கள் சார்பாக அளிக்கப்பட்ட ஆங்கில உபசாரப்பத்திரிகை :—

IT is with mingled feelings of joy and happiness that we the citizens of Kumbakonam assembled here today present this humble address and welcome your Holiness, on the occasion of your return to our midst, after a pilgrim tour throughout India for the last twenty years, and we do not exaggerate when we mention that we were all feeling like fatherless children in your absence. The rapid change that has been taking place in our Hindu Society is solely due to the want of a "Guru" a responsible person to guide us through and put us in way in times of difficulties.

"The future great
So dim to us
With vision keen
You see indeed".

IT has not been given to us to hear your learned lectures delivered at several places and appreciated by one and all and to our great misfortune, you have taken a vow of silence till the "Conjeevaram Kamakshi Amman Kumbabishekam and Ratha Kaingaryam" are over.

THERE were occasions when several of us were thinking that Your Holiness had been contemplating to be going about from place to place without returning to Kumbakonam, a sacred place with its Cauvery, which is said to be more holy than Benares with its Ganges.

The Brahmin Cult was a cult of truth,
It was a cult of thought supreme,
Its mystic strength is not yet dead,
And this we count as India's asset!

On elements great, he based his faith
These agents great of God he loved
These friends of his, their turn did well
And guarded him from evils all.

BEFORE closing we beg to respectfully request your Hcliness to kindly return to Kumbakonam; after the Conjeevaram Kumbabishekam is over and give us the daily opportunity of worshipping at your sacred feet, as we all fully believe that God Paramasiva from Mount Kailas has come down in human form under the name of Sri Sankara to bless us all.

சோலையப்ப முதலியார்தெரு அக்ரஹாரா வாசிகள் வாசித்தளித்த உபசாரப்பத்திரம்:—

ஸ்ரீ மஹா ஸ்நிதானத்தில் சென்ற கானயுக்தி-ஹு தை-மீ 21உ (3—2—1919) ஸோமவாரம் கும்பகோண க்ஷேத்திரத்திலிருந்து கங்கா ஸ்நான யாத்திரையாக புறப்பட்டு முதலில் ஸேதுஸ்நானத்துக்குப்போய் பிறகு கங்காஸ்நானம் செய்துவந்த தானது தங்கள் சிஷ்யர்களை புனிதமாக்க ஓர் வியாஜமாக எங்களுக்கு தோன்றுகிறது. ஸ்ரீ ஸந்நிதானத்துக்கு கங்கா ஸ்நான பலன் தேவையில்லை. தங்களைப்போலொத்த தபஸ்விகளை

அக்நிகல்பாः, பாவகோபமாः ।

அக்நிக்கு ஸமமாக ராமாயணத்தில் சொல்லியிருப்பதாலும்

தீர்தோदகं च வஹ்நிश्च नान्यतः शुद्धिमर्हतः ।

அக்நிக்கு சுத்திதேவையில்லை என்ற வசனப்படி எல்லாவற்றையும் பார்த்தமாத்திரத்தில் சுத்திசெய்யக்கூடிய ஸந்நிதானத்தில் கங்கா ஸ்நானத்தினால் சுத்திசெய்து கொள்வது அனுசிதம்.

மேலும் தங்களைப்போலத்த தபஸ்விகளின் சரீரத்திலேயே ஸேதுவும், கங்கையும், சிவலிங்கமும் இருப்பதாக ஷட்சக்ர நிரூபணத்தினாலும், ராமாயணத்தின் ரஹஸ்யார்த்தத்தினாலும் ஸேதுமஹாத்மியத்தாலும் வெளியாகிறது. ஸ்ரீராமர் ஸேதுவைக்கட்ட ஆரம்பிக்குமுன் தன் விருதய கமலமாகிற அனுஹத சக்ரத்தில் உள்ள சிவலிங்கத்தின் மூர்த்தியை ஸேது ஆரம்பிக்கிற இடமாகிற இராமேச்வரத்தில் ஒரு லிங்கத்தை ஸ்தாபித்து அதில் ஆவாஹனம் செய்து அதை பூஜித்ததாக ஸேது மஹாத்மியத்தில் சொல்லியிருக்கிறது. மேலும் அத்யாத்ம ராமாயணத்தில் ஸேதுவை சிவலிங்கத்தின் மூர்த்தியாக சொல்லியிருப்பதாலும் ஸேதுவில் ஸ்நானம் செய்தால் சிவலிங்கத்தில் ஸ்நானம் செய்ததாகும். ஆகையால் ஸேதுவில் ஸ்நானம் செய்தால் கங்கா ஸ்நானம் செய்ததாகும். ஸேதுவில் ஸ்நானம் செய்தால் கங்கா ஸ்நானம் செய்ததாகும் என்பதற்கு ஸந்தேஹமில்லை. ஆகையால்

215290

உங்கள் நாக்கை ஏமாற்றுதீர்கள்

சாதாரணமாக மனத்திற்காகத் தயாரிக்கப்படும் பெருங்காயம் யாதொன்றுக்கும் பிரயோசனப்படுவதில்லை. உங்கள் நாக்கை ஏமாற்றுகிறது. புத்திசாலிகள் தங்கள் உணவுப் பொருள்களை வாங்குவதில் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். அவர்கள் ஸ்யண்டிபிக் T. T. பெருங்காயத்தையே கேட்கிறார்கள். ஏனென்றால் அது நல்ல சாக்கு என்று அவர்களுக்குத் தெரியும். பதினைந்து வருஷ ஆராய்ச்சியின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஸ்யண்டிபிக் T. T. பெருங்காயம் 20-20% அயக் சத்தினால் காப்பாற்றப் படுகிறது. அதற்கு நறுமணமும் நற்சுவையும் உண்டு.

ருசிகரமான சாப்பாட்டிற்கும் ஜீரணத்தை சுலபமாக்கவும்
பரிசுக் கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

ஒரு பவுண்டு ரூ. 1—14—0

ஸைன்டிபிக்
T. T.
மிஸ்கி பெருங்காயம்

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட்.,

டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடத்தில் தமிழ், சம்ஸ்கிருதம், தெலுங்கு, ஆங்கிலம், முதலிய பாஷைகளில் எல்லாவித அச்சு வேலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறைந்த சார்ஜ் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்துக் குறித்த வேளையில் கொடுக்கப்படும்.

மாத சஞ்சிகைகள், புத்தகங்கள், முதலியவைகள் பிரசுரிக்க ஒரு ஏற்ற இடம் பையிண்டிங், ரூலிங் முதலியவைகள் நன்றுசெய்து கொடுக்கப்படும்.

ஒருதடவை ஆர்டர் கொடுத்துப் பார்க்கவும்.

எழுத்தாளர்களுக்கு

[கமத"ஆர்யதர்மம்" மாசப்பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டித் தமிழ்நாட்டிலிருக்கும் எழுத்தாளர்களிடமிருந்து வியாஸங்களும், கட்டுரைகளும் ஏற்றுக்கொள்ளப்படும். ஸநாதன தர்மத்தைப்பற்றியும், சாஸ்திர ஆராய்ச்சி, சாஸ்திராஸ்தேகங்கள், புராண இதிஹாஸங்கள், ஜோஷ்யம், வைத்யம், சங்கீதம், போன்ற விஷயங்கள், சரித்திரக்குறிப்புகள் முதலியவைகளைப் பற்றி மிகச் சுருக்கமாக ஒரே பக்கத்தில் எழுதி யனுப்பலாம். பொருளாதாரம், அரசியல் இலவாணி, தத்துவம் தேச விஷயங்களைப் பற்றிச் சிறுகட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஆரம்பத்தில் எத்தனை பண உதவியும் செய்யமுடியாத. பத்திரிகையின் இதழ்கள் 2 அனுப்பப்படும். செய்திகள், அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஆசிரியர், ஆர்யதர்மம், கும்பகோணம்.

உடனே தேவை

ஸ்ரீ சங்காசாரியசுவாமிகள் தென்னிந்தியாவின் பலபாகங்களில் விஜயம் செய்த பொழுது ஆங்காங்கு எடுத்த புகைப்படங்களின் ப்ரதிகளை தேயர்களாவது, நிருபர்களாவது நமக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்,
ஆர்யதர்மம், கும்பகோணம்.

நிருபர்கள் வேண்டும்.

"ஆர்யதர்மம்" வாரப் பத்திரிகைக்கு இந்தியாவின் பல முக்கிய இடங்களில் "நிருபர்கள்" வேண்டும். ஆரம்பத்தில் நிருபர்களுக்குப் பண உதவி செய்யமுடியாது. இலவசமாகப் பத்திரிகை அனுப்பப்படும். ஸநாதன தர்ம விஷயங்களைப்பற்றியும், முக்கிய செய்திகளைப்பற்றியும் நிருபர்கள் வாரந்தோறும் எழுதி அனுப்பலாம்.

ஆசிரியர், 'ஆர்யதர்மம்', கும்பகோணம்.

The Premier English Weekly Devoted to the cause of Sanatana Dharma.

"Dharmarajya"

(Official organ of the Dharma Sevaka Sabha).

Patron Founder & Spiritual Director
H. H. Sri Sankaracharya, Puri.

Widely circulated in
India, Burma & Ceylon.

Best Medium for Advertisement
Annual Subscription Rs. 3

Apply to:—
The Manager, "DHARMARAJYA"
Chandi Chowk, Delhi.

அறிக்கை.

"ஆர்ய தர்மம்" வாரப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் செய்திகள், கட்டுரைகள் யாவும் ஒரே பக்கத்தில் மசியினால் மிகச்சுருக்கமாக எழுதி பிரதி திங்கட்கிழமைக்குள் காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும் ஆசிரியருக்குச் செய்திகளை குறைக்கவோ, கூட்டவோ பூர்ண உரிமையுண்டு.

மாற்றுப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் பிரசுரிக்க வேண்டிய கட்டுரைகள் யாவும், ஆசிரியர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் விளம்பரங்கள் பிரதி திங்கட்கிழமைக்குள் மானேஜர், "ஆர்ய தர்மம்", கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

மானேஜர்,
"ஆர்ய தர்மம்", கும்பகோணம்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும் "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்.
தர்மசாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரை.
"ஆர்யதர்மம்" ஆபீஸ், கும்பகோணம்.

ஒரு வேண்டுகோள்.

"ஆர்ய தர்மம்" வாரப்பத்திரிகை புதிய முறையில் வரவேண்டுமென்று பல நேயர்கள் விரும்பி நமக்குக் கடிதமூலமாயும் கேரிலும் சொல்லிவருகிறார்கள். "ஆர்யதர்மம்" நாளடைவில் புதிய முறையில் அதிகப் பக்கங்களுடன் வெளிவர ஏற்பாடு செய்யப்படும். தமிழ் நாட்டிலிருக்கும் "ஆர்யதர்மத்தின்" நண்பர்கள் சந்தாதாரர்கள் சேர்த்தும், பண உதவி செய்தும், பத்திரிகையை ஆங்காங்கு பரவும்படி செய்தால் விரைவில் ஆர்யதர்மம் புஷ்ய தோற்றத்தில் வரக்கூடுமென்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்
"கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் ஸாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால் செலவு வேறு] [விலை அணா 0 8 0
கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikacharlar, and S. Kalyanasundaram.





653

215291

MADRAS

259

REGD No. M. 2913. ARYADHARMAM Estd. 191

TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்யः பரிபாலயந்தாம் ந்யாய்யேன மார்கேண் மஹீம் மஹீசாः ।
கோப்ராஹ்மணேப்யश்சுபமஸ்து நித்யं லோகாஸமஸ்தாஸுகினோ பவந்து ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு-24 | கும்பகோணம் பிரமாதி-வரு ஆனி-மீ 29உ 1939-வரு ஜூலை-மீ 13உ | வா-28

ஸ்ரீ ரமண மஹரிஷி

உலகமறியும் உபதேசம்

ஆன்மப் பசிதீர்ந்து ஆனந்தமடைய

அன்பர்கள் அவரை அடைகிறார்கள்

ஆத்ம போதமடைய அவர்காட்டும் முறை.

ஸ்ரீ ரமண மகரிஷியின் சரமம் பாரத தேசத்தின் ஒவ்வொரு வீட்டிலும் இப்போது வழங்கி வருகிறது. உலகாயதம் தலைவிரித்தாடுமிக்காள்ளுங்கூடகம் ப்ரய் சாட்டில் தெய்வீக வாழ்க்கை மறைந்துவிடவில்லை யென்பதற்கும், அலங்கோலமாயுள்ள உலகத்தை ரட்சிக்கக்கூடிய ஆத்ரசக்திக்கு உறைவிடமாய் அத்தாய் தொடர்ந்திருந்து வருகிறதென்பதற்கும் அவரே கோன நிதர்சனம்! தத்வதர்சனத்திற்காக அகம்பெருளாராய்ச்சி செய்த ஆத்மபோதமடைய அவர் காட்டும் முறை இக் காலத்துக்குரிய விஞ்ஞான விசாரக்கொள்கைக்குப் பொருத்தமாயிருப்பதால் ஒப்புயர்வற்றதாகும்

ரமண சரிதங்களில் கண்ட உண்மைகளை மகர்ஷியின் ஒன்றிரண்டு குணநிசயங்கள் வெகு சுன்றக விளக்கிக் காட்டுகின்றன. ரமண அவரை மேன்மேலும் உணருங்கால், அவர் மிக உயர்ந்த சில ஆத்ம தத்துவங்களை நிரண்டு உருவெடுத்த வந்தவரென்று உணர்கின்றோம். செல்வர், வறியர், உயர்ந்தார், தாழ்ந்தார்; ஆண், பெண்; மக்கள், மாக்களென்னும் பித்தியாசமே அவருக்கில்லை. தன் தாய்க்கென்று கூட அவர் தனிச் சலுகை காட்டியதில்லை என்று சொல்லுகிறார்கள். ஒருவரிடமுள்ள பன்மையே மற்றவரிடமும் அவருக்கிருக்கிறது. கற்பிக்கக்கூடிய அல்லது கற்பிதமான எல்லா பேதங்களையும் அவர் கடந்து நிற்கிறார். மனித கற்பிதமான கடைகள் அவர் இயற்கையை அணுவும் அணுகுவதில்லை. அவர் அனைவர்க்கு மூரிய வர். ஆயினர் எவரும் அவரைத் தனக்கே புரியவனெக் கொள்ளமுடியாது. ஒவ்வோ ருபிரிலும் இறையைக்கண்டு அவன் அல்லது அதனுடன் தன் உறவுணர்கின்றார். கடப் பனவும் ஊர்வனவுங்கூட அவன்பிற்கு பங்குகொள்ளுகின்றன. இப்படிப்பட்ட மை மிகவும் இயற்கையானது. ஏனெனில், அவர் காட்டம் ஒருயிர் பரமனுகல் பரதேனு மேசர் காரணத்திற்காகவல்ல; அத்தான்மா வின் பொருட்டாம்:

வெறுப்பு,பொருமை,ரம் இவையெல்லாம் தேகான்ம பாவமகிய அறியாமையிற் பிறந்தவை. ஒரே ஆன்மா எல்லா உயிர்களிலும் நடம்புரிவதைக் காணவல்ல ஒருவருக்கு இத்தப் பேத எண்ணங்களெழா. இதனே, அரசனே ஆண்டியோ எவர்வரினும், மகரிஷி தன்னிலையிற் பேரமல் நிற்கும் ரகசியம். அவர் எவரிடமும் விசேஷமாய் உறவு பாராட்டாததைக் கண்டு வருத்துவது, அனைவர்க்கும் சமமாக அருளை புரியும் ஆலய விக்கிரகத்தினிடம் வெகுள்வது போன்றதே. கம் சிரத்தைக்குத் தகுந்த அருள் அவரிடம் நமக்குக் கிடைக்கும் சந்நிதியே கம்பீரமானது. அவரது மௌனமே ஒரு உச்சவுபதேசம். அது மனதின் குழப்பங்களையும், ஐக்கியங்களையும் போக்கச் சாந்தமாக்கும். வாக்குவல்லபம் ஒல்லாதாக்கும்.

அறுதியே உண்மை மதம். மோனம் (சும்மாயிருத்தல்) அதற்கு முதற்படி. "மௌனம் மனிதனுக்கேற்பட்ட நித்ய விரதம்" என்று செல்லி அறிஞர் கார்லில் கூறுகிறார், மௌனம் என்பது ஒன்றும் செய்யாதது, சோம்பிக்கிடக்கும் நிலையல்ல; ஆத்ம சக்தியின் நிறைவுக்காகச் செய்யப்படும் நிகில சாதனையான ஊக்க கிலையே. பேச்சு குறையக்குறைய உண்மையைச் சிந்திக்கவும், உணர்ந்தனுபவிக்கவும் சந்தர்ப்பமதிகமாகும். இதனால் ரமண சங்நிக்குப் போவதாலுண்டாகும் பெரும் பயன். இம் மௌனம் தக்க சித்தனையை யெழுப்பும் கல்லையுமைதியல்ல. வீணே வாயை வளர்ப்பதால் பயனில்லை யென்னும் ஒரு தெளிவான உணர்வினாலும், இன்ன தெனச் சொல்லொணு ஆனந்த மின்னில் உயிர் உபரப் பறந்து வீசையடி தூய்ந்த உள்ளமைதியினுமுண்டாகும் பயத்தாலும் விசித்திர மௌனமாகும். இவ்வனுபவம் தனிபாகக் குறிப்பிடத்தக்கது. ஏனெனில், உலகச் சந்தைக் கூச்சலிடையிலும் ஏகாந்த வின்பமாம் உள்ளமைதி யடையலாமென மகரிஷி சொல்லும் வாக்கை இது வெளியாக்குகிறது.

மனுஷ்ய வர்க்கத்தின் மஹாகாவ்யமாயை அவரது விசித்திர சரித்திரத்தில் இரண்டு மூன்று அம்சங்கள் நம்மைக் கவரத்தக்க விதமாய் வெள்ளிடை மலைபோல் நிற்கின்றன. சத்சதர்சனத்தில் அவருக்கிருந்த சிரத்தை அம் முயற்சியில் ஏற்பட்ட எல்லாக் கஷ்டங்களையும் சொறுக்கியெறிந்த எல்லா ஆபத்துகளையும் ஜயிக்கச் செய்தது. இது நமக்கெல்லாம் ஆச்சரியமளிப்பதன்றி மனுஷ்ய இயல்பிலடங்கிடக்கும் புதை பொருளையும் அதனுலடையும் பெரும் பயனையும் வெளியாக்குகிறது.

வாக்கால் விளக்க முடியாத இன்பத்தில் அறிஞனிமான் ஆழ்ந்திருப்பதால் வெளி நிகழ்ச்சிகள் இன்புள்ளவையாயினும் அல்லவையாயினும் அவனைத் தாக்குவதில்லை. அவன் சம்பந்தப்பட்ட வரையில் அவை நிகழாதனவே. அறிஞரின் புகழ்ச்சி அல்லாதாரின் இகழ்ச்சி இவற்றுல்அவன்சமநிலை அசைவுறாது அவன் எவ்வுயிர்க்குள்ளும் தெய்வங்கண்டு உயிரொற்றுமை காண்கின்றான்.

இதற்கு மகர்ஷியின் ஜீவிதத்தில் ஒரு அபூர்வமான காரணம் காணலாம். ஒரு பொழுது ஆச்ரமத்தில் நிருடர்கள் புகுந்து இழைத்த தீச்செயலால் அவர் சிறிதும் பதைப்புறாது மன்றித் தன்னைச் சார்ந்தார் அவர்களுக்கு இடரிழைக்கவுமிடர்தாகில்லை. நமக்குத் தன்பம் தேடுபவர்களுக்கும் அன்பினுல் கன்மைசெய்யவேண்டுமென்னும் உத்தமோத்தம நிஜ்தவ ஸித்தாந்தத்துக்கு மகர்ஷி நிருடர்களிடம் காட்டிய மனே பாவம் உதாரணமாகிறது.

(தொடர்ச்சி 10 பக்கம் பார்க்க)

பல வியாதிகள் கவனிக்கும் இடம்:— T. B. சீதாராம், டென்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

ஆசிரியருக்குக் கடிதங்கள்

பத்ராதிபத்ய லேகனம்

அய்யுவய்யரின் பிக்ஷை

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்காசாரிய ஸ்வாமிகள் சென்ற 1—7—39ல் விபவஆனி செய்த விஷயம் சென்றவாரம் "ஆர்யதர்மம்" சஞ்சிகையில் வெளியாயிருப்பதில் அன்றையதினம் ஸ்வாமிகள் பிக்ஷை முதலிய விபரம் விட்டுப்போயிருக்கிறது. விபவஆனி 1ம் புதன்கிழமை அபிப்பிராயப்படுகின்றனர். அதே மேல்காட்டு ஆசாரியாளர்கள் பலரும் இந்த்க்களில் அதேகரும் விபரீதமாக அபிப்பிராயப் படுகின்றனர். அதாவது ராகு கேதுக்கள் வாகமிஹிரர் காலத்திற்குப் பிறகே கண்டு பிடிக்கப்பட்டனவாம். இதன்படி பாசுரரிவி வாகமிஹிரர் காலத்திற்குப் பிறகு வசித்திருந்தார் என்று ஏற்படுகிறது. எவ்வளவு அசம்பாவிதமான அபிப்பிராயம். வ்யாசராசரியரின் தபப்புதல்வரான பாசுரர் வராகமிஹிரர் வகித்த ஜ்யோதிஷ்யன் காலத்திற்குப் பிறகு ஜீவித்திருந்தார்!

ஜோதிஷ சாஸ்திரத்தை நிதிகள் யோக சக்தியினால் கண்டுபிடித்த வெளியிட்டிருக்கின்றனர். சூரியனே இந்த சாஸ்திரத்தை முதலில் உலகுக்கம் செய்தார். ராகு கேதுக் களைப்பற்றி ராமாயணத்திலேயே சொல்லப் பட்டிருக்கிறது. ஆதி கவியான வால்மீகியின் காலத்திற்கு முன்னரே ரிஷிகளுக்கெல்லாம் சாயக்கிரகங்களைப்பற்றித் தெரியும் அயோத்யா கண்டத்தில் 4-வது சர்க்கத்தில் தசரதன் கூறுவதாவது :—

அலங்க்ருதம்ச மோமம் ஸுஹ்ருத்பம் தாருணோ: நிஹதை :! ஆவேதயந்தி தைவக்ஞா: ஸுர்யாங்காரகராஹுஜி:!!

ஆகவே சாயகிரகங்களைப்பற்றி இந்த வான சாஸ்திரிகளுக்கு வெகு காலம் வரையில் தெரியாதென்று சொல்வது பொருந்தாது. இதற்குமேற்குறிப்பிட்ட ராமாயணசுலோகமே பிரதானம்.

R. ராமச்சந்திர சாஸ்திரி,
மைலாப்பூர்.

ராகு கேதுக்கள் எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டன!

ஸ்ரீவராக மிஹிராசாரியார் எழுதிய பிரஹத் ஜாதகத்தில் ராகு கேதுக்களைப்பற்றிச் சொல்லவேயில்லை. ஆனால் பாசாஹோரை முதலிய கிரந்தங்களில் இந்த சாயகிரகங் களைப்பற்றிக் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே மேல்காட்டு ஆசாரியாளர்கள் பலரும் கம் இந்த்க்களில் அதேகரும் விபரீதமாக அபிப்பிராயப் படுகின்றனர். அதாவது ராகு கேதுக்கள் வாகமிஹிரர் காலத்திற்குப் பிறகே கண்டு பிடிக்கப்பட்டனவாம். இதன் படி பாசுரரிவி வாகமிஹிரர் காலத்திற்குப் பிறகு வசித்திருந்தார் என்று ஏற்படுகிறது. எவ்வளவு அசம்பாவிதமான அபிப்பிராயம். வ்யாசராசரியரின் தபப்புதல்வரான பாசுரர் வராகமிஹிரர் வகித்த ஜ்யோதிஷ்யன் காலத்திற்குப் பிறகு ஜீவித்திருந்தார்!

ஜோதிஷ சாஸ்திரத்தை நிதிகள் யோக சக்தியினால் கண்டுபிடித்த வெளியிட்டிருக்கின்றனர். சூரியனே இக்க சாஸ்திரத்தை முதலில் உலக்காம் செய்தார். ராகு கேதுக் களைப்பற்றி ராமாயணத்திலேயே சொல்லப் பட்டிருக்கிறது. ஆதி கவியான வால்மீகியின் காலத்திற்கு முன்னரே ரிஷிகளுக்கெல்லாம் சாயக்கிரகங்களைப்பற்றித் தெரியும் அயோத்யா கண்டத்தில் 4-வது சர்க்கத்தில் தசரதன் கூறுவதாவது :—

அலங்க்ருதம்ச மோமம் ஸுஹ்ருத்பம் தாருணோ: நிஹதை :! ஆவேதயந்தி தைவக்ஞா: ஸுர்யாங்காரகராஹுஜி:!!

ஆகவே சாயகிரகங்களைப்பற்றி இக்கால சாஸ்திரிகளுக்கு வெகு காலம் வரையில் தெரியாதென்று சொல்வது பொருந்தாது. இதற்குமேற்குறிப்பிட்ட ராமாயணசுலோகமே பிரதானம்.

R. ராமச்சந்திர சாஸ்திரி,
மைலாப்பூர்.

ஓர் வேண்டுகோள்

ஸாமவேதத்தில் நித்யோபகார்ஹமான பூர்வார்ச பிரயோகம் இருநூறுதர்களுக்கு மூக்யமாய் கையில் இருக்கவேண்டியது. 38 வருஷத்திற்கு முன் வாகூர் வி. கே. ராகு சர்மாளிகளால் அச்சிடப்பட்டு ஷை புத்தகம் ஒன்றுகூடயில்லாமல் விலையாய்விட்டது. இப்பொழுது அப்புத்தகம் கிடைக்கவில்லை. இப்பெருங்குறையை நீர்க்க ஆஸ்திகர்கள் முன்வராதது வருந்தத்தக்கது. தென்னிந்தியாவில் படித்து பல ராஜகிருஹங்களில பரீக்ஷகர்கள் பலரில்லையா? அவர்கள் முயற்சி செய்தால் கடக்காதா? ஆகவே, ஸாமவேதர் பிமானிகள் இப்பெருங்கார்யத்தை பூர்த்தி செய்ய முன்வரவேண்டுமென வேண்டுகிறோம்.

ஸாமவேதாபிமானி.

ஸ்ரீ சங்காசாரியார் பேசும் படம்

ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யார் சரித்திரத்தை கினிமா படத்தில் காட்ட ஏற்பாடு செய்திருப்பதாக ஆர்யதர்ம பத்திரிகை மூலமாக ஸாசாரம் தெரிந்தது. திரிமூர்த்திகளான பிரஹ்மா விஷ்ணு பரமேச்வர்களும் அவதார மூர்த்திகளான ஸ்ரீராமரிருஷ்ணர் படும்பாடு போதாதா? ஆசார்யரையும் காடகமேடைக்கு இழுக்கவேண்டுமா? என்ன தோன்றிற்று. ஸ்ரீ ஸோமதேவசர்மா அவர்களே வசனம் எழுதிக்கொடுத்திருப்பதாகத் தெரிந்தபடியால், பெரியோர்களுடைய ஸ்மரணத்தையும் பெற்றே, இப்பிரயத்னம் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாமென்று நினைக்கும்படி ஏற்பட்டது. தவிரவும், பல விதமாக சங்கரவிஜயங்கள் இருந்துவருகையில் சிலரால் ஆக்ஷேபிக்கப்படும் கதாலக்ஷணப் பத்தை உலகில் பரவச்செய்ய இதுவும் ஒரு ஸாதனமென்று அவலம்பிக்கப்படுகிறதோ என்று நினைக்கவும் இடம் கொடுத்தது. மனஸ்தாபத்தை தவிர்த்தும் செய்து தீண்டாமை விலக்குக்கு ஸாதனமாக சில ஸங்கதர்ப்பங்களை சரித்திரத்தில் நுழைத்து விட இதுவே சல்ல ஸமயம் என்று சிலர் நினைத்தார்களோ என்றும் தோன்றிற்று. எப்படியும், கம் ஆபாஸமான ஸாக்ஷேபத்திற்கு ஸ்ரீமத் ஆசார்யமூர்த்தியை இழுத்துவிட்டு மஹத்தான அபசாரதோஷத்திற்குப் பாத்திரமாகாமலிருப்பதே வாஸ்தவமான குருபக்தி யாகும். இவ்விஷயமாக ஆனிமீ 1ம் தேதி ஆர்யதர்மத்தில் கல்கத்தா ப்ரஹ்மஸ்ரீ லைத்தீஸ்வர ஐயர் எழுதியிருக்கும் லெவ் வொரு அம்சத்தையும் நான் ஆமோதிக் கிறேன். ஸ்ரீ ஸோமதேவ சர்மா உள்பட யார் என்ன ஸமாதானம் சொன்னலும் என் னேப்போலுள்ள அதேகர்களுக்கு எவ்விதத் திலும் ஸமாதானம் ஏற்படாது.

R. கிருஷ்ணஸ்வாமி அய்யர், M.A., B.L.,
அட்வகேட், திருநெல்வேலி.

மதுரை ஸ்ரீ மீனாட்சிஸுந்தரேச்வரர் திருக்கோவில்

ஆதித்திராவிடர்கள் அத்துமீறி அர்த்தமண்டபத்தை அடைந்தனர்

மதுரைமாநகரில் பரபரப்பு

"ஆலயப்பிரவேச நாடகம்"

நடந்த விஷயங்களை பரிசங்கப் படுத்துகிறார்.

ராவ்ஸாகேப் N. நடேசய்யர் அறிக்கை

[" ஆர்யதர்மம் " பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி மதுரை பிரபல ஸநாதன பிமுகரும், பிரபல வக்கீலுமான ராவ் ஸாகேப் N. நடேசய்யர் அவர்கள் கீழ்கண்ட கடிதங்களை எமக்கு அனுப்பியுள்ளார். சென்னையில் வெளியிடப்படும் தினசரிகள் யாவும் அந்தக் கடிதங்களை முழுவதும் வெளியிடவில்லை. இல பத்திரிகைகள் ஸநாதனிகளின் ஆட்சேபணைகளை ஒரு வரி கூட வெளியிடவில்லை. கேபர்கள் முழுநிபாத்தை அறிய வேண்டி நாங்கள் பிரசுரித்திருக்கிறோம்.]

ராவ் ஸாகேப் நடேசய்யர் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் தேவஸ்தான நிர்வாகத்தலைவருக்கு எழுதியுள்ள கடிதமாவது :—

"8 தேதி காலையில் 10-15 மணிக்கு இக்கக் கடிதத்தை எழுதுகிறேன். என் கவனத்துக்கு கீழ்கண்ட விஷயங்கள் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இவ்விஷயங்கள் உண்மையானதா என்பதை உடனே வருகிற ஆள் மூலம் பதில் தெரிவிக்கவும்.

கோவில் சூப்ரிண்டெண்டு, மணியம், பேஷ்காரர், முதலியவர்களுடனும், டவேதார் ஆறுசேவகர்களுடனும் கீங்கள் சென்றகமிழ் நாடு ஹரிஜன சேவாசங்க தலைவர் ஸ்ரீ எ. வைத்தினுதய்யர் தலைமையில் வந்த 7 அல்லது 8 பகர்களை ஸ்ரீ மீனாட்சிஸுந்தரேஸ்வரரைத் தரிசிக்க அழைத்துச் சென்றதாகத் தெரிகிறது. அவர்கள் அர்த்த மண்டபத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டார்களென்றும், உங்கள் உத்தரவுபடி பொன்னுசாமி பட்டர், அந்த பகர்கள் கொண்டுவந்த காணிக்கைகளை சுவாமிகளுக்குச் செலுத்தி அலங்கார தீபாராதனை செய்து அந்த பகர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கினார்கள்.

அந்தக் கூட்டத்தில் சில நீண்டாதார்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது."

(ஒப்பம்) நடேசய்யர்.

மேற்படி கடிதத்தற்கு 8—7—39 காலை 11-20 மணிக்கு ஸ்ரீ R. S. காயுடுவிடமிருந்து கீழ்கண்ட பதில் ஸ்ரீ நடேசய்யருக்குவந்தது:— காலை 11-20 மணிக்கு நான் இக்கலிதத்தை எழுதி அனுப்புகிறேன். காலையில் நடந்த சம்பவங்களை எழுதுகிறேன். நடந்த உண்மை யென்னவெனில் ஸ்ரீ A. வைத்தினுதய்யரும் மற்றும் சிலரும் — அவர்களில் புலர் ஹரிஜன்கள் என்று தெரிகிறது. கோவிலுக்கு ஆலயவழிபாட்டுக்காக வந்து அர்த்த மண்டபம் அணுகி, பட்டரிடம் தேங்காய், பழம், சூடம் அளித்தார்கள். தீபாராதனைக்குப் பின் பிரசாதம் பெற்றுச் சென்றார்கள். நானும் அங்கிருந்தேன். அச்சமயத்தில் அங்கிருந்த கூட்டத்திலிருந்து ஒருவராவது— பட்டராவது—ஒருவித ஆக்ஷேபணையும் செய்யவில்லை. நான் அந்த கூட்டத்தை அழைத்துச் சென்றேன், அல்லது பட்டர் என்னுடைய உத்தரவுக்கிணங்கி நடந்தார் என்ற கூறுவது தவறு.

(ஒப்பம்) R. S. காயுடு.

இதற்கு மீண்டும் ராவ்சாகேப் நடேசய்யர் 8—7—39 தேதி பிற்பகல் 2-20 மணிக்கு ஒரு பதில் எழுதினார் :—

அர்த்த மண்டபம் அணுகிய அந்த பகர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டீர்கள். கூட்டத்தில் கூடியிருந்தவர்களுக்கு காலது பட்டர்களுக்காவது அத்தக் கூட்டத்தில் ஹரிஜனங்கள் இருந்தார்கள் என்பது தெரியுமா? நீர் அந்தக் கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தது யதேச்சையா? அல்லது ஏதனுல்? மேற் கோபுரத்தின் பக்கத்தில் ஒரு போலீஸ்காரர் காத்திருந்தது உண்மையல்லவா? கூடியிருந்த கூட்டத்தில் 10 பேருக்கு மேல் இல்லை என்பது வாஸ்தவமா? என் இந்த கேள்விகளைக் கேட்கிறேன் என்றால் தவறான அபிப்பிராயங்கள் வெளியிடப்படாமல் இருக்கவே.

(ஒப்பம்) நடேசய்யர்.

மதுரையில் ஸநாதனிகளின் பிரசாரம்.

சென்ற ஒருவாரமாக மதுரையில் பல பாகங்களில் தினசரி ஆலயப்பிரவேசச் சட்டத்தைக் கண்டித்து ஸநாதனிகள் பிரசாரம் செய்துவருகிறார்கள். சிருங்கேரி மடாதிபதி ஸ்ரீசங்காசாரியார் ஸ்வாமிகளின் ஸ்ரீ முகம் ஒன்றைக் கூட்டங்களில் தலைவர்கள் படித்துக் காட்டினார்கள்.

அதில், " ஆகம முறைப்படி கோவிலுள்ள சுவாமியைத் தரிசிக்க வேண்டும். எத்தகைய வகுப்பினர் எங்கும் இருந்து கொண்டு சேவை வேண்டுமோ அங்கிருந்துதான் தொழவேண்டும். அப்படியில்லையேல் கோவில் அசுத்தப்படுத்தப்பட்டதாகப் போய் விடும். அங்கிருக்கும் மூல விக்ரஹங்கள் வெறும் கற்களாகப் கருதப்பட வேண்டியதுதான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு காங்கிரஸ்கான் கூட்டத்தில் கேள்வி கேட்க முற்பட்டான். ஆனால் அவனைக் கூட்டத்தினர் ஓட்டமெடுக்கச் செய்தார்கள். ஸநாதனிகளின் கூட்டங்களுக்கெல்லாம் காங்கிரஸ்காரர்கள் பலதடவை கலைத்தனம் செய்து பார்த்தார்கள். கடையில் அவர்கள் எண்ணம் ஈடேறவில்லை.

கோவில் கதவுகளை பட்டர் பூட்டிவிட்டார்

கதவுகள் தகர்க்கப்பட்டன

கவர்னருக்குத் தந்தி

ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆதித் திராவிடர்கள் அத்துமீறி நுழைந்ததை ஆட்சேபித்து ஸ்ரீ முத்துஸ்வாமி பட்டர் என்ற கோவில் பட்டர் மூலவிக்ரஹ சன்னதியை 9உ கடுப்பகல் 12மணிக்குப் பூட்டிக்கொண்டு போய்விட்டார் "சம்சோட்சனம் செய்யாமல் பூஜை செய்யக்கூடாது" ..... என்று அவர் அபிப்பிராயப்பட்டார்.

ஆனால் ஆலய நிர்வாக அதிகாரி ஸ்ரீ R. S. காயுடு அந்த பட்டரை அழைத்துவர ஆட்களை அனுப்பினர். ஆனால் பட்டர்வர மறுத்து விட்டார். மாலை பூஜைக்கு பட்டர் வரவே இல்லை.

உடனே கோவில் கதவுகளைத் தகர்க்கும் படி தர்மகர்த்தர உத்தரவிட்டார். பூட்டுகள் உடைக்கப்பட்டது. புதிய பட்டரை நியமித்து மாலை பூஜையையும் அர்த்த ஜாம பூஜையையும், நடத்தச் சொன்னார்கள்.

பூஜை நடக்கும்பொழுது ஏராளமாய் ஆதி திராவிடர்கள் உள்ளே பிரஸன்னமாயிருந்தார்கள்.

மூன்று பட்டர்கள் "தங்கள் காரியங்களை சரிவர செய்யவில்லை", என்ற கூறப்பட்டு விலக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆலய அதிகாரிகள் 'சம்ரோட்சனம்' ஆலயமில்லை என்று கூறுகிறார்கள்.

"ஆலயம் எல்லோருக்கும் நிறத்தலவக்கப்பட்டிருக்கிறது" என்று ஆலய அதிகாரிகள் கூறுகிறார்கள்.

ஸ்ரீ முத்துஸ்வாமி பட்டர் மே. த. கவர்னருக்கு அவருடைய அத்தாக்கக் காரியதரிசி மூலம் மேற்கண்ட செய்தியை தந்திமூலம் தெரிவித்திருக்கிறார்:—

" சம்ரோட் சணமின்றி பூஜை கடத்த பட்டர்கள் மறுக்கிறார்கள். கடப்பகல் 12-மணிக்கு சேசவில் கதவுகளைப்பூட்டி விட்டார்கள். ஆனால் நிர்வாக அதிகாரி பூட்டை உடைத்து விட்டு, கர்ப கிரஹத்துக்கு போக முயர்ச்சி செய்கிறார். எங்களுக்குப் பாதகாப்பு அளிக்க ஏற்பாடு செய்யவும்."

முத்துஸ்வாமி பட்டர்,
9—7—39.

மதுரை ஜில்லா கலெக்டருக்கு ஸ்ரீ முத்துஸ்வாமி பட்டர் மேற்கண்ட தந்தியை அனுப்பியிருக்கிறார் :—

" சம்ரோட்சணம் செய்யவேண்டுமென்று சான் கேட்டுக்கொண்ட கோரிக்கைக்கு இணங்கவில்லை, சம்ரோட்சணத்திற்குப் பிறகு பூஜை கடத்த பட்டார்கள் தயார். "

முத்துஸ்வாமி.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்
" கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் ஸாகாத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது. தபால் செலவு வேறு [விலை அணு 0 8 0
கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடேட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஹே ஆனி-மீ 29உ

அதிகாரபலத்தினால் அதிக்ரமம் செய்வதா?

காங்கிரஸ் ஆஃபிமுறையில் எது கேருமென்று ஆங்கிலர்கள் பயந்தனரோ, அது கேர்ந்து விட்டது. மதுரை ஸ்ரீமீனாக்ஷி கோவில் முதலியவைகளில் தீண்டாதாரைப்புகவிட்டு கோவில் அசுத்தமாக்கப்பட்டு, தைவ ஸன்னிதியம் அழிக்கப்பட்டு விட்டது. இந்த தனிவுகரமான அக்ரமகார்யமானது கோடிக்கணக்கான ஆஸ்திகர்களுக்கு ஆரத்தியாத்தையும், அளவற்ற பயத்தையும், அடங்காத ஆத்திரத்தையும் உண்டாக்கியிருக்கிறது. ஆலயப்பிரவேச அதர்மத்தைச் சட்டமூலமான ரிப்பந்தத்தாலோ, பலாத்காரத்தினாலோ சாதிக்கப் போவதில்லை யென்றும், பொது ஜன அபிப்பிராயம் வாய்வே செய்யப்போவதாயும், சொல்லி வந்தது பாசாங்கு தானென்பது வெளியாகிவிட்டது. அதிகார பலத்தை உதவியாகக் கொண்டதும், சூழ்ச்சிகள் நிறைந்ததுமான புதியதொரு குறுக்கு வழியால் இந்தக் கொடுமை சாதித்தக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அக்ரமத்திற்கு போலீஸ் கூட்டம், கோவில் நிர்வாஹ அதிகாரி, மதஸ்தாபன போர்டு, மந்திரி ஸபை முதலிய அதிகாரவர்க்கம் யாவும் கூட்டுப்பாடாக உதவி புரிந்திருக்கிறது. இத்த அம்சம்தான் இதில் முக்யமாக கவனிக்கப்படவேண்டியதாகும். நீதி வழுவாமல் நிர்வஹும் நடத்தும் இதர தேசங்களும், நியாயபுத்தி படைத்த ராஜதந்திரிகளும், மற்றோரும் சென்னை மந்திரி ஸபையின் இந்த ஒழுங்கற்ற முறையைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்? மாகாண நிர்வாஹத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு கக்ஷியானது, இவ்விதம் நீதியற்ற காரியத்தில் பலரிங்கமாக ஸம்பந்தப்பட்டிருப்பதைக் கண்டு உலகம் நகைக்காதா? தனது அதிகாரத்தை துஷ்பரயோகம்செய்து இவ்விதம் மதப்புரக்ஷிகமான அதிக்ரமத்தை ஒரு ஸர்க்காரே மேற்பேட்டுக்கொண்டு நடத்தியதொடுமையானது இதுவரையில் நாகரிகலோக சரித்திரத்தில் கேள்விப்படாத அதிசயமாகவிருக்கிறது.

கவர்ன்மெண்டாரே மிகுந்த முன்னேற்பாடுடன் இந்த அதிதிக்கு வெகுதூரம் உதவி செய்து உடந்தையாயிருப்பது கன்ஸர்வ்த் தெரிகிறது.

பிரதமமந்திரி முதலியவர்களுக்கு ரீண்ட ராமராத இருநூறுவருஷ பிடிவாதத்தை, இப்போது அதிகாரபலமிருக்கும் ஸமயம் பார்த்து நிறைவேற்றிக்கொள்ள முற்பட்டதாகத் தெரிகிறதேயல்லாது, இதில் வேறு எவ்வித அவஸரமும் இருப்பதாகத் தெரியவில்லை.

நிர்வாஹப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கக்ஷியானது, சட்டநிட்டங்களையும், அதிகார பலத்தையும், நீதி வழியில் பிரயோகித்த பிரஜைகளின் தனிப்பட்ட உரிமைகளையும், ஸமூஹ விவஹாரங்களையும் பாதுகாக்கக்கடமைப்பட்டிருக்கிறது. அப்படியின்றி, நீதி வரம்புகளை அழிக்க, பிரஜைகளுக்கு கடைசி அடைக்கலமான சர்க்காரே அதிகார பலத்தை உபயோகித்தால், பிரஜைகள் என்ன செய்யக்கூடும்? வேலியே பயிரை அழிக்க ஆரம்பித்தால் வேறு எந்தப் பாதுகாப்புத்தான் உண்டு? இம்மாதிரி ஆக்ஷி முறையை அதஷ்டிக்கும் சர்க்கார் நிருப்நி அடையரே பெருமைப்படவோ, நியாய முண்டா? ராஜ்யாதிகாரம் இவ்வளவு நீதி கெட்ட முறையில் நடக்கத் தலைப்பட்டுவிட்ட தேயென்று எல்லாரும் தக்கமடையுமே யல்லாது, இத்தமாதிரி பலாத்காரத்தக்குட் படுத்தப்படும் தார்மிகர்கள் இதில் அமைன மடைந்ததாக நினைக்கவோ, அபய உணர்ச்சி காட்டவோ நிதிமும் இடமில்லை.

துஷ்டர்களை அடக்கவும், தர்ப்பலர்களைக் காக்கவும், தண்டாதிகாரம் ஸர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ராஜ்யத்தை நீதி தவறுமல் நடத்தவே தண்டாதிகாரம் மேற்பட்டது. காட்டில் வாழும் மிருகங்களுக்கு, நீதி, தண்டம், இவை இடையாது. எந்த பலிஷ்ட பிராணியோ அதுவே மற்றவைகளை அழித்திடும். மனிதர்களுள் இந்தத் நிலை ஏற்படாததற்காகவே தண்டாதிகாரம் ஒன்று ஏற்பட்டது. இதை ராஜ்யாதிகாரம் ஏற்றவர்கள் மிகப்புனிதமாகக் கருதிப் பிரயோகிக்க வேண்டும்.

நிருபராதியைத் தண்டனை விதிக்க வேண்டியது போலீஸ்காரர் கடமை. அந்த அதிகாரியே நிருபராதியை வீட்டுக்குள் புகச்செய்து மொத்தை அபஹரிக்க உதவியாக நிற்பதானால், பிரஜை என்ன பண்ண முடியும்?

மதுரையில் நடந்த சம்பவத்தைக்கண்டும், அந்த அதிதியை நிலைநிறுத்த அவசரப் புதுச் சட்டம் பண்ண முன்நிற்பார் நிற்கும் ஆட்சி முறையைக்கண்டும், விவேகிகள் நடுக்கமுற வேண்டியதேயன்றி வேறில்லை.

பொதுஜன அபிப்பிராயம் ஸாதகமாகக் கிடைக்காதென்ற நிச்சயத்தால் இவ்விதம் வழி பின்பற்றப்பட்டிருக்கிறது. ஆனல், கால சக்ரம் மாறபடுள்ளது. உலகத்தையே ஆட்டிவைத்த எவ்வளவோ அதிகாரஸ்தானங்கள் இன்று இருக்குமிடம் தெரியாமல் மறைந்துவிட்டது. எவருடைய அதிகாரமும் நிலையானதன்று.

மதுரை அதீதியைப்பற்றி கோர்ட்டில் பிராது கொடுத்திருக்கிறார்கள். இதன் பிரயோஜனம் பாதகமிடும், இந்த ஆட்சி முறையின் வேஷத்தை வெளிப்படுத்த இது உதவக்கூடும். அந்த விஷயம் பலித்துவிட்டதாயும் தெரிகிறது. "எட்டு நாளில் சட்டம் பண்ணித் தருவேன்" என்று பேசியபடி செய்யவேண்டியதாகிவிட்டது. இது தார்மிகர்களின் வெற்றியே. ஆலயப் பிரவேசத்திற்குச் ஸாதகமாக அவஸரச்சட்டமான "தொடாதொழிச்சட்டம்" தலைக் காட்டிவிட்டது. பொதுஜன ஸம்மதப்படி ஆலயப்பிரவேசம் ஏற்பட்டிருந்தால், இந்த அவஸரச்சட்டம் ஏன் இயற்றவேண்டும்? இதிலிருந்து ஆஸ்திக ஜனங்கள் எதிராயிருப்பதும், அவஸரச் சட்ட பலத்தால் அவர்களை பயமுறுத்தியே கார்யம் நடத்தவேண்டியிருப்பதும் கன்கு வெளியாகிவிட்டது. இதை யொட்டி இன்னும் அகேக அவஸரச்சட்டங்கள் இயற்றவேண்டியிருக்கலாம். முன்னாளில் லார்டு வில்லிங்டனே "அவஸரச் சட்டக்காரர்" என்று தூஷித்தனர்.

ஜெனரல் டயர்மீது நடவடிக்கையாமல் தடுத்த அவஸரச் சட்டமைப் பாதுகாக்க வெள்ளை சர்க்கார் "தொடாதொழிச்சட்டம்" இயற்றிய போது காங்கிரஸ் கூச்சலிட்டு எதிர்த்தது. இப்போது அந்த காங்கிரஸே "தொடாதொழிச்" சட்டம் செய்ய முன்வந்துவிட்டது.

இதுவே ஸமாதான முறையில் ஆலயப்பிரவேசமென்ற கொள்கை தோற்றுவிட்டதற்கு போதுமான ருஜுவாயிருப்பதுடன், நீதியற்ற பலாத்கார ஆக்ஷி முறைநடப்பதற்கும் அத்தாக்ஷியாய்விட்டது.

"ஆலயத்தில் இப்பொழுது ஆண்டவன் இல்லை"

அங்கிருப்பது "கல்"!

நடந்த விஷயங்களைப் பகிரங்கப்படுத்துகிறார்

ராவ் சாகேப் ஸ்ரீ நடேசய்யர்
சவுக்கடி

மதுரை ஸ்ரீ மீனாட்சிஸுந்தரேஸ்வரர் நிருக் கோவில் தேவஸ்தான நிர்வாக அதிதரி ஸ்ரீமான் R S நாயுடுவுக்கு ராவ்சாகேப் ஸ்ரீ N. நடேசய்யர் நீண்டதோர் கடிதமொன்றை கடையாக எழுதி அதில் "நடந்த விஷயங்களை" பகிரங்கப்படுத்தி இருக்கிறார். ஆலய நிர்வாக அதிகாரிக்குச்சரியானபடி சவுக்கடி கொடுத்திருக்கிறார். அக்கடிதத்தில் ஸ்ரீ நடேசய்யர் கூறுவதாவது:—

"எனது முன் கடிதத்துக்கு நீங்கள் பதில் போடுவதாகக் கூறினீர்கள். ஆனல் போடவில்லை. இன்னும் பதில் வரவில்லை. இதிலிருந்து நான் கூறியது சரி என்றறிகிறது. 'ஹிந்து','மதராஸ் மெயில்','சுதேசமித்திரன்', முதலிய தினசரிகளில் வெளிவந்திருக்கும் விவரங்களை நீங்கள் இதுவரை மறுக்கவில்லை. மறுத்து எழுதவுமில்லை. நீங்கள் கூறித்தான் பத்திரிகைகளில் "கூட்டத்தாரும், பட்டர்களும் ஆட்சேபிக்கவில்லை", என்று வெளி வந்திருக்கிறது. பொன்னுசாமி பட்டர் என்பவர் இந்தக் காரியத்தக்காகவே நியமிக்கப்பட்டிருக்கவேண்டுமென்று தெரிகிறது. கூட்டத்தில் 10 பேர்களுக்குமேல் இல்லை. ஒருவருமில்லாதசமயத்தில் அவர்களை அர்த்த மண்டபத்திற்கு அழைத்துச் சென்றது ஒரு சூழ்ச்சியாகும். இந்த சக்தப்பத்தில் ஆக்ஷேபணை இல்லை என்று கூறுவது சுத்தத் தவறு. மேற் சித்தரை தெருக்கோடியில் போலீஸ் லாரியை நிறுத்தி வைத்திருந்த பொழுது எங்களை ஜனங்கள் கோவிலுக்கு வந்து ஆக்ஷேபிக்க முடியும்?

கோவிலின் புனிதத்தன்மை கெட்டுவிட்டது. இப்பொழுது ஆலயத்தில் ஆண்டவன் இல்லை. அங்கிருப்பது கல்தான். சம்புரோட்சணம் செய்யும்வரை ஆண்டவன் திருக்கோவிலில் தூழையார்.

நீங்கள் உங்கள் கடமையைச் சரிவர செலுத்தவில்லை. ஒதுக்கப்பட்டவர் பிரவேசத்தையும், பட்டர் பிரசாதம் அளித்ததையும், அறவே நிறுத்தி இருக்கவேண்டும். உடனே சம்புரோக்ஷணம் செய்து கோவில் பூஜைகளை நடத்தவேண்டும். ஒவ்வொரு நிமிஷதாமதமும் கெடுதலே விளைவிக்கும். நீங்கள் எத்த முறையில், "ஹிந்துமத சான்னித்தியற்கும், வழக்கபழக்கமுறைகளுக்கும் எதிராக காரியங்களைச் செய்துவருகிறீர்கள் என்று தெரியவில்லை.

டஞ்சமர்களும், திருஸ்தவர்களும், முகம்மதியர்களும் கூட்டம் கூட்டமாக கோவிலுக்குள் போவதாகக் கூறப்படுகிறது.

நீங்கள் ஒரு உத்திரவு ஒன்று போட்டிருக்கிறீர்களாம். அதில், 'ஒருவரையும் தடை செய்யக்கூடாது. யார் வேண்டுமானலும் ஆலயத்தில் தழையலாம்", என்று கூறப்பட்டிருக்கிறதாம்.

எனவே, நீங்கள் சம்ரோட்சணம் செய்து சரிவர பூஜைகளை நடத்தவேண்டுமென்று" முடித்திருக்கிறார்.

ஆண்டவனுக்கு இது அடுக்குமா?

அம்மனை தொட்டு மாலையிட்ட அநியாயம்

நாடார் நடித்த நாடகம்

மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவிலில் 8உ காலை ஒரு அநியாயம் நடந்தது. ஒரு நாடார் கர்ப்பக்ருஹத்திற்குள் நுழைந்து, ஸ்ரீ மீனாட்சி அமமன் விக்ரஹத்தக்கு மாலை போட்டாராம்.

இந்த சம்பவம் ராவ்சாகேப் ஸ்ரீ N. நடேச அய்யருக்குத் தெரியவந்தது. அவர் இந்த விஷயத்தைப்பற்றி தேவஸ்தான அதிகாரிகளுக்கு எழுதி இருக்கிறார்.

அவசர அறிக்கை

8-7-39 ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் ஆலயத்தின் அர்த்தமண்டபத்திற்குள் ஹரிஜன சேவாசங்க தலைவர் ஸ்ரீ A. வைத்தியநாத அய்யர் தலைமையில் நீண்டதாரர்களில் சிலருக்கு தேஸ்தானம் எக்ஸிகியூடிவ் ஆபிசர் R. S. நாயுடு அவர்கள், ஆலய ரூபரிண்டெண்ட்டு, பேஷ்கார், மணியம், டபேதார், சேவகர்கள் சகிதம் அழைத்தப்போய் தரிசனம் செய்துவைக்கப்பட்டது.

இந்த நிலைமையில் இது விஷயமாக ஸம்ப்ரோக்ஷணை நடந்து ஆலயத்திற்கு பரிசுத்தி ஏற்படுகிறவரையில் "ஆலயத்தில் ஈச்வராராதனமும், தரிசனமும்" பாபகரமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன என்பதை எல்லா மகாஜனங்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

N. நடேசய்யர்.

மதுரை வைநாதனிகளின் மாபெருங் கூட்டம்

நிறைவேறிய தீர்மானங்கள்

ஸ்ரீ V. R. துரைசாமி வழக்குத்தோடர முன்வருகிறார்

அகில இந்திய வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் அக்ராஸனாதிபதி ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யர் அவர்கள் தலைமையின்கீழ் ஜூலை மீ 10உ மாலை மதுரைமாகர் ஸகாதனிகளின் மாபெருங்கூட்டம் கூடிற்று.

ஆயிரக்கணக்கில்ஸநாதனிகள்குழுமி இருந்தனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதடன் நிறைவேறியது:—

(1) மதுரைழில்லா ஸகாதன மக்காடு நடைபெறும் வரையில் தெரு தெருவாய் பிசாரம் செய்யவேண்டுகமன்றும்,

(:) ஸ்ரீமீனாக்ஷி அம்மன் ஆலயத்தில் நடந்த அக்ரமங்களை ஒட்டி ஆலய நிர்வாக அதிகாரியின்மீதும், மற்றும் இதர எட்டு நபர்களும் மீதும், புகார் செய்யவேண்டுமென இக்கூட்டம் அபிப்பிராயப்படுகிறது. (ஸ்ரீ வி. ஆர் துரைபிள்ளை இது விஷயமாக புகார்செய்ய நடவடிக்கை நடத்த முன்வந்திருக்கிறார்).

(3) ஆலய நிர்வாக அதிகாரிமீது வழக்குத் தொடர்ந்து அவர் ஸம்ரோட்சணம் செய்து விட்டுத்தான் வழக்கு பூஜைகளை நடத்தவேண்டுமென்றும், இனிமேற்கொண்டு இம்மாதிரி ஸம்பவம் நடைபெறாமல் அவர் பார்த்துக் கொள்ளவேண்டி ஒரு தடை உத்திரவைப் பிறப்பிக்கும்படி வழக்குத்தொடர இக்கூட்டம் அபிப்பிராயப்படுகிறது.

(4) ஆஸ்திகாரிகள் ஆலயத்தில் தழையாமல் தடுத்து, வழக்குத் தொடரவேண்டி ஏற்படும் நிலையுகளுக்குப் பொதுமக்களிடமிருந்து பணவரவுல் செய்து ஒரு நிதியை ஸ்தாபிக்கும்படி கூட்டம் தீர்மானிக்கிறது.

(5) வர்ணச்ரம சங்க பொக்ஷிஷதார் ஸ்ரீ C.S விஸ்வநாதய்யர் அதிகாரத்தில் மேற்படி நிதியை கவனிக்கும்படி இக்கூட்டம் அபிப்பிராயப்படுகிறது.

(6) ராவ்பகதூர் R. நரஸிம்ம அய்யங்கார், ராவ்சாகேப் R. கிருஷ்ண அய்யர் தலைமையில் ஒரு "ஆலயப்பாதகாப்புத் தொண்டர்படையை"த் நிர்மாட்ட முடிவுசெய்கிறது.

வந்தனோபசாரம் கூறியபின் கூட்டம் கலைந்தது.

அதிகாரிமீது வழக்கு

ஆலயப்பிரவேச அக்ரமத்தை நாடெங்கும் பொதுமக்கள் கண்டித்து வருகிறார்கள். மதுரைமாகர் வாசிகள் ஆத்திரம்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் நிறை மறைவிலிருந்து நடத்தும் காரியங்களை எல்லா வகுப்பினரும் வன்மையாகக் கண்டித்து வருகிறார்கள். ஸாதனிகள் ஒருங்கு சேர்ந்துவிட்டார்கள். 11—7—39 காலை மதுரைகர மாஜிஸ்டிரேட் கோர்ட்டில், மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானத்தை நிர்வாக அதிகாரி ஸ்ரீ. R. S. நாயுடு ஹரிஜன சேவாசங்கத் தலைவர் ஸ்ரீ ஏ. வைத்தினாதய்யர், ஸ்ரீ எல். என். கோபாலய்யர், மற்றும் ஐந்து ஹரிஜன்கள்மீது இ. பி. கோ. 295, 297, 146, 109 பிரிவுகளின்படி குற்றஞ் செய்ததாகக் கிரிமினல் நடவடிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

பிரத அங்கிகரிக்கப்பட்டு ஜூலை-மீ 24 தேதி விசாரணைக்கு வழக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

நகரில் இந்த விஷயம் பரபரப்பை உண்டாக்கி இருக்கிறது.

A MESSAGE.

Dewan Bahadur Sri K. S. Ramaswami Sastrigal, B.A., B.L., District & Sessions Judge (Retired) in the course of an exclusive Message to "Arya Dharmam" writes:—

I am glad that the "ARYA DHARMAM" is expanding its scope and intensifying its responsiveness to the modern age. Sister Nivedita once pleaded for *Aggressive Hinduism*. Aggression is not destruction. It means dynamism, synthesis, and learning of modern life. We must take our stand on our essential Acharas because they will fit us for realising God

ब्रह्मैव क्रियेत तनुः ।

while recognising the value of the other faith and the availability of Yoga and Bakthi sand Jnana to all. We have our own contribution to make towards the solution of modern problems and hence we have to maintain our nature (*Swabhava*) unimpaired. An initiative mentality or a slave mentality will be our undoing and will lead to the drying up of the jetting fountain of Hindutwa. Ours is defensive democracy, a decentralized democracy, a socialised democracy, a spritual democracy. Ours is stable, non-competitive co-operative social and economic order combining elements of order and elements of progress. We have balanced agriculture and industry, urban and rural life, this world and the next. Balance is our key word. Ahimsa is our slogan. Godliness is our passion. May the "Arya Dharmam" meet modern life at all points and make life better, purer, nobler, and sweeter than it is to-day.

(Sd.) K. S. Ramaswami Sastrigal.

அத்வைதவபை கும்பகோணம்.

(1860 வருஷத்தீய XXI ஆக்ட்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

ஷை சபையின் 45-வது வருஷத்நிப வித்வத்ஸதஸ் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்காசாரிய ஸ்வாமிகள் அவர்கள் ஆக்ஞாபித்த பிகாரம் ராளத பிரமாதி-ஹே ஆடி மீ 28உ (13—8—1939) ஞாயிற்றுக்கிழமை தினம் ஆரம்பித்து கும்பகோணம் ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ ஆசிசார்யாள் அவர்கள் ஸன்னதியில் வழக்கம்போல் ஒரு வாரம் நடைபெறும். பரீக்ஷைக்கு வர விரும்புவர்கள் பரீக்ஷைக்கு வரும் நிர்தங்களை குறிப்பிட்டு எழுதித மூலமாய் 28—7—1939க்குள் காரியதரிசியிடம் தெரிவித்துக்கொள்ள வேண்டும். தர்மஞ், நிருஷ்ய பரீக்ஷைகளும் நடைபெறுவதால் அதற்கு வருபவர்களும் நிடி தேதிக்குள்ளாக காரிய தரிசியிடம் தெருவித்துக் கொள்ள வேண்டும்.

M K. வைத்தினாதய்யர் B.A. B.L.
(காரியதரிசி.)

Marriage and Temple Entry Legislation.

Rao Sahib N. Natesa Iyer's Appeal.

Rao Sahib Sri N. Natesa Iyer, President, All India Varnashrama Swarajya Sanga, Madras provincial Varnasrama Swarajya Sangha, Madura Varnasrama Swarajya Sangha, Madura Dharma Sastra Sabha, in the course of an appeal to the public observes :—

"No Legislative measure within living memory has hit the Hindu more catastrophically than 3 Acts of Messrs. Sarda, Das and Navalrai. It may be asserted without fear of contradiction that they have caused greater injury to the Hindu Religious Moral and Social Edifice than all the other enactments put together. They have set our homes on fire. They are pulling down our women from their queenly heights and killing inch by inch all that is amiable and loveable in them. The Hindu women will cease to be the pride of womanhood which they have been all these aeons. The chastity, loyalty and devotion which have been raising them above all other women will be things of the past. Varna and Asrama, caste, and disciplined life will be gone for ever. And yet we are sitting with folded hands indifferent to our own destruction like the Penguine birds of the Oceanic islands.

Next in importance to the aforesaid Marriage Acts and next only to them is the Temple Legislation. While the former destroy private life in homes the latter destroy life outside homes. The dominant object at the back of both is the same Viz, annihilation of caste. If they are allowed to hold the field for only 10 years more, the Hindu will remain only in the pages of History. The so-called National Government has pledged itself to this donoument and is working for it day in and day out. Are we to take it lying down?

It is a matter of history that Sree Guruvayoor Temple was the first target of attack in 1932. The Malabar Temple Entry Act was conceived and passed to cover the defeat sustained by the sponsors of the movement in the fond hope that the Statutory referendum will yield a triumphant victory. It has become however a still-born child. Thanks to the combined efforts of the Zamorin Raja of Calicut, the Raja of Kollengode, Doctor Sankaranarayana Aiyer of Palghat and other Sanatanists in and outside Palghat and to the numerous Varnashrama Swarajya Sanghams the hope was shattered. The Act stands as dead as a mouse. Guruvayoor has ceased to be a storm centre.

It looks however that the Madura and Sreerangam will take its place. A fresh campaign on radically different lines has been started. And the procedure adopted makes me tremble. It is nothing short of an open incitement to break the laws under ministerial sanction. Under normal conditions the offenders would surely be charged with the effence of conspiracy to subvert the existing Government. Evolved however as the project has been, by no less than a personage than "the most orthodox Hindu Premier," it has acquired full immunity. Shall I say what it is.

What the Premier with a boldnes born of his intimate association with the meek and heretofore negligible co-religionists commands under the cloak of advice is this :—

"Ye, executive officers and trustees, throw open the temples to the Panchamas. Ye, Harijans, enter the temples with Bhakthi in heart and clean clothes on the body. You no doubt violate the laws of the land, but you need not mind them. Remember that Sanatanists are not Muslims but bone-less and disorganised cowards. Besides, they are crushed and buried under the weight of the laws already enacted by my cabinet and the wreckage created thereby. They have lost all their stamina, physical, mental and moral. They have not even the energy to kick in the air as they have been doing so far. Take my word. The moment Civil or Criminal proceedings are launched — no Sanatanist will have the effrontery to do so—I shall pass an indemnifying and validating Act and save you harm-less against possible adverse judical verdicts. Only create an atmosphere, albeit artificial, and shout incessantly from the platform and the pulpit and in the press. Leave the rest to me.....".

True, to these teaching, the Cabinet Ministers and Parliamentary Secretaries and other luminaries glittering as Harijana Sevakas have begun the work in the Districts of Madura, Ramnad, Tinnevelly and Trichinopoly. Not a day passes without some miniature Conferences or Meetings or speeches imposing upon the bore public queer principles touching "fiendish untouchability" and "grand Hindu Religion" for which they alone are authorities and none else.

Is there to be no end to this? How long are we to endure this? Is it not time to meet words with words, noice with noice and action with action? If it is no offence for a minister to break laws or incite their breaches, it must be equally so for us. What is sauce for gander is sauce for the goose also. If falsehoods, half truths, and Misrepresentations gather strength from repetitions, truths are bound to gather momentum much more from repetitions. Is it not our duty at this juncture to use these instruments ourselves?

As a first step in this direction it has been proposed to hold the 5th Madura Varnashrama Swarajya Sangha Conference in Madura on the 22nd and 23rd days of July and the Madras Provincial Varnashrama Swarajya Sangha Conference in Kumbakonam in August. The resolutions will no longer be mere paper resolutions. Passive indifference threatens to develop into aggressive antoagonism. An impregnable united front is an imperative necessity. On bended knees I send forth this appeal in the full belief that we shall muster strong on both the occasions determined to act and not merely make speeches and go to sleep thereafter.

அத்வைதஸபை,

கும்பகோணம்.

தர்மக்ஞ—கிருஹ்யக்ஞ பரீக்ஷைகள்

இத்த-ஹ்ரு அத்வைதஸபை ப்ரமாதிஹ்ரு ஆடிமீ 29உ (13-8-39) ஞாயிற்றுகிழமை ஆரம்பித்த வழக்கம்போல் ஒருவாரம் கடைபெறும் அதில் மேடைபரீக்ஷைகள் நடத்தப்படும் பரீக்ஷைகளில் தர்மக்ஞபரீக்ஷையில் 100க்கு 75க்கு றையாமல் மார்க்கு வாங்குபவர்களில் முதலாக தேறிய வருக்கு ரூ 150-ம் கிருஹ்யக்ஞ பரீக்ஷையில் அதே மாதிரி முதலாக தேறியகருக்கு ரூ 50-ம் சென்னை பென்ஷன் உதவி இஞ்சினியர் ஸ்ரீ K. கேணேசய்யரால் வெகுமதிஅளிக்கப்படும் பரீக்ஷார்த்தர்களாக விரும்புவோர்கள் அடியில் கண்டவருக்கு 28—7—39க்கு முன்னதாகவே எழுத்துமூலமாய் தெரிவித்துக் கொள்ளவேண்டியது.

தர்மக்ஞ பரீக்ஷையின் விபரம் :—

வேதம்.

1. ருக்ஸம்ஹிதை .... திரமாந்தம்
2. தைத்திரீய யஜுஸ்ஸம்ஹிதை ஷி
3. சுக்லயஜுஸ்ஸம்ஹிதை .... ஷி
4. ஸாமவேததலவகாரசாகை ஸம்ஹிதை (ஆருணம் ஊஹம்)
5. ஸாம வேதகௌதமசாகை ஊஹ ரஹஸ்யம் பூர்வருக் உத்தராருக் முடிய.

இவ்வைத்துக்குள் ஏதேனுமொன்றை முகஸ்தமாகக் கேட்டவிடத்தில் தவராமல் சொல்லவேண்டும்.

II. கிருஹ்யம்.

1. ஆசுவலாயன .... திருஹ்யஸூத்ரம்
2. ஆபஸ்தம்ப .... ,,
3. போதாயன .... ,,
4. பாரத்வாஜ .... ,,
5. ஸத்யாஷாட.... ,,
6. வைகானஸ .... ,,
7. ஆக்நிவேச்ய .... ,,
8. காத்யாயன .... ,,
9. ஜைமினி .... ,,
10. காதிர .... ,,

இத்த 10 திருஹ்யஸூத்ரங்களுள் ஏதாவது ஒன்றின் மூலம் கேட்டவிடத்தில் தவறுமல் முகஸ்தமாகவும், அதன பாஷ்யானுஸாரமாக அர்த்தமும், அர்த்த திருஹ்யப்படி ப்ரயோகமும், அத்தர்த திருஹ்யங்களில் விளியோகிக்கப்படும் மந்திரங்களுக்கு அதன் பாஷ்யானுஸாரமாக அர்த்தமும்சொல்லவேண்டும்.

III. ஸ்மிருதி.

1. வைத்தியநாததீக்ஷிதீயம் ஆறுகாண்டங்களும், அல்லது நிர்ணயஸிந்து அபிவ்யக்தி இவ்விரண்டு கிரந்தங்களும்.

2. கௌதம தர்மஸூத்ரமும் பாரஸ்மிருதியும் அல்லது ஆபஸ்தம்ப தர்மஸூத்ரமும் மனுஸ்மிருதியும் கேட்டவிடத்தில் வியாக்கியானத்துடன் அர்த்தம் சொல்லவேண்டும்.

கிருஹ்யக்ஞ பரீக்ஷையின் விபரம் :—

I. வேதம்.

1. ருக்ஸம்ஹிதை
2. தைத்திரீய யஜுஸ்ஸம்ஹிதை
3. சுக்ல யஜுஸ்ஸம்ஹிதை
4. ஸாமவேத தலவகாரசாகை ஸம்ஹிதை மட்டும்
5. ஸாமவேத கௌதமசாகை பிரகருதி ஊஹ ரஹஸ்யம்

இவ்வைத்துக்குள் ஏதேனுமொன்றை முஸ்தமாகக்கேட்டவிடத்தில் தவராமல் சொல்லவேண்டும்.

II. கிருஹ்யம்

தர்மக்ஞபரீக்ஷைக்குக் குறிப்பிட்டபடி சொல்லவேண்டும்.

III. ஸ்மிருதி.

வைத்தியநாத தீக்ஷிதீயம் சொத்தகாண்டமும், ஆசௌச காண்டமும், அல்லது நிர்ணயஸிந்து சொத்தப் பிரகரணமும், அபிவ்யக்தியும் கேட்டவிடத்தில் விஷயம் சொல்லவேண்டும்.

பரிக்ஷைக்கு வருகிறவர்கள் அந்தந்த வருஷம் பரிக்ஷை எந்த விடத்தில் எத்த சமயத்தில் நடைபெறுமென்பதை அத்வைதசபை காரியதரிசிக்கு எழுதிக்கேட்டுத்தெரிந்துக் கொண்டு தாம்பரீக்ஷைக்கு ஸித்தமாக இருக்கிற விபரத்தை பரீக்ஷை ஆரம்பதினத்திற்கு 15நாள் முன்னதாகவே அத்வைத ஸபை காரியதரிசிக்கு எழுத்துமூலமாய் தெரிவித்து விடவேண்டும்.

ஒரு வருஷம் பரிக்ஷைக்கு வந்து ஸம்மானம் பெற்றவர் அதிலிருந்து ஐந்து வருஷம் பரிக்ஷைக்கு வர அவகாசமில்லை.

M. K. வைத்யநாதய்யர், B.A., B.L.,
காரியதரிசி.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

[தொடர்ச்சி]

பெற்றோர்கள் கவனிக்க!

அறிவாளிகள் நிறைந்த சுத்தமிழ்காட்டில் சைலாலமாக ஸாத்விகம் தலைவெடுத்து அடங்குற்தருவாயிலிருப்பது யாவரும் அறிந்த தே. ஆறுவடியும்போதும், பஞ்சம் தெளிபும்போதும் கொல்லும். அப்பொழுது மக்களும் எச்சரிக்கையாகிருக்கவேண்டும். அதபோலவே ஸாத்விகம் சட்டைவிட்டு அகலுங்கால் கடைசிமுறையாகத் தன் புஜபலத்தைக் காட்டுவது அசிசயமல்ல. குறிப்பிட்ட ஒரு வர்மேலும் குறைகூறுவதற்கில்லை. அவரவர் புத்திக்கேற்றவாறு அவரவருக்குத் தோன்றிய சீர்திருத்தங்களே அழலுக்குக் கொண்டு வருகிறார்கள்.

இச்சமயத்தில் பள்ளி மாணவர்களிடையேயும் பிரசாரம் செய்யப்படுகிறது. சுய அறிவு வளர்ச்சியடையாத இளம்பருவத்தில் எதைச்சொல்லினுங் கேட்கக்கூடிய நிலைமையில், மாணவர்களுக்குப் போதகாசிரியர பிரப்பவரின் பொறுப்பும், பெற்றோர்களின் பொறுப்பும் எத்தன்மையதென்பதை இரு பலரும் உணர்ந்து செவ்வனே ஒழுகவேண்டும்.

உதாரணமாக தமிழ் நாட்டில் பல பள்ளிகளில் 'பதினறு கட்டளைகள்" என்ற சில பாடல்கள் பிள்ளைகளுக்குச் சற்பிக்கப்பட்டு வருகின்றன. இவைகள் ஒவ்வொன்றின் இலக்கண இலக்கியக் குறைபாடுகளை ஆராய்வது அவசியமுமல்ல. இடமும் நேரமும் போதாது. காத்திக்கும், கவராகமென்னும் பெயரால் நடமாடும் அநாகரிகமும் ததம்புகின்றது. இரண்டு பாடல்களைக் குறித்துக் காட்டிற்போதும்.

"மதாச்சாரம் மகாகுடியிலும்
மாண்பிலைவாபாணத்திலும்—அன்றிக்
கொய்ஞவிலுங் கொசுவலியிலும் பணம்
கோரிச்செலவழித்தால் குணமே"

"வூட்டில் எருத்தட்டலாகிய வேலையில் விட்டிடாய் உன்தனது மாதரைப்—பின் பண்பான புத்திப் பாதக ப்புக்கும் உன் அன்பான தோழிக்குமாகக்கொள்வை"

ஹிந்மதாசாரம் மட்டுமா மற்றவைகளுமா என்பதை முதற்கேள்வி. பணச்செலவிட்டாலும் கட்குடி கெடுதலே. பணக்காரருக்கும் கெடுதலே. ஆபாணங்களும் அப்படியா? மதாசாரம் செலவிட்டால் அனுஷ்டிக்கலாமா? பணச்செலவாகுமானல் தள்ளிவிடலாமா? கொய்ஞ காதையடைத்துவிடவில்லையா? வேறு மருந்துகளில்லையா? கொசுவலியேன்? சுத்தமாயிருந்தால் கொசு வருமா?

கொய்ஞவும், கொசுவலியுமே ஆபரணம் போலும்! என்னே விந்தை! இவைகளில் பணம் செலவழிக்கவேண்டுமாம். மதாசாரத்தில் செலவழிக்கக்கூடாதாம். இதுவோ நற்போதனை!

மேலும் எந்தத் தாளில் வைத்த "பதாசாரம்", "மகாகுடி", "ஆபரணம்" மூன்றும் ஒரே இடை, ஒருங்சேர்த் தள்ளத்தக்க வையென மிகவும் கொச்ச ஆராய்ச்சிசெய்து கண்டுபிடிக்கப்பட்டதென்பது தெரியவில்லை.

மற்ற பாட்டை கவனிப்போம். சானிதட்டுவது அநாகரீகமாம். பசுவின் சாணத்தின் குணத்தையறிந்தவர் இக்கூற்றை எள்ளுவர். பணக்காரர் வீட்டில் வேலையாட்கள் வைக்கலாம். எனுகள் என்ன செய்வார்கள்? அல்லது இப்பாட்டுக்களை யாக்கியவர் ஆடவரே இனி எருத்தட்டவேண்டுமென அபிப்பிராயம் கொண்டுள்ளாரா?

கேள்விக்குப் பதில்

"ஆர்ய தர்மம்" பத்திரிகையில் ஸ்ரீராமர் மாரீசனுடைய தோலில் ஆஸனமாகப் போட்டுக்கொண்டார் என்பதற்கு ஆதாரம் உண்டா என்று கேட்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமத் வால்மீகிமுனிவர் நியாக மரயர் முருகுபம் தரித்த மாரீசன் ஸ்ரீராமபாணம் பட்ட தக்ஷணமே மிருகரூபத்தை விட்டு ராக்ஷஸனாகமாறி பிறகு உயிர் துறக்கதாக இருக்கிறது. ஆனல் மஹாகடகம் என்னும் நிர்த்தத்திலுள்ள அடியில் சொல்லப்பட்டிருக்கிற ஸ்லோகத்தினுல் ஸ்ரீராமர் படுத்துக் கொண்டிருக்கிற அழகை வர்ணிக்கும்பொழுது, சிலை வானாஸனையத்தின் அதிபதி ஸுக்ரீவன் மடியின் மேலும், கையை தாராபுத்ரனை அங்கதன் மேலும், பக்கியான சீரழுவதும் தங்கமயமான மானுடைய தோலின் மேலும் படும்படியாக வைத்துக் கொண்டு ஒரு கண்ணுல், தம்பி லக்ஷ்மணனுல் நீட்டப்படும் கூர்மையான பாணத்தையும், இன்னொரு கடைக்கண்ணுல் லங்கையையும் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று சுகசாரணர்கள் லங்கேசனான ராவணனிடம் தெரிவிக்கிறார்கள்—

अङ्के कृत्वोत्तमाङ्गं प्लवगपतेः पादमक्षस्य हन्तुः
तारापुत्रस्य हस्तं त्यचिकनकसृग्यास्याङ्गशेषं निधाय।
बाणं रक्षःकुलघ्नं प्रणुतिमनुजेनादरादीक्षमाणाः
चक्षुः कोणेन लङ्कां त्वदनुजवचने दत्तकर्णाश्चमास्ते॥

T. S. வேங்கட்டாரமய்யர், திப்பிராஜபுரம்.

யஜுர்வேதாகர்மம்

இது விஷயமாய் தர்க்கம் அதிகமாய்விட்டது. இது விசனிக்கத்தக்கது. தக்ஷிணையினத்தில் பூர்ணமாய் அத்யயனம் செய்த உத்தாரணத்தில் சான்றோர்கள் விசாரிக்கும் விஷ்ணுக்கு உபாகர்மா சாஸ்திரோக்தமாகச் செய்யவேண்டியதவசியம் என்று நினைக்கிறேன். சிரவண தினத்தன்று வேதாரம்பம் ஏனும் ஆவாஹனம் முக்யம். ஆரம்பத்தில் த்விதீயாலிச்சிதி கூடாது. தொடர்ந்த தக்ஷிணையனம் பூர்வமும் நடக்கவேணும். தை மீ பௌர்ணமியில் உத்ஸர்ஜனம் செய்து முடிக்கவேணும். ஆனல் வேதமென்ற சப்பாட்டை கவனித்தால் வயிறு நிரம்பாது. அத்தகைய அபசாங்கம் இல்லை. காங்கிரஸ் அதிகாரம் பெற்றிருக்கிறதே என்றல் அவர்கள் சாஸ்திரங்களைப் புறட்டுவதெல்லாம் ப்ளேடை விலகத்திற்கும் ஜாதிவிலக்கத்தைசெய்வதற்குத்தான். முன்னாளில் தர்மப்படி அரசுசெய்தது அவர்களுக்கு அவசியமில்லை.

கலியில் வயிறுக்கும் ராஜதண்டனைக்கும் மத்தியில் உபாகர்மா என்ற பெயரவது இருப்பதைப்பற்றி எல்லாரும் சந்தோஷிக்க வேண்டியதே, இம்மாதிரி விலகாகங்கள் வரும்பொழுது சிஷ்டாசாரம் இன்னது இப்படித்தான் செய்யவேணுமென்று ஒரு பரிஷத்தாவது அல்லது அதற்கு மேலான ஸஷனங்கள் வரப்ந்த நமது ஸ்ரீ ஆசார்யாளாவது நியமிக்கவேணுமென்று மிகவும் வணக்கத்துடன் பிரார்த்திக்கிறேன்.

சு. வைத்தீஸ்வரன், கல்கத்தா.

இம்மாதிரி விபரீதமான பல கருத்துக்கள் மலிந்து கிடக்கும் இப் "பதினறு கட்டளைகள்" மாணவர்களுக்குப் போதிக்கப்படுமானல் ஸாத்விகமும், அநாகரீகமும் தமிழ்நாட்டில் குடிபுகும். தமிழிலுள்ள பண்டைநாட்பாக்கள் பலவற்றையும் விடுத்து ஏன் இந்த விபரீதக் கட்டளைகளிடவேண்டும்.

பெற்றோர்கள் இதில் கவனஞ் செலுத்தி வேண்டுவன செய்தல்வேண்டும்.

"தர்மதாஸ்" திருப்பத்தூர்.

வந்தேஹம்!

"ஸ்ரீமங்கிகமாந்த தேசிகரைச் சக்ரவர்த்தி திருமகன் மாரீசமாயமானின் தோலே தரித்ததாகக் கூறியதற்கு ஏதேனும் க்ரந்தப்மாண முண்டா என்பதே கமது ஸந்தேஹம்!

"சிவரத்வைத நிர்ணயம் என்று ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதாவர்களால் எழுதப்பட்ட நூல் அச்சிலிருக்கிறதா? எங்கு கிடைக்கும்? என்னவிலை? அல்லது மூலம் கிடைத்தால் அச்சிட எவரேனும் முன்வருவரா?

ஓர் ஸந்தேஹி.

மலமாஸமும், உபாகர்மமும்

நாளது வருஷத்தில் ஆடி மாஸத்தில் மல மாஸம் ஸம்பவத்திருக்கிறது. அது அடுத்த சிரவண மாஸத்தில் சேஷமாதலால் அதன் பெயரால் அதிக சிரவணமென்று வழங்கப்படுகிறது. ஸ்மிருதி நிபந்தனங்களில் அதிமாஸத்தைப்பற்றி- "ஸூர்ய ஸங்க்ரமணமில்லாததால், அதிகமாஸ மென்றும், ஸம்வத்ஸரஸ்வரூபியான கால புருஷனுடைய அதிகாம்சமாதலால் மலமாஸமென்றும், த்வாதசாதித்யர்களின், அதிகாம்ச மாதலால் மலமாஸமென்றும், த்வாதசாதித்யர்களின் அதிகாரமில்லாமல் மண்டலம் மாத்ரம் பிரகாசிப்பதால் நபும்ஸகமென்றும் ராக்ஷஸாக்ராந்தம், பாபிஷ்டம், யக்ஞபலநாசகம். வைதிக கர்மானர்ஹமென்றும் பலவிதமாக ஹேயத்வம் சொல்லப்பட்டிருக்கிறது.— இந்த மாஸத்தில் செய்யவேண்டிய வைதிக கர்மாக்களை அடுத்த சுத்தமாஸத்தில் செய்யவேணுமென்றும் எதைச்செய்யாவிட்டால் ப்ராயச்சித்த ப்ரஸக்தி ஏற்படுமோ அவ்விதமான அதிகமான நிரவசுமான கர்மாக்களைத் தவிர வேறு எவ்வித கர்மாக்களையும் மலமாஸத்தில் செய்யக்கூடாதென்றும், செய்தால் பலனற்றதாகுமென்றும் வியாஸ பாராசரரி அனேக ரிஷிவசனங்களால் விபக்தமாகிறது.

(1) மலமாஸத்திலேயே செய்யவேண்டிய கர்மாக்கள்.

(2) சுத்தமாஸத்திலேயே செய்யவேண்டிய கர்மாக்கள்.

(3) மலமாஸம் சுத்தமாஸம் இரண்டிலும் செய்யவேண்டிய கர்மாக்கள்.

(4) மலமாஸத்திலோ சுத்தமாஸத்திலோ, எதில் நிமித்தம் ஏற்படுமோ அதில் செய்ய வேண்டிய கர்மாக்கள்.

இவ்விதம் கர்மாக்களை வகுத்திருப்பதில் உபாகர்மாவை சுத்தமாஸத்திலேயே செய்ய வேணுமென்ற ஜாபிதாவில் சேர்த்து காலதர்சனமும் முறையிடுகிறது. இப்படி இருக்க ஸ்ரீ அஹோபலம் மடம் ஆஸ்தான பண்டிதர்களில் சிலர் அசுத்தமான மலமாஸத்திலேயே த்விதீயாதி உபாகர்மாக்களைச் செய்யவேணுமென்று பத்திரிகைகளின் மூலமாக ப்ரகடிப்படுத்தி இருக்கிறார்கள். அவ்விதம் நிர்மானம் செய்யக் காரணம் என்ன? வைதிகஸார்வபௌமர் கண்டபூஷணத்தில்—

'உபாகர்மததோத்ஸர்கம் காம்யமுத்ஸவமஷ்ட
[கா:]

மாஸவ்ருத்தென பரே குர்யாத்!

என்ற ஹாரீதஸனத்தை எடுத்துக்காட்டி "இதம் நிரமோபகர்ம விஷயம்" என்று ஒரு நிர்மானம் செய்ல்லியதால் த்விதீயாதி உபாகர்மாக்களுக்கு மலமாஸ தோஷமில்லை யென்று பண்டிதர்கள் நிர்மானம் செய்து விட்டார்கள். சுத்தமான சிரவணி இருக்கும்போது அசுத்தமான மலமாஸ சிரவணியை எந்த த்விதீயாதி உபாகர்மி தான் கர்ம

[தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க]

(7ம் பக்கத்தொடர்ச்சி)

வான்; குரு சுக்ர மௌட்யாதி தோஷங்களே பிரதமோபகர்ம விஷயமென்று கருதுபவர். அதே பங்கியில் தோஷஸாதாரண்யே மலமாஸ தோஷத்தையும் சேர்த்து எழுதிவிட்டார் என்று எண்ணவேண்டியதாக இருக்கிறது. சுத்த மாஸத்தில் குரு சுக்ர மௌட்யம் என்ற வேறொரு தோஷம் ஆபாதமாகிறது. மலமாஸமென்பது ஸ்வதः திஷ்டமானது. ஆகையால் மலமாஸத்துக்கும் குருசுக்ரமௌட்யாதிகளுக்கும் தாரதம்யம் உண்டு. பின்னும் ஆடிமாஸம் 25உ சுக்ராஸ்தமனமாம்பிக்கிறபடியால் பக்ஷः ப்ராக்நிவ்ருத்தத்வம் என்ற காலதர்சன வசனப்படி ஆடிமீ பௌர்ணமிக்கு சுக்ரோவார்த்திக்யதோஷமும் ஏற்படுகிறது.

தசநிர்ணத்திலேயே ஸ்ருத்யதிஹிராதி வசனங்களால் 5 காரணங் வார்த்திக்யதோஷம் கவனிக்கவேணுமென்று வியக்தமாகிறது. இவ்விதம் அனேக விஷயங்களே ஆலோசனே செய்தமதரைப்பிரசாத்தங்களிலுள்ள அனேக ஸ்ரீவைஷ்ணவர்கள் (ஸன்னிதி சிஷ்யர்கள் உள்பட)ஸ்மார்த்தர்கள் யாவரும் ஆவணிமீ 13உ சுத்தசிராவண பௌர்ணமியிலேயே சுக்ரோசாந்தியுடன் உபகர்மா செய்வதாக நிர்மானம் செய்திருக்கிறார்கள்.

மலமாஸ சிராவணியில் உபாகர்மாவைச் செய்கிறவர்கள் "சிராவணத்வா விசேஷாத்" காயத்ரீ ஜபத்தையும் அதே மாஸத்தில் செய்யப்ரஸக்தமாகும்.

சங்கரசாஸ்திரி, சோழவந்தான்.

ஆபஸ்தம்பீய யாஜ்ஞோபாகர்ம நிர்ணயம்.

இலங்கைக்கு ஸமீபமான மேற்பூங்குடியில் நிகழும் பிரமாதி வருஷம் ஆனிமீ 12உ பிற்பகல் 3 மணிக்கி ஸ்ரீராமமந்த்ரத்தில் ஸாதஜனஸபை கூடி இவ்வருஷ உபகர்ம நிர்ணயத்தைப்பற்றி பலவிதசர்ச்சைகளே முதலில் எழுப்பி பிறகு சாஸ்த்ரீயமான ஸ்மார்தானத்தை விரும்பி சபைக்கு வந்திருந்த பண்டிதர்கள் வேண்டிக்கொள்ள பூர்வபக்ஷங்களே ஆனுவதித்து யாவரும் ஒப்புக்கொள்ளும்படியான யுக்திகளேக்கொண்டு நிராகரித்து ஸ்ரீ விசுவனாத சாஸ்திரிகளாலும் நிர்ணயிக்கப்பட்ட விஷயத்தை ஸபையோர் யாவரும் ஏகமனதாய் அங்கீகரித்து அவ்விதமே செய்வதாக நிர்மானித்தார்கள்.

அதின் ஸாரம்.

ஆபஸ்தம்ப ஸூத்திரகளுக்கு சிராவணி ஒன்றைத் தவிர வேறு காலமே உபகர்மாவுக்கு சொல்லப்படவில்லே. தன் ஸூத்திரக்காரால் சொல்லப்படாததும் லோகத்திற்கும் வேதத்திற்கும் சாஸ்திரத்திற்கும் சிஷ்டாசாரத்திற்கும் கிரோதமில்லாத அன்யஸூத்ரத்தில் சொல்லப்பட்ட விஷயங்களே க்ரஹிக்கலாமென்ற நியாயமிருந்தாலும் சொல்லப்பட்ட விஷயத்தை ஸூத்ரார்த்தத்தில் நின்றும் க்ரஹிக்க நியாயமில்லே. ஸ்ராவணாம் வளணடூஷவ்யாம் சுயுர்ய ஊஷாசூதி! என்றே எல்லாருமறிந்த ஆபஸ்தம்ப ரிஷி சிராவணிக்கி தோஷமே இல்லாமல் ஒரே காலத்தையே குறிப்பிட்டிருப்பதாலும் ஔபாஸனாதிகளேப் போல் ஆசௌசம் நீங்காகாலமாக மற்ற எந்த தோஷமிருப்பினும் ராவணியிலேயே ச்வோபூதே என்கிற ஸூத்ரத்தினுல் மறுதினம் ப்ராயச்சித்தம் விதித்திருப்பதாலும் உபாகர்மத்திற்கு காலாக்ஷேபம் ஆபஸ்தம்பத்திற்கு ஸம்மதமிருக்குமானுல் பூர்ணிமைக்கு மறுநாள் என்பது பெருந்தாகையாலும் ஆபஸ்தம்ப ஸூத்ரங்களிலேயே பூர்வாபர விரோதம் தோன்றுமிடத்தில் மீமாம்ஸா நியாயங்களேக் கொண்டு பரிஹரிக்கவேண்டியது நியாயமாயிருப்பதாலும் உண்டவனே இல்லு உண்ணாதே என்பது அவலம்பித்து அன்யஸூத்ரிகளே அனுஸரித்து எழுதிய சில ஸ்மிருதிகளேக்கொண்டும், அத்தகைய பஞ்சாங்கங்களில் வெளியிடப்பட்ட உபாகர்மகாலங்களே அத்தகைய பஞ்சாங்கங்களே அனுஷ்டிப்பவர்கள் அபிமானத்தால் ஸ்தாபனம் செய்ய முயற்சிப்பதாலும், நிபந்தனகர்த்தாவான வைத்யனுக நீகூரிதருடைய அபிப்ராயமும் நிஷ்பக்ஷபாதமாய் விமர்சனம் செய்கிறவர்களுக்கு ஆபஸ்தம்பீய உபாகர்மகாலம் சிராவணிதான் என்று தெரியவருகிறபடியாலும் வைதிகஸர்வபௌமர் இது விஷயத்தை ஷட்வித லிங்கங்களாலும் ஒரு ப்ரகாணத்தில் நிச்சயித்திருப்பதாலும் வேறொன்றையும் கவனியாமல் அதிக, நிஜ மாஸங்களுக்குள் நிஜமாஸத்தில் செய்வதே உசிதமாயிருப்பதாலும் சிராவணி பௌர்ணமியான ஆவணிமீ 13உயே உபகர்மத்தை ஆபஸ்தம்பீய யஜுர்வேதிகளும் காரணுதுயெவி தொஷ ஹுர்ஸ் ஸ்ரீராவணாதெவ காரயேத்। வசனத்தாலும் மூர்த்திமலமாஸ தோஷமும் பிந்தி சுக்ரமௌட்ய தோஷமும் இருப்பதால் போதாயனிகளும் அனுஷ்டிக்கவேண்டியது.

அன்யஸூத்ரிகள் சொன்ன காலார்த்தங்கள் ஆபஸ்தம்பருக்கு இஷ்டமில்லேயென்று வியாஸர் வ்யக்தமாய் சொல்லியிருக்கிறார். இதற்குமுன் சென்ற விகாரி வருஷத்தில் எற்பட்ட உபகர்ம கால ஸந்தேஹத்தில் சிராவணியிலேயேசெய்யவேண்டியது என்று எழுதிய ஒரு ப்ரபந்தத்திற்கு ப. ப. வ்யாக்யான விம்மாஸனுதீச்வர ஸ்ரீ ரிருங்கேரி நரஸிம்ம பாரதீ சுவாமிகள் அவர்களின் ஆமோத பத்ரிகையும் ஏற்பட்டிருப்பதையும் ஞாபகப்படுத்திக்கொண்டு இவ்விதம் தீர்மானிக்கப்பட்டது. ப்ரதமோபகர்மம்கூட சுக்ரசாரத்தில் ஸ்ரீ ஸ்ரீவமாய் சிராவணியிலேயே செய்வதுதான் ஸிஷ்டாசாரமாய் நடந்துவருகிறது. அன்று கல்லிடைக்குரிச்சி ப்ரம்மஸ்ரீ ஸாக்ஷித் சேமயாஜி ஹரிஹர சுப்ரமணிய தீக்ஷிதர் அவர்கள் ஸபைக்கு விஜயம் செய்திருந்தார்.

ப. சிவ. வைத்யநாத சாஸ்திரிகள்,
மேற்பூங்குடி,
சிவகங்கை.

அறிக்கை.

"ஆர்ய தர்மம்" வாரப் பத்திரிகையில் ப்ரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் செய்திகள், கட்டுரைகள் யாவும் ஒரே பக்கத்தில் மசியினுல் மீக்கரும்காமாக எழுதி ப்ரதி திங்கட்கிழமைக்குள் காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும். ஆசிரியருக்குச் சேய்திகளே குறைக்கவோ, கூட்டவோ பூர்ண உரிமையுண்டு.

ஆசிரியர்,
"ஆர்ய தர்மம்", கும்பகோணம்.

நிருபர்கள் வேண்டும்.

"ஆர்யதர்மம்" வாரப் பத்திரிகைக்கு இக்கிலபவின் பல முக்கிய இடங்களில் "நிருபர்கள்" வேண்டும். ஆரம்பத்தில் நிருபர்களுக்குப் பண உதவி செய்யமுடியாது. இலவசமாகப் பத்திரிகை அனுப்பப்படும். ஸநாதன தர்ம விஷயங்களேப்பற்றும், முக்கிய செய்திகளேப்பற்றியும் நிருபர்கள் வாரந்தோறும் எழுதி அனுப்பலாம்.

ஆசிரியர், 'ஆர்யதர்மம்', கும்பகோணம்.

ஸ்ரீ சங்கர சரிதை

இலவசப் பிரசுரம்

ஒரு வேண்டுகோள்.

"ஸ்ரீ சங்கர சரிதை" என்னும் ஒரு நிர்ய புஸ்தகத்தை நாம் வெளியிட உத்தேசம். இப்புத்தகம் $\frac{1}{8}$ டெம்மி அளவு சுமார் 50 பக்கங்கள் கொண்டதாயிருக்கும். ஸ்ரீ சங்கரின் உருவப்படமும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்காசாரியார் உருவப்படங்களும் ஆர்ட் பேப்பரில் ப்ரசுரித்துப் புத்தகத்தில் இணைக்கப்படும். (தமிழ், சமஸ்கிருதம் ஆங்கிலம்) மூன்று பாஷைகளில் ஸ்ரீ சங்கர சரிதையைச் சுருக்கமாகப்பிரசுரிக்கப்படும். ஸ்ரீ சங்கர அவதார காலம், சங்கர நிக் விஜயம், மடஸ்தாபனம், ஸ்ரீ சங்கர குரு பரம்பரை, சங்கர உபதேசங்கள் யாவும் சுருக்கமாவெளியிடப்படும். இந்தப் புத்தகத்தை தமிழ் நாடெங்கும் இலவசமாக வழங்குவதாதிருக்கிறோம். முதல் பதிப்பாக 5000 இதழ்கள் வெளியிடப்படும். இதற்காக ஏற்படும் சிலவுகளே ஆஸ்திக அன்பர்களிடமிருந்து வசூலிக்க விருப்பம். கமத வேண்டுகோட்டிணங்கி அன்பர்கள் தங்கள் இஷ்டப்படி நன்கொடை ரூபாய்க்கு அனுப்பலாம். நன்கொடையாளர் பெயர்கள் புத்தகத்திலும் வெளியிடப்படும் ஸ்ரீ சங்கரைப் பற்றி அநேக புத்தகங்கள் இதுவரையில் வெளிவந்திருக்கலாம். ஆனுல் சுருக்கமாக எழுதி, இலவசமாக வழங்கவேண்டியே இந்தப் புதியபுத்தகம் வெளியிடப்படுகிறது. புத்தகம் ஜூலை மீ 31உக்குள் வெளியிடப்படலாம். அன்பர்கள் அந்தத்தேதிக்குள் நமக்கு ஆதரவு அளித்தால் நலமாயிருக்கும்.

இங்ஙனம், தங்கள் பணிவுள்ள,
எல். எஸ். மணி அய்யர், உதவி ஆசிரியர்,
"ஆர்யதர்மம்", கும்பகோணம்.

The Premier English Weekly Devoted to the cause of Sanatana Dharma.

"Dharmarajya"

(Official organ of the Dharma Sevaka Sabha).
Patron Founder & Spiritual Director
H. H. Sri Sankaracharya, Puri.
Widely circulated in
India, Burma & Ceylon.

Best Medium for Advertisement
Annual Subscription Rs. 5.

Apply to:—
The Manager, "DHARMARAJYA'
Chandi Chowk, Delhi.

தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்.

ப்ராமணர்களின் கர்மானுஷ்டானங்களே விவரிக்கும் "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்த்ரத்தின், ஆசாகாண்டங்களேயும் சங்ரஹமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு ப்ராமண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவையெம்.

விலே ரூ. 1—8—0 வி. பி. ப்ரத்யேகம்.
கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்,
தர்மசாஸ்த்ரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை,
"ஆர்யதர்மம்" ஆபீஸ், கும்பகோணம்.

அநாவசியமாக ஏன் — — — அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்ஜனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளேயும் போக்கவல்லது.



அமிர்தாஞ்ஜனம்

உங்கள் நாக்கை ஏமாற்றுகிறீர்கள்

சாதாரணமாக மணத்திற்காகத் தயாரிக்கப்படும் பெருங்காயம் யாதொன்றுக்கும் பிரயோசனப்படுவதில்லே. உங்கள் நாக்கை ஏமாற்றுகிறது. புத்திசாலிகள் தங்கள் உணவுப் பொருள்களே வாங்குவதில் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். அவர்கள் ஸயண்டிபிக் T. T. பெருங்காயத்தையே கேட்கிறார்கள். ஏனென்றுல் அது கல்ல சாக்கு என்று அவர்களுக்குத் தெரியும். பதினுறு வருஷ ஆராய்ச்சியின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஸயண்டிபிக் T. T. பெருங்காயம் 20·20% அபத்ச தத்தினுல் காப்பாற்றப்படுகிறது. அதற்கு நறுமணமும் நற்சுவையும் உண்டு.

ருசிகரமான சாப்பாட்டிற்கும் ஜீரணத்தை சுலபமாக்கவும் பரிசுக் கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

ஒரு பவுண்டு ரூ. 1—14—0

ஸைன்டிபிக் T. T. மிஸ்கி பெருங்காயம்

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட்,,
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடத்தில் தமிழ், சம்ஸ்கிருதம், ஹிந்தி, ஆங்கிலம், முதலிய பாஷைகளில் எல்லவித அச்சு வேலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
குறைந்த சார்ஜ் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்துக் குறித்த வேளேயில் கொடுக்கப்படும்.
மாத சஞ்சிகைகள், புத்தகங்கள், முதலியவைகள் ப்ரசுரிக்க ஒரு ஏற்ற இடம்
பைபிண்டிங், ரூலிங் முதலியவைகள் கன்ருய்ச்செய்து கொடுக்கப்படும்.
ஒருதடவை ஆர்டர் கொடுத்துப் பார்க்கவும்.

மேல்மங்களம்

மேல்மங்களம் ஆன்றிகமஹாஜன சபையில் ப்ரமாதிவரு செத்திமீ 28-ம் தேதி முதல் ஆவனிமீ 18ம்தேதிமுடிய கடைபெற்ற உபன்யாசங்களின் விபரம்

செத்திமீ 28ம் தேதி ஸ்ரீவைகுண்டம் ஸப்ஜிரெஜிஸ்ட்ரார் N. சாம்பசிவ சாஸ்திரிகள் ஜன்மலபன் ஜீவப்ரம்ம ஐக்யதத்வம் பற்றி உபன்யாஸித்தார்

வைகாசிமீ 19ம்தேதி மதுரை ஸ்ரீ K. S. ஸ்ரீநிவாஸ்ரூர்த்தி சாஸ்திரிகள் தலேமையில் சபை கூடைபெற்றதி சாஸ்திரிகளவர்கள் சுருதி ஸ்மிருதி ஸதாசாரதத்வங்கள்பற்றியும் திருநெல்வேலி ஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி அய்யர் B.A., B.L., ஆசார்யஸ்தவலக்ஷணங்கள் பற்றியும் மதாசார்ய வைபவம் பற்றியும் விரிவுரைகழ்த்தினர்.

ஆனிமீ 16, 17, 18ம்ம் தேதிகளில் ஸ்ரீ K.R. எதாசிவப்பம்மம் முறையே ஸ்வஸமத்துவம் ஸ்வராஜ்ய நாசம் ஸர்த்தகத்வனி கர்மவிதி என்னும் விஷயங்களேப்பற்றி உபன்யாஸித்தார்.

ஆனிமீ 18ம்தேதி ப்ரமாதி ஸுத்திற்கு ப்ரிலாஞ்சேரி ஸ்ரீ சுப்ரமணிய அய்யாவர்கள் சபைக்கு அத்யக்ஷராகவும், ஸ்ரீவில்லிவரதாசார்யர் உபாத்யக்ஷராகவும், ஸ்ரீ ஜி. வெங்கமகணபாடிகள் கார்யதர்சிகளாகவும், சு. சுப்ரமண்ய சாஸ்திரிகள் உபகார்யதர்சிகளாகவும், ஸ்ரீ N. ராமசுப்ரமணிய அய்யர் B. A. பொக்கிஷதாரகவும், தெரிந்தெடுக்கப்பெற்றார்கள்.

[ஒருசிருபர்]

ஆலயப்ப்ரவேச அலங்கோலம்

ப்ராமணர்கள் கோவிலுக்குப் போவதில்லே

"நிலேமை எப்படி இருக்கிறது"

மந்த்ரி கனம் ராமனுஜன்
மதுரை வந்திருக்கிறார்

சென்னே அரசாங்கத்தின் விளம்பர இலாகா அமைச்சர் கனம் எஸ். ராமநாதன் 11-ந் தேதி காலே 7 மணிக்கு மதுரைக்கு விஜயம் செய்தார். ஆலயப்ப்ரவேசத்தால் மதுரையில் ஏற்பட்டிருக்கும் நிலேமையை அறிந்து போக வந்திருக்கிறார்.

கனம் மந்த்ரி முதலில் ஸ்ரீ வைத்தினுதய்யரிடம் பேசிக்கொண்டிருந்தார். பிறகு ஸ்ரீ ஆர். எஸ். ராயுடுவுடன் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்தார். கோவிலேச்சுற்றிப் பார்த்துக்கொண்டுவந்தார். பிற்பகல் அழகர் கோவிலுக்குச் சென்றுவந்தார்.

மதுரைமா நகரிலிருக்கும் ப்ராமணர்கள் கோவிலுக்குப் போவதில்லே. சம்ரோட்சணம் செய்யும்வரையில் அவர்கள் போகப்போவதில்லே என்று கூறப்படுகிறது.

(முதல் பக்கம் தொடர்ச்சி)

ஸ்ரீ மகர்வி தன்னே பதிர்க்கப்படுத்திக் கீர்த்தியடைய என்றும் விரும்பியதில்லே. அவரது சாதனேயினுல் நாட்களில் அவரை உலகமறியாதாயினும், இன்று அவரது உபதேசங்கள் உலகெலாம் பரவ ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவர்பாலணுகுகின்றனர்.

காலுக்குகாள் ஆன்ம வேட்கை யுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அவர்கள் கேட்டல்லாத தங்களுக்கு அவரிடமே இன்னப் புகலிடங் காண்கின்றனர். மதுவைத் தேடும் வண்டினங்கள் மலர் காடித் தாமே பறந்தோடுவதுபோல், ஆன்மப் பசி தீர்த்து ஆனந்தமுற நூற்றுக்கணக்கான மாந்தர் அவரை நாடி ஓடுகின்ற அத்தகைய கவர்ச்சியுடைய காந்தமாய் விளங்குகிறது அன்னர் தம் அளவுகடந்த ஆன்மத்தன்மை.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyansundaram.

வெளியூர்ச் செய்திகள்.

—o—

திண்டுக்கல்
திருப்புகழ் பஜனை

சென்ற சனிக்கிழமை (24—6—39)மாலை திண்டுக்கல் ஸ்ரீ பக்மகாரீச்வரர் தேவாலயத்திலுள்ள கல்யாணமண்டபத்தில் மைலாபூர் வழக்கறிஞர் திருப்புகழ்மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் 'திருப்புகழ் தேவாரம் முதலியவைகளின் பெருமையை யெடுத்துக்கூறவும் அவ்வப்போது பக்தவர்களுடன் திருப்புகழ் தேவாரம் பாடியும் விஜயம் செய்திருந்த வாளமான ஜனங்களை பக்தி பரவசமாகச் செய்தார்கள். இப்பெரியார் அனேக இடங்களுக்குச்சென்று இவ்விதம் பக்தியை ஊட்டினால் நம் தர்மநாட்டில் நாஸ்திகம் பரவாது என்று அனேகருக்கும் ஏற்பட்டிருக்கும் ஓர்வித புற்றுணர்ச்சி போற்றத்தக்கது. (கமது நிருபர்)

திருக்குற்றாலம் (தென்காசி)
ஸ்ரீ லியாஸ்பூஜா மஹோற்சவம்

மடாதிபதி ஸ்ரீமத் சேஷவீர பீட பரிஷ்டாபனாசார்ய ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீவிஸ்வாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்னும் பிரஸித்திபெற்ற ஸ்ரீ மௌனானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஸ்ரீ பிரமாதியூ ஆனிமீ 17 உ ஸ்திரவாரத்திற்குச் சரியான 1939ஞ ஜூலைமீ 1உ திருநெல்வேலி ஜில்லா, தென்காசி தாலூகா, திருக்குற்றால சேஷத்திரத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ தக்ஷாத்தியேய மந்திரத்தில் ஸ்ரீ வியாச பூஜா மஹோற்சவம் ஆரம்பிக்கப்பட்டது.

ஏராளமாய் ஆஸ்திகஅபிமானிகள் விஜயம்செய்திருந்தார்கள். வியாச பூஜையை முன்னிட்டு ஸ்ரீ தக்ஷாத்தியேய மந்திரம் அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. (ஒ. நி.)

திருவடமருதூர்
மஹா ஷோடசி ஹோமயாகம்

ஜகத்குரு ஸ்ரீமத் சங்காசார்யஸ்வாமிகள் அவர்களுடைய அதக்ரஹத்தையும் பிரபுக்களுடைய உதவியையும் அவலம்பித்து திருவிடமருதூர் என்கிற மத்யார்ஜுன க்ஷேத்திரத்திற்கு வடக்கிலுள்ள கல்யாணபுரத்தில் பிரமாதியூ ஆனிமீ 32உ (16—7—39) ஆரம்பித்த ஷோடசி என்னும் மகாஸோமயாகத்தை கடத்துவதாய் ஏற்பாடு செய்து இருப்பதால் ஆஸ்திக மஹா ஜனங்கள் வந்து தர்சித்து யக்ஞேச்வரப் பிரஸாதத்தை அடையவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். 14–7–39 பூர்வாங்கம், 15–7–39 சாலா பிரவேசம் 16–7–39 யாகஸங்கம், ப்ரயோக விராமகாலங்களில் பாகவத தத்வமும் யாக விஷயமான உபன்யாஸங்களும் நின்தோறும் சேங்காலிபுரம் ப்ரஸங்கபாணு ஸ்ரீவைத்தினேக சாஸ்திரிகள் வைதிக தர்மாக்ஷக ப்ரவசன தூரீண ஸ்ரீ அனந்தரும தீக்ஷிதர் இன்னும் அனேக வித்வன்களாலும் கடைபெறும்.

நாராயண வாஜபேயீ.

திருச்சினாப்பள்ளி
வைதிக தர்ம ஸபா

திருச்சி, ஸ்ரீரங்கம் ஆஸ்திக அபிமானிகளின் கூட்டம் 3–7–39 தென்னூர் மங்களவிலாசத்தில் கூடிற்று. ஸ்ரீ டி. கே. பலசுப்ரமணிய அய்யர் B.A., கலைமவஹித்தார். ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்காசாரியர் ஸ்வாமிகள் திருச்சிக்கு விஜயம் செய்ததை முன்னிட்டு அவ்விஜயம் ஸுபகரர்த்தமாகவும், அவர்களது அனுக்ரஹத்தை முன்னிட்டுகொண்டு திருச்சியில் 'வைதிக தர்ம ஸபா' என்ற ஒரு சபையை ஸ்தாபிக்க முடிவுசெய்யப்பட்டது.

ஸநாதன தர்மத்தைப்பற்றியும், ஹிந்து மதக் கல்ஞாதத்தைப்பற்றியும், பிரசாரம் செய்து, மதகர்ம போதனைகளுப்புகளை ஏற்படுத்தவும், மதத்தத்துவங்களை அறிக்கைகள் மூலம் பரப்பவும் ஸபா வேலைசெய்ய முடிவு செய்திருக்கிறது. ஒரு வாசகசாலையும், ஒரு புஸ்தகசாலையும் ஸபாவில் ஏற்படுத்தப்படும். பல முக்கிய இடங்களில் "சமூஸ்கிருத வகுப்புகளை" ஏற்படுத்த நிர்மானித்திருக்கிறது.

சபைக்கு ராவ்பகதூர் ஸ்ரீ ஜி சாம்பசிவ சாஸ்திரிகள் தலைவர். ஸ்ரீ இ. எஸ். ராமசாமி அய்யர் உபத்தலைவர் ஸ்ரீ ஸி. எஸ். என் ராம சேஷய்யர் காரியதரிசி ஸ்ரீ ஜி. வி. வியாக்ரண அய்யர் பொக்ஷிஷதார். ஒரு தனி நிர்வாகக்கமிட்டியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

கோயம்புத்தூர்
ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்.

கோயப்புத்தூர் ரத்னசபாபிராத்தில் ஜில்லா போர்டு இஞ்ஞினீர் ஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் கிருஹத்தில் 1939ஞ ஜூன்மீ 7உ முதல் 25உ வரையில் ராமாயணபாராயணம், சேங்கலிபுரம் பிரும்மஸ்ரீ வைதிகதர்ம ஸம்ரக்ஷகப்ரவசன தூரீண அனந்தராமதீக்ஷிதர் அவர்களால் காலையில் பாராயணமும், இரவு உபன்யாஸமும் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டது. கடைசி தினத்தில் ஸ்ரீ ராம பட்டாபிஷேகம் கல்யாண கடைபெற்றது.

அநேக ஆஸ்திகர்களின் வேண்டு கோட்கிணங்கி ஸ்ரீமத் பாகவதம் 22—6—39உ முதல் பிரம்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்களால் கோயம்புத்தூர் ஸ்ரீசங்கர மடத்தில் உபன்யாஸம் நடத்த வருகிறது.

அநேகமாய் ஜூலைமீ 15உ ஸ்ரீமத் பாகவதசமாப்தி கடைபெறும். ஆயிரக்கணக்கில் ஜனங்கள் தினசரி விஜயம் செய்துவருகிறார்கள்.

காலம் சென்ற
பண்டிட் பூ. பி. கிருஷ்ணமாசாரியார்
பல விடங்களில் அனுதாபக் கூட்டம்

அனந்தபூர் அத்வைத ஸபாவில்

காலம் சென்ற பண்டிட் பூ. பி. கிருஷ்ணமாசாரியார் அவர்கள் அகால மரணத்துக்கு அனுதாபம் கட்டவேண்டி அனந்தபூர் அத்வைத ஸபா ஆதரவில் 3–7–39 ஒருமாபெருங் கூட்டம் கூடிற்று. ஸ்ரீ எம். கோவிந்தராவ் தலைமை வஹித்தார். யாவரும் எழுந்திருந்து நிற்க, ஒரு அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (கி. நி.)

ஆலயப்பிரவேச மஹோதா

திருச்சி வைதிகதர்ம ஸபாவின் ஆக்ஷேபனை

திருச்சி 'வைதிக தர்ம ஸபாவின்' கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேறியது —

"ஹரிஜனங்களை தேவாலயங்களுக்குள் விடுவதற்குத் தற்சமயம் சர்க்கார் உத்தேசிக்கும் முயற்சியையும், சட்டத்தையும் இச்சபை பலமாக ஆட்சேபிப்பதுடன், இதனால் ஹரிஜனங்கள் என்று கருதப்படும் இண்டாக சமூஹம் விருத்தியடைந்து விடப்போவதாக இவை பதற்கிறது" என இக்கூட்டம் அபிப்பிராயப்படுகிறது.

திப்பிராஜபுரம்.

ஸ்ரீ பிரும்மவித்யா ஸபா :— 9-7-39உ ஸ்ரீவிக்கிறப்பாண்டியம் கோபால சாஸ்திரிகள் உபன்யாஸம் ஸபையின் ஆதரவில் இனிது நடந்தேறியது. எல்லா ஜீவராசிகளுக்கும், அதிலும் மனுஷ்யன் தக்ஷாஹமானஸுகத்தைக்காண்கிறானோ ஆனால், நிரதிசயமான, சாஸ்வதமான சுகம் எது என்று தெரிந்து கொள்ளாமல் திண்டாடுகிறான் என்றும், தைத்திரீயத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம் ப்ரும்மானந்தத்தின் லவலேசத்தின் அம்சத்தில் கூட எந்த சுகத்தையும் ஆனந்தத்தையும் ஈடு சொல்ல முடியாது என்றும் அதற்கு பிரும்மவித்தை அவச்யம் என்றும், சகல சாஸ்திர சாராம்சத்தை ச்லோக பூர்வமாகவும், ஸரளமாகவும் ஸ்ரீமத் பகவத்கீதை மூலமாய் பகவான் கம் பொருட்டு வெளியிட்டிருக்கிறான் என்றும், முதல் 6 அத்தியாயத்தால் கர்மகாண்டத்தின் சாகரம் சத்தையும், அதாவது நிஷ்காம்ய மாய் சாஸ்திரோக்தமான காரியங்களை கம் செய்தே தீரவேண்டுமென்றும், அடுத்த 6 அத்தியாயத்தினால் உபாஸனகாண்டத்தின் சாராம்சத்தை வெகு தெளிவாக பக்தி புரஸ்ஸரமாக யாவத் கர்மாவையும் செய்யவேண்டும் என்றும், கடைசி 6 அத்தியாயத்தினால் ஞானகாண்டத்தின் சாராம்சத்தைத்தசுத்தி த்வாரா மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடையவேண்டும் என்றும், வெகு தெளிவாகச்சொல்லியிருக்கிறதென்றும் சொன்னர். பிறகு ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள அக்ரூர் என்கிற மந்திரியானவர் கம்ஸனால் ராமகிருஷ்ணாளை அழைப்பதின்பொருட்டு கோகுலம் அனுப்பப்பட்டபொழுது மத்ய மார்க்கத்தில் யோசித்யேயமான பரமகாருண்ய மூர்த்தியான தஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலன கிமித்தம் அவனியில் அவதரித்த வான சாக்ஷாத் எந்த ஒப்ப ஆநிபுருஷன், வாசுதேவன், ஸ்ரீமன் நாராயணன் உண்டோ! அவரையே கண்கூடாக கம் பார்க்கலிக்குமா என்கிற பலவிதமான சந்தேகங்களுடன் சிந்தித்தக்கொண்டு போனாலும், ஸ்ரீ கிருஷ்ணபகவான் அக்ரூருடைய ஆகமனத்தின் சூழ்ச்சியைத் தெரிக்தவராய் அக்ரூரை வரவேற்று, கட்டி அணைத்து ஆசீர்வாதம் செய்து பரம பாகவதோத்தமனை ஷை அக்ரூரை அவருடைய பக்தி விசேஷத்தக்காக புகழ்ந்தகொண்டாடினர் என்றும், பரமதாஸ்திகர்கள்கூடகவுள் ஒருவர் உண்டுஎன்பதை ஒப்புக்கொள்ளாமல் முடியாது. ஏனென்றால், கம்முடைய சரீரத்தில் 9 த்வாரங்கள் இருப்பினும், காத்து வெளியில் போகாமல், ஜீவகலத்தில் இருக்கிறதென்றும் கெருப்பை அணைக்கக்கூடிய ஜலஸமுத்திரத்தினிடையே படபாக்னி இருக்கொண்டிருக்கிறதென்றும், மண்மயமான இந்த பிருத்வியானது கறைத்து போகக்கூடியதாயிருந்தாலும், ஜலத்தை உள்ளே உடையதாக இருக்கிறதென்றும், ஆகையால், காசாஸுஷி அவயவங்களை படைத்த ஈசம் சகலத்தையும் ஸர்வேச்வராதீனத்தில் நடைபெறும்படியாக நடத்திகொள்ளவேண்டுமென்றும்" உபன்யஸித்தார்.

(கமது நிருபர்)

புதிய டெப்டிகலெக்டர்

குடந்தை டெப்டிகலெக்டர் ஸ்ரீ. வி. சிங்காரவேலு முதலியார் மாற்றப்பட்டிருப்பதால் அவருக்குப் பதில் மிஸ்டர் ஜே. இ. மேவஹார் ஐ. வி. எஸ். நியமிக்கப்பட்டிருக்கிறார். புதிய டெப்டிகலெக்டர் ஜூலைமீ 3உ சார்ஜ் வாங்கிக்கொண்டார்.

215302

1939
Oct 26
Dr. Bruce Bidwell

381

654

REGD. No. M. 2913.

ARYADHARMAM
TAMIL WEEKLY.
Estd. 1915

ஆரியதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1½
தனிப்பிரதி ஒரணு.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு- 24 | கும்பகோணம் பிரமாதி-ஞ ஆடி-மீ 4உ 1939-ஞ ஜூலை-மீ 20உ | வா-29

"கடவுள் ஒருவரே" தான்

இவ்விஷயத்தில் ஆஸ்திகருக்குள் அபிப்பிராய பேதம் இல்லை

மதங்கள் பல ஏற்பட்டது எதனால்?

அவைகள் ஆத்ம தரிசனமென்னும் ஒரு லட்சியத்தைத்தான் போதிக்கின்றன

இந்த பிரபஞ்சத்தையும் இந்த பிரபஞ்சத்திலுள்ளவைகளையும் சிருஷ்டித்தவர் ஒருவர் உண்டென்றும், அவர்தான் கடவுளென்றும், சர்வதேசங்களிலும் மக்கள் கூறுகின்றனர். இந்த விஷயத்தில் ஆஸ்திகருக்குள் அபிப்ராய பேதம் கிடையாது.

ஆகவே, கடவுள் பக்தியுடனிருக்க வேண்டியது மனிதர் கடமை. நம்மை சிருஷ்டித்த கடவுளின் ஆக்ஞை அதை பகவத் பக்தியுடன் கூடிய வாழ்க்கையை நடத்த வேண்டியவர்களுக்கு கடவுள் நம்பிக்கை இருத்தல் வேண்டும். மனிதர் ஒவ்வொரு வரும் இந்த உலகத்தில் தெய்வ அம்சத்துடன் பிறந்தவர்கள் என்பதை அறிய வேண்டும். ஆனால், மானிடர்களுக்குள் தோற்றத்திலும், குணத்திலும் வித்யாசமிருக்கிறதானும், சகல மனிதர்களும் ஒரே மாதிரி என்றும், சகல மனிதர்களும் ஒரே மாதிரியாக ஏன் இல்லை என்றும் நினைக்கலாம். மக்களிடையே காணப்படும் அந்த வித்யாஸங்களும் பகவானுடைய லீலைதான்.

மனிதர்களுக்குள் வித்தியாசமிருப்பதால், மக்கள் மனோபாவத்திற் கேற்றவாறு மதங்கள் சமைக்கப்படவேண்டியது அவசியமாகி விட்டது. ஆகவேதான், உலகத்தில் மதங்கள் பல தோன்றின. ஆனால், எல்லா மதங்களும் ஒரு லட்சியத்திற்காகவே தோன்றியவை. ஆத்மதரிசனமென்னும் ஒரு லட்சியத்தைத்தான் சர்வ மதங்களும் போதிக்கின்றன.

மனிதர்கள் உண்ணும் உணவை எடுத்துக் கொள்வோம். மனிதருக்கு ஏற்படும் பசி ஒன்றுதான். அந்த பசி தணிய உணவு மனிதர்களின் ருசிக்கு ஏற்றவாறு மாறுபட்டிருக்கலாம். அதுபோலவேதான் மதங்களின் உட்கருத்தில் வித்தியாசமில்லை. வெளித் தோற்றத்தில் தான் வித்தியாசம் காணப்படுகிறது.

குழந்தைகள் பெற்றோரிடம் அன்புடன் விளையாடுவதை நாம் பார்க்கிறோம். எல்லாக் குழந்தைகளும் சொல்லிக் கொடுத்ததுபோல ஒரேவிதமாகவா விளையாடுகின்றன? ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு மாதிரி விளையாடுகிறது. எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரி விளையாடத் தொடங்கிவிட்டால் அந்த விளையாட்டில் அழகு இல்லாமல் போய்விடும். அப்பேர்ப்பட்ட விளையாட்டினால் பெற்றோருக்கு ஆனந்தம் ஏற்படாமல் போய்விடும். அதுபோலவேதான் மதங்களும்.

இலவசப் பிரசுரம்.

ஸ்ரீ சங்கர சரிதை
(தமிழ்— சமஸ்கிருதம்— ஆங்கிலம்.)
50. பக்கங்கள் கொண்டது.
அழகிய படங்களுடன் விரைவில் வெளி வரும்.
அச்சில் இருக்கிறது.
பிரசுரகர்த்தா:— ஆசிரியர் L. S. மணி அய்யர்.

உயர்ந்தோர் கூறும் உறுதிமொழிகள்

ஆன்மா ஆண்டவனை அடையும்போது

அது புது வாழ்வை பெறுகிறது

நாம் நிகேனை நோக்கி நடந்துகொண்டிருக்கிறோம். நாம் முன்னினும் உண்மையாக வாழ்பவராவோம். அவரது அருகிலேயே நமது நன்மை உறைகின்றது; அவரைவிட்டு விலகிச்செல்லும்போது, நாம் தனிமையாயிருப்பதாக உணர்கிறோம்; வாவாக் கோடைக்கு வருகிறோம். அவரிடத்திலே நமது ஆன்மா தங்கும்போது, தீமை யென்பது சிறிதும் இல்லாத ஞான பூமிக்கு நமது ஆன்மா ஏறுகிறது; அங்கே ஞானக் கட்சி குடிகொண்டு உறைகின்றது; கோபமும் ஆசையும் துன்பமும் அங்கே நிற்க மாட்டா; அங்கேதான் அது உண்மையாக வாழ்கின்றது. ஏனெனில் பகவான் இல்லாத (பகவானது இருட்பை உணராத) நமது தற்கால வாழ்வு உண்மையான வாழ்வின் நிழலேயாகும்; அதன் போலியேயாகும். பகவானை விட்டுப் பிரிந்த வாழும் நமது வாழ்வு நிலையினின்று பிழுத்த தத்தளிக்கும் வாழ்வே. ஆன்மா சிறகுகளை இழந்த பக்ஷியைப்போலத் தவிக்கும் வாழ்வாகும். ஆன்மா பகவானிடமிருந்து எழுதலின், அது தன் இயல்பான நிலையில் அவர்மீது போய்ப்பூண்டு, அவரோடு கலந்து ஒன்றுக விரும்பவேண்டும். ஆன்மா பகவானைச் சாரும்போது, அது ஒரு புது வாழ்வைப் பெறுகின்றது. உண்மையான வாழ்வினை அடக்கியாள்பவரது முன்னிலையில் இருப்பதை உணர்தலின், மற்றொன்றையும் வேண்டுவதில்லை என்கிறேன். இதை அனுபவித்தவர்க்கு நான் சொல்வதின் உண்மை தெரியும் என்று ஒரு பிரபல ஆசிரியர் எழுதுகிறார்.

மதுரையில் நடந்த ஆலயப்பிரவேச நாடகம்

அங்கு நடந்த விஷயங்கள் என்ன?

பிராமணர்களும் சைவர்களும் கோவிலுக்குப் போவதில்லை

வாலிப பட்டர் ரத்தம் கக்கி உயிர் நீத்த விபரம்

பொற்றுமரை குளத்தில் நாடாரை பேய் அடித்த ஸம்பவம்

"நான் கண்டதும் கேட்டதும்"

[கும்பகோணம் ஹிந்து தர்ம வீர ஜதாவின் காரியதரிசியான ஸ்ரீமான் எ. சுப்பு சாமி அய்யர், பி. ஏ. சமீபத்தில் மதுரைமாநகரம் சென்று அங்கு ஆலயப் பிரவேச அலங்கோலத்தினால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை கேரில் கண்டு "ஆர்யதருமம்" வாசகர்களுக்கு உண்மை விவரங்களை விளக்கி விவரித்திருக்கிறார். அவர் எழுதியுள்ள கடிதத்தை கீழே பிரசுரித்திருக்கிறோம்.

ஆசிரியர் ஆ—த.]

மதுரை-ஸ்ரீ மீனாக்ஷிகோவிலில் ஜாதி இந்துக்களில் சில விலக்கப்பட்ட ஜாதியார்கள் (ஹரிஜனங்கள், நாடார்கள்) பிரவேசித்து சிட்டாகபிகடனம் செய்யப்பட்டதில், [illegible] ஆச்சர்யத்தினாலும், காங்கிரஸ்காரர் அத்தனைதன மஹா ஜனங்களும் பிரதாபருத்ரரும் [illegible] எது உண்மை? எது பொய்? என்ற விஷயங்களை தெரிந்து கொள்ளமுடியாமல் இருந்ததால் வரஸ்தவத்தை அறிய வேண்டி. நான் 16-7-39 காலை மதுரைக்கு சென்றேன். ஜாக்கிரதையாக எல்லா விஷயங்களையும் விசாரணை செய்து கண்டதையும் கேட்டதையும் இங்கு விவரிக்கிறேன்.

நான் மதுரையில் ரயில்வே ஸ்டேஷனை காலை 7-45 மணிக்கு அடைந்ததும் ஒரு ஜட்கா வண்டியில் ஏறி எனது நண்பர் ஒருவர் வீட்டிற்கு போனேன். போகும் போது அந்த வண்டிக்காரனை இந்த ஊரில் ஏதாவது விசேஷம் உண்டா? 8ந்தேதி இந்த ஊரில் என்ன நடந்தது? பின்னல் ஏதாவது விசேஷங்கள் உண்டா? என்று கேட்டேன். முஸல்மானை 60 வயது உள்ள—அந்த ஜட்கா வண்டிக்காரன் மனம் உருகி மிகுந்த தக்க த்துடன், ஸ்வாமி! இந்த அநியாயத்தை கேட்கிறீர்கள். எங்கள் ஊர் மீனாக்ஷி எங்கள் ராஜ்யத்தை விட்டே ஓடிபோய் இன்று 9 நாள் ஆகிறது. எங்கள் கரத்தின் உயிரும் அழகும் அவருடன் போய் விட்டது. அவளுக்கே இத்தமாதிரி வந்திருக்கும் போது நமக்குஎன்னதான்வருதென்று சொன்னான் ஏனப்பா! நீ சொல்வது ஒன்றும் புரியவில்லையே! என்றதற்கு ஐயா!" கீழ் ஜாதியான ஒரு கூட்டத்தாரை வக்லே வைத்தினதய்யர் ஸ்ரீ மீனாக்ஷி கோவிலுக்குள் 8-ந் தேதி காலை 8½ மணி சுமாருக்கு அழைத்து சென்றதாயும், அப்போது பலமான எதிர்ப்பு ஏற்படுமென்று தெரிந்தே கோவிலுக்குள் பலமான போலீஸ் பந்தோபஸ்து ஏற்பாடு செய்து தயாராக வைக்கப் பட்டிருந்ததாயும், தவிரவும், அப்போது அந்த கூட்டத்தாருடன் சில முகம்மதியர்களும் நெற்றியில் தூளி வீபூதியை பூசிக்கொண்டு கோவிலுக்குள் சென்றதாயும் சொன்னான். இந் தேதிக்கு பிறகு ஜாதி இந்துக்கள் எப் போதும் போல் கூட்டம் கூட்டமாக கோவிலுக்கும் போகிறதில்லை என்றும், மிகவும் சொல்பமாகவே கோவிலுக்குப் போவதாக சொன்னான்.

கும்பகோணமிருந்து என்னுடன் கூடவே வந்த ஒரு நண்பரும் நானும் மத்தியானம் ஆகாரம் செய்து கொஞ்சம் சிரம பரிகாரம் செய்துகொண்டு பல வீதிகளின் தோற்றங்களையும் அங்கங்கே ஜனங்கள் பேசி கொள்ளும் விஷயங்களையும் கேட்டுக் கொண்டு சென்றோம். முதலில் கோவிலின் கீழ் வாசலே அடைத்ததும் நாங்கள் முதலில் தேங்காய் பழம் விற்கும் கடைக்காரர்கள் எல்லோரையும் விசாரித்தோம். சுமார் 6 போ்கள் 8-ந்தேதி என்ன நடந்ததென்றும், அதன் பிறகு என்ன ஆயிற்று என்றும் சொன்னார்கள். டனக்குள் ஒருவரைப் போல் யாவரும் சொல்லவதால், கோவில் அதிகாரிகளாலும், போலீஸாராலும் கோவில் பலமாக பாரா செய்யப் பட்டதாயும், இப்போதும் பாரா செய்யப் பட்டு வருவதாயும், தங்கள் வியாபாரம் பூராவும் ஏற்கனவே இருந்தில் பாதிக்கு குறைந்த விட்டதாயும், ஜாதி ஹிந்துக்களும், பக்த ஜனங்களும் கோவிலுக்கு வருவதை பகிஷ்காரம் செய்து விட்டது தான் தங்கள் வியாபாரம் குறைந்ததற்குக் காரணம் என்று சொன்னார்கள். ஜாதி இந்துக்களும், பக்தர்களும் ஒருவராகலாமாக, கோவிலே விலக்கப் பட்ட ஜாதியார்கள் புகுந்த அசுத்தம் செய்து விட்டதாகச் சொல்லி பகிஷ்காரம் செய்து விட்டதாயும் மதுரைக்கு சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள நாடார்கள் பெரும் பான்மையாகவும் பஞ்சமர்கள் ஏதோ சிலர்களே தவிர கோவிலுக்கு வந்து போவதாகவும், அவர்களும் அதேமாய் தேங்காய் பழங்கள் வாங்கி போவதில்லை என்றும் சொன்னார்கள். ஒரு கடைக்காரர் இனிமேல் பழம் தேங்காய் விற்க வேண்டியதில்லை பீடியும், சிகரேட்டும் வாங்கி வைத்தால் நல்ல வியாபாரம் ஆகும் என்று சொன்னார்.

பிறகு கோவிலுக்குள் சென்றேன். நான் 1935 வருஷத்திலும், பிறகு 1937 நவம்பர் மாதத்திலும், மதுரைக்கு போயிருக்கிறேன். அந்த இரு தடவைகளிலும், பகலிலும் ராத்திரியிலும் கோவில் பூராவையும் நன்றாக பார்த்திருக்கிறேன். இப்போது நான் கோவிலுக்குள் சென்றதும் முன் தடவைகளில் பார்த்த எல்லா விஷயங்களும் பூராவும் மாறுதல் அடைந்திருப்பதாகத் தோன்றியது. வீடில்லாத பிராமணர்களும், பரதேசிகளும் அங்கங்கே பலஇடங்களில் கூட்டங் கூட்டமாக உட்கார்ந்திருப்பது வழக்கம். இப்போது நான் பார்த்ததில். சில பிராமணர்களும் பரதேசிகளும் பிரகாரத்தில் உட்கார்ந்திருந்தார்கள். ஆனால், நாடார்கள் கூட்டமாக வந்து கோவிலுக்குள் உட்கார்ந்திருந்தார்கள். நான் இரு சில்லரை கடைக்காரர்களை விசாரித்ததில் அவர்களில் ஒருவர் ஹரிஜனங்கள் இந்த பிரஸித்தமான கோவிலில் உள்ளே பிரவேசித்தபோது தான் கூட இருந்து பார்த்ததாயும், அப்போது வக்கீல் வைத்தினதய்யர் சில நாடார்களையும், பஞ்சமர்களையும் இன்னும் சில நாடோடிகளையும் கோவிலுக்குள் நிர்பந்தமாக கூட்டிபோனதாயும், அவர்களை குளத்தில் ஸ்நானம் செய்யச் சொன்னதாயும், பிறகு அவர்களை அம்பாள் கோவிலுக்குள் அழைத்தபோனதாயும், அப்போது போலீஸார் கோவிலுக்குள் தயாராக வைக்கப்பட்டிருந்ததாயும், அப்போது ஒரு போட்டோ பிடிப்பவர் அவ்விடம் படம் பிடித்துக்கொண்டு இருந்ததாயும் சொன்னார். காலை 8-45 மணிக்கு இவர்கள் பிரவேசம் செய்தகாலத்தில் ஸகஜமாகவே அதிகமான ஸ்வாமி தரிசனம் செய்யக்கூடியவர்கள் கோவிலுக்குள் இருந்திருக்க முடியாது. வெளி பிரகாரம் வடக்குவாசல் ஓமாயுள்ள மற்றொரு கடைக்காரன் சொல்லியதில் ஜாதி இந்துக்கள் இப்போது வராமல் நின்றுவிட்டதுதான் தன் வியாபாரம் குறைந்ததற்கு காரணம் என்று சொன்னான். நாங்கள் போகும்போது சிவகங்கை எஸ்டேட்டின் சூப்ரெண்டெண்ட் அவர்களை தேவஸ்தானம் ஆபீசுக்குள் இது விஷயமாக விசாரிப்பதற்காக போய் பார்த்தேன். அவருடன் சம்பாஷித்ததில் "ஜாதி இந்துக்கள் கோவிலே பகிஷ்காரம் செய்துவிட்டதாயும், மகா-ஸ்ரீ சிவகங்கை ராஜா அவர்களின் கட்டளை" நடந்து வருவதாயும்; கட்டளை நிறுத்தப் படுமா? நடந்துவருமா? என்று தன்னால் சொல்லமுடியாமல் இருப்பதாயும்" சொன்னார்.

நாங்கள் கோவிலுக்கு வெளிப்புறமுள்ள தெற்கு சித்திரவீதி லக்ஷ்மிபவன் ஹோட்டலுக்குச் சென்று ஹோட்டல் சொந்தக்காரரான S. R. அய்யருடன் பேசிக்கொண்டு இருந்தோம். இந்த ஹோட்டலானது தெற்கோபுர வாசலின் எதிரில் இருக்கிறது. S. R. அய்யர் சொல்லியதில், வக்கீல் A. வைத்தினதய்யர் அவர்கள் 8ந்தேதி காலை 8½-மணி சுமாருக்கு ஹரிஜனங்கள், நாடார்களுடன் கோவிலுக்குப் போனதை தான் பார்த்ததாயும், அப்போது சுமார் 4 மணிக்கு இவர்கள் பிரவேசம் செய்தகாலத்தில் ஸகஜமாகவே அதிகமான ஸ்வாமி தரிசனம் செய்யக்கூடியவர்கள் கோவிலுக்குள் இருந்திருக்க முடியாது. வெளி பிரகாரம் வடக்குவாசல் ஓமாயுள்ள மற்றொரு கடைக்காரன் சொல்லியதில் ஜாதி இந்துக்கள் இப்போது வராமல் நின்றுவிட்டதுதான் தன் வியாபாரம் குறைந்ததற்கு காரணம் என்று சொன்னான். நாங்கள் போகும்போது சிவகங்கை எஸ்டேட்டின் சூப்ரெண்டெண்ட் அவர்களை தேவஸ்தானம் ஆபீசுக்குள் இது விஷயமாக விசாரிப்பதற்காக போய் பார்த்தேன். அவருடன் சம்பாஷித்ததில் "ஜாதி இந்துக்கள் கோவிலே பகிஷ்காரம் செய்துவிட்டதாயும், மகா-ஸ்ரீ சிவகங்கை ராஜா அவர்களின் கட்டளை" நடந்து வருவதாயும்; கட்டளை நிறுத்தப் படுமா? நடந்துவருமா? என்று தன்னால் சொல்லமுடியாமல் இருப்பதாயும்" சொன்னார்.

மேற்படி தம்பிரான் அவர்கள் தானும் மற்றும் பல சைவ அபிமானிகளும் சேர்ந்து அச்சிட்டு இருக்கும் ஒரு அறிக்கையை எங்களிடம் கொடுத்தார். நிஜமே என்று இவ்விதமான அநீதிகளே காங்கிரஸ்காரர்கள் தெய்வத்தினிடத்திலும், சாஸ்திரத்தில் நம் பிக்கையுள்ள தன்போன்ற நிருகூட்டத்தார் பேரிலும், செய்வார்கள் என்று தான் எதிர்பார்க்கவில்லை என்றும், 8 தேதி முதல் தான் கோவிலுக்கு போகிறதில்லை என்றும், கோவில் கட்டளையை நிறுத்தி விடுவதா? என்ன செய்கிறது? என்று மடாதிபதி அவர்களின் உத்திரவை தான் எதிர்பார்த்து இருப்பதாயும், ஸ்ரீ மீனாக்ஷி ஆலயத்தில் கீண்ட காலமாக தங்கள் மடத்திற்கு இருந்துவந்த உரிமைகளை இப்போது பறிமுதல் செய்திருப்பதாலும், கோவிலுக்குத் நிரும்பவும் ஸம்பு ரோக்ஷணை ஆதி பரிசுத்தம் ஏற்படுதிறவரையில் தரிசனம் செய்வது மகா பாபமான விஷயம் என்றும்", தெரிவித்தார்.

அன்று சுமார் 4 மணிக்கு நாங்கள் மீண்டும் கோவிலுக்குள் வடக்கு வாசல் வழியாக சென்றோம். எல்லா பிரகாரங்களையும் சுற்றிப்பார்த்தோம். சில பாட்டைசாரிகள் அங்கும் இங்கும் உட்கார்ந்திருந்தார்கள். வெளிப்பிரகாரத்தில் உள்ள பாடசாலையின் முன்புறம் 2 பிராமணர்களும், ஒரு முடவனும், ஒரு வயோதிகன் பிராமணர் அல்லாத வயோதிக கடந்த விஷயங்களைப் பற்றி நாங்கள் விசாரித்தோம். நாங்கள் ஏற்கனவே, விசாரித்த விஷயம் பூராவும் உண்மை என்று தெரிந்து கொண்டோம். அப்போது அங்கே உட்கார்ந்திருந்த கொண்டி பிராமணன், தான் உள் பிரகாரத்தில் நிருக்குளத்தின் மேல்புறம் உட்கார்ந் திருக்கும்போது, புதிதாய் கோவிலுக்குப் பூஜைக்கு வந்துள்ள 35 வயதுள்ள பலிஷ்டமான ஒரு வாலிப பட்டர், ஸ்வாமி கோவிலுக்குப்போய் பூஜை செய்து விட்டு வந்தபோதும், காளி கோவில் சன்னதியில் வந்தவுடன் திடீரென்று கீழே விழுந்ததாயும், அவர் வாய் மூக்கு வழியாக ரத்தம் கக்கியதாயும், ஜனங்கள் ஓடி வந்து அவர் முகத்தில் ஜலத்தை தெளித்ததாயும், கொஞ்ச நேரம் கழித்து அவர்கண்ணெவிழித்ததாயும் பின்புறம் நடந்து யாரோ ஒங்கி படரியில் அடித்ததாயும், தான் இனி பிழைக்க மாட்டேன் என்று சொன்னதாயும், செல்லி முடித்தவுடன் உயிர் போய் விட்டதாயும், உடனே கோவில் நிர்வாக அதிகாரி அவ்விடம் வந்து பிரேதத்தைத்தூக்கி அவர் காரில் போட்டுக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு போனதாயும், இந்த விஷயம் பூராவும் தான் கூட இருந்து பார்த்தேன்," என்றும் சொன்னார்.

பிறகு நாங்கள் நிரும்பவும் கோவிலுக்குள் சென்று பொற்றுமரை குளத்திற்கு சென்றோம். அவ்விடம் உட்கார்ந்திருந்த ஒரு கிழவனை விசாரித்ததில் அவன் ஒரு நாடார் என்றும், தனக்கு கோவிலுக்குள் போகும் வழக்கமில்லாத வழக்கத்தை செய்ய இஷ்டமில்லை என்றும், ஹரி ஜனஸேவா சங்கத்தினரும், வக்கீல் எ. வைத்தினதய்யர் அவர்களும் தங்கள் வகுப்பாரிடம் மேல் வகுப்புக்கு கொண்டு போவதாய் சொல்லி அழைத்து வந்தாயும், இங்கு வந்த பிறகு தங்களையும் பறையர்—பள்ளர்களையும் ஒன்றாக சேர்த்து கோவிலுக்கு அனுப்பினதாயும் பிராமணர்களும் மற்றவர்களும் இப்போது கோவிலுக்கு வராமல் நின்று விட்டதாயும், தங்களுக்கு ஒரு வராகசாப்பாட்டுக்குக் கோவில் அதிகாரியும் காங்கிரஸ்காரர்களும், உதவி புரிந்து வருவதாயும் சலிக்கிழமை அன்றையதினம் தன்னை சேர்க்க ஒரு நாடார் கோயிலுக்கு போய் அம்மனை தரிசனம் செய்துவிட்டுவரும்போது பொற்றுமரை குளத்தின் மேல் புறத்தில் அவரை பேய் அடித்து விட்டதாயும், வாயினும் மூக்கினும் ரத்தம் வந்து அவர் இறந்து போய் விட்டதாயும் கோவிலுக்கு வெளியே பிரேதத்தை கொண்டு போகிற வரையில் உயிர் இருப்பதாக சொல்லும்படி தோவில் அதிகாரிகள் ஏற்பாடு செய்ததாயும், இன்னும் இரண்டொரு நாடார்களும் இந்த ஆலய பிரவேசம் ஏற்பட்டதை முதல் இறந்து போய் விட்டதாயும் சொன்னார்.

பிறகு அவ்விடமிருந்த சுமார் 40 வயதுள்ள ஒரு சைவ வெள்ளாளரை விசாரித்ததில் "அவர் தன் மேற்படி கோவிலில் பழைய வேலைக்காரர் என்று சொன்னதுடன், தேவகோட்டை அழகப்ப செட்டியார் மேற்படி கோவிலில் தர்மகர்தாவாய் இருந்த காலத்திலும், அதன் பிறகு இதே காலம் வரையிலும், இவ்வித அக்ரமங்கள் நடந்ததில்லை என்று சொல்லி தக்கப்பட்டார். ஜாதி இந்துக்கள் அல்லாத கீழ் ஜாதியார்கள் கோவிலுக்குள் பிரவேசித்தபோதுதான் கூட இருந்து பார்த்ததாயும், வக்கீல் A. வைத்தினதய்யர்கள் சில கீழ் ஜாதி ஸ்திரீகளே பொற்றுமரை குளத்தில் ஸ்நானம் செய்து கூட்டத்துடன் அம்மன் சன்னதிக்கு கூட்டிபோனதாயும், அப்போது காலை வேளையாதலால் ஜாதி இந்துக்கள் யாருமே கோவிலில் இல்லை என்றும், கலகங்களோ எதிர்ப்புகளோ இல்லாத சமயத்தில் நிறுத்த வீட்டில் நிருடர்கள் புகுந்தது போல் இவர்கள் புகுந்ததாயும், போலீஸ் பந்தோபஸ்து அவசியமே இல்லாமல் இருந்தும், முன் ஜாக்ரதையாக இருந்ததாயும், இந்த கூட்டத்தார் வரும்போது கோவில் பட்டர்களும் கோவிலில் இல்லை என்றும், இவர்கள் கீழ் ஜாதி யாருக்கு பூஜை செய்த பிரஸாதம் கொடுக்கமாட்டார்கள் என்று எதிர்பார்த்தே கோவில் அதிகாரி சிலருக்களை வெளியிடத்திலிருந்து தருவித்து வைத்திருந்ததாயும், இப்போது கோவிலில் உள்ள சில பரிசாரகர்கள் கர்பகிளப்பு களில் வேலை செய்து வந்தவர்களே கொண்டு வந்திருப்பதாயும் சொன்னார்.

நாங்கள் கோவிலுக்குள் சென்று ஸ்ரீ மீனாக்ஷி அம்மனை தரிசித்தோம். எங்கள் கண்களுக்கு "ஒரு கல்சிலை கன்னங்கரேலென்று நின்றதாகவே, தோன்றியது. எப் போது பார்த்தாலும் பக்தர்களின் உள்ளத்தில் ஆனந்தம் பெருகி ஆனந்தவள்ளமாகக் காட்சி கொடுக்கும் அம்மையின் ரூபம்மாறுபட்டு, களையற்று தோன்றியது. சொல்ல முடியாத துக்கத்தின் நாங்கள் வெளியே வரும்போது ஒரு வயோதிகர்—காவி வஸ்திரதாரி ஸந்யாஸி எங்களுடன் கூட வந்தார் ஐயா! இது கலிகாலத்தின் அதிசயம் 8 தேதி 8-30 மணிக்குத் தீண்டாத ஜாதியார்கள் கோவிலுக்குள் பிரவேசிக்கும் போது என் தாய் மீனாக்ஷி ஒரு திருமியாகக் கோவிலுக்குள் இருந்து வெளியே ஓடினாள் இந்த ஊர் வெங்கட்டராமய்யர் அவர்களின் தாயார்—ஒரு வயது சென்ற கிழவி தினம் பொற்றுமையில் ஸ்நானம் செய்து, அம்மனை தரிசித்த பிறகு தான் ஆகாரம் உட்கொள்வது வழக்கமென்றும், அந்த அம்மாள் ஸ்நானம் செய்து அம்மனை தரிசிக்கும் போது என் அம்மை சிறு பெண்ணாக கோவிலில் இருந்து வெளியே ஓடினாள். அப்போது எதிர்பட்ட பரட்டியான அந்த உத்தமியிடம் பாட்டீ நான் ஓடுகிறேன் நீ கோவிலுக்குள் போகாதே என்று சொல்லிக்கொண்டே ஓடி மறைந்தாள். கீழ் ஜாதியார்களும் கூட்டமாக உள்ளேபுகுந்து சோபையற்ற ஸ்மசானி க்யமில்லாமல் இருந்த கல்வடிவத்தை பார்த்து சென்றார்கள்," என்று சொன்னார். உங்கள் விசாரணையின் முடிவில் பக்நிமயமான மேல் கண்ட விஷயத்தை அந்த அன்பர் சொன்னவுடன் ஒன்றும் தெரியாமல் நிரும்பி எங்கள் ஜாகைக்கு சென்றோம் அன்று இரவு சனனிகளும் பக்தர்களும் ஒரு கூட்டம் போட்டிருப்பதாகத் தெரிந்ததால் இரவு 7½ மணிக்கு மேற்படி கூட்டத்திற்கு சென்றோம். அங்கு சுமார் 2000 ஜனங்களுக்கு மேல் கூடியிருந்தார்கள்.

கோயமுத்தூர்

ஸ்ரீமத் பாகவத உபந்யாசம்.

சேய்காலிபுரம் வைதீக தர்ம ஸம் ரக்ஷக ப்ரவசன தூரீண ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் "ஸ்ரீமத் பாகவத" உபன்யாசத்தை கோவை ஸ்ரீ சங்கர மடத்தில் ஆனிமீ 8 தேதி முதல் 26 தேதி வரை நடத்தி வந்தார். தினசரி ஆயிரக்கணக்கில் ஆஸ்திகர்கள் உபன்யாசம் கேட்டு வந்தார்கள்.

டிக்ஷ்ரை பாகவதம் ஆரம்பிப்பதற்கு முன் பாதாரப்தர் அவர்கள் கோயமுத்தூரில், ஏஜண்டு ஜாமாபணத்தைப் பக்ஷாஹாரமாக நடத்தி, ஸ்ரீராம பட்டாபிஷேக மஹோத்ஸவத்தை இனிது முடித்தார். ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுக்கு கோயம்முத்தூர் வாசிகள் ஓர் அபிநந்தனப் பத்ரத்தை வாசித்தளித்தனர். பல்வித மரியாதைகளை ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுக்குச் செய்து கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

(ர. நி.)

புதுக்கோட்டை

ஸ்ரீ வைதிக வர்த்தினீ ஸபா:

இச்சபையின் ஆதரவில் 31—5—39 முதல் பரம்ய பரவசஞ் ஸ்மிருதிபூஷண வாகூர் பிரும்மஸ்ரீ V. S வேங்கட்ராம சாஸ்திரிகளவர்களால் "யோக வாஸிஷ்டம்" என்ற வேதாந்த கிரந்தம் இவ்வூர் கீழ 3-ம் வீதியில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஸந்நிதியில் பிரதினம் மாலை 7 மணி முதல் 8-30 வரை ப்ரவசனம் செய்யப்பட்டு வருகிறது. அந்த கிரந்தம் 3,200 ஸுலோகங்களடங்கியது. ஆத்ம தத்வத்தையும், ஆத்ம ஞானமடையும் உபாயத்தையும் உபதேசிப்பது. எப்படிப் பட்ட பெரிய விஷயத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல ஸ்ருதி, ஸ்மிருதி ஆதாரங்களுடன் திருஷ்டாந்தங்களையும், ஸுக் கதைகளையும் கொண்டு ஸுலபமாக மந்தச்ரோதாக்களும் க்ரஹிக்கும்படி உபந்யஸிக்கிற பெருமையை என்னென்று சொல்வது? ச்ரோதாக்களின் பாக்யம் என்று தான் சொல்ல வேண்டும். ஆகையால் தினே தினே ச்ரோதாக்கள் அதிகரிப்பது ஆச்சரியமில்லை.

நிற்க, 11-7-39உ முதல் மெ. பெரியவர் காலேயே மெ. பெருமாள் கோவிலேயே காலை 7 மணி முதல் 8 மணி வரை "ஸ்ரீ ப்ருஹதாரண்யக உபநிஷத்" பாஷ்ய ப்ரவசனமும் நடைபெறுகிறது. (ர நி)

ஆலயப்பிரவேச கண்டனம்

நாடெங்கும் கூட்டங்கள்

கும்பகோணம்

"மதுரை ஸ்ரீ மீனக்ஷியம்மன்கோவில், ஸ்ரீ கள்ளழகர் கோவில்களில் தீண்டாதாரை ரஹஸ்யமாகப் புகவிட்டு கோவிலை அசுத்தம் செய்ததைக் கண்டிப்பதற்காகவும், சென்னை மந்திரிசபை இயற்ற உத்தேசிக்கும் பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டிக்கவும்", குடந்தையிலுள்ள பிரமுகர்கள் பலருடைய முயற்சியின்மேல் 15உ சனிக்கிழமை மாலை ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோயிலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நகரத்திலுள்ள எல்லா வகுப்பு ஜனங்களிலும் ஏராளமான பேர்கள் வந்திருந்தனர். பண்டிதர்களிலும் பலர் விஜயமாகியிருந்தனர்.

மஹாமஹோபாத்யாய பண்டிதராஜ ஸ்ரீ உ. வே. ஆர். வி. கிருஷ்ணமாசார்யஸ்வாமிகள் அக்கிராஸனம் வகிக்கவேண்டுமென்று ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி அய்யரால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீ. கடராஜய்யரால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ ஆசாரியர் அக்கிராஸனம் வஹித்தார்கள்.

கலெக்டர், இக் கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துக்கூறி, "மதுரையில் கடந்துள்ள அக்கிரமமானது மிகக் கொடியதாயிருப்பதாயும், இங்கு கூடியுள்ள ஜனங்கள் தக்க ஆலோசனை செய்து மதுரை தாஸில் அதற்கு உதவி செய்வதுடன், இவ்வூரிலும் தகுந்த கையை ஆபத்து ஏற்படாமல் தடுக்கவேண்டும்" என்று [illegible] கொண்டார்.

பிறகு ஸ்ரீமான் அட்வகேட் எஸ். கிருஷ்ணஸாமி அய்யங்காவர்கள் கீழ்க்கண்ட தீர்மானங்களைப் பிரேரேபித்தார்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

மதுரை ஸ்ரீ மீனாட்சி கோவிலில் 8-ந்தேதி ஆதித்திராவிடர்கள் அத்து மீறி நுழைந்ததை இக்கூட்டம் உண்மையாகக் கண்டிக்கிறதென்றும், ஆலய அதிகாரி ஆதித்திராவிடர்களைக் அனுமதித்தை கண்டிக்கிறதென்றும், சுப்ப இதஹத்திற்குள் பிரவேசிக்க வேண்டிய கதவுகளைத் தகார்த்த அரசாங்க முறையைக் கண்டிக்கிறதென்றும், ஸர்வ ராகரீக அரசாங்கமும் இந்த மாதிரி முறையை அனுமதித்திருக்காது என்று இக்கூட்டம் அபிப்பிராயப்படுகிறதென்றும், கூட்டத்தில் தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறியது

தீர்மானங்களைப் பிரேரேபித்த அவைகளின் கருத்துக்களை ஸ்ரீமான் அய்யங்கார் விரிவாகக் கூறி, "ஆலயப்பிரவேச அவஸர சட்டமானது யாவரையும் நிடுகிடச்செய்து விட்டதாயும் இதை நிவர்த்திக்கப் படுபடுபட நாம் ஒற்றுமையுடன் வேண்டுமென்றும்", குறிப்பிட்டார்.

தீர்மானங்களை ஆமோதித்தும் ஆதரித்தும் ஸ்ரீமான்கள் மாஜி ஸப்மாஜிஸ்டேட், அய்யாத்துரை அய்யர், கனபதி சாஸ்திரி, கவிரத்னம் பஞ்சாபகேச சாஸ்திரிகள், ராமாநுஜதாதாசாரியார், குப்புஸாமி அய்யர், கடாஜய்யர், நாராயணாசு, திருஞான ஸம்பந்தி அய்யர், ராமராவ் முதலிய பலர் பேசினர். காங்கிரஸ் மந்திரிஸபையின் செய்கையை அவர்கள் பலமாகக் கண்டித்து ஆலயப்பிரவேசத்தை எதிர்க்க உடல், பொருள், ஆவி ஆகியவற்றை நியாகம் செய்ய நாம் தயாராக இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினர்.

அக்காலனுகிபதியால் தீர்மானங்கள் ஓட்டுக்குவிட்டு ஏகமனதாக பலத்த கரகோஷத்தினிடையே நிறைவேறியது. தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் 9-மணிக்கு இனிது முடிந்தது.

மற்றொரு மாபெருங் கூட்டம்.

16உ ஞாயிற்றுக்கிழமை மாலை 7-மணிக்கு ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவிலிலேயே மற்றொரு கண்டனக்கூட்டம் நடைபெற்றது. முதல் நினைத்தைவிட அதிகம் கூட்டம் வந்திருந்தது.

அட்வகேட் ஸ்ரீமான் வி. வி. ஜகந்நாதாசாரியர் அவர்கள் கூட்டத்தில் தலைமை வஹித்தார்கள்.

முதல்காள் நிறைவேறியதுபோல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அட்வகேட் ஸ்ரீமான் எம். கே. வைத்யநாதய்யர், அக்னிஹோத்ரம் தாதாசாரியர், ஸ்ரீ. அய்யாத்துரை அய்யர், முதலிய பலர் வெகு அழுத்தமாகக் கண்டித்துப் பேசினர்கள். வந்தனோபசாரத்துடன் இரவு 9-மணிக்கு கூட்டம் கலைந்தது.

நகரின் பல பாகங்களில் கண்டனக் கூட்டங்கள்

17உ நிங்கட்கிழமை மாலை 7-மணிக்கு ட்ரீட்படித்தையில் ஆலயப்பிரவேசக் கண்டனக்கூட்டம் நடைபெற்றது. கூட்டம் வெகு அதிகமாக இருந்தது. ஸ்திரீகளும் ஏராளமாய் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அட்வகேட் ஸ்ரீமான் ஏ. ஜி. சங்கரய்யர் அவர்கள் அக்கிராஸனம் வஹித்தார்கள். தலைவர் முகவுரையில் "தற்போது தர்மங்களுக்கு ஸர்க்கார் நிர்பந்தத்தால் ஏற்பட்டுள்ள கஷ்டத்தை" விளக்கினர். கவிரத்னம் ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் பேசுகையில், தீண்டாதார் ஆலயப்பிரவேசம் வேண்டவில்லை யென்றும், தீண்டாதாருக்கு ஆலயப்பிரவேசத்தினுல் சரஸ்திரியமாக நன்மை நிடைக்கா தென்றும், அவர்களுடைய கீழ்மைக்கேற்ற படித் தொழுவதற்கு வேறு தேவதைகள் உண்டென்றும், இவர்களுக்கு லௌகிக லௌகர்யங்கள் செய்துகொடுத்து தனிக் கோவில்கள் கட்டிக்கொடுத்த முன்னேறச் செய்யலாமென்றும், இப்போது மந்திரிகள் செய்யும் வழியானது சேஷமகமானது அல்லவென்றும் குறிப்பிட்டார்.

பிறகு திருவிடமருதூர் ஸ்ரீமான் ஒப்பு ஸாமி அய்யர் தாம், "கேற்று மதுரைசென்று கேரில் கண்ட அநுபவங்களைப்பற்றிக் குறிப் பிட்டு, அங்கு ஆலயப்பிரவேச எதிர்ப்பு வெகு அதிகமாயிருப்பதாயும், மீனக்ஷிகோவில் உயிற்று விளங்குவதாயும் ஜனக்கூட்டம் தரிசனத்துக்குப் போவதில்லை யென்றும், ரயர் ஜாஜி ஸ்ரீனிவாஸன்தான் அதிகம் போய் வருவதாயும்", சொன்னர்.

பிறகு ஸ்ரீமான் பஞ்சாபகேசய்யர், "ஆலய தத்வங்களை விளக்கி ஒவ்வொரு ஜாதி யாருடைய மனோநிலைமைக் கேற்றபடி வியவஸ்தைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதை ஸர்க்கார் அழிக்கக்கூடாதென்று பேசினர்.

ஆர்யதர்மம் ஆபீஸ் மானேஜரான ஸ்ரீமான் ராகராஜய்யர் ஆங்கிலத்தில் பேசுகையில், "மந்திரி ஸபையின் போக்கைக் கண்டித்தும், ஹைதராபாத் ஸத்யாக்ரஹத்தை தடுக்கும் சென்னை மந்திரிஸபையானது உண்மையில் ஹிந்துமத கேஷமத்தை நிர்காகப் பாடுபடுவதாகச் சொல்லமுடியாதென்றும், நமக்கு, மனிதர்களும், பணமும் இப்போது தேவையென்றும், ஸனாதன பத்திரிகைகளை ஆதரிக்கவேண்டுமென்றும்", கேட்டுக்கொண்டார்.

நண்டிவனத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் சுந்தரேசசர்மா அவர்கள், "மந்திரிஸபையின் ராஜீய மதக், கொள்கைகளைப்பற்றி வெகு ரஸமான தோரணையில் கண்டித்து", விரிவாகப் பேசி ஜபில் செல்லவும், அவச்யமானால் உயிர்விடவும் யாவரும் தயாராக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

தஞ்சை தேவாலயங்களை அதன் ஸொத்துக் காரரும் டிரஸ்டியுமான பிரின்ஸ் அவர்கள் பஞ்சமர்களுக்குக் நிறந்துவிட்டதைக் கண்டிப்பதாகத் தலைவரால் ஒரு நீர்மானம் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாக ஸபையில் அங்கிகரிக்கப்பட்டது.

ஸ்ரீமான் கடராஜய்யருல் வந்தனோபசாரம் கூறப்பட்டு ஸபை கலைந்தது.

ஆதித் திராவிடர்கள் ஆலயப் பிரவேசம்
தஞ்சையில் கண்டிக்கப்பட்டது
பெரிய கண்டனக் கூட்டம்.

தஞ்சையிலுள்ள ஆஸ்திகர்களுடைய முயற்சியின் மேல் 16உ ஞயிற்றுக்கிழமை மாலை ஸ்ரீ காமாக்ஷியம்மன் கோவிலில் ஓர் பெரிய பொதுஜனக் கூட்டம் கடைபெற்றது.

பஞ்சமர் பிரவேசிக்கப் போவதாக வதந்தி பரவியிருந்தபடியால், கோவில் வாசலில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் [illegible] இருந்தனர். கோபுரவாசலில் போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருந்தது.

கோவிலுக்குள் நடந்த பொதுக் கூட்டத்திற்கு நகரப் பிரமுகர்கள் பலரும், பொது ஜனங்களும் ஏராளமாக வந்திருந்தார்கள். காங்கிரஸ் வாதிகளும் சிலர் காணப்பட்டனர்.

உள்ளூர் பிரபல வக்கீலும், நிறந்த ஸனாதனியுமான ஸ்ரீமான் டி. கோதண்டராமய்யங்கார் எம். ஏ. எம். எல். அவர்கள் அக்கிராஸனம் வஹித்தார்கள். தலைவர் முகவுரையில் "மதுரை ஸம்பவத்தைக் கண்டித்தும், அவஸரச் சட்டத்தை ஆக்ஷேபித்தும், பேசியதுடன், தஞ்சைப் பெரிய கோவில் மூதலிய வைகளில் பிரின்ஸ் அவர்கள் அநுமதி கொடுத்ததையும் பலராகக் கண்டித்தார்.

பிறகு ஜகத்குரு ஸ்ரீ சங்காசாரிய ஸ்வாமிகளவர்களின் நியமனத்தின் பேரில் இக் கூட்டத்திற்கு வந்திருந்த, "ஆர்யதர்மப்" பத்திராதிபரான பிரம்மஸ்ரீ அக்னிஹோத்ரம் கோபால தேசிகாசாரியர் அவர்களை ஸபை பேர்களுக்கு அறிமுகம் செய்து வைத்துப் பேசும்படி தலைவர் கேட்டுக் கொண்டார்.

பிரம்மஸ்ரீ கோபாலதேசிகாசாரியர் சுமார் ஒரு மணிக்கு மேலாக, "காங்கிரஸ் ஆட்சியின் விபரீதச் செயல்களையும், பிடிவாதத்தையும், எல்லா வகுப்பினருக்கும் அது செய்துவரும் தீங்குகளை அதற்குப் பொது ஜன ஆதரவுக் குறைத்து விட்டதையும், குறிப்பாக ஹிந்து மதத்திற்கு அது இழைத்துவரும் கேடுகளையும் விரிவாக தக்க ஆதாரங்களுடன் குறிப்பிட்டு, இப்போது ஏற்பட்டுள்ள ஆலயப் பிரவேசமானது வர்க்காரின் பின் பலம் பெற்றிருப்பதால், அதிகார துஷ்பிரயோகம் செய்யப்படுவதைப் பலமாக கண்டித்தும்" பேசினர்.

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க).

அரியலூரில் ஒருலம்பவம்

ஆதித் திராவிடர்கள் கண்களை இழந்தனர்

ஆலயத்தில் ஆண்டவனை தரிசிக்கும்போது

(நமது சொந்த நிருபர்)

அரியலூர் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்திலிருக்கும் ஈஸ்வரன் கோவிலில் 15—7—39 ஐந்து ஆதித்திராவிடர்கள் ஆண்டவனை வழிபட வேண்டிச் சென்றார்கள். அவர்களில் மூவர் தயங்கி கோவிலின் வெளியே தங்கி விட்டார்கள் மற்ற இரு ஹரிஜனர்கள் தணிந்து கோவிலின் உள்பக்கம் சென்றனர். உடனே அவர்கள் கண்களை இழந்து விட்டார்களாம். அவர்களை உடனே அந்த மூன்று ஆதித்திராவிடர்கள் பள்ளூலம் வீட்டில் கொண்டுபோய் சேர்த்தார்களாம். இந்தச் சம்பவத்தைக் கேட்டு இப்பக்கத்தில் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது

ஹிந்துமத பரிபாலன போர்டு இனி மறைந்துவிடும்

தற்போதைய ஹிந்துமத பரிபாலனச் சட்டத்தைத் திருத்த சர்க்கார் சமீபத்தில் ஒரு மஸோதாக் கொண்டுவருவார்கள். இதில் மடங்கள் செல்வகளில் பரிபாலன விஷயமும் சேர்க்கப்படுமென்று தெரிகிறது. கோவில்கள் மானேஜ்மெண்ட் பூராவையும், சர்க்கார் எடுத்துக்கொள்ள உத்தேசித்திருக்கிறார்கள். கோவில் அர்ச்சகர் முதலியவர்களுக்குத் திருப்பதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இன்ஸ்டிட்யூட்டில் பயிற்சியளிக்கப் படுமென்றும் கூறப்படுகிறது.

மேலும் திருக்க மஸோதாவின்படிக் கற்போதுள்ள ஹிந்துமத பரிபாலன போர்டுகள் எடுக்கப்பட்டுவிடுமென்றும், அதற்குப் பதிலாக சர்க்கார் இலாகாவாகவே வேலை நடைபெறுமென்றும் தெரிகிறது.

அந்தக் கொடிய நோய் பரவுகிறது.

மதுரையை நகரில் ஆலயப்பிரவேச நாடகம் நடிக்கப்பட்டது. அதில் நடித்த அதே நடிகர்கள் அதை திருச்சிக்கோட்டை லால்குடி தாலுகா பூவாளூரில் நடத்தக் காட்டினார்கள். அதை மீண்டும் தஞ்சையில் அதை நடித்தார்கள். ஒரே நாடகம். ஒரே நடிகர்கள். ஒரே பட்டு. ஒரே வாசகம். தமிழ் தெரியாத அம்மையார்—ராமேஸ்வரேரு தமிழ் நாட்டில் தமிழர்களுக்கு—உபதேசம் செய்த வீட்டு கம் குடந்தை மாகநருக்கு விஜயம் செய்தார்கள். அம்மையார் உபதேசத்தைக் கேட்க வேண்டி ஆட்கள் சேகரிக்க வேண்டி இருந்தது. ஏனெனில், அதே சமயத்தில் ஸநாதனத்தலைவர்கள் சொற்பொழிவுக ளுக்கேட்க அன்பர்கள் ஆயிரக்கணக்கில் கூடியிருந்தார்கள்.

மீண்டும் தேர்தலுக்கு நிற்பேன்

இந்தப் பிரச்னையின் பேரில் காங்கிரஸுக்குச் சவால்

ஸ்ரீ கே. ஆர். வேங்கட்டராமய்யர் இப் பிரச்னையின் பேரில் தேர்தலுக்கு மீண்டும் நிற்க உத்தேசித்திருக்கிறார். மதுரை நகரவாசிகள் யாவரும் அவரை ஆதரிக்க முடிவு செய்திருக்கிறார்களாம்.

மதுரை வக்கில்கள் எதிர்ப்பு

"இந்த ஆலயப் பாதுகாப்பு மஸோதா அரசியல். ஆட்சேபகமான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆலயங்களின் அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுப்பது ஆபத்தை விளைவிக்கும். அதிகாரிகள் இஷ்டமே பக்தர்களின் இஷ்டமன்று",..... என்ற முடிவான அபிப்பிராயத்தை மதுரை வக்கீல்கள் சங்கத்தில் ஆலயப் பாதுகாப்பு மஸோவை ஒட்டி விவரித்தபொழுது வெளி யிட்டார்கள்.

மதுரை வக்கீல்கள் சங்கத்தின் விசேஷக் கூட்டம் ஜூலை 15 தேதி பிற்பகல் சங்கக் காரியாலயத்தில் கடைபெற்றது. ஸ்ரீமான் K. R. வேங்கட்டராமய்யர் கலைமை வகித்தார். ஏராளமாய் அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

பல அங்கத்தினர்கள் ஆலயப்பிரவேச மஸோதாவைக் கண்டித்து மேற்கண்டபடி அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள்.

ஸ்ரீமான் N. S விஸ்வநாதய்யர் பிரேரேபிக்க, ஸ்ரீ K. V. சுந்தரேஸ்வர அய்யர் ஆமோதிக்க, ஸ்ரீ V. R. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அங்கிகரிக்க தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது.

ஸ்ரீமான் ஏ. வைத்தினுதய்யர் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர்.

முடிவில் தீர்மானத்துக்கு ஆதரவாக 40 பேர்களும், எதிராக 8 பேர்களும் ஓட்டுக் கொடுத்தார்கள். மதுரை வக்கீல்கள் யாவரும் இந்த முடிவைக் கேட்டு ஆனந்த முற்றார்கள்.

(நமது விசேஷ நிருபர்).

காங்கிரஸ் தலைவர் காங்கிரஸைக் கண்டிக்கிறார்

"அதை நான் ஆதரிக்க முடியா"

மதுரை வக்கீல் ராஜிநாமா

மதுரையில் பிரபல நீதி வழக்கறிஞரும், பிரபல காங்கிரஸ் தலைவரும், மதுரை ஜில்லா போர்டில் காங்கிரஸ் பிரதிநிதியாக அங்கம் வஹித்தவரும் ஸ்ரீ கே. ஆர். வேங்கட்டராமய்யர் ஆலயப் பிரவேசத்தைக் கண்டித்து காங்கிரஸிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டார்.

இவருடைய ராஜிநாமா வைக் கேட்டு மதுரை ஜில்லா காங்கிரஸ்காரர்கள் கதிகலங்கி போயிருக்கிறார்கள்.

ஸ்ரீ கே. ஆர். வேங்கட்டராமய்யர் காங்கிரஸ் அங்கத்தினர் பதவி, தலைவர் பதவி, ஜில்லா போர்டில் வகித்தவரும் அங்கத்தினர் பதவி யாவையும் ராஜிநாமா செய்துவிட்டார்.

"ஸ்ரீ மீனாட்சிகோவிலில் ஆதித்திராவிடர்கள் அத்து மீறி நுழைந்தது, சத்தியம், அஹிம்சை முதலியவற்றை அனுசரித்தாக இல்லை யென்றும், சென்னை காங்கிரஸ் சர்க்கார் இவ் விஷயத்தில் நடந்து கொண்ட முறையானது ராஜி நாமா செய்யவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி விட்டதென்றும்" கூறினர்.

ஸ்ரீ பிரகதீஸ்வரன் கோவிலில், பிரதமமந்திரி கனம் C. ராஜகோபாலாசாரியாருக்கு நீண்ட ஆயுளோ ஆண்டவன் அளிக்க அர்ச்சனை நன்கு நடந்தது.

ஆலயப்பிரவேச அவசரச்சட்டம்

சென்னை கவர்னர் பிறப்பித்திருக்கிறார்

"சர்க்கார் அனுமதியில்லாமல் யார்மீதும் வழக்குதொடரமுடியாது"

சென்னை ஆலயப் பிரவேச பாதுகாப்புச் சட்டம் ஒன்று சென்னை சர்க்காரால் சென்ற வாரம் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டது ஞாபகமிருக்கலாம். சென்னை சட்டசபைகள் ஆகஸ்டமாதத்தில்தான் கூடுகின்றன. ஆகையால், சட்டசபைகள் கூடும்வரையில் அதிகாரிகளுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காக, அந்த சட்டத்தின் ஷரத்துகள் எல்லாவற்றையும் கொண்ட அவசரச் சட்டமொன்றை சென்னை கவர்னர் லார்ட் எர்ஸ்கின் 17-7-39 பிறப்பித்திருக்கிறார்.

அவசரச் சட்டத்தின் வாசகம் பின்வருமாறு:—

"சென்னை சட்டசபைகளின் கூட்டம் இப்போது நடைபெறவில்லை.

ஏற்கனவே சென்னை மாகாணத்தில் நிறைவேற்றப் பட்டுள்ள ஆலயப்பிரவேச சட்டத்தின் லக்ஷியத்தையும் நோக்கத்தையும், அமையியற்றுவதற்காக சில் கல்லெண்னத்துடன் சிலகாரியங்கள் செய்திருக்கிறார்கள். அவர்கள் மீது சட்ட பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எற்படாவண்ணம் பாதுகாப்பளிக்கவேண்டிய ஒரு கிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மஸோதாவையோ, அல்லது வேறு தகுதியான சட்டத்தையோ, சட்டசபைகள்வரை நித்தம் நிறைவேற்றும் வரையில், மேற்கூறிய வர்களை சட்டபூர்வமான நடவடிக்கைகளினின்றும் பாதுகாப்பளிப்பதற்கான அவசியம் இப்போது ஏற்பட்டிருப்பதால், உடனே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமென்று சென்னை கவர்னர் கருதுகிறார்.

1935ம் வருஷத்திய இந்திய சர்க்கார் சட்டத்தின் 88வது ஷரத்து 1வது உப ஷரத்தின் பேரில் கவர்னர் ஜெனரலின் அனுமதிபெற்று சென்னை கவர்னர், இந்த 1939ம் வருஷத்திய சென்னை ஆலயப் பிரவேச பாதுகாப்பு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறார்.

தஞ்சையிலும் ஆலயப் பிரவேசம்

90 கோவில்களில் அக்ரமம் நடக்க திறந்து விடப்பட்டது.

ஜூலை மீ 16 தஞ்சை நகர் பெரிய கோவில் ஸ்ரீ பிரகதீஸ்வர் திருக்கோவிலில் ஆதித்திராவிடர்கள் அத்து மீறி நுழைந்தார்கள். தஞ்சை நகரெங்கும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆஸ்திகர்கள் (எல்லா வகுப்பினரும்) இதை வன்மையாகக் கண்டித்து வருகிறார்கள்.

இந்தக் கோவிலும், மற்றமுள்ள இதர 90 கோவில்களும் தஞ்சை ரீனியர் பிரின்ஸ் கனம் ராஜாம் சாகேப் அவர்கள் ஆதிக்கத்தக்குட்பட்டது. இந்த இளவரசை கார்கார் கட்டாயப்படுத்தி தேவாலயங்களை ஆதித்திராவிடர்களுக்குத் திறந்து விடும்படி செய்து விட்டார்கள்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஸ்ரீ ஆடி-மீ 4உ

ஆலயங்களை அழிக்க அவஸரச் சட்டமா?

மதுரையில் முன்னேற்பாடான சூழ்ச்சியுடன் நடந்த அக்ரமத்தை நினைத்தற்கே கொள்ள, சென்னை பிரதமமந்திரி, உலகமே கைக்கக்கூடிய வழிகளெல்லாம் பின்பற்றத் தணிவுகொண்டுவிட்டதாகத் தெரிகிறது. மதுரை அநீதிக்கு உடந்தையராயிருந்தவர்களும் அதிகரி டெப்டி முதலிய வர்களுக்குப் பதவாபராதம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக கனம் மஹாராஜா அவர்கள் பதவாபராதிகளுக்கு மன்னிப்பளித்ததாகவும் தெரிகிறது. இதற்காக கனம் மந்திரி கொண்டுவந்த மசோதாவானது இப்போது சட்டஸபைக் கூட்டமில்லாததால் அது அமுலுக்கு வரமுடியவில்லை. அது நடப்பதற்குள், மதுரையில் கார்பம் மிஞ்சிப்போய் அவ்வளவுக்காரர்களின் ஆத்திரமூட்டுவதற்கு நீதிதவறியவர்களிலிருந்து ஆபத்து கேடும் போலிருக்கிறது. இதற்காக கனம் மந்திரி அவர்களுக்கு ஆசாரியர், வைஸ்ராய், கவர்னர் ஆகிய வெள்ளை அதிகாரிவர்க்கத் தலைவர்களே அண்டி அவர்கள்மூலம் அந்த மசோதாவை உடனே ஆர்டினன்ஸ் சட்டமாக அமுலுக்கு கொண்டுவந்துவிட்டார்.

இவ்வளவு படபடப்பும், கார்யசக்தியும் பெற்றுள்ள கனம் மந்திரி, "எட்டு நாளில் சட்டம்" என்று பேசியதில் அதிசயமில்லை. நமது சட்டசபையின் நிலைமையைப் பார்த்தால் "எட்டு நிமிஷத்தில்" என்றுகூட அவர் சொல்லியிருக்கலாம்.

இப்படி அவஸரத்துடன் ஆர்டினன்ஸ் இயற்றியது எதை வெளிப்படுத்துகிறது? தார்மிக ஸமூஹத்தின் இணைபற்ற தலைவராக விளக்கிவரும் ராஸ்ஸாஹிப் ஸ்ரீ கடேசய்யர் அவர்களுடைய பரிபூர்ணமான வெற்றியே இது என்று சொல்லத்தடையில்லை. நியாயஸ்தலங்களில் அவர் தொடுத்துள்ள நீதிநிறைந்த வழக்குகளில் ஜயம் ஏற்பட்டு ஆலயப்பிரவேசச் சூழ்ச்சி தடைப்படுமென்பது நிச்சயமாகிவிட்டது. இந்த நிதியினாலேயே கனம் மந்திரி வைஸ்ராயிடமும், கவர்னரிடமும் ஓடி, இதுவரையில் நமது மாகாணத்தில் கூண்டும் கேட்டிராததான அவஸரச் சட்டத்தை இயற்றவேண்டியதாயிற்று. ஸ்ரீ கடேசய்யர் ஒரு நீதிபுருஷர் எடுத்துக்கொண்ட சட்டலம்புகளுக்குட்பட்ட முயற்சிகளை தடைபண்ணச் சட்டவடிக்கையை ஓர் பெரிய கவர்ன்மெண்ட் எடுத்துக்கொண்டிருப்பதிலிருந்து, மந்திரிசபையின் மனச்சாட்சி தெளிவுபெயுமூர் ஸ்ரீ கடேசய்யரின் இணையற்ற வெற்றியும் வெளியாகிறதல்லவா?

மேலும், பொதுஜன அபிப்பிராயப்படியே ஆலயப்பிரவேசம் நடத்தராகச் செய்யப்படும் பிரசாரமும் வெறும்மாயைதானென்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

பொதுஜன அபிப்பிராயப்படி கார்யம் செய்கிறது உண்மையானால், ஏன் இந்த மாதிரி இழிவான வழிகளில் செல்ல எண்ணவேண்டும்? இதிலிருந்து, நியாயமான சட்ட வழிகளேவிட்டு, நிர்ப்பந்தமானதும், பலாத்காரமானதுமான அவஸரச்சட்ட அடக்குமுறை பிரயோகத்திலுலேயே தேவாலயங்களைப் பாழாக்க முற்பட்டிருப்பது ஸ்பஷ்டமாகி விட்டது. அது தார்மிகர்களின் ககுடியில் பூர்ணமான கியாய பலம் இருப்பதை வெளிப்படுத்தி விட்டது.

அவஸரச்சட்டமென்பது மிக்க அஸாதாரணமானதும், ஸாளிக்க முடியாததுமான ஸங்கட ஸந்தர்ப்பங்களிலேயே இயற்றப்படுவது கல்லாகுமி நடத்தும் காடுகளிலும் நடக்கும் நீதியாகும். சென்னை ஸர்க்காருக்கு இப்போது அத்தகைய அவஸர ஆபத்தி என்ன வந்து விட்டது. இந்த ஆர்டினன்ஸை உடனே பண்ணுவதற்கில் வானம் இடிந்து விழுந்திருக்குமா? யாரைக் காப்பதற்காக இந்த ஆர்டினன்ஸ் தடபுடல்? ஜர்மன், ஜப்பான் விமானங்கள் தோன்றி காங்கிரஸ் ஆஃபீஸ் காட்டில் வெடிகுண்டு போட்டனவா? எம்டன் யுத்தக்கப்பல் வந்து விட்டதா? பிரதம மந்திரி தவிக்க வேண்டியதாயும், அவருக்கு உதவி செய்ய, வைஸ்ராய், கவர்னர்களை அழைக்க வேண்டியதாயும் என்ன நெருக்கடி, தேசத்தில், இப்போது ஏற்பட்டிருக்கிறது? இது தான் ராஜதர்மமா? அலயத்தைக் கெடுத்த குற்றவாளிகளைத் தப்புவிக்க முயற்சிப்பது புனிதமான நீதி தர்மத்திற்கு தரோஹம் செய்வதாகதா? மேலும், அவசரமாக,கெட்ட எண்ணமில்லாமல் பிசகு பண்ணிவிட்ட ஸர்க்கார் ஊழியனைப் பாதுகாக்க அவசியமாயிருக்கலாம். அதில் இரண்டு அம்சம் முக்யமாகும். குற்றமிழைத்தவன், அக்குற்றத்தை அறியாமையால் தவறுதலால் செய்திருக்க வேண்டுமென்பது முதல் அம்சமாகும். மறுபடியும், அவன் அக்குற்றத்தை வேண்டுமென்றே செய்யக்கூடாது. இதுதான் பாதுகாப்புச் சட்டங்களின் நோக்கமாகும். ஆனால், கனம் மந்திரி பிறப்பித்துள்ள பாதுகாப்புச் சட்டமோ மிகவிசித்திரமானது.

அது, வேண்டுமென்றே ஹடமாகச் சட்டத்தை மீறிக்குற்றம் செய்தவர்களைப் பாதுகாக்க முற்படுகிறது. இம்மட்டுமா? இந்த பாதுகாப்பு பலத்தைக் கொண்டு, மேல் மேலும், சட்ட வரம்பில்லாமல் எக்கக் குற்றம் செய்தாலும் அதற்குப் பரிகாரம் தேடுவதற்கு தடையுண்டாம். இது உலகத்திலேயே கேட்டிராத அபூர்வமான பாதுகாப்பு முறையல்லவா?

ராஜ்ய தர்மத்தையும், பிரஜை க்ஷேமத்தையும் கருதி கடத்தப்படும் எந்த தேசத்திலும், எந்த அவஸர ஸந்தர்ப்பத்திலும், இத்தகைய நீதியற்ற பாதுகாப்புச் சட்டத்தை இயற்ற ராஜ்தந்திரிகள் துணியமாட்டார்கள்.

இத்தகைய அக்ரமுறை ஏற்பட்டதனால் நமது மாகாண வாஸிகளின் தலைவிதிவசமேயாகும். இந்த பயங்கர முறை மறையவேர,மாறவேர, பகவான் ஸங்கல்பிக்கும் காலத்தை ஆஸ்திகர்கள் எதிர்பார்த்த நிற்பதைத் தவிர வேறு வழியிருப்பதாக தெரியவில்லை.

தெய்வசக்தியை ரக்ஷிக்க வழி

சக்தி ஆகர்ஷணம் செய்யலாம்

ஓர் ஆகம சாஸ்திர நிபுணர் எழுதுகிறார்:-

காங்கிரஸ் ஆஃபீஸில் தேவாலயங்களில் பஞ்சமர் பிரவேச நிமித்தமாக அங்குள்ள தெய்வசக்திக் குன்றுறைவோ, அழிவோ ஏற்படக்கூடியதாயிருப்பதைக் கண்டு ஆஸ்திகர்கள் மிகுந்த கலக்கமடைந்திருக்கின்றனர். இந்த நெருக்கடியான ஸந்தர்ப்பத்தில், பிரப்பங்களில் இருந்து வருகிற தேவதா சக்தியை எப்படியாவது காப்பாற்ற வழியுண்டா வென்பதைப் பற்றி பல ஆஸ்திகர்கள் நித்தலே செய்வதாகத் தெரிகிறது. இது விஷயமாக ஆகம சாஸ்திரப்படியுள்ள ஓர் பரிஹாரத்தை இச்சமயம் நாம் ஆஸ்திக ஸமூஹத்தினருக்கு ஞாபித்துக் கொள்ளவிரும்புகிறோம். ஆலயபிரப்பங்களில் பகவத் சக்தியை மந்திர பலத்தினுல் ஆவாஹம் செய்திருப்பதாலேயே அந்த பிம்பத்தை நாம் வணங்குகிறோம். கடைகளில் காணப்படும் பகவத் மூர்த்திகளில் நாம் பக்தி காட்டுவதில்லை. நம் வீட்டில் குழந்தைகள் வீளையாட்டுக்காக வைத்துக்கொண்டிருக்கும்பொம்மைகளிலும் நாம் தெய்வபக்தி செய்வதில்லை.

ஏன்? அவைகளில் தெய்வசக்தி ஏற்றப்படாததாலேயே. ஆகையால் ஆலயங்களில் பகவன் மூர்த்திகள் இருப்பதால் மட்டும் பிரயோஜனமில்லை. கண்ணுக்குப் புலப்படக்கூடாததும் கேவலம் மந்திரசக்தியால் மட்டும் ஏற்படக்கூடியதுமான தெய்வ சக்தியை அந்த பிம்பங்களில் மந்திர சாஸ்திர நிபுணர்களான முன்னோர்கள், மந்திர பலத்தினுல் ஸன்னிதியம் அடையும்படி செய்திருக்கிறார்கள். ஆதலால் அந்த சக்தியேதான் இஷ்டார நிஷ்ட பலன்களைக் கொடுக்கக்கூடிய வைகளேயல்லது நம் கண்களுக்கு ஸ்தூலமாகத் தென்படும் மூர்த்திமாத்திரமல்ல வென்பது ஆகமசாஸ்திர நிர்ணயமாகும். ஆலய பிம்பங்களில் தெய்வசக்தியை ஏறிடும் முன்பு அந்த பிம்பங்கள் சாதாரண ஸ்தூல அல்லது லோஹமாகவே இருக்கிறது. பிரதிஷ்டை காலத்தில் மந்திரகுர்களான பூஜகர்கள் தங்களது தபோமஹிமையாலும், மந்திரபலத்தாலும் தெய்வ சக்தியை ஆவாஹனம் செய்து பிம்பங்களில் ஏறிட்டு வைத்திருக்கிறார்கள். ஆதலால் பிம்பங்கள் தெய்வ சக்தி தங்குவதற்கு ஓர் ஆதார வஸ்துவேயல்லது அவைகளே தெய்வங்களாகிவிடாது. அவைகளுக்குள் மறைத்து நிற்கும் தெய்வ சக்தியே தெய்வமாகும்.

இந்த தெய்வசக்தியை அவச்யம் கோந்த போது பிம்பங்களிலிருந்து ஆகர்ஷணம் செய்து, கும்பம் முதலியவைகளில் ரக்ஷித்து வைக்க ஆகமம் வழி சொல்லியிருக்கிறது. கோவில் விமானம் முதலியவைகள் ஜீர்ணமாகி, அவைகளைப் பழுதுபார்க்க நேர்ந்தால் பிம்பத்திலிருந்தும் சக்தியை, கும்பத்தில் ஆகர்ஷணம் செய்து வேறிடத்தில் வைத்து அக்க கும்பத்திலேயே ஸகல பூஜைகளையும், உத்ஸவாதிகளையும் நடத்தும்படி ஆகம விதி இருக்கிறது. ஜீர்ணோத்காரண வேலை முடிந்த பிறகு மறுபடி அந்த பிரப்பத்தில் கும்பத்திலிருக்கும் சக்தியை மந்திர பலத்தால் புகவிட வேணும். மேலும், பெரிய ராஜ்யநாசம் பிரவாஹ பயம் அக்னிபயம் போன்ற அபாயங்கள் நேரும் காலங்களிலும், அந்த சக்தியை பிரப்பத்திலிருந்து ஆகர்ஷணம்செய்து கும்பத்தில் வைத்து ரக்ஷிக்கும்படி சாஸ்திரவிதியுள்ளது. மேலும், குப்பத்தில் ஆகர்ஷணம் செய்வதுடன், நிதில உருவத்தில் பிம்பத்தையும் அதில் சக்தியைப் புகவிட்டும் வைத்துக்கொள்ள இடமிருக்கிறது. இது

பால பிம்ப அத்யாயங்களில் விரிவாகக் காணப்படுகிறது.

இதற்கு முன் இலபத் முதலிய பெரிய கேஷாபங்கள் ஏற்பட்ட காலங்களில் நமது முன்னோர்கள் சக்தி ஆகர்ண விதியைக்கை கொண்டே நமது தெய்வசக்தியைக்காப்பாற் றியதாயும் சரித்திரமும் அறிகிறோம். கோவிலை அழிக்க பாபிகள் முன் வருவதாகத் தெரிந்ததும் பூஜகர்கள் மந்திர பலத்தினுல் தெய்வ சக்தியை அப்புறப்படுத்தி ஸ்மரணித்துவிட்டார்கள். விக்ரஹம் உடைக்கப்பட்ட போதிலும் கோவில் அழிக்கப்பட்ட போதிலும் கூட தெய்வ சக்தியானது அழியாமல் ஜாக்ரதையாக ரக்ஷிக்கப்பட்டு வந்திருக்கிறது.

இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் போல் இதற்கு முன் ஏற்பட்டதில்லை. ராஷ்ட்ரகேஷாபம் என்பதற்கு இதை விட உதாஹரணம் வேண்டியதில்லை.

தெய்வ சக்தியை ஆகர்ஷணம் செய்வதற்குவல்லோரும் அதிகாரிகளாகமாட்டார்கள். பூஜகர்களுக்கே அதிகாரமுள்ளது. ஆகம தீக்ஷை பெற்று மந்திர சாஸ்திர சாஸ்திரங்களில் நிபுணர்களானவர்கள் செய்யும் சக்தி ஆகர்ஷணமே பிரயோஜனமுள்ளதாகும்.

மூக்யமானவைகளும், அதிக மஹிமை பெருந்தியவைகளுமான தேவாலயங்களிலாவது சக்தி ஆகர்ஷண வழியை இச்சமயம் பின்பற்றி தெய்வ சக்தியை ஸம்ரக்ஷிக்க வழிபிறக்கிறது. ஓர் பரதேசஸ்தான இடத்தில் அந்த சக்தியை கும்பத்தில் ஆவாஹனம் செய்து வைத்துக்கொண்டு அந்த சக்திக்கே ஸகல பூஜாவைபவங்களையும், உத்ஸவங்களையும், பிரார்த்தனைகளையும், பாராயணங்களையும் நடத்தில் கல்ல காலம் வரும்வரையில் தெய்வ சக்தியை ஸம்ரக்ஷித்து வைக்கலாம்.

இம்மாதிரி செய்தால் இதிலிருந்து ஓர் விதத்தில் நிலைமை ஏற்பட்டு கல்லலழி பிறக்கக்கூடும்

குடந்தை நாகேஸ்வரஸ்வாமி கோவிலில் கண்டனக்கூட்டம்

காங்கிரஸ்காரர் விஷமம் பலிக்கவில்லை

19உ புதன்கிழமை இரவு 7 மணிச்சு, குடந்தை ஸ்ரீ நாகேஸ்வரஸ்வாமி கோவிலில் மதுரை ஆலயப்பிரவேசத்தைக் கண்டிக்க ஓர் பெரிய பொதுக் கூட்டம் நடைபெற்றது. பெரிய ஜனங்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர். பெரும்பாலும் பிராமணரல்லாதார். அட்வகேட் ஸ்ரீமான் கே. எஸ். வெங்கட ரமணி அய்யாவர்கள் தலைமை வகித்தார். தலைவர் முகவுரையில், "மதுரை ஆலயப் பிரவேசமும் அவசரச் சட்டமும்" அதிகமானதென்று கண்டித்தார்.

பிறகு ஸ்ரீமான் கடாரஜய்யர் மத உரிமையைச் சட்டஸபையும், இதர ஜாதியினரும் பற்றக ஹிந்துக்கள் இடமளிக்கலாகதென விரிவாகப் பேசினார்கள்.

கட்டுப்பாடாகக் கலகம் செய்யும் நோக்கத்துடன் வந்திருந்த சில காங்கிரஸ் காரர் கூட்டமானது இடையிடையே இரைச்சி லிட்டும், தர்பாஷையாகப் பேசியும், விதண்டாவாதம் செய்தும் எவையில் அமளி யுண்டாக்க முயற்சித்தனர். தலைவர் உறுதியுடனும் ஸமர்த்தியமாயும் இதை ஸாளித்தார்.

பிறகு ஸ்ரீமான் கணபதி சாஸ்திரி பேசுகையிலும் தொந்தரவு ஏற்பட்டது. அது சிறிது அடங்கியபின் ஸ்ரீமான் சாஸ்திரி மதுரை அநீதியை விளக்கிப் பேசினார். மறுபடியும் மறுபடியும், இரைச்சல் இவர்களே, தலைவர் எழுந்திருத்தி, காங்கிரஸ்காரர்கள் இவ்வாறு நடந்து கொள்வதும் காங்கிரஸின் உபதேசத்திற்கு மாறுபிருக்கிறதென எடுத்துக் காட்டினார். பிறகு, அக்நிஹோத்ரம் சாமராஜ நாதசாரியர் பேசுகையில், காங்கிரஸ் காரர்கள் பொதுக்கூட்டங்களில் நடக்கும் கொள்ளவேண்டிய மாதிரியைக் குறிப்பிட்டு விட்டு மதுரை ஆலயப்பிரவேசம் பொதுஜன அபிப்பிராயப்படி நடக்கவில்லையென்று நிரூபணம் செய்தார். இடையில் சில காங்கிரஸ் வாதிகள் குறுக்கிட்டதற்கும் தக்கபடி பதில் அளித்தார். கூட்டம் அமைதியாக நடந்தது. காங்கிரஸ்காரர்கள் கேட்டிருந்த சில கேள்விகளுக்கும் இவர் பதிலளித்தார். சில கேள்விகளை விளக்கிச் சொல்லும்படி அவர் அழைத்தபோது கேள்வி கேட்டவர் முன் வரவில்லை. கடையாக தலைவர் முடிவுரை கூறி கூட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

ஆலயப் பிரவேச ஆபத்து

குடந்தையில் ஸஹஸ்ராம பாராயணம்.

குடந்தை தர்மிகர்கள் பொதுக் கூட்டங்களில் நீர்மானிக்கப்பட்டபடி ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோவிலில் ஆலயப் பிரவேச ஆபத்தைத் தவிர்க்க ஸஹஸ்ராம பாராயணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. வித்வான்களும், வைதிகர்களும், பௌதிகர்களுமாக ஏராளமான பேர்கள் இருவேளையிலும் கூடி பாராயணம் செய்கிறார்கள். மிகுந்த உத்ஸாஹம் காணப்படுகிறது. தினமும் விடியற்காலையில் பெருங்கூட்டமாக பாராயணம் செய்துகொண்டாட ஒருதினசரியும் இல்லாதது ஒருபெருங் குறையே.

காட்டுத் தீ போல் ஆலயப்பிரவேச இயக்கம் பரவலாம். நேற்று மதுரை. இன்று திருச்சி, தஞ்சை, நாளை காஞ்சி, நாகை. என்ற பரவலாம். ஆனால் என்றும் ஓர்நாள் என்ற பரவலாம். ஆனால் என்றும் ஓர்நாள் தீ அணைத்தபோக வேண்டியதுதானே. எனவே, ஸனாதனிகளாகிய நாம் பொறுமை யுடன் காத்திருப்போம். மூடக் கிளர்ச்சி விரைவில் வீணாகிப்போகும்.

ஆஸ்திகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

தமிழ் நாட்டில் சென்ற இரண்டு வாரகாலமாய் காங்கிரஸ்காரர்கள் ஒரு விதமூடக்கிளர்ச்சியை நடத்தி வருவதை நேயர்கள் நன்கறிவர். சென்னை நினைசரிகள்— இவைகள் அனைத்தும் ஒரு கட்சியை ஆதரித்துப்பேசுவதாயிருப்பதால்— இவைகள் எல்லாம் இந்த மூடக்கிளர்ச்சியை ஆதரித்துக் கெட்டை எழுத்துக்களில் ஒன்றை பத்தாகச்செய்து வருகிறது. காங்கிரஸ்காரர்கள் அங்காகு வருகிறது. காங்கிரஸ்காரர்கள் இந்த தேசிய காங்கிரஸ் பத்திரிகைகள் பத்தி பத்தியாக வெளியிடும் பத்திரிகைகளையும் இக்கங்களைப்பற்றியும், ஆட்சேபனைகளையும் இத்தத்தலிருந்த நினைசரிகள் அங்கிகரித்துப் பேடுவதில்லை. இந்த சந்தர்ப்பத்தில் ஒரு வார்த்தை. வெள்ளைக்காரப் பத்திரிகைகள் வியாபார முறையை அநுஷ்டித்து ஸனாதனிகளின் ஒன்றிரண்டு அறிக்கைகளை ஆதரித்த பிரசுரித்து வருகின்றன.

சென்னை பத்திரிகைகளிலிருந்து ஆஸ்திகர்கள் உண்மையான விஷயங்களை அறிந்து கொள்ள முடியவில்லை. தமிழ் நாட்டில் நியாயமாகப்பேசும் ஸனாதனிகளின் சார்பாக வாதாட ஒருதினசரியும் இல்லாதது ஒருபெருங் குறையே.

காட்டுத் தீ போல் ஆலயப்பிரவேச இயக்கம் பரவலாம். நேற்று மதுரை. இன்று திருச்சி, தஞ்சை, நாளை காஞ்சி, நாகை. என்ற பரவலாம். ஆனால் என்றும் ஓர்நாள் தீ அணைத்தபோக வேண்டியதுதானே. எனவே, ஸனாதனிகளாகிய நாம் பொறுமை யுடன் காத்திருப்போம். மூடக் கிளர்ச்சி விரைவில் வீணாகிப்போகும்.

காங்கி அடிகள் இன்று ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கம், சாத்விகப் போராட்டம், முதலியன — ஆரம்பகாலத்தில் கொழுத்தவிட்டெறிந்தது. ஆனல் முடிவில் படுதோல்வி ஏற்பட்டது? இருப்புவீரன் வெலிங்டன் பிரபு அன்று அவஸரச் சட்டங்களைக் கொண்டு அடிகளையும்—அடிகளது சோஷ்டியையும் இருந்த இடம் தெரியாமல் இருக்கச்செய்தார்.

சென்ற பத்து வினங்களாகத் தமிழ் நாட்டில் ஆலயப்பிரவேச அலங்கோலத்தை கண்டனம் செய்த பல கூட்டங்களின் நடவடிக்கைகளை மற்றொரு பத்திரிகையில் காணலாம் "ஆர்யதர்மம்" ஒன்றுதான் தற்சமயம் தமிழ் நாட்டில் ஒரு தினசரி போலிருந்து கொண்டு மகத்தான சேவை புரிந்து வருகிறது. இதற்கச் சமயத்தில் ஆஸ்திகர்கள் யாவரும் ஆர்யதர்மத்தை ஆங்காங்கு பரவச் செய்ய ஆதரிக்க முன் வருதல் அவசியமாகும். அன்பர்கள் ஆங்காங்கு நடைபெறும் ஸனாதனக் கூட்டங்களின் தகிழ்ச்சிகரமாகக்கு அனுப்பி உதவலாம்.

அவர்கள் இச்சமயத்தில் ஸனாதனிகளுக்கு விரோதமாயிருக்கும் பத்திரிகைகளைப் பகிஷ்கரிக்கக் கங்கணம் கட்டிக்கொள்ளவேண்டும்.

அதுபோல இன்று ஆலயப் பிரவேச அவசரச் சட்டம் பிரகிக்நிப்பெற்றிருக்கலாம் ஒன்றிரண்டு மாதங்களில் இந்தக் கிளர்ச்சியின் முடிவை நாம் காணப்போகிறோம்.

பல ஆஸ்திகராவிடத் தலைவர்களை கண்டு பேசிய காலத்தில் அவர்கள் ஒருக்காலும் ஆலயப் பிரவேசத்தை விரும்பவில்லை. அவர்கள் விரும்புவதெலாம், ஹல்லி அபிகிருத்தி, தொழுதுண்டு பின்செல்வாரைப்போல் ஆலயப்பிரவேசத்தை ஆதரிப்பவர்களை ஆதரிப்பதேயாகும். காங்கிரஸ்காரர்கள் இன்று வரக்காரர்களின் வாக்குறுதியைப் பெற்று பதவியிலிருக்கிறார்கள். அத்தவாக்காரர்களில் ஒரு பகுதியினரே ஸனாதனிகள் ஸனாதனிகள் ஆட்சேபனைகளை அலட்சியம் செய்து அறவே அவர்கள் தள்ளிவிட்டனர்.

இன்னும் இரண்டொரு வருடத்தில் எந்த ஸனாதனிகளின் ஆட்சேபனைகளை அலட்சியம் செய்தார்களோ அவர்களுடையதூட்டுகளையும் ஆதரவையும் பெற வேண்டியிருக்கும். அப்பொழுது ஸனாதனிகள் சரியானபடி பாடம் கற்பிப்பார்களென்பதில் ஐயமில்லை.

(எல். எஸ். மணி அய்யர்)

இவர்களோ தர்மகர்த்தா?

நாகப்பட்டினம் ஸ்ரீ நீலாயதாட்சியம்மன் திருக்கோவிலில் ஆதித்திராவிடர்கள் பிரவேசிக்க விரும்பு வதாக ஆலய தர்மகர்த்தாவுக்குக் காங்கிரஸ்காரர்கள் எழுதினர்கள். அதற்கு ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி அய்யர் "ஆலயப் பிரவேசத்தக்கு அனுமதி தரமுடியாது.

அப்படிச் செய்வதால் கலவரம் ஏற்படுமென்றும், மீறினால் கிரிமினல்-ஸிவில் சட்டப்படிநடவடிக்கை எடுத்துக்கொள்வேன்" என்று பதில் தைரியமாக எழுதிவிட்டார்.

நாகப்பட்டினம் ஆஸ்திகர்கள் இதுகேட்டு அளவிலா ஆனந்தமுற்றார்கள்.

(நமது விசேஷ நிருபர்).

ஆலயங்களில் "அவர்களை" அனுமதிக் காதீர்கள்

"ஆதித்திராவிடர்கள் தகுதியற்றவர்கள்"

ஸ்ரீ வானமாமலை மடம் ஸ்வாமி கண்டனம்

சமீபத்தில் மதுரையில் நடந்த தீண்டாதார் ஆலயப்பிரவேசம் பற்றி ஸ்ரீ வானமாமலை மடாதிபதிகளின் மறுப்பு பின்வருமாறு:—

"சிதிருத்தக்காரர்கள் நிறைந்த காங்கிரஸின் அரசாங்கியில் ஆலயங்கள் எதிர்பார்த்த அதிகங்கள் ஒன்றின் பின்னொன்றாக நடைபெற்று வரும் இக்காலத்தில் தற்பொழுது மதுரை மீனாக்ஷி அம்மன் கோவில் முதலியதில் நடைபெற்ற அநியாயத்தை ஆலயத் தொழுவதில் நம்பிக்கையுடைய ஒருவரும் எதிர்பார்க்கவே இல்லை. அக்கியமஞ் செய்தவர் களைப் பாதுகாப்பதற்கு ஒரு சட்டமும் அவசரமாக இயற்றப்பட்டிருப்பது விக்தையிலும் விக்தையே; காங்கிரஸ் சர்க்காரின் இவ்விரண்டு செயலையும் சட்ட வரம்பையும் ஒழுங்கையும் விரும்பும் சீர்திருத்த வாதிகளும் மறுக்கின்றனர் என்பது நினைசரி பத்திரிகைகளினால் கல்லெட்டான விஷயம். தீண்டாதாரின் ஆலயப்பிரவேசத்தை ஆமோதிக்கின்ற மஹாத்மா காந்தி போன்றவர்களும் பொதுஜன அபிப்பிராயத்தைப் புறக்கணித்த சட்ட வரம்பை மீறி இப்பொழுது சில கோவில்களில் கடைபெற்ற தீ தெறியையும் அதற்கு காங்கிரஸ் கவர்ன்மெண்டும் அவரது உத்தியோகத்தர்களும் முன்னும் பின்னும் உடந்தையாக சூழ்ச்சியையும் உண்மையில் அறிவார்களேயானால் மிகவும் இச் செய்கையைக் கண்டிப்பார்கள் என்பது திண்ணம்; இது அஹிம்ஸா முறையில் கடைபெற்ற ஒரு பகல் கொள்ளைக்கு ஒப்பாகும். 10 திருடர்கள், மூன்று தகவலில்லாமல் ஒருவருக்குச் சொந்தமான வீட்டில் நுழைந்து அவ்விடத்திலுள்ள பதார்த்தங்களை கொள்ளை கொள்வதும் அவ்வகிக் கிரமத்தைத் தடுக்க வந்தபொது ஜனங்களை அவர்களுக்கு உதவியாய் நிற்கின்ற ஆயுதக்காரங்களை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே அவர்களின் ஸம்மதியின் பேரில் அவர்கள் கொடுக்கத் தாங்கள் பெற்றுக் கொண்டதாக சொல்லுவதற்கு ஒப்பாகும். இவ்வகிகிரமம் ஜனநாயகம் நடைபெறும் ஆகூயில் என்றைக்கும் நீரில் குமுழிபோல் நில்லாத என் பதுநிச்சயம் ஜெனரல்டயரை பாதுகாக்க மேல் நாட்டார் அப்பொழுது செய்த தொடர்ந்து தொழிச் சட்டத்தையும் அதிநியென்ற அறைகூவிய காங்கிரஸ் தலைவர்கள் இப்பொழுது இப்படி செய்யத் துணிந்தது ஆச்சர்யத்தையே வினவிக் கின்றனர்; இவ்வாலயப் பிரவேசத்தையும் இதற்கு உடன்தையாயிருந்தவர்களையும் நாம் அழுத்தமாகக் கண்டிப்பதோடு இது போன்ற நிய தெற்களில் கவர்ன்மெண்டார் மனம் வைக்காமலிருக்குமாறு அவர்களைப் பிரார்த்திப்பதுமல்லாமல் அவ்வரிவை அவர்களுக்கு மாறும் நாம் எப்பொழுதும் சர்வேச்வரனை பிரார்த்திப்போமாக."

சிதம்பரத்தில் எதிர்ப்பு

நில்லைஸ்தலத்தில் அநேகக் கூட்டங்கள் நடக்கத அதில் முக்யமாய் ஜூலை மீ 16உ தென்ஆற்காடு ஜில்லா ஸநாதனதர்ம ஸபையின் ஆதரவில் ஒரு மாபெருங்கூட்டம் கூடிற்று. ஸ்ரீ எ. செங்கசாமிபிள்ளை தலைமைவஹித்தார். பலர் ஆலயப்பிரவேசத்தை எதிர்த்துப் பேசினர்கள்.

ஸ்ரீ ராமகணேசதீக்ஷிதர் மடமொழியில் பேசும் பேசும்போது "ஒவ்வொருவர்க்கும் தாருக்கும்" சுவாமிதரிசனம் எக்தஸ்தல இடத்திலிருந்து செய்யவேண்டுமென்பதை எடுத்துக்காட்டினர்.

மகாமகோபாத்யாய ஸ்ரீ தண்டபாணி ஸ்வாமி தீக்ஷதர் "ஆதித்திராவிடர்கள் ஆலயப்பிரவேசத்திற்கு தகுதியற்றவர்கள்" என்றுகூறினர். சென்னையிலிருந்து வந்த ஸ்ரீ வே. ஸோ. சர்மாவும் கூட்டத்தில் பேசினர்.

மற்றொரு மாபெருங் கூட்டம்

தெற்கு ஸன்னிதியில் வக்கில் ஸ்ரீ G. கோபாலய்யர் தலைமையில் ஒரு ஸநாதனிகளின் கூட்டம் கூடிற்று. ஆயிரக்கணக்கில் ஜனங்கள் குழியிருந்தனர். சென்னை ஸ்ரீமான் சோமதேவசர்மா போனூர் ஸ்ரீசேஷய்யர் ஸ்ரீமடம் காரியதரிசி ஸ்ரீகாரணைவால் முதலிய ஸநாதன பிரமுகர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள். ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்து தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறிய.

திண்டுக்கல்லில் ஆக்ஷேபனை

திண்டுக்கல் ஹிந்து மத சங்க ஆதரவில் 15—7—38 மாலை 3 மணிக்கு ஸ்ரீ சங்கர மடத்தில் ஒரு மாபெருங் கூட்டம் கூடிற்று. வக்கீல் ஸ்ரீ V. R. வில்வநாதய்யர் தலைமை வஹித்தார். ஸ்ரீ மீனாக்ஷி கோவிலில் ஆதித்திராவிடர்கள் நுழைத்ததைக் கண்டித்தும் ஆலயப்பிரவேச பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேற்றின.

மதுரைமாநகரில் ஸநாதனிகள் கூடத்தும் போராட்டத்தைப் பாராட்டி ஆதரிப்பதாக ஓர் தீர்மானம் நிறைவேறியது. தமிழ் நாட்டிலிருக்கும் எல்லா கோவில்களின் மானேஜர்கள், தர்மகர்த்தாக்கள், டிரஸ்டிகள் யாவரும் 'ஆதித்திராவிடர்களை ஆலயங்களுக்குள் பிரவேசிக்க அனுமதிக்க கூடாது" என்று கேட்டுக் கொள்வதாக மற்றொரு தீர்மானம் நிறைவேறியது.

நாங்கூரேரியில் கண்டனம்—

17-7-39 ஸ்ரீ வானமாமலைப் பெருமாள் கோவில் முன்பு ஒரு மாபெருங்கூட்டம் நடக்தது. திருநெல்வேலி வக்கில் ஸ்ரீ. ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம். ஏ., பி. எல்., தலைமை வஹித்தார்.

ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்து தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறியது. இதர இடங்களில் பரவலாகப்பிரசாரம் செய்ய வேண்டுமென்று கூட்டத்தில் வற்புறுத்தப் பட்டது.

(தமது நிருபர்.)

வாரக்குறிப்புகள்

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா).

குமார்க்கம்!! ஸ்ரீ மீனாக்ஷி ஆலயத்தில் பஞ்சமரைப் புகும்படி செய்தவர் நிருட்டுத்தனமாகவே நுழைந்தனர். பேசிய அவகாசம் கொடுத்த பஹிரங்கமாக நுழைந்ததால் அது பொருதமாகும்!! அப்போது கடப்பதே வேறுவிதமாக இருக்கிருக்கும்.

தூக்கம் வரவில்லையாம்! பிரதம மந்திரி முன்னடந்த விபரீத காரியத்திற்காக ஓரிரவு தூங்கவில்லையாம்! தன்னை தன்னைச்சுடும்!! ஊர்க்காரத்மா அன்று துடித்திருக்கும். அதை ஸ்தோஷமென்கிறார். பரவம்!! பாரத பாகவதங்களில் இப்படி தூங்காதவர் கல்லைப் பார்க்கவில்லை.

நந்தவனம்போலாக்கவாம்! இனி ஆலயத்தின் கதி என்ன ஆகும் என்ற மந்திரி அறிவார். அதே அவர் சோகக்கம். உள்ளபடி அவர் ஆலயத்தை நம்புபவரல்ல. ஆஸ்திகரும் பேதகமல் சண்டாளரும் வராமல் அது பாழாக ஆங்குள்ள தர்த்தையுமிடத்தையும் வேறு லௌகீக வேலைக்குப் பயன்படுத்தவோ மென்பதே அவர் கருத்து. ஆதலினித்தகைய சொல் அவர் வாயிலிருந்து தோன்றிற்று.

மீனாக்ஷிக்கு ஈடார்மாலையா? அன்னையே! உன்னை எத்வளவு ஆசாரத்துடன் ஸாதகர்கள் பூஜித்தார்கள்! கர்ப்ப இருஹத்துக்குள்ளே புக ஸாதகர்கள் அஞ்சுவர்! ஐயோ! உன் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறபர? பொறுமைக்களவில்லையர? ஆஸ்திகரைப் பரீக்ஷிக்கிறபர?

நகைப்பர்! எதையுஞ் செய்வர்! கம் தலை வரைக் கேலி செய்கிறர். அதிக்மஞ் செய்தவரை ரக்ஷிக்க ஓர் சட்டமும் செய்கிறர். மநுஷ்ய பலமும் கல்லகாலமுமிருக்கும்வரை பல செய்யலாம். ஆனால் அத்யத்கடமான கர்மர 3 நாளல்லது 3 மாதமல்லது மூற்றுண்டில் பலனித்தருமென்பது சாஸ்த்ரம். இங்ஙனம் பலரைப் புராணங்களில் கேட்டிருக்கிறோம்.

நன்றிசெலுத்துவாம்!! அசுத்தமான ஆலயத்தில் தர்மத்தைவிட்டு கேவல ஜீவனர்த்தம் பூஜிக்கமட்டேனென்ற வெளிவந்த பட்டருக்கும் அசுத்தமான ஆலயத்தில் கும் கமது கன்றிபல.

காஞ்சிமா நகரில் கண்டனம்.

மகஜர் தயாரிக்கப்பட்டது

ஆலயப் பிரவேசத்தை எதிர்த்து காஞ்சியில் ஸநாதனிகள் தீவிர பிசாரம் செய்து வருகிறர்கள். ஆலயப் பிரவேசத்தை எதிர்த்து ஒரு மகஜர் தயாரிக்கப்பட்டுகிறது. அதில் எல்லா வகுப்பினரும் கையெழுத்திட்டிருக்கிறர்கள்.

இது ஸம்பந்தமாக இவ்கு சென்னையிலிருந்து மாஜிஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ V. V. ஸ்ரீனிவாஸய்யங்கார் வந்திருக்கிறர்.

அவர் பல ஆலயங்களின் தர்மகர்த்தர்களைக்கண்டிக்கிறதாகவும் ஏகமனதுடன் தீர்மானங்கள் நிறைவேறியத.

(4-ம் பக்கத் தொடர்ச்சி).

பிறகு ஸ்ரீமான் டி. கோதண்டராமய்யங்கார் அவர்களால் கண்டனத் தீர்மானங்கள் பிரேரேபிக்கப்பட்டு, வக்கீல் ஸ்ரீமான் ராதா கிருஷ்ணய்யர் அவர்களால் ஆமோதிக்கப் பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

ஸ்ரீமான் ராதா கிருஷ்ணய்யர் பேசுகையில் 'தஞ்சை பிரின்ஸ் அவர்கள் தமது ஆனைத்தில் உள்ள கோவில்களை நிறுத்து விடும்படி கார்ரிஸ்காரர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டோ, பய முறுத்தப்பட்டோ கார்யம் நடந்திருப்பதாயும், அவருடைய குடும்பப் பொருனாதார நிலைமம் காணமாகவே இதற்கு அவர்கள் நிர்ப்பந்தமாக உட்பட நேர்க்ததென்று தமக்குத்தெரிவதாயும்" குறிப்பிட்டார் கூட்டத்தில் ஒருவர் இது ரியல்லவென்று ஆக்ஷேபித்தாராயினும் ஸ்ரீமான் அய்யர் தமது தகவல் ஸரியானதென்று வற்புறுத்தியதின் மேல் ஆக்ஷேபம் அடங்கியது.

மதுரை ஆலயப் பிரவேசத்தின் உண்மை நிலைமையைப்பற்றி ஸ்ரீமான் கடேசய்யர் வெளியிட்டுள்ள அறிக்கையானது ஸபையில்படிக்கப்பட்டது. பின்னர் கூட்டம் இனிது கலைந்தது.

(தமது விசேஷநிருபர்)

பக்தபுரி படித்துறையில் கூட்டம்

மதுரை ஆலயப் பிரவேசத்தைக் கண்டிப் பதற்காக 18உ செவ்வாய்கிழமை மாலை 7 மணிக்கு குடக்தை பக்தபுரி படித்துறையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஆஸ்திகர் பலர் கூடியிருந்தனர்.

மாஜி தாஸில்தார் ஸ்ரீமான் காராயணஸாமி அய்யர் அக்ராஸனம் வஹித்தார். சுருக்கமான முகவுரைக்குப் பிறகு சேங்கலிபுரம் அட்வகேட் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ அய்யரவர்கள் கண்டன தீர்மானத்தைப் பிரேரேபித்து கவர்னர் மூலம் ஆலயப்பிரவேச அவஸரச் சட்டமியற்றியது மதுரைத் தலைவரான ஸ்ரீ கடேசய்யருக்கு ஒரு பெரிய வெற்றியென்றும், அத்தகைய அவஸரச் சட்டமியற்றலது மூலதாரச் சட்டங்களுக்கு விருத்தமென்றும், இதை இயற்ற ஸர்க்காருக்கு அதிகாரமும் மில்லையாதென்றும், இது அரசியாயிருப்ப தாயும் விளக்கிக்கூறினர்.

பிறகு ப்ரம்மஸ்ரீ பாலகிருஷ்ணதீக்ஷிதர், ஸ்ரீ ராமானுஜ தாதாசாரியர், டாராஜய்யர், சுகர தர இன்ஸ்பெக்டர், சுக்தரப்பய்யர், கண பதி சாஸ்திரி ஆகியவர்கள் தீர்மானங்களை ஒட்டிப்பேசி மதுரை, தஞ்சை முதலிய பலவிடங்களில் நடந்த அக்கிரமங்களைக் கண்டித்து கட்டுப்பாடுடன் உள்ளூரில் கோயில் கைங்கர்யம் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தினர்கள். வந்காக்கவேண்டுமென்று வற்புறுத்தினர்கள். வந்தனோபசாரத்துடன் இரவு 9மணிக்கு கூட்டம் கலைந்தது.

தீர்மானங்கள்.

மதுரை ஆலயப் பிரவேச விஷயமாக மூன்னணியிலிருந்து மகத்தான வேலைகள் செய்து வரும் ராவ்ஸாகேப் ஸ்ரீ N. கடேசய்யரைப் பாராட்டுகிறதென்றும், அவருடைய தலைமையில் நடந்து வரும் போராட்டத்தின் மகத்துவத்தினாலேயே சென்னை சர்க்காரின் அவசரச்சட்டம் ஜனித்ததென்றும், மதாபிமானத்தால் தங்கள் கடமைகளைச் சரிவர செய்த பட்டர்களைப் பாராட்டுகிறதென்றும், சென்னை சர்க்காரின் அவசர சட்டத்தைக் கண்டிக்கிறதாகவும் ஏகமனதுடன் தீர்மானங்கள் நிறைவேறியத.

ஆத்தங்குடி

ஸநாதனதர்ம மஹாஸபை.

14—7—39 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீ S. சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்கள் தலைமையில் நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் மதுரை ஸ்ரீ மீனாக்ஷி சுக்தரேஸ்வரர் ஆலயத்தில் சூழ்ச்சியுடன் நடைபெற்ற தீண்டாதார் ஆலய பிரவேசத்தையும், அதற்கு உடக்தையாக உள்ள ஆலய நிர்வாகிகள், காங்கிரஸ் மக்திரிகள் முதலானவர்களையும், சட்டத்தின் பெயரால் காங்கிரஸ் கஹி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வருவதையும், பல மகக் கண்டித்தும், ஸ்தானிகர்கள் பூஜைசெய்ய மறுப்பதையும், எத்த எதிர்ப்பையும் திறம் பொருட்படுத்தாமல் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத் தலைவர் மதுரை ஸ்ரீ மரண கடேசய்யரவர்கள் எடுத்துவரும் சேர்மை யானமும் சட்டரீதியானதுமான முயற்சியை பாராட்டியும் ஸநாதனிகள் நடைபெறும் தீவிரக் கிளர்ச்சி செய்து காங்கிரஸ் கவர்ன்மெண்டரர் மத விஷயத்தில் செய்துவரும் அநீதியை மக்களுக்கு உணர்த்தவேண்டுமென்றும், நிர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஸ்ரீ சு. வீ. ர. கதிசேசன் செட்டியார், ஜோஸ்யம் மணவாளய்யங்கார், ஜெகதீசய்யர் முதலானோர் சொற்பொழிவாற்ற வக்தின உபசாரத்துடன் மாலை 5-மணிக்குச் சபை கலைக்கதது.

(த.கி.)

ஸ்ரீரங்கம் ஸநாதனிகள் கூட்டம்

ஸ்ரீரங்கம் பகால ராமாநுஜ கூடத்தில் சுவாகளிகளின் மாபெருங்கூட்டம் ரிடயர்டு ஜில்லா ஜட்ஜ் நிவான் பக்தூர் எஸ். ராகவய்யங்கார் தலைமையில் கூடியது. ஸ்ரீமான்கள் ரிடயர்டு டிபுடி கலக்டர் திருமலை அய்யங்கார், ரிடயர்டு போலீஸ் டிபுடி சூபரென்டண்டு நாராயண அய்யங்கார், குரு பக்த ஸ்ரீ மணி டி, கே பாலசுப்பிரமணிய அய்யர், வக்கில் எஸ். கஸ்தூரிரெங்காச்சாரியார் இன்னும் அநேக பண்டிதர்கள் கூடியிருந்து ஹரிஜனங்கள் ஸ்ரீரங்கம் பெரிய கோயிலில் பிரவேசம் செய்யாமலிருக்கவும் தற்காலம் கவர்ன்மெண்டார் இதவிஷயமாய் தயாரித்துள்ள மதசேதாவை சட்டமாக்கக் கூடாதென வற்புறுத்தி பொதுஜன ஆக்ஷேபணையைத் தெரிவிக்கவும் முடிவு செய்தனர். "இந்தியன் ஸ்டேட்ஸ் கெஜட்" ஆசிரியர் ஸ்ரீ பி. கெ. ராஜகோபாலன் தாமும் ஸ்ரீ வெள்ளித் திருமுத்தம் பார்த்த சாரதி அய்யங்காரும் சேர்ந்து தயாரித்துள்ள 'மதமு முன்னணி வேண்டு' என்ற விஷயத்தை ஸபையோருக்குச் சொல்லி திடீரென ஸ்ரீரங்கம் கோவிலில் ஹரிஜனங்கள் நுழைந்து விடின் சமஸ்த கைங்கர்ய பாரளும் ஸ்தம்பிக்குமுடன், கட்டுப்பாடாய், ஒருமித்த வேலை நிறுத்தம் செய்து வெளியே வந்துவிட வேண்டுமெனவும் அப்படி வருபவர்களுள் ஏழைகளான சிலருக்கு பொது ஜனங்களும் ஆலயஸம்ரக்ஷணத்தில் ஆர்வமுள்ளவர்களும் ஆகாரவளிக்கவேண்டி மடாதிபதிகளும் ஆச்சாரியர்களும் குருமார்களும் சிஷ்ய கோடிகளுக்கு உபதேசம் செய்யவும் பிரசாரம் செய்து நிர்ப்பந்தம் உடனே வெளிக் கொண்டு வரவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஸ்ரீமான்கள் டி. கே. பாலசுப்பிரமணிய அய்யர் இதை ஆமோதிக்க குங்கள் இன்னும் சில கடைமுறைகளையும் ஆலோசனை கூறினர். கோயில் கைங்கர்ய பரர்கள் கூட்டுறவை பெறவும் அபிப்ராயத்தை அறியவும் மற்றொரு கூட்டம் சீக்கிரத்தில் கூடும்.

திருவேடகம் கிராமத்தில் ஸநாதனிகள் மகாநாடு.

மதுரை ஜில்லா சோழவக்தானுக்குச் சமீபத்திலுள்ள திருவேடகம் கிராமத்தில் 13—7—39-க்தேதி ஸநாதனிகள் மகாநாடு நடைபெற்றது. மகாநாட்டுக்கு 300 ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

ஸ்ரீ கசிம்ம அய்யங்கார் அவர்கள் தலைமை வஹித்தார்.

ஸ்ரீ கரகேஸ்வர சர்மா மகாநாட்டில் "ஆலயப் பிரவேச ஆநி" என்ற விஷயமாகப் பேசினர். அவர் கூறியதாவது:—

எங்கும் நிறைந்து பரிபூர்ணமான கடவுள் பக்த கோடிகளுக்கு அநுக்ரஹம் செய்யும் பொருட்டு மின்சார சக்தியானது கம்பிகளின் வழியாக எங்கும் வியாபித்து இருக்தாலும் பிரகாசத்தை கொடுப்பதற்கு விளக்குத்தண்டையும் பல்பையும் எப்படி அபேக்ஷித்திருக்கிறதோ அதுபோல் ஆலயங்களும் அதில் விக்ரஹங்களும் ஆகமபிரமாணத்தை முன்னிட்டு நிர்மாணம் செய்யப்பட்டு மூடி மூர்த்திகளுக்கு தெய்வீக சக்தி விசேஷமானது. மக்நிர் தந்திர யந்திரங்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மூடி ஆகம சாஸ்திரங்களில் எத்த எத்த வர்ணத்தார் ஆலயங்களுக்குள் எத்த எத்த இடத்திலிருந்து தரிசிக்கவேண்டுமென்பதும் ஆலயத்திற்குள் பிரவேசிக்க அதிகாரமில்லாத பஞ்சமர் முதலானவர்கள் ஆலயத்திற்கு வெளியில் நின்று தரிசிக்கவேண்டுமென்றும் பஞ்சமர்கள் ஆலயத்திற்குள் பிரவேசித்தால் மூர்த்தியிடம் இருக்கிற தெய்வசக்தி குன்றி விடுமென்றும் விபக்தமாய் கூறப்பட்டியிருக்கிறது.

கல்லூரிகளிலும் ராஜரங்க முறைகளிலும் ஒவ்வொரு குடும்பங்களிலும் எல்லாம் ஒன்று என்ற பாவனை இருக்தாலும் கிரியம் செயில் மேல், கீழ்என்ற தாரதம்யம் சொல்லாமலே விளங்கி வருவதுபோல் பஞ்சமர்களும் ஒன்றுயென்ற பாவனையைத் தவிர கிரியம் சையில் மூடி பஞ்சமர்களை பிரவேசிக்க செய்வது சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும் தொன்று தொட்ட வழக்கத்திற்கும் விரோதமாக இருப்பதால் ஹரிஜன ஆலயப்பிரவேசம் எல்லா விதத்திலும் தவறுயென்ற எல்லோர்மனதிலும்படியும் படியாய் ரொம்பவும் உருக்கமாய் பேசினர்.

பிறகு மகாகாட்டில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறியது:-

பஞ்சமர்களின் ஆலய பிரவேசத்திற்கு கொஞ்சமும் இடம் கொடுக்க கூடாதென்றும், அது விஷயத்தில் எல்லோரும் உடன், பொருள், ஆவி, மூன்றையும் நியாகம் செய்யத் தணிய வேண்டுமென்றும், எக்த சமயத்திலும் கோவில் வாசலில் தயாராயிருக்து அக்ரமமாய் பிரவேசிப்பவர்களை தடுக்கவேண்டுமென்றும்,

இதபோல் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் சுவாங்கள் தோறும் ஏகோபித்த உறுதியாய் இருக்கும் பக்ஷத்தில், ஹரிஜன ஆலயப் பிரவேசமானது பின்வீடு சட்டம் ஏற்படும் பட்டபோதிலும் கூட நடைபெறாமலிருக்கும் என்று மகாநாடு அபிப்ராயப்படுகிறது.

8—7—38ல் மதுரையில் நடந்த அக்ரமமான ஹரிஜன ஆலயப்பிரவேசத்தை இந்த மகாநாடு வன்மையாக்க கண்டிக்கிறது.

வக்தனோபசாரம் கூறப்பட்ட பின்பு மகாமகாநாடு இனிது கலைந்தது. (தமது நிருபர்.)

ஆலயங்களின் நிர்வாக அதிகாரிகளுக்கு பாதுகாப்பு

அவர்களுக்கு மந்திரிகளின் வக்காலத்து
புதிய மசோதா தயாரிப்பு

"அவர்களே ஒன்றுமே செய்யமுடியாது"

சென்னை ஜனப்பிரதிநிதி சபை, ராஜாங்க சபை விதிகளின் 15-வது விதிப்படி பின் கண்ட மசோதா பிரசுரிக்கப்பட்டிருக்கிறது:—

பழக்க வழக்கத்தினால் ஹிந்து சமுதாயத்தில் ஒரு வகுப்பார் ஹிந்துக்கோவில்களில் பிரவேசிக்கவும், பிரார்த்தனை செய்யவும், தடுக்கப்பட்டுள்ளவர்கள் ஆலயப்பிரவேசம் செய்வது, பிரார்த்தனைசெய்வது, ஆகியவை சம்பந்தமாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், மற்றும் சிலரும் செய்யும் காரியங்களுக்காகவோ அல்லது செய்யத் தவறியதற்காகவோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமலிருக்கவும், அவர்களைப் பாதுகாக்கவும் கொண்டு வரப்படும் மசோதா.

பழக்க வழக்கத்தினால் ஹிந்து சமுதாயத்தில் ஒரு வகுப்பாரை ஹிந்துக்கோவில்களில் பிரவேசிக்கவும் பிரார்த்தனை செய்யவும் கூடாதென்று இருப்பதை நீக்கிவிட வேண்டுமென்று பொதுஜன அபிப்பிராயம் அதிகமாக விருத்தி வருகிறது; மேற்படி வகுப்பாரைக் கோவில்களில் அனுமதிக்கும் டிரஸ்டிகள், பட்டர்கள் முதலியோர் அவ்விதம் செய்வதால் எவ்விதத்திலும் அல்லது கிரிமினல் நடவடிக்கை களுக்கு ஆளாகவேண்டியிருப்பதாகவும்; அது அவசியமுமாகும். மதுரை ஸ்ரீ மீனாக்ஷி ஆலயத்தின் டிரஸ்டிகளும், பட்டர்களும் ஜூலை மாதம் 8-ந்தேதியும் அதற்குப் பிறகும் மேற்கூறியபடி நடவடிக்கை எடுத்துக் கொண்டதாலோ, அல்லது கடமையைச்செய்யத் தவறியதாகக் கூறப்படுவதாலோ, அவர்களையும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களையும், பாதுகாப்பதற்கும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் செய்வதற்கும், இப்பொழுது மதுரைஜில்லா மதுரை ரகசில் ஒரு நிலைமை ஏற்பட்டியிருக்கிறது. அதற்காகப் பின்கண்டபடி சட்டமியற்றப்படுகிறது.

1. இந்தச் சட்டத்திற்கு "1939-ம் வருஷ சென்னை ஆலயப் பிரவேச தொடர்பு தொழிச் சட்டம்" என்று பெயர்.

இந்தச் சட்டம் சென்னை மாகாணம் முழுவதிலும் அமுலிலிருக்கும்.

2. சர்க்காரின் உத்தியோகஸ்தர்கள், நிர்வாக அதிகாரிகள், ஸ்தலஸ்தாபன அல்லது மூனிஸிபல் உத்தியோகஸ்தர்கள், சென்னை ஹிந்துமத தர்மஸ்தாபன போர்டின்படி அதனால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள், டிரஸ்டிகள், பட்டர்கள், அவர்களுக்கு உதவி செய்கிறவர்கள் மேற்படி உத்தியோகஸ்தர்கள், டிரஸ்டிகள், பட்டர்கள் முதலியோரின் உத்தரவுபடி நடக்கிறவர்கள் முதலியோர் மதமை ஜில்லாவிலுள்ள ஸ்ரீமீனாக்ஷிகோவிலிலும் அந்த ஜில்லாவிலுள்ள மற்ற ஹிந்துக் கோவில்களிலும் பிரவேசிக்க இதுவரையில் பழக்க வழக்கத்தினால் ஹிந்து சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு வகுப்பார் ஜூலை மாதம் 8-ந்தேதியும் இச்சட்டம் அமுலுக்கு அதற்குப்பிறகும் வராமலிருந்து கொண்ட நடவடிக்கைக்காகவும், கடமையைச் செய்யத் தவறியதாகக் கூறப்படுவதற்காகவும், கைதி செய்யப்படக்கூடாது; வழக்குத் தொடரப் படக்கூடாது; வேறு எவ்விதக் நடவடிக்கை யும் எடுத்துத் தொடரப்படக் கூடாது. அவர் களனைவருக்கும் இச்சட்டம் மூலம் பாதுகாப்பளிக்கப்படுகிறது.

3. ஸ்ரீமீனாக்ஷி கோவிலிலோ அல்லதுமாகாணத்திலுள்ள வேறு எந்தக்கோவிலிலோ மேற் கூறிய வகுப்பார் பிரவேசிக்கும்படி அறநிலைத்தாரோ அல்லது இனி மேல் அறநிலைப் பதாரோ அவ்விதம்செய்வது ஹிந்துக்களின் பழக்க வழக்கத்திற்கு விரோதமானதென்ற காரணத்திற்காக ரத்து செய்ய முடியாது. இடைக்கால நடவடிக்கைகளுக்காகவும், வேறு பரிகாரமளிக்க வேண்டுமென்று கோரியும் யாதொரு வழக்கும் ஹிந்து மத தர்ம ஸ்தாபனச் சட்டத்தின்படி யாதொரு நடவடிக்கையும், வேறு எக்சட்டபடி யாதொரு நடவடிக்கையும் மகாண சர்க்காரின் முன் அனுமதியின்றித்தொடரக்கூடாது. இந்த சட்டம் அமுலுக்கு வருமுன் தொடரப் பட்டுள்ள எந்த நடவடிக்கையும் அதன் பின்னர் மகாண சர்க்காரின் முன் அனுமதியின்றி தொடர்ந்து நடத்தக்கூடாது. இந்த மசோதாவும் நோக்கங்களும் காரணங்களும் மேலே கூறபட்டபடி, இந்த மசோதா பிரகடனம் செய்ய வேண்டுமென்று மந்திரியால் கொண்டுவரப்படும்.

ஆலயப்பிரவேசத்துக்கு அனுமதி தரமாட்டோம்

குடந்தை தேவாலய டிரஸ்டிகள் உறுதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகளுடன் ஆலோசனை

அவர்கள் காங்கிரஸ் அழைப்பை ஏற்கவில்லை

குடந்தையிலுள்ள சௌக, வைஷ்ணவ தேவாலயடிரஸ்டிகளே ஸ்ரீராமேச்வரிகோவுடனும், காங்கிரஸ் வாதிகளுடனும் ஸம்பந்தப்படாதபேசவருமாறு எல்லா டிரஸ்டிகளுக்குர் சர்குலர்களாரால் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. ஆனால், ஒருவரைத்தவிர வேறு எவரும் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. டிரஸ்டிகள் ஒருவரும் வரவில்லை. போயிருந்த இருவர்கள் ஸ்ரீ கும்பேச்வர்கோவில் ஸர்க்கார் நிர்வாஹ அதிகாரியும், காங்கிரஸ்காரரான டிரஸ்டியுமாவர்கள். தேவாலயடிரஸ்டிகள் 15உ இரவு ஜகத்குரு ஸ்ரீசங்காசாரியஸ்வாமிகளை ஸ்ரீமடத்தில் தரிசித்துப்பேசினர்கள். அதேசமயம் எல்லா கோவில் டிரஸ்டிகளும் வந்திருந்தனர்.

ஸ்ரீஸ்வாமிகள் மௌனவிரதமனுஷ்டித்து வருவதால் டீடித்தபேச்சுக்களுக்கோ, சர்சைகளுக்கோ அவகாசம் ஏற்படவில்லையாயினும் சுருக்கமாயும், தெளிவாயும் தமது அபிப்பாயத்தை ஸ்ரீஸ்வாமிகள்ஜாடையாக வெளியிட்டார்கள். தீண்டாதார் ஆலயபிரவேசம் சாஸ்திரியமாகா தென்றும் அது தீண்டாதாரா ஷேமத்திற்கு ஏற்றதாகதென்றும்ஸ்ரீஸ்வாமிகள் கூறியதாகத் தெரிகிறது.

டிரஸ்டிகள்யாவரும் தாங்கள் ஆலயப்பிரவேசத்திற்கு இடம்கொடுக்காமல்உறுதியாய் நிற்பதாக ஸ்ரீஸ்வாமிகளிடம்தெரிவித்தார்கள் காங்கிரஸ்வாதியான டிரஸ்டி ஸ்ரீமான் வி. கல்யாணராமய்யர் மட்டும் தமக்குள்ளசங்தேகத்தை ஸ்ரீஸ்வாமிகளிடம் தெரிவித்ததாகத்தெரிகிறது. சண்டாளர்களென்பவர்கள் இப்போது விலக்கப்பட்டிருப்பவர்கள்தானென்றுசொல்ல ஆதாரமில்லையென்ற காங்கிரஸ் கக்ஷியை அவர் எடுத்துக்கூறினர் ஸ்ரீஸ்வாமிகள் இதற்குத்தக்க விடையளித்ததன் மீது அவரும் ஸ்ரீஸ்வாமிகளிடம்விதாயம்படி நடந்து கொள்ளுவதாகக் கூறினரென்று தெரிகிறது.

(சமது விசேஷ நிருபர்.)

கோயமுத்தூரில் வலு தநிகளின் கண்டனம்

கேரயம்புத்தூரில் 10-7-39 ஸ்ரீ அனந்த ராம தீக்ஷிதர் அவர்கள் அக்காசனத்தின் மேற் ஓர் பெரிய ஜனைனக் கூட்டம் கூடிற்று. "இந்த ஜனைன மதத்திற்கு விரோதமான ஆலயப்பிரவேசம், சாதாசட்டம், விதவைகளின் புனர்விவாகம் முதலிய சட்டங்களைக் கண்டனம் செய்து, அவைகளை ரத்துசெய்ய வேண்டுமென்று கொண்டுவந்த ப்ரேமனைவை அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஏகமனதுடன் ஆமோதித்தார்கள்.

இவ்விஷயங்களில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டு பாடுபட்டவரும் மதுரை பிரும்மஸ்ரீ கடேசய்யர், சென்னை ஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஸ்ரீ கே. பாலசுப்ர மண்ய அய்யர் மற்றுமுள்ள ஜனைன ப்ர முகர்களுக்கும் தங்கள் மனமார்ந்த வந்தனத்தை அங்கு கூடியிருந்த ஜனங்கள் யாவரும் தெரிவித்துக்கொண்டனர். அத்தோடு அவர்களை இவ்வித அக்ரமச் சட்டங்களை ரத்துசெய்வதற்கு வேண்டிய ப்ரயத்தனங்களை பார்லிமெண்டு சபை வரையில் போயாவது தர்மயுத்தம் செய்து ஜயித்துவரவேண்டியது என்று பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டனர்.

"இத் தர்மயுத்தத்தை நடத்த இதுவே தக்க சமயம். எனெனில் ஜனத்திகளில் பலர் ஆங்காங்கு அவ்வப்போது தர்மத்திற்கென்று ஏற்படுத்திய சத்திரம் சாவடிகளையெல்லாம் எடுத்து அவ்விடங்களில் ஆஸ்பத்திரிகளை வைத்து வியாதிகளை விருத்திபண்ணியும், பள்ளிகள் ஏற்படுத்தியும், வந்தேறி ஜனத்தலைவர்களின் நிதியாலிய கோவில் குளங்களையும் அபஹரிக்க யத்தனித்துவிட்டனர். இதனுல் ஜனத்தலைவர்கள் விழித்துக்கொண்டு விட்டனர் என்றும், கண்ட மதத்வேஷிகள் அச்சனதனிகள் சேர்ந்து போராடுமுன் சட்டங்களை ஏற்படுத்திவிடவேண்டுமென்பது இவ் பகலாய் உழைத்து வருகின்றனர். ஆனால் ஜனத்தலைவர்கள் எல்லோருமாகிய நாம் விழித்துக்கொண்டது மாத்திரமல்ல; ஒன்றுகூடி யுத்தத்திற்கு ஆயத்தமாய் விட்டோம் என்பதைத் தெரிவிப்போமாக முன் வைத்த காலை பின்வைக்காமல் ஜயமடையும் வரை ஸத்தியமே ஜயம், ஸத்தியமே நிச்சயம் என்றதான ஜயகோஷத்துடன் முன்னடை வோமாக. இவ்விதம் செய்ய எத்தனித்த பாவருக்கும் ஆண்டவன் அருள்புரிவதி ணம் என்று", தலைவர் கூறமுடித்தார்.

நிருபர்கள் வேண்டும்.

"ஆர்யதர்மம்" வாரப் பத்திரிகைக்கு இக்ஷிபாவின் பல முக்கிய இடங்களில் "நிருபர்கள்" வேண்டும். ஆரம்பத்தில் நிருபர்களுக்குப் பண உதவி செய்யமுடியாது. இலவசமாகப் பத்திரிகை அனுப்பப்படும். ஸ்தானிக தர்ம விஷயங்களைப்பற்றியும், முக்கிய செய்திகளைப்பற்றியும் நிருபர்கள் வாரந்தோறும் எழுதிஅனுப்பலாம்.

ஆசிரியர், 'ஆர்யதர்மம்', கும்பகோணம்.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்
"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட
மூலம் சாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
தபால் இலவு வேறு] [விலை அணா 0 8 0
இடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தன பிரிண்டிங் ஓர்க்ஸ், லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ஆலயப்பிரவேசம்

(ஸ்ரீ. S. வைத்தீஸ்வரய்யர், கல்கத்தா.)

தற்சமயம் ஆலயப்பிரவேசமே எல்லாரையும் ஆகர்ஷிப்பதால் அடியேனையும் வேறு விஷயங்களிலிருந்து தன்னிடம் இழுக்கிறது.

நிர்கணங்கள் என்பவை மனம், வாக்கு, காயம், மனிதனுடைய கார்யங்கள் இவைகளின் உதவியாலேயே கடக்கின்றன சிலர் தேகத்தால் உழைத்து ஜீவிக்கின்றனர். சிலர் வாக்குவன்மையால் ஜீவிக்கின்றனர். ஒரு வரைவிட ஒருவர் முறையே நாகரீக முள்ளவர் என்றும் உயர்ந்தவர் என்றும் சொல்லலாம். நாகரீகமில்லாதவர்களுக்கு மனம் தெரிப்புள்ளதாகவே இருக்கும். வாக்கில் மட்டுமிருப்பதை இராது. தேகம் ஒரே மூட்டு ஸ்வபாவம் உள்ளதாயிருக்கும். நாகரீக மத்தியிலும் எல்லாரும் சாத்தமுள்ளவர்களாகவோ கற்செய்களுள்ளவர்களாகவே இருப்பதில்லை. குணதோஷங்களில் ஒருவருக்கொருவர் வித்யாஸமுள்ளவர்களாக இருக்கிறார்கள். பூமியிலுள்ள ஜனங்களெல்லாம் நிரட்டி அவரவர் குணதோஷங்களுக்கு "மார்க்கு"க்கொடுத்து ஏற்ற ஸ்தானங்களைக் கொடுத்தால் சிலர் நிரவிலிருப்பார்கள். சிலர் அதற்குக் மேலே ஏறி, கண்கள், காதுகள், மூக்கு, வாய், கழுத்து, தோள்கள், கைகள், மார்பு, நாபி, அரை, தொடை, முழங்கால், கால், பாதம் என்ற முறையே ஒரு மரபோல் புருஷாகிருதியாக அங்கங்களில் அமைக்கப்படுவார்கள். அதாவது அந்தந்த அங்கங்களுக்குள்ள சாமர்த்தியத்திற்கு மேல் அவரவருக்கு இராதி. கால்கள் சுமப்பதும், உதைப்பதும் செய்வதைபோல் கிலருக்குத் தொழிலே பிரதானம். இம்மாதிரியே மற்றவை மற்றவர்களுக்கு. ஆனால் எல்லாம் ஒரு மூளைக்கு அடங்கி நடப்பதுபோல் ஒரு குடும்பத்திலும், ஒரு கூட்டத்திலும், தேசை வஹிக்கும் அதிகாரி அவசியமாகிறது. நாட்டிற்கு அதிகாரி அரசன். ஜகத்திற்கு அதிகாரி கடவுள். இந்த அதிகாரிகள் இல்லாவிட்டால் மூளையில்லாத மனிதன் போல குடும்பம், கூட்டம், நாடு முதலானவை கெட்டழிந்துபோகும்.

நிர்நாணங்களில் வாக்கையும் செய்கையையும் அடக்கி ஆள்வது அரசு. இது சட்டநிட்டங்களாலும் பேலீஸ் ராணுவப் படைகளாலும் செலுத்தப்படுகிறது. சட்டங்களுக்கு நியாயஸ்தலங்களும், படைகளுக்கு ராணுவஸ்தலங்களும், ராஜபரிஷிகளுக்குக் கோட்டைகளும் மிகவும் பக்தோபன்தாக்க காக்கப்படுகின்றன. கனதனவான்கள் கூட நினைத்தபடி உன்னேபோய்வரமுடியாது. (கம்முடைய வீடுகளிலும் மேனஜ்ட்டர் வீடுகளிலுங்கூட இன்னர் இன்ன இடத்திற்கு வரலாம் வரக்கூடாது என்ற கட்டுப்பாடுகள் இருக்கின்றன.) இக்கக் கட்டுப்பாடெல்லாம் எதற்கு? மனிதர்கள் காமக்ரோதாதிகளுக்கு வசப்பட்டு கெட்டவழியில் நடப்பதை நைஜமாகிருப்பதால் தான் தண்டனை பயத்தை நிச்சயமென்று கண்ணுக்கு தோன்றுவதால் தான் கட்டினாலும் தவறுகள் நடக்கின்றன. விசேஷ நினைவுகளில் படைகளை அணிவகுத்து சுகப்வேசம் செய்விக்கிறார்கள். இவ்வளவு வெளி ஆடம்பரங்களும் வாக்கையும் செய்கையையும் கட்டுப்படுத்துவதற்காக. இது சுவாகரீகமுறை. வரக்குக்கும் செய்கைக்கும் மனமே காரணம் என்பதை நாகரீகம் அறிவதில்லை. மனம் ஒன்றைமாத்திரம் சீர்திருத்திவிட்டால் போதுமென்று ஸமஸ முனிவர்கள் கொள்கை. இதனுலேயே ஒருவன் எண்ணுவதை முதல் புத்தம் செய்வதுவரையிலும் எல்லாவற்றிற்கும் மனிதவ சம்பந்தமாக சாஸ்திரங்களை ஏற்படுத்தி புண்யம் பாவம், ஸ்வர்க்கம் நரகம், என்று சின்மை தீமைகளைக் கூறி யிருக்கிறார்கள்.

கர்மேந்திரியங்களுக்குக் கட்டுப்பாடு அவசியமென்றால் ஞானேந்திரியங்களுக்கு அப்பரவசமல்லவா! தேச அதிகாரிகளைக் காணும் பொழுதே அவர்கள் அதிகாரங்களைக் காட்டுவதற்காக படைகள் மெய்க்காப்பாளர் அவசியமாயிருக்கிறார்கள். காணமுடியாத கடவுளினுடைய அதிகாரத்தைக் காட்ட வேண்டியது எவ்வளவு அவசியம். அதற்கு என்ன இருக்கிறது? அதுதான் கோவில் அதற்கு மெய்க்காப்பாளர் படி, சுத்தம் போன்றவை. மந்திரிகளும் சக்தியுள்ளவை. வட நாட்டில் "மந்திர்" என்று ஆலயங்களையே சொல்லுகிறார்கள். ஒரு மந்திரவாதி விஷகடிக்கு விஷ்ணு மந்திரித்துக் கொடுக்கிறான். அதை அருளிப்ரசாதம் தொட்டாலும் மேலே வைத்து விட்டாலும் பலிக்கிறதில்லை. இது எல்லோரும் மறிக்கது. மந்திரங்களால் விக்ரஹங்களுக்கு பிராணப்ரதிஷ்டையும், பூஜைகளும், கும்பத்திற்கு அபிஷேகங்களும் எவ்வளவோ நிரமமும் சிலவும் பட்டு செய்யப் படுகின்றன. இவை எ

21530

திருவிசலூர் நீலகண்ட சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருத பாடசாலை, திருவிசலூர், தஞ்சாவூர் ஜில்லா.

31—3—1939 தேதியோடு முடிந்த வருஷத்து கணக்குத் திட்டம். Balance sheet.

பொறுப்பு :—	ரூ.	அ.	பை.	ஆஸ்தி :—	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
பொது மூலதனம் சென்ற வருஷத்திய ஸ்டேட்மெண்டுப்படி மொத்தம்	37770	8	9	பாடசாலைக் கட்டடம்				2,500	0	0
சம்பளம் முதலியது கொடுக்க வேண்டியது	107	0	0	சென்ற வருஷக்கணக்குப்படி புஸ்தகசாலை புஸ்தகங்கள்	232	11	3			
				இந்த வருஷத்திய கூடுதல்	0	12	0	233	7	3
				சென்ற வருஷக்கணக்குப்படி சமையல் பாத்திரங்கள், கருவிகள் முதலியன	317	1	0			
				இந்த வருஷத்திய கூடுதல்	3	8	0	320	9	0
				சென்ற வருஷக்கணக்குப்படி ஈசற்காலி மேஜை வகையரு சாமான்கள்				240	8	0
				வருஷமுடிவில் கைவசமிருந்த நெல் கொள்முதல் லிஸ்ட்படி				224	3	6
				வரவேண்டிய கடன்கள் :— முதல்	14,300	0	0			
				,, வட்டி	1,310	2	8	15,610	2	8
				வட்டி கூடுதல் பாங்கிலிருக்கும் கடப்பு கணக்கு வட்டி				163	7	11
				கையிருப்பு தனம் :— மதரஸ் Provincial Co-operative Bank-ல்	12,971	14	10			
				சொக்கம்	2	13	5			
				பாடசாலை பிரதம பண்டிதரிடம்	4	11	7	12,979	7	10
				சென்ற வருஷத்திய ஸ்டேட் மெண்டுப்படி அதிகச்சிலவு	671	9	4			
				கடப்பு வருஷத்தில் அதிகச்சிலவு	34	1	3	705	10	7
				சர்க்கார் கடன்பத்திரங்கள் (ரூ. 5000 லிஸ்டிலுள்ளது)				4900	0	0
ஆக மொத்தம்.	37,877	8	9	ஆக மொத்தம்				37,877	8	9

ஆடிட்டர் ரிபோர்ட்டு :— 1939-ஞ மார்ச்சு மீ 31உ யோடு முடிந்த வருஷத்திய திருவிசலூர் நீலகண்ட சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருதபாடசாலை கணக்குகளையும், அந்தக்காலத்தைப்பற்றிய ஆஸ்தி பொறுப்பு ஸ்டேட்மெண்டையும் அவை சம்பந்தமான கணக்குப் புஸ்தகங்களுடன் வவுச்சர்களுடனும் எடுத்துப் பார்த்து பரீசோதனை செய்தேனென்றும் என்னுடைய அபிப்பிராயத்தில் மேலே காட்டிய ஆஸ்தி, பொறுப்பு ஸ்டேட்மெண்டானது மேற்படி பாடசாலையின் ஸ்திதியைப்பற்றி கணக்குக் கொடுக்கப்பட்ட தகவல்களின் படிக்கும் ஸமாதானங்களின் படிக்கும் பாடசாலையின் புஸ்தகங்களின் படிக்கும் உண்மையானதும் சரியானதுமான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறதென்றும் சர்டிபை செய்கிறேன்.

சென்னை,
20—7—39

M. S. ராமகிருஷ்ணய்யர்,
ரிஜிஸ்டர்டு, அகௌண்டெண்டு & ஆடிட்டர்.

உங்கள் நாக்கை ஏமாற்றுதீர்கள்

சாதாரணமாக மனத்திற்காகத் தயாரிக்கப்படும் பெருங்காயம் யாதொன்றுக்கும் பிரயோசனப்படுவதில்லை. உங்கள் நாக்கை ஏமாற்றுகிறது. புத்திசாலிகள் தங்கள் உணவுப் பொருள்களை வாங்குவதில் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். அவர்கள் ஸயண்டிபிக் T. T. பெருங்காயத்தையே கேட்கிறார்கள். ஏனென்றால் அது நல்ல சாக்கு என்று அவர்களுக்குத் தெரியும். பதினாறு வருஷ ஆராய்ச்சியின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஸயண்டிபிக் T. T. பெருங்காயம் 20-20% அபத் சத்தினால் காப்பாற்றப்படுகிறது. அதற்கு நறுமணமும் நற்சுவையும் உண்டு.

ருசிகரமான சாப்பாட்டிற்கும் ஜீரணத்தை சுலபமாக்கவும்
பரிசுக் கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

ஒரு பவுண்டு ரூ. 1—14—0

ஸைன்டிபிக்
டி. டி
மிஸ்க் பெருங்காயம்

The Premier English Weekly Devoted to the cause of Sanatana Dharma.

"Dharmarajya"

(Official organ of the Dharma Sevaka Sabha).

Patron Founder & Spiritual Director
H. H. Sri Sankaracharya, Puri.

Widely circulated in
India, Burma & Ceylon.

Best Medium for Advertisement

Annual Subscription Rs. 3.

Apply to:—

The Manager, "DHARMARAJYA"
Chandi Chowk, Delhi.

அறிக்கை.

"ஆர்ய தர்மம்" வாரப் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் செய்திகள், கட்டுரைகள் யாவும் ஒரே பக்கத்தில் மசியினால் மிகச்சுருக்கமாக எழுதி பிரதிதிங்கட்கிழமைக்குள் காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும். ஆசிரியருக்குச் செய்தி கனூ குறைக்கவோ, கூட்டவோ பூர்ண உரிமையுண்டு. ஆசிரியர்,
"ஆர்ய தர்மம்", கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyansundaram.





655
(215292)
399
3

REGD No. M. 2913. ARYADHARMAM Estd. 1915
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட்]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்யஃ பரிபாலயந்தாம் ந்யாயேன மார்கேண மஹீம் மஹீசாஃ ।
கோப்ராஹ்மணேப்யஃ சுபமஸ்து நித்யம் லோகாஸ்ஸமஸ்தாஸ்ஸுகினோ பவந்து ॥

விளம்பர விதிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு-24 | கும்பகோணம் பிரமாதி-வரு ஆடி-மீ 11உ 1939-வரு ஜூலை-மீ 27உ | வா-30

நாடெங்கும் ஆலயப்பிரவேசக் கண்டனம்

தமிழ் நாட்டில் நடந்த ஸனாதனிகள் கூட்டங்களின் நடவடிக்கை விபரங்கள்.

ஆல்இந்திய மாதர் மகாநாடு

குடந்தையில் கூடிற்று

ஆலயப்பிரவேசம் கண்டனம்.

குடந்தை சரிதையில் முதல் தடவையாக அஸ்திக மாதர்கள் மாநாடு ஒன்று ஜூலைமீ 21 தேதி மாலை 6-30 மணிக்கு ஸ்ரீ சாரங்கபாணி திருக்கோயில் மண்டபத்தில் கூடை பெற்றது.

மகாநாட்டுக்கு ஆயிரக்கணக்கில் ஸ்திரீகள் விஜயம் செய்திருந்தார்கள்.

காலம் சென்ற கனம் ஜஸ்டிஸ் ஸர். வி. பாஷ்யம் ஐயங்கார் மருமகளான ஸ்ரீமதி வி. சென்பகத்தம்மாள் தலைமை வகித்தார். அவர் கூறியதாவது :—

"இன்றைய தினம் இம்மகாநாடானது எக்காரணத்துக்காக கூட்டப்பட்டிருக்கிறதென்ப வெளியிடப்பட்டிருக்கும் துண்டு நோட்டீஸிலிருந்து உங்கள் எல்லோருக்கும் தெரியுமென்று நம்புகிறேன்.

ஸ்திரீகளாகிய நமக்கு உரிமைகள் வேண்டுமென்று எல்லோரும் பாடுபட்டுக்கொண்டு வருவது தெரிந்த விஷயம். நாம் வீடுகளில் வாழ்கை நடத்தும் பொழுது நம்முடைய முன்னோர்கள் வழிகாட்டியபடி நமக்குள்ள வழிகளே இன்றுவரை நாம் பின்பற்றிக் கொண்டு வருகிறோம்.

நாம் வீட்டை விட்டு கோவில்கள், காதகாலக்ஷேபங்கள் நடக்கும் இடங்கள், முதலிய இடங்களுக்குப் போய் தெய்வ பக்தி கொண்டாடி ஆஸ்திக வழியை பின்பற்றி வருகிறோம். அப்படி நாம் போகும் இடங்களில் வழக்கமாய் ஸ்திரீகளாகிய நமக்கு சில முன்றைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஸ்திரீகளுக்கு ஸ்தாநமான இடத்தை வகுத்து வருகிற வழக்கம்போல், ஹிந்து மதத்தைச் சேர்ந்த நமக்கு ஸ்திரீகளுக்குள் வழக்கமாயும் பாரம்பரியமாயும் உள்ள ஸ்திரீ சமூகத்தின் உரிமைகளை பாதிக்கும் முறையில் காரியங்கள் நம் நாட்டில் நடைபெற இடமிருக்குமானால், அவைகளை நாம் எல்லோரும் சேர்ந்து ஏகமனதாக கண்டிக்க உரிமையில்லையா? நமது வாழ்க்கை இதுகாறும் சாத்தமான முறையிலேயே நடைபெற்று வருகின்றது. இன்று நடைபெற்று வரும் வாழ்கை முறையில் அசௌகர்யம் இருப்பதாக ஒரு சிலர் பறை சாற்றுவதற்கு இடமேற்படையாது. அதனால் பாரததேசத்து ஸ்திரீகள் போல் சில சீர்திருத்தக்காரர்கள் செய்துவரும் ஸேவைகளை நாம் அடியோடு மறுத்து எதிர்க்க வேண்டுமா?

நம் பாரத நாட்டில் புராணங்கள் மூல்ய மாக ஸ்திரீகள் செய்திருக்கும் அரிய பெரிய சேவைகளை உலகமுழுதும் ஒத்துக்கொள்ளவில்லையா? சீதாபிராட்டியார், தமயந்தி, சாவித்திரி, அருந்ததி போன்ற கற்பரசிகள் பிறந்த இப்புண்ணிய பூமியில் கற்பின் மகிமையினால் நம் தர்மத்தை நிலைநாட்டி நமது ஹிந்து சமூகத்தை என்றென்றைக்கும் அழிவா நிலையில் ஸ்தாபிக்கவில்லையா? ஸ்திரீ சமூகத்தின் உரிமைகளையும் மத சம்பிரதாயங்களையும் காப்பாற்றுவதற்காக நாம் எல்லோரும் அபிப்பிராய பேதமன்றி ஒன்று சேர்ந்து பாடுபட வேண்டாமா?

சமீப காலமாக, சாஸ்திரோக்தமாயும், புராதனமாக வழங்கிவரும் காரியங்களுக்கும் பாதகமாய் தீண்டாதவர்களை ஆலயத்துக்(ள் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற [illegible] பலரிடமிருந்து [illegible]மும் ஹரிஜனங்கள் [illegible]10உ [illegible]க்குள் பிரவேசிக்க [illegible]மை னடையாது. அவர்கள் [illegible]வாரம் வேண்டும்) காரணத்தினாலும், உள்ளூர் பல தீர்மானங் அசுத்தத்தின் காரணத்தினால் வந்தனத்திற் காரணத்தினாலும், அவர்கள் [illegible]ப்பட்டது. பிரவேசிக்க உரிமையற்றவர்கள் என்று ஸ்ரீகிருஷ்ணதம், புராணம், ஆகமம், சாஸ்திரம் பரீக்ஷ பெரியவர்கள் தலைமுறையாக பறைசாற்றி வருகிறார்கள்.

நம் சமூகத்தில் மாதாமாதம் அசுத்தமாகப்போகும் காலங்களில் நாம் வீடுகளுக்குள் வேயே புழங்கக்கூடாது என்கிற சாஸ்திரம், வழக்கம், இரண்டும் சொல்லுவதை அனுஷ்டானத்தில் இதுவரையில் வைத்துக்கொள்ளவில்லையா? அந்த அசுத்தத்தை, சாஸ்திர முறைகள்படியும் சம்பிரதாயப்படியும் கீழின பிறகு தானே நாம் வீடுகளுக்குள் சுத்தர்களாய் புழங்குகின்றோம்? இதனால் மத உரிமைகள் பறிக்கப்பட்டு போய் விட்டனவா? நாம் தாழ்ந்தவர்களாய் விட்டோமா?

இது போன்ற விஷயங்களுக்கு ஆதாரமில்லை என்று சொன்னால் நாம் நம்ப முடியாது. நம்பவும் கூடாது. இல்லாத வாழ்கையில் நாம் தலைநிமிர்ந்து விளங்க வில்லையா? விதி என்று ஒன்று ஏற்பட்டால் அதை வணங்குவது முறையே அல்லாது தவறு என்பதை எக்கக்ஷியாரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள்.

(2 பக்கம்பார்க்க)

ஆலய பிரவேசக் கண்டனம்

(1பக்கம் தொடர்ச்சி)

இது போன்ற சமூக நடவடிக்கைகளில் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாய் ஏற்பட்டிருக்கும் வித்தியாசமே அர்த்த மற்றதன, நிருத்தப்பட வேண்டும் என்று சொல்லுதை இவைகளே ஆதியில் ஏற்படுத்திய பெரியார்கள் போன்ற நிறுத்த, நிறைந்த ஆஸ்திகர்கள் செய்வதா? அல்லது அனுஷ்டானமே இல்லாத நாஸ்திக மனப்பான்மையுடையவர்கள் சீர்திருத்தத்தின் பேரால் செய்வதை நாம் ஒப்புக்கொள்வதா? எக்காரணத்தைக் கொண்டும் சமீபத்தில் இளம்பியிருக்கும் விஷப்புகையை நாம் அடக்கா விட்டால் நம் சமூகத்தை நாசம் செய்துவிடும் என்பதற்குச் சந்தேகமுண்டா?

மதுரை ஸ்ரீமீனாக்ஷி அம்மன் கோவிலிலும், கல்லழகர் சுந்தராஜப்பெருமாள் சன்னதியிலும் ஹரிஜனங்களே சமீபத்தில் அனுமதித்தது பெருத்த தவருகும். அதை நாம் கண்டிக்கிறோம். கவர்ன்மெண்டார் இந்த காரியத்திற்கு ஆதரவு கொடுப்பது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல.

இவ்விதமான அநீதகரமான காரியங்களே கவர்ன்மெண்டார் அனுமதிப்பார்களேயானால் இந்த கவர்ன்மெண்டை நாம் எவ்விதம் கம்பிரமாக்குள்ள கிறிய உரிமைகளே காப்பாற்றிக்கொள்ள முடியும்.

சகோதரிகளே! இது சம்பந்தமாய் நாம் ஒரு பெரிய போராட்டம் ஒன்று ஆரம்பித்து நடத்தி வெற்றியடைய வேண்டியது நம் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடமை என்பதை இக்கூட்டம் தீர்மானமாய் தீர்மானிக்கிறது. இந்த தீர்மானம் கூடியிருக்கும் பகிரங்கக் கூட்டத்தில் ஒருமனதாய் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டதாக இக்கூட்டம் அறிவிக்கிறது.

மேல்மங்கலம்.

ஜூலை 19ம் தேதி மேல்மங்கலம் சிறுமத்தில் ஸ்ரீ பிலாஞ்சேரி சுப்பிரமணிய அய்யர் தலைமையின் கீழ் மதுரை நீண்டாதார் ஆலய பிரவேசத்தைக் கண்டிக்க ஓர் மாபெரும் கூட்டம் கூடிற்று. பக்கத்து ஊர்களிலிருந்து ஜனங்கள் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர். கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:—

"மதுரை நீண்டாதார் ஆலயப்பிரவேசம் அக்ரமமென்றும், வரம்புக்குமீறின அநீதியென்றும், நியாயத்திற்கு ஒவ்வாதது என்றும்," இக்கூட்டம் பலமாக கண்டிக்கிறது.

இது சம்பந்தமாக குறுகின (நோக்கத்துடன்) சென்னை சர்க்காரால் கொண்டு வரப்பட்டிருக்கும் "தொடராதோழிச் சட்டத்தை" இக்கூட்டம் கண்டிக்கிறது.

"தொடராதொழிச்சட்டத்தை" எவ்விதத்திலும் உத்தரவு செய்ய வேண்டுமென்று மே. தகவர்னரவர்களே பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறது.

இது விஷயமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிற மதுரை வர்ணச்ரம சங்கத் தலைவர் ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யர் அவர்களையும் மற்றமுள்ள ஆஸ்திக மகாஜனங்களையும் இக்கூட்டம் வெகுவாகப் பாராட்டுவதுடன், கோவில் அர்ச்சகர் ஸ்பந்திகள் முதலியவர்களே மேற்படி கோவில்களின் முறை மாற்றப்பட்டு கோவில்களில் பிராயசித்தம் செய்யும் வரை கோவில்களின் தேவலீலைகளை விட்டு விலகி இருக்கும் படியும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

காங்கிரஸின் தஸ்தட்செய்கையைக்கண்டித்தக் காங்கிரஸை விட்டு விலகின ஸ்ரீ K. R. வெங்கட்டராமய்யர் அவர்களே இக்கூட்டம் பாராட்டுகிறது.

நீண்டாதார் ஆலயப்பிரவேசத்தை மூலம் தேசத்திற்கு நாசம் ஏற்படுமென்பதை சர்க்காருக்கு இக்கூட்டம் ஞாபகப்படுத்துகிறது.

(நமது விசேஷ நிருபர்)

தேவகோட்டை

ஸ்ரீ வைஷ்ணவ சங்கம்

ஷிசங்கத்தின் ஆதரவில் மதுரை ஆலயப் பிரவேச கண்டனக் கூட்டம் ஆடிமீ 6உ (22—7—1939) அம்மச்சினி ரஸி கிருஷ்ணன் கோவிலில் நடைபெற்றது. அச்சமயம் திருக்குடந்தை ராய குருகேடி கன்னிகாதானம் ஸ்ரீவறவே. ஸ்ரீவேளை தாத்தாச்சார் ஸ்வாமிகள் அக்ராஸனம் வகித்தார்கள்.

வக்கீல் ஸ்ரீமான் K. நிருவேங்கடத்தய்யங்கார் மதுரை ஆலயப்பிரவேசம் விஷயமாய் நடக்த விஷயங்களே எடுத்துச் சொன்னார். பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றம.

ஆலயப்பிரவேசம் சாஸ்திரத்துக்கும், வழக்கத்துக்கும் விரோதமென்றும், அவசரச்சட்டம் செய்திருப்பது ராஜாங்கத்தார் கடுநிலைமைக்கு விரோதமாக இருக்கிறதென்றும், ஆஸ்திகர்கள் நியாயம் பெற நடவடிக்கைகள் செய்வதற்கு இடையூராகவும் மேன் மேலும் அக்ரமம் செய்வதற்கு சலுகை கொடுப்பதாக இருக்கிறதென்றும் இக்கூட்டம் கண்டிக்கிறது.

அக்ராஸனாதிபதி அவர்கள் தமது முடிவுரையில் "ஆகம சாஸ்திர விதிப்படி பிரதிஷ்டையரரும் கோவில்களில் ஷ விதிப்படி இன்னின்ன வருணத்தார் இன்னின்ன வரை பிரவேசிக்கலாமென்றபடி நடக்க வேணும். ஆகவே இப்போதிய ஹரிஜன ஆலயப்பிரவேசம் செய்யவிடக் கூடாது. அக்மித்து ஷை பிரவேசம் ஆகி விட்டால் ஆஸ்திகர்கள் கோவிலுக்குப் போகக் கூடாது. அர்சகர்கள் பூஜை செய்யக் கூடாது. ஆலயப்பிரவேசம் எல்லோருக்கும் சம உரிமை கொடுக்க வேணுமென்றும், கொடுத்தாரு மென்றும், புதுக்கொள்கைகாரர்கள் இஷ்டப்படி செய்து வருவது ஆஸ்திகர்களுக்கு ஹிம்சை செய்வதாகிறது," என்று கூறினர்.

குன்னக்குடி.

18—7—39 மாலை 4 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில், "ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் ஆலயத்தில் நீண்டாதார்களே அழைத்துச்சென்றதையும் அதற்கு உடந்தையாக ஆலய நிர்வாகிகளும், காங்கிரஸ் கவர்ன்மெண்டாரும் இருக்கவருவதையும், சட்டத்தின் பெயரால் காங்கிரஸ் கவர்ன்மெண்ட் அவசரச்சட்டங்களே பிறப்பிப்பதை மிக்க அநீதி யென்றும், பிரசங்கமேடையிலும் பத்திரிகையிலும், காங்கிரஸ் காரர்கள் மாயா பிரசாரம் செய்து வருவதையும், பலமாகக் கண்டித்தும் ஸ்தானிகர்கள் எதையும் பொருட்படுத்தாமல் சம்புரோக்ஷணம் செய்தாலன்றி பூஜை செய்ய மறுத்து வருவதையும், அகில இந்திய வர்ணச்ரம சுவராஜ்ய சங்கத்தலைவர் ஸ்ரீ என். நடேசய்யர் நீதி ரமாக நின்று போராடி வருவதையும், ஸநாதனிகள் உத்ஸாகத்துடன் மத சம்ரக்ஷணத்திற்காகப் போராட முன்வரவேண்டுமென்றும்," தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், குன்னக்குடி ஸ்ரீ முருக ஸ்திதியில் நீண்டாதார்களே காங்கிரஸ் கார்களால் அழைத்துப்போக எண்ணியிருப்பதை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ பண்டாரசன்னிதி அவர்களும், டிரஸ்டிகளும் அத்தகைய நீச ஸேஷ்டியாக்கை [illegible] ஒதுக்கு [illegible] ளப்பட்டது.

நாட்டார்களும், இதரர்களும் எதுவரினும் தங்கள் நீண்டாதர்களே ஆலயத்திற்குள் விடுவதற்கு உடந்தையாக இருக்கமாட்டோமென்று உறுதி கூறினர்கள். ஸ்ரீ எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள் முதலானோர் உருக்கமாக சொற்பொழிவாற்றினர்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

(கு நி)

ஸ்ரீரங்கம்

18—7—39 மாலை 7 மணிக்கு ஸ்ரீரங்கம் மேழ வாசலில் ஸ்ரீவிலாஸம் அச்சுக் கூடத்திற்கு முன்பாக ஆலயதர்ம ரக்ஷண ஸபையரின் ஆதரவில் மாலி போலீஸ் டிப்டி சூப்ரண்ட் ஸ்ரீ K. நாராயண அய்யங்கார் தலைமையில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் கூடி பெற்றது.

அக்ராஸனர் முகவுரையாக "காங்கிரஸ் காரர்கள் செய்கைகளே பலமாய் கண்டித்து, ஒருவர் ஆக்ஷேபித்தால் கூட ஆலயப்பிரவேசத்தை செய்வதில்லை என்று சொன்னதற்கு மாருக செய்வதையும், விளக்கி விண்ணப்பங்கள் செய்யப்பட்டாலது, ஜாதி தர்மங்களே காப்பாற்ற வேண்டியது அவசியமென்றும், விரிவாய் பேசினர். மேலும் உபன்யாஸகர் காஞ்சியில் ஆலயப்பிரவேசத்தை கண்டித்து ஏராளமான கையெழுத்து வாங்கப்பட்டு வருவதாயும் தெரிவித்தார். உயிரைக் கொடுத்தாவது ஆலயங்களைக் காப்பாற்ற வேண்டியது அவசியமென்றும் கூறி முடித்தார். பிறகு உத்தம ஹிந்து ஸ்ரீ செங்கசமி அய்யங்கார் பேசினர். வித்வான் கோவித்தசாரிய ஸ்வாமிகள் வந்தனோபசாரம் கூறினர். பறகு கூட்டம் முடிவடைந்தது.

வர்ணாச்ரம ஸ்வராஜ்யஸங்க மஹாநாடு

மதுரையில் கூடிற்று

ஆலயப்பிரவேசத்தை எதிர்க்கத் தீர்மானம்

சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் ஆறுவது ஸமாவேசனமானது மதுரை ஸ்ரீ ஸநாதன தர்ம வித்யாலய பக்தியில் ஜூலை 22, 23 தேதிகளில் விசேஷ உத்ஸாஹத்துடையில் வெகு சிறப்பாக நடக்கத்து. மதுரை ஆலயப்பிரவேச ஸம்பவத்தின் உண்மையை அறிந்து 'கொள்ளவும், அதைப்பலமாக எதிர்க்கவும் விசேஷ உத்வேகம் கொண்ட நாற்றுக்கணக்கான பிரதிநிதிகள் பல ஜில்லாக்களி லிருந்தும் வந்திருந்ததுடன், உள்ளூர் பிரபலஸ்தர்களும், வைதிகர்களும், பொது ஜனங்களுமாகக் கணக்கற்ற ஸபையில் கூடியிருந்தனர் அந்தப் பக்தல் முழுவதும் நிற்க இடமின்றி ஒரே ஜன ஸமுத்ரமாகக்காணப்பட்டது.

ஸ்திரீகள் இந்தக்கூட்டத்தில் அதிக சிரத்தை காட்டி நாற்றுக்கணக்கில் கூடி ஸபை நடவடிக்கைகளைக்கவனித்து வந்தது விசேஷ மாகக்குறிப்பிடத்தக்கது. 22உ காலை 7மணிக்கு ஸநாதன தர்ம வித்யாலயத்திலிருந்து பெரிய ஊர்வலம் புறப்பட்டது. ஸமமேளனத்தலைவர் ஸ்ரீ எம். கே. வைத்யநாதய்யர், ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யர், உபசரணைக்குமிட்டிதலைவர் ஸ்ரீ வரதராஜுலுநாயுடு காரு, ஆகியவர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். பாண்டுவாத்யம், நாதஸ்வரம், குடை, சாமரம் இடுபிடி முதலிய பிருதுகளுடன் ஊர்வலமானது பலமுக்யத்தெருக்கள் வழியாகச் சென்றது. [illegible] மாடிகளிலும், வேடிக்கை [illegible] கூடி ஸந்தோஷ ஆரவாரஞ் செய்தனர். நகரப் ரமுகர்களும் பொது ஜனங்களும் ஏராளமாக ஊர்வலத்துடன் சென்றனர். ப்ரமாணைக் தமர்களால் உபநிஷத் பாராயணமும் செய்து வரப்பட்டது. ஊர்வலம் ஸபை வாசல் வந்து முடிந்த பின் யாவரும் ஸபைப்பக்தலில் கூடினர்கள்.

ஸபையில் உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் பலர் காணப்பட்டனர். ஸ்ரீமான்களான, கே. ராமய்யங்கார், மாஜி எம். எல் ஏ. என். எஸ். விச்வரதய்யர், அட்வகேட் ஆர். கணபதி அய்யர், என். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், வி. எஸ். ராமஸாமி சாஸ்திரிகள், எம். என். ஸுப்ரமண்ய சாஸ்திரிகள், கே. வி. ஸுப்ரமண்ய சாஸ்திரிகள், கொஞர் சாரா யண அய்யங்கார், வி. கே ஸ்ரீநிவாஸாசாரியர், ராவ் பஹதூர் காலிம்ம அய்யங்கார், என். நடேசய்யர், பங்களூர் கிருஷ்ண பகவதர், கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் வக்கீல், ஏ. ரங்கஸாமிஅய்யர், கே. ஆர். வெங்கடாசலய்யர், ஜி. எஸ். விச்வரத சாஸ்திரி, ஸோம ஸுந்தர சாஸ்திரி, கல்யாணஸுந்தர பட்டர் (ஸ்ரீமீனாக்ஷிகோவில் பட்டர்) ஜகதீசய்யர், மதுரை. ஸப்தவேல்பிள்ளை (சுதர்மம், எடிடர் கோதண்டம் செட்டியார், தேவகோட்டை, திருபனங்குன்றம் வேலுசாமி தேவர், ஸில்லா கோர்ட் ராஜிசிஸ்தார், ஸ்ரீ தங்கமய்ய ங்கார், விச்வரத அய்யர் அட்வகேட் நிண்டுக்கல், ஸாமிரதய்யர், நிண்டுக்கல். ஆர். கிருஷ்ணஸாமிஅய்யர், அட்வகேட், திருநெல்வேலி, எஸ். ஸுப்ரமண்யய்யர் அட்வகேட் தேவகோட்டை, ஸ்ரீ காகாதன சாஸ்திரிகள் அட்வகேட் தேவகோட்டை, ஸ்ரீஸுந்தரேசச்ரோ திகள் திவகங்கை. ஸ்ரீராமரத சர்மா, திவகங்கை டி. பி. ஜகதீசய்யர் ஆத்தங்குடி. ஸ்ரீ முத்துஸாமி அய்யங்கார், மேலமங்கம் சிவராம கணபதி கனபாடிகள் முதலியவர்கள், என். எஸ். விச்வரதய்யர் ஸ்ரீ S. மஹாலிங்கய்யர் கும்பகோணம், ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் கவிரத்னம் பஞ்சாபகேச சாஸ்திரி கும்பகோணம், அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார், ராமரஜதாதாசாரியார், ஸுந்தரேச சர்மா, பி. ராகராஜய்யர், நாட்டு நாராயணராவ், சங்காராயணய்யர், கோயம்புத்தூர். ஸ்ரீராமதேசிகாசாரியர், சோழவந்தான் ஸ்கூல் பண்டிட். சேங்காலிபுரம் வைத்யராத சாஸ்திரி, ராஜபாலபுரம் வல்லப தெய்வம், ஸ்ரீஸுந்தராஜய்யங்கார், ஸ்ரீரங்கம். டி. எஸ். வெங்கடாசலய்யர் ஆங்கரை, திருச்சி காலேஜ் தாதா ஹிவ பிரம்மம் முதலிய உள்ளூர் வெளியூர் பிரமுகர்கள் பலர் விஜயமாகியிருந்தனர்.

ஆரம்பத்தில் உபநிஷத் பாராயணம் செய்தவுடன் ஸநாதன தர்மவித்யாலய மாணவ மாணவிகளால் இனிய குரலில் தேவதா ஸ்தோத்திரங்கள் செய்யப்பட்டன.

உபசரணைக்கமிட்டித் தலைவரான ஸ்ரீமான் வரதராஜலு நாயுடு அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்றுத்தமது உபசரண பிரசங்கத்தை படித்தார். (அது தனியாக பிறகு வெளியிடப்படும்.

பிறகு மதுரை வக்கில், ஸ்ரீமான் என். எஸ். விச்வரதய்யரவர்கள், கும்பகோணம் வக்கீலும், சிறந்த ஸநாதன தர்மியுமான ஸ்ரீமான் எம். கே. வைத்யநாதய்யரவர்களைத் தலைவர் [illegible]

ஸ்ரீமான் விச்வரதய்யர் பேசுகையில், தம் ஸநாதனதர்ம பிரசார விஷயத்தில் ஸ்ரீ நடேசய்யருடன் தீவ்ரமாகக் கலந்துகொள்ளுவது வழக்கமில்லாதிருந்தபோதிலும், இப்போது அவஸரச்சட்டம்போன்ற நீதிகைள் அதிகரித்துவருவதைக் கண்ட பிறகு ஒதுங்கி நிற்கக்கூடாதென்று முடிவு செய்திருப்பதாகக் குறிப்பிட்டு, ஸ்ரீமான் வைத்யநாதய்யரவர்களுடைய தகுதிகளைப்பற்றி விவரித்து பிரேரேபணை செய்தார்.

மேற்சொன்ன மாறு புத்தியால்,-சென்ற சில வருஷங்களுக்குள், நாம் பிராணதாரமாக கருதிய பிறகு விஷயங்களில் கெடுதல் பண்ணி விட்டார்கள். நமக்கு விவாகமென்பது ஒரு ஸம்ஸ்காரம். வெறும் ஒப்பந்தமல்ல. பிரிக்கமுடியாத ஒரு பந்தம். அதற்கு முதலில் பெரும் கேடு செய்தது சாரதா சட்டம். விவாஹத்தின் புனிதத்தன்மையையும், அழகையும் அது நாசமாக்கி விட்டது. பெண்கள் ருதுவாகும் முன் கலியாணமாவதை அது தடுத்துவிட்டதென்பதா மட்டுமில்லை. பதினலுவயது ஆன பின்னும், வயது வரையறை யில்லாமல் விவாஹம் பின்னல்ஒத்திக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. பதினலுக்குப்புறமாவது இன்ன வயதுக்குள் கலியாணம் ஆகிவிடவேண்டுமென்று சட்டம் பண்ணினால் நலம் என்று சிரிருந்த வாதி ஒருவர் என்னிடம் சொன்னர். இல்லாவிட்டால் கலியாணம் எப்போதானலென்ன. எனது மாதாபிதாகளுக்கு அதிரத்தை வந்து விடுகிற தென்ற காண்பித்தார். வயதான பெண்கள் கலியாணமாகாமலிருப்பதிலிருந்து என்ன அசுகர்ப்பங்கள் கேரிடக்கூடு மென்பதை சிந்திக்க வேண்டும். வயது வந்த பின் பெண்களே கலியாணம் பண்ணிக்கொடுக்கும் ஜாதியார்கள், அப்பெண்களே விட்டுக்குள்கோஷ்டி வாக வைத்திருக்கின்றர்கள் என்று கேள்வி பட்டேன். கெருங்கின பந்துக்கள் கூட அந்தப்பெண்ணைப் பார்த்து பேசக்கூடாதாம். கலியாணமாகிற வரையில் இந்த மாதிரி பாதுகாப்புக்கு உட்பட்டிருக்க வேண்டுமாம். எந்த ஜாதிப் பெண்ணுலும் சரி, எந்த வயதில் கலியாணமானுலும் சரி, பெற்றோர்கள் தான் தக்க வரனைத் தேடிக்கொடுக்க வேண்டும். வேறு எவரும் அந்தப் பொறுப்பை வஹிக்க முடியாது. பெண்ணை கல்ல இடத்தில் கொடுக்கவேண்டுமென்ற பெற்றோர்களுக்கு இயற்கையாகவே கவலையுண்டு. சரியான வரனைத் தெரிந்து கொடுக்க அவர்களுக்கே போதிய அனுபோக முண்டு. வழமையினுலோ, வேறு எந்த மூகார்த்தத்தாலோ பெண்கள் நன்மைக்கு விரோதமாய் நடக்கும் பெற்றோர்கள் வெகு அபூர்வம். யாராவது எங்கேயாவது அப்படிச்சிலர் இருப்பதற்காக ஒருசிலும் இவை போதாதென்று, விவாஹத்து செய்யவும், பர்யைகள் புருஷர்களே விலக்கி விட்டு வாழவும், சட்டம் பண்ணவேண்டுமென்றிரூர்கள். கமது சமூகத்தில், தம்பதிகள் பெரும்பாலும் துன்ப வாழ்க்கையுள்ளவர்களையிருக்கிறார்களென்றுவது அப்படி அகேகருடும்பங்கள் இருக்கிறதாகவாவது ஒருவரும் சொல்ல முடியாது. ஏனெனில், விவாகமென்பது ஒரு ஸம்ஸ்காரமென்றும், ஆயுளுக்கு பிறகு கூட ஞை இருப்பதால், எப்படியோ பரஸ்பரம் அன்பு ஏற்பட்டு இல்வாழ்க்கையை அஞ்சுக்கிறன்டு பழுதில்லாமல் ஒத்தமையாய் நடத்துகிறார்கள். விவாஹக்கட்டை பிரித்து விடலாமென்று ஏற்பட்டு விட்டால், இப்படி ஸ்வபாவமாய் நடக்கும் தாம்பத்யத்தின் மேன்மை தானுகுறைந்து விடும். அதுபோலுல் ஸ்த்ரீகளின் சுதந்தியும் போய்விடும். ஒரு வயது எல்லே குறிப்பிட்டு, அதற்கு மேற்பட்டவர்கள் இளம் பெண்களைக் கலியாணம் செய்யக்கூடாதென்று சட்டம்பண்ண ஆரம்பித்திருக்கிறார்கள், வயதாயும் கலியாணம் பண்ணிக்கொள்ளாதவர்கள் எத்தனே பேர்கள் எவ்வளவுவருஷம் பிறகு இல்வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று கணக்கெடுத்துப்பார்த்தால், விஷயம் தெளிவாகும். இவ்விதக் கலியாணங்கள் வெகு சில என்று தெரியவரும். இதற்காக ஒரு சட்டம் பண்ணுவது விவேகமாகாது. இந்தமாதிரி கலியாணக்களைத் தடுத்துவிட்டாலும் கூட, வேறு பல அனர்த்தங்கள் உண்டாகக்கூடும்.

இவைகளையெல்லாம் ஆட்சேபித்த கடுமையாய் கிளர்ச்சி நடத்தி ஸ்த்ரீகர்களும் பண்ணி ஜயிலுக்குப்போய் எல்லா ஆர்பாட்டங்களும் நாம் பண்ணுததால், நிஜமாய் நமக்கு கெடுதிகேரிட்டதாய் நாம்கருதவில்லே என்று நினைக்கிறார்கள். அப்படி நினைப்பது சரியல்ல.

பணச்செலவை உத்தேசித்து வெகுவாய் அதிகாரர்கள் கலியாணம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அப்படி செய்வது சாஸ்திர விரோதம். நான்கு நாட்கள் விவாகத்தையே எல்லரும் அநுஷ்டிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். விசேஷச் செலவு கொள்ளும் காரியக்களே ஒரு நாளோடு முடித்து விட்டு வரனும் பெண்ணும் மற்ற மூன்று நாளைக்கும் வைதிக காரியங்களைச்செய்யும்படி செய்யவேண்டும். இப்படிச்செய்தால் சாஸ்திரப் படியுமாகும். செலவும் குறையும்.

ஆலயப்பிரவேசம்

நமது கோவில்களெல்லாம் ஆகம சாஸ்திர விதிகளின்படி நிர்மானபடி நிர்மானம் பண்ணி பூஜைகள் நடத்து வருகின்றன, ஆகமங்களில் நம்பிக்கையுள்ளவர்களுக்குத்தான் அங்கே இடமுண்டு. ஆகம விதிகளின்படி அவர்னர்களுக்கு பிரவேசம் கிடையாது என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர்கள் பிரவேசித்தால் ஸம்ப்ரோக்ஷணம் முதலிய பிராயசித்தங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. நான் என்ன விதம் சொல்லி மறைத்தாலும் சரி, அவர்னிகளே ஆலயங்களுக்குள் அழைத்துச் செல்வது பலாத்கார காரியம் தான். ஸ்ரீமீனுக்ஷிசுக்தரேசுவர் கோவிலில் சில காட்களுக்கு முன் பண்ணின பிரவேசம் சகிக்கமுடியாத ஹடகாரியம். ஸ்வர்னர்கள் தரிசிப்பதற்கும், தொழுவதற்கும். ஏற்பட்டது இந்த ப்ரசினமான கோவில் மதுரையில் மட்டுமல்ல. அந்த ஆலயத்தில் பங்கியுள்ளவர்கள் அதில் இந்நியாவிலும் இருக்கிறார்கள். அதில் நுழையக் கூடாதவர்கள் அதில்புகாமல் நாத்து, எந்த ஜனங்களுக்காக அந்த கோவில் ஏற்பட்டதோ அவர்களுக்கு கஷ்டம் வராமல் காப்பாற்றித்தர வேண்டியது கவர்மெண்டாரின் முதற் கடமை.

ஆட்சி நடத்தும் கஷ்டங்கள் கோடிக்கணக்கான பக்த ஜனங்களின் மனதைப் புண்படுத்தி,சட்டவிரோதமான காரியம்செய்யத் துணிந்தவர்களைத் தாமே காப்பாற்றுவதாக முன் வந்திருக்கிறார்கள். மந்திரிகளின் மனதைத்தெரிந்துக்கொண்டு யாரும் கேட்டால் தலே குனியும்படியான இழிவான வழியில் ஆலயபிரவேச அநியை ஒரு சிலர் நடத்தி யிருக்கிறார்கள். ஹிம்சை என்பது கையால் அடித்தால் தான் என்பதில்லே. மனதை துன்பப்படுத்துவதின் மூலமாயும் ஹிம்சை உண்டாக்கலாம். இந்த ஹிம்சை இன்னும் அதிக குரூரமுள்ளது. கோவில் வ்யவஸ்தைகளே ரட்சிப்பதற்காக நியமிக்கப்பட்டவர் நிர்வாக அதிகாரி. அதற்காகவே அவர் கோவில் வரும்படியிலிருந்து சம்பளம் பெறுகிறார். அவரே ஒழுங்கு விரோதமானகாரியத்தைச் செய்திருக்கிறார். புராதனமான சம்பிரதாயங்களையும் வழக்கங்களையும் உள்ள படியே ரக்ஷிக்க சட்டப்படி கட்டுப்பட்டுள்ள எண்டோமெண்ட்ஸ் போர்டருமே அந்த அதிகிக்கு ஆதாவாயிருக்கிறார்கள். குற்றம் பண்ணின பிரகார அதிகாரியை வேலேயை விட்டு ஸஸ்பெண்டு செய்யவேண்டியிருக்க, புராதன ஆசாரப்படி நடத்தவர்களே அவர் ஸஸ்பெண்டு பண்ணும்படி விட்டிருக்கிறார்கள். இந்த ஆச்சரியத்தை எப்படி வர்ணிப்பது? இன்னும் பெரிய ஆச்சரியம் என்னவென்றால், இது சிவில் சட்டப் படிக்கும், கிரிமினல் சட்டப்படிக்கும் குற்றமென்று கவர்மெண்டாருக்கு கன்றாய்த் தெரிந்திருந்தும், அதை மன்னிக்கப் புதி ஆர்டினன்ஸ் கொண்டுவந்து சட்டத்தை மீறிவர்களைக் காப்பாற்ற முற்பட்டிருக்கிறார்கள். இதனுலெல்லாம் நமக்கு

(தொடர்ச்சி 11ம் பக்க)

மதுரை மகாநாடு

ஸ்ரீ. M. S. வரதராஜலு நாயுடு பிரசங்கம்

ஸ்ரீ M. S. வரதராஜலு நாயுடு அவர்கள் மதுரை மகாநாட்டில் நிகழ்த்திய வரவேற்பு பிரசங்கமாவது:—

"மதுரை வர்ணச்ரம ஸ்வராஜ்யசங்கத்தின் சார்பாகவும் வரவேற்பு கமிட்டியாரின் சார்பாகவும், இவ்விடத்தில் கூடியிருக்கும் மகாசபையோரின் வரவேற்பை விண்ணப்பித்துக் கொள்ள, தருக்க கல்வி கேள்விகள் சிறிதும் இல்லாதவனும், ஆசார ஒழுக்கங்கள் சரிவர பயிலாதவனுமாகிய அடியேன், பெரியோர்களால் இடப்பட்ட கட்டளேக்கு கீழ்படிதல் வேண்டுமென்ற கொள்கையுடன் மட்டுமே எனக்கு இடப்பட்ட இந்த கட்டளேயை நிறைவேற்ற முன் வந்துள்ளேன்.

மதுரை ஜில்லாவில் இது ஆறுவது மகாசபை. நமது பாரத நாட்டில் சென்ற சில ஸ்வகால மாக சனுதன தர்மத்திற்கே பலவிதத்திலும் கெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. தற்சமயம் இம்மதுரை நகரில் ஏற்பட்டிருக்கும் அசம்பாவிதமான கெருக்கடியே பொருக்கத்தக்கதாயில்லே. பிரதி வருஷங்கள்தோறும் நாம் மகா சபை கூட்டி வந்திருந்தாலும், மற்றெல்லா சமயங்களையும் விட இது சமயம் நாம் இந்த மகா சபை கூடவேண்டியது மிகவும் அவசியமனென்று நான் சொல்ல வேண்டியதில்லே. அதுவும் இப்போது இம்மதுரையில் கூடவேண்டியது எவ்வளவு அவசியம் என்பது தங்களுக்குத் தெரிந்ததே. இந்த மகா சபை மூலம் தங்கள் தங்கள் தங்களுடைய பலவீனர் வேகைளுக்கிடையில் இவ்விடம் வந்த கூடியிருப்பதற்கு எங்கள் மனமார்ந்த வந்தனத்தடன் தங்களே வரவேற்கிறேன். குற்றம் குறைகளுக்கு மன்னித்த இந்த சபையை நடத்தி நன்றே பூர்த்தி செய்ய வைக்குப்படி பிரார்த்திக்கிறேன்.

இம்மகா சபையோரை வரவேற்கும் விஷயத்தில் அக்ராஸனர் முன்னுரையும் முடிவுரையும் இருக்கவும், மற்றும் மகாசபையில் கூடியிருக்கும் பெரியோர்கள், சனுதன தர்ம விஷயமாயும், அது சம்பந்தப்பட்ட பல நடவடிக்கைகளேப் பற்றியும், சுற்காலநிலேமையை அனுசரித்த ரீர்திருத்த விஷயங்களேப் பற்றியும், தருத்த அனுஷ்டானங்களேப் பற்றியும் விரித்துப்பேசி நீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டியிருக்கவும் நான் வரவேற்பில் அதிகமாகப்பேசத் தகுதியில்லே. ஆனுல், நாம் இந்த மகாசபையில் ஆலோசிக்க வேண்டிய விஷயங்கள் பலவற்றுள் சிலவற்றை நானும், இந்த சபையோர் முன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் எவ்விதமான சாஸ்திரப் பயிற்சியும் சிறிதும் இல்லாதவன். தவிரவும், பெரியோர்கள் எவரிடமும், கேள்விகள் மூலமாயாவது, எதுவும் கற்று அறிந்தவனில்லே. தகுதியான எவ்விதமான கல்வியும் பயின்றவனுமல்ல. ஆனுல் எனது ஸ்திற்றவுக்கேற்ப ஏதோ தெரிந்து கொண்ட சில அநுபவங்களிலிருந்து அடியிற்காணும் விஷயங்களே விண்ணபித்துக்கொள்ளுகிறேன். அபிப்பிராபேதங்கள் பல ஏற்படலாம். சபையோர் விஷயங்களே ரீர்தூக்கி தருத்த அவசியமாக முடிவு கட்டும்படி பிரார்த்திக்கிறேன். குற்றம் குறையாவற்றையும் மன்னித்து எனுல் இந்த விண்ணப்பத்தின் மூலம் ஏற்படக்கூடிய எவ்விதமான அபசாரத்தையும் கண்ணியத்துடன் மன்னிக்கும்படிக்கும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சனுதன தர்மம் இன்னது என்றும், சனுதனம் என்றால் இன்னதென்ற தெளிவுறச்சொல்ல தெரியாதவனுமும், யோக்கியதை அற்றவனுகவும் இருக்கிறதற்கு விசனிக்கிறேன்.

ஆலயப்பிரவேச சம்மந்தமாய் சென்றசில நாட்களாகவும் அதுவும் 8—7—1939உ முதல் மதுரையிலும் மற்ற இடங்களிலும் பெருத்த பரபரப்பு ஏற்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. பிற மதத்தினர் நம் மதத்தின் கொள்கைகளே இன்னதென்று சரிவர தெரிந்து கொள்ளாமல், தம் தம் மதத்தை பரவச் செய்ய வேண்டிய நோக்கத்துடனே, அல்லது பிற மத துவேஷத்திற்கோ, நமக்கு பலவகையிலும் பாதகம் உண்டுபண்ணக்கூடிய விஷப்பிரசாரங்கள், செய்து வந்ததும் தெளிவாகத் தெரிந்தனவே. இவை யாவற்றையும் மேன்மைபடுத்தக்கூடிய நிலேமையில் கம்மவருள்ளே, நமது ஹிந்துமதத்தைச் சேர்ந்தவர் என்ற சொல்லிக்கொள்ளுபவர்களுள்ளேயே, பலவகைப்பட்ட கட்சிகளும், பிளர்ச்சிகளும் உண்டாகி நமக்கு பலவித நிலும் இன்னல்கள் இழைத்து வருகின்றனர். இவை யாவற்றுக்கும் தம்தம் சுயலாபக்கருத்தே காரணமாயினும், தாம் நியோ, அல்லது தாம் சம்மந்தப்பட்ட மற்ற விதத்திலேயோ, தம் முடைய அபிவிருத்தி கவனிக்கவேண்டியிருக்க நம்மிற் பலரையும், தூஷித்தும், கெடுதல் உண்டு பண்ணியும் தம்முடைய எண்ணங்களே நிறைவேற்றிக்கொள்ள முன்வந்துள்ளனர். பொதுஜன சமுக விஷயமாகவோ, அரசியல் விஷயமாகவோ பிளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி நான் விரித்துக் கூறுது தங்களுடைய பரிசீலனேக்கே விட்டு விடுகிறேன்.

ஒருகட்சியார் நம்மவரில் ஒரு பகுதியாரை இழிவுபடுத்தவேண்டிய எண்ணத்தடனும். மற்றொரு கட்சியார், அரசியல் விஷயமாய் தம் கோரிக்கைகளே நிறைவேற்றவும், சமுக நீதிருத்தத்தின் பெயராலும் பொதுஜன நன்மையைக் கருதுவதென்றதின் பெயராலும், சனுதன தர்மம் என்பது இன்னதென்றும், இன்னவிதமாய் நிலேபெற்றது என்பதையும், இன்ன விதமாய் நம்மவருக்கு நன்மையபத்தது என்பதையும், இனியும் நன்மை பயக்கக்கூடியதென்பதையும் தீர ஆராய்ந்து கவனியாமல், ஒரே கூக்குரலாக நமது சனுதன தர்மத்தின் கொள்கைகளேயே இழிவு கூறுகிறார்களே. கட்சி வாகத்தின் போக்கிலே, மற்ற விதத்திலோ, ஒருவர் உண்டாக்கிய சட்டத்தை மற்றவர் எதிர்த்தும், ஒருவரின் சட்டபியோகத்தை மற்றவர் தூஷித்தும், தம் தம் தவறை நாம் உணர்ந்தோ, உணர்ந்தும் தாம் காரியத்தைகருதி வெளியிடாமல் மற்ற வரை தூஷித்த முறையிலேயே தாம் சட்டப் பிரயோக செய்தும், அடக்குமுறைகளே அனுஷ்டித்தும், பலவிதமான சூழ்ச்சிகளும் பிசாசாங்களும் செய்து வருவதும் நமக்கு ஏற்பட்ட காலக்கொடுமையே. பட்சபாதமற்ற ஆங்கிலேயர் ஆட்சியை, ஒடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டும் அவர் தரைத்தனம், நீதிஸ்தலம், அவர் ஆடை, பாஷை முதலிய யாவற்றையும பஹிஷ்காரம் செய்வோம். சட்டமறுப்பு ஆற்றுவோம். சத்தியாக்ரகம் செய்வோம், என்று கூறியவர், நீதியான முறையில் எதை நிறை வேற்றினர். விஷயங்கள் முற்றி இப்போது ஆலயப்பிரவேசம் என்று மலர்ந்து பழுத்து விட்டது.

ஆலயம் என்பது என்ன? அது எவ்வாறு ஏற்பட்டது? எப்படி நிலே பெற்று நடத்து வருகிறது? முதலிய யாவற்றையும் சரிவர ஆராய்ந்து கவனித்தார்கள் இல்லே யென்றே எண்ணுகிறேன். இவற்றிற்கு அடிப்படையாக தெய்வத்தின் சாந்நித்தியையும், சாந்நித்யத்தையும் ஈஸ்வர சிருஷ்டியின், சமத்தைதையும் உரிமையையும் கூறுகிறார்கள். எதோ ஒரு சாஸ்திரம், அல்லது ஆகமம் அல்லது அனுஷ்டானத்தின்படி, பிரதிஷ்டை செய்யப்பட்டு, தொழுகப்பட்டு வரும் ஒரு தேவிலுக்கும், இவர்கள் அடிப்படையாக கூறும் சாந்நித்யத்திற்கும், சம உரிமைக்கும், சம்மந்தம் எப்படி என்பதை கவனிப்போம்.

முன்கூறிய பலவகைப்பட்ட கட்சியேரில் சிலர் கடவுளேயில்லேயென்றும், எக்தகாரியமும், தாம் அடையும் பலனும், தம்முடைய சமார்த்தியத்தினுலேயே என்று கொள்கையுடையவர்கள். அப்பேற்பட்டவர் எந்த ஒரு தேவிலுக்கும், தம்முடைய கடவுள் வழிபாட்டுக்கென்ற எந்த உரிமையுடனும் ஆலயப்பிரவேசத்தை கருத அவசியமில்லேயேனும், ஆலயப்பிரவேசத்தை, கருதுவதும் ஆமோதிப்பதும் நான் முன் கூறியபடி ஒரு கெட்ட எண்ணம் அல்லது தவேஷத்தோடன்றி வேறென்ன? இவர்கள் நாஸ்திகர்கள். இதைப்பற்றி நாம் வருத்தப்படவேண்டியதில்லே.

கடவுள் உண்டென்று ஒப்புக்கொள்பவர்கள் கடவுளின் நிர்தார சாந்நித்யத்தை ஒப்புக்கொள்ளுபவர்களே.

கடவுள் வழிபாட்டுக்கு பல வழிகளில் ஆலயம் தொழுவதும் ஒன்றே. ஆலய நிர்மாணங்களும், ஸ்தாபிதங்களும் பலவகைப்பட்டன. கம்முள்ளேயே சைவம் வைஷ்ணவம், என்றும் வைஷ்ணவத்தில் உட்பிரிவுகள் ஆகம விதிப்படி பாஞ்சாத்ரமென்றும், வைகாகசமென்றும், மற்றும், சம்ப்ரதாய விதிப்படி, வடகலே, தென்கலே என்றும் உள்ளன. ஸ்ரீவரதராஜனேமோ, ஸ்ரீவர ஆரதனமோ; ஒருவரிடம் பற்றியேயாயினும் முறைகள் மிக உட்பிரிவுகளுக் ஜனங்க வேறுபடுகின்றன. இவற்றிற்கு மனிதப்பிறவியின் சமத்துவத்தை ஈடுகாட்டி ஒருவரின் உரிமையில் மற்றவர் பிரவேசிக்கலாமோ?

சனுதன கொள்கையின் மூலமாகவே வேறு அனுஷ்டானங்கள் மூலமாகவோ, நம் மவரில் பலரும், பலவிதமான கடவுள் வழி பாடுகளேயும் கையாண்டு வருகின்றனர். இது அவரவர் ஜாதிக்குத்தகுந்தபடிக்கும், கம்பிக்கைக்குத்தகுந்தபடிக்கும் வேறுபடும். நான்கு வருணத்தாருக்கும் தம் தம் இஷ்டதெய்வங்களும், குடும்ப தெய்வங்களும், குலதெய்வங்களும் உண்டு. ஒருவர் இஷ்டத்திற்கும், அனுஷ்டானத்திற்கும் மற்றவர் பாத்தியப்பட்டவராக இருக்கவும் இல்லே. மற்றவர் பிரவேசிக்கவுமில்லே. இவ்விதமாக எவ்விதமான விகல்பமும், மனக்லேசமும் இல்லாமல், இக்தக்கள் என்று சொல்லப்படும் நம்மவர், எவ்வும் ஒத்து வாழ்க்தே வந்திருக்கிறார்கள். உதாரணமாக மாரியம்மன் என்ற ஒரு தேவதையை தம்தம் இஷ்டப்படி பல இடங்

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க).

மதுரை ஸனாதந தர்ம வித்யாலயம்

மதுரையில் ஸ்ரீமான் என். நடேசய்யர் போன்ற ஆஸ்திகர்களின் முயற்சியால் சென்ற ஒரு வருஷ காலமாக நடத்தப்பட்டு வரும் ஸநாதன தர்ம வித்யாலயத்தின் முதல் வருஷப் பூர்த்தி கொண்டாட்டமானது 23உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தெ வித்யாலயப்பக்தலில் வெகு சிறப்பாக நடந் தேறியது. இவ்வைபவத்தில் சிவகங்கை ராஜா அவர்கள் தலைமை வஹித்தார்கள். ஆயிரம் ஜனங்களுக்கு மேலாக கூடியிருந்தனர். ஸ்திரீகளும் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

4 மணிக்கு சிவகங்கை அரசர் தமது அமைச்சர் ஸ்ரீமான் பாய், ஐ. ஸி. எஸ். அவர்களுடன் வந்ததும் வித்யாலய அதிகாரிகளால் வரவேற்கப்பட்டு ஆஸனத்திலமர்ந்தார்.

ஆரம்பத்தில், ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளால் அனுக்ரஹிக்கப்பட்டிருந்த ஸ்ரீ முகமும், பிரார்தங்களும் பிரம்மஸ்ரீ பஞ்சாப கேச சாஸ்திரிகளால் அக்கிராஸனநிபநியிடம் கொடுக்கப்பட்டன.

பிறகு மாணவர்களால் உபநிஷத்நிலிருந்து சில பகம் இனிமையாக ஓதப்பட்டது. பல சிறுமிகளால் ஸம்ஸ்கிருதம், தமிழ் பாஷைகளில் தெய்வஸ்தோத்நிரம் செய்யப்பட்டது யாவர் மனதையும் களிக்கச்செய்தது.

வித்யாலய காரியதரிசி ஸ்ரீ ஸோமசுந்தர சாஸ்திரிகளால் வருஷாந்நிர நிர்வாக பாதாஸ்து படிக்கப்பட்டது. இந்த வித்யாலயத்தில் 350 மாணவ மாணவிகள் படித்து வருவதாக பாதாஸ்நில் குறிப்பிடப்பட்டிருந்தது. பொதுவாக ஹிந்துக்களால் தர்ம சிரத்தையும், ஆஸ்திக்யமும் வேகமாக குறைந்து அதன் பலனை அநேக ராகரீக மோஹம் கொண்டு கமது சிறுவர்களும், சிறுமிகளும் வீணாகப் போகாமலிருக்கவேண்டுமென்ற பாதாஸ்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. கல்வி நிபுணம வாய்ந்த ஆசிரியர்களின் ஆதீனத்தில் நடந்து வருவதாகத்தெரிகிறது.

பாதாஸ்தைப்படித்த பிறகு, கனம் சிவகங்கை ராஜா அவர்கள் சுருக்கமாகப்பேசினார். வர்ணாச்ரம தர்மத்தைச் சிறுவர்களிடம் அபிவிருத்தி செய்யும் நோக்கத்தைபும், கமது ஹிந்து மத சிரத்தை விருத்தியடையும் நோக்கத்தைபும், வெகு ஸன்ன ரூபமாகப்பட்டு வருவதைக்கண்டு ஸந்தோஷிப்பதாயும், ஸ்ரீ நடேசய்யருடைய முயற்சியைப் பாராட்டுவதாயும், பாடசாலை மேன்மேலும் அபிவிருத்தியடைய வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

பிறகுமாணவிகளால், ஸம்ஸ்கிருதம், தமிழ் இங்கிலீஷ் ஆகிய பாஷைகளில் செய்யப்பட்ட ஸ்பாஷணைகள் ஸபையோரைப் பரவசப்படுத்தின. தீண்டாமை, ஜாதிபேதம், ஆலயப் பிரவேசம், பால்ய விவாஹம், போன்றவைகளைப்பற்றி மாணவிகள் நடத்திய ஸம்பாஷணைகளால் ஸநாதன தர்மிகளுடையவும் சித்தாந்தத்தை நன்கு வெளியிட்டது வெகுவழகாக இருந்தது. பிறகு அரசரால் மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

நலிவர் சுருக்கமாக முடிவுரை கூறியபிறகு வக்கீல் ஸ்ரீ என். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரவர்களால், அரசருக்கும் நிவாஹிகளுக்கும் வந்தனோபசார வார்த்தைகள் சொல்லப்பட்டன. ஸ்தர்ப்பத்தை பொட்டி, மிகுந்த அர்த்தபுஷ்டியுள்ளதிறியபிரசங்கத்தின் மூலம் ஸ்ரீ அய்யங்கார் கூறியது அனைவராலும் பாராட்டப்பட்டது. மங்கள வாழ்த்துடன் ஸபை கூட்டம் 7 மணிக்குப்பூர்த்தியடைந்தது.

(ஒ. நி)

இதற்காகவோ ஸ்வராஜ்யம்?

(ஸ்ரீமான் N. சாம்பசிவய்யர் B A., B. L., அட்வகேட், நாகப்பட்டணம்.)

சென்ற சில நினங்களாக இந்த ஆலயபிரவேச பேயரனது தலைதிறகோலமாக எங்கு பார்த்தாலும் கர்த்தனம் செய்கிறது. காங்கிரஸ் கஷியார் தாங்கள் அதிகாரத்திற்கு வந்ததற்கு பலனாக முதல் முதல் தர்மங்களையெல்லாம் அழித்து விட்டு அதன் பிறகு மற்ற விஷயங்களை கவனிப்பதாக தீர்மானம் செய்திருக்கிறார்கள் போலும். காலவரும் எலக்ஷனுக்கு ஆள்சேர்க்க கோவில்களிலிருந்து ஈஸ்வர ஸ்ன்னித்யத்தை ஒழிப்பதே வழியென்று கருதியிருப்பதாகத் தோன்றுகிறது. பெரியோர்கள் எவ்வளவோ சிரமப்பட்டு ஆலயங்களை கிர்மாணம் செய்து பிரதிஷ்டைகள் செய்து மந்திரபலத்நினால் மூர்த்திகளின் ஸான்னித்யம் பலமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்தலங்களில், ஒரே காசில் எல்லாவற்றையும் ஒழிக்கக்கூடிய காரியத்தை செய்தவர்களிடம் மீளுகதேவியானவள் இவ்வளவு பெருமையாக இருப்பதும் விதைபே. கட்டடத்தைக் கட்டுபவர்களுக்குப் பல வருஷங்கள் பிடிக்கும். அதை இடிப்பவனுக்கு ஒரு காழி வேலையென்ற சொல்லுவதுபோல நிவ்வகேஷ்தரிகளில் இவ்விதமான அக்ரமங்கள் செய்து வருகிறார்கள்.

காகையில் சென்ற ஆடிப்பூர தினத்தன்று ஸ்ரீ நிலாயதாக்ஷி வெள்ளோசாத்நி பிரகாரத்நில் எழுந்தருளும் காலத்நில் ஆலய பிரவேசம் செய்ய தங்களுக்கு அனுமதியளிக்க வேண்டுமென்ற கேட்டுக்கொண்ட காலத்நில் கோவில் தர்மகர்த்தாவான ஸ்ரீமான் D. கிருஷ்ணமூர்த்தி அய்யாவர்கள் அவ்வித அக்ரமத்திற்கு தான் ஸம்மதியாதென்றும் கண்டிப்பாக பிரிவினைத்து ஸ்ரீ மீனாக்ஷியின் ஆலயத்தில் நடந்தது போல் ஏற்படாமல் பாதுகாத்துக்கொண்டதாகவும் பாராட்டத்தக்கதே.

கர்மானுஷ்டானங்கள் மிகவும் குறைந்து அவர்கள் கிரஹங்களில் ஈச்வரனை ஆராதிப்பதும் மிகவும் குறைவுபட்டுவரும் இக்காலத்நில், ஆலயங்களை மிகவும் பலப்படுத்தி ஈச்வர ஸான்னித்யத்தை விருத்திசெய்ய வேண்டியதை ஒவ்வொருவருடைய கடமையாக இருக்க, ராஜ்யபரிபாலனம் செய்பவரான வியாஜத்தை வைத்து இவ்விதம் அதர்மத்தை அவலம் பித்து பதவியின் கௌரவத்தை உபயோகப்படுத்தி ஆலயங்களை ஒழிக்க முன்வந்திருப்பது காங்கிரஸ் கஷியாரின் மனப்பான்மையை நன்கு விளக்குகிறது.

இவ்விதம் மதவிஷயத்நில் பிரவேசித்து அதர்மமான வழிகளில் ஆலயங்களை அகற்தப்படுத்த செய்யப்பட்டு வரும் பிரகாரங்களை கவனிக்க வேண்டுமென்று பரியாதையாக காங்கிரஸ்காரர்களை ஸ்ரீமான் நடேசய்யரவர்கள் தந்நி பொடித்த காலத்நில் "நீங்கள் எப்போதும் பொய் சொல்லுகிறீர்கள்" என்று பதில் தந்நி கொடுத்திருக்கிறார். சத்யமும் அஹிம்சா தர்மமும் இந்தப் பதிலில் எவ்விதம் தழைபி நிற்கிறதென்பதை காம் கவனிக்க வேண்டும். வெகு நீண்டகாலமாக ஆலயங்கள் சம்பந்தமாக அனுஷ்டிக்கப்பட்டிருக்கும் இஷ்டாசாரங்களை ரீக்ருஹத்தவிட்டு அது சம்பந்தமாக நியாயஸ்தலத்நில் பரிகாரம் தேடுவதைத் தவிற வேறு வழியில்லாமல், தபித்து, நியாயத்தைக் கேட்டால் அந்த நியாயத்தை செய்ய முடியாமல் நியாயாஸநிகளையும் தங்கள் உத்நிரவினால் கட்டுப்படுத்தும் ராஜாங்கத்நின் பொருளுகதையும் கவனிக்கவேண்டும்

பிரதம மந்திரியான கனம் ஸ்ரீ C. ராஜகோபலாசாரியார் ஆலயங்கள் ஜனங்களுடைய தேச சௌக்யத்தையும் சந்தோஷத்தையும் விருத்தி செய்வதற்காக ஏற்பட்டனவென்றும், ஆலயப்பிரவேசத்நினாலேயே அப்படிப்பட்ட சௌகர்யங்கள் மிகுதியாக உண்டாகுமென்றும், ஆலயங்களை பொதுத் தோட்டங்களைப்போல் பாதுகாத்து வரவேண்டுமென்றும் பேசியிருக்கிறார். ஆலய ஸ்தாபனங்களுடைய நோக்கத்தை இவ்வாறு அறிந்து பேசுபவர் ஆலயப்பிரவேசத்திற்கு இவ்வளவு பாடுபடுவது ஓர் ஆச்சர்யமல்ல.

ஆலயங்களை பொதுஸ்தலங்களென்று எவ்வாறு கூறமுடியும்? ஆகமசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் சட்ட நிட்டங்களுக்கு உள்பட்டு மாதிரம் அவைகளை பொதுஸ்தலங்களென்று கூறமுடியுமே தவிற ஈச்வரனிருக்கும் ஸ்தலத்தில் ஜாதி விதிபாசம் எவ்விதம் பொருத்தமென்று கேழ்பது ஆலய ஸ்தாபனங்களுடைய ரஹஸ்யங்களை அறியாததால் சொல்லுகிறதே தவிற வேறல்ல.

இந்த ஆலயபிரவேசப் பயித்நியமானது முற்றப்போய் எல்லா ஆலயங்களுக்கும் ஸான்னித்யத்தை இழப்பதற்கு முன் ஈச்வரன் தன் அர்ச்சாமூர்த்திகளை காப்பாற்றிக் கொடுக்க அதற்காக உழைத்தவரும் ஸ்ரீமான். நடேசய்யர் முதலியவர்களுக்கு அருள் புரிவாராக!

ஆசிச்செய்திகள்.

சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ வைதிக தர்ம ஸம்ரக்ஷக பிரவசன தூரீண அனந்தரும தீக்ஷிதர் அவர்கள் "ஆர்ய தர்மம்" பத்திரிகைக்கு அனுப்பியிருக்கும் விசேஷ செய்தி யாவது :—

"இப்பொழுதுள்ள நிலைமையில் இங்கிலாந்து வருஷம் ஒரு முறை பாபத்தர்மத்தை ராஜிப் பதற்கும், அதர்மத்தை நடப்பதற்கும் ஆஸ்திகர்கள் ஒன்று சேருவதற்குக்காரணம் கமது "ஆர்ய தர்ம பத்திரிகை" யேயாகும். வெகு வருஷகாலமாக தர்ம ஸேவை செய்து வரும்படி ஸ்ரீ ஜகத்குருக்களான ஸ்ரீ கம கோடிபீடாதிபதிகள் இந்த பத்திரிகையை நடத்திவருவதற்கு ஆசீர்வாஹ ஆசாவாரம் செய்தனர். குடந்தையில் இத்தகை ஊர்வலம் இதற்குமுன் காணப்பட்டதில்லை யென்று எங்கும் பேசிக்கொள்ளப்பட்டது.

இரவு 10 மணிக்கு டபீர் தூறையில் ஊர்வலம் முடிந்தது. அங்கு பொதுக்கூட்டம் நடந்தது. இனிமையான தேவாரம் நேம் நடந்தது. ஸ்ரீமான் காராயண ராவ், இப் பெரிய ஊர்வலத்தை இவ்வளவு சிரப்பாயும், அமைதியாகவும் நடத்தியதற்கு பொது ஜனங்களுக்கு நன்றி செலுத்திப் பேசியப் பின், கூட்டம் ஜய கோஷத்திற்கு இடையில் கலைந்தது. போலீஸ் உதவி வெகுவாகப் பாராட்டத்தக்கது.

ஊர்வலம் நடக்கையில் அதன் சிறப்பைக் கண்டு ஸஹிபாத சில காங்கிரஸ்காரர்கள் கூடி இரைச்சல் போட்டுக்கொண்டு வந்தார்கள். போலீஸார் அவர்களைக் கட்டுபடுத்தி வந்தனர்.

சிறிது தூரம் சென்றதும் புகையிலே வரி எதிர்ப்புக்காரர்கள் அங்கு வந்து காங்கிரஸ் காரர்களை விரட்டி விட்டு மந்திரி ஸபைக்கும், புதிய வரிக்கும் எதிரான கோஷங்களைச் செய்துக் கொண்டு ஸநாதனி ஊர்வலத்தின் பின்னால் வந்துக்கொண்டிருந்தார்கள். அவர்களால் ஸநாதன ஊர்வலத்திற்கு எவ்வித

ஆலயப்பிரவேச அவசரச்சட்டம்

நாடெங்கும் கண்டனக்கூட்டங்கள்

நிறைவேறிய தீர்மானங்கள்

குடந்தையில் ஸனாதநிகளின் பெரிய ஊர்வலம்

29உ சனிக்கிழமை மாலை குடந்தை நகரமெங்கும் ஓர் கண் கொள்ளாக்காஸியாயிருந்தது. ஆலயப்பிரவேசத்தையும், அதர்மச்சட்டத்தையும் எதிர்த்துத் தங்களுடைய உணர்ச்சியை வெளியிட ஓர் பெரிய ஊர்வலத்தைப் பொதுஜனங்கள் நடத்தினர். ஸ்ரீசாரங்கபாணிஸ்வாமி கோவில் வாசலிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. அங்கு வெகு நேரம் முன்பே எள்ளிட இடமின்றி ஏராளமான பொதுஜனங்கள் கூடிவிட்டனர். மிகுந்த உத்ஸாஹ காணப்பட்டது. இரண்டு யானைகள் கம்பீரமாக முன் செல்ல, பஜனை கோஷ்டியும், தேவார கோஷ்டியும், ஸஹஸ்ரநாம பாராயண கோஷ்டியும், ஒன்றின்பின் ஒன்றாக ஆபிரக்கணக்கான ஜனங்கள் சூழ ஊர்வலம் 7 மணிக்குப் புறப்பட்டது. நகரப் பிரமுகர் பலரும், ஏராளமாக வைதிகர்களும், பண்டிதர்களும் வந்திருந்தனர். ஜய கோஷங்கள் வானளாவ ஒலித்த வண்ணமாயிருந்தன.

ஊர்வலம் கடலங்குடித்தெரு வழியாகச் சென்று ஸ்ரீராமர் சன்னதியை பிரதக்ஷிணம் [illegible] செய்து கடைத் தெரு வழியாக ஸ்ரீசக்ரபாணிகோவில் அடைந்து நான்கு வீதிகளையும் சுற்றிக் கொண்டு காமாக்ஷிஜோஸ்யர் தெருவழியாக டபீர் படித்துறைசென்றது ஜனங்கள் வெகு நேரம் வரையில் கலையாததுடன் அங்கங்கு அதிகமாகச்சேர்ந்து வந்தனர். ஒவ்வொரு இலக்கங்களிலும், வீடு மாடிகளிலும் ஜனங்கள் நின்று உத்ஸாஹ ஆரவாரம் செய்தனர். குடந்தையில் இத்தகை ஊர்வலம் இதற்குமுன் காணப்பட்டதில்லை யென்று எங்கும் பேசிக்கொள்ளப்பட்டது.

இரவு 10 மணிக்கு டபீர் தூறையில் ஊர்வலம் முடிந்தது. அங்கு பொதுக்கூட்டம் நடந்தது. இனிமையான தேவார நேம் நடந்தது. ஸ்ரீமான் காராயண ராவ், இப் பெரிய ஊர்வலத்தை இவ்வளவு சிரப்பாயும், அமைதியாகவும் நடத்தியதற்கு பொது ஜனங்களுக்கு நன்றி செலுத்திப் பேசியப் பின், கூட்டம் ஜய கோஷத்திற்கு இடையில் கலைந்தது. போலீஸ் உதவி வெகுவாகப் பாராட்டத்தக்கது.

ஊர்வலம் நடக்கையில் அதன் சிறப்பைக் கண்டு ஸஹிபாத சில காங்கிரஸ்காரர்கள் கூடி இரைச்சல் போட்டுக்கொண்டு வந்தார்கள். போலீஸார் அவர்களைக் கட்டுபடுத்தி வந்தனர்.

சிறிது தூரம் சென்றதும் புகையிலே வரி எதிர்ப்புக்காரர்கள் அங்கு வந்து காங்கிரஸ் காரர்களை விரட்டி விட்டு மந்திரி ஸபைக்கும், புதிய வரிக்கும் எதிரான கோஷங்களைச் செய்துக் கொண்டு ஸநாதனி ஊர்வலத்தின் பின்னால் வந்துக்கொண்டிருந்தார்கள். அவர்களால் ஸநாதன ஊர்வலத்திற்கு எவ்வித இடைஞ்சலுமில்லாமல் ஊர்வலமும் அமைதியாகச் சென்றது.

போலீஸாரும் தக்கபடி பந்தோபஸ்து செய்து வந்தனர்.

குடந்தையில் தீவிர பிரசார ஆரம்பம்

குடந்தை ஹிந்து மஹாஜனங்கள் ஆலயப் பிரவேசத்தை எதிர்த்து தீவ்மாக பிரசாரம் நடத்தவதற்பாடு செய்திருக்கிறார்கள். ஒவ் வொருநாளும் ஒவ்வொரு பாகத்தில் கூட்டம் நடத்த முடிவுசெயப்பட்டிருக்கிறது.

30உ ஞாயிற்றுகிழமை மாலை மேலக்கரை வேரி ஸ்ரீவராஹஸ்வாமி கோவிலில் ஒருக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான் ராமசந்திரசாஸ்திரி தலைமை வஹித்தார். 500 பேர்கள் வரையில் கூடியிருந்தனர். ஸ்ரீமான் கள் ராமாஜதாதாசாரியர், நடராஜய்யர், நாராயணராவ், ஸாரதாசாரியர் பி.ஏ, பி.எல், ஆகியவர்கள் ஆலயப்பிரவேசத்தையும், அவஸரச்சட்டத்தையும் கண்டித்து சிறந்த சொற் பொழிவாற்றினர். மதுரையின் உண்மை நிலை மையை விவரித்த ஸ்ரீமான் நாராயணராவ் கூறினர். கண்டனதீர்மானம் நிறைவேறப் பட்டு வந்தனோபசாரத்துடன் கூட்டம் அமை தியாய் முடிவு பெற்றது.

குடந்தையில் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் ஆலயப்பிரவேச கண்டனம்

ஸபாஷ் கஷியில்சேர யோஜனை

குடந்தையில் ஆலயப்பிரவேச கண்டன பிசாரத்தின் இரண்டாவது கூட்டம் நிங்கட் கிழமை மாலை 7 மணிக்கு டபீர் படித்துறையில் நடைபெற்றது. சுமார் ஆயிரம் பேர்கள் வரையில் பொதுஜனங்கள் கூடியிருந்தார்கள். அநேக பண்டிதர்களும், லௌகிக பிமுகர்களும் வந்திருந்தனர். திருவாடி சாஸ்திரத்தை பிரம்மஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள் கூட்டத்தில் தலைமை வஹித்து மதுரை ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்தும், அவஸரச்சட்டத்தை ஆக்ஷேபித்தும் சுருக்கமாகப் பேசினர்.

பிறகு கல்கத்தா பூனிவர்ஸிடி ஸம்ஸ்கிருத ஆசிரியரானமஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் வெகு கம்பீரமாகவும், சிறந்த ராஜீய தத்வம் அடங்கியதாயுமுள்ள உயர்ந்த பிரஸங்கமொன்றை சுமார் 1½ மணி நேரம் செய்து சென்னை மந்திரி ஸபையின் சட்ட வரம்பு மீறிய காரியங்களை வன்மையாகக் கண்டித்தார்.

மதமென்பது யுக்தியாலோ, தன் இச்சையாலோ ஏற்படக்கூடியதல்ல வென்றும், வேதம் முதலிய பிரமாணத்தாலேயே ஸித்திக்கக் கூடியதென்றும், ஹிந்து மதத்நிலன்றி கிருஸ்தவ மஹம்மதியாதி எல்லா மதங்களிலும் யுக்தி வாதத்தை நள்ளி, வேதமே பிரமாணமாக ஒப்புக்கொள்ளப் படுகிற தென்றும், ஸநாதந தர்மத்நில் "என்னிஷ்டம்" என்று ஒன்றைச்சொல்ல முடியாதென்றும், ராஜீய விஷயத்தை கவனிக்க ஏற்பட்ட காங்கிரஸ் ஹிந்துக்களின் மத விஷயத்நில் பிரவேசிப்பது அநீதியென்றும், மதநடு நிலைமைக்கொள்கையை ஆதரிக்கும் எந்த ஜாதி மதஸ்தர்களுடனும் ஸநாதநிகள் சேர்ந்து புரிய கூடிய மைக்கலாமென்றும், இவ்விஷயமாக ஸ்ரீ ஸுபாஷ் போஸ் ஆரம்பித்துள்ள முன்னேற்ற கஷியை நாம் ஆதரிக்கலாமா வென்பதை ஸநாதநிகள் யோஜிக்கவேண்டுமென்றும், கல்கத்தாவில் ஸ்ரீமான் போஸையும், அவருடைய ஸஹோதரர் ஸ்ரீ சரத்பாபுவையும், தாம் நேரில் கண்டு பேசியதில், மஹமதிய மதத்திற்குப்போல், ஹிந்து மதத்திற்கும் பாதுகாப்பு அளிக்க போஸ் ஸஹோதரர்கள் உறுதியளித்திருப்பதாயும், ஹிந்து மகாஸபையுடன் சேருவதில் ஸநாதநிகள் யோஜிக்கவேண்டிய விஷயமிருப்பதாயும், மூன்றில் இரண்டு பாகத்தினர் விரும்பினால், மதவிஷயத்தில் பிரவேசிக்கலாமென்ற ஹிந்து ஸபைத் தலைவர்கள் கூறுவதை ஸநாதநிகள் ஏற்கமுடியாதென்றும், ஸ்ரீ ஸுபாஷ் போஸ் கஷியில் காம் சேருவதைப்பற்றி சென்னைத் தலைவர்களுடனும் தாம் கலந்து பேசியதாயும், இவ்விஷயமாக சீக்கிரத்தில் ஒரு முடிவு ஏற்படவேண்டுமென்றும், கூறிவிட்டு மதுரை ஆலயப்பிரவேசத்தையும், அவஸரச்சட்டத்தையும், எதிர்க்க யாவரும் கட்டுப்பாடாகநின்று கூலிசெய்ய வேண்டுமென்றும், ராஜீயம் உடலுப்போன்ற தென்றும், மதம் ஆத்மாவைப்போன்றதென்றும், ஆத்மா இல்லாத உடல் பிரயோஜனமற்றதென்றும், மதமானது வீட்டில் அதஸ்டிக்கத்தக்கதென்றும், ராஜீயத்நில் ஸநாதநிகள் பூர்ணமாக ஸம்பந்தப்படலா மென்றும்" கூறிமுடித்தார்.

அக்கிராஸநாதிபதியின் முடிவுரைக்குப்பின் ஸ்ரீ கோபாலய்யால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

பண்ருட்டி டிரஸ்டிகளின் மறுப்பு.

பண்ருட்டி சமீபம் திருவதிகை என்னும் க்ஷேத்ரத்நில் விளங்கா நின்ற ஸ்ரீ திருஹன் ராயஸிமேத ஸ்ரீ வீரட்டேச்வரஸ்வாமி திருக்கோவிலில் ஆதிரார்விடர்கள் பிரவேசிக்க விரும்புவதாக ஷி ஆலய தர்மகர்த்தாக்களுக்கு காங்கிரஸ்காரர்கள் நோட்டீஸ் கொடுத்த அறிவித்தல்.

அதற்கு அந்த தர்மகர்த்தாக்கள் ஸ்ரீ செகிதம்பர செட்டியார், ஸ்ரீ வெ. மு. சுப்பராய செட்டியார், ஸ்ரீ குமரசாமி தம்பிரான் ஆக 3 பேர்களும் ஏகோபித்து, "ஆதிரார்விடர்கள் ஆலயப்பிரவேசம் செய்வதற்கு அனுமதிதர மாட்டோம் என்றும், மீறிசெய்வதால் கலகம் ஏற்படுமென்றும், கமது வைதீக ஆகம சாஸ்திரங்களுக்கே விரோதமென்றும், பதில் தெரிவித்து விட்டார்கள். பண்ருட்டி மகாஜனங்கள் அனைவரும் தர்மகர்த்தாக்களை வாழ்த்திக் கூறி ஸபையில் ஆனந்தமுற்றார்கள்.

(ஒ.நி.)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஸ்ரீ ஆடி-மீ 18உ

நீதியில்லா யதேச்சாதிகாரம்

தீண்டாதார் வகுப்புத்தலைவராகிய ஸ்ரீமான் எம். ஸி. ராஜா என்பவர், சென்னை பிரதம மந்திரியின் ஆலயப்பிரவேச ஆர்ப்பாட்டங்களை "ரடகம்" என்ற வர்ணித்துப் பத்திரிகைகளில் எழுதுகிறார். ஆலயப்பிரவேச விஷயத்தில் காங்கிரஸ்காரர்களுக்கு ஸஹாதாரியர் யிருந்த அவரை ஆட்டிவைத்த வருகிற கனம் ஆசாரியரின், புனு ஒப்பந்தம் முதலாக இன்று மதுரை அக்ரமம் வரையில், முன்பின் விருத்தமான கூற்றுக்களையும், செய்கைகளையும் அறிந்தவர்கள், ஸ்ரீயுக்த ராஜா, "ரடகம்" என்று வர்ணிப்பதை மிகப் பொருத்தமாகவே நினைப்பார்கள். சில வருஷங்களுக்கு முன் அவர் பேசட்டு வந்த வேஷங்களை நாம் மறக்கவில்லை. மந்திரி பதவி யேற்ற பிறகு சட்ட ஸபையிலும், வெளியிலும் பூர்வோத்தர விரோதமாக அவர் நடித்த வருவதை ஒருவரும் மறப்பதற்கில்லை. பொதுஜனங்கள் மனமாற்ற மடையவில்லை யென்றும், பக்வகாலம் வரவில்லையென்றும், வேரட் எடுக்கப்பேவதாயும் பலவாறு சட்ட ஸபையில் அவர் பேசி இன்னும் பல ரடகங்கள் கூட ஆகவில்லை. இவ்வளவுக்கும் விரோதமாக, இன்று, மதுரையிலும், மாகாணத்தின் மற்ற பாகங்களிலும், யதேச்சாதிகார மூலமான அக்ரமச்சட்ட அமுல் நடத்தித் தமது பிடிவாதத்தை நிறைவேற்றிக்கொள்ளத் துணிந்து நிற்கிறார்.

இந்த கபட நாடகத்தின் கடைசிக் காட்சியில், மதுரைக் கோவில் நிர்வாஹ அதிகாரி மூலம் செய்துள்ள அக்ரமமான செய்கையையும் காரணக உலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

தீண்டாதார்பிரவேசித்ததால் தேவாலயம் அசுத்தமாகிவிட்டதும் தெய்வ ஸான்னித்யம் மறைந்த விட்டதும் நிர்விவாதமான விஷயம். இதை சாஸ்திரீயமான பிராயச்சித்த மூலமே நிவர்த்திக்க முடியும். கோவிலில் பரம்பரை பட்டர்கள் ஸ்வாமியின் ஸான்னித்யத்தை ஸ்தாபிக்கவேண்டி ஸம்புரோக்ஷணை செய்ய முற்பட்டதும் முற்றிலும் நியாயமானதே. இதைத் தடுக்க நிர்வாஹ அதிகாரிக்கோ, அவருக்கு மேற்பட்ட வரான எந்த லௌகிக உத்யோகஸ்தருக்கோ அதிகாரம் கிடையாது. பூஜகர்கள் கோவிலில் நடத்தவேண்டிய வைதிக கார்யங்களில், ஆகம விதிப்படி அசரிக்க வேண்டியவர்களேயன்றி, தர்ம சொத்தைக்காப் பாற்ற மட்டுமே நியமிக்கப்பட்ட டிரஸ்டியின் இஷ்டப்படி நடக்க முடியாது. ஆகம விதிகளைப்பற்றி நிர்வாஹ அதிகாரி உத்திரவு போடுவது இந்த காங்கிரஸ் கவர்மெண்டில் காணப்படும் விந்தைகளில் ஒன்றே! ஸம்புரோக்ஷணம் செய்யவேண்டுமா, வேண்டாமா வென்பதை நிர்ணயிப்பது யார்? நிர்வாஹ அதிகாரியின் இஷ்டப்படிக்கா கோவில் உள்பூஜை முதலிய காரியங்கள் நடப்பது? கோவிலில் செய்யவேண்டிய பூஜைகளையும் மந்திரங்களையும் தந்திரங்களையும் பற்றி ஸ்வதந்திரமாகக் கட்டளையிட டிரஸ்டிக்கு எவ்வித அர்ஹதையும் அதிகாரமும் கிடையாது. முற்றிலும் தன் அதிகார வரப்புக்கு வெளியிலுள்ளதான விஷயத்தில் பிரவேகித்து, ஸம்புரோக்ஷணையை டிரஸ்டி தடைசெய்தது மிக்க விபரீதமான தணிகரச் செயலாகும்.

ஸர்க்கார் இயற்றிக்கொடுத்த அவசர அநீதிச் சட்டப்படிக்குப்கூட இதற்கு ஸமாதானம் சொல்லமுடியாது. அச்சட்டத்தில் ஆலயப்பிரவேசம் செய்வித்த கோவிலுக்கு குற்றம் செய்பவர்கள் கோர்ட்டில் சாதாரணமாக தொடரப்படாமலிருப்பதற்கு மாத்திரம் தான் நிபந்தனையிருக்கிறதே யன்றி, கோவிலின் பூஜாக்ரமங்களையும் ஆகமவிதிகளையும் ரத்து செய்து விடவில்லை. நிர்வாஹ அதிகாரியின் இத்தகைய அக்ரமம் எங்கு உண்டு? தேச நிர்வாஹப்பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற ஸர்க்கரின் பின்பலத்தால் இப்படி சட்டவரம்பு மீறிய செய்கைகள் கடப்பதற்குக் கேள்விமுறை கிடையாதா?

இத்தகைய பெரிய தீங்கு நேரத்தில் கிடைத்திருப்பதற்கு கனம் மந்திரி சட்டமூலமாக ஏற்பாடு செய்யவும் மூன்வந்துவிட்டார். டிரஸ்டிகள், அல்லது நிர்வாஹ அதிகாரிக ளாலும் ஆலயப்பிரவேச அபிமானிகளாலும் ஏற்படுத்தப்பட்டதைத் திருத்த அவர் ஏற்பாடுசெய்து விட்டார். டிரஸ்டிகளும், நிர்வாக அதிகாரிகளும் கோவிலின் ஸொத்துக்களே மட்டும் காப்பாற்ற ஏற்பட்ட காவலாளிகளே அல்லது, ஆலயப்பிரவேசம் போன்ற சாஸ்திரிய விஷயத்தில் முடிவுகூற அவர்களுக்கு எவ்வித யோக்யதையும் கிடையாது. தீண்டாதார்களே அமுமதிக்க பக்தர்களுக்கு விருப்பமிருப்பதாக டிரஸ்டிகள் நினைத்தால் போதுமாம், உடனே அவர்கள் மாகாண கவர்மென்டின் அதுமதிபெற்று ஆலயப்பிரவேசத்தை அமுமதித்த விடலாமாம். என்ன விசித்திரமான சட்டம்!

பொதுஜனங்கள் ஆட்சேபிக்கமாட்டார்களென்று டிரஸ்டி நினைத்தால் போதும், அதைக்கொண்டு தீண்டாதார் ஆலயப்பிரவேசத்திற்கு நியாயமுண்டாகிவிடுமாம். கோவில் ஸொத்தையும். பணத்தையும், நகைகளையும் ஒரு டிரஸ்டி தானே எடுத்தக்கொள்வதற்கு பொதுஜனங்களின் ஆட்சேபமிருக்காது என்று ஒருவருக்குத் தோன்றுமுன், உடனே அவர் தர்மசொத்தை அபஹரித்தக்கொளளலாம், என்று ஒருசட்டம் பண்ணினால் எவ்வளவு நீதியுண்டோ அவ்வளவு நீதிதான் இதில் இருக்கிறது. கயமரியாதைக்காரரே, ஜஸ்டிஸ்காரரே, காங்கிரஸ் மந்திரி ஸபை ராஜி நாமா செய்யவேண்டுமென்றும், தாங்களே மந்திரிகளாக வரவேண்டுமென்றும் பொதுஜன அபிப்ராயமிருப்பதாக நினைத்தால்போதும், உடனே காங்கிரஸ் மந்திரிகள் ராஜீனாமாசெய்துவிடவேண்டும்என்று ஒரு சட்டம்ஏற்படுத்தினால்,எவ்வளவுஅழகாயிருக்குமோ அவ்வளவுஅழகாயிருக்கிறது பிரதமமந்திரியின் புதுநிருத்தம்! கனம்ஆசாரியார் கொண்டு வந்துள்ள நிருத்தத்தைப் பார்த்தால், தாங்கள் பிடித்துக்கொண்ட மதுரை கோவில் ஆக்ரமணத்தை எப்படியாவது நிலைக்கச் செய்து விடவேண்டுமென்ற பிடிவாதத்துடன் நடப்பதாகத் தெரிகிறது. கப்பலில் ஒரு துளைசெய்து விட்டதாயும், மற்றொரு தளை போடுவதைவிட, முன் தளை அடையாமல் பார்த்துக் கொள்வதே நல்லதென்று கனம் ஆசாரியர் சொல்லுகிறார்.

கல்ல நிலைமையிலுள்ள ஓர் கப்பலைத் தனியிட்டு அதிலுள்ள மனுஷ்யர்களும், பண்டங்களும் முழுதிப்போகும்படி செய்து, அதை வேடிக்கை பார்த்து ஸந்தோஷிக்கும் மனோபாவமானது எவ்வளவு குரூரமென்பதை நாம் விவரிக்க வேண்டியதில்லை. இத்தகைய ஆத்திரமும் பிடிவாதமும் பிடித்த மந்திரி, மதுரையில் தமது மாயா பிரசாரத்தின் பலனைக்கண்டு களிப்புற்று, தமது நிலைமையை மாற்றிக்கொள்ளப் போவதில்லை பென்று வீம்புபேசியதில் வியப்பையில்லை? ஆனாலும், தெய்வமானது விழித்த வேறு வழியில் வேலை செய்யுமென்பதை இவர் உணராதது தான் வருத்தக் கூடியதாயிருக்கிறது.

மதுரை வனிதனிகள் கூட்டம்

கனம் ராஜாஜிக்கு கருப்புக் கொடி.

வனிதன யுவர்கள் படுகாயமுற்றார்கள்

மதுரை ஸ்ரீ கே. ஆர். வேங்கட்டராமய்யர் (மாஜி காங்கிரஸ் தலைவர்) வேண்டுகோட் கினங்கி சென்னை பிரதம மந்திரி கனம் ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் மதுரையில் 31-7-39 மாலையில் மதுரா மண்டபத்தில் கூடிய வனிதனி யம் செய்திருந்தார்.

50 ஆயிரம் ஜனங்கள் அவ்வமயம் கூடியிருந்தார்கள்.

ஆயிரக்கணக்கான வனிதனிகள் கருப்புக் கொடிகளை கையில் வைத்தக்கொண்டு கோவித்தக்கொண்டிருந்தார்கள்.

இந்தக் கறுப்புக்கொடி ஆர்பாட்டத்தைக் கண்ணுற்ற பிரதமமந்திரி ராஜாஜி.

கனம் பிரதம மந்திரி வருவதற்கு முன் வனிதனிகளின் கூட்டத்தில் காங்கிரஸ்காரர்கள் கலவரம் செய்ததால் பலர் படுகாயமுற்றார்கள்.

கனம் ராஜாஜியை வனிதனிகளின் கூட்டத்தக்குப்போக வேண்டாமென்று பல காங்கிரஸ்காரர்கள் கேட்டுக்கொண்டும், மந்திரி கூட்டத்திற்கு வந்திருந்தார். ராஜாஜியைக்கண்டனம் வனிதனிகளின் கூட்டத்தில் ஆத்திரம் காணப்பட்டது. "அனைவரும் அவசரச்சட்டம் ஒழிக" என்று கோஷித்தார்கள்.

மதுரைச்செய்திகள்

வைசிராயிடம் தூது கோஷ்டி

ஸ்டீகீல் கூட்டத்தில், "அவசரச்சட்டத்தைக் கவர்னர் வாபீஸ் பெற வேண்டு மென்றுவற்புறுத்த வேண்டி" வைசிராயிடம் ஒரு தூது கோஷ்டியை அனுப்புவதென்று நிர்மானிக்கப்பட்டது.

25,000 கையெழுத்துக்கள்

வனதனிகள் ஒரு பெரிய விஞ்ஞாபனத்தை தயாரித்து அதை சட்டசபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்போகிறார்களாம். இந்தில் 25,000 கையெழுத்துக்கள் அடங்கியிருக்கின்றன.

ஆலயப்பிரவேசச்சட்டம்

ஸ்ரீ அஹோபில மடாதிபதிகளின் கண்டனம்

ஸ்ரீரங்கத்தில் மாபெருங்கூட்டம்

'அன்று ராஜாஜி சொன்னதென்ன?'

30-7-39 ஞாயிற்றுக்கிழமை மாலை 7-30 மணிக்கு ஸ்ரீரங்கம்உத்தரவீதி ஸ்ரீ ஹயக்ரீவ மந்திரத்தில் வனைனிகளின் பொதிக் கூட்டம் நடை பெற்றது. சுமார் 1000ம் பேர்களுக்கு அதிகமாகவேகூடியிருந்தார்கள். ஷேணமயத்தில் ஸ்ரீ அஹோபில மடாதிபதிகளான ஸ்ரீ அழகிய சிங்கர், பெரிய, சின்னஸ்வாமிகள் இண்டுபேரும் ஆலயபிரவேசத்தைக் கண்டித்து பேசினார்கள். முதலிவ, பெரிய மடாதிபதிகள் சுருக்கமாய், ஆலயங்களில் ஹரிஜனங்களை அனுமதித்தாலும் ராஜாஷ்ட்ரம் இரண்டிற்கும் க்ஷேமக் குறைவென்றும் சொல்லி சின்னஸ்வாமிகளை பேசும்படி ஆக்ஞாபித்தார். பிறகு சின்னஸ்வாமிகள் பேசுகையில் நீண்டாத ஜாதி என்ற வேதங்களில் கிடையாதென்று சொல்லும் வாதத்திற்குப் பதிலாக வேத சாஸ்திரப் பிரமாணங்கள் மூலம் எல்லா ஜாதிகளையும் நிரூபித்த தடன் நீண்டாதாரும் பிறிலேசமஜாதி என்பதையும் சொன்னார்கள்.

மேலும் பேசுகையில் கடவுளுக்கு நீட்டுன்டா? என்று செய்யப்படும் பிரசாரத்திற்கு பதிலாக ஸ்வ வ்யாகமமான பகவானை எங்கும் பரிக்கலாமென்றும், ஆனால் அர்ச்சாவதாரத்தில் தரிசிக்க நினைக்கும் போது, அர்ச்சையின் பிரதிஷ்டை, அதற்கு மந்திரங்களின்மூலம் சக்தி உண்டாக்குதல், முதலியவைகள் எந்த ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கிறதோ அதன்படியே தரிசனம் செய்யவேண்டுமென்பதையும் வரையறுத்திருப்பதாயும், பஞ்சமர்கள் கோபுரத்திற்கு வெளியில் நின்று தரிசனம் செய்தாலேயே போதுமென்றும், ஆலயம் ஒன்று உண்டென்று ஒப்புக்கொண்டால் இவைகளையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டுமென்றும், சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் வேறு மாதிரி பேசுவதற்கு இடமில்லையென்றும், எந்த பகவத்தினையை தலைமேல் எல்லாரும் கொண்டாடுகிறார்களோ அந்த தேசிகரான ஸ்ரீமந்த, இவைகள் என்னுடைய ஆக்ஞை என்று சொல்லியிருப்பதையும் மீறிசெய்தால் ராஜ்யாதி ஷோபங்கள்தான் ஏற்படுமென்றும், அப்படி பலாத்காரமாய் பிரவேசம் செய்தால் நாம் ஒதுங்கி விடவேண்டியதுதானென்றும் சொல்லி முடித்தார்கள்.

பிறகு ஸ்ரீ T. K. பாலசுப்ரமண்ய அய்யர், B. A. வக்தனைப்சாரம் தெரிவித்த பேசுகையில், முன் ஆலயப்பிரவேச இயக்கம் நடந்த போது இப்போது பிரயத்தினம் செய்பவர்கள் வரிகளையும், நாம் பிரதிவாதிகளாய் இருந்த சுவர்ன்மெண்டார் நடுநிலைமை வகித்தடியால் நமக்கு வெற்றியேற்பட்டதென்றும், இப்போது கவர்ன்மெண்டாரே வாதியாயிருப்பதால் நாம் என்ன செய்யமுடியுமென்றும், பலாத்காரப்பிரவேசம் நடந்தால் ஆலயிகர்கள் கோயிலுக்குப் போகாமல் இருக்கவேதுவதுதான் ச்லாக்யமென்றும், இருந்தாலும் காரமும் தீவ்ரப் பிரயத்தினம் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு முடித்தார். பிறகு புத்தகாட்டகம் ஸ்வாமிகள், சதேசமித்திரன் பத்திரிகையிலிருந்த கனம் பிரதம மந்திரியின் ஸ்டேட்மெண்டில் ஒரு பாகத்தை சபையில் வாசித்த ஒருவர் ஆக்ஷேபித்தால் அந்தக்காரியத்தை செய்யவேண்டாமென்று

மதுரை மகாநாடு

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

'ஆலயப்பிரவேசக்கண்டனம்'

மதுரை ஜில்லா வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆறுவது மகாநாட்டில் மேற்கண்ட தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. தீர்மானங்கள் சபையில் கன்கு விவாதிக்கப்பட்டு, முடிவில் ஏகமனதுடன் நிறைவேற்றன:—

தீர்மானங்களின் விபரம்

முதல் தீர்மானம்:—ஸ்ரீ N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரால் பிரேரேபிக்கப்பட்டு, ஆத்தங்குடி ஸ்ரீ ஜகதீசய்யரால் ஆமோதிக்கபட்டு, தேவகோட்டை ஸ்ரீ சொர்ணகரம் செட்டியார், கோவை ஸ்ரீ சங்கரநாராயணய்யர், நிருப்பங்குன்றம் ஸ்ரீ வேலுசாமித்தேவரால் ஆதரிக்கப்பட்டு நிறைவேறியது.

"மதுரைக்கோவிலில் 8-7-39 நடந்த ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்தும், இம்மாதிரி விரோதமான நடவடிக்கைகளை காங்கிரஸ் வாதிகள் நேடியாகக்கலந்து கொண்டதையும், இம்மாதிரி விஷயத்தக்கு சென்னை அரசாங்கமும், ஹரிஜன தர்ம பரிபாலன போர்டாரும், ஆதரவு கொடுத்ததை இம்மகாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. இம்மாதிரி செய்த ஹரிஜன மதத்தக்கு பெருத்த அநீதி செய்ததாக அபிப்பிராயப்படுகிறது.

ஸ்ரீ மீனாக்ஷி கோவிலின் கர்ப்பகிரஹத்தையும் உள்பக்தத்திலுள்ள பல கதவுகளையும் இடித்தத்தகர்த்திய ஆலயநிர்வாக அதிகாரியின் மூர்க்கத்தை இம்மகாநாடு கண்டிக்கிறது.

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் நிருக்கோவிலின் பட்டர்கள் தரியமாக நின்று, கவர்ன்மெண்டு பின் ஆதரவை வைத்தக்கொண்டு தெய்வஸ்தான அதிகாரிகள் தெய்வ சாந்நித்யத்திற்கு போராடியதைப் பாராட்டுகிறது. இதன்மூலம் பட்டர்கள் மகத்தான தீர்த்தியை அடைந்திருக்கிறார்கள் என்று இந்த மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

தமிழ் நாட்டிலிருக்கும் எல்லா கோவில்களின் டிரஸ்டிகள், பூஜைக்காரர்கள் புராதன வழக்கப் பழக்கங்களை அனுசரித்து கடக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். அதன்படி நடக்க மறுப்பவர்களை ராஜிகாமா செய்து விடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

கோவில்களின் டிரஸ்டிகள், ஆபீசர்கள், பட்டர்கள் பொதுமக்களும் ஆலயத்தில் அனுமதிக்கப்படாதவர்களை அனுமதிக்காமல் தடுக்க அவர்களுக்குப் பூர்ண உரிமையுண்டு என்பதை" இம்மகாநாடு விளக்கிக் காட்டுகிறது.

இரண்டாவது தீர்மானம்:—நிண்டுக்கல் ஸ்ரீ K. R. விஸ்வநாத அய்யரால் பிரேரேபிக்கப்பட்டு, தேவகோட்டை ஸ்ரீ T. G. காகரன சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டு, குடந்தை அக்னிஹோத்ரம் ஸ்ரீ ராமானுஜ தாதாசாரியார் அவர்களால் ஆதரிக்கப்பட்டு ஏகமனதுடன் நிறைவேறியது:—

"ஆலயங்களில் ஆதித்நாவிடர்களை அனுமதிக்கவேண்டி நடக்துவரும் ஒரு இயக்கத்தில் பதிங்கமாய் கலக்துகொண்டும், ஆலயப்பிரவேசத்தினுல் ஏற்படக்கூடிய கெருக்கடிக்குப் பயந்து, கோவிலின் சுத்தியைக் கெடுத்த கிர்வாக ஆலய அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் முறையில் சட்டம் கொண்டுவந்த காங்கிரஸ் மந்திரி சபையை அழுத்தமாக இம்மகாநாடு கண்டிக்கிறது.

ஜனநாயக முறைக்கு விரோதமாக மே.த. வைஸ்ராய், மே. த. கவர்னர் இவர்களுடைய அதிகாரத்தைக்கொண்டு அவசரச் சட்டம் பிறப்பிக்கும்படி செய்த காங்கிரஸ் மந்திரி சபையின் முறையை இம்மகாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

இம்மாதிரி நடவடிக்கைகளினுல் காட்டில் அமைதியின்மையையும் கலவரத்தையும், சர்க்கார் செய்தவருவதை இம்மகாநாடு எடுத்தக்காட்டி எச்சரிக்கை செய்கிறது."

(தொடரும்.)

கோவிலுக்கு ஸம்புரோக்ஷணம் செய்யப்பட்டது

திருக்கச்சிநம்பி கோவிலில் வருஷாபிஷேகம்

ஸ்ரீ காஞ்சி "மெட்ராஸ்மெயில்" பத்திரிகை நிருபருக்கு ஜூலை 31உ பேட்டியளிக்கு கையில் பூர்த்தமில் ஆலயப்பிரவேச விஷயமாக கீழ்கண்ட விஷயங்களை வெளியிட்டிருக்கிறார்.

"பூர்தமல்லியைச் சேர்ந்த சேஷாத்ரி என்பவர் கன்டோன்மெண்ட்டிலிருந்து 3 ஆதிச்சாவிடர்களையும் தாத்நிலிருந்து 2 ஆதித்திராவிடர்களையும் அழைத்தக்கொண்டு நிருக்கச்சிகம்பி கோவிலுக்குச் சென்றார். ஆனால் பூர்தமல்லிகருகிலுள்ள ஆதித்திராவிடர்களை அவர்கள் அழைத்துப்போக வில்லை. கோவில் மண்டபம் வரையே அவர்களை அழைத்தச்சென்றார். அதற்கு மேல் செல்லவில்லை. இந்த ஸம்பவத்தைப்பற்றி பொது ஜனங்களுக்கு ஒன்றும் தெரிவிக்க வில்லை. ஊர்கேல மாகவும் செல்லவில்லை. ஆதித்ராவிடர்களுக்கு பிரஸாதத்தை அர்ச்சகர் கொடுக்கவில்லை. வைத்யகாரமுதலியார், சக்கரை நாயகு என்ற இருவர் மூலமாகவே ஆதித்ராவிடர்களுக்கு ப்ரசாதம் கொடுக்கப்பட்டது.

இக்க ஆலயப்பவேசம் ஸ்தலத்தைச்சேர்ந்த பெரிய மக்களிடம் பரவிய உடன் பரபரப்பு புண்டாக்கியது. இதை தவிர்த்து அவர்களை ஸமாதானப்படுத்த சேஷாத்ரி என்பவர் ஸம்புரோக்ஷணம் செய்ய ஆலய அதிகாரிகளிடம் பத்து ரூபாய் பணம் கொடுத்தார். 18 தேதி ஸம்புரோக்ஷணம் நடைபெற்றது. ஆதித்ராவிடர் நின்ற மண்டபம், அசுத்தமானதாக கருதப்பட்டு அந்த இடத்தில் சுத்தி காக வைக்கோல் கொளுத்தப்பட்டது.

மறுபடி ஜூலை 24உ இல ஆதித்திராவிட பக்தர்கள் தர்சனத்திற்காக சென்று நிருக்கச்சி ஆலயத்திற்குச்சென்றார்கள். அர்ச்சகர்கள் மணியக்காரர் இவர்கள் எல்லா கதவுகளையும் அடைத்து விட்டார்கள். பூஜைகளை நிறுத்தி விட்டார்கள்".

ஸ்ரீ காந்தி செல்லியிருப்பதை அதரைத்து நாமும் பலாத்காரத்தை உபயோகிக்கக்கூடாதென்றும் பேசியிருப்பதாயும், கனம் டாக்டர் ராஜனும் அவஸரப்படவேண்டாமென்றும் சொல்லியிருப்பதாயும், சொல்லி கவர்ன்மெண்டே இதை நடராவும் ஆதரிப்பதாக சொல்லுவதற்கில்லையென்றும் ஸ்ரீ மடாதிபதிகளுடைய அபிப்பிராயத்தை கனம் மந்திரி முதலியவர்களுக்கு தெரிவித்தால். ஏதாவது பிரயோஜனம் ஏற்படலாமென்றும் சொல்லிமுடித்தார்.

பிறகு ஸ்ரீமடாதிபதிகளே இந்த ஸபையின் அபிப்பிராயத்தை கவர்ன்மெண்டுக்கு தெரிவிக்கவேண்டுமென்று தீர்மானத்தை பிரேரேபித்து ஸபையோரால் ஏகமனதாய் அங்கிகரிக்கப்பட்டது. இத்துடன் மீட்டிங்கு கலைந்தது. இந்த வரலாறு கடைசிக்குள் நிருச்சி தென்னூர், நிருவாரூர்காவல் முதலியஇடங்களில் கண்டனக்கூட்டங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

(நமது சொந்த நிருபர்)

ஆலயப்பிரவேச அவசரச்சட்டம்

ஜனங்களுக்கு மதசுதந்திரம் மறுக்கப்படுகிறது

ஜஸ்டிஸ் கட்சி செய்யத்துணியாத காரியங்களை காங்கிரஸ் செய்கிறது

சென்னை ஸனாதனிகளின்மாபெருங்கூட்டம்

(நமது விசேஷ நிருபரிடமிருந்து.)

சென்னை நிருவல்லிக்கேணி தவனேச்வ மண்டபத்தில் 29—7—39 இரவு 8 மணிக்கு ஸனாதனிகளின் மாபெருங்கூட்டம் கூடபெற்றது. ஐயாயிரம் ஆண்மக்கள் அவ்வமயம் அங்கு கூடியிருந்தார்கள். எழுநூறு ஸ்திரீகள் விஜயம் செய்திருந்தார்கள். ஒலிபரப்பும் கருவிகள் வைக்கப்பட்டிருந்தன.

மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் தலைமை வஹித்தார்.

ஆரம்பத்தில் தெய்வப்ரார்த்தனை நடைபெற்றது.

ஸ்ரீ அகோபிலமடம் அதிபதிகளான ஸ்ரீ அழகிய சிங்கர் அனுப்பிய ஸ்ரீமுகத்தை சுதேசமித்திரன் தலைமை ஆசிரியர் ஸ்ரீ எஸ். ஸெஷமிதரசிம்மாசாரியார் படித்தார்.

ஸ்ரீமான்கள் T. S. ராமசாமி அய்யர், S. ஸெஷமிதரசிம்மாசாரியார், C. நரசிம்மாசாரியார், ஸ்ரீ அண்ணங்காச்சாரியார், தேஜியூர் சுப்ரமணியசர்ஸ்திரிகள் முதலி பிரமுகர்கள் கூட்டத்தில் பேசினார்கள்.

ஸ்ரீமான் V. V. ஸ்ரீநிவாசய்யங்கார் தமது பிரசங்கத்தில் கூறியதாவது:—

"ஹரிஜனங்கள் ஆலயப்பிரவேசம் வேண்டுமென்று ஒரு கட்டி. எற்பட்டிருக்கிறது ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியிலாவது, மோகலாய ஆட்சி காலத்திலாவது செய்யத் துணியாத காரியங்களை காங்கிரஸ் கவர்ன்மெண்டு இப்பொழுது செய்யத் துணிந்திருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் கூறிவந்த கொள்கைக்கு எதிராகவே இப்போழுது நடந்து வருகிறார்கள். ஜனங்களின் மத சுதந்திரம் மறுக்கப்படுகிறது என்றும், கேள்விப்படாத ஒரு அவசரச்சட்ட அதிகாரமூலம் அதை நிறைவேற்றப்பார்ப்பது இன்னும் கேவலமாக விடுகிறது" என்று கூறி முடித்தார்.

தேஜியூர் ஸ்ரீசுப்பிரமணிய சர்ஸ்திரிகள் "இன்று பொதுஜன வாக்கெடுத்தால் மக்கள் முற்றிலும் ஆலயப்பிரவேசத்துக்கு எதிராகவே இருப்பார்கள்" என்று கூறினர்.

கூட்டம் 8—30மணிக்கு ஆரம்பித்து இரவு 12—30மணிக்கு முடிவு பெற்றது.

அதவரையில் எல்லா ஜனங்களும் சற்றுமின்றி பெறுமையுடன் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டுக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

குன்னக்குடி

24—7—39உ காலை 6 மணிக்கு ரேமம் கண்ணமணிக்கம் பல்லியநாடு நாட்டார்கள் உள்ளூர் மகாஜனங்கள் ஊர்வலமாக வந்து மலையடிவாரத்தில் தகரக்கொட்டகையில் ஸ்ரீமான் ஸ்வாமிநாத குருக்கள் தலைமையில் தீண்டாதார் ஆலயப்பிரவேச விளர்ச்சியை யும், சட்டத்தின் பெயரால் காங்கிரஸ் கவர்மெண்ட் அவசர சட்டமியற்றி மதவிஷயத்தில் தலையிடும அதிதைக்கண்டிக்கும் ஒர் கடை பெற்றது.

22, 23—7—39-ல் மதுரையில் நடைபெற்ற வர்ணாச்ரம சுயராஜ்ய சங்க மஹாநாட்டில் கலந்துகொண்டவர்களான ஆத்தங்குடி ஸ்ரீ பி. டபிள்யு. ஜெகதீசய்யர், தேவகோட்டை வக்கீல், பி. சுப்பிரமணிய அய்யர், மதுரை ஸ்ரீ சத்தியவேல் பிள்ளை, ஸ்ரீ முத்தையா பாண்டியன், திருப்பங்குன்றம் ஸ்ரீ வேலுச்சாமி தேவர் முதலானர் ஷை கூட்டத்தைக் கூட்டினவர்கள். பிரமுகர்கள் ஜனங்களின் அழைப்பிற்கிணங்கி விஜயம் செய்து சொற்பொழிவாற்றினர்.

தீண்டாதார் ஆலயப்பிரவேச விளர்ச்சிக்கு பொதுஜன அபிப்பிராயம் விரோதமாக இருப்பதையும், மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரர் ஆலயப்பிரவேச விஷயத்தில் காங்கிரஸ் சூழ்ச்சியுடன் நடந்துகொண்டதையும், நடந்து வருவதையும், பத்திரிகை பிரசங்க வாயிலாக காங்கிரஸ்காரர் உண்மைக்கு மாறுக மாயபிரசாரம் செய்துவருவதையும், காங்கிரஸ் கவர்மெண்ட் அதற்கு உடந்தையாகவும் சட்டத்தை தஷ்பிரயோகம் செய்யுமுறையில் அவசரச்சட்டமியற்றி மதவிஷயத்தில் தலையிட்டு வருவதையும் சாங்கோபாங்கமாக விளக்கினர்.

மதுரை ஆலயத்தில் இதுவரையில் போய் வந்த பெரும்பான்மையோர் அதிகம் பேரவ நில்லை என்பதும், ஸ்ரீ மீனாக்ஷிதரிசனம் செய்த ஆஸ்திகர்கள் இன்று சான்னித்யம் இருக்கிறதா இல்லையா என்பதை நேரில் போய் பார்த்தால் உண்மை விளங்குமென்றும், மதுரைமா நகரில் ஸநாதனிகர் நினைத்தோறும் நடத்தப் கூட்டங்களில் இரவு 12 மணி வரைகூட ஆயிரக்கணக்கான மக்கள் மிக்க உத்ஸாகத்துடன் கூடியிருப்பது தங்களுக்கு தெரிய வந்ததென்றும், நாடு முழுவதும் தீர்மானங்களைச் செய்து காங்கிரஸ் கவர்மெண்ட் மதவிஷயங்களில் தலையிட்டு வருவதை பலமாக கண்டிக்கவேண்டுமென்றும், மதத்தைப்பாதுகாக்க மக்கள் எதையும் தியாகம்செய்ய, முன்வரவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்கள். கூட்டம் இரவு 9மணிக்கு இனிது நிறைவேய்தியது. (க. நி.)

ஆத்தங்குடி

24—7—39உ மாலை ஸ்ரீமான் சு. வீரகதிசேன் செட்டியாரவர்கள் தலைமையில் திருப்பங்குன்றம் ஸ்ரீ வேலுச்சாமி தேவர்கள் "ஸநாதனிகளின் கடமை" பற்றி சொற்பொழிவாற்றினர். தலைவர்கள் முடிவுரையுடன் கூட்டம் முடிந்தது. (க. நி.)

மன்னார்குடி

ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி ஆலயத்தின் கீழ கோபுரவாசல் கருடஸ்தம்ப மண்டபத்தில் ஆலயப்பிரவேசத்தைக் கண்டிக்க மாபெரும் கூட்டங்கள் இரண்டு நடந்தது. கூட்டத்தில் பல ஆஸ்திகப்பிரமுக்களும், பண்டிதர்களும் அபரக்கணக்கில் கூடியிருந்தனர்.

ஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள், அக்னிஹோத்ரம் ஸ்ரீ ராமானுஜதாதாசார்யர் முதலிய வித்வான்களும் சொற்பொழி வாற்றினர். "தரம் ப்ரணதயாகம் செய்தாவது கோவில் கோக் காக்கவேண்டும் என்றும்", அவ்வித தம் செய்தால் கடவுள் நமக்கு அருள்புரிவர் என்றும், கவர்மெண்டார் இந்த விஷயத்தில் கம்மை வற்புறுத்துவது அவர்களுடைய அஹிம்ஸாதர்மத்திற்கே விரோதமென்றும், இன்னும் பல அறியபெரிய விஷயங்களை பற்றிப் பிரஸங்கம்செய்தார். வேதபாடசாலை அதிகாரியும் ஆஸ்திகதீணருமானஎஸ்டேட் ஸ்ரீ A. சீனிவாசய்யங்கார் அவர்கள் தலைமை வஹித்தார். நேஷனல் ஹைஸ்கூல் ஸமஸ்கிருத பண்டிதர்களான ஸ்ரீ விச்வனாத சாஸ்திரிகள், ஸ்ரீ A. சிவராம சாஸ்திரிகள், ஸ்ரீ நரஸிம்ஹாசார்யங்கார், ஸ்ரீ அனந்தாசார்யர், ஸ்ரீ அண்ணாதுரைகனபாடிகள், மாஜி டிப்டிகலெக்டர் ஸ்ரீ திருஷ்ணமூர்த்தி அய்யர், நாஷனல் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீ ராமதுரை அய்யர்வர்கள், ஸ்ரீ வெங்கட்ராமதீக்ஷதர், ஸ்ரீ நரஸிம்ஹாமியர், ஸ்ரீ கோவிந்த தீக்ஷதர் இன்னும் பல ஆஸ்திகர்களும் விஜயம் செய்திருந்தனர். ப்ரதிதினம் ஸஹஸ்ராகம பாராயணம் மிக்க பக்திச் சிரத்தையுடன் நடத்து வருகிறது. (க. நி.)

ஸ்ரீமீனாட்சி கோவிலில் சம்ரோக்ஷணம் ?

மதுரை மாநகரெங்கும் 28—9—39 காலை 7 மணிக்கு ஒரே பரபரப்பு. ஆஸ்திக அன்பர்கள் ஆயிரக்கணக்கில் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் நிருக்கோவில் முன் கூடினர்கள்.

இதைக் கண்டதும் டெப்டி சூபரண்டண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், போலீஸ்காரர்கள், ரிஸர்வ் போலீஸ் படையுடன் ஸ்தலத்துக்கு விஜயம் செய்தார்.

ஸ்ரீ ஆர். எஸ். நாயுடு கோவில் கதவுகளை யெல்லாம் பூட்டி விட்டார்.

ஸ்ரீ ஆர். எஸ். நாயுடுவுக்கும், ஸ்ரீமான் K. R. வெங்கட்டராமய்யருக்கும் தர்க்கம் நடந்தது. ஸ்ரீ வெங்கட்டாமய்யர் அதற்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான ஆஸ்திகர்களை ஊர்வலமாக தன் பின்னேடு வரச்சொன்னார்.

"விலக்கப்பட்ட பட்டர்கள் சம்பரோஷணம் செய்வதை அனுமதிக்கமுடியாது" என்று ஆலய அதிகாரி கூறிவிட்டதால் ஸ்ரீ வெங்கட்டராமய்யர் திரும்பிவிட்டார்.

ரவ் சாகேப் N. நடேசய்யரும், ஸ்ரீ K.R. வெங்கட்டராமய்யரும் ஆயிரக்கணக்கான மக்கள் பின்தொடர மதுரை நகர் முக்கிய தெருக்களின் வழியாக ஊர்வலமாக அழைத்துக் செல்லப்பட்டார்கள்.

நெல்லூர்

ஸநாதன மகாநாடு

சென்னை "பாலமிநோதினி" ஆசிரியர் வாகவி நிரு. அ. சுப்ரமண்யபாரதி எழுதுவதாவது:—

நான் 'ஆர்யதர்மம்' என்கிறபத்திரிகையை படிக்க நேர்ந்தது. "ஆர்யதர்மத்தை" நிலை நிறுத்துவதன் நோக்கமாகிய அரிய அனிநிலன் பூண்டு உலாவும் இப்பத்திரிகை நீடூழி வாழச் சென்றிலாண்டவன் நிருவருள் பெருகுமாறு அவன் நிருவடி ஸ்மரணஞ் செய்வதை எனது முதற் கடமையாகக்கொள்கிறேன்.

நெல்லூர் தமிழே கலப்பில்லாத தெலுங்கு தேசம். இல்லூரில் விஷ்ணுவாலயமும், சிவாலயமும், அதுமான் ஆலயமும் இருக்கின்றன. தென்பெண்ணையாற்றங்கரையில் ஒரு மைலில் அழகிய ஸ்ரீரெங்கநாதருடைய ஆலயம் விளங்குகிறது. இத்த கோயிலுக்கு நான் சென்ற 23—7—39உ மாலை 5 மணிக்குச்சென்று ஸ்வாமி தரிசனம் செய்து நிரும்பினேன். என்னோடு இரண்டு தமிழர்களும் ஸ்வாமி தரிசனம் செய்து நிரும்பினர். அவர்கள் அவ்வாலய அமைப்பையும் அவ்வாலய ஸங்கிதிவழு அக்ரஹாரமாயிருப்பதையும் விபரத்தெருவு அக்ரஹாரமாயிருப்பதையும் விபரத்தபடி தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். அவர்கள் தமிழிற் பேசியபடியால் நான் கவனித்தேன் :—

"அத்தே" என்ன இருக்கென்னபயன்" கோவிலுக்கெல்லாம் நசகாலம் ஏற்பட்டிருக்கும் இக்கக் காலத்தில் இக்கக்கோவிலும் இத்தப் பிராமண அக்ரஹாரமும் எப்படி சண்டாளர் என்று பேசப்படும் ஆதித்திராவிடரின் பிரவேச தோஷமில்லாமல் தப்பப் போகின்றன. [illegible] கோ+இல்—கோ=கடவுள், இல்—வீடு கோ=கடவுள், இல்=இல்லை—என்கிற அளவில் பேசி வைத்துக்கும்படியான நிலையை அடைந்து விட்டனவே!" என்று பேசி வெறுத்தனர். இதைக் கேட்ட நான் அவர்களை நெருங்கி, "இது கலிகாலமதால் இக்கக்கோவிலேமையன்றி இதபோன்ற இன்னும் பல வினோதமும் காணலாகும்" என்னும் பல வினோதமும் காணலாகும்" என்று நான். இதைக்கேட்ட அவர்களில் ஒருவர், பெருமூச்சுடன் என்னை நோக்கி, "என்ன செய்யலாம். ஏ! தெய்வமே! இப்படிக்கோவிலுக்கு விபரீதம் செய்பவர்களுக்கு நீதான் கூலிகொடுக்கவேண்டும்" என்று "இப்படி மண்ணவாரி இறைப்பேர். இத்தத் தெய்வம் பார்த்துக்கொள்ளட்டும்" என்று மண்ணவாரி ஸங்கிதியில் இறைத்து விட்டுச் சென்றனர்.

நான் ஆச்சர்யப்பட்டபடி அவர்களுடன் பலவிஷயங்கள் பேசிக்கொண்டு ஹனுமார் கோவிலுக்குப்போனேன். இங்கே இன்று ஸநாதனிகளின் கூட்டம் ஒன்று கூடத்தது. அதகண்டு கவனித்தேன் :—

இக்கூட்டத்திற்கு ஸநாதனிகளாகிய ஆஸ்திகர்கள் பெருந்திராளாக கூடியிருந்தனர். கூட்டம் அமையாய் நடைபெற்றது. தலைவர் கூட்டம் கூட்டப்பட்டதின் நோக்கத்தைச் சுருக்கமாகத் தெரிவித்தார். பிறகு ஒருவித்வான் எழுந்து தக்கத்துடன் பேசினர். அதன் சுருக்கம் :—

"மதுரையில் நடந்த விபரீதம் பெருக்க முடியாதது. இது ஹரிஜனங்களுடைய தன்மைக்கேற்பட்டதல்ல. வர்ணாச்ரமதர்மத்தை ரூபித்த வர்ணாச்ரமிகளுக்குள் பகையை மூட்டுவதற்குக் காரணமானதாகும். தர்மஸ்தாபனத்தை அதன் நோக்கத்தை அதரித்துக் காப்பதைப் புறக்கணித்துப் பிரதம மந்திரி பிடிவாத குணத்தில் சாதகர்களுடைய மனம் புண்படும்படி அவசரச்சட்டம் என்கிற ஆயுதத்தாங்கி நம்மை எதிர்ப்பது ராஜ்யபரந்தாங்குவதாகுமா. கோவில் மதவிஷயமானது இதில் ஸர்க்கார் பிரவேசிப்பதும் அல்லல் விளைவிப்பதும் கொடிய பாபச்செய்கை. உப்பு சத்யாக்ரஹ பரபத்தில் ஏற்பட்ட அவசரச் சட்டத்தை கொடுமையென்று கூவி கண்டித்த காங்கிரஸ் ஸர்க்காரா இப்போது இவ்விடர் புரிவது, ஆகர இவர்குத் தெய்வமே இல்லையென்று இருமாப்புற்ற இரண்யன்கதை தெறியாதா?

இந்தக்குற்றம் இந்தப்பிரவியோடு விட்டு விடுமா? என்றும் இன்னும் பலரும் பேசிக் கொண்டார்கள். பிறகு இன்னெருவர் பேசிக் கொண்டிருந்தார். முடிவில் பிரதம மந்திரியார் செய்கை அடாதென்கிற தீர்மானம் ஏற்பட்டது.

மிலட்டரி

தஞ்சாவூர் ஜில்லா மிலட்டரில் ஹரிஜன தர்மபைபின் ஆதரவில் ஜூலைமீ 29உ மாலை ஸைஸ்கிருத வித்யாசாலையில் மதுரை முதலிய விடங்களில் நடந்த ஆலயப்பிரவேசத்தைக் கண்டிக்க ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ காசி. சுப்பாரமய்யர் தலைமை வஹித்தார். மதுரை முதலிய விடங்களில் நடந்த ஆலயப்பிரவேசமானது அரசர்மிகமானதென்றும், மந்திரிகள் தங்கள் அதிகாரத்தை தஷ்பிரயோகம் செய்து அவசரச் சட்டம் இயற்றியதைக் கண்டித்தும், நிருக்கருகாவூர் ஸ்ரீ டி. எல். சுப்பய்யர், ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகள், அகமாங்குடி ஸ்ரீ கடராஜய்யர், ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திருருக்கள் முதலியவர்கள் பேசியபின் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

ஆலயப்பிரவேசமானது சாஸ்திரங்களுக்கும், ஆகமங்களுக்கும், தர்மமார்க்கத்துக்குர், விரூத்தமாய் மதுரை, தஞ்சை முதலிய இடங்களில் நடைபெற்ற ஹரிஜன ஆலயப்பிரவேசத்தையும் ஷை ஆலயப்பிரவேசம் நடக்கப்பட்ட விதத்தையும் அழுத்தமாய் கண்டிக்கிறது.

இது விஷயமாய் மந்திரிசபையார் கோகவோ மறைமுகமாகவோ, முழுவதும் மதசம்பந்தமான ஆலயங்களில் ஹரிஜனப்பிரவேசத்தை ஆரம்பித்தும், அதற்கு பாதகரப்பாக அவசரச் சட்டத்தையும், இயற்றியதையும், இக்கூட்டம் கண்டிக்கிறது. மேலும் காங்கிரஸ் மதவிஷயங்களில் நடுநிலைமை வகிப்பதென்ற கொள்கையை மீறிநடப்பதைப்பற்றி இக்கூட்டம் வருத்தமடைகிறது. மேலே என்னென வருமோ என்பதைப் பற்றியும் பயப்படவேண்டியிருக்கிறது.

ஆஸ்திகர்கள் எப்படிபட்டும் இத்தகைய செயலைஎதிர்த்து ஆங்காங்கு பிரசாரம்செய்து ஆலயங்களின் புனிதத் தன்மையை காப்பாற்றவேண்டுமென இக்கூட்டம் வேண்டுகிறது.

தீர்மானங்களின் நகல் சென்னை கவர்னருக்கும், பிரதம மந்திரிக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பும்படி தீர்மானிக்கப்பட்டது.

(க. நி.)

பண்ருட்டி

விஷமம் தடுக்கப்பட்டது.

பண்ருட்டி சமீபம் திருவதிகை என்று சொல்லப்படும் நிரிபுரசம்ஹாரம் என்னும் சேஷித்திரமாகிய ஸ்ரீ பிரஹந்நாயகி ஸமேத ஸ்ரீ வீரட்டேச்வரஸ்வாமி தேவாலயத்தில் பஞ்சமார்கள் ஆலயப்பிரவேசம் செய்யப்போவதாக சில காங்கிரஸ்காரர்களால் தூண்டப்பட்டு நிகழென்று 28—7—39உ வெள்ளிக்கிழமைதினம் ஆலயத்தில் பிரவேசிப்பதாக அதிக ஆர்பாட்டங்களுடன் சுமார் 50 பேர்கள் கொண்ட ஒரு கூட்டத்தார்கள் கெடில நதியிலிருந்துவரும் விஷயத்தை ஷை தேவஸ்தானம்தர்மகர்த்தாக்களுக்கும், மானேஜருக்கும் தெரிக்து ஷைடிரஸ்டிகள் 3 பேர்களும் மானேஜரும் பண்ருட்டி போலீஸ்சுக்குத் தெரிவித்த கடலூர் N. T. போலீஸ் சூப்பிரண்டெண்டுக்கும் தந்திகொடுத்தார்கள் அதன் பேரில் 9 கான்ஸ்டேபிள் சகிதம் டிபுடி சூப் செண்டுடென்டும், பண்ருட்டி சப்இன்ஸ்பெக்டரும் 4 கான்ஸ்டேபிள் சகிதம் வந்தார்கள். போலீஸ் பராக்கள் வந்திருக்கும் விஷயத்தை தெரிந்து மூலைக்கு ஒவ்வொருவராய் ஆள் அடையாளம் காட்டாமல் ஓடிவிட்டார்கள். தூண்டிவிட்டவர்களையும், காரணம். ஆஸ்திக ஜனங்கள் மட்டும் 1000 பேர்கள் அசையாமல்கூடி இருந்தார்கள் காலை 7 மணி முதல் 10 மணி பரியந்தம் ஆஸ்திகர்களைக்கூட்டமும் போலீஸாரும் இருந்தார்கள். கடைசியில் ஒன்றும் நடக்கவில்லை. போலீஸார்கள் கடைபெக தர்மகர்த்தாக்களை தர்மகர்த்தாக்களே கோக்கி ஆலயப்பிரவேசம் விஷயமாய் அபிப்பிராயம் கேட்டார்கள். அதற்கு தர்மகர்த்தாக்கள் 3 பேரும் ஏகோபித்து பஞ்சமர்கள் ஆலயப்பிரவேசம் செய்ய தங்களுக்கு அபிப்பிராயமில்லை. என்றுகண்டித்துசெல்லிவிட்டார்கள் அதன்பேரில் ஏதாவது கலவரம் நடக்குமோ வென்று பயத்தா இரு தினங்கள் போலீஸ் காவல் வேண்டும் என்று கேழ்க்க, அதன் பிரகாரம் கான்ஸ்டேபிள்கள் கோவில் வாயில் பாரா இருந்து வருவதாக தெரிகிறது கூட்டங்களும் நடக்கன. இவ்விடத்திலும் சுத்தவட்ட காரமங்களிலும் விசேஷ பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. (ஒரு நிருபர்.)

MESSAGE

Dr. N. Subramanya Iyer M. A., M. B. & C. M., Retd. Senior Dewan Peishkar, Travancore.

In the course of his exclusive message to the "Arya Dharmam," observes :—

"I have always been an active sympathiser with the aim and object of "Arya Dharmam." In a desert of un-Hindu and anti-Hindu journalism, there are only a few cases. "Arya Dharmam" is one of those few. That it has the august patronage of His Holiness Sri Sankaracharya of Kumbakonam is a special illuminating circumstance. But unless he can make up his mind to make it the official organ of Hindu orthodoxy for which it stands in south India, and unless, for that purpose, he is prepared to throw in all the weight of his great name and resources, I must painfully record my opinion that much headway cannot be made. The force and volume of opposition is so great. His Holiness has just returned form a long tour, and will be able to apply himself to his work with greater concentration than before. The Chrstian Church—say the Pope has a number of journals: and it is quite a legitmate direction of activity for our Matadhipathis to own and direct journalistic enterprise in such manner as they may think fit. In no better way is the propagation of Dharma possible in these days.

Although I have been myself associated with journalism for many years now, I have felt the want of an authoritative backing. The world has great need now for India's philosophy and religion: and our revered Swamis have an urgent duty to rush to its aid. I am sure that will be done.

Wish your journal all success."

மதுரை மகாநாடு

(வரவேற்புப்பிரசங்கம்
7-ம்பக்கம் தொடர்ச்சி)

களிலும், பல வகைப்படு தொழுதுவகையில் கூயா? எத்த ஒரு மரத்கடியிலே, எத்த ஒரு காட்டிலோ, முனியாண்டியோ, கருப்பண்ண சாமியோ, குருசாமியோ ஸ்வரூபத்திலும் ஸ்வரூபமில்லாமலும் கும்பிடப்படவில்லையா? அவரவர் கும்பிடும் அந்தந்த இடத்தில் தானு அந்தந்த தெய்வம் வசித்து வருகிறது.

ஆலயப்பிரவே சீர்திருத்தக்காரர்கள் பகவான் சன்னிதியில், ஜாதி வித்யாசம் இல்லை யென்றும், எந்தக்கோவிலும் இதுக்கள் யாவருக்கும் பொது என்றும், கோவில் கடவுள் வீடு என்றும் இந்தக்காரணங்களால் கோவிலுக்குள் எந்த வர்ணத்தவரும், பிரவேசிக்கவும் தொழவும் சம உரிமையுடையவர் என்றும் வாதித்து ஆலயப்பிரவேசத்திற்கு முற்பட்டு விட்டனர். பகவான் சன்னிதி என்பது என்ன, பகவான் எங்கு இருக்கிறார்? இக்கக் கோவில்களைத் தவிர்த்து பகவான் வேறு எங்குமில்லையா என்ற பல கேள்விகளையும் கவனிக்கவேண்டும். ஆஸ்திக்கர்களாயுள்ள எவரும், பகவான் விடத்தில் நிரந்தரமாக எவ்விடத்திலும் உள்ளார் என்று ஒப்புக் கொள்வர். அப்படியிருக்க ஏதோ, ஒரு விதிப்படி ஆகம விதிப்படி ஏற்பட்டிருக்கும் ஒரு கோவிலில் மட்டும் கடவுள் இருக்கிறதாகக் கொள்கை. கோவில் என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டிருப்பது ஒரு வகுப்பினர் அவர் விதிப்படி கடவுளை தொழுவதற்கே பூஜிப்பதற்கே நிர்மாணிக்கப்பட்ட ஒரு இடம். இப்படிப்பட்ட இடங்களில், ஆராதனமோ, பூஜையோ, சில ஆகமவிதிப்படிக்கும், சாஸ்திர விதிப்படிக்கும் கடைபெற தீர்மானிக்கப்பட்ட ஸ்தலங்கள். அப்படிப்பட்ட கோவில்களில் அந்தந்த சன்னியின் ஆகம விதிப்படிக்கே, ஆராதனம் பூஜைகள் கடைபெற்று வருகின்றனவே ஒழியகொழுவதற்கோ, தரிசனத்திற்கோ வரும் எந்த ஒருவரின் சௌகர்யப்படிக்கோ இஷ்டப்படிக்கோ கோள்கைப்படிக்கோ பூஜை விதிகளை மாற்றிக் கொள்ளவும், கடத்திக் கொள்ளவும், சுதந்திரம் கிடையாது. இந்த ரீமப்படிக்கே கோவில்கள் கட்டப்பட்டும் பிம்பங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டும், அந்தந்த விதிகளில், நம்பிக்கையுள்ளவர்களாலும், அவற்றை அனுஷ்டிக்க இஷ்டப்பட்டவர்களாலும், கட்டளைகளும் ஏற்படுத்தப்பட்டும் வரப்படுகின்றன. இப்பேற்பட்ட கோவில்களே உண்டாக்கிய மகராஜக்களும், அந்தந்த ஆகமத்தாலும், சாஸ்திரத்தினும் நம்பிக்கையுடையவர்களாகியே வர்ணச்ரம விதிக்கு கட்டுப்பட்டவர்களாகியே இத்தக் கோவில்களுக்கு, கட்டளைகளையும், நிட்டங்களையும், விதிகளையும் ஏற்படுத்தி அவற்றில் பரிபாலனத்திற்கு வாளமான பூமிகளும், நிரவியங்களும் ஒதுக்கி வைத்தனர் ஆகவே இத்தக் கோவில்கள் ஏற்படுத்தப்பட்டது ஏதோ ஒரு விதிப்படியே பூஜைக்கும் தரிசனத்திற்கும் மட்டுமே. அந்த விதிப்படி ஒரு வகுப்பினருக்கு மட்டும் உரியதாகும். அப்படிப்பட்ட ஆகம முதலிய சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்களும் பற்று உள்ளவர்களாகிய, பஞ்சமர் முதலிய ஆலயப் பிரவேசத்திற்கு அருகரல்லாத இதர வகுப்பினருக்கு, ஏற்ற தரிசனத்தின் நிமித்தமும், நானகு வர்ணத்தாருக்குள்ளும், சமையங்களுக்கேற்ப சாஸ்திர முறைப்படி தீண்டாமை விலக்கு முதலிய ஏற்படுகிற காலங்களில் அன்னோருக்கு தரிசனநிமித்தமும் உற்சவ விக்கிரகங்களும் பிரதிஷ்டையாகி, அவற்றை அலங்காரமாக எழுந்தருளப்பண்ணவும், உற்சவாதி கடத்தவும், ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இத்தப்படியாக விதிகளை ஏற்படுத்தி ஒவ்வொரு கோவிலும், ஒவ்வொரு கைங்கர்யத்திற்கும், இன்னின்னார் இன்னின்ன ஜாதியினர் தான் அருக வென்றும் நிர்மாணித்திருக்கின்றனர். அந்தந்த வேலையும் ஜாதியைப் பொறுத்தே இருக்கிறது. இவ்விடத்தில் அதிகமாக இதைப் பற்றி விவரிக்க இடமில்லை. பூஜை செய்பவருடைய வேலையை பரிசாரகரோ, வேதம் ஓதுபவரோ, மற்றபடி அந்தணரல்லாத வேறு எவருமோ செய்ய அருகலல்ல. ஈஸ்வர சிருஷ்டியின் மூலம் மனிதராய் பிறந்த யாவரும் மனிதர் என்ற உரிமைப்பாராட்டி பூஜைபண்ணிப் பரத்யதையையோ மற்ற பரத்யேதையையோ அடைய சுதந்திரமுடையவர் அல்லர்.

முன் காட்டியபடி அவர் அவர் கொள்கைப்படி கடவுளை வழிபடுவதற்கு அனுஷ்டானத்தில் பலவகைகள் இருக்கின்றன. கிராமங்களிலும், பட்டணங்களிலும் பல வேறு தேவதைகளை பலவேறு வகைகளால் கும்பிடுகின்றனர். ஆலமரத்தடியில் மணிகளைக் கட்டிக்கொண்டு, காட்டுப்பக்கங்களில் ஒரு மூட்செடியினடியிற்கூட ஒரு கல்லை ஊன்றியும், தெருக்களில் அதே மாதிரி கற்களை ஊன்றியும், தம் தம் இஷ்டப்படி பூஜைகள் போட்டும், மனோபிஷ்டத்தை பிரார்த்தனைகள் மூலமாயும் எல்லாவிடத்திலும் நிறைவேற்றிக்கொண்டும் கொண்டாடுகிறார்கள். இப்படிக்கும்பிடுகிறவர்கள் ஒரு சாரார். இப்படிப்பட்டவர்கள் ஆகமவிதிப்படி ஸ்தாபிக்கப்பட்ட எந்த கோவிலிலும் பிரவேசிக்கத் தாமாகவே இச்சிக்கவில்லை. அதிலும் தமக்கென்று வரையறுக்கப்பட்ட அளவுக்கு மீறி பிரவேசிக்கவாசிக்கவுமில்லை. ஏதோ ஒரு இளச்சியின் பயனுய், தெவதபுத்தியுடனும், பொறுமையுடனும், புத்திமாதத்துக்கும், ஏமாற்றத்திற்கும் இடமில்லாத்து, ஆலயப்பிரவேசிட்டத்திற்கு முன் வந்துள்ளார்.

இத காரும் ஒற்றுமையுடனும், மனச் சமாதானத்துடனும், நிருப்தியுடனும் தம் தம் கொள்கைபடியே கையாண்டு வந்தும், ஒரு மாத்தைக்கண்டும், ஒரு கோபுரத்தைக் கண்டும், ஒரு மலையைக்கண்டும், ஒரு சோலையைக்கண்டும், பூரணமான ஆனந்தத்துடன் கடவுளை நம்பி அந்தக் கடவுளின் தன்மையை (விரும்ப நோக்கத்துடன்) எந்த நிலைமையிலும் எந்த ஸ்பரூபத்திலும் தான் உணர்ந்தும் அனுபவித்தும் வந்த ஒரு ஸ்ரோமத்தானுக்கும், தாழ்த்தப்பட்டவன் என்று அழைக்கப்படும் ஒரு பஞ்சமனுக்கும், சம உரிமையென்ற அவசியமான பேரலிகளைப்பிவிட்டு இருபக்கத்திலும் மன அமைதியும், சந்தோஷமும், கெட்டு அவஸ்திப்படும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது.

பலர் பலவிதமாக கடவுளை வழிபட்டு வருகின்றனர். அவர்அவர் கொள்கைக்கேற்ப வேதான் விதிகள் ஏறபடித்தப்பட்டிருக்கின்றன. ஆகமம் சாஸ்திரம் என்ற விதிகளும் அப்படியே. இவற்றை அனுசரித்தே தான் கோவில்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தந்த சாஸ்திரத்தை அனுஷ்டிப்பவருக்கே அந்தந்த கோவில், கோவில் முன்னும் சாஸ்திரம் பின்னுமாக ஏற்பட்டதல்ல. சாஸ்திரத்தின் விதிப்படியே கோவில் கட்டப்பட்டும் பூஜைகள் கடத்தும் வருகின்றன. அந்தந்த சாஸ்திரத்திலும், ஆகமத்திலும் நம்பிக்கையுள்ளவருக்குத்தான் அந்தந்த கோவில் சாஸ்திரத்திற்கும் விதிக்கும் முறைகளவரும் எந்த விதமான உரிமையையும் அடைய அருகல்ல. ஆகவே எக்கக்கோவிலிலும் சாஸ்திரத்திற்கும், ஆகமத்திற்கும் விரோதமாக எவருக்கும் சம உரிமைக்கு பாத்திரப்பட்டதல்ல. பொதுஜன சீர்மூகத்தாரின் நேரக்கப்படி எத்தவிதமான மனோபிஷ்டத்தையும், பூர்த்தி செய்துகொள்ள கோவில்கள் ஏற்படுத்தப்பட்டவையல்ல. ஆகமத்திலும் சாஸ்திரத்திலும் கம்பிக்கையல்லாதவருக்கும் அவற்றிற்கு கட்டுப்படாதவருக்கும் கோவிலில் எவ்வித சுதந்திரமுமில்லை. கோவிலே கட்டியும் ஏற்பாடுகளும் செய்துவைத்த மகாராஜாக்களும், மற்றும் பலரும் இந்த நோக்கத்துடனேயும் இந்த கம்பிக்கையுடனேயும் தான் நிர்மாணங்கள் செய்துள்ளார்கள். சம உரிமையை உத்தேசித்தல்ல.

மற்றும் ஆகமசாஸ்திர விதிகளில் பற்று இல்லாமல் வயிற்றுப்பிழைப்புக்காகவும், கோவிலில் புகுவதம், நிர்வாகங்களை ஏற்றுக்கொள்வதும், தம்முடைய மற்ற இச்சைகளை பூர்த்தி செய்து கொள்ளுவதற்கும், அதிகார ஸ்தானங்களை வகிப்பதவும் பாவமே. தற்காலத்திய நோக்கம், கோவிலே கடவுள் வழிபாட்டுக்கு இடமாக கருதுவதை பெரும்பாலும் கருதாது, பொருட்சுகட்சொலியாகவும், மாற்றியும் மற்றும் வினோதம் களியாட்டம் முதலியவற்றிற்கும் இடமாகக் கருதியும் வருவதும் பாவமே. இப்பேற்பட்ட நோக்கமும் தீண்டாதார் ஆலயப்பிரவேச முயர்ச்சிக்கு பெரும்பாலும் சாதகமாக இருகிறது. கடப்பு சமயத்தில் மீனாட்சி அம்மன் கோவிலில் கூட்டம் ஏராளம் என்கிறார்களே அதற்கு காரணம் வினோதத்தை பார்க்க என்பதல்லவா?

(தொடரும்.)

The Premier English Weekly Devoted to the cause of Sanatana Dharma.
"Dharmarajya"
(Dharmarajya Dharma Sevaka Sabha).
Patron Founder & Spiritual Director:
H. H. Sri Sankaracharya, Puri.
Widely circulated in
India, Burma & Ceylon.
Best Medium for Advertisement
Annual Subscription Rs. 5.
Apply to:—
The Manager, "DHARMARAJYA'
Chandi Chowk, Delhi.

திவான்பகதூர் ராமநுஜாசாரியார் அவர்கள் எழுதியது.

திருவாய்மொழி (3 வால்யூம்)	7	8	0
தோர்த்தசங்கிரப் பாட்டுகள்	0	6	0
ஸ்ரீமத் தோபாஷ்யம் (3 வால்யூம்)	3	0	0
யதீந்த்ரமத தீபிகை.	4	0	0
ராமாயணசாரம் (பைண்ட்)	1	8	0
ஷி (சாப்பர்)	1	4	0
சித்திர ராமாயணம் (பூஜையில் இருக்கக்கூடியது).	1	0	0
ராமாயணஸாரம்,(ரசப்பர்),சித்திர ராமாயணம், இரண்டும் சேர்த்து.	2	0	0

பிரும்மஸ்ரீ அருட்கவி ந. சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

ஸ்ரீ நகர விமர்சனம்.	0	12	0
ஸ்ரீ குரு விமர்சனம்.	0	5	0
வரிவஸ்யா ரஹஸ்யம்.	1	0	0
ஸ்ரீ லக்ஷ்மீத்ரிசதீ பாஷ்யம்	1	0	0
ஸ்ரீவித்யாஸபர்யாபத்ததி	2	0	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன அச்சுக் கூடம் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

மதுரை மஹாநாடு

(2ம் பக்கம் தொடர்ச்சி)

யாதொரு ஹானியுமில்லை யென்று கவர்ன்மெண்டார் நிணைப்பது தவறு. ஜனங்கள் சம்மதித்து விட்டார்கள் என்றுவது, இனிமேல் சிறுகச்சிறுக சம்மதித்த விடுவார்களென்றுவது நிணைப்பதும் தவறு. ஜனங்கள் அடைந்திருக்கும் துக்கம் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. நிமிஷத்தாலும் ஹடம் கடத்து விட்டதைக்கண்டு ஸ்தம்பித்து நிற்கிறார்கள். ஆலயங்களுக்கே இவ்வபத்து வருமென்றுவது, கரப்பரர் இல்லாமல் போய்விடுமென்றுவது அவர்கள் எண்ணவில்லை.

ஆலயப்பிரவேசத்தை சாதிக்க சர்க்காரே உடன் நின்று தங்கள் அதிகாரத்தையும், பலத்தையும் உபயோகிப்பார்களென்றுஒருவரும் எதிர்பார்க்கவில்லை. எலெக்ஷன் பிரநிதிகளில் ஆலயப்பிரவேசம்சேர்த்தல்ல. இதை சாதிப்பதற்காக மந்திரிகளுக்கு அதிகாரப் பதவியைத் தரவில்லை. உண்மையில் எலெக்ஷன் நடக்கும் முன்னிலையில் ராஜீய நோக்கங்களுக்காக மாத்திரம் வோட் கேட்டார்களே யொழிய, ஆலயப்பிரவேசத்திற்காக அல்லவென்றும் சொன்னார்கள். குறுக்கு வழியில் ஆலயப்பிரவேசம் சாதிக்க கவர்ன்மெண்ட் முயற்சிப்பதிலிருந்து மஹாஜன அபிப்பிராயம் இந்த விஷயத்தில் தங்களுக்கே பக்கம் இருக்குமா என்பதைப்அவர்களுக்கே பெரிய சந்தேகமிருக்கிறதென்று வெளியாகிறது. ஜனங்களிடம் அதிருப்தி பரவி வாவில்லையென்று சர்க்கார் நிணைக்கவேண்டாம். இந்த விஷயமாகவும் சர்க்கார் சமீப காலத்தில் நிறைவேற்றியுள்ள வேறு கெடுதல்களாலும், ஜனங்கள் மனதில் ஆழ்ந்த அதிருப்தி ஏற்பட்டு வருகின்றது என்று முன்னெச்சரிக்கையாய அறிவுறுத்துகிறோம். ஆலய பிரவேசம் பண்ணி, சச்சரவுகள் உண்டாக்கவில்லையே என்று எண்ணக்கூடாது. பரிக்கப்பட்ட ஜனங்களின் அளவு கடந்த பொறுமையை அது காட்டுகிறது. வெகுகாலமாக நம் பொறுமை குடி கொண்ட ஸ்வபாவமுடையவர்கள். பயத்தினால் ஜனங்கள் அடங்கியிருக்கிறார்களென்று வைத்துக்கொண்டாலும், சர்க்கார் அநுஸரிக்கும் முறை சரியல்ல. பலமற்றவர்களை காக்கவேண்டுமேயல்லாது, நசுக்குவது சர்க்காரின் கடமையல்ல.

ஆஸ்திக ஜனங்கள் அவமதிப்பை தலை குனிந்து ஏற்றுக்கொள்வார்களென்று கவர்ன்மெண்டார் நினைக்கவில்லை. அவர்கள் தீவ்ரமாக இளர்ச்சி செய்ய வேண்டும். அப்படி முயன்றால் தான் இக்காலத்தியே சர்க்கார் சட்டை செய்து இணங்குவார்கள். கோவில் நிர்வாக உத்யோகஸ்தருக்கும், பூஜை செய்பவர்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் விசேஷ பொறுப்புண்டு. தாங்கள் தொண்டு பூண்டிருக்கும் கோவில்களுக்கு ஏற்பட்ட விதிகளையும், புராதன ஆசாரங்களையும், பூர்ண சிரத்தையுடன் காப்பாற்ற வேண்டும். தங்களுக்கு அப்படிச் செய்ய மனமில்லையானால், உடனே தங்கள் பதவிகளை ராஜீனாமா கொடுத்து கோவில்களிலிருந்து விலகி விட வேண்டும். ஆசார சம்பிரதாயங்களை ரக்ஷிக்கவே அவர்களுக்கு ஸாதனம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறு எந்த வகையிலும் அவர்கள் நடந்து கொள்ளக்கூடாது. அவர்கள் விதிகளுக்கு கட்டுபடுகிறார்களா, இல்லையா என்று வெளிப்படையாய் சொல்லவேண்டுமென்று கோவில் நிர்வாகிகளை ஆஸ்திகஜனங்கள் கேட்கூரிமையுண்டு. புராதன ஏழுங்குகளின்படிநடப்போமென்று அவர்கள்நிஜஸ்வரூபகமாய் ஒப்புக்கொள்ளாத பக்ஷத்தில், அவர்கள் ராஜீனாமா செய்ய வேண்டுமென்று கேட்க உரிமையுண்டு. இது வரையில் நடந்த சம்பவங்களிலிருந்து, சர்க்கார் தமது முழு பலத்தையும் அதிகாரத்தையும் ஆலயப் பிரவேசத்துக்கு பிரயோகிக்கிறார்களென்று, சராதாரண ஜனங்களும் டிரஸ்டிகளும் நினைக்கிறார்கள். அவர்னர்கள் பிரவேசிப்பதற்கு சர்க்காரே பலாத்காரம் செய்வார்களென்றும் சிலர் நினைக்கிறார்கள். இந்த சங்கைக்கு இடமில்லை. இன்றைக்கிருக்கிற சட்டப்படி, இண்டெம்னிடி பில் பாஸ் ஆனபோதிலும் ஏற்படக் கூடிய சட்டப்படி டிரஸ்டிகளும் கோவில் நிர்வாகிகளும் அவர்னிள் கோவிலில் புகாமல் தடை பண்ண பூரா பாத்யமுண்டு. மந்திரிமார்களே சொன்னாலும், எண்டோமெண்ட்ஸ் போர்டு ஆக்ஞையிட்டாலும், அதை கவனிக்காமல் தற்போதுள்ள ஒழுங்கை நிலைநிறுத்த டிரஸ்டிகளுக்கு பாத்யமுண்டு.

அவர்கள் மீறி புகுந்தால், போலீஸ் பந்தோபஸ்து கேட்கவும் டிரஸ்டிகளுக்கு பாத்யமுண்டு. தர்ம நிதிவைக்காக்கும் கவர்ன்மெண்டு எல்லா வகுப்பார்களுடைய உரிமைகளையும் காப்பாற்றித்தானேண்டும். ஒரு வகுப்பாரின் உரிமையைப்பறித்து மற்றொரு வகுப்பை சமாதானப்படுத்தும் சர்க்கார், நீதி நடத்தும் சர்க்கார் ஆகாது. ஸாக்ஷியம் கெட்டுப்போன ஆலயங்களில் இனிமேல் சரிவர பூஜை ஆராதனங்கள் நடக்காமல், அவைகள் வெறும் கட்டடங்களாக நிற்கவேண்டி வருமென்பதை சர்க்கார் சீக்கிரம் தெரிந்துகொள்வார்கள்.

இப்படி நடப்பதால், கவர்ன்மெண்டுக்கு பெரிய ஸ்தாகம் ஏற்பட்போவதும் இல்லை. ஐரோப்பிய நாடுகளுக்குள் யுத்தம் மூளுவது இந்த நாழிகையிலோ, அடுத்த நாழிகையிலோ என்றிருக்கிறது. எதிர்த்து நிற்கும் தேசங்கள் எல்லாம் ஒரே மதத்தைச் சேர்ந்தவைதான். ஜெயமும் ஒப்பாறும் ஒரே மதத்தைச்சேர்ந்தவைதான். இரு நாட்டார்களும் ஒரே ஸ்தாதியை சேர்ந்தவர்கள் மாயில் உண்டானவர்கள். இப்பொழுது ஒருவர் கழுத்தை இன்னொருவர் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒரே தாய், தந்தையருக்குப் பிறந்த பிள்ளைகளுக்குள்ளேயே சொத்து விஷயமாய் பெரிய சண்டைகள் உண்டாகி, தாயிலோரதிகள் ஆகிவிடுகிறார்கள். மந்திரிகள் ஆவதற்கு முன்னும் பின்னும், காங்கிரஸ்காரர்களுக்கு மதம் என்றால் பற்றுவது, மதசாரஸ்கல் பாதகரக்கத்தகுந்தவை என்று எண்ணமவது இடவாதது. ஆகையால், காங்கிரஸ்காரை நம்பாமல், மகம்மதியர்கள் தங்கள் மதத்தக்கும், ஆசாரங்களுக்கும் பாதுகாப்பு வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். மதசாரங்களில் பிரவேசித்த அநேக கோடி ஜனங்களின் அநிருப்தியை சம்பாதிப்பதைக் காட்டிலும், மதத்தில் பிரவேசிக்காமல் காங்கிரஸ் கவர்ன்மெண்டு நடப்பார்களானால் எவ்வளவோ நன்மையாயிருக்கும்."

தஞ்சையில் ஆலயப்பிரவேசக் கண்டனம்.

தஞ்சை மகர்நோம்புச்சாவடி ஸ்ரீநிவாஸப் பெருமாள்கோவிலில் 20வன்று ஸ்ரீமான் டி. கோதண்டராமய்யங்கார் தலைமையில் ஆலயப்பிரவேசக் கண்டனக்கூட்டம் கடைபெற்றது. ஸௌராஷ்டிரா ஸமூகத்தினர் வாளமாகக் கூடியிருந்தனர். ஸ்ரீ அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியர் பேரினபின் ஒரு கண்டனத்தீர்மானம் நிறைவேறியது.

மற்றொரு கூட்டத்தில் ஸ்ரீமான் காமயண ராவ் பேசினர். அங்கும் ஒரு கண்டனத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

கடலூர்

"எங்களூரிலும் இல்லை"

கடலூர் ஸ்ரீ பாடலீஸ்வரர் நிருக்கோவில் தேவஸ்தான டிரஸ்டிகள் ஸ்ரீமான்கள் கெசனூர் ராமசாமி செட்டியார், வரனூர் ராமசாமி முதலியார் "ஹரிஜனங்களை ஆலயத்துக்குள் அனுமதிக்க முடியாது".... என்றதைரியமாக பதில் கூறி விட்டார்கள். இதை கேட்ட கடலூர் ஆஸ்திக மகாஜனங்கள் சந்தோஷமுற்றார்கள்.

24-7-39 காலை கோவிலிய் பத்து பறையர்களுடன் தழையப்போவதாக ஸ்ரீ பி. தணிகாசலம் பிள்ளை (ஸ்ரீல்ஸ ஹரிஜன் சேவா சங்க காரியதரிசி) ஆலய டிரஸ்டிகளுக்கு கடிதமூலம் எழுதி இருந்தார். அதற்கு "எங்கள் கோவிலில்" அனுமதிக்க முடியாது என்று பதில் வந்து விட்டது. (ஒரு நிருபர்)

ஸ்ரீ ஜகத்குரு பூரி சங்காசார்ய ஸ்வாமிகள்

ராஜபீப்ளாவில் சாதுர்மாஸ்ய பூஜை

பூரி ஸ்ரீகோவர்த்தன பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்காசார்ய ஸ்வாமி ஸ்ரீ பாரதி கிருஷ்ண தீர்த்த ஸ்வாமிகள் இவ்வருஷத்திய விபஸ்ஸுஸ்ர சாதுர்மாஸ்ய சங்கல்பாதிகளை, ராஜபீப்ளா சமஸ்தானத்தில் செய்கிறார்கள். ராஜபீப்ளா குஜராத்தகியவூரில் ஒருபெரிய சமஸ்தானம். ஸ்ரீஸ்வாமிகள் மகாராஜாவின் அரண்மனையில் தங்கியிருக்கிறார்கள். தினசரி ஸ்ரீஸ்வாமிகளின் உபன்யாஸங்களை நிகழ்வனம் செய்ய ஆயிரக்கணக்கான ஜனங்கள் வருகிறார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிகள் நவராத்ரி வரையில் இங்கே தங்கி யிருப்பார்கள் எனத் தெரிகிறது. பிறகு ராம்நகர் மகாராஜாவின் பிரார்த்தனைக்கிணங்கி கவுகர் ஸமஸ்தானம் விஜயம் செய்வார்கள் என்று தெரிகிறது.

(கமல நிருபர்.)

ஆஸ்திகர்களே!
"ஆர்யதர்மம்"
பத்திரிகையை
ஆதரிக்க வேண்டாமா?
ஆண்டு சந்தா ரூ. 3.
மாதிரிப் பிரதி இனம்.

தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்.

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும் "வைத்தியநாத தீக்ஷிதீயம்"

என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிரமண குடும்பங்களிலும் இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம்:—
பப்ளிஷர்,
தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை.
"ஜனரஞ்சனி பிரஸ்லிமிடெட்,கும்பகோணம்."

21529

ஸ்ரீ ஷோடசி மஹாயாகம்

திருவிடமருதூரில் நடந்த விபரம்

மே மஹாராஜாகத்தை சேர்ந்த காலிபுரம் ஸ்ரீ ஸர்வதோமுகாந்த யாஜியான காரூயனவாஜபேயினல் திருவிடமருதூர்வட கல்யாணபுரத்தில் (20—7—39)ல் இரவு 8 மணிக்கு வெகு ஆஸ்திக மஹாஜனங்க ளுடைய மத்யத்தில் மஹாகாவேரியில் அவ பிருத ஸ்நானம் நடைபெற்றது. ஸ்ரீ ஜகத் குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ பரமாசார்யள் அவர்கள் யாகத்தின் தக்ஷிணாபாகத்தையும், சக்திமௌளீச்வர பிர ஸாதத்தையும்ஸ்ரீமடத்திலிருந்துபகரித்தது ஆஸ்திக மஹாஜனங்களுக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணியது. ஸ்ரீ வாஜபேயீ அவர் கள் பரமச்ரத்தையுடன் யாககர்மாதவ அனுஷ்டிக்கிறபடியால் ஆஸ்திகர்கள் உபகரித் தனர். ஸ்ரீ சாஸ்திரி ரத்னகரம் விச்வநாத சாஸ்திரிகள், சேங்காலிபுரம் ப்ரஸங்கபாது வைத்தினுத சாஸ்திரிகள், வைதிக தர்மாகூஷ்க ப்ரவசகசூரீண ஸ்ரீ அனந்தரும தீக்ஷிதர், ஸ்ரீ ரங்கஸ்வாமி சாஸ்திரிகளும், திருவிசலூர் ப்ரும்மஸ்ரீ லீதாரும சாஸ்திரிகளும், ஆந்ர தேச வித்வான்களும் வேதம் ச்ரௌதம் கற்ற ஆயிரக்கணக்கான ஜாதக்களும் வந்திருந்த னர். ஸ்ரீ அனந்தரும தீக்ஷிதர் அவர்கள் பிரதிதினமும் பகல் 3 மணி முதல் யாக வைபவம், பீஷ்ம ஸ்தவம், வாமன சரித்திரம் முதலியவற்றை உபன்யஸித்தனர். அச்சம யம் பக்கத்து கிராமங்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் வந்து ச்ரவணம் செய்து ஆனந் தித்தனர். ஸ்ரீ டி. எல். ஸுப்பய்யர் அவர் கள் வழக்கம்போல் வந்து மனுஷ்யரூபியி லிருந்து அகேக ச்லோகங்களெல்லாம் வெகு அழகாய் எடுத்து உபன்யாசம் செய்தார். உடையாளூர் ஸ்ரீ அப்பு சாஸ்திரிகள் உபந் யாஸம் செய்தார்.

ஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள் அவர்கள் இச் சமயம் ஹக்காமாய் ப்ரசாரம் முதலியவை களைச் செய்யவேண்டுமென்று ஸ்ரீ வைத்தி னுத சாஸ்திரிகள் ஸ்ரீ அம்பாள் வைபவத்தையும் யக்ஞ வைபத்தை யும் உபன்யஸித்தனர். ஸ்ரீ வீதரும சாஸ் திரிகள் வேத மஹிமையை உரைத்தார். நிப்பிராஜபுரம் ஸ்ரீ நாராயண ச்ரௌதிகளும் மந்திரமூர்த்தி ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் வடகுடி ஸ்ரீ நாராயண தீக்ஷிதர் உபக்யஸித் தார்கள். ஸமாப்தி தினத்தில் ப்ரணங்க பாணி வைத்தினுத சாஸ்திரிகள் ஆலயப் பிரவேச அக்நிமத்தைக் கண்டித்து ஸம்ஸ் கிருதத்தில் ஓர் அறிக்கையைப் படித்தார். அந்த ஸமயம் பெரும் கூட்டத்தில் அனந்த ரூம தீக்ஷிதரவர்கள் சாஸ்திரிகளே நிந்திப்ப தும் அவர்களைப் போல் ப்ரசாரம் செய்வ தும் போராதென்றும், புண்ய கர்மாக்களே எங்கும் நடக்கும்படி செய்யவேண்டுமென் றும், இப்பொழுத சாஸ்திரிகளைக்கூட ஆஸ்திகர்களாகச் செய்து லோகக்ஷேமார்த்த மாக அநிருத்ரனென்னும் புண்ய கர்மாவை காவேரீ தீரத்தில் நடத்தவேண்டுமென்றும், மேல்படி கர்மாவிற்கு ஆயிரக்கணக்கான ப்ரம்மணர்கள் சேர்ந்து நடத்தவேண்டு மென்றும், சொன்னார்கள். இந்த விஷயத் தை ஸ்ரீவிச்வநாதசாஸ்திரிகளும் ஸ்ரீசுப்பய்ய ரும் ஸ்ரீ ரஸிம்மய்யர் எல்லோரும் ஆமோ தித்து ஆவணி மாதத்திற்குள் நடத்தவேண்டு மென்று சொன்னார்கள்.

காஞ்சி காமகோடி பீடாதிபதியான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்காசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய ஸந்நிதானத்தில் தெரியப்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். யாக காலத்தில் ஸ்ரீராம தை ச்ரௌதிகள் ச்ரௌத ஸூத்ரத்தை சொல்லும்பொழுத பாமரர்களுக்குக் கூட அர்த்தம் ஆகும்படி இருந்ததையும், ச்ரௌத கேஸரி சேங்காலிபுரம் அய்யாதீக்ஷிதர் ப்ர யோகம் செய்த அழகையும் சம தமாதி குணங்களையும், ஞான கௌரவத்தையும் எல் லோரும் கொண்டாடினர்கள். ப்ரம்மண ஸத்கர்ப்பணையும், வித்வத் ஸம்பாவனையும், நன்கு நடந்தது. யாகத்தை வெற்றிகரமாய் நடத்தின ஸ்ரீ நாராயண வாஜபேயி அவர் களை அனைவரும் பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

(மு. நி.)

கல்கத்தாவில்.
கனகாபிஷேகம்.

ஸ்ரீ-ஸ்ரீ ஆசார்யாள், பெரியோர்கள் அனுக்ரஹத்தால் குளித்தலை தாலூக்கா

(1ம் பக்க தொடர்ச்சி.)

வாவில்லை. ஜோஷியிற் கலந்து தெய்வீகத் தன்மை பெற்று விட்டார்கள்.

நமது ஆலயங்களிலும் ஹரிஜனங்களுக்கு அவர்கள் பழக்க வழக்கங்களுக்குத் தக்க உரிமைகள் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் இறைவனைக் கண்டு மகிழவே உத்ஸவங்கள் நியமனம் செய்துள்ளார்கள். அவர்களும் நம் தெய்வங்களைத் தனி ஆலயங்கள் ஏற் படுத்தி வணங்குகிறார்கள். பெரும்பாலும் பாகாச்சி அம்மன் கோவில்கள் பெரிய ஊர் களில் இருக்கின்றன. அதற்கு அவர்களே பூஜையும் செய்கிறார்கள். காமும் காணிக் கைகள் கொடுக்கிறோம். சிறப்பாக நம் முன்னோர்கள் அவ் வேற்றுமை இல்லாத ஹரிஜனங்களே ஆதரித்தே வந்திருக்கிறார்கள். ஆனல் விதிகடந்த ஆதரிக்கவில்லை.

திரு. ரா. ராமய்யா தேஸிகாவர்களும் ஹரி ஜன ஆலயப் பிரவேசம் சாஸ்திரத்திற்கு முற்றும் விரோதமான தென்றும் ராமகிருஷ் ணபரம ஹம்ஸ சரஸ்வதி ஸ்வாமிகளுக்கும் வேற்றுமை இல்லையே தவிர நம் போன்ற உலகில் மக் களுக்கு புரவேற்றுமை அவசியம் வேண்டு மென்று கூறியிருப்பதாகவும், பல கதைகள் எடுத்துக் கூறினர்கள். கலேவர் தக்க முடி வுரையுடன் கண்டனத் தீர்மானமும் செய்து சென்னை கவர்மெண்டுக்கு அனுப்புவதாகத் தீர்மானிக்கப்பெற்று கூட்டம் கிறைவெய்தி யது.

(செட்டிநாடு)

ராஜேந்திரம் கர்ணாடக இருந்த பிரம்மஸ்ரீ சுப் ரமணிய அய்யர் அவர்களுக்கு 23உ ஞாயற் றுக் கிழமை கல்கத்தாவில் ப்பௌராதர்சன சாந்தி புத்மிக் வாகிகள் கூடியிருக்க மிகவும் நன்முய் நடந்தது. ஹோமவேதிகை கலச வேதிகைகளைத்தவிர மஹர்யாஸ ஜபம் தனி யே நடந்தது. அந்த ஜபத்தில் மித்ர்களே ஏகதேசமாய் சேர்த்துகொண்டது இருநூறு பேர் கூடிய கூடமர்ச்சாரியர் வேதாந்தால் நிறைபியிருந்தது. கனகாபிஷேக சட் யத்தில் பத்துநிமிஷம் மாத்திரம் பெய் மழைத் தூரல் இருந்தது மிகவும் ஆச்சர்யம். (சமது விசேஷ நிருபர்.)

போலீஸார் கவனித்தார்களா ?

நள்ளிரவில் நேர்ந்த தீ விபத்து

சென்ற வாரத்தில் இங்கர் மேட்டுத்தெரு வில் சுமார் இரவு 1½ மணிக்கு ஒரு வீட்டில் தீ பிடித்து வீடு முற்றிலும் எரிந்து சாம்ப லாய்விட்டது. மிகவும் அகாலத்தில் தீ பற் றிய போதிலும், அக்ரகாரத்து ஜனங்கள் சமம் பாராது மிக்க ஊக்கத்துடனும், பிர யாசையுடனும் நீயை பாவவொட்டாமல் அணைத்தார்கள். அன்றிரவு அவ்வீடுகளில் வசித்தவர்கள் நிலைமை பரிதாபமாகவிருந்தது

இச்சமயம் நகரபரிபாலன ஸபையார் தீ அணைக்கும் எஞ்ஜின் வாங்கிவைத்திருந்தால் பெரிய உபகாரமாயிருக்குமல்லவா? முனிஸி பாலிடியார் இதை கவனித்தால் நலமாயிருக் கும். நகர ஸபையார் அவசியம் இவ்விஷயத் தில் கவனம் செலுத்துவார்களாக.

தவிர, ஸானிடரி சந்துகள் பல ஏற்பட் டது பெரிய ஆபத்தாய் முடிந்திருக்கிறது. சில்லரைத் திருட்டுக்கள் நடக்கத்தலைப்பட்டு விட்டன. இது விஷயம் போலீஸ் அதிகாரி களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப் பதாயும் தெரிகிறது. நடி குறைகளே இக் நகர் போலீஸ் அதிகாரிகளும் முனிஸிபல் அதி காரிகளும் சீக்ரத்தில் கவனித்து நிவர்த்தி செய்வார்களென எதிர்பார்க்கிறோம். (ஒ. நி.)

உங்கள் நாக்கை ஏமாற்றுகிறீர்கள்

சாதாரணமாக மனத்திற்காகத் தயாரிக்கப்படும் பெருங்காயம் யாதொன் றுக்கும் பிரயோசனப்படுவதில்லை. உங்கள் நாக்கை ஏமாற்றுகிறது. புத்தி சாலிகள் தங்கள் உணவுப் பொருள்களை வாங்குவதில் ஜாக்கிரதையாயிருக்கிறார் கள். அவர்கள் ஸயண்டிபிக் T. T. பெருங்காயத்தையே கேட்கிறார்கள். ஏனென்றால் அது நல்ல சரக்கு என்று அவர்களுக்குத் தெரியும். பதினாறு வருஷ ஆராய்ச்சியின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஸயண்டிபிக் T. T. பெருங்காயம் 20•20% அபத் சத்தினல் காப்பாற்ற படுகிறது. அதற்கு கமமணமும் நற்சுவையும் உண்டு.

ருசிகரமான சாப்பாட்டிற்கும் ஜீரணத்தை சுலபமாக்கவும்
பரிசுக் கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

ஒரு பவுண்டு ரூ. 1—14—0

ஸயன்டிபிக்
டி. டி
பிஸ்கி பெருங்காயம்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.





215274 425

REGD /No.M.2913. ARYADHARMAM Estd. 1915
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்யஃ பரிபாலயந்தாம் ந்யாய்யேன மார்கேண மஹீம் மஹீசாஃ ।
கோப்ராஹ்மணேப்யஃசுபமஸ்து நித்யம் லோகாஸ்ஸமஸ்தாஸ்ஸுகினோ பவந்து ॥

விளம்பர விபரம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு-24 | கும்பகோணம் பிரமாதி-வரு ஆடி-மீ 25உ 1939-வரு ஆகஸ்டு-மீ 10உ | வா-32

திருப்பதி திருக்கோவில்

ஆதித்திராவிடர்களை அனுமதிக்கமுடியாது

"வழக்கப்பழக்கங்களுக்கு இது விரோதமாகும்"

அனுமதிக்கக்கூடாதென்று சார்க்காரிற்கு விண்ணப்பம் கூறுகிறது

தேவஸ்தான கமிஷனரின் பதில்

திருப்பதி திருமலை தேவஸ்தான கமிஷனர் ஸ்ரீ C. சாம்பய்யா பந்துலுவக்கு ஆந்திர மாகாண காங்கிரஸ் கிளர்வகக் கமிட்டி அங்கத்தினரான ஸ்ரீ விட்டல் ஸ்ரீனிவாசராவ் ஒரு கடிதம் எழுதினர். அதில் "அவர் ஆதித்ராவிடர்களை அழைத்துக்கொண்டு திருமலைக்கு வரவிரும்புவதாகவும், அதற்கு அனுமதித்தாவேண்டும்".....என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கடிதத்துக்குக் கமிஷனர் பதில் எழுகையில்:—

"வெகு கீண்டகாலமாக இருந்து வரும் பழக்க வழக்கங்களுக்கு இது விரோதமாகையால், ஆதித்திராவிடர்களை மலைமீதேறவும், கோவிலுக்குள் விடவும் அனுமதிக்க முடியாது", என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஸ்ரீ C. சாம்பய்யபந்து அக்கடிதத்தில் "ஜாதி ஹிந்துக்கள் அல்லாதாரை கோவிலுக்குள் விடக்கூடாது என்று சர்க்கார் கூறும் உத்தரவுகள் பல தேவஸ்தான காரியாலயத்தில் இருப்பதாகவும்".....குறிப்பிட்டிருக்கிறார்.

கமிஷனர் தைரியமாக அனுமதி மறுத்து எழுதியதைக்கேட்ட திருப்பதி பொது ஜனங்கள் அளவிலா ஆனந்த முற்றார்கள். பலர் கமிஷனரைப் பாராட்டினர்கள்.

"உயிர் உள்ளவரையில் போராடுவோம்"

எந்த சர்க்கார் ஆட்சியின்போதும் நம் மதத்தில் யாரும் தலையிட்டதில்லை

கோல்லங்கோடு ராஜா கர்ஜனை

பிரபலஸனாதனத்தலைவரும், இந்தியசட்டசபை அங்கத்தினரும், கொல்லங்கோடு ராஜாவுமான கனம் ராஜா ஸர் வாசுதேவா ராஜா அவர்கள் கீழ்க்கண்ட கடிதத்தை அகில இந்திய வர்ணாஷ்ரம ஸ்வராஜ்ய சங்கத்தலைவரான ராவ்சாகேப் ஸ்ரீ N. நடேசய்யர் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்:—

"மதுரை ஆலயப்பிரவேசத்தைத் தீவிரமாக எதிர்த்து வருவது கண்டு களிப்புறுகிறேன். முடிவாக என்ன சேர்ந்தாலும் சரி. உயிர் உள்ளவரை நாம் போராட வேண்டும்.

எந்த சர்க்கார் ஆட்சியின் போதும் நம் மதத்தில் யாரும் தலையிட்டதில்லை.

"நம் மதத்தைக் காக்க, என் முஸ்லீம் லீகில் சேரக்கூடாது? என் முன்னேற்றக் கட்சியில் சேரக்கூடாது?

"இந்தியா மந்திரி வரையில் நாம் விக்ஞாபனம் செய்துகொள்ள வேண்டும்.

"இங்கிலாந்துக்குக்கூட நமது பிரதிநிதிகளை அனுப்பி அங்கு இதுபற்றிப் போராட வேண்டும்" .... என்று.....குறிப்பிட்டிருக்கிறார்.

"வழக்கப் பழக்கங்களுக்கு விரோதமானது"

நாங்கள் அனுமதிக்கமுடியாது

சென்னப்பட்டணம் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி திருக்கோவிலில் ஆதித்திராவிடர்கள் தழையப்போவதாக வதந்தி உலாவிவந்தது. இதனை அறிந்த பக்தர்கள், டிரஸ்டிகள், கிர்வாக அதிகாரிகள் யாவரும் ஒன்றுகூடி சென்ற ஞாயிறு கூட்ட தீர்மானத்தை ஏகமனதாக வேற்றினர்கள்:—

"ஆலயங்களுக்குள் ஆதித்திராவிடர்களை அனுமதிப்பது சாஸ்திர விரோதமாகும். வழக்கப் பழக்கங்களும் எதிராக இருக்கிறது. எனவே, அவர்களை அனுமதிக்க முடியாது. அத்து மீறி நடந்தால் அதை பலமாக எதிர்ப்போம்!"

"மதத்தை அரசியலில் பிணைக்கக்கூடாது"

ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் அபிப்பிராயம்.

"மதம், ஒழுக்கம், அரசியல்" என்னும் பொருட்பற்றி ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அவர் கூறியதாவது:—

"மதம், ஒழுக்கம் ஆகியவைகளை அரசியலோடு சம்பந்தப்படுத்துவதால் தீர்க்கமான பலன்கள் ஏற்படுகின்றன என்பதை மனித வர்க்கத்தின் சரித்திரத்திலிருந்து காணலாம். இதனால் பாதிக்கப்படுவது அரசியல் மட்டுமல்ல. மதத்துக்கு தான் அதிக பாதகம் ஏற்படுகிறது. ராஜியத்திலிருந்து மதத்தைத் தனிப்படுத்துவதினால் மதம் மேன்மையடையும். ஒழுக்கத்தையும், ராஜியத்தையும், மதத்தையும் கலக்கவிடில் வெற்றிகரமாய் ஒழுக்கம் சக்தியமுடைய ராஜியவாதிகளாய் நாம் விளங்கலாம்.

இந்த நாட்டில் கோடிக்கணக்கில் ஹிந்துகளும், முகமதியர்களும், கிருஸ்துவர்களும் இருக்கிறார்கள். அவரவர்களுக்குத் தனித் தனி மதமும் தனித் தனி மததத்வமும் இருக்கின்றன."

மதுரை மகாநாடு

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்
'ஆலயப்பிரவேசக் கண்டனம்'

(சென்றவாரத்தொடர்ச்சி)

மூன்றுவது தீர்மானம்:—குடந்தை ஸ்ரீமான் S. மகாலிங்க அய்யர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான் M. ஸ்வாமி நாதய்யரால் ஆமோதிக்கப்பட்டு இத்தத் தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேற்யது.

"ஒரு வகுப்பினரின் மதவிஷயத்திலாவது கல்வி விஷயத்திலாவது தலையிடாமல் இருப்பதே ஒரு அரசாங்கத்தின் ராஜ்ய முறை என்று இம்மகாநாடு அபிப்பிராயப் படுகிறது.

காங்கிரசாவது அல்லது வேறு எந்த ராஜீயஸ்தாபனங்களாவது அரசியலுடன் மத விஷயங்களை பிணைக்கக்கூடாது என்ற முன்னேற்றக் கஷியினர்கொள்கைகளை இம்மகாநாடு ஆதரிக்கிறது."

நான்காவது தீர்மானம்—ஸ்ரீரங்கம் ஸ்ரீ சுத்தாத்வாசாரியாரால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீ சத்தியவேல் பிள்ளையினால் ஆதரிக்கப்பட்டு, ஸ்ரீ ராமசாமி ஐயங்கார், ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள், ஸ்ரீ சுந்தர சர்மாவினால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதுடன் நிறைவேறியது.

"ஸ்ரீரங்கம், காஞ்சீபுரம் மற்றும் இதரஇடங்களிலிருக்கும் ஹிந்துக மகாஜனங்கள் ஜாக்கிரதையாக ஆலயங்களில் ஆதித் நிராவிடர்கள் பிரவேசிக்காமல் கண்காணித்து வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஸ்ரீரங்கமும், காஞ்சீபுரமும் அடுத்தபடி ஆலயப் பிரவேசத்துக்கு குறி வைக்கப்படுவதால் ஆஸ்திகர்கள் உஷாராக இருக்கும்படி இம் [illegible] கேட்டுக்கொள்கிறது"

[illegible] ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யரால் பிரேரேபிக்கப்பட்டு நின்டுக்கல் ஸ்ரீ ஆர். பாலசுப்பிரமணியய்யர், மேல்மலை ஸ்ரீ சிவராம கனபாடிகள். ஸ்ரீ கோபாலதேசிகாசாரியார், ஸ்ரீ சோமசுந்தர அய்டர், சேலம்ஹோசூர் ஸ்ரீ பி. எஸ் ராகாராஜய்யர், ஸ்ரீ நாராயணசாமி, ஸ்ரீ பி. எஸ். ஜகதீசய்யர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதுடன் பின்கண்ட தீர்மானம் நிறைவேறியது:—

"ஆலயங்களில் ஆதித்நிராவிடர்களை அனுமதிக்காமல் தடுக்க ஒரு தொண்டர் படை நிறுவ வேண்டு மென்றும், எல்லா ஸாதனிகளும் தொண்டர்களாகத் தங்களைப்பதிவு செய்து கொள்ளும்படியாகவும், தொண்டர் படைநிறுக்குதாராளமாய் பொருளுதவிசெய்யும்படியும்" இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

ஆறுவது தீர்மானம்:— ஸாதர்ம்பிரசாரத்தக்காக குடந்தையிலிருந்து வெளிவரும் "ஆர்யதர்மம்" தமிழ் வாரப்பத்திரிகையையும், டெல்லியிலிருந்து வெளிவரும் "தர்ம ராஜ்ய" ஆங்கில வாரப் பத்திரிகையையும் நினசரியாக வெளிபிட வேண்டுமென்றும், அதற்காக உடனே தக்க முடற்சிகள்செய்ய வேண்டுமென" இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

ஸ்ரீ N. S. விச்வநாதய்யர், பி. ஏ. பீ. எல் அட்வகேட் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு கௌர் ஸ்ரீ நாராயண அய்யங்காரால் ஆதரிக்கப்பட்டுக்கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்யது:—

மதசுதந்திரத்திற்காகப் போராடி வரும் ஸாதனிகளுடன்எல்லா ஹிந்துக்களும், முகமதியர்களும், இருண்தவர்களும் ஒருங்கு சேர்ந்து ஒத்துழைக்கும்படி இம்மகாநாடு கேட்டு கொள்கிறது.

"எல்லா ஸனாதநிகளும் தங்கள்தங்கள் பெண்கள் கலியாணத்தைஒன்றுகாட்கள் நடத்தவேண்டுமென்றும், ஒரு நாள் பண்ணுவது சாஸ்திரத்துக்கு விரோதமென்று ம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது. கூடியவரையில் சுபகாரியங்களில் அதிகச்செலவு செய்யாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விவாஹ காலத்திற்குரிய எல்லா வைதீக காரியங்களையும் விடாமல் செய்யும்படி இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

ஏழாவது தீர்மானம்:—"பாலிய விவாகத்து சட்டமானது ஹிந்து வகுப்பினரின் மத உரிமையில் பிரவேஷிப்பதாகவும், அத்தச் சட்டத்தை ரத்து செய்தாவது அல்லது பிரமண வகுப்பினர்களுக்கும், அல்லது மற்ற இதரவகுப்பினர்களுக்கும் தனிப்பட்ட வர்களுக்கும் சலுகைகாட்டவேண்டுமென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது."

என்ற தீர்மானத்தை ஸ்ரீமான் R. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் பிரேரேபித்தார். அதை ஸ்ரீ வைத்திநாத சாஸ்திரிகள் ஆதரித்தார். ஸ்ரீமான்கள் சுக்தரேசர்ளெஹிகள்,ராம சாஸ்திரிகள், G.A. விஸ்வநாத சாஸ்திரிகள், மூர்த்திஸ்வாமி ஐயங்கார், வக்கீல் சங்கரசுப்பிரமணிய அய்யர் ஆமோதித்தவுடன் தீர்மானம் ஏகமனதுடன நிறைவேற்யது.

எட்டாவது தீர்மானம்:— பொதுமக்கள் மனதில் தப்பர்த்தம் ஏற்பட வேண்டி ஒரு சிலபேர்களும்,சில பத்திரிகைகளும்,சில ஸ்தாபனங்களும் செய்துவரும்பொலிபிரசாரத்தைக் கெதிராக உண்மைவிஷயங்களைஜனங்களுக்கு அறிவிக்க வேண்டி கீழ்கண்ட பிரமுகர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை இம்மகாநாடு நியமிக்கிறது:—

ராவ்சாகேப் ஸ்ரீ என். சுடேசய்யர், ஸ்ரீ N. S. விச்வநாதய்யர் அட்வகேட், ஸ்ரீ K S வைகுண்டய்யர், ஸ்ரீ N. R. கிருஷ்ணசாமிஐயங்கார் அட்வகேட், ஸ்ரீ V. K. ஸ்ரீநிவாசாசாரியர், ஸ்ரீ K. S. சேஷாசலம் அட்வகேட், ஸ்ரீ G. A. விஸ்வநாத சாஸ்திரி ஸ்ரீ சக்கிவேலு பிள்ளை, ஸ்ரீ எஸ். சுப்பிரமண்ய அய்யர், ஸ்ரீ எம் எஸ். வரதராஜலு நாயுடு"

மகாகாட்டுத்தலைவர் இத்தத் தீர்மானத்தை பிரேரேபிக்க,ஏகமனதுடன் நிறைவேறியது.

"ராவ் சாகேப் ஸ்ரீ N. சுடேசய்யர் அவர்கள் இந்த ஆலயப்பிரவேசக் கிளர்ச்சிக்கு எதிராக தைரியமாய் நின்று போராடிவருவதை இம்மகாநாடு பாராட்டுகிறது" என்ற தீர்மானத்தை தலைவர் பிரேரேபிக்க, அது ஏகமனதுடன் நிறைவேறியது.

ஆஸ்திக மாதர் கூட்டம்

1-8-39 தேதி மாலை மதுரையில் ஸ்ரீமதி போகாம்பாள் சுடேசய்யர் தலைமையில் ஆஸ்திக மாதர் கூட்டம் நடைபெற்றது. ஐயாயிரம் ஸ்திரிகள் விஜயம் செய்திருக்தார்கள். மகிழ்சியைபைக் கண்டித்தப்பலர் பேசினர்கள்.

Freedom of Religion & Religious Worship

"Freedom of religion and religious worship, Mr. Satyamurthi considered, was a fundamental right in a modern secular State. They had three great religions, Hindusm, Islam, and Christianity and they must recognise, as the Karachi Congress had laid it down, that all citizens must be free to profess and practise their religion and religious rites subject only to public order and morality. This was the mark of a civilised State. He pleaded therefore for tolerance and goodwill and give the right to other to worship God in their own way."

Extract from Mr. S. Satyamurthi's Address at Trichinopoly on 30—7—39.

மதுரை நேயர்களுக்கு

[மதுரை வடக்கு வடம்பேசுத்தி தெருவிலிருக்கும் ஸ்ரீலக் வன்ஸ்காலயத்தின் சொந்தக் காரரான ஸ்ரீமான் G. A. விஸ்வநாத சாஸ்திரிகள் கமது "ஆர்ய தர்மம்" பத்திரிகைக்கு மதுரை ஏஜண்டாக இருந்து வருகிறார். அவரிடம் "ஆர்யதர்மம்" பத்திரிகைக்குசந்தாதாரராகச் சேர விரும்பும அன்பர்கள் ஆண்டு சந்தாவைக்கட்டிச் சேரலாம். 'ஆர்யதர்மம்' பத்திரிகை விலைக்கும் கிடைக்கும்.

மானேஜர் "ஆர்யதர்மம்"]

இது என்ன கொள்கை!

அமெரிக்காவைச் சேர்ந்த ட்ரினிடாட் என்ற தீவில் கூலிவேலைக்காகவும், சில்லரை வியாபாரத்திற்காகவும் இந்தியர்கள் பலர் குடியேறி வலித்து வருகிறார்கள். ஸாதாரனமையொன்றும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஹிந்து மதப்படி இறந்தவர்களை தஹனம் செய்யும் வழக்கத்தை அத்தேசத்தில் அவர்கள் ஆசரித்து வருகின்றனர். ஆனால் ஸமீபகாலமாக அத்தேச கவர்ன்மென்டார் ஹிந்துக்களில் இறந்தவர்களை தஹனம் செய்யும் வழக்கத்தைத் தடுத்து புதைக்கவேண்டுமென்றும் ஓர் உத்திரவை பிறப்பித்திருக்கிறார்களாம்! அங்குள்ள ஹிந்துமையான ஹிந்துக்கள் இதை எதிர்ப்பு தடன் இந்த அநியாயான உத்திரவைக் கண்டித்து தங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று இந்தியாவுக்கு வேண்டுகோள் அனுப்பியிருக்கிறார்கள்.

இதைப்பற்றி சென்னை "ஹிந்து"ப் பத்திரிகை ஓர் உபதலையங்கம் எழுதி, ட்ரினிடாட் கவர்ன்மெண்டின் உத்திரவை பலமாகக் கண்டித்திருக்கிறது. "ஹிந்துக்கள் தங்களுடைய மதாசாரப்படி காரியம் நடத்துவதை ஓர் ஸர்க்கார் தடுப்பது அக்ரமமென்றும், சட்ட திஷ்பிரயோகமென்றும், சிறுபான்மையான ஹிந்துக்களின் மத உரிமையை அத்தேச கவர்ன்மெண்டார் பறிப்பது நியாயமில்லையென்றும்" வேறு பலவும் வரத்திருக்கிறது.

இவ்விஷயத்தில் இப்பத்திரிகை எடுத்துக்கொண்ட சித்தையைப்பாராட்ட வேண்டியதே. ஆனால் அது தம் தேசத்தில் தம் கண்ணெதிரில் நடக்கும் மத உரிமை ரச விஷயத்திலும் தமது நிஷ்பக்ஷபாதமான கண்டனத்தை என் தெரிவிக்கக்கூடாது? சாரதா சட்டம், ஆலயப்பிரவேசச் சட்டம் போன்ற மத உரிமையைப்பறிக்கும் சட்ட விஷயத்தில் இப்பத்திரிகை மேற்கண்ட நியாயத்தை சொல்ல வேண்டியது அவசியமில்லலை? ஆனால், அப்படிச்செய்யாததுடன், மேற்கண்டவிஷயங்களில் விபரீத அபிப்பிராயமும் வெளியிட்டு வருவதுநியாயமா? வெளிநாடு இந்தியர் விஷயத்தில் ஒரு கொள்கையும், உள் நாட்டு இந்தியர் விஷயத்தில் வேறு ஒரு கொள்கையும் அனுஷ்டிப்பது பொருத்தக்கூடியதா?

பிக்ஷை

சென்ற ஆடிமீ 13உ (29—7—39) சனிக்கிழமை இரவு சும்பகோணம் ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ சங்காச்சாரியல்வாமிகள் அவர்களுக்கு பிக்ஷை பிரும்ஹ ஸ்ரீ ப. ஜெ. அய்து அய்யர் அவர்கள் புத்திரியும், ரிடயர்டு முன்சீப் ஸ்ரீ P.S. சுப்பிரமணி அய்யர் அவர்கள் பார்யையுமான மாதஸ்ரீ சிவகாமி அம்மாளால் ரூ 300 கட்டப்பட்டு சொம்பவும் விமரிசையாக கடைபெற்றது. (கமி)

ஆலயப்பிரவேச அவசரச்சட்டம்

நாடெங்கும் கண்டிக்கப்பட்டது

தமிழ்நாட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களின் நடவடிக்கைகள்

மன்னார்குடி

கேள்விக்குப்பதில் இல்லை.

2-8-39 ஸ்ரீ K. சந்தானமய்யங்கார் M.L.A. அவர்கள் இங்கு பொதுக்கூட்டதில் பேசப் போவதாக கலியில் கோட்டீஸ் வழங்கப் பட்டது. மாலையில் கூட்டம் ஆரம்பித்ததுமே கேள்விகள் அச்சிட்டக் தண்டுக் கடிதங் களை ஷை கூட்டத்தில் சந்தானமையங்கார் உள்பட எல்லாருக்கும் வழங்கப்பட்டது. ஸ்ரீமான் அய்யங்கார் பெருப்பான்மையான கேள்விகளுக்குப் பதிலே சொல்லவில்லே ஆனால் 6-வது கேள்விக்குமட்டும் மதுரையில் பொதுஜன அபிப்ராயமறிந்த பிறகே தான் பஹிரங்கமாக ஆலயபிரவேசம் நடத்தாகவும், அதை சிலர் மாற்றிக் கூறுவ காவும் பதில் அளித்து விட்டார்.

நடுநிலையிலுள்ளவர்கள் இதை கொஞ்சம் ஆலோசிகவேண்டும். பொதுஜன ஆதரவி லும் பஹிரங்கமாகவும் ஆலயப்பிரவேசம் நடத்தப்படவேண்டுமேயானால் இன்றுவரை ஷை மதுரை அல்லோலகல்லோலப்படுவானேன்.

பிரதமமந்திரி கேரில் சென்று கோபமடைந்த ஸமூகத்தை நய வார்த்தையால் வயப்படுத்தப்படவேண்டுமென்று கூறுகிறார். இதுவா இவ்வளவு விவேகம்? ஆகவிதன் மூலம் அய்ய [illegible] விவேகம்? முடிவில் கூட்டத்தில் சிலர் குழப்பம் உண்டு பண்ணவே கூட்டம் கலைந்தது.

ஆலயப்பிரவேசக் கண்டனம் சென்னையில் மாபெருங்கூட்டம்

சென்னை ஸ்ரீ சங்கர மடத்தில் சென்ற புதன் மாலை ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவ சர்மா தலைமையில் ஓர் பெருங் கூட்டம் கூடிற்று. பெண் மக்களும் ஏராளமாக வந்திருக்தனர். பலர் பேசினர்.

தலைவர் "மதுரை ஆலயப்பிரவேசமும் அவசரச்சட்டமும் பேடித் தனமாகும். ஆலயக் கெட்டால் ஊழியும். சுத்த கங்கிரஸிற்கு குழி தோண்டுகின்றனர். ஸ்ரீநிதி புத்தி கேட்காதீர் என்று கூறினர். பிறகு ஸ்ரீ கு. ஜகன்னாதாசாரியார் "ஸ்ரீமதி சேரு கூறும் வாதங்கள் சாஸ்த்ரத்திற்கும் யுக்திக்கும், தர்மத்திற்கும், நியாயத்திற்கும் ஒத்த கல்ல. நாய் சண்டாளர் முதலியோரிடம் ஸமதர்சனமே கீதை கூறியது. ஸமஸ்திதி அல்ல." என்றும், வடகலை ஸ்ரீ ராமாநுஜாசார்யார் "திருநாராயணபுரத்தில் நிருக்குலத்தவரில் சிலர் இலகுறிப்பிட்ட காலத்தில் தான் (எதவும் மூலஸ்தானமல்ல) போகலாமென்ற விதி உளது. உடையவர் மேல் அபாண்ட பழி கூறுதீர் என்றும், ஸ்ரீசங்கராசார்யே 'தர்சன சுத்தியாக உழைக்கும ஸ்ரீமான் சுடேசய்யர் முயற்சிக்கு ஸஹாயம் செய்யுங்கள். தர்ம ராஜ்ய ஆர்ய தர்மத்தைப் படியுங்கள், என்றும்" 'ஸ்ரீ ரங்கசாமி அய்யங்கார் பத்திரிகை பலமே முக்யம். பிறகு நினம் ஆலயப்பிரவேசாந்ப்பம் ஒழிய ஆஸ்திகஜனவரும் இஷ்ட தேவதைகளே வணங்குக' என்றும் கூட்டத்தில் பேசினர்கள். பின்னர் இரவு 8 மணிக்கு ஸபை கலைந்தது. (கமது விசேஷ நிருபர்.)

மேலக்காவேரி

சுடந்தை மேலக்காவேரியில் 31—7—39 காலை 7 மணிக்கு ஆலயப்பிரவேச அவசரச் சட்டத்தை கண்டிக்க ஏராளமாக ஜனங்கள் கூடினர்கள். திருவையாறு ஸாம வேத வித்வான் சேஷராம சாஸ்திரிகள் தலைமை வஹித்தார். அடியில்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:—

(1) மதுரை ஸ்ரீமீனாக்ஷிகோவிலில் ஆதிநிராவிடர்கள் ஹத்து மீறி நுழைந்ததை இக்கூட்டம் கண்டிக்கிறது.

(2) ஸ்ரீ. சுடேசய்யர் அவர்கள் ஆலயப் பிரவேசக்கிளர்ச்சி சம்மந்தமாய் வேலை செய்து கொண்டுவருவதை இக்கூட்டம் பாராட்டுகிறது.

(4) ஸ்ரீ. கே. ஆர். வெங்கட்டராமய்யர் பி. ஏ., பி. எல். அவர்கள் காங்கிரஸைக் கண்டித்து தமது பதவியை ராஜீனாமா செய்ததை இக்கூட்டம் பாராட்டுகிறது.

(4) தமிழ் நாட்டிலிருக்கும், பல கோவில்களின் மானேஜர், டிரஸ்டிகள், தர்மகர்த்தாகள் முதலியவர்கள் தங்களது கோவில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விடக் கூடாது என்ற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(5) [illegible] இயற்றிய அவசரச் சட்டத்தை இக்கூட்டம் கண்டிக்கிறது.

(ஒ. கி.)

வேம்பத்தூர்

31—7—39 மாலை 3 மணிக்கு பிரும்மஸ்ரீ வல்லாரடு சாஸ்திர ரத்தினம் நாராயண சாஸ்திரியார் தலைமையில் சாதனக் கூட்டம் கூடிற்று. அநேக பண்டிதர்களும் பொதுஜனங்களும் விஜயஞ் செய்திருந்தார்கள்.

அவ்வமயம் தலைவரவர்களும் வல்லாரடு சமஸ்தாந வித்வான் ஸ்ரீ. பி சுப்பிரமணிய சாஸ்திரி, மதுரை கல்லூரி தமிழ்ப்பண்டிதர் வேம்பத்தூர் ஸ்ரீ பி. பாஸ்கரையர், "ஆலயப் பிரவேச கண்டனத்தை" ப்பற்றிப் பெருத்த மாகவும் சாஸ்திரோக்தமாகவும் சொற் பொழிவு செய்தனர்.

சென்னை சர்க்கார் அவசரச்சட்டத்தைக் கண்டித்து ஏகமனதாக தீர்மானம் நிறை வேறியது.

(ஒ. கி.)

இராமேஸ்வரம்

இராமேஸ்வரம் மேழாதவீதியில் அமைக்க ப்பட்டிருக்கும் ஸ்ரீசிருங்கேரி ஸ்ரீமடத்தின் முன்பாக 18—7—39உ முதல் தினக்தோறும் மாபெருங்கூட்டம் கடைபெற்று வருகின்றது.

வேதமகாப்ரவீண ஸ்ரீ இராமஸ்வாமி சாஸ்திரிகள் ஆலயத்தின் வழிபாடு என்னும் விஷயம் பற்றி பேசினர். நீண்டத்தகாதார் ஆலயப்பிரவேசம் செய்வது ஆகம சாஸ்திரத்திற்கு முற்றிலும் விரோதமாய் இருப்பதுடன் உலக அமைதிக் குறைவை உண்டு பண்ணக்கூடியதென்றும் பல உத்பாதங்கள் ஏற்பட்டு தேசத்திற்கே கெடுதல்களை விளைக்குமென்றும் பல பிரமாண வாக்கியங்களுடன் உபன்யாஸித்தார். பிறகு ஸ்ரீ K. R. சுப்பிரமண்ய சாஸ்திரிகள் பேசினர். ஆலய வழிபாடு என்பது பல விசேஷ கட்டுப்பாடுகளுடன் கூடியதென்றும் விசேஷமாக ஆகமத்தைப் பிரமாணமாகக் கொண்டுள்ளதென்றும், அத்தத்த வர்ணச்ரம ஜாதிகளில் உள்ள அதிகாரிகளுக்கேற்றவாறு உபசாஸன செய்ய அதிகாரம் பெற்றிருக்கின்றார்கள் என்றும், அதை மீறி நடக்கும்படி செய்யவோ ஏற்பட்டால் அவ்விதக்செய்கையானது கல்ல சோக்கத்துடன் செய்யப்பட வில்லை என்றும் மிகுந்த ஆக்ரோஷத்துடன் கேட்போர் பரவசமாகும்படி பேசி முடித்தார்.

ஸ்ரீ சமாசங்காபட்டர் "ஆகமமும் அதன் தத்வமும்" என்னும் விஷயமாகவும் ஸ்ரீ M. N சுப்பிரமணிய சாஸ்திரிகள் "முறை தவறேல்' என்ற விஷயமாகவும் ஸ்ரீ. V. வெங்கிட்டராம தீக்ஷதர் சாஸ்திரம் என்னும் விஷயமாகவும் மற்றும் பல பிரமுகர்கள் பல ஆராய்ச்சியுடன் விரிவாகப் பல விஷயங்களைப் பேசி தின்டாதார் ஆலயப்பிரவேசத்தை யுக்தி யுக்தமாகவும் சாஸ்திரோக்தமாகவும் மிக ஆழுத்தமாகவும் கண்டித்துப் பேசினர்கள்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின:—

8—7—39 மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் கோவில், அழகர் கோவில், தஞ்சாவூர் கோவில்களில் நீண்டாதார் ஆலயப்பிரவேசம் செய்ததையும், நிர்வாக அதிகாரிகள் அதற்கு உடன்தையாக யிருந்ததையும் சாஸ்திரங்களுக்கும் நீண்டகால பழக்க வழக்களுக்கும் விரோதமானதென்று இக்கூட்டம் அழுத்தமாய் கண்டிக்கிறது.

புராதன வழக்கங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் விரோதமாக நீண்டத்தாதார் ஸ்ரீப்பிரவேசம் செய்யுமாய் அவசரச் சட்டம் செய்தம், மேலும் செய்ய உத்தேசித்திருப்பதும், மகஸ்மை தாங்கிய விக்டோரியா மஹாராணி அவர்கள் கொடுத்துள்ள மதசம்மத்தமான வாக்குறுதிகளுக்கு விரோதமானவை என்றும் சனதனிகளின் மனதை புண்படுத்துவதாகுமென்றும் சென்னை கவர்ன்மெண்டாரிடம் தெரிவித்துக்கொள்கிறது.

மதுரை ராவ்சாகிப் ஸ்ரீ N. சுடேசய்யர் ஸ்ரீ K R. வெங்கிட்டாரம அய்யர் அட்வகேட் ஸ்ரீ M. K. வைத்தினதய்யர் பி. ஏ. பி. எல். மற்றும் பல சனதன தர்மாபிமானிகளும் மதுரை ஆலயபிரவேச கண்டன விஷயமாய் வேண்டிய முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதுபற்றி அவர்களோடாராட்டுவதுடன் அவர்களுக்கு வக்தனத்தையும் ஆதாவையும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்ளுகிறது.

முன்னூல் அரசாண்ட மொஹலாய அரசர்கள் ஹிந்து மதத்திற்கு விசேஷமாக கன்மையளித்து வந்தார்கள். கடையாக வந்த அரசான நிப்பு சுல்தான் ஹிந்து மத ஆசார அனுஷ்டானங்களுக்கு விரோதமாக கலியிட்டதின் பயனாக ராஜ்யத்தை இழக்க நேரிட்டது. பின்பு வந்த பிரிட்டிஷ் ராஜ்யம் இதை காறும் விக்டோரியா மஹாராணியின் ஆஞ்ஞைப் பிரகாரம் மதவிஷயத்தில் கலியிடாமலிருந்ததால் ராஜ்யமும் சிவர நடந்தேறி வந்தது. தற்காலம் மத தர்மத்தில் விபரீதமாக கலியிட்டதால் என்ன விபரீத மேற்படுமோவென சனதனிகள் கவலைப்படுகின்றனர்.

1935-வரு இந்திய சட்டத்தின் கீழ் மாகாண கவர்னர்களுக்கு சில விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அவசரச்சட்டமானது சட்டத்திற்கு

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

கும்பகோணத்தில் கண்டனகூட்டங்கள்

மஹாமகக்குளம் மேல்கரையில்

குடந்தை மஹாமகக் குளமேல்கரையி அள்ள தர்ம ஸ்தாபித்தில் செவ்வாய்ழமை மாலை 7-மணிக்கு ஓர் ஆலயப்பிரவேசக் கண்டனக்கூட்டம் கடைபெற்று வெரு பேர் வந்திருந்தனர். ஸ்ரீமான் ராஜப்பய்யர் தலைமை வஹித்தார். ஸ்ரீராமாநுஜதாசாரியார், கல்லூர் ஸ்ரீவெங்கடாசாய்யர் முதலியவர் மதுரை ஆலயப்பிரவேசத்தைப்பற்றி, அவசரச் சட்டத்தையும் கண்டித்துப் பேசினர். இரவு 9 மணிக்கு கூட்டம் முடிவுபெற்றது.

கடலங்குடித்தெருவில்

கடலங்குடித்தெரு ஸ்ரீமான் பரவாறி பேட்டை ஸ்ரீநிவாஸஅய்யங்கார் தலைமத்தின் வரவில் சென்ற புதன்கிழமை இரவு 7 மணிக்கு ஓர் கண்டனக் கூட்டம் கடைபெற்றது. பொதுஜனங்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர். ஸ்ரீமான்கள் அப்வகேட் எம். கே. வைத்யநாதய்யர் எஸ். மஹாலிங்கய்யர் பி.ஏ. பி. எல். கே. ராகிம்ம அய்யங்கார் பி.ஏ. பி.எல். அட்வகேட் ஜி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அட்வகேட் ஆர். கண்ணன் அய்யங்கார் அட்வகேட் மஹாமஹோபாத்யாய ஸ்ரீவிருஷ்ணமாசாரியார் ஸ்ரீநிவாஸ பட்டாத்தாதாசாரியர் ஸ்ரீநிவாஸதாசாரியார் பண்டிட் ஆங்கரை ஸ்ரீ ரங்கசாமிசாஸ்திரிகள் கோபாலதேசிக சாரியர் கடாஜய்யர் நாராயணாவ் முதலிய லௌகிக வைதிக பிமுகர்களும் பலர் விஜய முடியிருந்தனர்.

ஸ்ரீமான் அட்வகேட் கே. ராமிம்ம அய்யங்கார் அவர்கள் தலைமை வஹித்தார்.

"ஆலயப்பிரவேச சரித்திரத்தை விவரித்துக் கூறி மதவிஷயத்தில் காங்கிரஸ் கவர்ன்மென்டார் பலாத்காரமாகப் பிரவேசித்து அநீதி செய்வதை" பலமாகக் கண்டித்தார்.

பிறகு, மதுரைக்கோவிலில், பட்டர்கள் ஸம்புரோக்ஷணம் செய்ய முயற்சித்ததை நிர்வாக அதிகாரி தடுத்ததைக் கண்டித்தும், பத விஷயங்களில் பிரவேசிப்பதில்லையென்ற வாக்குறுதிக்கு விரோதமாக சென்னை ஸர்க்கார் சட்டமியற்றுவதை ஆக்ஷேபித்தும், ஹிந்து மதஸ்தாபன போர்டை, காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் கட்சி பிசாரத்திற்கு உபயோகித்தக்கொண்டு, தேவாலயங்களில் நிர்வாஹ அதிகாரிகளை நியமித்துவரும் சூழ்ச்சியைக் கண்டித்தும் சில தீர்மானங்களை, ஸ்ரீமான் எஸ். மஹாலிங்க அய்யர் பி. ஏ. பி. எல்., அவர்கள் பிரேரேபித்து தீர்மானங்களின் கருத்தை விவரித்துக் கூறினர்.

தீர்மானங்களை ஆமோதித்தும், ஆதரித்தும் ஸ்ரீமான்கள் அக்னிஹோத்ரம் கோபலதேசிகாசாரியர், ரங்கசாமிசாஸ்திரிகள், கடாஜய்யர் அட்வகேட் கண்ணன் அய்யங்கார் முதலியவர்கள் பேசினர்கள்.

ஸ்ரீமான் கண்ணன்அய்யங்கார் பேசுகையில் ஆலயப்பிரவேசத்தைத் தாம் கண்டிப்பதாயும் ஆனலும் தீண்டாதாரின் க்ஷேமத்தை உத்தேசித்த ஸனாதனிகள் நிர்மான முறையில் ஏதாவது வேலை செய்யவேண்டுமென்று வற்புறுத்தினர்.

தலைவரால் தீர்மானங்கள் வோட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேறின.

முடிவுரையில் தலைவர் பலரும் ஒற்றுமையுடன் நின்ற ஆலயப்பிரவேச இயக்கத்தை தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீமான் நடராஜய்யரால் வந்தனை சாற்றுச் சொல்லப்பட்டு இரவு 9மணிக்கு கூட்டம் முடிந்தது.

கூட்டத்தில் ஸ்திரீகளும் பலர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ சக்ரபாணிஸ்வாமி கோவிலில்

ஜூலைமீ 3உ வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு ஸ்ரீ சக்ரபாணி ஸ்வாமி கோவிலில் ஆலயப்பிரவேசத்தைக் கண்டிக்க பொது ஜனக் கூட்டமொன்று கடைபெற்றது. தேவஸ்தான படசாலே உபாத்யாயர் ஸ்ரீமான் ராமாச்சாரியார் தலைமை வஹித்தார். கோவில் டிரஸ்டி ஸ்ரீமான் ராகவேந்திர ராவ் முதலிய பல லௌகிக பிரபலஸ்தர்களும் நிர்மிதஸ்த பண்டிதர்களும், பொது ஜனங்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர். தலைவர் ஆலயப்பிரவேசக் கிளர்ச்சியின் அநீதியான போக்கை விவரித்துக் கண்டித்துப் பேசினர். பிறகு அக்நிஹோத்ரம் ஸ்ரீ ராமாநுஜதாசாரியார் பேசுகையில் மதுரையில் ஸனாதனிகளின்மீது, காங்கிரஸ்காரர்கள் கல்லெறிந்து, தடியால் அடித்து, ரத்தகாயம் உண்டுபண்ணிய ஸம்பவங்களை விஸ்தாரமாகக் கூறி, கம்மாகாரணத்தில் பயங்கர ராஜ்யம் நடப்பதை மிகத் தீவ்ரமாக கண்டித்ததுடன், ஸ்ரீமான் பூவராஹ அய்யங்கார் போன்ற ஆலயப்பிரவேசக் கிளர்ச்சிக்காரர்கள் ஸம்ஸ்கிருத பாஷை வாஸனையே தெரியாமலிருக்கையில், ஆலயப்பிரவேசத்திற்கு சாஸ்திரத்தில் இடமிருப்பதாக பாமரஜனங்கள் மத்தியில் பேசி ஏமாற்றிவருவதைக் கண்டித்து, பண்டிதர்களுடைய கூட்டத்தில் அவர் வந்து பொருஷமாக தமது கக்ஷியைக் கூறும்படி அழைப்பதாயும் சொன்னார்.

ஸ்ரீமான் நாராயணாவ் மதுரையில் நடந்து வரும் ஸம்பவங்களைக் குறிப்பிட்டு மேற்கொண்டு நடக்கவேண்டியவைகளைப் பற்றிப் பேசினர். தலைவரின் முடிவுரைக்குப் பிறகு ஸ்ரீ கடராஜய்யரால் உபசார வார்த்தை கூறப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது.

சோலையப்பஅக்ரஹாரம்.

5உ சனிக்கிழமை மாலை 7மணிக்கு சோலையப்பமுதலியார் அக்ரஹாரத்திலுள்ள ஸ்ரீவீச்வநாத ஸ்வாமி கோயிலில் ஸ்ரீமான் வாஞ்சிநாத அய்யர் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடந்தது. அக்ரகார வாஸிகள் பலர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். தலைவர் வேண்டுகோட்கிணங்கி சேங்கலிபுரம் பிரம்மஸ்ரீ பிரஜங்கபானு வைத்யநாத சாஸ்திரிகள் ஆலயப்பிரவேசத்தை கண்டித்துப் பேசினர். ராமராஜ்யம் நடைபெறுவதாக காங்கிரஸ்காரர்கள் பெருமையடித்துக்கொள்ளுவது பொய்யென்பதை நிருபணம் செய்தார்.

அக்ரஹாஸனாதிபதி மிகுந்த ஆரவ்சியுடன் அர்த்தபுஷ்டியுள்ள பிரஸங்கம் புரிந்து ஆலயப்பிரவேச அதிக்ரமங்களைக் கண்டித்து முடிவுரை கூறியபின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவடைந்தது.

ஸ்ரீ உத்திராதிமடத்தில்

ஸ்ரீ சக்கிரபாணிஸ்வாமி கோவில் வடக்கு வீதி யாகசாலைக்கெதிருவிலுள்ள ஸ்ரீ உத்திராதி மடத்தில் 6உ ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்குப் பெரிய பொதுக்கூட்டம் கடைபெற்றது. மாதவ வகுப்பினரின் விஷேஷ புருஷர்கள் ஏராளமாக வந்திருந்தனர்.

ஸ்ரீமான்கள் எம். ரம்ராவ் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, வெங்கடாசாரியாரால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீமான் பண்டிட் மாதவ ஆசாரியர் அக்கிராஸனம் வஹித்தார்.

ஸ்ரீமான்கள் நாராயண ராவ், எம். ராமராவ் பாகவதம் சங்கதாதாசாரியர் எஸ். மஹாலிங்கய்யர் பி. ஏ., பி. எல்., அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியர், பி.எம். கேசவாசாரியார், குப்புஸாமி அய்யர், நாட்டு நாராயண ராவ், நாகராஜய்யர், ராமாசாரியார் முதலியவர்கள் பேசினர்.

ஆலயப்பிரவேசச்சட்டம் இயற்றப்பட்டு விட்டதைக்கண்டு ஸனாதனிகள் அதைய மடையக்கூடாதென்றும், இனிமேல் தான் நாம் கட்டுப்பாடாக பிரசாரம் செய்து டிரஸ்டிகளையும் பூஜாரிகளையும் நம் வசத்தில் வைத்துக்கொள்ள முயற்சிக்கவேண்டும் இப்போதிய சட்டம் மாறக்கூடிய காலம் வந்து நீரு மென்றும் நமது கிளர்ச்சியை தொடர்ந்து நடத்தவேண்டு மென்றும் பிரஸங்கிகள் குறிப்பிட்டனர்.

ஸ்ரீமான் ராமராவ் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 9 மணிக்குக் கூட்டம் முடிந்தது.

ஆஸ்திக ஸ்திரீகளின் கூட்டம்

குடந்தை ஆஸ்திக ஸ்திரீகளின் ஸபையின் ஆதரவில் ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமிகோயிலில் ஸ்திரீகளின் பொதுக் கூட்டமொன்று சென்ற வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கடைபெற்றது. எல்லா வகுப்பு ஸ்திரீகளுமாக சுமார் 500 பேர்கள் கூடியிருந்தனர். ஆரம்பத்தில் கூட்டம் போட்டோ படம் பிடிக்கப்பட்டது. கூட்டத்தில் அநேக ஸ்திரீகள் ஆலயப்பிரவேசத்தையும், அவசரச் சட்டத்தையும் பலமாகக் கண்டித்துப் பேசினர்கள்.

"மதுரையில் ஸனாதனிகள் கூட்டத்தில் கட்டுப்பாடாக காங்கிரஸ்காரர்கள் ஹிம்ஸையை விஷேஷித்தைக் கண்டித்தும், ஸமரஸ முயற்சியைத் தடுத்ததை ஆக்ஷேபித்தும், பொதுஜன அபிப்பிராயப்படி மதுரையில் ஆலயப்பிரவேசம் கடக்காதாகக் கூறுவது பொய் பிரசாரமென்றும், ஸம்புரோக்ஷணை நடக்கும் வரையில் மதுரையிலுள்ள ஆஸ்திக ஸ்திரீ புருஷர்கள் கோவிலுக்குப் போகக்கூடாதென்றும், மண்டகப்படிகளை நிறுத்திவிடவேண்டுமென்றும், ஒவ்வொரு கிராம காரஸ்திரீகளும் கூட்டம் கூடி ஆலயப்பிரவேசத்தைக் கண்டிக்கவேண்டுமென்றும்" பல தீர்மானங்கள் ஸபையில் நிறைவேற்றப்பட்டன.

பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

இதைக்கூட்டத்தைப் பார்க்க ஏராளமாகப் புருஷர்களும் வந்து ஒதுங்கி நின்று கடவடிக்கைகளை கவனித்தனர்.

(நமது நிருபர்).

The Premier English Weekly Devoted to the cause of Sanatana Dharma.

"Dharmarajya"

(Official organ of the Dharma Sevaka Sabha).
Patron Founder & Spiritual Director:
H. H. Sri Sankaracharya, Puri.
Widely circulated in
India, Burma & Ceylon.

Best Medium for Advertisement
Annual Subscription Rs. 5.

Apply to:—
The Manager, "DHARMARAJYA"
Chandi Chowk, Delhi.

காங்கிரஸ்காரர்களுக்கு கேள்விகள்?

"ஏழை மக்களே ஏமாற்றூதீர்கள்"

மன்னார்குடி காங்கிரஸ் கூட்டத்தில் மேற்கண்ட கேள்விகளை ஒருவர் கேட்டார். இதற்கு ஸ்ரீ சக்தானம் அய்யங்கார் பதில் கூறமுடியவில்லை. கேள்விகள் வருமாறு:—

காங்கிரஸ்ஸ்தாபனங்களில் ஸ்தானம் வகிக்கும் நீங்களோ உங்களைப் போன்றவர்களோ தீண்டாமைக்கு சாஸ்திரங்களில் ஆதாரமில்லை என்று சொல்லுகிறீர்களே. இதை நிரூபிப்பீர்களா?

தங்களுக்கு வேதங்களோ சாஸ்திரங்களோ அல்லது இவைகள் எல்லாம் சேர்ந்ததோ தெரியுமா? அதை நகுக்க அறிவாளிகள் முன்னிலையில் ருஜுப்பிக்க தயாராக இருக்கிறீர்களா?

பதவியேற்கும் மைமத்தில் மதேச்சாதிகாரத்தை வினியோகியாதிருக்குமாறு பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரிடமிருந்து அடைய விரும்பிய வாக்குறுதிக்கு விரோதமாக மதுரையில் ஓர் சிறிய தனிப்பட்ட நபரின் ஸ்வல்ப நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காக அவசரச் சட்டத்தை கவர்னரின் மதேச்சாதிகார பலத்தின் மூலம் வெளிப்படுத்தியதற்கு என்ன ஸமாதானம் சொல்லமுடியும். இவ்விதம் செய்ததில் ஜயம் உங்களுக்கு ஏற்பட்டதா? மேலும்டு ராஜதந்திரிகளுக்கு ஏற்பட்டதா?

சென்ற இரண்டு வருஷகாலமாக போலீஸ் பலம், ராணுவ பலம் இவைகளைக்கொண்டு காங்கிரஸ்காரர்கள் ராஜ்யம் ஆளுவதானது அஹிம்ஸை முறைக்கும் ஜனநாயக முறைக்கும் ஏற்றதா?

ஹரிஜன ஆலயப்பிரவேசத்தை பெரும்பான்மையோர் ஆதரிக்கிறார்கள் என்பது உண்மையானில் மலையாள ஆலயப்பிரவேச மசோதா சட்டமாகியும் அங்கு அது இன்னும் ஏன் அமுலுக்கு கொண்டுவரப்படவில்லை

பொது ஜனங்களின் ஆதரவு இருக்கிறதென்கிற சரியான தைரியம் உங்களுக்கிருக்கிறதால், மதுரையில் அதிகாலையில் போலீஸ் படை நிரட்டி வைத்துக்கொண்டு ரஹஸ்யமாய் ஆலயப்பிரவேசம் செய்திருப்பீர்களா?

சட்டசபை எலக்ஷன் சமயத்தில் மத விஷயத்தில் தலையிடுவதில்லை என்று வோட்டர்களிடம் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு விரோதமாக, இப்பொழுது நடந்துள்ளதான மத விஷயத்தில் தலையிடுவதானது நீதிய முறைக்கு ஏற்றதா?

மைனாரிடி ஜனஸமூகத்திற்கு பாதுகாப்பளிப்பதை அவச்யமாக ஒப்புக்கொண்ட காங்கிரஸ் ராஜாங்கத்தார் சிறுபான்மையினரான ஸனாதனிகளின் உரிமையில் அவசரச்சட்டம் மூலம் தலையிடுவது நியாயமானதா?

பரிசுத்தமான ராஜ்ய லக்ஷியத்துடன் இந்திய ஜன சமூகத்தை ஒரு முகப்படுத்திய காங்கிரஸில் ஆந்திர, கேரளம், தமிழ், ஒரிஸா, கர்னாடகம் முதலிய மாகாண வாதமும், பாஷா வாதமும், வகுப்பு வாதமும் தாண்டவமாடவிட்டு விட்டீர்களே? இன்னமும் உங்களுக்கு காங்கிரஸ் பெயர் எதற்காக?

எவ்வித நியாயத்திற்கும் துணிந்து முன்வந்த காங்கிரஸில் புகுந்துகொண்டு உத்யோகவேட்டையைக் கைப்பற்றி தோட்டி வேலை முதல் தொண்டமான் வேலை வரை காங்கிரஸ் சலுகையால் போட்டிப் போடும்படியான ஆசையை சுயநல ஜனங்களுக்கு உண்டாக்கி வைத்தது தேச நன்மையா? தேசத்ரோகமா?

ஆலயப்பிரவேசமானது பொதுஜன ஆதரவுகொண்டது என்கிற தைர்யம் உண்மையாக உங்களுக்கு இருக்குமேயானில், உடனே

மதுராந்தகம்

"ஆலயங்களுக்குப் போகக்கூடாது."

மதுராந்தகம் ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி ஸன்னதியில் 29-7-39 மாலை கூடிய ஹரிஜனதர்மஸபையின் ஆதரவில் ஒரு கூட்டம் கூடிற்று. சபைக்கு மாஜி ஸப்ரிஜஸ்டிரார் ஸ்ரீ M. கோதண்டராமய்யங்கார் அக்கிராஸனம் வஹித்தார்.

ஸமீபத்தில் மதுரையில் சில சைவ வைஷ்ணவ ஆலயங்களில் சாதூர் வர்ணங்களில் சேராத பஞ்சமர்கள் பிரவேசித்ததை கண்டிக்கவேண்டி கருபுரம் வித்வான் ஸ்ரீ. ஸ்ரீனிவாஸாசார்சுவாமி "ஆலயப்பிரவேசக்ருத்யம் ஆகம சாஸ்திரத்துக்கு விரோதமாயிருப்பதாயும், ராஜ்யத்திற்கும் எல்லா ஜனஸமூகங்களுக்கும் கொடிய தீங்கை விளைவிக்கக் கூடியதென்றும், ஆதலால் விலக்கப்பட்ட ஜாதியாரை ஆலயங்களில்பிரவேசிக்கப்படாதென்றும், பிரவேசிக்கமலே, கோயிலுக்கு வெளியில் நின்று தொழும் படி வகுப்பினருக்கும் உள்ளேபோய் தொழ அனுமதி கொடுக்கப்பட்டிருக்குமவர்களுக்கும், கருணாநிதியான பகவான் ஒரே விதமான பலனை கொடுக்கிறதாகவும், மேற்சொன்ன விலக்கப்பட்டவர்களுக்கும், தேக அனைக்கியத்தினாலும், வியாதியினால் கோயிலுக்கு போகக்கூடாதவர்களுக்கும், தரிசனம் கொடுப்பதற்காகவே ஆலயங்களில் பஞ்ச பர்வ உத்ஸவங்களென்றும், பிரம்மோத்ஸவங்களென்றும் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் இவைகளைவிட்டு ஆலயங்களில் படியேயர்களை உள்ளே பிரவேசிப்பித்தால் தேவதாஸனித்யம் போய்விடுமென்றும், படியேயர்களுக்கு சொம்பவும் சேஷமக்குறைவு ஏற்படுமென்றும், ஸனாதன தர்மத்தைக் கொண்டிருக்கும் ஆஸ்திகர்கள் அப்படிப்பட்ட ஸ்தலங்களில் தின்னவிலாகள் என்றும், பலவிதமாய் விவரித்த இத்யாதிய கத்தை தடுக்கவேண்டியது அவஸ்யம்" என்றும் சொன்னர்.

கூட்டத்தில் இன்னும் பலர் பேசினர்கள். திருக்கோட்டியூர் ஸ்ரீ வரதேவாசாரியர், இந்த காரியம் ஆகமசாஸ்திரங்களுக்கு விரோதமென்று நிரூபித்து, எதிர்க் கக்ஷிக்காரர் சொல்லும் ஆதாரமில்லாத சில விஷயங்களுக்குத் தகுந்த காரணங்களால் ஸமாதானங்கள் காட்டியதுமன்றி, இது விஷயத்தில் தேவஸ்தான டிரஸ்டிகளும் இந்த ஸபையாரின் அபிப்பிராயத்துக்கு சொம்பவும் அனுகூலங்களாயிருந்து ஆலயங்களைக் காப்பாற்ற எல்லா முயற்சியும் எடுத்துக்கொள்ளும் படிக்கும், மதுரையில் தர்க்கிருமமான சட்டசபை மெம்பர்ஸ்தானங்களை ராஜீனமா செய்துவிட்டு ஷே ஆலயப்பிரவேச பிரச்னையையே முக்யமானதாக வைத்து நீங்கள் அதற்கு நிற்க்கவேண்டியதுதானே ஜனநாயக ஆக்ஷியின் முறை. ஆகையால் தயவுசெய்த அதை முதலில் செய்யுங்கள்.

பதவி பேற்ற பிறகு மாகாண செல்வாகிலையை அபிவிருத்தி செய்திருக்கிறீர்களா? குறைத்திருக்கிறீர்களா? அபிவிருத்திசெய்திருந்தால் சென்ற மாகாண கடன் விளம்பரத்துக்கு ஆதாவு அறவே உங்களுக்கு இல்லாதிருந்ததற்கு என்ன காரணம்? இக்மாதிரியான நிலைமை ஏற்பட்ட பிறகும் ஜனநாயக ஆக்ஷிமுறையில் பதவி வஹித்திருப்பது அருவருப்பாயில்லையா? மேனாட்டில் எவ்விடத்திலாவது இவ்விதம் ஜனநாயக ஆக்ஷிமுறை நடைபெறுகிறதா? இதுதான் சட்டப் பையில் ராஜீனமாக்கடிதம் உள்ளவர்களுக்குக் கடையாளமா?

(ஒரு நிருபர்.)

ஆலயப்பிரவேசம் செய்வித்தவர்களின் கடவடிக்கையைக் கண்டித்தும் ஸனாதன தர்மத்தக்காக முன்வந்து நின்று உழைக்கும் ஸ்ரீமான் கடேசய்யரைப் பாராட்டிப்" பேசினர்.

மீழ்க்கண்ட நீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன:—

சாதுர்வர்ணத்தில் சேராத அவர்களை தேவாலயங்களில் பிரவேசிக்கும் இயக்கத்தை மேற்கண்ட காரணங்களால் இந்த ஸபை பலமாய் கண்டிக்கிறது. ஆகையால் எக்காரணத்தாலும் மேற்படி இயக்கத்தை ஆதரித்து ஒருவரும் ஆலயப்பிரவேசம் செய்விக்கக்கூடாது.

அப்படி யாராவது செய்வித்தால் எங்களால் கூடியவரையில் தடைசெய்ய லித்தமையிருக்கிறோம்.

அதற்கும் மீறிநடக்கும் பக்ஷத்தில் தேவதாஸனனித்யம் போய்விடும் என்று நம்பு கிறபடியால் சாதுர் வர்ணத்தைச் சேர்ந்த ஆஸ்திகர்கள் வாவரும் ஆலயத்துக்குப் போவதை நிறுத்திக்கொள்ள நிச்சயித்திருக்கிறார்கள்.

இத்தத்தீர்மானங்களை தேவஸ்தானடிரஸ்டிகளுக்குத் தெரிவித்து இந்த ஸபையார் அபிப்பிராயத்தை அனுசரித்து தேவஸ்தானத்துக்கு ஒருவித அபாயமில்லாமல் காப்பாற்றிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறது.

மதுரையில் சட்டம் சாஸ்திரம் வழக்கம் எல்லாவற்றையும் மீறி அவர்ணர்களை ஆலயங்களென்றும் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் இவைகளைவிட்டு ஆலயங்களில் படியேயர்களை உள்ளே பிரவேசிப்பித்தால் தேவதாஸனித்யம் போய்விடுமென்றும், படியேயர்களுக்கு சொம்பவும் சேஷமக்குறைவு ஏற்படுமென்றும், ஸனாதன தர்மத்தைக் கொண்டிருக்கும் ஆஸ்திகர்கள் அப்படிப்பட்ட ஸ்தலங்களில் தின்னவிலாகள் என்றும், பலவிதமாய் விவரித்த இத்யாதிய கத்தை தடுக்கவேண்டியது அவஸ்யம்" என்றும் சொன்னர்.

கூட்டத்தில் இன்னும் பலர் பேசினர்கள். திருக்கோட்டியூர் ஸ்ரீ வரதேவாசாரியர், இந்த காரியம் ஆகமசாஸ்திரங்களுக்கு விரோதமென்று நிரூபித்து, எதிர்க் கக்ஷிக்காரர் சொல்லும் ஆதாரமில்லாத சில விஷயங்களுக்குத் தகுந்த காரணங்களால் ஸமாதானங்கள் காட்டியதுமன்றி, இது விஷயத்தில் தேவஸ்தான டிரஸ்டிகளும் இந்த ஸபையாரின் அபிப்பிராயத்துக்கு சொம்பவும் அனுகூலங்களாயிருந்து ஆலயங்களைக் காப்பாற்ற எல்லா முயற்சியும் எடுத்துக்கொள்ளும் படிக்கும், மதுரையில் தர்க்கிருமமான

கீழச்சீவல்பட்டி

ஆத்தங்குடி ஸநாதன சபையின் சார்பாக கீழச்சீவல்பட்டியில் ஸநாதனிகளின் பொது கூட்டம் ஒன்று ஸ்ரீமான் அ. பெரி. பழ. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் தலைமையின் கீழ் நடை பெற்றது.

ஆத்தங்குடி ஸ்ரீமான் கு. வீர. கதிரேசன் செட்டியார், ஸ்ரீமான்கள் T. P. ஜகதீசய்யர் மு. நிருவெங்கிடம் அய்யங்கார் முதலியவர்கள் ஸநாதன தர்ம விஷயங்களைப்பற்றியும், சமீபத்தில் மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவிலில் ஹரிஜனங்கள் பிரவேசம் செய்த முறையை கண்டித்தும், காங்கிரஸ் கவர்மெண்டார் மே மத சம்மந்தமான விஷயத்தில் தடுக்கவேண்டியிருக்க ஒரு சார்பாக ஆதரவு அளித்து வருவதை எடுத்துக் காட்டியும், அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க தலைவர் ஸ்ரீ N. கடேசய்யர் அவர்கள் இது விஷயமாய் எடுத்துவரும் முயற்சிக்கு ஆதரவு அளிக்கும்படி பொது ஜனங்களை வேண்டிக்கொண்டும் மிகதெளிவாக சொற்பொழிவாற்றினர்கள்.

கீழச்சீவல்பட்டியில் 'தர்மஸேவா சங்கம்' என்னும் பெயரால் ஸேவாசங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்படவேண்டிய அவசியத்தைப்பற்றியும் வற்புறுத்தப்பட்டது. ஸ்ரீமான் ஜெகதீசய்யரவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிதுமுடிவுபெற்றது.

(ஒ.நி.)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-வரு ஆடி-மீ 25 உ

அதர்மச்சட்டமும் நமது கடமையும்

ஆலயப்பிரவேச அதர்ம மசோதாவானது பிடிவாதமாக நிறைவேற்றப்பட்டுவிட்டது. சட்டஸபையானது பெயரளவில் தான் ஜனப்பிரதிநிதி ஸபையாயிருந்து வருகிறது. உண்மையாகப் பார்த்தால், அது காங்கிரஸ் ஏகாதிபதிக்கு அடங்கியிருக்கும் கூட்டமே யாகும். அங்கு ஜனநாயகமுறைக்கு அங்கமான எதிர்க்கக்ஷியொன்றுமில்லையாதலால் பொது ஜன அபிப்பிராயத்தை அலக்ஷ்யம் செய்தும், [illegible] டியதேச்சாதிகாரமாக, ஒருதலைப் பக்ஷமாக எத்தப்பெரிய அனர்த்தகரமான சட்டத்தையும் செய்ய அது சௌகர்யம் பெற்றிருக்கிறது. ஆதலால், அந்த காங்கிரஸ் கயிறால் கட்டுண்ட கூட்டத்தில், ஆலய அழிப்பு மசோதா சௌமின்றி நிறைவேறி விட்டதில் ஒருவரும் அதிசயப்படக் காரண மில்லை.

கக்ஷி பல கொடுமையாலேயே, எத்தராஜரீதியிலும் கண்டும் கேட்டுமிராத இத்த அநியாயம் சாதித்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கான ஆஸ்திகர்களுடைய அபிப்பிராயங்கள் அறம்பவம் பின்னிட்ட ஆத்திரத்தினால் அலக்ஷியம் செய்யப்பட்டன. நீதி நிபுணர்களின் நியாய வாதங்கள் நிராகரிக்கப்பட்டன. மதாசாரியர்களின் ஹிதோபதேசங்கள் அவமதிக்கப்பட்டன. ஒரே கட்டுப்பாடாக மாயாபிசாசம் கடத்தப் பட்டது. ஆஸ்திகர்களின் அபிப்பிராயங்கள் அடிதடிகளாலும், பயமுறுத்தலாலும் வெளி வரமுடியாமல் அடக்கிவிடப்பட்டன. கடைசியாக, பிரதம மந்திரி தமது ராஜாகமார பயமுறுத்தலையும் பிகுவையும் காட்டி, மஹில் மேல் பூரணமாயிருந்த சிலருடைய பலத்தையும் பெறவேண்டியதாயிற்று. தம்மை பாதிக்கக்கூடிய நெருக்கடிபைத் தவிர்க்க விரும்பி, வெள்ளை அதிகாரிகளும் "நமக்கென்ன" என்று தலைமாட்டிவிட்டனர். இவ்வாறு வைபவங்களுக்கிடையில் இந்த மசோதா பிடிவாதமாக நிறைவேறியிருக்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் இனி ஆஸ்திகர்களின் உடமையென்ன வென்பதைப் பற்றி நாம் போதிக்கவேண்டியது அவசியமாகிறது. அதைர்த்தையோ, நிர்வேதத்தையோ அடையக் காரணமில்லை. எதிரிகளுடைய பலங்களையும் ஸாதனங்களையும் மிகைப்படுத்[illegible]

நிக் கூறி நம்மவர்கள் மனத் தளர்ச்சியடையும்படி எதுவும் பேசக்கூடாது. நமது பலத்தையும் நிலைமையையும், நாமே குறைத்துக் கூறப் பின்தங்கி நின்றுவிடக்கூடாது. நாம் சமீபத்தில் கிளர்ச்சி செய்ததால் நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. மதுரையில் ஸமாதான முறையில் ஆலயப்பிரவேசம் நடக்கவில்லை யென்றும், நிருட்டுத்தனமான முறையில் அதிகாரிகளின் பின் பலத்தாலேயே நடந்த தென்றும், நமது பிரசாரத்தினாலேயே ஜனங்கள் உண்மையை அறிந்துகொள்ள நேர்ந்தது. நமது பிரசாரத்தின் காரணமாக இன்று தென்னிந்தியா முழுவதும் நீ. தார்மிகர்களின் மெய்யுணர்ச்சித் தீ-அநீத ஆட்சியை அடக்கப்போகிற தீ-கனிய ஆரம்பித்து விட்டது. விவேகிகளும், நிஷ்பக்ஷ பாதிகளும், நீர்க்கதர்சிகளும் நீதி நிபுணர் களும், ராஜதந்திரிகளும் மற்ற நியாய வாதி களும் இன்று நமது பிரசாரத்தினாலேயே நமது கக்ஷியின் நேர்மையை அறிந்து எதிரி களைக் கண்டிக்க முன் வந்திருக்கிறார்கள்.

அதிகமேன்? கக்ஷிபலத்தையும், மெஜாரிடி பலத்தையும் கொண்டு எதையும் செய்யத் துணிந்து நிற்கும் பிரதம மந்திரிகூட, தாம் சட்ட வரம்பு மீறியே ஆலயப்பிரவேச சட்டம் செய்வதாக ஒப்புக்கொள்ளும்படி செய் ததும் நமது பிரசாரமே யல்லவா? சட்ட நீதியர்க கோவில் டிரஸ்டிகளுக்கு ஏற்பட் டுள்ள அதிகார வரம்பை மீறின புதுச் சட்ட மொன்றைச் செய்வது தமக்கு அவசிய மாகி விட்டதாக அவரே ஒப்புக்கொள்ளுகிறார். ஆதலால், நம்முடைய பிரசாரத்தை நாம் நிடித்து நடத்தவேண்டியதே இப்போது முக் கியமான கார்யமாகும்.

ஆலயப்பிரவேச மசோதா விவாதங்களி லிருந்து சில முக்கியமான விஷயங்களும் வெ ளிப்பியிருக்கின்றன. கனம் ராஜகோபாலாசாரி யார் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தியிருக் கிறார். அதாவது மதவிஷயங்களில் பிரவே சித்தச் சட்டம் பண்ணுவதும், அதிகாரமுண்டென்பதும், முற்றும் மதஸம்பந்தமான ஆலயப்பிரவேசத்தைத் தாம் நிறைவேற்ற முன் வந்திருப்பதாயும், ஜனங்களின் தப்பான மதானுஷ்டானத்தை திருத்தி தமக்கு சரியாகத் தோன்றுமாறு புது மதானுஷ்டானத்தை நிறைவேற்ற தம்மிடமுள்ள முழு பலத்தையும் தாம் பிர யோகிப்பரென்றும், புன் ஒப்பந்தப்படி ஜார்ஜ் ஹிக்தக்கன் ஆலயப்பிரவேசத்திற்குக் கட்டுப்பட்டிருப்பதாயும் வாதிக்கிறார். முக்ய மாக மத விஷயத்தில் சட்டம் செய்யத் தமக்கு அதிகாரமிருப்பதாக அவர் வாதிக் கும் அபாயகரமான வாதத்தை ஆஸ்திகர் கள் ஒரு முகமாக இனி ஓயாமல் எதிர்க்க வேண்டிய ஸந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. மதத்தில் பிரவேசிக் கலாமென்ற அபாயத்திற்கு நாம் இடமளித்து விட்டால் நமது கதி என்னவாகும்? ஆதலால், இதை எதிர்ப்பதுடன், சட்ட ஸபையில் மெஜாரிடி பலத்தைக் குறைக்கவும் புனு ஒப்பத்த மேசாத்தை வெளிப்படுத்த வும் நமது பிரசாரத்தை வ ப் ப டு த் த வேண்டும்.

எந்த ஜனநாயகத்திலும் ஒரு மந்திரி ஸபை சாச்வதமல்ல. அது செய்யும் சட்டமும் நிலைத்திருக்கு மென்று சொல்லமுடி யாது. உலக சரித்திரமப்படியே இருக்கிறது. இங்கிலாண்டிலும், நீர்த்தபோனதாகக் கருதப் பட்ட அநேக விஷயங்களும் மாற்றப்பட் டிருக்கின்றன. இதற்கு இடை விட்ட கிளர்ச்சியே காரணம். நமது கக்ஷியிலுள்ள நியாயத்தைப் பொதுஜனங்களும் நீதிமான் களும் அங்கீகரித்திருக்கிறார்கள். பிடிவாத எண்ணம் படைத்த ஒரு மந்திரி ஒரு சட்டத் தை நிறைவேற்றினால் மற்றொரு மந்திரி சபை நமது நியாயக் கக்ஷியை அங்கீகரித்து அதை மாற்றலாம். மேலும், ஆலயப்பிரவேச க்ககக்ஷியாருடைய மனோதம் நிறைவேறுமல் செய்யவேண்டியதும் அவச்யமாகிறது. தீண்டாதாருடன் ஸவர்ணிகள் கலந்து கோவிலுக்குப் போவதன் மூலம் தீண்டா மையை விலக்கி விடலாமென்று காங்கிழி கக்ஷியார் ஸ்வப்நம் கண்டு கொண்டிருக்கட் டும். கக்ஷி பலத்தாலும், அதிகார பலத் தாலும் கோவில்களை அவர்கள் கூட்டங் கொள்ளமுடியும். ஆனால், ஆஸ்திகர்கள் கோயில் சுத்தமடையும் வரையில் அங்கு போவதை நிறுத்தவதன் மூலம் தீண்டாமை விலக்குக்கு இது சாதகமாகாதென்ற காட்டி விடலாம். மதாசாரியர்களும், அவர்களு டைய ஆயிரக்கணக்கான சிஷ்யர்களும், மற்ற ஆஸ்திக ஸ்திரீ புருஷர்களும் அசுத்த மான கோவில்களுக்கு போவதை நிறுத்தி விட்டால் எதிரிகள் எண்ணும் சீர்திருத்தம் நிறைவேறி விட்டதாகுமோ? கோவில் ஆ அசுத்தப்படுத்தியது தான் மிச்சமாகும். இதை சரிப்படுத்தும் நமது பிரசாரத்தை வலுப்படுத்தவேண்டும். பொது ஜனங்களுக் கும், டிரஸ்டிகளுக்கும், கோவில் பூஜகர் களுக்கும் நிலைமையை எடுத்துக்காட்டி அவர் களைக்கட்டுப்பாடாய் எதிர்த்து நிற்கும்படி செய்வதற்கு முன்னைவிட இப்போது அதிக அவஸரமும் ஆவச்யகதையும் ஏற்பட்டிருக் கிறது. ஆதலால், எங்கும் இப்போது ஆரம் பித்துள்ள எதிர்ப்புக் கிளர்ச்சியை இன்னும் வலுவான முறையில் நீடித்து நடத்தும்படி ஆஸ்திகர்களை வேண்டிக்கொள்கிறோம்.

குறிப்பு

கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்துக.

ஆலயப்பிரவேசப் பாதுகாப்பு மசோதா சென்னை ஜனப் பிரதிநிதி சபையில் நிறை வேறிவிட்டது. இனி ஸாதனைகள் என்ன செய்ய முடியும் என்று சிலர் கூறுகிறார்கள். ஞானிகளின் விரோதிகள் இக்கச் சட்டத் தைப்பற்றித் தாமாறுகத் தங்கள் கூட்டங் களில் பெருமையாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இத்தப் புதிய சட்ட மூலம் பல விபரீதங்கள் நடக்குமோ என்று ஞானி களின், ஐயுறுகிறார்கள். அவர்களுக்குப் பனழுச் சம்பவங்களில் சில வற்றை நினைப் பூட்ட விரும்புகிறோம்.

முப்பது ஆண்டுகட்குமுன் வங்காளத்தை இரண்டு தண்டாக்கினர் லார்டு கர்ஸான் பிரபு. அதனை ஆட்சேபித்தார்கள் பொது ஜனங்கள். கடைசியாக வங்கப்பிரி வினைக் கண்டிக்கப்பட்டது. இதனை ஒட்டிப் பலர் சிறை புகுந்தார்கள். பலர் கடும் தண்ட னைக்குட்படுத்தப்பட்டார்கள். லார்டு கர்ஸ னின் அட்சிமுறை ஆட்சி வங்காளத்தில் தாண்டவமாடிற்று. பத்திரிகைகள் சுதந்திர ரம் பறிமுதல் செய்யப்பட்டது. அப்பொ முது வங்கப் பிரிவினை எதிர்ப்பு இயக்கத்தை ஒரு சிலர் கேலி செய்தனர். முடிவில் லார்டு கர்ஸனின் வங்கப்பிரிவினை என்னயிற்று?

1911-ஹி மார்ச்மை தங்கிய ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் இந்தியாவுக்கு விஜயம் செய்த காலியில் மக்களது தீவிரஎதிர்ப்பை நேரில் கண்டார். உடனே வங்கப்பிரிவினையை ரத் தசெய்தார். லார்டு கர்ஸான் அடக்கு முறைகளுக்கு ஆதரவு காட்டிய கண்பக ளுக்குஇதுஒரு பாடம் கற்பித்தது.

இந்தியாவில் நடந்த ஒரு சில சம்பவங்களி லே சௌளட் கூட்டம் என்ற ஒரு கொடிய

சட்டத்தை இயற்றினர்கள். இதனையும் மக் கள் கண்டு மனம் கொந்தித்தனர். இத்த அக்ரம சட்டத்தைக் கண்டித்துக் கிளர்ச்சி செய்யவே, சட்டம் இருக்குமிடம் தெரியாமல் போய்விட்டது. மக்கள் கிளர்ச்சி கண்டு சர்க் கார் மனம் மாறினர்கள்.

1930-ஹி மகாத்மாகாந்தி அடிகள் உப்பு சத்யாக்ரஹத்தை ஆரமபித்தார். அதற்கு காரணெங்கும் மகத்தான ஆதரவுகாட்டப்பட் டது. ஆரம்பத்தில் லார்டு ஏர்வின் பல அவ ஸரச் சட்டங்களை இயற்றினர். ஆயிரக்கணக் கான தேச பக்தர்களை சிறையிட்டார். பத் திரிகை சுதந்திரம் பறிமுதலாயிற்று. இந்த இயக்கம் வலுக்கவே, முடிவில் லார்டு இர்வின் மகாத்மா காந்தி அடிகளிடத்தில் ராஜி செய்துகொண்டார். அவசரச் சட்டங்கள் ரத்தாயிற்று. காங்கி இர்வின் ஒப்பத்த மூலம் பலவித சட்டங்களின் ஷரத்துகள் மாறுதல டைந்தன.

சில மாதங்களுக்கு முன் சென்னை சர்க் கார் பிரதம மந்திரி கனம் C. ராஜகோபால சாரியார் "மனோரள ஆலயப்பிரவேசச் சட்டத்தை" இயற்றினர். அச்சமயம் பிரதம மந்திரியைப் பலர் பாராட்டினர்கள். இப் பொழுது அத்தச் சட்டத்தின் கதி என்ன வாயிற்று? மனோபாத்தில் எவ்வளவு கோயில் கள் நிறக்கப்பட்டிருக்கின்றன. இத்தச் சட்டம் இருக்கும் அதன் மூலம் என்ன காரியங்கள் நடைபெற்றன?

சட்டசபையில் இன்று ஆலயப்பிரவேசச் சட்டம் நிறைவேறிவிட்டது. ராஜாங்க சபை யிலும் அங்கீகாரம் அதற்குக் கிடைத்துவிட்டது. பின்னர் மே. தி. ராஜப்பிரதிநிதியின் அங்கீகாரத் துக்கு அனுப்பப்படும். இச்சமயத்தில் மே. த. வைசிராய் என்ன செய்யப்போகி றார் என்பதைப் பொதுமக்கள் ஆவலுடன் நோக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

மே. த. வைசிராய் அங்கீகாரம் கொடுப் பார? கொடுக்க மாட்டார? என்று ஜோசி யம் சொல்லிக் கொண்டிருப்பதில் பிரயோ சனமில்லை.

இந்த சமயத்தில் ஆஸ்திக மகாஜனங்கள் காடெங்கும் சட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து வரவேண்டும். எங்கும் கண்டனக் கூட்டங்கள் கூட்டி சட்டத்தை ரத்துசெய்யும் படித் தீர்மானங்களை நிறைவேற்றி மே. த. வைசிராய் பிரபுவுக்கு அனுப்பவேண்டும்.

கொல்லங்கோடு ராஜா ஸர் வாசுதேவ ராஜ கூறுவது போல், "சட்டம் ரத்து செய்ப்படாவிடில் இங்கிலாந்துக்கு ஒரு தூத கோஷ்டியை அனுப்பி அங்கு நமது போராடவேண்டும். இந்திய மந்திரிக்கு விக்ஞாபனம் செய்து கொள்ளவேண்டும்.

பொது ஜனங்கள் யாவரும் சட்டத்தை ரத்து செய்யும் வரையில் கிளர்ச்சி செய்து கொண்டே இருத்தலவசியம். இதுதான் நமது கடமை. தொடர்ந்து கிளர்ச்சியை நடத்துக.

(L. S. மணி அய்யர்,
உதவி ஆசிரியர்)

காரப்பங்காடு

"கண்டனக்கூட்டம்"

பட்டுக்கோட்டை தாலுக்கா காரப்பங் காடு கிராமத்தில் ஆலயப்பிரவேச சட்டத் தைக் கண்டிக்க ஒரு மாபெருங்கூட்டம் சென்ற ஞாயிறன்று நடைபெற்றது.

ஸ்ரீமான் நியாய வேதாந்த வித்வான் தேசிகாவாதாசாரியர் தலைமை வகித்தார்.

ஏக மனதாக ஒரு கண்டனத் தீர்மானம் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்டது.

(ஒ. கி.)

ஆலயப்பிரவேச பிரச்னை

காங்கிரஸ் சர்க்கார் முறைகளுக்கு எதிர்ப்பு

பல பிரமுகர்களின் அபிப்பிராயங்கள்

"சுதேசமித்திரனின்" எச்சரிக்கை

பிரபல வக்கீலும், மாஜி அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைத் தலைவருமான ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் ஆலயப் பிரவேசத்தைப்பற்றிக் கூறுவதாவது:—

"சட்டம் செய்வது சுலபமாகாது"

"ஆலயப்பிரவேசத்திற்காக சட்டம் செய் வதையும், அவசரச்சட்டம் இயற்றுவதை யும், கட்டாய வழிகளை உபயோகப்படுத்து வதையும் நான் பலமாக எதிர்க்கிறேன்"

"ஐரோப்பியர், முகம்மியர், கிருஸ்துவர் போன்ற பல ஜாதிகள் கொண்ட சட்ட சபையில் ஹிந்துமத சீர்திருத்தத்தைக்குச் சட்டம் செய்வது எப்படி சரியாகும்".

"ஆத்திரமும் அவஸரமும் கூடாது"

சென்னை பிரபல அட்வகேட்டான ஸ்ரீ டி.ஆர். வேங்கட்ட்ராமாஸர்திரிகள் ஸி.ஐ.இ. அவர்கள் அபிப்பிராயமாவது:—

"ஸனாதனிகளின் அனுமதியில்லாமல் ஆல யங்களுக்குள் போவதைக் காட்டிலும், அவர்கள் அனுமதியுடன் த்வஜஸ்தம்பம் வரை போக ஆஸ்திக்ராவி டர்களுக்கு உரிமை அளித்தால் அவர்களுக்கு நன்மை பயக்கும் என்பது என் கருத்து".....

"சட்டமியற்றுவதற்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. அதாவது வக்காளர்களின் கோ[illegible] பல அபாயங்கள் இருப்பதால் வழி தவிர ஒன்றும் செய்யக்கூடாது.

"காலம் மாறிவருவது உண்மையே. ஆத் திரமும், அவஸரமும் இப்போது உதவாது. அதனால் தீமைதான் விளையும்.

"கடைசியில் ஒரு அபாயம் உள. இந்த நீர்திருத்தம் முடிவில் பலனற்றதாய்விடும். கோவிலில் பூஜைகள் கடப்பதற்கே கேடு ஏற் பட்டு இருதாப்பினருக்கும் நன்மை இட் டாது.

பெரும் பான்மையினர் அபிப்பிராயத்தை மதிக்காமலிருக்கையில் அதற்கு மதிப்பு இருப்பது போல் காட்டிக்கொள்ளும் சட் டத்தை இயற்றி வைப்பானேன்?

ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி

ஆலயப்பிரவேச விஷயமாக டெல்லி இந் திய சட்டசபை காங்கிரஸ் கட்சியின் உபத் தலைவரும், பிரபல காங்கிரஸ் வாதியுமான ஸ்ரீ S. சத்தியமூர்த்தியின் அபிப்பிராயமாவது:—

"பொதுஜன வாக்கெடுக்கவேண்டும்".

டாக்டர் ஸர். P. S. சிவஸ்வாமி அய்யர்.

மாஜி சென்னை மகாண அரசாங்கத்தின் மந்திராலோசனசபை மெம்பரும், பிரபல மிதவாதக் கக்ஷித்தலைவருமான டாக்டர்ஸர். P.S. சிவஸ்வாமி அய்யர், K.C.I.E., K.C.S.I. D. Lit. ஆலயப்பிரவேசச் சட்ட விஷய மாய் பெங்களூரிலிருந்து எழுதுவதாவது :—

"பொதுஜன அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளவேண்டும். இச்சட்டத்தில் கண் டுள்ள ஷரத்துக்கள் மிகுந்த ஆட்சேபத்திற் கிடமானவை. ஹிந்து பக்தர்களில் பெரும் பாலோர் இஷ்டப்படும் பக்ஷத்தில் ஆஸ்தி கரவிடர்களுக்கு ஆலயங்களைத் திறந்து

"சுதேசமித்திரன் எச்சரிக்கை"

சென்னை 'சுதேசமித்திரன்' தமிழ் தினசரி 1939ஹி ஆகஸ்டுமீ 3உ 'ஆலயப்பிரவேச மசோதா' என்ற தலைப்பின்கீழ் எழுதிய தலையங்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக் கிறது:—

"சட்டத்தை மீறுவதன் பலாபலன்கள் இன்னவையென்று அவர்களுக்குத் தெரிக் திருத்தும் வேண்டுமென்றே அவ்விதம் செய்தவர்களோப்பாதுகாப்பதற்காக தொட ராதொழிச் சட்டம் இயற்றிவைப்பது எவ்வித்த்திலும் நியாயமாகுமா?

"சட்டத்தை மீறி நடத்துகொள்ளுகிறவர் களே இவ்விதம் பாதுகாத்துவிடுவதாயின், அதற்கு முடிவுகாலம் தான் எது?

"அதற்கு எல்லையை யார் தான் ஏற்படுத் துவது?

"சன்மார்க்கத்தை ஓட்டி ஆதிக்கக்கூடிய காரியத்தைச் செய்தவர்களையும் சட்டப் பொறுப்பிலிருந்து பாதுகாப்பது உசித மில்லை. அவ்விதம் செய்தால் சட்டத்தி னிடத்தில் பொது ஜனங்களுக்குத் தன் மதிப்பு இருக்குமா? அதனால் எத்தனை விப ரீதம் ஏற்படுமென்று சொல்லவும் வேண்டு மோ?

"பஞ்சப் பிரதேசங்களை எடுத்துக்கொள் ளுவோம். அங்கு உணவுப்பொருள்களுக் காக ஜனங்கள் கலகம் செய்கிறார்களென்று வைத்துக்கொள்ளுவோம். அவர்களைப் பாதுகாப்பதற்காக தொடாதொழிச் சட்டம் இயற்றிவைப்பது நியாயமாகுமோ?

"தேசத்தின் சான பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்களை ஆகர்ஷிக் கும் சக்திவாய்ந்த ஆலயங்கள் இருந்து [illegible] இப்பொழுது குரு [illegible] ஏற்படவேண்டியிருக்கிறது. [illegible] பிரதம மந்திரியை அவசரப்பட வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்!

பண்ருட்டி

"அவசரச்சட்டம் கண்டிக்கப்பட்டது"

திருவதிகை என்னும் கேஷத்திரத்தில் ஸ்ரீ வீரட்டேஸ்வரர் ஆலயத்தின் முன் 2-8-39 புதன்கிழமை மாலை 6மணிக்கு ஸ்ரீகுமாரசாமி தம்பிரான் அவர்கள் அக்ராஸனத்தின் கீழ் ஒர்பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல கிரா மங்களிலிருந்து ஏராளமாய் ஜனங்கள் கூடி னர்கள்.

அந்த சமயம் திருப்பராப்புலியூர் ஸ்ரீ வி. ஈ. சடகோபாசாரியார் ஸ்ரீமான் P. துரைசாமி அய்யங்கார், ஸ்ரீK.V. நாராயணசாமி அய்யர், ஆகியோர் ஆலயப்பிரசத்தைக் கண்டித்தும் அதனால் ஏற்பட்டிருக்கும் அவசர பாது காப்பு சட்டத்தை கண்டித்தும் பேசினர்கள்.

அவசரசட்டத்தை கண்டித்து நிறைவேற் றப்பட்டு தீர்மானங்களின் கலை மேல் அதி காரிகளுக்கு அனுப்புவதென்று தீர்மானிக் கப்பட்டது. (ஒ. கி.)

விடலாமென்பது எனது அபிப்பிராயம். இப்போது இருக்கும் அனுஷ்டானம் என்ன என்பது ஆலய அதிகாரிகளுக்குத் தெரியும். சட்ட மூலமாக அலை மாற்றப் படும் வரை அவற்றின்படி நடத்துகொள்ள அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அறிக்கை

நிருவெல்வேலி, ஸ்ரீரங்கம், காரைக்குடி, சென்னை, ஆழ்வார்திருநகரி, திருச்சி முதலிய இடங்களில் கண்டனக்கூட்டங்கள் நடை பெற்றன. விவரம் அடுத்த வாரம்.

(ஆ. ஆ. க.)

பெரியோர் பதில் தருக!

(ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணி அய்யர், சென்னை.)

என்னே உலக இயற்கை! ஈசன் செயலோ? வினையின் விளைவோ? ஈசன் செயலில், பரபட்சம் ஏது? வினையின் பயனுபின், யாரை கோவது?

எல்லா உயிரும் ஈசுவர அம்சம். இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன் கோயில்; இக்கிலேயில், ஒருவன் சிவப்பு, ஒருவன் கறுப்பு, ஒருவன் குட்டை, ஒருவன் கெட்டை! ஒருவன் பொட்டை! ஒருவன் பலவான், ஒருவன் சோனி! ஒருவன் அழகன்! ஒருவன் குரூபி!

ஒருவன் சீமான், ஒருவன் ஏழை! ஒருவன் சுகவாசி! ஒருவன் துக்கி! ஒருவன் நிடகரத்தின், ஒருவன் கோயாளி! ஒருவன் லேவாதேவிக்காரன். ஒருவன் கடன்காரன். ஒருவன் பிச்சைபுகி! ஒருவன் போகி! ஒருவன் யோகி!

ஒருவன் மேதை. ஒருவன் பேதை. ஒருவன் புலவன். ஒருவன் மடையன். ஒருவன் உழைப்பாளி. ஒருவன் சோம்பேறி. ஒருவன் நீசன். ஒருவன் கோழை. ஒருவன் சதுரன். ஒருவன் ஊமை. ஒருவன் பாக்கியவான். ஒருவன் துரப்பாக்கியவான். ஒருவன் பிதர. ஒருவன் மலடன்! ஒருவன் உலகப்பிரசித்தன். ஒருவன் அசமதேயன். ஒருவன் வயிரூர உண்போன். ஒருவன் வயிற்று வளக்கான்! ஒருவன் வாகனத்தில். ஒருவன் கல்லாடையில். ஒருவன் நல்லவன். ஒருவன் கெட்டவன். ஒருவன் உத்தமன். ஒருவன் சழக்கன். ஒருவன் சன்மார்க்கன். ஒருவன் களிமகன்;

ஒருவன் ஊதாரி ஒருவன் கருமி! ஒருவன் பக்தன் ஒருவன் பாஷண்டி! ஒருவன் [illegible] ஒருவன் தாழ்ந்தோன். ஒருவன் ஐமானன் ஒருவன் வேலைக்காரன்! ஒருவன் அதிகாரி. ஒருவன் சேவகன்!

கையிலே ஐந்து விரல்! ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வு! ஒன்றில்லையாயினும் உருவில் யாரிபெரியன் என்று விரல்கள் சண்டை போட்டன. இக்கதை பிரசித்தம்.

கைகளிலே ஒன்று வலது கை. ஒன்று இடது கை. ஒன்று உணவு கொள்ள. ஒன்று ஈனவேலை புரிய! வலது கைக்கே வளமை அதிகம். இடது கைக்கோ குறைவு! ஒரு கை முழம் போடாது, இருகையும் வேண்டும். வலதுகையால் கொடுத்தால் ஏற்படும் மரியாதை. இடது கையாலோ அவமரியாதை!

உடலில்ஒவ்வோர் அங்கத்திற்கும் ஓரொரு குறிப்பிட்ட வேலை. ஒன்றின் வேலையை மற்றொன்று செய்யமுடியாது செய்யினும் சீராய் இராது. உடலின் உச்சியிலே தலை; அடியிலே பாதம்!

உலகிலே ஒரு தேசம் உயர்வுகொண்டது பல தேசங்களோக்கட்டியாள்கின்றது. சிங்காதம் செய்கிறது. மற்றொன்று கட்டுப்பட்டு கவலைகொண்டு, கருத்தழிந்து தீர்கெட்டு இன்னுபின்னமெய்நிச் சிறுமைக்கு ஆளாகின்றது. மேனுட்டாரின் வார்த்தை வேதவாக்கு. கீழ்நாட்டாரின் வார்த்தை கீழ்மை உறுகிறது. வெள்ளையர் உயர்வு. கருப்பர் தாழ்வு!

பணம்பந்தியிலே. குலம் குப்பையிலே! கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும், சேற்றில் தாமரை முளைக்கும்! இளமையில் அழகு, முதுமையில் விசாரம், வாயில் எச்சில் அதிலிருந்தவரும் வார்த்தைக்கு மதிப்பு!

ஒரு சமயம் கோடை ஒரு சமயம் மாரி! ஒருவனுக்கு சாத்வீக உணவு. ஒருவனுக்கு மாமிச உணவு! ஒருவனுக்கு ஒன்று நல்லது; அதுவே ஒருவனுக்குக் கெட்டது!

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீ வத்ஸ. வே. ஸோ. சர்மா, சென்னை)

காங்கிரஸிற்கு நேர் விரோதம்! சென்னை அவஸர்ச் சட்ட நிமித்தம் கவர்னரைச் சரண் புகுந்தது கண்யமான வழியல்ல. தேசிய ஸபை கொள்கைகளுக்கு முற்றிலும்மாறனது. அதன் கௌரவத்திற்கே ஹானியைத் தருவது.

ஒரு தலைப்பக்ஷ பத்திரிகை! தங்களுக்குப் பிடிக்காத விஷயத்தைப் பிரசுரியாமலிருப்பதை விட்டு நிறுத்துக்கூறவும் தேசிய பத்திரிகைகள் துணிந்துவிட்டன. மதுரை ஆலயப் பிரவேச விஷயமாக ஸத்யத்திற்கு மாறுகவே எல்லா தினசரிகளும் எழுதுகின்றன.

ஆவேசமா தோத்து கோயா? ஆலயப் பிரவேசம் காட்டுத் தீபோல் பறவுகிறதே என ஸ்ரத்தக்கள் அஞ்சவேண்டாம். அதிசீக்கிறத்திலிது மறைந்துவிடும். பஞ்சமரும் வாரீர், காமும் போகோம். பின்னர் ஸம்ரோக்ஷணம் செய்து ஆலயம் ஒழுங்காகும்.

இதேப்ராசாரம்! ஸ்ரீ சங்கர மடத்திலும் மாம்பலத்திலும் புராணப்ரசாரம் செய்யப் போவதெல்லாம் கம்மையறியாமல் இதே விஷயம் கூறப்படுகிறது. பல ஸாதகக்கள் கண்ணீர் சொறிகின்றனர்.

ஒரேபத்திரிகை! சென்னையில் தார்மிக ஹிந்து. குடாத்தையில் நமது ஆர்யதர்மம். இவ்விரண்டேயல்ல வழியைக் காட்டி அதர்மத்தைக்கண்டிப்பது. மற்றவை கண்மூடிபல்லாண்டு பாடுகின்றன.

வேறுவிஷயம் வேண்டாம்! இச்சமரத்தம ஒழியுமவரை. கமதப்த்திரிகை பலவதை யிலிதை கண்டித்து மக்களுக்கு ஊக்கத்தை அளிக்கவேண்டும். மற்ற விஷயங்களில் மிகச் சுருக்க வேண்டும்.

ப்ரசாரம் வேண்டும்! கடுப்பக்கத்தில் பார்டர் கட்டி ஆலயத்தைக்கெடுத்து இன்று இத்தனை காளாகிறதென பெரும் எழுத்தில் பிசுரிக்க வேண்டும்.

ஒருவன் ஆசைக்காரன்; ஒருவன் நிம்மதி உள்ளவன்! பரனுக்குச்சர்க்கரை, மோருக்கு உப்பு!

தங்கம் விலையதிகம், இரும்பு விலை கம்மி. மோரும் பாலும் இருக்கவிடத்தில் உயர்வு பெறும்; நிலைதவறின் ஈனமுறும். புஸ்தகம் பொன்னுடன் சேரும்; மனிதரின் ஸகம் குப்பையில் குவியும்! பசு பரிசுத்தம்; நாய் அசுத்தம். குழைக்குக் கொம்பில்லை; மாட்டுக்கு உண்டு. ஆடும் பசுவும் புல் தின்னும்; புலியும் சிங்கமும் மாமிசம் புசிக்கும். ஜிலிக்கும் பாம்புக்கும் பகை!

அண்ணியிடம் பக்தி, மனையிடம் காதல்! பெரியோரிடம் மதிப்பு, சிறியோரிடம் வெறுப்பு. பழம் இனிக்கும். பிஞ்சு துவர்க்கும், மிளகாய் உரைக்கும். வாழை இனிக்கும். தாயும் பிள்ளையும் ஆயினும், வாயும் வயிறும் வேறு.

என்னே! என்னே!! உலக இயற்கை!!! மக்கள் அனைவரும் ஈசன் மக்கள் அன்றோ? மானிடரிலே வேற்றுமை என்? ரூட்டு சமத்வ வாதிகள் விடைதருக!

ஆலயப்பிரவேசம்

(ஸ்ரீ V. பஞ்சாபகேசய்யர், சேங்காலிபுரம்.)

ஹிந்து ஆலயங்களோ யதொரு பாருபாடு அல்லது ஒழுங்கு முறையின்றி எல்லோருக்கும் நிறைத்து விடவேண்டுமென்று வாதித்துக் கஷ்டப்படுவோர்களின் கோக்கத்தில் எத்?? உண்மையான ஹிந்துவுக்கும் அனுதாபமிராமலிருக்க முடியாது. உலகத்தில் தற்காலம் ஒவ்வொரு சமூகமும் அதனதனே பெருமை படுத்திக்கொண்டுவாழபெருமுயற்சியெடுத்து வருகிறது. அது போலவே ஹிந்து சமூகமும், தன்னைக் குறைத்துக் கொள்ளாமல் அதாவது ஹிந்து மதத்திலிருப்பவர்கள் வேறு மதத்தில் போய் சேர்ந்து சங்கியைக் குறைத்துக் கொண்டு விடாமல் காக்க வேண்டுமென்று விரும்புவது இயல்பேயாகும். ஆனல் இதற்காக செய்யப்படும் முயற்சிகள் சரியான பலனைக்கொடுக்க கூடியதாயும் உலகத்தாரெல்லோரும் ஆச்சரியப்படும் விதமாய் பிராசீன காலத்தோடு வேரூன்றிப் போயிருக்கும் அதன் பெருமையைக் குறைத்து விடாதவைகளாயுமிருக்க வேண்டும்.

சமீபத்தில் தென்னிந்தியாவில் நடத்தப்பட்டிருக்கும் ஆலயப்பிரவேசங்கள் ஹிந்து மதத்தின் கன்மையைக் கோரும் எந்த புத்தியுள்ள மனிதனையும் நிடுக்கிடச் செய்யாமலிருது. எனினில் இம்மாதிரி "ஸாஹஸ" கிருத்தியங்களை அதிகாரவர்க்கத்தைக்கு வெளியேயுள்ளோர் எவரும் எதிர்க்கவில்லை. தற்காலம் சென்னை அரசாங்கத்தில் தலைமை வகிக்கும் ஸ்ரீமான் ஆச்சாரியார் மகாபுத்தி சாலி என்று பெயர் வாங்கியவர். ஹிந்து மதத்தின் பெருமையை அறிந்தவர். சாஸ்திரங்களையும் படித்த பகவத் கீதை உபந்யாஸங்களும்செலலாம வியாக்யானங்களும் எழுதியிருக்கிறார். மலையாள ஆலயப்பிரவேச சட்டவிவாதத்தில் இவர் கடந்து கொண்ட மாதிரியிலிருந்து "கோவில்களின் புராதன புனிதத்துவத்தை" இவர் காக்கவிரும்பு கிறரென்றும், ஆனல் காங்கிரவின் "ஆலயப் பிரவேசக்கட்டளை"யைக்கண்டித் தடமாடு கிறரென்றும் நினைக்க வேண்டியிருந்தது. மேலும் நாளடையில் ஆலயங்களின் பெருமையைக் குறைக்கா வண்ணம் காங்கிரவின் கொள்கையைக்கூட இவர் மாற்றி விடமுயற் சிப்பாரென்று சிலர் எதிர்பார்த்திருந்தார்கள். சமீபத்தில் நடந்த காரியங்களால் எல்லோரும் ஏமாற்றமேயடைந்தார்கள்.

மலையாள ஆலயப்பிரவேச சட்டத்தில் கோவிலுக்குப் பேவோர்களிடம் வோட்டு மூலம் அனுமதி பெற்றால் தீண்டாதாரை கோவிலினுள் விடலாமென்று விதி செய்தார். அதிகாரச் செல்வாக்கைக்கொண்டு பிரசாரம் செய்யாமல் நடுநிலைமையான முறையில் இம்மாதிரி அனுமதி பெற்ற அனுமதி பெறப்பட்ட கோயில் தீண்டாதாருக்கு திறந்து விடுவது அநியாயமென்று சொல்ல ஒருவரு இடமிருது. ஆனல் புராதனமாக ஒரு அல்லது சிலவகுப்பாருக்கென்று, அவர்களாலேயே அல்லது அரசர்களாலேயோ அல்லது தர்மவான்களாலேயோ மிகுந்த நிரவியங்களைக் கொடுத்து ஏற்படுத்தப்பட்டு, வெகு காலமாக அதே வழியாய் நடந்து ன்றிப்பட்டுப்போன ஒரு புனிதமான ன்தாபனத்தை, அவைகளை ஏற்படுத்தியவர்கள் இல்லாத பின்னேறு காலத்தில், அவர்கள் அபிப்பிராயத்துக்கு விரோதமாக அதைச் செய்யலாம் என்று வோட்டு எடுப்பது நியாயமா வென்பது வேறு பிரச்சனை.

தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க

437

ஆலயப்பிரவேசம்

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

இப்போது நடத்தப்படும் ஆலயப்பிரவேசக்கிளர்ச்சி கோயிலில் அதாவது கல்லில் தெய்வமிருக்கிறதென்று கம்பதவர்களாலேயே நிரம்பியிருக்கிறது. அம்மாதிரி நம்பிக்கையுடன் கோயிலில் பேய் சுவாமி தரிசனம் செய்வதை ஒரு நித்திய கடமையாகக் கொண்ட எந்த ஹிந்துவும் அவன் பிறுமணனுயினும் ஹரிஜனமாயினும் அந்த முயற்சியை வெறுக்கவே செய்வான். தெய்வத்தின் உண்மையான தத்துவத்தை யறிந்து கொண்டு விட்ட ஞானிகளுக்காகக் கோயில்கள் ஏற்படுத்தப்படவில்லை. இன்னும் தெய்வமேயில்லை யென்று கொள்கை கொண்ட இயற்கை தத்துவ வாதிகள் அல்லது நாஸ்திகர்களுக்காக ஏற்படுத்தப் படவில்லை. ஸ்ரீமான்கள் காந்திஜீயும்,ஆச்சாரியாரும்தெய்வத்தை உண்டென்று ஒப்புக்கொள்வோர்கள். ஆனல் கோவில்களில் கல்லில் தெய்வமிருக்கிறதென்று நம்பி கோவில்களில் போய் வழிபடுவோர்களைக் காட்டிலும் இன்னும் மேலான ஸ்திதியில் தெய்வபக்தியுள்ளவர்களென்று கூடச்சொல்லலாம். அவர்களுக்கு கோயில்களுக்குப் போய்த்தானுக வேண்டுமென்பதில்லை. இருந்த விடத்திலேயே தெய்வ சான்னித்தியத்தை அடையக் கூடிய மனோநிலை கொண்டவர்கள். ஸ்ரீமான் காந்திஜீ தினம் குறிப்பிட்ட வேளைகளில் ஈசுவரப் பிரார்த்தனை செய்து கொண்டுதான் இருக்கிறார். ஆனல் அவர் அதிகமாக கோயிலுக்குப்போய் சுவாமிதரிசனம் செய்ததில்லை. இப்படிப் பட்டவர்களால், கோயிலுக்கே மதிப்புக் கொடாத சில அரசியல் வியாபகர்களை நிருப்திப்படுத்தவோ அல்லது தங்களுடைய தீர்க்கலோசனைத் தன்மையின்மையோ, கோவில்களில் தெய்வமிருக்கிறதென்று நம்பி வழி படுவோர்களின் கொள்கைகளை நின்னபின்னப்படுத்தி நிதறடிப்பதால் ஹிந்து மதத்திற்கு நன்மை தேடுவதாகாது.

ஹிந்து மதத்தில் எந்த ஜாதியாருக்கும் கோயிலில்லாமலில்லை. "கோயிலில்லாவூரில் குடியிருக்கவேண்டா மென்பது" முதுமொழி. கிராமத்தினும் அங்குள்ளவர்களின் சமயத்துக்குத் தகுந்தபடி எல்லா வகுப்பாரும் கோவில்களை ஏற்படுத்திக் கொண்டு வழி பட்டுத்தான் வருகிறார்கள். ஹரிஜனங்களென்று தற்காலம் சொல்லப்படுவோர் தங்கள் வழிபடும் கோயில்களிலுள்ள தெய்வத்தக்கு வருஷமொரு முறை யாவது மிகுந்த உற்சாகத்துடன் உத்ஸவம் செய்துகொண்டு வருவதை இன்னமும் கிராமங்களில் பார்க்கலாம். ஜாதி ஹிந்துக்கள் என்று சொல்லப்படுவோர்களின் சைவமதத்தை யனுசரிப்போர்கள் சிவன் கோயிலையும் வைஷ்ணவமதத்தையவலம்பிப்போர் விஷ்ணு கோயிலையும் ஏற்படுத்திக்கொண்டு வழிபட்டால் மற்றவர்கள் அவரவர் நம்பிக்கைக்கும் தக்கபடி தனித்தனி கோவில்களை ஏற்படுத்திக் கொண்டு வழிபட்டு நிருப்தியுடன் வாழ்ந்து வருகிறார்கள். ஒரு சமயத்தில் வழிபடும் கோயிலில் மற்ற சமயத்தார் பிரவேசிக்கதபடி ஹிந்து மதத்தின் பிராசீன ஏற்பாடு மிகவும் ஒழுங்கான முறையில் ஏற்படுத்தப்பட்டு செவ்வனே நடத்து வந்து ன்றிப்பட்டிருக்கிறது. இம்மாதிரி முறையில்லாவிட்டால், இந்தியாவில் முக்கியமாய் தென்னிந்தியாவில், உலகெங்கும் காணமுடியாத ஆச்சர்யபடத் தகுந்த சித்திர வேலைப்பாடுகளமைந்த பற்பலவிதமான கோயில்களையும், அவை அரசாங்க ஆதரவில்லாமல் இதுவரை செவ்வனே பாரமரிக்கப்பட்டு வந்திருப்பதையும் நாம் கண்டு பெருமை கொண்டிருக்க முடியாது. கேரில் கண்ட ஒரு அனுபவத்தை இங்கு நிஷ்டாந்தமாகக் குறிப்பிடத் தோன்றுகிறது.

ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயமுள்ள தேவஸ்தானத்தில் பூஜை நடக்கும் சமயம் வைஷ்ணவ ரல்லாதோரும் பொழி பிரபந்தம் சேவிக்கலாம்என்று தாக்கள். அச்சமயம் அக்கோயிலின் வழக்கத்திற்கு மாறுத ஒரு ஸ்மார்த்த பிராமணர் அங்கு போய்விட்டார். உடனே அங்குள்ளவர்கள் இவரை ஒரு நீண்டகாலர் பிரவேசித்தது மாதிரி கண்டித்தனர். பிரவேசித்தவர் அந்த சமயம் அதை அமானமாய் கருதியபோதிலும், பிறகு அக்கோயிலின் வழக்கத்திற்கு, தான்போனது தெரியாத தனத்தாலென்று வருந்தினர். இவருக்கு ஆசாரங்களில் அதிகாரமிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். இவரை அதிலும் ஒரு வைதீக பிராமணரை அக்கோயிலினுள் விடாததற்காக உடனே எல்லாக் கோயில்களிலும் எல்லோருக்கும் போகவேண்டுமென்றும் சட்டம் செய்து விடுவது இக்கோயில்களுக்கும் மதத்திற்கும் நன்மை செய்ததாகுமா? இதே மாதிரி கிராமங்களில் அவரவர் தெய்வங்களை அவரவர் வழிபடும்போது மற்றவர்கள் அதில் பிரவேசிப்பதை விரும்பமாட்டார்கள். பிரவேசிக்கவும் மாட்டார்கள். இந்த முறையால்தான் எல்லோரும் நிருப்தியாயும் சகோதரமயமும் வாழமுடிகிறது. இது நியாயமானதும் உயர்ந்ததுமான முறையல்லவா? "எல்லா மனிதர்களும் ஒரே மாதிரிதான்." "எல்லோரிடமும் ஒரே ஈசுவர்தான் வசிக்கிறார்" என்ற வேதாந்த தத்துவத்தை மிகவும் லிதமாய் உலக வாழ்க்கையில் புகவிட்டால் எல்லாம் குட்டிச்சுவராய் போய்விடாதா? இக்கக் கொள்கையை அனுசரித்து ஒரு நியாயம் வழங்கும் ஜட்ஜியின் ஆசனத்தில் ஒரு வழிப்போக்கன் உட்கார்ந்து தான் தீர்ப்புச்சொல்லுகிறேனென்றால் எந்த அரசாங்கமாவது "கடைசி முடிவில் எல்லாம் ஒன்றதானே" என்று சும்மாயிருந்து விடுமா?

(தொடரும்)

ஆலயப்பிரவேசக் கண்டனம்

கடலூர்

"முறை ஜபம்"

தென்னாற்காடு ஜில்லா ஸனாதன தர்மப் பிரசாக சபையின் ஆதரவில் "முறை ஜபம்" 2—8—39 முதல் ஸ்ரீ கடலூர் திருக்கோவிலில் நடந்துவருகிறது. 40 தினங்கள் தொடர்ந்து ஜபம் நடக்கும். ரதவீதிகளில் தினசரி பஜனே கோஷ்டி பிரசாரம் செய்து வருகிறது. நில்கியில் எல்லா வகுப்பினரும் ஆலயப்பிரவேசத்துக்கு எதிராக இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ. நி.)

கடலூரில் மாபெருங்கூட்டம்

2—3—39 மாலை நிருப்பாப்புலியூர் ஸ்ரீ பாடலீஸ்வரர் கோவில் முன்பக்கம் ஒரு மாபெருங்கூட்டம் கூடிற்று.

ஸ்ரீ C. R. ஸ்ருஷ்ணமாசாரியர் தலைமை வஹித்தார்

ஸ்ரீமான்கள் சடகோபாசாரியார், ரகுபதி சாஸ்திரியார், துரைசாமி ஐயங்கார் முதலியவர்கள் பேசினர்கள்.

ஆலயப்பிரவேசத்தை எதிர்த்து ஸனாதனிகள் கடகெங்கும் பிரசாரம் செய்யவேண்டு

மென்று தலைவர் பாவரையும் கேட்டுக்கொண்டார்.

ஆலயப்பிரவேசச்சட்டத்தைக் கண்டித்து ஏகமனதுடன் தீர்மானம் நிறைவேற்யது. (ஒ.நி.)

பேரூர்.

"ஜெயக்கோடி நாட்டுவோம்"

கோவை ஸ்ரீ பேரூர் பட்டீஸ்வரர் ஆலயத்தில் அத்தமீமி ஆதித்திராவிடர்கள் உள்ளே பிரவேசிக்கப்போவதாக ஒர் வதந்தி எங்கும் உலாவியது.

இதனே அறிந்த ஆஸ்திகர்கள் ஆயிரக்கணக்கில் 2—8—39 மாலை பேரூர் கோவில் முன் கூடினர்கள்.

ஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் "ஆதித்திராவிடர்களும் ஆலயப்பிரவேசமும்" என்னும் பொருட்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

"அஹிம்சா தர்மமாயிய சத்யாக்கிரகத்தை கைக்கொண்டு வெற்றிபெற்று முடிவில் ஜயக்கொடியை நாட்டுவோம்".....என்று கூறினர். அதை ஆயிரக்கணக்கான ஜனங்களும் ஆதரித்து ஜே. கோஷம் செய்தனர். (ஒ.நி.)

ஸ்ரீரங்கம்

"உபயங்களை நிறுத்துக"

ஸ்ரீரங்கம் ஸ்ரீ வானமாமலைமடத்தின் முன் பக்கத்தில் 2—8—39 மாலை ஒரு மாபெருங் கூட்டம் கூடிற்று. ஏராளமாய் ஆஸ்திகர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

மாஜி டெப்டி கலெக்டர் ராவ்சாஹேப் ஸ்ரீ எஸ். நரசிம்ம ஐயங்கார் தலைமை வஹித்தும் ஸ்ரீ ஸ்ரீனிவாஸாசார் ஸ்வாமி அவர்கள் காங்கிரஸ் மந்திரி சபையைக் கண்டித்துப் பேசினர். வக்கீல் ஸ்ரீ எஸ். கஸ்தூரிரங்கசாரியாரால் பிரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீ ஆறுமுகம் பிள்ளையினுல் (முனுஸீபல் அங்கத்தினர் & பஞ்சாயத்து கோர்ட் தலைவர்) ஆதரிக்கப்பட்டு கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேற்யது:—

"ஆலயப்பிரவேசச்சட்டம் ஹிந்துக்களின் உரிமைகளுக்கு விரோதமாயும், கெடுதலை உண்டுபண்ணுகிறதாயும், ஒவ்வொரு கோயிலிலும்உத்ஸவங்கள் ஹிந்துசாஸ்திரம் ஆகமம் முதலியவைகளில் பூர்ண நம்பிக்கையுள்ள ஸனாதனிகளிடமிருந்து உபயோகமான நன்கொடை பெற்றுத் தான் நடந்து வருகிறதென்றும், அப்படி உபயத்திற்குப் பணம்கொடுத்த நடத்தும் ஒவ்வொரு உபயக்காரரும் எக்தெந்தக்கோயில்களில் ஹரிஜனங்கள் தழைத்துவிட்டதாகச் சொல்லப்படுகிறதோ ஆங்காங்கு சம்ப்ரோக்ஷணம், புண்யாவசனங்கள், சாஸ்திரப்படி செய்யும் வரையில் தங்களுடைய உபயங்களை நிறுத்திவிட வேண்டுமென்றும்.

ஒவ்வொரு ஹிந்துவும், "தன்னுயிரன்ன வரை இக்க பெருங் கஷ்ட நசையிலிருந்து இந்த கெட்ட கட்டுப் பாடான எல்லா வழிகளிலும் அஹிம்சா மார்க்கத்திலும் தமிர்த்தக்கொள்ளப் பிரயத்தனம் எடுத்துக்கொள்ளுவதாக பிரதிக்ஞை செய்துகொள்ள வேண்டுமென்றும்".....தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானங்கள் தந்தி மூலம் எல்லா அதிகாரிகளுக்கும் தலைவர் அனுப்ப வேண்டுமென்று முடிவு செய்யப்ப[illegible]

(ஒ.நி.)

ஆலயப்பிரவேசக் கண்டனம்

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

விரோதமாக புரட்சி இயக்கத்தில் ஈடுபடுவோர்களை அடக்குவதின் பொருட்டு ஏற்பட்டதோ, அல்லது சட்டதிட்டங்களை மீறி கடக்க (ரவீன சீர்திருத்தக்காரர்) அதைத் தடுப்பவர்களை (சவர்ணர்களை) சிக்ஷிப்பதற்காக ஏற்பட்டதோ என்று ஆலோசிக்க வேணுமாய் கருணை கவர்மெண்டாரை இம்மஹா சபை கேட்டுக்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது. (ஒ. கி.)

திருச்சினுப்பள்ளி

1939-ம் வரு ஆகஸ்டு மாதம் 3-ம்தேதி திருச்சி மலைக்கோட்டையை சுற்றி இருக்கும் ஆஸ்திகர்கள் கூட்டம் ஆண்டாளதெரு விற்கும் ஸ்ரீ அத்வைத சபையில் பிரம்மஸ்ரீ பகவதம் மஹாதேவ சாஸ்திரிகள் தலைமையின்கீழ் நடந்தது.

தலைவரும் பிரம்மஸ்ரீ போலகம் சுந்தரேஸ்வர சாஸ்திரிகளும் ஆகமபடிக்கும் எப்படி என்தாபிக்கப்பட்டிருக்கிறது, நான்கு வர்ணத்தாருக்கும்அது எப்படிஅதிகாரவஸ்யம் என்பதைப்பற்றி எடுத்தச்சொல்லி அடியில் கண்ட தீர்மானங்கள் கூட்டத்தாரால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன:—

1. சாஸ்திரங்கள் தவிர ஹிந்து மதம் என்பது தனியாக ஒன்று கிடையாது என்றும், ஹரிஜன ஆலயப்பிரவேசமானது சாஸ்திர விரோதமாகயிருப்பதாலும் ஒவ்வொரு மதத்திற்கும் அந்த மதத்திற்குறிய ஆலயங்களே விளங்காகிற்கும் உயிர்நிலை என்பது எல்லோருக்குப் தெரித்தாகையால், ஹரிஜன ஆலயப்பிரவேசமானது ஹிந்து மதத்தை அழிப்பதற்கு என்றும்,

இந்தக்கூட்டம் எகோபித்து தீர்மானிக்கிறது.

2. மதுரையில் தர்மிகப் பிரபுக்களான ராவ்சாஹிப் ஸ்ரீ கோபேசய்யருடையவும், அட்வகேட்ஸ்ரீ கே.ஆர். வெங்கட்ட ரமய்யருடையவும் மற்றுமுள்ள ஆஸ்திகர்களுடையவும் வீரத்தியாகத்தையும், அவர்களுடைய சத்யம் அஹிம்ஸை பூர்வகமான வழிகளையும் இக்கூட்டம் அத்யந்தம் மெச்சுவதுடன் அவர்கள் ஷ்டி தர்மயுத்தத்தில் ஜயம் பெற வேண்டி ஈசுவரனை கலியிலும் மகியிலும் சற்று கேமாவது ஒவ்வொருவரும் நியானிக்க வேண்டியதென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

3. ஆலயப்பிரவேச விஷயமாக கவர்ன்மெண்டார் கொண்டுவரஇருக்கும் அவசர சட்டமும், ஆச்சரியகரமான மசோதாவும் கவர்ன்மெண்டரின் உதவியை கொண்டு மதுரையில் உள்ளூர் காங்கிரஸ்காரர்கள் செய்யும் அடாத செய்கைகளும் சத்பத்திற்கும் அஹிம்சைக்கும் குடியரசுக்கொள்கைகளுக்கும், காங்கிரஸ் கொள்கைகளுக்கும், எல்லா வற்றிற்கும் அணுவளவுகூட பொருத்தாதகாகையால் இவைகளை இத்தக்கூட்டம் பலமாக கண்டிக்கிறது.

4. ஹரிஜன ஆலயப்பிரவேசத்தினுல் இப்பொழுது ஆஸ்திகர்களாக சிவதரிசனம்செய்துவரும் ஜனங்களுக்கு ஆலய தரிசனம் இல்லாமற்போகுமானதால், திருச்சி நகர வாசிகளாகிய நாங்கள் திருச்சி ஸ்ரீமாதாபூதேச்வர தேவஸ்தானடிரஸ்டியையும், ஸ்ரீகாகதர் தேவஸ்தான டிரஸ்டியையும், இந்த அநிக்காமான ஹரிஜன ஆலயபிரவேசத்திற்கு இடங்கொடுக்கக் கூடாதென்று கேட்டுக் கொள்ளுகிறோம். (ஒ. கி.)

நாகூர்

பிராமண சங்கம்

மதுரை ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரேசுவர் முதலிய கோவில்களில் ஹரிஜனங்களை ரகஸ்யமாக புகவிட்டுகோவில்களின் புனிதத்தன்மையை கெடுத்ததை கண்டிப்பதற்காகவும், சமீபத்தில் இவற்றை உத்தேசித்திருக்கும் ஆலயப் பிரவேச பாதுகாப்பு சட்டத்தை கண்டிக்கவும் இச் சங்கத்தின் விசேஷக் கூட்டம் 25—7—39உ இரவு மணி 8-க்கு சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. தலைவர் ஸ்ரீ A. S. ராமஸாமி அய்யர் அவர்கள் கூட்டத்தின் சோகத்தையும் நமது கடமையையும் எடுத்துக்கூறி "மதுரையில் நடந்துள்ள அக்கிரமமான மிகவும் கொடியதாகவிருப்பதாலும் இது விஷயமாய் தார்மிகர்கள் கலந்து யோசித்து தீவ்ரமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டியது அத்யாவசியமென்றும், அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தலைவர் ஸ்ரீ N. நடேசய்யரவர்கள் எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது எடுத்து வரும் சீர்மையான தும் சட்டரீதியுமான முயற்சியைப் பாராட்டியும்" பேசினார்கள். பின்னர்கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன:—

"மதுரை ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரேசுவர் ஆலயத்தில் நடந்த அக்கிரமமான ஹரிஜன ஆலயப்பிரவேசத்தையும், ஆலயப்பிரவேச பாதுகாப்பு சட்டத்தையும் இச் சங்கம் பலமாக கண்டிக்கிறதுடன் தமிழ் நாட்டில் இருக்கும் எல்லா கோவில்களின் மானேஜர் தர்மகர்த்தாக்கள், டிரஸ்டிகள் யாவரும் ஹரிஜன ஆலயப்பிரவேசத்தை அனுமதிக்கக்கூடாதென அவர்களைக் கேட்டுக்கொள்கிறது."

"மதுரை ஆலயப்பிரவேச விஷயமாக முன்னணியிலிருந்து மகத்தான தேசீயல் செய்துவரும் ராவ்சாகேப் ஸ்ரீ N. நடேசய்யர் அவர்களின் அரிய செயல்களை இச்சங்கம் மிகவும் பாராட்டுவதுடன். இதற்காகரியங்களில் அன்னவர்களுக்கு பூர்ண ஜெயமும், ஸர்வஜன க்ஷேமத்திற்கும் நம் ஸநாதனத்திற்கும் படுபட்டுழைத்து அரும்பணியாற்றிவரும் அன்னவர்களுக்கு மேன் மேலும் தன் பணியை தீரமாய்ச் செய்தலா நீர்க்காயுளோடு கூடிய நிடகாத்ர சரீரத்தையும் சர்வசம்பத்தையும் மங்களத்தையும் கொடுத்தருள எல்லாம்வல்ல கடவுளை இச் சங்கம் பிரார்த்திக்கின்றது."

பின்னர் இச்சங்கக் காரியதரிசி ஸ்ரீ N. நாராயணசாமி அய்யர் அவர்கள் "பிரம்மண்யம்" என்னும் விஷயத்தைப்பற்றி சொற்பொழிவாற்றினார்கள். அக்கிராஸனர் முடிவுரையுடன் கூட்டம் இரவு மணி 1-30-க்கு இனிது முடிந்தது. (க. கி.)

திப்பரஜபுரம்

ஸ்ரீ பிரும்ம வித்யாஸபா :—29-7-39உ ஆதிதரை ஸ்ரீ லக்ஷ்மிகாக்ஷ சர்மாவினுல் "கண்ணப்பநாயனார்" சரித்திரம் உபன்யஸிக்கப்பட்டது. பிறகு "ஆலயப்பிரவேசக் கண்டன" விஷயத்தைப்பற்றி சிவரித்தார். நிரிசங்கு சண்டாளத்வத்தை அடைந்து விஸ்வாமித்ரருடைய தபோமஹிமையினுல் ஸ்வர்க்கத்தை அடைந்தாலும் எப்படி கீழே தள்ளப்பட்டு இரண்டுகெட்டவனுக ஆனதேபோகாரம் கவர்ன்மெண்டின் பக்ச பலத்தின் பேரில் ஹரிஜனங்களுக்கு சலுகை காண்பிப்பதுபோல் கடத்துவந்தாலும் கடிய சிக்ஷரம் விபரீதமான முடிவை அடைவார்கள் என்பது நிண்ணம் என்று சொல்லிமுடித்தார். பிறகு உள்ளூர் ஸ்ரீ நாராயணச்சௌதிகளும் ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகளும் முறையே மிடி கண்டன நீர்மான விஷயத்தைப்பற்றி பேசினர்கள். பிறகு ஒரு கண்டனதீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது:—

"ஹரிஜனங்களே ஆலயப்பிரவேசம் செய்வதற்கு தூண்டுதல் செய்வதும், ஒத்துமையாயிருப்பதும், நியாயவிரோதமானது என்று ஸ்பஷ்டமாயிருக்கும் தற்காலமுள்ள, தொன்று தொட்டு அனுஷ்டானத்திலுள்ள சட்டத்தை புதியதொரு அவசர சட்டத்தை ஏற்படுத்தி கபடமாக பாதுகாப்பு அளிக்கிறதையும்" இக்தக் கூட்டம் கண்டிக்கிறது". (க.கி.)

நிறுவையாறு

இவ்வூர் ஆஸ்திகர்களனைவரும் ஆலயப்பிரவேசத்தை கண்டிக்கவும், இவ்வூரில் அந்த நீசகார்யம் நடைபெறுமவிருக்கவும் ஸ்ரீ பஞ்சநதீச்வரஸ்வாமியின் ஆலயத்தில் ப்ரதிதினமும் மஹான்யாஸபூர்வகம் ஏகாதசருத்ர பாராயணம் நடந்திவருகின்றனர். இதற்கு ஊக்கத்துடன் உழைப்பவர்களுள் வக்கில் மீனுக்ஷிசுந்தரம் அய்யாவர்களும் ஒருவர். புதுக்கோட்டை மாஜி ஸப்ரிஜிஸ்டிரார் ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகள் கிரத்தையும் போற்றத் தக்கதாகும்.

கோவிலதிகாரிகளும் இத்தவிஷயத்தில் மிகவும் ஆதரவளித்து வருகின்றனர். ருக்மஜுஸ்ஸாம வேதங்கள் வைதிக்களால் மிகுந்த பக்தி சிரத்தையுடன் தை ஆலயத்தில் பாராயணம் செய்யப்பட்டு வருகின்றன. லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் ஸ்ரீ தர்மஸம்வர்த்தனீ ஸன்னிதானத்தில் நடத்தவதாய் உத்தேசித்திருக்கிறது. இவ்விஷயத்தைப் பற்றி ஸ்ரீ ஸ்ரீ தர்மபுரம் பண்டாரசந்நிதிகள் விசேஷமாக கவனித்துத் தக்கதுசெயும்படி ஆஸ்திகர்கள் சார்பாக ஒரு மஹஜர் ஸன்னிதானத்திற்கு அனுப்பி இருக்கிறது. (க.கி

ஸ்ரீருத்ர பாராயணம்.

தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தை தெய்வசக்தியுடன் எதிர்த்துப்போராட வேண்டி ஸ்ரீ ராமனுதன்வாமி சன்னதியில் பல ப்ரம்மஜ்ஞைதமர்கள் ஒன்றுகூடி மகன்யாச ஸ்ரீ ஏகாத சருத்ரபாராயணம் கும்பாபிஷேகம் ஸஹஸ்ரசாமர்ச்சனை செய்து எல்லோரும் மிக பக்தியுடன் ஆண்டவனை வழிப்படும் காலம் 31-7-39 சோமவாரம் முதல் ஆரம்பமாகி கடைபெற்று வருகிறது. (ஒ. கி.)

குடந்தை ஸனாதன வாலிபர் கூட்டம்.

குடந்தை ஸனாதன வாலிபர் கூட்டம் சென்ற வாரம் கடைபெற்றது. அக்நிஹோத்ரம் தாத்தாச்சாரியார், வாஜபேயம் ஸ்ரீனிவாஸதாத்தாச்சார், டி. சாரங்கபாணிஅய்யங்கார் ,வழுத்தூர் கனபாடி ராஜகோபாலாச்சார், ஸ்ரீ சேஷாச்சார், முதலியவர்கள் ஸுலயப்பிரவேசத்தை கண்டித்துப் பேசினர்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம் "கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L.,

அவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

தபால் செலவு வேறு [விலை அணு 0 8 0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

மதுரை மகாநாடு

வரவேற்புக் கமிட்டித் தலைவர் சொற்பொழிவு

(சென்றவாரத் தொடர்ச்சி)

தீண்டாதார் ஆலயப்பிரவேச ஸ்ரீர்சிக்கு சாதகமாக கருத்தறியமல் சில உதாரணங்கள் சொல்லுகிறார்கள். ராமானுஜர் என்ற உடையவரால் திருமண் தரித்து வைஷ்ணவர் என்று சொல்லிக்கொள்ளும் எவரும் பகவான் சன்னிதானத்தில் வித்தியாசமுடையவர் அல்லவென்று கூறப்பட்டதாக சொல்லுகிறார்கள். அந்த உடையவரின் கருத்து என்ன? திருமந்திரார்த்தம் உபதேசிக்கப்பட்டு, பஞ்ச சம்ஸ்காரம் பெற்று, திருமண் தரித்து வைஷ்ணவத்தின் கருத்து அறிந்து, க்ஞானம் பெற்ற எவரும் பகவான் சன்னிதியில் சமம் என்றுரே ஒழிய, உதாரணித்தமாகவோ. வேஷமாகவோ மற்ற விதமாகவோ ஓரிடத்தில் சம உரிமையைக் கொண்டாடியோ ஒருமண் தரித்து வரும் யாவரையும் அவர் குறித்தாரில்லை.

நக்தனர், சிதம்பர தரிசனம் கிடைக்கப் பெற்றார் என்றால் தன்னுடைய பிறவிக் குணங்களைப் போக்கி, ஆத்மலீலை பரிபக்குவ மடைந்து, ஜோதி ஸ்வரூபத்தின் தன்மையை உணர்ந்து, அந்த நிலையைப்பெற்றுரே ஒழிய, நிடும்பிரவேசமாக, நான்கு கோபுரங்களுடனும், திருமதில் உள்ளதும், ஆயிரக்கால்மண்டபம், முதலியவற்றுல் சூழப்பட்டும், அர்த்த மண்டபம், கற்பக்ரிகம், இவற்றுள் அடைபட்டும், பூஜைக்கென்று ஆகம விதிப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதிக்கப்பட்டுவரும் அந்தபிம்பத்தின் வெளிக்தோற்ற உருவைக்கண்டு மட்டும் தரிசிக்கவோ மயங்கவோ கோரியவரல்ல. எந்த நிலைமையிலும், நான் அந்த ஆலயத்தின் உள்ளமேசென்று, தான் அந்த பிம்பத்தின் தரிசனத்தை அடைய கோரியவருமல்ல. அவர் கோரிய தரிசனம் வேறு. ஆலயப்பரவசத்தின் மூல முமல்ல.

மற்றும் நிருப்பாணழ்வார் ஸ்ரீரங்காதீன அடைய விரும்பியதும், தான் ஆத்ம நிலையின் பரிபக்குவத்தாலேயே ஒழிய, சப்த ப்ரகாரமத்தியில் சயனித்த படுக்கும், அந்த பிம்பத்தை தர்சிக்கவல்ல. அவரும் எந்த ஆலயப் பிரவேசத்தையும் கோரியவரல்ல. இவர்கள் ஆத்ம நிலையை அடைந்தார்கள். கடவுளின் அருள் பெற்றார்கள். சாயுஜ்யத்தை அடைந்தார்கள்.

தற்கால ஆலயப்பிரவேச ஸ்ரர்ச்சிக்காரர்கள் இப்பேற்பட்ட கோக்கத்தடனேயா பாடுபடுகிறார்கள்?

விசித்த கோக்கத்துடன், ஒரு மலையைக் கண்டும், கோபுரத்தைக்கண்டும், ஒரு மரத்தைக் கண்டும் ஒரு புஷ்கரணிடைக்கண்டும், சமுத்திரத்தைக் கண்டும், கடவுளே பரிபூரணமாக எவ்விதமான சலனமில்லாமல் ஒரு மையுடன் நியானித்து, மன நிம்மதியடைந்து, திருப்தியடைந்து வரும் ஒருவனை, கடவுள் எதோ ஒரு குறுகிய கட்டிடத்திற்குள் மட்டும் இருக்கிறார், அவ்விடத்தில்தான் நீ அவரை வழிபடவேண்டும் அங்குதான் உனக்கு மோட்சமுண்டு. அதை இசை வருப்பினர் உன்னை உனைச் செய்யதும், உன்னை கட்டிக்திற்குள் புகவிடாமலும், தன்னைத் தழ்த்தியும் ஏமாற்றியும் வருகிறார்கள் என்றும் அவனுக்கு சொல்லி விகல்ப புத்தியையும், அவனுக்கு ஊட்டி அவன் நிர்மலத்தியையும் மனஅமைதியையும் மாற்றுவது அந்தோ! எவ்வளவு பரிதாபம்.

இவ்வாறு ஆலயமென்பது, ஒரு ஆகமப் படிக்கும், ஸ்ரன்திபடிக்கும், ஒரு சார்பின ருக்காகமட்டும் உத்தேசிக்கப்பட்டதென்றும், அதன்மூலம் அந்த சார்பினருக்கே உரியதென்றும் நன்கு விளங்கவில்லையா, பொது ஜனங்களாலேயே ஒரு ராஜாங்கமும் ஒரு அரசனும் போஷிக்கப்பட்டதென்றுல் சம உரிமையுடன் அரண்மனைக்குள் யாவரும் பிரவேசிக்க விடப்படுகிறார்களோ. சம்பந்தபடாத ஒருவருக்கு அனுவசியமாக ஒரு உணர்ச்சியை ஸ்ரப்பிவிடுவது அவருக்கும் மற்றவருக்கும் அனர்த்தத்திற்கும் கேட்டுக்கும் அல்லவா.

ஆலயப்பிரவேசத்திற்கும், ஆலயத்தில் தொழுவதற்கும் யாவருக்கும் சம உரிமை புண்டேல் இந்த ஆலத்தில் இருக்கும் பிம்பத்தை தொடுவதற்கும் தம்தம் மனோபிஷ்டபடிக்கு அதை பூஜிப்பதற்கும் தாமே எவ்விதமான நிவேதனம் பூஜை முதலியன செய்து கொள்ளுவதற்கும் யாவருக்கும் உரிமையில்லையே. அதற்கென்று ஒரு பிராமணன் எதற்கு! அதிலும் பட்டர் என்ற ஒருவர்க்கள் என்றும் ஒருவனே வெளிநாட்டிலிருந்து வரவழைக்கவும் வேண்டுமா. அவன் இங்கு வந்து பிரானத்ரிபாசம் செய்யவேண்டுமா? இதன் மூலம் வரைமுறையன்னியில் எவரும் தம்தம் இஷ்டப்படி ஆகமப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் எந்த பிம்பத்தையும் தொடவும் கோக்கப்படி பூஜிக்கவும் அது சப்தாதமான மற்ற காரியங்களை தாமே செய்துகொள்ளவும், அதன்மூலம் ஆகமமே அழியவும் கோவில் கோவிலாக இல்லாத போகவும் கேக்கூடிய நிலையும் வந்துவிட்டது. இந்த ஆலயப்பிரவேச பக்தியெபற்ற ஒருவர் "பெண்பிள்ளை சமிக்கு ஆண்பிள்ளைப் பட்டர் பூஜையர்" என்று கேட்டால் இவர் மனப்பான்மை எப்படி.

தற்காலத்தில் கோவில்களை பொருட்காட்சி சாலைகளாகவும், உத்தியோக வேட்டை ம், வயிற்றுப் பிழைப்புக்கும் ஏற்ற சாலைகளாகவும் அவர் அவர் மனோபிஷ்டத்தை நிறை வேற்றிக்கொள்ளும் வகைகளும், பலவிதமான கேளிக்கைகளுக்கும் இருப்பிடமாகவும் ஆக்கிகொண்டு வருவதும் மிகவும் பரிதபிக்கதக்கதே மற்றும் ஆகமத்தினும் சாஸ்திரத்திரும் நம்பிக்கையில்லாதவரும், பற்று இல்லாதவரும், அவற்றை துஷ்டிக்கதவரும், ஆகம பாடங்களையும் மற்றவையும் உண்டுபண்ணிவேண்டுமென்று சொற்பொழிவு ஆற்றுவதும் விந்தையே! இப்போது ஏற்பட்டிருக்கும் கொருக்கடியை முன்னிட்டு இவ்வளவு பேசவேண்டியதாயிற்று. அதற்கு தாங்கள் மன்னிப்பைக் கோருகிறேன். இதுவிஷயமாய் பெரு முயற்சியெடுத்துக்கொள்ளும் நமது அத்யக்ஷர் பிரஹ்மஸ்ரீ ராவ்சாகேப் கடேசய்யர் அவர்களுக்கு நாம் எவ்விதம் கடமைப்பட்டு இருக்கிறோமென்பது நான் சொல்லவேண்டிய தில்லை.

இப்போது கடைபெற்றிருக்கும் ஆலயப் பிரவேசமானது பொதுஜனங்கள் யாவராலும் கோவில்கள் தாமே நிறக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதா, அல்லது சம்மத்தப்பட்டவர்களின் சூழ்ச்சியின் பலனுகவும் முன்னமேயே ஏற்பாடு செய்துகொண்ட தீர்மானத்தின்படிக்கோ, கோவில்களை நிர்வஹிப்பதற்கென்று நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் உடன்தை சூழ்ச்சியினுலோ, அரசாங்கத்தாரின் செல்வாக்கும், ஆக்ஞைக்கும், கோவில் அதிகாரிகளின் அதிகாரத்திற்கும் நிர்பந்தத்திற்கும், எந்த நிலைமையிலும் தம்மை கெடுத்துவிட கூடுமென்ற பயத்திற்கும் உட்பட்டும், விடுமென்ற பயத்தாலும், கோவிலுக்குள் வேலை பார்க்கும் பட்டர் பரிசாரகர் முதலியோரின், மௌக நிலையாலும், அவர்கள் மனக்கொந்தப்புடன் சம்மதியில்லாமல் ஒத்துழைத்தின் பயனுய் ஏற்படவில்லையா? இது விஷயமாய் கஜினி முகம்மதுவின் ஆலயப்பிரவேசமும் ஔரங்கசீப்பின் மதப்பிரசாரமும் ஞாபகப்படுத்தத்தக்கது. தற்கால ஆலயபிரவேச பிரசாரம் ரயில்வே கம்பெனியார் "அர்த்தோதயத்திற்கு வேதாரண்யம் ராமேஸ்வரம் முதலிய இடங்கள் சென்று நோட்ச ங்கள்" என்று விளம்பரப்படுத்துவதற்கொப்பல்லவா?

அடுத்தபடியாக தாழ்த்தப் பட்டோர் என்று கூறப்படுவோரின் நிலைமை என்ன?

ஸனுதன தர்மத்தில் வர்ணாச்ரம தர்ம விதிகளில் எவ்வித ஜாதி பேதங்கள் இருப்பினும், எவரும் தாழ்த்தப்பட்டோராக கருதப்படவுமில்லை. அப்படி எவரும் தாழ்த்தப்படவுமில்லை. அவர் அவருக்கென்று சில வேஷ்க ளையும், ஜனுயங்களையும் ஏற்படுத்தி ஒருவரன்றி மற்றொருவருக்கு இன்றியமையாத நிலைமையில், எத்தவிதமான லௌகீக வைதிக காரியங்களும், சகல குடும்ப விஷயங்களும் சமுதாய விஷயங்களும், அரசாங்க விஷயங்களும், ஒற்றுமையுடன் கடைபெறவேண்டிய நிலைமையில் வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருகின்றன. இதன் மூலம் துப்புறவான ஐக்கிய பாவம் நிரக்தரமாக இருக்கது. தற்காலம் "Co-operation" என்று சொல்லிக் கொள்ளும் ஐக்கிய பாவத்தை முன் நம் முதாதைகளின் ஐக்கிய பாவத்துடன் ஒரும்பாலும் கடன் வாங்குவதற்கு மட்டுமே. நம் முன்னோரின் ஐக்கிய பாவத்தையும் அதன் நிலைமையைப்பற்றியும் விரித்தக்கூறவும், புகழ்ந்து கூறவும் காலம் போதாது.

வர்ணாச்ரம தர்மத்தில், வகுப்புகளின் மூலம், உயர்வு தாழ்வு என்றதனுலோ, அதன் மூலம் நிலை இப்போது கூறப்படும் தாழ்த்தப்பட்டவர் என்ற நிலைமையில், தாழ்மைப் படுத்தவா? இப்போது ஒரு சமூகத்திலோ, அரசாங்கத்திலோ அவர் அவர் தொழிலுக்கும் வேலைக்குப் தக்கபடி ஏற்றக் தாழ்வதன் இருக்கவில்லையா? அரசனின் னத்திற்கும், மக்திரி பிரதானிகள் மரியாதைக்கும் வித்தியாசம் இருக்கவில்லையா? நமது உடலிலுள்ள அங்கங்களின் நிலைமையென்ன? இதனுல், ஏதோ ஒரு காலத்தில் பிற மதத்தின் ஒருவர் தம் மத பிரசாரத்திற்காக பிற மரை இழிவு படுத்தவதின் மூலம் தம் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள இடப்பட்ட இப்பெயரை கம்மவரும் கடன் வாங்கிக் கொள்ளுவதும் பரிதாபமே. உண்மையில் எவரும் தாழ்த்தப்படவில்லை, விகல்பத்தை உண்டுபண்ணுவதற்கு என்று ஏற்பட்ட வேஷ மப்பிரசாரத்தின் பயன் இது.

ஸனுதன தர்மத்தின் கொள்கைகளுக்கு மாறுபாடாக ஏற்பட்ட சில காரியங்களின் மூலமாக தற்காலம் வேலையில்லாத்திண்டாட்டமும், ஏற்பட்டு இருக்கிறது. மன அமைதி கெட்டும், போதுமென்ற திருப்தியும் கெட்டும், பொருமையும் உண்டாகி பல விதத்திலும், சீர்கேடும் உண்டாகிவிட்டது. நம் காட்டின் பெருமை கெட்டும், சீர்மை, மேன்மை, சமத்துவம் என்ற பேலிப்பெறுமைகள்தான் தாண்டவமாடிக்கொண்டிருக்கின்றன தீண்டாமையும், லிலக்கும் பஞ்சமர்களை மட்டும் உத்தேசித்து ஏற்படுத்தப்பட்ட தல்ல. ஏற்ற விதிகளின் மூலம், சில காரியங்களுக்காகவும், சில செய்கைகளுக்காகவும் யாவருக்கும் ஏற்படுத்தப்பட்டதாகும். பிரமணரும் தீண்டாதார் உண்டு., தற்காலம் தீண்டாமை ஒழித்தவரிலும். அதற்கு பிரசாரம் செய்பவரிலும், அதற்கு முற்பட்டவரிலும் எத்தனைபேர் தீண்டாமை அறவே ஒழித்த அத்தீண்டாதாரிடம் தரும் கலப்பு மணம் செய்துகொண்டிருக்கிறார்கள்? "மனிதர் யாவரும் ஒன்று. எவருக்கும் பிறப்பின்

(தொடர்ச்சி 12-பக்கம் பார்க்க)

215294

அநவசியமாக ஏன்
அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்தரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது.

அமிர்தாஞ்ஜனம்

(11-பக்கம் தொடர்ச்சி)

மூலம் எவ்விதமான உரிமையும் இல்லை" யென்று தம் பெருமைத் தன் மகனுக்கல்லாது எத்தனைபேர் பிறருக்கு பகுந்து கொடுத்திட்டனர்?

நம் நாட்டில் பெண்களின் நிலைமையே இவற்றினும் பரிதாபகரமான நிலைமையிலிருக்கிறது. சமூக சீர்திருத்தம், சமத்வம், சம உரிமை என்ற போலி ஆனந்தத்திலும், நவீன நாகரீகத்திலும் மூழ்க ஆரம்பித்து விட்டார்கள். தம்முடைய தர்மத்தில் அவர்களுக்கு தகுந்த உரிமை கொடுத்திருக்கவில்லையா? உண்மை சமத்வநிலைமை இருக்கவில்லையா? ஸ்திரீ ஜாதியென்ற பெயரின் அர்த்தமென்ன? தம்பதி சித்தமல்லாத எந்த லௌதீக வைதீக தர்மத்தையும் பலனற்ற தென்பதின் கருத்தென்ன? இதை முன்னிட்டு ஒரு புருஷனுக்கு தாரமில்லாத நிலையில் புனர்விவாகம் அனுமதிக்கப்பட்டதல்லவா? (ஆனால் தன்னுடைய நிடசித்தத்தையும் மற்றும் பரசாதத்தையும் ஆத்ம சொரூப விருத்தியையும் உத்தேசித்தும் தான் பெற்ற குழந்தைகளின் பரிபாலனத்தையும், தன்னுடைய புனர் விவாகத்தின் மூலம் ஏற்படும் இந்த குழந்தைகளுக்குள் சச்சரவும் வேறுபாடும் ஏற்படாமலிக்கவும் குடும்ப ஐக்கியத்தையும் இன்னும் இது போன்ற இதர நன்மைகளை உத்தேசித்தும், ஈஸ்வர சிருஷ்டியில் ஸ்ரீலட்சணங்களை அனுசரித்தும் ஒரு பெண் விதவைக்கு மறுவிவாகம் வேண்டாதொழிக்கவில்லையா?)

நாளுக்குநாள் மாறிக்கொண்டிருக்கும் நவீனநாகரீகத்தின் பலனையும் அதன் கொடுமையையும் கவனியுங்கள். அதே மாதிரி அவர்கள் பயிலும் கல்வியும், கல்விச்சாலை கல்லூரிகளின் உபதேசங்களும் கேடு விளைவிக்கிற நிலைமையில் இருக்கின்றன.

தேவிருஷ்டியிலேயே ஆணுக்கும் பெண்ணுக்கும் எவ்விதமான பேதங்கள் இருக்கின்றனவென்றும், ஆண் பெண் இவற்றின் லக்ஷணங்களையும், கவனிக்கவேண்டியதை. பட்சிகளையும், மிருகங்களையும் சேடிகேடிகளையும் கவனித்தாலே நன்கு விளங்கும், மிருக ஜாதிகளில் சிம்மம், யானை, மான், மூதலிய வற்றையும் பட்சி ஜாதிகளில் மயில், சேவல், வான்கோழி, புறு, முதலியவற்றையும், அவற்றின் லட்சணங்களையும் பாருங்கள். அவற்றின் சகல நடைமுதலிய பாவனைகளையும் கவனியுங்கள். மேன்மை தாழ்மையுண்டென்று தெரிகிறதல்லவா? இதனால் இப்போது கூறப்பட்டு வருகிறபடி "தாழ்த்தப்பட்ட" நிலைமையா அவற்றிற்கு இருக்கிறது. பால்ய விவாக சட்டங்களையும் பால்ய விவாக நன்மை தீமைகளைப்பற்றியும் இவ்விடம் கூற இடமில்லை.

இது வரவேற்பு விண்ணப்பமே ஒழிய தலைவர் பிரசங்கமல்ல. இவற்றைப்பற்றி விவரிக்க நான் அருகனுமல்ல போக்கியத்தை உடையவனுமல்ல. அவசியத்தை முன்னிட்டு இங்கு சில விஷயங்களைமட்டுமே குறிப்பிட்டேன். விஷயங்கள் பல இருக்கின்றன.

ஆனால் தற்காலத்தில் ஸனாதன தர்மத்திற்கு இன்னல் ஏற்பட்டிருப்பதற்கு ஒரு வாறு காரணம் நம் கடவுடிக்கைகளும் பழக்க வழக்கங்களும் நம் நிலைகளையும், நம் ஆசார அனுஷ்டானங்களையும் கைதவற விடுவதுமே முக்கிய காரணம் என்று என் சிற்றறிவிற்குப் படுகிறது.

எந்த காரணத்தை முன்னிட்டும், நம் ஜீவனுத்தமாக எத்தொழிலைக் கைகொண்டாலும், நித்ய கர்மானுஷ்டானங்களையும் தேவதாராதனத்தையும் அவர் அவருக்கு ஏற்பட்டிருப்பது வேதம் ஒதுதல் மூலமாவது மற்றெந்த கர்ம மூலமாவது தெய்வத்யானம், பூஜை முதலிய தைக் கைவிடலாமோ. எந்தக் காரணத்தை முன்னிட்டும் தாம் தகாத எந்தக் காரியத்தையும் தமக்கு அடுக்காத எந்தத் தொழிலையும் செய்யலாமோ. இது விஷயமாயும் தகுந்த பிரசாரமும் அனுஷ்டிக்கவேண்டிய வழிகளைப் பற்றியும் சபையோர் கவனித்து தீர்மானிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

அவசியத்தை முன்னிட்டு எனக்கு இட்ட கட்டளையினின்றும் தவறி அதிகமாக பேசியதற்கு சபையோரின் மன்னிப்பை பிரார்த்திக்கிறேன்.

சபையை இனிது நடத்திவைக்கும்படி நமது அக்கிராசனரையும், மற்றும் கூடியிருக்கும் பெரியோரையும் அடியேன் பணிவுடன் கேட்டுக்கொள்வதோடு பகவானையும் நம் யாவருக்கும் கல்லறிவு கொடுத்து ஸனாதன தர்மத்தையும், அதன் பெருமைகளையும் விர்த்திசெய்யவும் அதன்மூலம் ஹிந்து சமூகத்திற்கே சௌகர்யமும், சமாதானமும், மன ஸந்தோஷமும் கொடுத்து இதர சரீரத்தையும் அருள்புரியுமாறும் பிரார்த்தித்து என் வந்தனோபசாரத்தை விண்ணப்பித்துக்கொண்டு இந்த ஸபையை நடத்திவைக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

ஏஜண்டுகள் தேவை.

"ஆர்ய தர்மம்" வரப்பத்திரிகையை தமிழ் நாட்டிலுள்ள பல கிராமங்களில் விற்பனை செய்ய ஊக்கமுள்ள ஏஜண்டுகள் உடனே தேவை. 25% கமிஷன் கொடுக்கப்படும். ஏஜண்டு நிபந்தனைகளுக்கு எழுதவும். மானேஜர், 'ஆர்யதர்மம்", கும்பகோணம்.

உங்கள் நாக்கை ஏமாற்றுதீர்கள்

சாதாரணமாக மனத்திற்காகத் தயாரிக்கப்படும் பெருங்காயம் பாதொன்றுக்கும் பிரயோசனப்படுவதில்லை. உங்கள் நாக்கை ஏமாற்றுகிறது. புத்திசாலிகள் தங்கள் உணவுப் பொருள்களை வாங்குவதில் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். அவர்கள் ஸயண்டிபிக் T. T. பெருங்காயத்தையே கேட்கிறார்கள். ஏனென்றால் அது நல்ல சரக்கு என்று அவர்களுக்குத் தெரியும். பதினாறு வருஷ ஆராய்ச்சியின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஸயண்டிபிக் T. T. பெருங்காயம் 20-20% அயக் சத்தினால் காப்பாற்றப்படுகிறது. அதற்கு நறுமணமும் நற்சுவையும் உண்டு.

ருசிகரமான சாப்பாட்டிற்கும் ஜீரணத்தை சுலபமாக்கவும்
பரிசுக் கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

ஒரு பவுண்டு ரூ. 1—14—0

ஸைன்டிபிக்
டி. டி
மிஸ்கி பெருங்காயம்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.


ಪುಸ್ತಕ

215295

REGD No.M. 2913. ARYADHARMAM TAMIL WEEKLY. Estd. 1915

ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்யஃ பரிபாலயந்தாம் ந்யாயேன மார்கேண மஹீம் மஹீஶாஃ ।
கோப்ராஹ்மணேப்யஶ்ஶுபமஸ்து நித்யம் லோகாஸமஸ்தாஸுகினோ பவந்து ॥

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விபரம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் பிரமாதி-ஹு ஆவணி-மீ 1உ 1939-ஹு ஆகஸ்டு-மீ 17உ | வா-33

கலம்பகம்

புதுவையில் ஸ்ரீ அரவிந்த கோஷ் அடிகளைத் தரிசிக்க வேண்டி ஹைதராபாத் சமஸ்தானத்து பிரதம மந்திரி மகாகனம் டாக்டர் ஸர் அக்பர் ஹைதரி தமது குடும்பத்துடன் 11 தேதி சென்னைக்கு வந்து புதுச்சேரிக்குச் சென்றார். கனம் ராஜாஜி முதலியவர்கள் ஸ்டேஷனுக்கு வந்திருந்து ஹைதரியை வரவேற்றார்கள். புதுவையில் அவர் ஒரு வாரம் தங்குவார்.

* * * * * *

திருத்தணி ஸ்ரீசுப்பிரமணிய ஸ்வாமிக்கு ஆடி கிருத்திகை உத்ஸவம் கண்கு கடை பெற்றது. பதினுயிரம் காவடிகள் சமர்ப்பிக்கப்பட்டன. இரண்டு லக்ஷம் பக்தர்கள் தரிசனம் செய்திருந்தார்கள்.

* * * * * *

"காங்கிரஸ் கவர்னர்களே ஸ்தம்பிக்கச் செய்து செயலற்றவர்களாக்கிவிட்டது. இனி கவர்னர் பதவிகளிருப்பது அனவசியம்" என்று டாக்டர் ஸர் கியாவுடன் ஆமத் காகபுரிக் கூட்டத்தில் 10 தேதி கூறினார்.

* * * * * *

ஜினிவா சர்வதேச சங்கத்துக்கு இந்தியா ஆண்டு தோறும் 10 லக்ஷ ரூபாய் கொடுத்து வந்தது. 1939ஹு டிசம்பர் மாதத்திலிருந்து இத்தத் தொகையில் 20 ஆயிரம் ரூபாய் குறைக்கப்படுமாம்.

* * * * * *

16 லக்ஷம் ரூபாய் பெறுமான தங்கம் 5-8-39 பம்பாயிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாயிற்று.

* * * * * *

சென்னை இந்து மத தேவஸ்தான பரிபாலன போர்டு ஆதிக்கத்தின் கீழ் 24,000 கோவில்களும் 400 மடங்களும் அடங்கி இருக்கின்றன.

குடந்தை அத்வைத சபை
45வது ஆண்டு கூட்டம் ஆரம்பம்

குடந்தை அத்வைதசபாவின் 45வது ஆண்டுவிழா 13-8-39 ஸ்ரீ சங்கமடத்தில் ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடாதிபதி தெகத்குரு ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் அவர்கள் முன்னிலையில் ஆரம்பமாயிற்று.

தமிழ் நாட்டின் பல வேறு பாகங்களிலிருந்து வித்வான்களும் பண்டிதர்களும் ஏராளமாய் விஜயம் செய்திருக்கிறார்கள். சபை ஒருவாரம் தொடர்ந்தடைக்கும்.

(நமது விஷேச நிருபர்)

கும்பகோணம் பாங்கி, லிமிடெட், கும்பகோணம்.

(1904-ஹு ஸ்தாபிக்கப்பட்டது)

கிளை ஆபீஸ்கள் :— மன்னார்குடி & நாகப்பட்டணம்.
ஸப் ஆபீஸ்கள் :— நன்னிலம் & அய்யம்பேட்டை.
உள்ளூர் ஸப் ஆபீஸ் :— யானையடிரோட்.

———: X :———

31—7—39-ல் கோஷ்பாரா கணக்கு.

மூலதனம், செல்லுகள்.	ரூ.	அ.	பை.	சொத்துக்கள், இருப்புகள்.	ரூ.	அ	பை.
1. மூலதனம் (வரவு வர்த பங்குத் தொகை	2,82,575	0	0	1. ஆபீஸ் சாமான்கள், கட்டிடங்கள், ஸ்தாவரங்கள்	61,788	5	5
2. சேமநிதிகள், கப்பு நிதிகள்	2,18,952	15	1	2. இன்வெஸ்டுமெண்டுகள் (சர்க்கார், ஸ்டேட், கடன் பத்திரங்கள், முதலியன,	2,83,071	0	2
3. தவணை, கடப்பு, சேவிங்ஸ் முதலிய டிபாஸிட்டுகள்	10,35,907	4	6	3. வரவேண்டிய கடன்கள், உண்டியல்கள், அதிக பத்தக்கள் உள்பட	10,66,120	5	8
4. இல்லரை இனங்கள்	21,279	10	11	4. மற்ற இனங்கள்	13,422	14	3
5. ஆதாயம்	14,725	14	10	5. இருப்பு, சொக்கமும் இதர பாங்கிகளிலும்	1,49,038	3	10
மொத்தம்	15,73,440	13	4	மொத்தம்	15,73,440	13	4

எஸ். மகாலிங்க அய்யர், பி.ஏ., பி.எல்.,
மானேஜிங் டைரக்டர்.

ஆலயப்பிரவேச அவசரச்சட்டம்

நாடெங்கும் கண்டிக்கப்பட்டது

தமிழ்நாட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களின் நடவடிக்கைகள்

திருவையார்

ஸ்ரீ பஞ்சநதீஸ்வர ஆலயத்தில்

"ருக்யஜுஸ் ஸாமவேத ஏகாதசருத்ர பாராயணம்"

தற்காலம் வர்ணாச்ரமத்திற்கு ஏற்பட்டிருக்கும் இடையூறை நிவர்த்திக்கும் பொருட்டு ஆன்மிக வைதிக சிரேஷ்டர்களால் சென்ற பதினேழு தினங்களாக மஹா பாராயணம் மிகவும் சிரத்தையுடனும் உத்ஸாகத்துடனும் நடக்க வருகிறது. 5—8—39-ல் ஸ்வாமி தர்சனத்திற்கு வந்த தேவகோட்டை வக்கீல் ஸ்ரீமான் எஸ். சுப்பிரமணிய அய்யர் மஹா பாராயணத்தில் கலந்து கொண்டார். அவ்வமயம் ஸ்ரீமான் மீனாக்ஷிஸுந்தரம் அய்யர் B. A., B. L. மதுரையில் நடந்த நிகழ்ச்சிகளை ஜனங்களுக்குத் தெரிவித்தார்.

"சென்ற ஜூலை 8-ந்தேதி முதல் இன்றைய தினம் வரையில் தாம் சேரும் நம்பிக்கை உள்ளவர்கள் மூலமாயும் தெரிந்துகொண்டதை மிகவும் தெளிவாகவும் நன்கு உபன்யஸித்தார். மதுரை ஆலயத்தில் தீண்டாதார் பிரவேசமானது சொம்பவும் கடுமையும், அநீதியையும் நடந்ததென்றும், பழக்கத்திற்கும் சாஸ்த்ரத்திற்கும் முரணுகடந்ததால் பட்டர்மார்கள் ஏகோபித்து பூஜை செய்யாமல் கோவிலைப் பூட்டிக்கொண்டு வெளியேறி விட்டார்களென்றும், அதன் பிறகு டிரஸ்டி வேறுபட்டர்களை வெளியூரிலிருந்து அழைத்துவந்து பலாத்காரமாக பூட்டை உடைத்து பூஜை நடத்தி வருகிறார்களென்றும், இப் பொழுது எற்கனவே போய்க்கொண்டிருந்த ஆன்மிகர்கள் யாவரும் போவதில்லையென்றும், யாத்ரீகர்களும் சில சுதேசர்களும் போய் வருவதாகவும். இந்த உண்மையை பத்திரிகைகளில் பேடுவதில்லையென்றும், மதுரையில் தீண்டாதார் ஆலயப்பிரவேசம் நடந்தது முதல் ஒவ்வொரு நாளும் பல இடங்களில் ஜனதைக் கூட்டங்கள் நடைபெறுகின் றனவென்றும், அதற்கு ஆபிரக்கணக்கான ஜனங்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டு தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தையும் அவரைச் சட்டத்தையும் கண்டிப்பதையும் கனம் ஸ்ரீ ராஜாஜி வந்த ஸமயத்தில் காங்கிரஸ்காரர்களால் கூட்டத்தில் அக்ரம அட்டழியங்கள் நடந்தனவென்றும், அதனால் ஜனதனிகள் காயமுற்றார்களென்றும், மேலும் மீடிகூட்டம் நடைபெறுதல் அதேக இடையூறுகள் செய்வார்களென்றும், ஜனதனிகள் கனம் ராஜாஜி பிரதம மந்திரிக்கு கருப்புக் கொடி காண்பித்தார்களென்றும், ஸ்வாமி தரிசனம் செய்யவேண்டுமென்றும், அவரவர்களுக்கு ஏற்பட்டபடி ஸ்வாமி தரிசனம் செய்யவேண்டுமென்றும், விசேஷமாய் நம் ஸ்திரீகளிடம் தான் தர்மம் இருக்கிறதென்றும், அவர்கள் மிகவும் சிரத்தையாய் இருக்கவேண்டுமென்றும்" உபன்யஸித்தார். அந்த ஸமயம், ஆஸ்திக, நாஸ்திக, லௌகிக, பரமார்த்திக, விருத்தர், ஸ்திரீகள் கூடியிருந்தார்கள். வந்தேமாதரத்துடன் கூட்டம் கலைந்தது. (தமது நிருபர்.)

தென்னூர்

தென்னூரிலும் மாலை தரசில்தார் ஸ்ரீ சி. என். ராமசேஷய்யர் தலைமையில் ஆலயப்பிரவேசக் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

திருச்சி

"மாதர் கூட்டம்"

30—7—39 திருச்சியில் ஸ்ரீமதி மங்களாம்பாள் தலைமையின் கீழ் ஆன்மிக ஹிந்து மாதர் கூட்டம் நடைபெற்றது.

"காங்கிரஸ் கக்ஷியால் நடத்தப்படும் ஹரிஜன ஆலயப்பிரவேச இயக்கத்தைக்கண்டித்தும், விலகிய மதுரை பட்டர்களைப்பாராட்டியும் மதப்பற்றுள்ள ஸ்திரீகள் அனைவரும் ஆலயப்பிரவேசத்தை எதிர்க்கவேண்டுமென்றும்" தீர்மானங்கள் நிறைவேறின.

(ந. நி.)

மற்றோருக் கூட்டம்

3—8—39 இரவு 7-30மணிக்கு திருச்சி நாகநாதஸ்வாமி கோயிலில் ஆலயப்பிரவேசத்தைக்கண்டிக்க, ஸ்ரீமஹாதேவ சாஸ்திரிகள் அக்ராஸனத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்ராஸனர் பேசிய பிறகு ஸ்ரீ போலகம் சுத்த சாஸ்திரிகள் விஸ்தாரமாய் சாஸ்திரப் பிரமாணங்கள் மூலம் ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்து உண்மையான மதத்தலைவர்களே மதத்தலைவர்களிடம் மதத்தை தெரிந்து கொள்ளவேண்டுமென்றும், ராஜ ஸ்ரீ யத்தில் பிள்ளைகளிடம் மதத்தை தெரிந்து கொள்ள வேண்டாமென்றும், யுவர்களுக்கு உபதேஸித்து முடித்தார்.

"ராவ் சாஹிப் ஸ்ரீ N. நடேசய்யர், ஸ்ரீ K. R. வெங்கட்ரமய்யர் முதலியவர்களே ஸ்திரமாய் நின்று போராடுவதற்காகப் பாராட்டியும், மதுரையில் 30—7—39 நடந்த கூட்டத்தில் காலிகள் செய்கையை கண்டித்தும், இத்தஸமயம் மடாதிபதிகள் தலையிட்டு இயக்கத்தை நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டும் ஆலயப்பிரவேச அவசரச்சட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

(க. கி.)

குடந்தை

அர்ச்சகர்கள் ஆக்ஷேபனை

கும்பகோணம் நிவாஸிகளாகிய, விஷ்ணு கோவில்கள், சிவன்கோவில்கள இவைகளில் பரம்பரையாக ஆராதனம் செய்து கொண்டு வரும் பட்டாசாரியர்களும் வைசாரியர்களும் ஒன்று சேர்ந்து 1939 ஆகஸ்டுமீ 6உ கூட்டமாய் கூடி நிறைவேற்றிய தீர்மானங்கள்:—

தற்காலம் சென்னை சட்டசபையில் நிறைவேறியிருக்கும் ஆலயப்பிரவேச தொடர்பான தொழிசட்டம் எங்கள் மதத்திற்கும், பூர்வாசார அனுஷ்டானங்களுக்கும் ஆகமஸித்திகளுக்கும் விருத்தமாக இருக்கிறது.

மேற்படி சட்டத்தின் தைர்யத்தினால் தீண்டாதார்கள் ஆலயங்களில் புகுந்து விட்டால் பிம்பத்திற்கு சக்திலோபம் ஏற்படும் என்று ஆகமசாஸ்திரங்கள் முறையிடுகின்றன. அவ்விதம் பிம்பசக்திக்கு லோபம் ஏற்பட்டால் ராஜாக்களுக்கும் பிரஜைகளுக்கும் க்ஷேமக்குறைவு ஏறபடுமாகையால் நாங்கள் மேற் சட்டத்தைக் கண்டிக்கிறோம்.

அரசாங்கம் மத விஷயங்களில் பிரவேசியாமல் இருப்பதாய் சொல்லியிருக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கு மேற் சட்டம் விரோதமாக இருக்கிறது.

இந்த சட்டத்தினால் ஏற்படக்கூடிய கெடுதிகளால் ஆலயங்களில் நித்யகைங்கர்ய பூஜைகளுக்கும் உத்ஸவங்களுக்கும் லோபம் ஏற்படுமென்று நாங்கள் உறுதியாய் சொல்லுகிறோம்.

மேலே சொன்ன காரணங்களால் மேன்மைதங்கிய சென்னை கவர்னர் அவர்களையும், மேன்மை தங்கிய ராஜப்ரதிநிதி அவர்களையும், பொது ஜனங்களின் அபிப்ராயத்திற்கு விரோதமாக சென்னை பிரதம மந்திரியால் கொண்டுவரப்பட்டு, ஒரு கக்ஷி நிர்பந்தத்திற்கு கட்டுப்பட்ட மெஜாரிடி மெம்பர்களால் தீர்மானித்திருக்கும் சட்டத்திற்கு அவர்களுடைய சம்மதத்தை தொடர்திருக்க வேண்டுமாய் கோரப்படுகிறது.

(நமது நிருபர்.)

ஸ்ரீபண்டார சன்னதி அவர்களுக்கு திருவையாறு ஆஸ்திகர்கள் வேண்டுகோள்.

தர்மபுரம் ஆதினம் ஸ்ரீலஸ்ரீ பண்டார சன்னதிகள் அவர்கள் சமூகத்துக்கு திருவையாறு க்ஷேத்ரவாஸிகளான மஹாஜனங்கள் செய்து கொள்ளும் விக்ஞாபனம்:—

"தற்காலம் நடைபெறும் ஹரிஜன ஆலயப் பிரவேசம் அவஸியமென்றும் அவ்விஷயத்தில் கோயில்களின் டிரஸ்டிகளும் பொது ஜனங்களும் ஒத்துழைக்க வேண்டுமென்றும், தீவிரமான பிரசாரங்கள் நடந்து வருகின்றன. மதுரை தஞ்சாவூர் முதலிய சில இடங்களில் டிரஸ்டிகளின் ஆதரவைப் பெற்று ஆலயப்பிரவேசம் நடந்தேறியதாகவும் தெரிகிறது. அவ்விதமே தங்கள் பரிபாலனத்திலுள்ளதும் தங்கள் ஆதீனத்துக்குட்பட்டதுமான ஸ்ரீஐயாறப்பன் அறம்வளர்த்த நாயகி இவர்கள திருக்கோயில்களையும் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடுமாறு அவ்விஷயத்தில் ஈடுபட்டவர்களிடமிருந்து பலமான தாண்டுதலோ, வேண்டுகோளோ, நிர்பந்தமோ தங்களுக்கு ஏற்பட்டு வாக்கூடும்.

பாடல்பெற்ற ஸ்தலங்களில் முதன்மையானதும் சைவசமயத்துக்கே ஆணிவேர் போன்றதுமான திருவையாற்றின் வாழ்வும் தாழ்வும் தங்கள் மனவுறுதியைப் பொறுத்திருக்கிறது. தங்கள் நிடமாக அனுமதி கொடுக்க மறுத்தால் வேறு யாரும் பலத்காரமாக ஹரிஜன ஆலயப்பிரவேசத்தை நடத்திவைக்க இயலாது. சைவாகமங்களை அடிப்படையாய்க்கொண்டு ஏற்பட்டிருக்கும் இக்கோயில்களே ஆகம விரோதமான செய்கைகளுக்குட்படுத்துவது சிவதீக்ஷை பெற்றவர்களுக்கு சம்மதப்படுமா? தாங்கள் இந்தத் தர்மஸ்தாபனத்துக்கு ரக்ஷகராயிருப்பதால் தர்மத்தைக் கேடின்றி காப்பற்றமாறு வேண்டுகிறோம்.

ஹரிஜன ஆலயப்பிரவேசம் சாஸ்திர விரோதமென்றும் நீதம பயக்குமென்றும் நாங்கள் மனப்பூர்ணமாய் நம்புகிறோம்.

ஆகையால் இதனடியிற் கையெழுத்திட்ட அனைவரும் ஹரிஜன ஆலயப்பிரவேசத்தைக் கண்டனம் செய்கிறோம்," என்று கூறி ஒரு மகஜர் அனுப்பி இருக்கிறார்கள். இதில் இதுவரை ஆயிரக்கணக்கில் ஆஸ்திகர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

(ஓ. கி.)

"வாக்காளர்கள் அடிமைகள் அல்ல"

அவர்கள் மந்திரிகளுக்கு எஜமானர்கள்

"சத்யம்—அஹிம்சை என்பதெல்லாம் ஒரே புரட்டு"

ஸ்ரீ கே. ஆர். வெங்கட்டராமய்யர் கர்ஜனை

சென்னையில் ஸ்வதனிகளின் மாபெருங்கூட்டம்

சென்னை திருவல்லிக்கேணி தவனேஸ்வர மண்டபத்தில் 5—8—39 மாலை ஒரு மாபெருங் கூட்டம் நடைபெற்றது. சுமார் 20,000 ஜனங்கள் கூடியிருந்தார்கள். ஆபிரக்கணக்கில் ஸ்திரீகளும் விஜயம் செய்திருந்தார்கள்.

மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீனிவாசய்யங்கார் தலைமை வஹித்தார்.

மதுரை பிரபல வக்கீல் ஸ்ரீமான் K. R. வெங்கட்டராமய்யர், "மதுரையில் நடந்த சம்பவங்கள்" என்னும் விஷயமாக ஒரு பிரசங்கம் செய்தார். பிரசங்கத்தை சென்னை வாசிகள் இமை கொட்டாது சப்தமின்றி பொறுமையுடன் கேட்டார்கள். ஸ்ரீ அய்யர் அவர்களுடைய சொற்பொழிவைக் கேட்ட ஆபிரக்கணக்கான மக்களுக்கு ஆத்திரம் காணப்பட்டது. பலர் வீறுகொண்டெழுந்தனர். ஸ்ரீவெங்கட்டராமய்யர் தமது பிரசங்கத்தில்:—

"மாதம் 75 ரூ சம்பளம் வாங்கிக்கொண்டு அடிமைகள்போல் நடந்துகொள்ளும் சட்டசபை மெம்பர்கள் போன்ற வாக்காளர் களை அடிமைகள் என்ற பிரதம மந்திரி நினைத்துக்கொண்டிருக்கிறார்போலும் வாக்காளர்கள் அவருக்கு எஜமானர்கள் என்பதை அவர் உணரவேண்டும்.

(மீண்டகாரகோஷம்.)

சத்யம், அஹிம்சை என்ற பெருமை அடித்துக்கொள்ளும் காங்கிரஸ் பொய் பிரசாரத்தாலும் பலத்தாலும் பல காரியங்களைச் செய்கின்றனர்.

ஆலயப்பிரவேச விஷயமாகப் பல விஷயங்கள் வெளிவந்திருக்கின்றன. "பொய் பிரசாரங்கள் நடைபெற்றன. "பட்டர்கள் அன்று ஹரிஜன்களுடன் சென்றார்கள்" என்று கூறுவது பொய். அந்தப்பட்டர்கள் யார்? அவர்கள் பெயரைச் சொல்லும்படிப் பகிரங்கமாய் ஸ்ரீ ஏ. வைத்தினதையரைக் கேட்கிறேன்.

தேர்தல் காலத்தில் ஸ்ரீ சத்யமூர்த்தியிடமிருந்து ஸ்ரீராஜகோபாலாச்சாரியார் பொறுப்பேற்றுக்கொண்ட காலத்தில், மத விஷயங்களில் குறுக்கிடுவதில்லை யென்றும், மதத்தை பாதுகாப்பதாயும் வாக்குறுதிகள் செய்திருக்கிறார்.

மதம் பாதுகாக்கப் படுமென்ற உறுதியின் பேரில் தான் ஸ்வதனிகள் தங்கள் ஓட்டுகளை காங்கிரசுக்குக் கொடுத்தார்கள்.

ஆலயப்பிரவேசம் விஷயமாக பள்ளர் களும், பறையர்களும் தங்களுக்கு இருக்கும் தடையை நீக்கிவிடவேண்டுமென்று கேட்கின்றார்களா? என்ன?

இது விஷயத்தில் அவர்கள் ஆசைகொள்ள வில்லை யென்று நிச்சயமாக நான் கூறுகிறேன். நாது பழக்க வழக்கங்கள் ஆயிரக் கணக்கான வருஷங்களாக இருந்து வருகின்றன. எத்தனையோ ஹிந்து ராஜாக்கள் இருந்து அவர்களை ஆண்டிருக்கின்றனர். முஸ்லீம்கள் ராஜ்யம் நடத்திவந்திருக்கிறார்கள். பிரிட்டிஷார் 200-ஐம் காலமாக ராஜ்யம் நடத்திவருகிறார்கள். எந்த ராஜ்யத்திலும் இது பற்றி ஒரு முணுமுணுப்புக்கூட இருந்ததில்லை என்று கூறிவிட்டு, "மதுரையில் நடந்த சம்பவங்களைப் பற்றிப் பிரஸ்தாபித்தார்.

தலைவர் ஸ்ரீ வி. வி. ஸ்ரீனிவாசய்யங்கார் தமது முடிவுரையில்:—

"நமது மதத்துக்கே—நமது தனிப்பட்ட சுதந்திரத்துக்கே ஆபத்தேற்பட்டிருக்கின்றது. தொன்று தொட்டு அனுஷ்டித்து வரும் சம்பிரதாயங்கள் மிகவும் ஆபத்தில் இருக்கின்றன.

"அரியல் கோக்கங்களைக் கொண்டுதான் இக் காரியங்களைச் செய்கிறார்களென்பதைப் பொது மக்கள் உணர வேண்டும்

.....என்று" கூறினர்.

சுதேசமித்திரன் வாரப்பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீமான் எஸ். லக்ஷ்மி நரசிம்மசாரியார் அவர்கள் வந்தேமாதரம் கூறியபின் கூட்டம் கலைந்தது.

(ஒரு விசேஷ நிருபர்)

ஆழ்வார் திருநகரி

"அதிகாரிகளுக்கு மகஜர்"

ஆழ்வார்திருநகரியில் சென்ற வியாழன் வெள்ளிக்கிழமைகளில் ஸ்ரீமத் ஆத்தான் ஸ்வாமிகள தலைமையில் "ஸ்வதனிகள் மகாநாடு" சிறப்பாக நடைபெற்றது.

திருநெல்வேலி வக்கீல் ஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஸ்ரீவைகுண்டம் வக்கீல் டி. எஸ். தாதாசாரியார், மேலகோட்டை திருநாராயணபுரம் இளைவலில் ஸ்ரீ சடகோபாசாரியார் முதலியோர் "ஆலயப் பிரவேசத்தை எதிர்த்துப் பிரசங்கம் செய்தார்.

ஏராளமாக ஸ்திரீகளும் வந்திருந்தனர். தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தை கண்டித்தும், யாரையும் ஒத்துழைத்து எவ்விதநியாகமும் செய்து இவ்விஷமக் கிளர்ச்சியை எதிர்க்கவேண்டுமெனவும் ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேதகவர்னர் கனம்பிரதமமந்திரி சென்னை தேவஸ்தான போர்டு, கோயில் எக்ஸிகூடிவ் ஆபீஸர் முதலியோர்களுக்கு ஆழ்வார்திருநகரியிலுள்ள பொது ஜனங்கள் சார்பாக ஆலயப்பிரவேசத்தை எதிர்ப்பதாகவும், தகவலின்றி சகல முறையில் எதாவது காரியம் நடந்தால் கோயில் நிர்வாக ஆபீஸரே அதன் பலனை அடையவேண்டுமென்றும், குறிப்பிட்டு ஏராளமான கையொப்பங்கள் கொண்டுள்ளமகஜர்கள் ஸ்வதனதர்ம சபா காரியதரிசியினுல் அனுப்பட்டிருக்கின்றன.

3—8—39ல் சென்னை சட்ட சபையில் ஆலயப்பிரவேச மசோதா ஆம்பர்தினத்தில் "கவர்னருக்கும் சட்டசபைக்கும் மசோதாவை ஆக்ஷேபிப்பதாகத் தந்தி" கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்படிக்கங்களில் எதிர்ப்பே பலமாயிருக்கிறது. நினசரி ஆழ்வார்திருநகரியில் மாட வீதியைச் சுற்றி ஹஜன்ஸமாஜ பாராயண கோஷ்டி ஊர்வலம் கடைபெற்று வருகிறது.

(க.கி.)

TEMPLE ENTRY BILL

Extracts from the speech of Hon. Mr. C. Rajagopalachariar, Premier at the Legislativs Council on the Temple Entry Bill. (From Hindu, Monday, August, 7, 1939.)

It may be argued that it (Temple Entry Bill) was all wrong irregular, unsystematic and unjust. Untouchability had been wrong irregular, unsystematic, and unjust. All these irregular and intolerant things could not be corrected simply by regular rules and forms of procedure. The thing had to be tackled in various ways. He would confess to the house that he could not be logical or systematic in this matter. A war to-day could not be fought on one front alone. To-day war was spread over air, water and earth. It was impossible to face the thing in a logical manner. If there is no hope (of dealing with the thing in the logical manner,) let me stick to my illogical and irregular way."

In reply to the remark made by Mr. Srinivasa Iyengar, that the Prime Minister was altering the law of trustees, the Prime Minister said, "I admit it. This is not only a change in the law with regard to religious endowments, but with regard to property, the law of trust, Criminal law, and torts."

POONA PACT:-The Rt.Hon. Mr. V.S. Srinivasa Sastriar said, "But it was also known that the pact was obtained under a sort of moral coercion such as a fast could not be free from. These men were under a sort of moral coercion and agreed to certain things under certain circumstances. No one could forget how in Bengal the entire Hindu community repudiated the pact. It had done so much injustice to the Hindu community there and put them in a position of inferiority. In Bengal Hindus said that they were not consulted properly and they had no time to consider it. They were now suffering from the consequences of a pact which was imposed on them in circumstances over which they could not exercise any control"

Sir N. N. Sircar said (HINDU, 7th August, 1939, page 7) "We are reaping to-day what we have sowed". "The Poona Pact had been signed when no Bengali Hindu had been there. There was acquiescence in the Poona Pact, whether out of fear or out of regard for the life of one whom everybody held in respect."

How can Trustee decide?

The Rt Hon. Dr. V. S. Srinivasa Sastriar said, "How was the Trustee to perform his duty? They had not prescribed the method for ascertainment of public opinion. If the Bill provided that the trustee could do the thing if the Government approved. What was the criteria on which Government would accard approval? And this Government which lightly undertakes legislation of this indemnifying character for the purpose of carrying out of picee of social reform is not to be trusted with the power of determining whether in a given case the trustee's opinion was based on proper andsufficient grounds. The Bill indemnifies the soldiers of Social Reform. There was nothing to prevent the Minister from applying such indeminity to agrarian and economic reform having regard to the huge and servile majority behind them"

"Gandhiji Greater than Sastras"

Speaking on Temple Entry Bill in the Legislative Council, Mr. A. Rangaswamy Iyengar said, "To a large to-body of Hidnus and other Indians to-day the word of Mahatma Gandhiwas a greater law than the dictates of all theSastras put to-gether."

எங்கும் எதிர்ப்புக் கூட்டங்கள்

"ஆலயப்பிரவேசத்துக்கு ஆதரவே இல்லை"

மதுரை

மதுரை ஸனாதன தர்ம வித்யாலயத்தில் 11—8—39 ஒரு மாபெருங்கூட்டம் நடக்கத. ஸ்ரீ சிவசமரூஷ்ண சாஸ்திரிகள் தலைமை வஹித்தார்.

ஸ்ரீமான்கள் சத்யவேல் பிள்ளை, கிருஷ்ணமாசாரியார், சாமிராஜ், முத்தலியவர்கள் கூட்டத்தில் பேசினார்கள்.

மதுரை ஜில்லா பாதர் கூட்டத்தில் ஸ்ரீ கே. ஆர். வெங்கட்டராமய்யர் பேசினார்.

காரைக்குடி

"மே. த. வைஸ்ராய்க்குத் தந்தி"

குன்னக்குடி ஸ்ரீ தண்டாயுதபாணித் திருக்கோவிலில் ஹரிஜனங்கள் 18—8—39 தேதி பிரவேசிக்கப் போவதாகத் தெரிவித்தது. குமார பண்டிதன் என்பவர் தான் தீண்டாதார்களை அழைத்து வரப் போவதாயும், போலீஸ் உதவி வேண்டுமென்றும் ஒரு மனு அதிகாரிகளிடம் சமர்ப்பித்தார். காரைக்குடி போலீஸ் ஏராளமாய் குன்னகுடிக்குப் போய் காத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஹரிஜனங்கள் பயந்து வரவில்லை. குன்னக்குடி காட்டார்கள் எந்த ஹரிஜன கோயிலில் தொழுயப் போகிறவன் என்ற ஆத்திரத்துடன் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் யாவரும் ஸ்ரீ கண்டே சன் செட்டியார் தலைமையில் கூடி ஹரிஜனங்கள் ஆலயப்பிரவேசத்தை ஆக்ஷேபித்தார்கள். ஸ்ரீமான்கள் எஸ். சுப்பிரமணியர், ஜகதீசய்யர், மணவாள அய்யங்கார் முதலியவர்கள் பேசினார்கள். மே. த. கவர்னர், மே. த. வைசிராயுக்கு காட்டார்களின் ஆக்ஷேபணைகளைத் தந்தி மூலம் தெரிவிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

நெல்லூர்

நெல்லூர் மூலப்பட் சாஸ்வதி சமாஜத்தில் 11—8—39 ஸனாதனிகளின் மாபெருங் கூட்டம் கூடினத. ஸ்ரீ ஐ. கிருஷ்ணய்யர் தலைமை வஹித்தார்.

ஸ்ரீமான்கள் பி. சுப்பிரமணிய்யர், கா. வெங்கட்டசுப்பய்யர் முதலியவர்கள் பேசினார்கள். சென்னை அரசாங்க ஆலயச் சட்டத்தைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டத.

சிதம்பரம்

தென்னார்காடு ஸனாதன தர்ம மகா சபை ஆதரவில் 12—8—39 மாலை ஸ்ரீ எ. ஸ்ரீநிவாச சாரியார் தலைமையில் ஒரு மாபெருங்கூட்டம் நடக்தது. பலர் ஆலயப்பிரவேசச் சட்டத்தைக் கண்டித்துப் பேசினார்கள்.

விருத்தாசலம்

"தோண்டர்படை தயாராய் விட்டது"

100 ஸனாதனத் தொண்டர்கள் தென்ட ஒரு பட்டாலியந்தசலத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. இக்தப் படைகாரடெங்கும் ஆலயப்பிரவேசத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்யும்.

திருநெல்வேலி

"இரு நூறு போ ஆக்ஷேபனை"

ஸ்ரீ நெல்லையப்பர் கோவிலில் தெய்வ வழிபாடு செய்யும் இரு நூறு ஆஸ்திகர்கள் கோவிலில் ஹரிஜனங்களை விடக்கூடாதென்றும், சாஸ்திரத்துக்கு விரோதமென்றும், கூறி ஒரு மகஜரை பிரதம ஆலய நிர்வாக அதிகாரியிடம் கொடுத்திருக்கிறார்கள். மகஜரில் கெல்லை பிரபலஸ்தர்கள் கையெழுத்திட்டுள்ளார்கள்.

கல்லிடைக்குறிச்சி

"மே. த. வைசிராயுக்கு மகஜர்"

கல்லிடைக்குறிச்சி ஆஸ்திக மகாஜனங்கள் பொதுக்கூட்டம் 6-8-39 மாலை ஸ்ரீ லக்ஷ்மி பதி ஆலயத்தில் நடத்தது. ஸ்ரீ எம். ராமலிங்க அண்ணவி தலைமை வஹித்தார். ஆயிரக்கணக்கில் ஜனங்கள் குழுமியிருந்தார்கள்.

திருநெல்வேலி வழக்கறிஞர் ஸ்ரீமான் ஆர். கிருஷ்ணசாமி அய்யர், "ஸனாதனிகளின் கடமையைப்பற்றி" ஒரு மணி நேரம் பேசினார்.

பின்னர் ஸ்ரீ எஸ். அனந்தராமய்யர், அட்வகேட் ஸ்ரீ காசிஅய்யர், ஸ்ரீ ஹரிஹரசுப்பிரமணிய சாஸ்திரியார், ஸ்ரீ அனந்தகிருஷ்ணசாஸ்திரியார், டாக்டர் நாராயண அய்யர் முதலியவர்கள் பேசினார்கள். கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறியத.

1. மே. த. சென்னை கவர்னர் மதுரை ஸனாதனிகளின் தூத கோஷ்டிக்குப் பேட்டி கொடுக்க மறுத்ததைக் கேட்டு இக்கூட்டம் வருத்தகிறத.

2. மே. த. இராஜப்பிரதிநிதியை ஆலய பிரவேச் சட்டத்துக்கு சம்மதி கொடுக்கமாறு கும்படி வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறத.

3. தமிழ் நாட்டிலுள்ள ஸனாதனிகளும், ஸனாதன தலைவர்களும் ஸனாதன தர்மத்தைப் பாதுகாக்கும் பொருட்டு மகத்தான காரியங்கள் செய்ததைப் பாராட்டுகிறத.

4. சாஸ்திரத்துக்கு விரோதமாகவும், ஜனநாயத்துக்குப் பாதகமாயும் காங்கிரஸ்காரரும் காங்கிரஸ் மந்திரி சபையையும் வேலைசெய்து வருவதால் காங்கிரஸிலிருந்து விலகும்படி கல்லிடைகுறிச்சி பொது ஜனங்களையும், இதர இடங்களிலுள்ள அன்பர்களையும் கேட்டுக்கொள்ளுகிறது.

மே. த. வைசிராயுக்கு இவ்வூர் பொது ஜனங்கள் சார்பாக ஒரு மகஜர் அனுப்ப ஏற்பாடு நடத்து வருகிறது.

(ஒரு விசேஷ நிருபர்.)

ஸ்ரீரங்கம்

12—8—39 இரவு 7-30 மணிக்கு ஸ்ரீரங்கம் தெற்கு வாசலில் ஸனாதனிகளின் பெரிய பொதுக் கூட்டம் ஒன்று கடைபெற்றது. மாஜி போலீஸ் டிப்டி ஸூபரண்டெண்ட் ஸ்ரீ கே. நாராயண அய்யங்கார் அக்கிராஸனம் வஹித்தார்.

ஆயிரக் கணக்கில் கூட்டம் கூடியிருந்தது. முதலில் ஸ்ரீமான் அக்னிஹோத்ரம் ராமானுஜதாதசாரியார் ஸ்வாமிகள் பேசுகையில் மதுரை ஸம்பவத்தை விவரித்துப் பிறகு ஹரிஜன ஆலயப்பிரவேச ஸம்பந்தமாய் வெளியிடப்படும் கேள்விகளுக்கு சாஸ்திரியுக்தி முதலிய எல்லா வழிகளிலும் ஒருவரும் ஆக்ஷேபிக்கத்தக்க முடியாதபடி பதிலளித்தார்கள். கனம் பிரதம மந்திரியவர்கள் காங்கிரஸ் தீண்டாமை கொள்கைப்படியும் புனு ஒப்பந்தப்படியும், ஆலயப் பிரவேசத்திற்கு கட்டுப்பட்டதாயிருப்பதாய் சொல்வதை எடுத்துக்கொண்டு காங்கிரஸில் தீண்டாமை விலக்குத் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது வாஸ்தவமே யெனினும் காரச்சி காங்கிரஸில் மத ஸம்பந்தமான உரிமைகளில் தலையிடுவதில்லை என்று ஒரு தீர்மானம் நிறைவேறியிருப்பதாயும் அது இது வரையில் மாற்றப் படவில்லை யென்றும் ஆகவே காரச்சி தீர்மானத்தையும் தீண்டாமை விலக்கு தீர்மானத்தையும் ஒன்று சேர்த்து பார்க்குங்கால் எவ்வளவு தூரம் மத உணர்ச்சியில் தலையிடாமல் தீண்டாமை விலக்க முடியுமோ அவ்வளவே செய்ய வேண்டுமென்றும் புனு ஒப்பந்தப்படி

மதுரை ஸ்ரீ மீனுட்சி அம்மன்

சாந்நித்யம் போய் விட்டது

"கட்டளை ரூ 1000 உடனே நிறுத்துக"

புதுக்கோட்டை தர்பாருக்கு மனு

புதுக்கோட்டை சமஸ்தானத்து அதிகாரிகளுக்கு புதுக்கோட்டை ஆஸ்திக மகாஜனங்கள் ஒரு மனுவை 5-8-39ல அனுப்பியுள்ளார்கள். அந்த மனுவில், "மதுரை ஸ்ரீ மீனுட்சி அம்மனுக்கு புதுக்கோட்டை தர்பார் ஆண்டுதோறும் அனுப்பிவரும் ரூ 1000 கட்டளையை உடனே நிறுத்திவிட வேண்டுமென்றும், கோவிலில் ஆநித்நிரவிட்கலே அனுமதித்ததனல் ஸ்ரீ மீனுட்சி அம்மனின் சாந்நித்யம் போய் விட்டதென்றும், சாந்நியத்தில் வந்த மதுரை கோவிலுக்கு தர்பார் அனுப்பி வரும் கட்டளை பிரயோஜனமற்றதென்றும், கூறி இருக்கிறார்கள்.

அந்த மனுவை அதிகாரிகள் சமஸ்தான ஆகம சாஸ்திரிகளுக்கு அனுப்பி இருக்கிறார்கள். ஆகம சாஸ்திரிகளின் அபிப்பிராயத்தை அறிக்தகொண்ட பின்புதான் தர்பார் அதிகாரிகள் முடிவான உத்திரவு பிறப்பிப்பார்கள்.

யோசித்தாலும் அது ஸ்ரீ காந்தி யின் உயிரைப் பந்தயம் வைத்து ஏற்பட்டதென்றும் ஸனாதனிகள் ஒருவரும் கையெழுத்துப் போட்டவில்லை யென்றும், கையெழுத்துப் போட்ட ஹரிஜனங்களில் சிலர் தாங்கள் ஒப்பந்தத்தை ஒப்புக்கொள்ள முடியாதென்று சொல்லிவிட்டதாயும், பண்டித மாளவியா ஒப்பந்தப்படி ஆலயப்பிரவேச சட்டம் செய்யும்படி கட்டுப்பட்டிருக்கவில்லை யென்றும் சொல்லியிருக்கிறார். அதனால் இரண்டுவார காலத்தையும் ஒப்புக்கொள்ள முடியாதென்றும், ஆகவே புனு ஒப்பந்தப்படி கட்டுப்பட்டிருப்பதாய் சொல்வது பிசகென்றும் ஆலயப்பிரவேச சட்ட விஷயத்தில் கனம் பிரதம மந்திரியின் பிடிவாதமும், பயமுறுத்தலும் வேறென்றுமில்லையென்றும், பேசி முடித்தார். ஸ்ரீ பி. எஸ். நாகராஜய்யர் பேசுகையில், காங்கிரஸ்காரர்கள் ஆயத்தைக் கெடுப்பதாயும் ஸனாதனிகள் குறிப்பாகஸனாதன புவர்கள் மதுரைக்கு ஸத்தியவரத்திற்கு போக வேண்டுமென்றும், முடியாதவர்கள் பண உதவி இல்லாவிட்டால் தெய்வப் பிரார்த்தனை அதுவும் முடியாதவர்கள் கெடுதலாவது செய்யாமலிருந்தால் போதுமென்றும் பேசி முடித்தார். பிறகு காஞ்சிபுரம் ஸ்ரீ நாட் நாராயண ராவ் ஆலயப் பிரவேசத்தைக் கண்டித்துப் பேசுகையில் ஸ்ரீ பூரி ஸ்வாமிகளின் பிரசங்கத்தை எடுத்துக்காட்டி சாஸ்திர விஞ்ஞான முதலிய எவ்விதத்திலிருந்தும் ஆலயப்பிரவேசத்திற்கு ஆதாரமில்லை யென்றும், காங்கிரஸில் மதத்தை புகுவிடவேண்டாமென்று கேட்டுக்கொண்டு முடித்தார்.

பிறகு வக்கீல் ஸ்ரீ கஸ்தூரி அய்யங்கார் ஆலயப்பிரவேசத் தொடர்ச் சட்டத்தைக் கண்டிப்பதாயும், அதை எதிர்க்க வைஸ்ராய் முதலியவர்களிடம் தூதபோக வேண்டுமென்றும் இஸலம்பந்தமாய் கார்யகர்களுக்கு ஆர்ய தர்ம ரக்ஷண ஸபையாருக்கு அதிகாரமளிப்பதாயும் தீர்மானங்கள் நிறைவேறின. முடிவில் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

குடந்தை ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவில்

ஹிந்து மத தேவஸ்தான போர்டார் அறிக்கை

குடந்தை ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோவில் தேவஸ்தானத்திற்கு சென்னை ஹிந்து மத தேவஸ்தான சொத்து பரிபாலன போர்டார் 10-8-39 தேதிகண்ட அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள்:—

தேதிகண்ட காரணங்களை முன்னிட்டு தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலூகா, கும்பகோணம் டவுன் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோயிலும், அதற்குச் சொந்தமான எண்டௌமெண்ட் (தர்மம்) 1927-ம் ஹிந்து மதஸ்தல ஆக்ட் 11ன VI A அதிகாரத்தில் கண்டுள்ள சட்டதிட்டங்களுக்குட்பட்டதெனக் குறிப்பிடலாமென போர்டார் அபிப்பிராயப்படுவதால், மேற்படி தர்மவிஷயத்தில் அக்கரையுடைய டிரஸ்டியும் மற்றவர்களும் அக்கரையுடைய டிரஸ்டியும் மற்றவர்களும் மேற்கண்டவாறு ஏன் அறிக்கை வெளியிடக் கூடாது என்பதற்கு 23-10-1939-க் தேதியன்றோ அல்லது அதற்குள்ளாகவோ எழுத்து மூலமாகக் காரணம் காட்டவேண்டுமென கோரப்படுகின்றனர்.

உத்தேசிக்கப்பட்ட நடைமுறைக்கான காரணங்கள்.

கும்பகோணம் சப் கோர்ட் O. S. கெ. 27/1920-ல் ஏற்பட்ட ஸ்கீம் திட்டத்தின் 2, 7, 10, 16, 17, 18, 19, 23, 29, 30, 35, & 36 வது பிரிவுகள் 1926ஹிந்திய சென்னை ஹிந்து மத தேவஸ்தான சொத்துக்கள் பரிபாலன சட்டத்தின் பிரிவுகளுக்கு முரண்பட்டதாக விருக்கின்றன. கணக்குகள் சரிவர வைக்கப்படவில்லை. 1345 முதல் 1347 பசலிகள் வரை கணக்குகள் சம்பந்தமாக ஆடிட்டர்கள் குறிப்பிட்டுள்ள தவறுகளை சீர் செய்ய வில்லை. அநேக சந்தர்ப்பங்களில் குத்தகைப் பத்திரம் வாங்கப்படவில்லை. வாடகையான பாக்கி வருவாக வேண்டியிருக்கிறது.

வே ஹரிஜனங்களுக்குத்திறந்து விட்டு, ஹிந்து மத பரிசுத்தத்தைத் தரிதப் படுத்தியிருக்கிறார். ஹரிஜனங்களுக்கு இழைத்த கொடுமைகளுக்கு ஒரு பிராயச்சித்தமும் செய்திருக்கிறார். ராஜாசாகேப் செய்த காரியம் ஒரு பெரிய கல்ல காரியமாகும். தீண்டாமை ஹிந்து மதத்துக்கு ஒரு மாச பேலிருப்பதாகக் கருதும் பலரும் அவரைப் பாராட்டுவார்கள்".....என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதே டிரஸ்டி மீது சென்னை அரசாங்க ஹிந்து மத தேவஸ்தான சொத்து பரிபாலன போர்டார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

டிரஸ்டி மீது பல குற்றச்சாட்டுகளைச்சுமத்தியிருக்கிறார்கள். டிரஸ்டி உத்திரவுகளை அவர் லக்ஷ்யம் செய்வதில்லையாம். அவருக்குக்கீழ் கண்ட அறிக்கையை ஹிந்து மத தேவஸ்தான பரிபாலன போர்டார் அனுப்பியிருக்கிறார்கள். இந்த அறிக்கை மூலம் தஞ்சை ஜில்லாவிலே பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் ஆலயங்களைநீண்டகாலர்களுக்கு நிறந்த விடும்போது போர்டார் உத்திரவுகளுக்கு அவர் கீழ்படிந்தார்போலும்! இப்பொழுது திடீரென்று உத்திரவுகளை அலட்சியம் செய்து விட்டாராக்கும்.

கேயர்கள் அறிய வேண்டி அறிக்கையை பிசுரித்திருக்கிறோம்:—

தஞ்சாவூரிலுள்ள தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானங்கள் விஷயமாக

கீழ்க்கண்ட காரணங்களை முன்னிட்டு தஞ்சாவூர் ஜில்லா, தஞ்சாவூரிலுள்ள தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானங்களும் அதற்குச் சொந்தமான சில எண்டௌன்மெண்ட் (தர்மம்) 1928-ம் வருஷத்திய மதஸ்தல ஆக்ட் II.ன் VI-A அதிகாரத்தில் கண்டுள்ள சட்ட திட்டங்களுக்குட்பட்டதெனக் குறிப்பிடலாமென போர்டார் அபிப்பிராயப்படுவதால், மேற்படி தர்ம விஷயத்தில் அக்கரையுடைய டிரஸ்டியும் மற்றவர்களும் மேற்கண்டவாறு ஏன் அறிக்கை வெளியிடக்கூடாது என்பதற்கு 25-9-39-ம் தேதியன்றோ அல்லது அதற்குள்ளாகவோ எழுத்து மூலமாக காரணம் காட்டவேண்டுமெனக் கோரப்படுகின்றனர்.

உத்தேசிக்கப்பட்ட நடைமுறைக்கான காரணங்கள்

போர்டார் 5-7-1929வ போர்ட் உத்திரவு கெ. 298 படி ஏற்படுத்தியதும் தஞ்சாவூர் ஜில்லா கோர்ட்டால் O. S. கெ. 4/430 சென்னை ஹைகோர்ட் A.S. கெ. 2631938-ன் படியும் மாறுதல் செய்யப்பட்ட ஸ்கீம் திட்டத்தால் தேன்தான நிர்வாஹம் சீர்படவில்லை. கோயில் நிதிகள் அனுவசியமான சிப்பந்திகளுக்கும், அனுவசியமான விஷயங்களுக்கும் செலவிடப்படுகின்றன. வெகு காட்களாக டிரஸ்டி கோயிலிற்று ரூ 18,006 கொடுக்கவேண்டியிருக்கின்றது. ஸ்கீம் திட்டத்தின் ஷரத்துகளின்படி கடகாரதால் கோயில்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. மேற்படி சட்டத்தில் 33-வது பிரிவுப்படி சிப்பந்திகளின் விவரங்களையும், சொத்துக்களின் ரிஜிஸ்தரையும் போர்டாருக்கு சமர்ப்பிக்க டிரஸ்டி தவறி விட்டார். மானேஜரும், பொக்கிஷதாரும், சிப்பந்திகளை நிர்வஹிக்க பாதொரு அதிகாரமுமில்லை. இதன் காரணமாக நிர்வஹ திற்றமை குறைந்துவிட்டது. கோவித்சாமி பிள்ளையிடமிருந்து தேவஸ்தானத்திற்குக் இடைக்கவேண்டிய ரூ 5,000 வரூல் செய்ய டிரஸ்டி தவறிவிட்டார். கோயில் சிப்பந்திகளை சமயனம் நான்கு மாதங்களுக்கு மேலாக பாக்கி வைத்து விட்டது. டிக்கிரிகள், குத்தகை பாக்கி இனங்கள் மூலம் ரூ 2,00,000 த்திற்கதிகமாக வரூலாகவேண்டியிருக்கிறது. குத்தகை டிபாஸிட், செக்யூரிடி டிபாஸிட், கட்டளை டிபாஸிட், மேஹினி இவை ரூ 14,000-வரை சில கோயில்களுக்குக் கொடுபடவேண்டியவை. தேவஸ்தானத்தின் பொதுக் காரியங்களுக்காக செலவிடப்பட்டிருக்கின்றன. இதனால் கம்பிக்கைத் தரோகம் செய்யப் பட்டிருக்கின்றது. உத்தவுகள் சம்பந்தமாக சிலருக்குக் கொடுபடவேண்டிய தொகைகள் சுமார் ரூ. 5,900/- பாக்கி விழுந்து விட்டது. வக்கீல்களுக்கு வெகு காலம் முன்பே ரூ. 3500- கொடுக்கப் பட்டிருக்கும், இத்தத் தொகை கணக்குகளில் சரிக்கட்டப்படவில்லை.

"டிரஸ்டிகள் போர்டாரின் உத்திரவுகளை லக்ஷியம் செய்வதில்லை". எவ்வித அதிகாரமுமின்றி டிரஸ்டி பிரயாணப்படி எடுத்துக் கொண்டு வருகிறார். தேவஸ்தான சிப்பந்திகள், நிதிகள், சொத்துகள், விஷயத்தில் அன்னார் பொதுவாக அலக்ஷியமாகவே இருந்து வருகிறார். ஸ்ரீசங்கர மௌளீச்வர் கோயிலுக்கு (தனிப்பட்ட கோயில்) வருஷம் ரூ 50-ம் பாகி பஞ்சாங்கப் பிரசாம் செய்ய வருஷம் ரூ. 35 எவ்வித அதிகாரமுமின்றி தேவஸ்தான நிதியிலிருந்து செலவிடப்படுகின்றன. ஆடிட்டர்களான மெஸர்ஸ் ஸி. எம் எஸ். பிரகாசம் அண்டு கம்பெனிக்கு ஆடிட் பீஸாக போர்டார் நிர்ணயித்ததொகைக்கு மேலாக ரூ. 195 செலுத்தப்பட்டிருக்கின்றது. ரூ. 2,000-த்திற்கு மேல் செலவிடப்பட்ட தொகை சரிக் கட்டாமல் ஸஸ்பென்ஸ் கணக்கிலேயே வைக்கப்பட்டிருக்கின்றது.

திருச்செந்தூர் கோவிலில் கலவரம்

12-8-39 காலை 11-30 மணிக்கு கோவில் வாசலில் பல தீண்டாத வகுப்பினர் வந்து தாங்கள் கோவிலுக்குள் போகவேண்டுமென்றும், போகமறுத்தால் கலவரம் நேரிடக் கூடுமென்றும், வாசலில் இருந்த திருவல்வு தந்திர ப்ராமணர்களிடம் சொன்னார்கள். உடனே இவர்கள் இருவருக்கும் கலவரம் மூண்டுவிட்டது. அன்று கடைசி சுக்ரவார கூட்டத்தில் கலவரத்தை தடுப்பதற்காக வந்திருந்த போலீசார் வந்து கலவரத்தை நிறுத்தினார்கள். கலவரம் அடங்கிற்று.

ஒருவரும் உள்ளேசெல்லவில்லை. அன்றைய தினஞ்கள் எல்லாம் வெகு தரிதமாக கடைப் பெற்று வாசல்கதவு முதல் எல்லாக்கதவுகளும் பூட்டப்பட்டன. தீண்டாதார் கோவில் வாசல் விட்டு நகரவில்லை. இதையறிந்த ஊர்வாசிகள் 3-30 மணிக்கே கோவில் வாசலில் கூடி விட்டார்கள். அப்பொழுதும் அவர்கள் வெளியில் செல்லவில்லை. ஊர்வாசிகள் எல்லோரும் அஹிம்ஸாமுறையில் எதிர்ப்பதாகப் பேசிக்கொண்டு விலகி கதவடியில் உட்கார்க்தனர். அர்தசமயத்தில் தீண்டாத வகுப்பினரில் இருந்தசில கற்களைத் தூக்கி கதவைத் திறக்கிறார்களா இல்லையா என்ற கதவின் மேலும் ஜனங்கள் மீதும் எரிந்தனர்.

அப்பொழுது ஊர்வாசிகளில் பலர் காங்கலெல்லாம் பேசாமலிருக்கும்பொழுது கற்களைத்தூக்கிஎறிவானேன் என்றுகேட்க, அப்பொழுது கதவை உடையுங்கள் என்ற சப்தம் கோஷித்துக்கொண்டே கற்களை வரி இறைத்தார்கள். அப்பொழுது தங்களை சூழ்ந்துள்ள அபாயத்தை அறிந்து அதினின்றும் தங்களையும் தங்களது கோவிலையும் பாதுகாக்க இவர்களுங் கற்களையும் கம்புகளையும் பிரயோகித்தார்கள். கலவரம் முட்டிப் போய் போலீஸார் வரவேர்த்தது. போலீஸார் வந்து

தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-வரு ஆவணி-மீ 1உ

பொய் பிரசாரத்திற்கு கார்யக்கமிட்டி ஆதரவு!

வார்தாவில் காந்திஜியின் அனுக்ரஹ

தன் கூடிய காங்கிரஸ் கார்யக்கமிட்டியா ரால் மதுரை ஆலயச்சீர்குலைவுக்கு ஆதரவ னித்துத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்தயத்தையும், அதிர்ம்மையையும் அடிக் கொள்கையாகக் கொண்டிருப்பதாகப்பெரு மை சொல்லிக்கொள்ளும் ஒரு பெரிய ஸ்தா பனமானது, உண்மையை மறைத்துக் கட் டுப்பாடாகவும் எங்கோசமன்றியும் பொது ஜனங்கள் முன்பாக பொய்ப் பிரசாரம் செய் வது மிகவும் அருவருக்கத்தக்கதாகும். கார் யக்கமிட்டியானது காங்கிரஸின் தலைமைஸ்தா பனமாக இருந்து வருகிறது. அதில் பெரும்பா ளரியிருப்பவர்கள் மிகுந்த பொறுப் புள்ளவர்களாகவும், பக்ஷபாதமற்ற வர்களாயும் தேச நிலைமையை வெகு ஜாக்கி தையாக நிதானிக்க வேண்டியவர்களாயுமிரு க்கவேண்டும். 'ஆலயப்பிரவேச விஷயமாகக் கார்யக்கமிட்டி செய்துள்ள நீர்மானத்தைக் கவனித்தால் அக்கமிட்டி மெம்பர்களான காந்தி பீடர்களுக்குக் கண்களோ,காதுகளோ, மனஸ்ஸுகூடியே ஒன்றுமிருப்பதாகத் தெரிய வில்லை. மதுரையில், நிருட்டுத்தனமாகவும், பலாத்காரமாகவும் அக்ரமம் நடந்திருப்ப தையும், அதற்குக் காங்கிரஸ் மந்திரிகள் பின் பலமாயிருந்த காங்கிரஸ் மெஜாரிட்டி பலத் தைக்கொண்டு சட்ட மூலமான பாதகரப்பு அளித்ததையும், இதன் காரணமாக தென் னிந்தியா முழுவதும் வெகு தீவ்மானஆக்ஷே பம் ஏற்பட்டிருப்பதையும் கார்யக்கமிட்டி காந்தீயர்கள் அறியாமலிருக்க முடியாது. அப்படியிருந்தும், அவர்கள் சென்னையிலுள்ள தம் கக்ஷிக்காரர்களும்,குற்றம் சாட்டப்பட்ட வர்களுமான சிலருடைய மோச வார்த்தை யைகம்பி ஒருதலீப்பக்ஷமான நீர்மானம்செய் தது எந்த நல்ல ஸ்தாபனத்திலும் நடக்கக் கூடிய நேர்மையான கார்யமல்ல. வெள்ளை அதிகாரி வர்க்கமும், ரஹஸ்யப் பேலீஸாரும் கொடுக்கும் பொய்தகவல்களே ஆதார மாகக் கொண்டு இந்தியாவில் பிரிட்டிஷ் நிர் வாஹமும், நியாயஸ்தலங்களும் நடப்பதாலும் அவைகளில் தங்களுக்கு நம்பிக்கையில்லையென் றும், கல்ஸர் வாதிகள் முன்பு கூச் சலிட்டு வந்தார்கள். ஆனால், இன்று காங் கிரஸ் ராஜ்யம் எப்படி நடக்கிறதி? ஸாதாண ஒரு காங்கிரஸ் மெம்பரோ, ஒரு காங்கிரஸ் கமிட்டியோ கொடுக்கும் தகவல்களேயே கார் யக்கமிட்டியும், காந்திஜீயும் ஸ்தயவாக்காக மதிக்கிறார்கள்.

மத்யஸ்தர்கள் எவ்வளவு மதிப்புள்ளவர்க ளாயினும் ஸரி, கிஷ்பக்ஷபாதிகளாயிருப்பி னும் ஸரி, அவர்களுடைய உண்மையான தகவல்களை காங்கிரஸ் அதிகார வர்க்கமும், அதன் தலீவரான காந்திஜீயும் கம்புவதில்லீ. ஒரு ஸாதாரண காங்கிரஸ்வாலண்டியருக்குக் கொடுக்கும் மதிப்பக்கூட அந்த மத்யஸ்தர்க ளுக்குக் கொடுப்பதில்லீ.

கார்யக் கமிட்டியின் தீர்மானத்தில் மிக்க அபாண்டமான ஒரு அஸத்யம் காணப்படு கிறது. மதுரையில் "வைதிக" ஸமூஹத்தி னர் பெரும் கூட்டமாக இந்த ஆலயப்ரவே சத்துக்கு ஆதரவு கொடுத்ததைப் பாராட்டு வதாக அந்த தீர்மானத்தில் குறிப்பிட்டிருக் கும் தலீகிறந்த பொய்கூற்றைக் கண்டு தக் கப்படுவதா? நகைப்பதா? கார்யக்கமிட்டிக்கு இத்தக் தகவல் எப்படிக் கிடைத்தது? அது ஏதாவது நியாயமான விசாரணீ செய்ததா! சென் னீ யி லுள்ள காங்கிரஸ்காரர்களின் வார்த்தைகளை ஆதரித்து கார்யக்கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தை நிய்ய வாதி எல்லாரும் அருவருப்பார்கள் என் பதில் ஐயமில்லீ.

கார்யக்கமிட்டியானது நியாய முறைகளை கைவிட்டதற்கு, அது ஸ்ரீ ஸுபாஷ்போஸ் விஷயத்தில் செய்த அக்கிர மும் இச்சமயத்தில் ஓர் உயர்ந்த உதாஹரண மாயிருக்கிறது. ஸ்ரீமான் போஸ் தமது ஸாதாரண மனித உரிமையைக்கூட அனுப விக்க முடியாதபடி செய்யத் தணிந்த காந்தி கிஷ்யர்கள், காங்கிரஸ் ஸ்தாபனத்தை பிடித்துக்கொண்டு, தங்களுடைய ஸொந்த விருப்பு,வெறுப்புக்களைக் கொண்டே தேசத்தை ஆட்டிவைக்கவும், அதற்காக எவ்வித நீதியற்றமுறைகளையும் கையாளவும் தயாராயிருப்பதை நிரூபித்துவிட்டதுமட்டுமல்ல, காங்கி ரஸ் ஆகியில் ஜனநாயக வேஷம்மாறி எதேச் சாதிகாரப்போக்கு நிலைத்துவருவதுபல்லடை யாளங்களால் வெளிவந்துகொண்டிருக்கிறது உள்ளூர ஹிட்லர், ஸ்டாலின் முறையிலேயே காங்கிரஸ் சென்றுகொண்டிருக்கிறது. மேற் கண்ட ஐரோப்பிய யதேச்சாதிகாரிகள், தங் கள் கொள்கைகளைப் பரப்பிலைக்கப் பிரசாரம் செய்வதை முதல் உபாயமாகக் கொண்டார் கள்: பிறகு, அந்த பிரசாரத்தை ராணுவபலத் தினலும் பலாத்காரத்தினலும் நிலை நிறுத்திக் கொண்டார்கள். இதற்குக் குறுக்கேநிற்பவர் யாராயிருந்தாலும் சரி, அவர்களை ஈவு இரக்க மன்றி அடக்கி அப்புறப்படுத்தினார்கள்.இந்தி யாவில் ஜனநாயக வேஷம் பூண்ட காங்கிரஸ் யதேச்சாதிகாரிகளும் இந்த வழியில் தான் போகிறார்கள், முதலில் பிரசாரத்தில் முனைந்து வேலை செய்தார்கள். இனி பலாத் காரத்தைக் கொண்டு தங்கள் பிரசாரபலனை நிறைவேற்றிக்கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறார்கள். சென்னை மாகாணத்தில் ஆலயப்பிரவேச விஷயமாக காங்கிரஸ் ஸர்க் கார் நடந்து கொண்ட மாதிரியிலிருந்து, வெளிப்படையாகவே யதேச்சாதிகாரம் தலை ளெப்ப ஆரம்பித்திருப்பதாக ஜனங்களிடை யில் பிதியுண்டாயிருக்கிறது. இப்படி பலாத் காரத்தையும்,யதேச்சாதிகாரத்தையும் அடிப் படியாகக்கொண்ட ஆட்சிமுறை எவ்வளவு தீக்கிரத்தில் மறைகிறதோ அவ்வளவுக்கு நன் மையென்று பொதுஜனங்களும் நீதி நிபுணர் களும் நினைக்கும் காலம் வந்து விட்டது.

—சென்னை மாஜிஸைக்கோர்ட்ஜட்டியரன ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்கள் சென்னதை இச்சமயம் ஒவ்வொ ருவரும் உணர்ந்த கவனிக்கவேண்டும்.அவர் இம்மாதம் 12உ வெளியிட்டுள்ள அபிப்பிரா யமாவது:—

"ஆலயப்பிரவேச சட்டம், கொள் கைக்கு முற்றிலும் புறம்பானதும், நியாயத்திற்கும் விரோதமானது. ஆல யப்பிரவேசம் ஸர்க்காருக்குத்தெரிந்து நடந்திருக்கிறது. எமாற்றத்தினலும், பலாத்காரத்தினலும் அது நடந்திருக் கிறது. சட்டப்படி குற்றமுள்ள ஒன்றை, குற்றமற்றதென்று சொல்ல வேண்டுமென்று கேட்கப்படுகிறது. புதிய ஆலயப்பிரவேசச் சட்டம் அரசி யல் காரணங்களுக்காகவே செய்யப் பட்டது.

இந்த ஸர்க்கார் எவ்வளவு சீக்கிரம் பதவியை விட்டுப்போகிறார் களோ அவ்வளவு சீக்கிரம் காட் டுக்கு கலம்.....".

ஆலயப்பிரவேசத்துக்கு பலத்த எதிர்ப்பு

வைகானஸ பட்டாசார்யார்களின் முடிவு

சைதாப்பேட்டையில் மாபெருங் கூட்டம்

"டிரஸ்டிகள் சம்மதித்தாலும் நாங்கள் சம்மதியோம்"

9-8-39 புதன்கிழமை நினம் செங்கற்பட் டிற்கு அருகாமையில் இருக்கும் ஆத்தூர் கிராமத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீமத் விகனஸ ஆசார்யர் வருஷோத்ஸவம் அதி விமரிசையாய் நடந்தது.

அதற்கு ஏராளமாய் வைகானஸ அர்ச்சகர் கள் வந்திருந்தார்கள். அ தில் முக்கியமாக சிங்கபெருமாள் கோவில் உ வே ஸ்ரீநிவாஸ பட்டாசார்யார், செட்டிபனியன் நரசிம்ம பட்டாசார்யர், சென்னை உ. வே. சுந்திர ஜப்பட்டாசாரியார், மாட்டம்பாக்கம் உ. வே கேசவால பட்டாசார்யார், பாடம்பாக்கம் நரசிம்மபட்டாசரியார், ஆத்தூர் சக்வர்த்தி அய்யங்கார், ஓரகடம் ராஜாமணி பட்டாசா ரியார், சைதாபேட்டை கிருஷ்ணபட்டாசரி யார், அயனவரம் ஸ்ரீனிவாச பட்டாசாரியார் கெம்பிலி வைத்தியம் பண்டிட்சம்பத் பட் டாசாரியார் முதலான 100 சுவாமிகள் வந் திருந்தார்கள். அப்போது சிங்கப் பெருமாள் கோவில் நரசிம்ம பட்டாசாரியர், ஸ்ரீ ரங்க பெருமான்கோவில் ஸ்ரீநிவாஸ பட்டாசரியர் சுவாமிகளை அக்கிராஸனாதிபதியாக பிரேரேபித் தார். ஸ்ரீநிவாஸ பட்டார எல்லோரும் அக்கிராஸனாதிபதியாக அங்கீகரித்தார்கள்.

பிறகு தலீவர் "இந்த நிர்பந்த சமயத்தில் நாம் எல்லோரும் ஏகமனதாக இருந்து காங் கிரஸ் கவர்மெண்டினல் நிர்பந்தமாய் கொண் டுவந்த ஆலயப்பிரவேச பாதகரப்புச்சட்டத் தைக் கண்டிக்கும் விஷயம் எல்லோருக்கும் தெரிந்த விஷயமென்றும், ஆலயப்பிரவேசம் நம் ஆகமத்தில் இல்லீ என்றும், முக்கியமாக டிரஸ்டிகளும் அர்ச்சகர்களும் சம்மதித்தால் ஆலயபிரவேசம்பண்ணலாம்என்பதை கூடாது என்றும்பேசினர்.பிறகு நிருவல்லிக்கேணிஸ்ரீ பார்தஸாதி ஸ்வாமிகளின்னமூறை அர்ச்சகம் ஸ்ரீ.வெங்கடநரசிம்ம ஸ்வாமிகள் பேசுகையில் அத்தரி கர்ச்சயர் மரீசி முதலான ரிஷிகள் ப்ரோக்தமான ஸ்ரீ வைகானஸ நிர்தத்தங்களில் ஆலய பிரவேசம் கூடாது என்றும், நிர்பந்த மாக பிரவேசித்தால் சம்புரோக்ஷணை செய்த தான் நிருவாராதனம் செய்யவேண்டுமென் றும் ,சம்புரோக்ஷணை செய்யாத கோவிலிருந்தி இந்த கோவிலுக்கு வரும் அர்சகர்களின் ஆலய பிரவேசமாகாத ஆலயத்தில் சேர்க்க கூடாதென்றும் சொன்னர். பிறகு சைதாப்பேட்டை கிருஷ்ணபட்டாச்சாரியர் பேசுகையில் நம் மிடம் ஓட்டு பெற்றுக்கொண்டு நம்முடைய மத விஷயத்தில் அநீதமாக பிரவேசித்து ஜாதி மேன்மையை கொடுத்து நம் முன்னோர் களால் புராதனமாக உண்டான நம் ஆலயங் களையும் கெடுக்க ஆலயபிரவேசப் பாதகரப்பு சட்டத்தை கொண்டு வந்த இருக்கிறார்க ளென்றும், ஆந்திராவிடர்கள் இவ் விஷயத் தில் ஆசைவைக்கவில்லீ என்றும், சமீபத்தில் நம் ஜில்லாவில் பூவிருந்தமல்லியில் நடந்த ஆல யப்பிரவேசம் மோசமானது என்றும் அதை நேரில் விசாரித்ததில் சில வெளியூர் ஹரி ஜனங்களை அழைத்து வந்ததாகவும் அவர் களும் அர்த்த மண்டபத்தில்வாவில்லீஎன்றும் வெளிமண்டபத்திலே இருந்தார்களென்றும் பரிசாரகர்கள் மூலம் தான் தீர்த்தம் பிரசாதம் கொடுக்கப்பட்டது என்றும்இதனரீநன்று ஊர் இருப்பவர்களே கேட்க, அவரும் சம்பு ரோக்ஷணை பண்ணவேண்டும் என்றும் சொல் லியூழைசெய்ய முடியாது என்றுசொல்ல அர் சகரிடம் 10 ரூபாய் கொடுத்து ஸம்புரோக்ஷ ணைசெய்யும்படி சொன்னதாகவும் தெரிகிறது. இவ்விபத்தில் நம் சுவாமிகள் எல்லோரும் கட்டுப்பாடாக இருந்து எகோபித்து இதற்கு இடம் கொடுக்கவேண்டாமென்றும் சொன் னர். அதன் பிறகு சக்கிரவர்த்தி அய்யங்கார் பேசினர். நம் முன்னோர்களால் இதற்குமுன் எப்போதும் சம்மதிக்கமலும் வேதார்த்த தேசிகன் முதலான ஆசாரியர்களாலும் சம்மதிக்காமலும் இருக்கிற விஷயத்தில் முன்னமேயே ஜாதி பிரஷ்டர்களான சிலர் கேட்டதும் கண்டதும் இல்லாமல் நம் பரிசுத்தமான ஆலயங்களையும் கெடுக்கிறார் கள் என்றும் இவ்விஷயத்தில் இந்த கிராமத் தார்களான செட்டிமார்களுடைய அபிப்பி ராயத்தையும் தெரியபடுத்த வேண்டியது என்று கேட்டுக்கொண்டார். அப்போது கூட் டத்தில் இருந்த செட்டிமார்களும் எங்களுக்கு ஆலயபிரவேசம் கூடாதென்று சொன்னார் கள்.

"பிறகு சென்னீ கேசவ பெருமாள் ஸன் னதி ஸ்தானீகம் சுக்கிராஜ பட்டாசாரியார் பேசுகையில், "இந்த நெருக்கடியான சந்தர்ப் பத்தில் நம்மவர்கள் கட்டுபாடாக இருந்து எந்த ஆலயங்களிலும் டிரஸ்டிகளுக்கு வேண் டிய அளவு சான்ஸ்ரங்களை ஏற்படு செய்ய வேண்டியது என்றும் அப்படி அவர்கள் கே ழ்க்கர விட்டால் ஸன்னதியை விட்டு நீங்கி விட வேண்டியது என்றும் எந்த அர்ச்சகர்க ளும் அத்த சமயத்தில் போட்டியாக பிரவே சிக்கக்கூடாதென்றும் டிரஸ்டி சம்மதித்தா லும் நாம் சம்மதிக்கக்கூடாதென்றும் சொன் னர்.

சிங்க பெருமாள் கோவில் ஸ்ரீவெங்கடகி ரிம்மபட்டாசாரியார் பஞ்சமர்கள் கோபுரம் தாண்டி உள்ளே வந்தால் புண்ணியாவசனம் செய்யவேண்டு மென்றும் தஜன்தம்பம் தா ண்டி வந்தால் வஸ்துசாந்தி ஹோமம்செய்ய வேண்டியது என்றும் அர்த்த மண்டபத்தில் தழைத்த சடரி சாதித்துக் கொண்டால் மஹா சாந்தி கும்பஸ்தபனம் செய்து புரோக்ஷணை செய்ய வேண்டியது என்றும் பிம்பத்தை தொட்டால் அஷ்டபந்தன மஹா சம்புரோக்ஷணை செய்யவேண்டியது என்றும் சொன்னர்.

நிறைவேறிய தீர்மானங்கள்

ஆலயப்பிரவேசப்பாதகரப்புமசோதாவை கண்டிப்பதாகவும், ஆலயப்பிரவேச விஷய மாய் டிரஸ்டிகள் இஷ்டப்பட்டாலும் அர்ச் சகர்கள் எல்லோரும் ஒரே மனதாக இதற் காக சம்மதிக்கக்கூடாதென்றும், கவர்மெ ண்டாரால் கொண்டு வந்த தொடர்ஜதொழிச்

(தொடர்ச்சி 3ம் காலம் பார்க்க.)

ஆலயப்பிரவேசம்

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் அபிப்பிராயம்

ஆலயப்பிரவேச சட்டம் விஷயமாக சில ஹிந்துக்கள் அபிப்பிராயம் கேட்ட தற்கு, ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீட பதிகளான ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமி கள் அடியிற்கண்ட தாத்பர்யத்தைத் தெரிவித்தார்கள்:—

"ஸ்பர்சம், போஜனம், விவாகம், இந்த விஷயங்களில் சாஸ்திரங்கள் விதித்திருக்கிற ஆசார நியமங்கள், அவைகளை அநுஷ்டிக்கிறவர்களுக்கு கிரேயஸ் அளிப்பதுடன், ஸ்தநிகள் சுத்தமாயிருக்கவும் உதவுகின்றன. அதன் மூலம், ஹிந்து ஸமுதாயத்துக்கு விசேஷ லக்ஷணங்களான ஸதாசாரங் களும், ஸத்வாஸனைகளும் காப்பாற்றப் படுகின்றன. இதனல் எல்லாரையும் சம மட்டத்தில் வைக்கும் மற்ற சமு தாயங்களைப்போலல்லாமல், ஹிந்து ஸமுதாயம் எத்தனையோ ஆயிர வருஷ ங்களாக நீடித்த உயிருடன் வாழ்ந்து வருகிறது.

ஆகையால், தீண்டாமையென்பது கெடுதல் (கெட்ட ஆசாரம்) அல்ல. ஆனல், அது உயர்ந்த ஞானத்துடன் கூடியஹிந்துக்களின் ஸன்மார்க்க வாழ் வுக்கு அடிப்படையான அஸ்திவாரங் களுள் ஒன்று; எல்லா ஆபத்துக்களை யும் தாண்டி இன்னும் அவர்கள் ஜீவித் திருப்பதற்கு காரணமான மர்மம்.

பெரிதான இந்த ஹிந்து சமுதாயம் ஐஹிகக்ஷேமத்தையும் அத்யாத்மிக நிரே யஸ்ஸையும் அடையும் பொருட்டு, ஒவ் வொரு ஜாதியும் தங்கள் தங்களுடைய லௌகிககௌரவத்தையும் சுகத்தையும் மனப்பூர்ணமாய் நியாகம் செய்திரு ர்கள். தீண்டாமை என்ற ஆசாரத்தைக் கெடுக்கும் "மஹாளை ஆலயச்சட்டம்" "சென்னீ ஆலயப்பிரவேச சட்டம்" முதலியவைகள் ஹிந்து ஸமுதாயத் துக்கு காலக்கிரமத்தில் தீங்கு செய்யக் கூடியவைகள்.

மதாசார சம்பந்தமான கம்பிக்கை களைப் பொறுத்தவிஷயங்களில், ஜனநா யகக்கொள்கையை அநுஸரிப்பதும்,மெ ஜாரிட்டி வோட் மூலம் நிர்ணயிப்பதும் பரிஹஸிக்கக்கூடிய தப்பான மார்க்க மாகும்.

தீண்டாதவர்களும், மற்றும் சிலரும் கோவில்களுக்கு உள்ளே நுழையக் கூடாதென்கிற தடையானது ஆக ம சாஸ்திரங்களில் விபத்தமாய் இருக்கிற விதிகளைப் பொறுத்த எற்பட்டது. கோவில்களின் நிர்மாணமும் பூஜை முதலியதும் ஆக ம சாஸ்திரங்களின் ஆதாரத்தைக்கொண்டே அமையப் பெற்றிருக்கின்றன.

எந்த கொள்கைகளை ஆதாரமாய் கொண்டு கோவில்கள் நிர்மிக்கப்பட்டு பூஜாதிகள் நடந்து வருகின்றனவோ, அந்த கொள்கைகளை இந்த ஆலயபிர வேசச் சட்டம் கவிழ்த்துவிட்டது. இது, கோவில்களுக்கு செல்லுகிறவர்க ளுடையும், கோவில் கட்டியும் பூஜை முதலியதுகள் நடக்கவும் நிர்வஹம் கொடுத்தவர்களுடையவும் இஷ்டத் துக்கு விரோதமானகாரியம். கொன்கை யைப் பற்றி வித்தியாசமிருக்கும் போது, சிரஸ்திருத்தக்காரர்கள், தம் நியாயமாய் நடந்துகொள்ள வேண்டு மென்று அவர்களுக்கு இச்சையிருக் கும் பட்சத்தில், இப்போதுள்ள கோ வில்களை பழைய கம்பிக்கையுள்ளவர் களிடம் விட்டுவிட்டு, தங்கள் கொள் கைப்படி புதுக்கோவில்களை ஸ்தாபித்து கொள்ளவேண்டும்.

புது சட்டமானது கோவில் ஆரா தனங்களை நாசம் பண்ணும் என்ற சங் கையுண்டாயிருப்பதால்,சட்டசபைகள் அதைப்புனராலோசனை செய்ய வே ண்டும். மேலதிகாரிகள் இந்தச் சட்டத் துக்கு அங்கீகாரம் கொடுத்தால், கோவி லாராதனைகளை கஷிக்கச் செய்யக்கூடிய காரியத்தைச் செய்வதான பெரிய உத்தரவாதத்தை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

அசுத்தமான கோவில்களுக்கு ஜனங் கள் போகமலிருப்பதை மதாசரியர் கள் அனுமோதிக்கத் தான் செய்வார் கள். மத விசுவாஸமுள்ள ஹிந்துக்கள் எல்லாரும், ஸவர்ணிகளானலும் சரி, அவர்ணிகளானலும் சரி, அப்படிப் பட்ட கோவில்களில் தரிசனத்துக்கு போகமாட்டார்கள். தீண்டாதார் களும் கோவிலில் நுழையலாம் என்ற பாத்தியத்தை ஸ்தாபித்துக் கொடுத்து விட்டதாகச் சீர்திருத்த வாதிகளுக்குத் தோன்றினவுடன், அவர்களுடைய உத்ஸாகமும் குறைந்து போய்விடும்.

ஆகையால், ஹிந்து சாஸ்திரங்களி லும் ஆசாரங்களிலும் கம்பிக்கையுள்ள, ஸவர்ணிகள், அவர்ணிகள் எல்லோரும், மேற்கு தேசத்திய ஸம்பர்க்கம்மூலமாய் உண்டான கெடுதல்களும், அனுசா ரங்களும் பேரும் பொருட்டும், இப் போது ஸம்பியுள்ள அனுசாரத்தைத் தடுக்கவும், தார்மிகமான எல்லாவித மான உபாயங்களையும் அனுஷ்டித்து தம்மால் முடிந்த வரையில் முயற்சித்து கோவில்களின் சுத்தத்தன்மையை ஸம்ரக்ஷிக்க வேண்டும்."

(முதல் காலம் தொடர்ச்சி.)

சட்டத்தைக் கண்டிப்பதாகவும் நிர்பந்தம் ஏற்பட்டு ஆலயபிரவேசம்செய்தால் எல்லோரும் கட்டுப்பாடாக சத்யாகிர கம் செய்யவேண்டுமென்றும் தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறியது. பிறகு நம் குல சுவாமிகளிடத்தில் பிசாரம் செய்ய கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது.

பிசாரக்கமிட்டி ஸ்தாபனம்

நிருவல்லிக்கேணி வெங்கட்ரா ஜம்மபட்டர் தலீவராகவும், சைதாப்பேட் டை கிருஷ்ணபட்டர் காரியதரிசியாகவும், சென்னீ சுக்ர ராஜபட்டர் பெக்ஷிதாரா ராகவும்; சென்னீ சேஷபட்டர் மற்றும் சில ர் கமிட்டி மெம்பராக்வும் தேர்ந்தெடுக்கப்பட்டு பிறகு மாடம் பக்கம் கேசவாலபட்டாசர யாரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை முடிந்தது.

(ஒரு விசேஷ நிருபர்.)

கல்லிடைக்குறிச்சி ஆஸ்திக மாதர் மகாநாடு

ஸ்ரீமதி விசாலாக்ஷி அம்மாள் தலைமை வகித்தார்

"ஸ்திரீகள் நெருக்கடியான சமயங்களில் முன்வர வேண்டும்"

(சமது விசேஷ நிருபர்)

திருநெல்வேலி கல்லிடைக்குறிச்சியில் ஆகஸ்டு மீ 1, 2, 3 தேதிகளில், ஆஸ்திக மாதர் மகாநாடு கூடிற்று. எராளமாய் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். சுமார் 500 ஸ்திரீகள் விஜயம் செய்திருந்தார்கள்.

ஸ்ரீமதி விசாலாக்ஷி அம்மாள் தலைமை வகித்தார்.

ஸ்ரீமதிகள் காவேரி அம்மாள், கோமதி அம்மாள், அம்மாளு அம்மாள் முதலியவர்கள் மகாநாட்டில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

ஸ்ரீமதி அம்மாளுஅம்மாள் பிரசங்கம் யாவர் மனதையும் கவர்க்கடியதாயிருந்தது அவர் கூறியதாவது:—

"மதுரை, காஞ்சி, குடந்தை, சென்னை முதலிய இடங்களில் மாதர்கள் மகாநாடு நடந்த விபரத்தை எடுத்துக்கூறினர்.

பிரசங்கத்தில் ஸ்வதர்மத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்றும், "ஸ்வதர்மத்தை அனுஷ்டித்த வர்தகாலமெல்லாம் தேசம் க்ஷேமமும் செழிப்பும் பொருந்தி இருந்தது. தவிர, அஹிம்ஸை, ஸமபாவம், ஜீவகாருண்யம் என்ற பதங்கள் கல்லாதார் கையில் சிக்கி பரிதவிக்கின்றன.

"அஹிம்ஸை என்பது தன்புருமலீருத்தல். துஷ்ட நிக்ரகம் சிஷ்டபரிபாலனம் என்றராஜ நீதியில் அஹிம்ஸாதர்மம் அனுஷ்டானத்துக்கு வராது. அர்ச்சனையும் செய்ய தூண்டியது. இந்த க்ஷத்திரிய தர்மத்தை உத்தேசித்தே தவிற அற்ப ஹிம்ஸை பிரபல ஹிம்ஸையால் எடுபட்டுப்போகும். ஸ்வதர்மானுஷ்டானத்தில் ஹிம்ஸை கிடையாது.

ஸமபாவம் கீதையில் அருளிய ஸமதர்சனம் இதுதான். எல்லோரையும் ஒன்றுபோல் பார்ப்பது. ஆனால் இதன் தத்துவம் என்னவென்றால் ஸகல சிருஷ்டியிலும் அத்தர்யமியான சைதன்யம் ஒன்று கர்மசாதனமான சரீரங்களும் குணங்களையும் பேதமாயிருக்கின்றன. சரீரங்களையும் குணங்களையும் ஒன்றுபோல் பார்க்கவேண்டுமென்பது பகவான் ஆக்ஞைக்கும் அனுபவத்திற்கும் யுக்திக்கும் பொருந்தாது. ஸ்ருஷ்டியில் ஸ்தாவர ஜங்கமம், ஸ்தாதி. ஸ்ருஷ்டியில் கல்லு, மண், மரம் முதலிய வர்களில் கல்லு, மண், மரம் முதலிய பேதங்கள். இவை யெல்லாம் புறகணிக்க மனிதனால் முடியாது. திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். தேங்காய் கோகளையும் கரும்பு கோகளையும் கல்பகோடிகாலம் சேத்தாலும் ஒன்றாகாது. பேதக்தான். ஆனால் இண்டையும் இங்கிப் பிழிந்து விட்டால் ஒன்றுய் விடும். அபேதம். ஆகையால் ஸமபவத்தைத் தப்பான வழியில் அர்த்தம் செய்துகொண்டு பல கெடுதல்களுக்குக் காரணமாக இருக்கக் கூடாது.

"ஜீவகாருண்யம் கஷ்ட தசையில் அனுதாபம் காட்டி யதாசக்தி உதவ. பகவான் ஜீவகாருண்யத்தினுலேயே மேல் வர்ணத்தார் கிரமப்பட்டு இலவு செய்து அடையும் பலனை தாண்டாதார் கிரமப்படாமல் இலவு அதிகமில் லாமல் அடையும் வழியை காட்டியிருக்கிறார். ஆதலால் மேல் நான்கு வர்ணத்தாருடைய கோவிலுக்குள் போய் அர்ச்சனை முதலானது செய்ய வேண்டாமென்றும் தீண்டாதார் ஸ்தாபிதர்சனம், உத்ஸவ விக்ரஹம் வெளியில் வரும்பொழுது தர்சனம் இவைகளே செய்தால் போதும் என்றும் விதித்திருக்கிறார். இப்படி விதி இருக்க, என் ஏதோ குறையருக்கிறமாதிரி பிரசாரம் செய்த பஞ்சமரை ஆலயப்பிரவேசம் செய்யத் தூண்டி அவர்களுக்கும் மேல் வர்ணதாருக்கும் ஹிம்சை செய்த ராஜாங்கத்திற்குப் கெடுதலே செய்ய வேண்டும்? இதினும் ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். இருவருக்கு தாகம் எடுத்தது. ஒருவன் பணக்காரன், மற்றொருவன் தரித்தரன். தன் ஸ்திதிக்குத் தகுந்தபடி பணக்காரன் ஸரப்புவாங்கிஜஸ் போட்டு சாப்பிட்டு தாகசமனம் செய்கிறான். தரித்தரன் சாதா ஜலத்தை சாப்பிட்டு தாக சமனம் செய்துகொண்டிருக்கிறான். இருவருக்கும் தாகம் நிவர்த்தியாகிறது. பணக்காரன்போல் தரித்தரனை ஸரப்வாங்கி சாப்பிடச்சொல்லுகிற ஸாதகி இருக்கிறது இந்த ஆலயப்பிரவேச கிளர்ச்சியும்.

ஸ்திரீ தர்மத்தையும் ஹிந்து விவாஹாத்தையும் கவனகரகீகம் பிடித்த ஸ்திரீகள் கம்மகான்கள் வரைக்துள்ள அதிக கிரேஷ்டமான ஏற்பாடுகளை மீறி ஸ்வராஜ்ஜிய வெறி பிடித்த வீட்டைமறந்து, கணவனையும் இதர பெரியோரையும் குழந்தைகளையும் துறந்து, அவர்களுக்கு குறிய நாணம் அச்சம், மடம், பயிர்ப்பு முதலியன இழந்து, வெளியில் நிர்வதும் புருஷருடன் போட்டி போடுவதும் கலியின் லீலையா? ஐயோ! இருஹிணி. ஸதாசீ, தர்மபத்தினி என்ற தெல்லாம் எங்கு மறைந்தன. சாதா சட்டத்தால் கிரஹம் பாழாபிற்று. ஆலயப்பிரவேசத்தினுல் கோயில்கள் பாழாகிவிடும். இந்த மாகானத்தில் கல்லிடைகுறிச்சி பிரம்மண்யம் பெருக்தது, கல்யாணபுரி என்ற பெயர் பெற்றது. இதிலுள்ள எல்லாஸ்திரீ பூமான்களும் கவீன ராகரீக வீபத்தைத் தடுத்து, கம் தர்மங்களை ஆதரித்து அனுஷ்டித்து கமக்கும் கம் தேசத்திற்கும் ராஜாங்கத்திற்கும் க்ஷேமத்தை செய்யும்படி மிகவும் தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன். முன் பூமியை பாதாளத்திலிருந்து தூக்கின ஆதிவராகமூர்த்தி இப் பெரு பூமியை கம் பூமியை இந்த கெருக்கடியிலிருந்து ரக்ஷிப்பாராக"

நிறைவேறியத் தீர்மானங்கள்

1939-வு ஆகஸ்டுமீ 3-உ மாலை 5மணிக்கு ஸ்ரீ ஆஸ்திக ஸ்திரீகளின் மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள்:—

"மதஸாஸ்திர விரோதமாகவும் தொன்று தொட்டு வரும் பழக்க வழக்கத்திற்கு விரோதமாகவும் சில ராஜ்ய வாதிகளும் தீர்த்தக்காரர்களும் செய்தவரும் ஆலயப்பிரவேச விஷயத்தை இந்தக் கூட்டம் பலமாக கண்டிக்கிறது.

"கதஇ சாஸ்திராங்களையும் அனுஷ்டானங்களையும் காப்பதில் எப்போழுதும் முன்னணியிலிருந்து வரும் இந்த தேசத்து ஸ்திரீகளை இந்த தெருக்கடியான சமயத்திலும் "முனவந்து தங்களாலான வரை இந்த அரியான கிளர்ச்சியை தடுத்து" கம் காட்டுக்கும் அரசாங்கத்திற்கும் கன்மை செய்யும்படிக்," கேட்டு கொள்ளுகிறது.

ஆழ்வார்திருநகரி வனிதன தர்ம சபை

ஆழ்வார் திருநகரி ஸனாதன தர்ம சபை ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்து ஜில்லா முழுவதும் பிரசாரம் செய்து வருகிறது. சபை ஆதரவில் தினசரிக்கூட்டங்கள் கடைபெற்ற வருகின்றன. மகஜர்கள் தயாரிக்கப்பட்டு ஆயிரக்கணக்கில் ஆஸ்திகர்களின் கையெழுத்துக்கள் வாங்கப் பட்டிருக்கின்றன. இந்த ஸபையை மதுரை வர்ணாச்சமஸ்வராஜ்ய சங்கத்தின் கிளையாக ஸ்தாபிக்க முயற்சி நடத்து வருகிறதது என்று ஸனாதன தர்ம ஸபா காரியதரிசி எழுதுகிறார்.

ஆழ்வார் திருநகரி ஆஸ்திகர்கள் அனுப்பும் மகஜர்

"நாங்கள் காங்கிரஸ் சர்க்காரால் எங்களுக்குப் பலவித கன்மைகள் உண்டாகு மென்று கம்பி, கடந்த தேர்தலில் ஏகமனதாகக்காங்கிரஸ் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்பினோம். அந்தச் சமயம் ஆலயப்பிரவேச விஷயமாக (எதுவும் கடந்துவிடாதென்று) சமாதானமும் கூறப்பட்டது. இப்பொழுது காங்கள் தேர்ந்தெடுத்த காங்கிரஸ் சர்க்காரே எங்கள் மதத்திற்கு உலை வைத்துவிட்டனர். எங்கள் பிரதிநிதியான ஸர்க்கார் குற்றமிழைத்தால் எங்களுக்குக்கேட்கப் பூர்ண உரிமையுண்டு. தற்சமயம் கடந்த மதுரை தஞ்சை ஆலயப்பிரவேசங்கள் மிகவும் அரிதமானவை. மிடி விஷயங்களுக்கு சர்க்கார் உடன்தையரிருப்பதை காங்கள் அழுத்தமாகக் கண்டிக்கிறோம். மேன்மைதங்கிய கவர்னர் பிறப்பித்த விசேஷாதிகாரச்சட்டமும், ஆலயப்பிரவேசத் தொடராதொழி மசோதாவும், சர்க்காரின் பதேச்சாதிகாரத்தையே காட்டுகின்றன. ஜனநாயக சர்க்கார் என்பது சர்க்காருக்கு கிணைவிருக்க வேண்டும், அவசரச் சட்டம் பிறப்பிக்கும்படி கம் காட்டில் என்ன நெருக்கடி ஏற்பட்டு விட்டது? அக்கம நடவடிக்கைகளே சர்க்கார் ஆதரித்துப் போவது வெறுக்கத்தக்கதாயிருக்கிறது. கிற்க,

எங்கள் ஊர் கோயில் நிர்வாஹ ஆபீஸர் சொந்த அபிப்பிராயம் எப்படி யிருந்தபோதிலும் டொதுஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாக நிருட்டுத்தனமாகவோ, ரஹஸ்யமாகவோ பாவேசிப்பவரைக் கனம் பிரதம மந்திரி எச்சரித்திருப்பதை நிர்வாக ஆபீசர் கவனிக்கவேண்டும். மீறி ரஹஸ்யமாக நடவடிக்கை எடுத்தக்கொள்ளும் பக்ஷத்தில் அதனுல் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களே ஷையரே பொறுக்கவேண்டும். நாங்கள் மிடி ஆலயப்பிரவேசத்தை அழுத்தமாகக் கண்டிக்கிறோம். அதற்காக நாங்கள் எவ்விதத் நியாகமும் செய்யத் தயாராயிருக்கிறோம். எங்களபிப்பிராயத்தை மீறி நடவடிக்கை எடுக்க விரும்பினுல் பொதுஜன வாக்கெடுத்தல் போன்ற ஹிராக்க முறையைக் கையாண்டு பார்க்கட்டும். இதற்குப் பொதுஜன சம்மதி கிடையாதென்பது எங்கள் உறுதி. மனப்பூர்வமாக ஆலயப்பிரவேசத்தை ஆக்ஷேபிக்கிறோம் என்று" எழுதப்பட்ட மகஜரில் ஆழ்வார் நிருகரி ஆஸ்திகர்கள் ஆயிரக்கணக்கில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். இந்த மகஜர் அதிகாரிகளுக்கு விரைவில் அனுப்பப்படும்.

5-ம் பக்கத் தொடர்ச்சி.

கலத்தை அடக்கி கூட்டத்தைக் கலைத்தனர். சப் இன்ஸ்பெக்டரும் கோவில் நிர்வாக அதிகாரியும் கோவில் வாசலே வந்து பார்க்கும் பொழுது வாசலில் ஏராளமாய் கற்களும் கப்புகளும் தீவர்த்திக் கம்பிகளும் கிடந்தன. தெய்வாதீனமாய் அபாயகரமான காயமெதுவும் ஒருவருக்கும் படவில்லை. இதற்குள் சாயங்காலம் 6 மணி யாகிவிட்டது. அன்றிரவு பூஜைகளெல்லாம் கதவைச் சாத்தினபடியே ஒழுங்காக நடந்தன. தீண்டப்படாதவர் ஒருவருமே உள்ளே வரவில்லை.

(த. தி.)

குன்னக்குடியில் நாட்டார்களின் மாபெரும் கூட்டம்

தீண்டாதார் ஆலயப்பிரவேசக்கண்டனம்

9—8—39உ புதன்கிழமை மாலை 3½ மணிக்கு கேமம், கண்டர்மாணிக்கம் பாலிய சபை முதலான நாடுகளின் நாட்டார்கள் கூட்டம் குன்னகுடியில் நடந்தது. ராளமாய் கூட்டம் வந்திருந்தது. ஆரம்பத்தில் நாட்டார்களின் ஊர்வலம் புறப்பட்டது.

"தீண்டாதார் ஆலயப்பிரவேசக்கண்டனம் மந்திரி சபை கண்டனம், சட்டசபைகள் மத விஷயங்களில் தலையிடும் அதிகாரி" குறித்து ஊர்வலம் வரும்போது ஆத்தங்குடி ஸ்ரீ நி.ப. ஜெகதீசய்யர் முக்கியமான தெருக்களில் விளக்கமாக சொற்பொழிவாற்றினர். நாட்டார்கள் மேலீதழ் சென்று ஸ்ரீ முருகபிரானுக்கு அர்ச்சனை செய்து பிரசாதங்கள் பெற்று நிரும்பினர். மேலேவிவரத்தில் இருந்துவந்த ஹரிஜனங்களுக்கு சந்தனம் விபூதி வழங்கப்பட்டது.

மேலேவிவாரத்தில் அன்னதான மண்டபத்தில் ஆத்தங்குடி ஸ்ரீ கு. வீ. ர. கதிரேசன் செட்டியாரவர்கள் தலைமையில் தேவகோட்டை அட்வகேட் ஸ்ரீ எஸ். சுப்பிரமணிய அய்யர், உள்ளூர் ஸ்ரீ கே. என். சுப்பிரமணிய சாஸ்திரிகள், ஆத்தங்குடி ஸ்ரீ மணவாளப்பக் காரர், ஸ்ரீ நி. ப. ஜெகதீசய்யர் ஆகியவர் தீண்டாதார் ஆலயப்பிரவேசச் சட்டம், காங்கிரஸ் மந்திரி சபையின் விபரீதப் போக்கு சட்டசபைகள் மதவிஷயத்தில் தலையிடும்அக்கிரமம் குறித்து விஸ்தாரமாகவும் உருக்கமாகவும் சொற்பொழிவாற்றினர். தலைவர்கள் பேசியதின் சாரமம்சம்:—

1937-வு செப்டெம்பரில் நடை பெற்ற ஸனாதன தர்ம சம்மேளனத்தில் பரதகேசத்தின் காலுபக்கங்களிலிருந்து வந்திருந்த பண்டித ரத்தினங்களின் முன்பாக ஸ்ரீ திருத்தக்காரர்கள் சாஸ்திர வாதம் செய்து அறைகூவி அழைக்க, ஒருவரும் முன்வரவில்லை என்பது பற்றியும், பரபுகவான் தாஸ் முற்சியில், ஸ்ரீ பூரி சங்காராச்சாரிய ஸ்வாமிகள் அன்று ஏலாடா ஜயிலிலிருந்த மஹாத்மாகாந்தி சம்மதி பெற்ற காங்கிஜீயுடன் சாஸ்திர வாதம் செய்ய முன் வந்த போது காந்திஜி 'பின் வாங்கியதையும், பின் தேதியூர் ஸ்ரீசுப்பிரமணிய சாஸ்திரிகள் காந்திஜியுடன் சாஸ்திரசர்சை செய்ததையும், வருப்புத் தீர்ப்பிலுள்ள தனித்தொகுதியை ஹரிஜனங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் விலக்க மஹாத்மாகாந்தி அன்று உண்ணாவிரதம் இருக்கவும் உயிருக்கு நெருக்கடி ஏற்பட்டவும் அப்போது அவர் உயிரைக்காப்பாற்ற செய்யப்பட்ட ஒப்பந்தம் முக்கியமாக வங்காள ஹரிஜனங்களுக்கு பாதகத்தை விளைவித்து விட்டதையும், தீண்டாதார் ஆலயப்பிரவேசம் அதில் அடங்கியில்லாததோடு அதனைச் சட்டத்தின் பெயரால் வற்புறுத்துவது கூடாதென அன்றே பண்டிதமதன்மோஹன மாளவியா, கவிவீந்தர் தங்கள் பலமான அதிருப்தியை தெரிவித்துக்கொண்டதையும், காசிஸ் காங்கிரஸ் தீர்மானத்திற்கு விரோதமாக சட்டத்தைப் புறக்கணித்துப் பொதுஜன அபிப்பிராயத்தை அலக்ஷியம் செய்து ஹட்மாக பிரதம மந்திரி ஆலயப்பிரவேச மசோதாவை சட்டசபைகளில், நிறைவேற்றியதை மஹாஜனங்கள் தீவிரக் கிளர்ச்சி செய்து அவர்களின் தவறை உணரச் செய்யவேண்டும் என்றும், அதனிமித்தம் உடல், பொருள் ஆவி னீன்தகளை நியாகம் செய்ய முன் வரவேண்டுமென்றும், வேண்டிக்கொண்டார்கள். கூட்டம் வர்தன உபசாரத்துடன் இரவு 10 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

(க. கி.)

காரைக்குடியில் ஆலயப்பிரவேசத்திற்கு எதிர்ப்பு

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு காரைக்குடி பேத பாடசாலையில் ஸனாதனிகள் கூட்டம் ஒன்று கூடி ஆலயப்பிரவேசத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். இக்கூட்டத்திற்கு ஸ்ரீமான்கள் ராமசாமி செட்டியார், ராமசாமி ஐயங்கார் முதலான பெரிய மனிதர்களும் ஸ்ரீமதிகளும் பெரிய மனுஷிகளும் திரளாய் வந்திருந்தார்கள். கூட்டத்திற்கு ஸ்ரீமான் ராமசாமி செட்டியார் தலைமை வகித்தார். ஸ்ரீமான் ராஜ அய்யங்கார் தலைமை விகித்தார். ஸ்ரீமான் ராஜாஜியின் முன்னுரையில் கோவில் ஸ்தாபனங்களுக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தைக் குறித்து ராளமாய் ஆதிரியர்களும் மாணவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீ ராஜாஜியிருந்து ஆலயப்பிரவேச இயக்கத்தின் சரித்திரத்தை விளக்கி, ஸ்ரீ காந்தியும் ஸ்ரீ ராஜாஜியும் இந்த இயக்கத்தில் கடந்து கொண்ட முறைகளையும் விளக்கி, மதுரை ஆலயப்பிரவேசத்திலும் காங்கிரஸ் கவர்ன்மெண்டார் நடந்துகொண்ட முறைகளையும், அவர்கள் மத விஷயத்தில் நடந்து வரும் முறையினுல் மதத்திற்கு மஹத்தான ஆபத்து ஏற்பட்டு விட்டதென்றும், இச்சமயத்தில் ஆஸ்திகர்களெல்லோரும் ஒத்துழைத்து பலமாக வேலை செய்து மதத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

ஹரிஜனங்கள் ஆலயத்தில் பிரவேசிக்கக் கூடாதென்றும், அவர்கள் தெய்வத்திலுடைய சான்னித்தியம் மறைந்து விடுகிறதென்றும், அதன் மூலமாக ராஜ்யத்திற்கும் ராஜாவிற்கும் விரோஷமான காசம் யத்திற்கும் ராஜாவிற்கும் விரோஷமான காசம் யத்தை ஏற்படுகிறதென்றும், ஹிந்து மதத்தில் உலவி வரும் ஓர் புராதனமான அரஸியான கம்பிக்கையை அழிப்பது அடியோடு அதிர்ப்யமானது.

ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் செய்து கொடுப்பதாக புனு ஒப்பக்த காலத்தில் செய்து கொடுத்ததாக சொல்லுகிறார். இது ஏழைகளுக்கு வாக்குறுதி என்றும், சொல்லுகிறார். புனுவில் ராஜாஜியும் மற்றவர்களும் ஆலயப்பிரவேசத்திற்கு வாக்குறுதி கொடுத்திருக்கலாம். இது அவரவர்கள் தனிப்பட்ட முறையில் கொடுத்த வாக்குறுதியே.

காங்கிரஸின் சார்பாக ஆலயப்பிரவேச விஷயத்தில் யாரும் யாதொரு வாக்குறுதியும் கொடுக்கவில்லை. இக்கியில் காங்கிரஸின் சார்பாக காரியம் செய்யப்புகுந்த இவர் தனிப்பட்ட முறையில் கொடுத்த பிரதிக்ஞையை நிறைவேற்றுவதற்காக பழக்க வழக்கங்களை அழிப்பது சரியல்ல என்றும் கூறினர்.

கூட்டத்தில், "மதுரையில் நடந்த கலகத்தைக் கண்டித்தும், பிரதம மந்திரி அங்கு தமது கடமை தவறியது பற்றியும்" கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிதாக நிறைவேற்றப் பட்ட ஆலயப்பிரவேசச்சட்டம் பொதுஜன ஆதரவை பெறுதது என்றும், பொதுஜனங்களுடைய நம்பிக்கையை காங்கிரஸ் மந்திரிசபை இழந்து விட்டதால் மந்திரி சபை ராஜீகாமா செய்ய வேண்டு மென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது.

காரைக்குடியில் பிரபல நகரத்தார் உள்பட பலஆஸ்திகர்கள் ஆலயப்பிரவேசத்தை எதிர்த்துப்பிரசாரம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ.நி.)

ராஜாஜியின் கூற்று

பிரதமமந்திரியின் வீண் உவமைகள்

ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார் கண்டிக்கிறார்

அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக்கு அக்கிராசனபதியாயிருந்தவரும் பிரபல நீதிவழக்கறிஞருமான ஸ்ரீமான் மயிலை எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்கள் 28-7-39. மாலை சென்னை திருவல்லிக்கேணி கல்லூரி மாணவர் கலைஞான சங்க ஆதரவில் "மதமும் ராஜீய முமும்" என்னும் பொருட்பற்றி ஒரு சிறு வதை நிகழ்த்தினார். ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸய்யங்கார் எராளமாய் ஆதிரியர்களும் மாணவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீ ராஜாஜியின் அரசியல் சரித்திரத்தை விளக்கி, ஸ்ரீ காந்தியும் ஸ்ரீ ராஜாஜியும் இந்த இயக்கத்தில் கடந்து கொண்ட முறைகளையும் விளக்கி, மதுரை ஆலயப்பிரவேசத்திலும் காங்கிரஸ் கவர்ன்மெண்டார் நடந்துகொண்ட முறைகளையும், அவர்கள் மத விஷயத்தில் நடந்து வரும் முறையினுல் மதத்திற்கு மஹத்தான ஆபத்து ஏற்பட்டு விட்டதென்றும், இச்சமயத்தில் ஆஸ்திகர்களெல்லோரும் ஒத்துழைத்து பலமாக வேலை செய்து மதத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

ஹரிஜனங்கள் ஆலயத்தில் பிரவேசிக்கக் கூடாதென்றும், அவர்கள் தெய்வத்திலுடைய சான்னித்தியம் மறைந்து விடுகிறதென்றும், அதன் மூலமாக ராஜ்யத்திற்கும் ராஜாவிற்கும் விரோஷமான காசம் யத்தை ஏற்படுகிறதென்றும், ஹிந்து மதத்தில் உலவி வரும் ஓர் புராதனமான அரஸியான கம்பிக்கையை அழிப்பது அடியோடு அதிர்ப்யமானது.

ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் செய்து கொடுப்பதாக புனு ஒப்பக்த காலத்தில் செய்து கொடுத்ததாக சொல்லுகிறார். இது ஏழைகளுக்கு வாக்குறுதி என்றும், சொல்லுகிறார். புனுவில் ராஜாஜியும் மற்றவர்களும் ஆலயப்பிரவேசத்திற்கு வாக்குறுதி கொடுத்திருக்கலாம். இது அவரவர்கள் தனிப்பட்ட முறையில் கொடுத்த வாக்குறுதியே.

காங்கிரஸின் சார்பாக ஆலயப்பிரவேச விஷயத்தில் யாரும் யாதொரு வாக்குறுதியும் கொடுக்கவில்லை. இக்கியில் காங்கிரஸின் சார்பாக காரியம் செய்யப்புகுந்த இவர் தனிப்பட்ட முறையில் கொடுத்த பிரதிக்ஞையை நிறைவேற்றுவதற்காக பழக்க வழக்கங்களை அழிப்பது சரியல்ல என்றும் கூறினர்.

கூட்டத்தில், "மதுரையில் நடந்த கலகத்தைக் கண்டித்தும், பிரதம மந்திரி அங்கு தமது கடமை தவறியது பற்றியும்" கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிதாக நிறைவேற்றப் பட்ட ஆலயப்பிரவேசச்சட்டம் பொதுஜன ஆதரவை பெறுதது என்றும், பொதுஜனங்களுடைய நம்பிக்கையை காங்கிரஸ் மந்திரிசபை இழந்து விட்டதால் மந்திரி சபை ராஜீகாமா செய்ய வேண்டு மென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது.

காரைக்குடியில் பிரபல நகரத்தார் உள்பட பலஆஸ்திகர்கள் ஆலயப்பிரவேசத்தை எதிர்த்துப்பிரசாரம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ.நி.)

கீழச்செவல்பட்டியில் பொதுக்கூட்டம்

8—8—39 இரவு மலேயிலிருந்து திரும்பிவரும் நாகரக்கொட்டகையில் உள்ளூர் ஸ்ரீசண்முகனுருக்கள் தலைமையில் முன்னிக்கண்டனக்கூட்டங்கள் நடக்கின. பல பிரமுகர்கள் பேசுகிறார்கள். கூட்டத்தில் பிரசங்கம் புரிகின்றனர்.

ஸ்ரீராகாதிருவிழா.

சரிதாமிர்தஸாரவங்கிரஹம்

சீர்காழி ப்ரம்மஸ்ரீ ரா. சப்பாராமய்யரால் எழுதப்பட்டது.

சரித்திரம் தமிழிலும் சேர்த்திரம் ஸம்ஸ்கிருதத்திலும் உள்ள புத்தகம் விலை அணு 0—8—0

தை தமிழ் சரித்திரம் மட்டில் புத்தகம் விலை அணு 0—5—0

ஸமஸ்கிருதம் ஸ்தோத்திரங்கள் மட்டில் புத்தகம் விலை அணு 0—5—0

கிடைக்குமிடம்: ஸுதர்சன அச்சுக்கூடம் ஸ்ரீரங்கம்.

ஆலயப்பிரவேசம்

(சேங்காலிபுரம் ஸ்ரீ வி. பஞ்சாபகேசய்யர்)

[சென்ற வாரத் தொடர்ச்சி]

பிரதம மந்திரி ஸ்ரீமான் ஆச்சாரியார் பக வத் கீதைக்கு ஓர் வியாக்யானம் எழுதியிருக் கிறரென்று முன்னமே சொல்லப்பட்டது. அதில் "அஹிம்சை ஒன்று" என்ற அத்தி யாயத்தில் அடியிற்கண்ட படி வரைந்திருக் கிறார்.

"எல்லா ஸமூதாயங்களிலும் தொழில் "ஒழுக்கு முறைபோன்ற முக்கியமான அம்சம். இது ஜாதிக்மமாக, அதாவது அந்த ஜாதிக்கு அந்தந்த வேலை யென்ற முறையாகவு மிருக்கலாம். அந்தந்தக் குடும்பம் அந்தந்த வேலைக்கு என்றும் இருக்கலாம். அல்லது பிறப்புமுறையை நீக்கி, வேறு முறையாகவுமிருக்கலாம்; எந்த முறையை அநுசரித்தாலும் தோ வாக்கியங்களின் தத்துவம் முற்றிலும் பொருத்தம். இந்த வேலை உயர்ந்தது இது தான் கல்லது. இதைச்செய்வேன் எனக்கிட்ட வேலை வேண்டாம், என்று யாரும் சொல்லக்கூடாது."

இம்மாதிரி ஒழுக்கு முறை எல்லா உல க விவகாரங்களிலும் அவ்யமா மிருக்கும் போது ஹிந்து மதமென்ற மகா சமுத்திரத் தில் பற்பல சமயத்தினரின் ஆலய வழிபாட் டொழுக்கு முறையில் மட்டும் கூடாதென்று என் சொல்ல வேண்டும்?

ஹரிஜனங்கள் ஐயனாரையும் மாரியம்மனை யும் வழிபடுவதென்பது அரசாகீக முறை; அவர்கள் மீனாக்ஷியம்மனையும் ஸ்ரீ ரங்கனாதரை யும் தான் வழிபட வேண்டுமென்றால் அதற் கும் வழியில்லாமலில்லை. இதவும் போதாமல் சர்வாதிகாரத்தோடு வேண்டு மென்றாலும் மதுரை மீனாட்சி கோவிலையும் ஸ்ரீ ரெங்கம் ரெங்காதர் கோயிலையும் விட மிக வேலைப் பாடுள்ள இன்னும் கல்ல கார்ற்று வெளிச்ச மூள்ள பெரிய பெரிய கோவில்களைக்கட்டிக் கொடுக்கலாம். இது தான் நியாயம். இதை விட்டு எந்த மஹான்களாலோ எப்போதோ ஏற்படுத்தப்பட்டு பிராசீனமாய் நடத்த வரும் தர்மன்தாபனங்களை அதை மேற்படுத்தியவர் களின் நோக்கத்துக்கு விரோதமாக அதிகா ரம் செல்வாக்கு முதலிய பலங்களைக்கொண்டு மாற்றுவது நியாயமென்றுவதுண்மையென் றுவது தோன்ற வில்லை.

கோவில் நிர்வாஹத்தை மாற்ற யோஜனை?

எல்லாவற்றிலும் முக்கியமாக இனி "கோ யில்களையும் தர்மஸ்தாபனங்களையும்" அர சாங்கமே கோரிக் நிர்வஹிக்க சட்டம் செய் யப்போவதாக சொல்லப்படுகிறது. இது எப்படி நியாயமான்கள் மனதில் நியாய மென்று தோன்றுகிறதோ தெரியவில்லை. "மத விஷயங்களில் அரசாங்கம் தலையிடுவ தில்லை" யென்று விக்டோரியா மகாராணி யின் உறுதிமொழி கொடுத்திருக்கிறார். அதில் உறுதிமொழி அரசாங்கமென்றும், ஜகராயக வெள்ளைக்கார அரசாங்கமென்றும், ஜகராயக அரசாங்கமென்றும் வித்தியாசம் காண வில்லை. ஒட்டலத்தைக்கொண்டு தன்னுல் வரும் ஒரு அரசாங்கம், அது எத்தன்மை யதாயினும், இந்த வாக்குறுதியை மீறிச் செய்வது ஒருவருக்கும் நியாயம் செய்வதா காது. திருவனந்தபுரம், மைசூர் முதலிய ராஜ் ஜியங்கள் ஹிந்துக்களால் ஆளப்படுகிறது. அந்த அரசாங்கங்கள் ஹிந்து கோயில்களை கோரில் நிர்வாகம் செய்வது நியாயமே. இர் நியாயில் மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்களும் ஹிந்துக்களின் அரசர்வ மல்ல. அதன் நற்கால வர்கள் ஹிந்துவையிருந்தாலும் முஸ்லீம் கிருஸ்தவர் முதலிய காஞ்சித மதஸ் தர்களுக்கும் பொதுவான அரசாங்கம். இன் நல்லாவிடினும் காலை அதன் நிர்வாகி மக மதியராகவோ அல்லது வேறு மதத்தினராக வோ வரலாம். ஆகையால் இம்மாதிரி அர சாங்கத்தால் மதசம்பந்தமான கோயில்கள் நிர்வஹிக்கப்படுவதென்பது முறையல்ல. ஹிந்து கோவில்களை நிர்வஹிக்க எடுத்துக் கொள்ளுவதென்றால் அதைப்போலவே மக மதியர் கிருஸ்தவர் கோவில்களையும் எடுத்துக் கொள்ளப்போகிறார்களா? கட்சி பலத்தால் அப்போதைக்கப்போது மாறக்கூடிய அர சாங்கத்தால் மதவிஷயங்களில் அதிகாரம் ஏற்றுக்கொள்வது மிகுந்த ஆபத்காமான கா ரியம். இதற்கு முன் அதிகாரத்திலிருந்த கட் சியார், ஏதோ கோக்கங்கொண்டு, கட்சிக் குப் பலங்கட்டவோ மதஸ்தாபன போர் டை ஏற்படுத்தி கோயில்களைபெல்லாம் தங் கள் கட்டியதினத்தில் கொண்டு வந்தார்கள். அப்போதும் பலர் ஆட்சேபித்தும் பயன்பட வில்லை. அதிகாரம் வைத்துக்கொண்டிருப் போர் பிடிவாதமாயிருந்தால் எந்த ஆட்சேபம் தான் நிலைநிற்கும்! இப்போதுள்ள அரசாங் கம்மதஸ்தாபன போர்டையும் எடுத்து விட்டு கோயில்களை கோர் அதீனத்தில் வைத்துக் கொண்டுவர நினைக்கிறார்கள். எல்லாவற்றிற் கும் காரணம் முந்திய நர்மிஷ்ட அரசர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வின்தாமான செ த்துக்களே யென்று நினைக்கவேண்டியிருக் கிறது. இன்னும் பின்னல் வரப்போகும் ஒரு அரசாங்கம் "ஹிந்துக்கோயில்கள் பற்பல மத மாயிருப்பதால் ஹிந்து மதத்திற்குள் பலவித வித்பாசங்களும்சச்சரவுகளும் ஏற்பட ஹேது வாயிருக்கிறது. இது சுய ஆட்சிக்கு இடைஞ் சல் வேதாந்த சாஸ்திரத்தில் எல்லா ஜீவன்களி டத்திலும் ஈசுவரன் இருப்பதாய் சொல்லப் படுகிறது, ஆகையால் கோயில்கள் அனுவசியம், அவைகளையெல்லாம்விட்டு அந்த விடங்களை அந்த சொத்துக்களைக்கொண்டு ஆஸ்பத்திரிகளாய் மாற்றிவிட வேண்டும்" என்று சட்டம் கொண்டுவந்து அதை நிறை வேற்றி விடமாட்டார்களேன்று யாரால் நம்ப முடியும்!

ஆகவே எல்லா ஆபத்தும் இந்த ஹிந்து மதத்திற்குத்தான் வந்திருக்கிறது. மகாரா ணியாரின் உறுதிமொழியை நம்பி மதத் திற்கு வரும் இடைஞ்சல்களை அரசாங்கத் தில் முறையிட்டுக்கொண்டுதான் நிவர்த்திக்க வழிதேடவேண்டும். அரசாங்கமே, கல்ல எண்ணத்தாலேயே, பின்னல் வரக்கூடிய ஆபத்துக்களை உணராமல் பிடிவாதமாய் இப் படிப்பட்ட காரியங்களைச் செய்தால் பரி டம் போய் முறையிடுவது? "தெய்வமே கதி" யென்பதைத்தவிர வேறு வழியில்லை தெய்வந்தான் அவர்களுக்கு கல்ல புத்தி புகட்டவேண்டும்.

கடைசியில் ஒரு வார்த்தை.

இப்போது சீர்திருத்தம் செய்ய முன் வருபவர்கள், ஹிந்து மதத்தை ஒழித்தவிட வேண்டுமென்றுவது அதை நிலைகுலைச்செய் யவேண்டுமென்றஎண்ணத்தோடாவது முன் வரவில்லையென்பது நிச்சயம். அவர்கள் ஹிந்துமதம் ன்நிரமாயிருக்க வேண்டுமென்று தான் விரும்புகிறார்கள். ஆனல் அத்தர்க்கா லம் தோன்றும் ஒரு நிறப்பிட்ட பிரச்சினை சமாளிப்பதற்கு அப்போதப்போது தோன் றும் ஒரு யோஜனையானது, முன் பின் யாப் போவதை சிந்தித்துப் பார்க்க முடியாமல், Hero worship முறையில் உத்ஸாஹத்து டனும், கட்சிக்கட்டுப் பாட்டு முறையில் ஆட்சேபனை பேசமுடியாமலும், கைகொள் ளப்படுகிறது. அதனல் கேரும் அசத்தங்கள் பின்னல் உணர்ந்து பரிதபித்தாலும், நிவர்த் திக்க முடியாமல் போய்விடும். ஆகையால் அதிகாரத்திலுள்ளபெரியோர்கள் இப்போதே

ஆலயப்பிரவேசக் கண்டனம்

குடந்தை அர்ச்சகர்கள் சங்கம்

இந்தக் கூட்டத்தில் பிசன்னமாயிருந்த வைசாரியர்கள் பட்டாசாரியர்கள் இவர் களை அங்கத்தினர்களாய் கொண்ட ஒரு "அர்ச்சகர்களின் சபை" ஸ்தாபிக்கப்பட் டது. அதற்கு ஸபாபதி சிவாசார்யர் தலை வராகவும், கோபால கிருஷ்ண பட்டாசார் யார் காரியதரிசியாகவும் ஏக மனதாகதேர்ந் தெடுக்கப்பட்டார்கள்.

இந்த அர்ச்சகர்களின் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களை, இந்தியா கவர்னர் ஜெனரல், சென்னை கவர்னர், சென்னை பிரதமமந்திரி, ஹிந்துமத பரி பாலன இலாகா மந்திரி இவர்களுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

கீழச்சீவல்பட்டி

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு கீழசீவல்பட்டி கோயில் டிரஸ்டி ஸ்ரீ சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் தலைமை யில் ஆத்தங்குடி ஸ்ரீ நி. ப. ஜெகதீசய்யர், ஸ்ரீ சு. வீர. கதிரேசன் செட்டியார். ஸ்ரீநிரு வேங்கடய்யங்கார் முதலானோர் "ஹிண்டா தார் ஆலயப்பிரவேச சட்டத்தையும்" காங் கிரஸ் மந்திரி சபையின் போக்கைக் கண்டித் தும்" பிரசங்கம் செய்தார்கள்.

சிறுவயல்

4—8—39 வெள்ளிக்கிழமை மாலை 3மணிக்கு ஐயனார் கோவிலில் கேமம் நாட்டார் களின் விசேஷக் கூட்டம் நிண்டதார் ஆலயப்பிரவேசத்தைக் கண்டிக்கக் கூடிற்று. கூட்டத்தில் ஆத்தங்குடி ஸ்ரீ நி. ப. ஜெக தீசய்யர், ஸ்ரீ சு. வீர. கதிரேசன் செட்டி யார் சொற்பொழி வாற்றினர்.

(க.நி.)

பழைய சரித்திரத்தை சிந்தித்துப்பார்க்கக் கோருகிறேன். விக்டோரியா மஹாராணி யார் உறுதிமொழி யில்லாமல் அரசாங்கம் மத விஷயங்களில் இது வரை கல்ல எண்ண தடனேயே பிரவர்த்தித்திருக்தாலும் ஹிந்து மதம் என்னவாயிருக்கும் என்று கொஞ்சம் யோஜித்துப் பார்க்கக் கேட்டுக் கொள்ளுகி றேன்.

இப்போது ஆலயப்பிரவேசத்துக்கே இடமில்லாமல் கூட போயிருக்கும். ஆகை யால் எந்த ஜனப்பிரதிநிதி அரசாங்கமும் மத விஷயங்களில் தலையிடாமலும், பற்பல மதத் தினர்களின் கொள்கைகளுக்கும் யாதொரு குறைவும் வராமல் காப்பாற்றிக்கொடுக்கவும், வேண்டும். அப்படிக்கல்லாமல் ஏதோ ஒரு சமயத்தில் தோன்றும் மனோ நிச்சயத்தை கம்பி இந்த "கடுகிலைமை"க் கொள்கையை அரசாங்கம் கைவிட்டால் அது "வேலியே பயிரை மேய்வதே"யாகும். மதமும் நிற்காது. அரசாங்கமும் நிற்காது. ஆகையால் தயவு செய்து பழைய சரித்திரத்தை யோஜித்துப் பார்த்து அரசாங்கம் மதத்தையும் தங்களை யும் கெடுத்துக் கொள்ளாமலிருக்க வேண்டப் படுகிறது.

பிரும்மஸ்ரீ அருட்கவி ந சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

ஸ்ரீ ரகர விமர்சனம்.	0	12	0
ஸ்ரீ குரு விமர்சனம்.	0	5	0
வரிவஸ்யா ரஹஸ்யம்.	1	0	0
ஸ்ரீ லலிதாத்ரிசதீ பாஷ்யம்	1	0	0
ஸ்ரீவித்யாபரப்யாபத்தி	2	0	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன அச்சுக் கூடம் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு. கும்பகோணம்.

நமது கடமை.

(ஸ்ரீ K. V. A. சாஸ்திரி, புனு.)

எங்கும் நவ நாகரீகம் வலுத்த இக்காலில் கம்மைச் சேர்ந்த பலரே மேன்மையான கம் ஜாதி மதம் இவைகளை மறந்து ஆசாரங்களை யும் புறக்கணித்து வருகின்றனர். அரித் தையாகவும் உபஜீவனத்திற்காகவென்றும் பிறரின் வேஷம் பரஷை ஆசாரங்களை கைக் கொண்டனர், அரசாங்கமோ, மற்ற அதி காரிகளோ தங்களுக்கு சம்பந்தப்பட்ட காரி யங்களில் மாத்திரம் அதிகாரத்தை செலுத் துவார்களேயன்றி அவைகளுக்கு சம்பந்தப் படாத கர்மானுஷ்டானஞ்சி ஷை விஷயங் களில் தலையிடுவதாக யாவரும் ஒப்புக் கொள்ளத்தக்க விஷயம் என்பது யாவரு மறிந்ததே.

சிலர் தான் ஆசாரஹீனை விட்டதுடன் ஏனையோரையும் தம்முடன் சேர்க்க முன் வருகிறார்கள். பல அஸத்யுக்தி வாதங்கள் கற்பித்து வேத சாஸ்திர ஆசாரங்களை இகழ்கின்றனர். தாமும் வஸிஷ்டர், வியாஸர் இவர்களுக்கு ஞானத்திற்கொப்பானவான தர்ம சாஸ்திரங்களை இக்காலத்திற்கு தக்கபடி மாற்றி வருகின்றனர். (இவ்வூரில் ஸம்ஸ் கிருத பாஷைகளிலே அச்சிட்டு வெளியான கிரந்தங்கள் கிடைக்கும்.) சிலர் மதாதிபதி புகுந்து நிரும்புகின்றனர். ஸங்கியாதி கர்மா களில்லாமலும் பூணூல் தரித்த மாத்திரத் தால் புரோஹிதர் முதலியவர்களின் உதவி யால் பல கர்மங்களை செய்து வருகின்றனர். (இனியும் எழுதிக்கொண்டே போனால் விரி யும்.) கொஞ்ச காலமாக ஏற்பட்ட இவ் வித அதர்மங்களை முன்பே அறிந்த அத்தந்த குடும்பத்தின் பெரியோர்களும் வித்வத் பரிஷத்துகளும் தர்மஸ்தாபனா ஸ்ரீ மடாதி பதிகளும் நிவர்த்திக்க வேண்டியிருந்தது.

தற்காலம் நம்மினத்தினரே அரசாங்க அதிகாரிகளுக்குகந்தபடிநடந்து உதவி வருவ தால் நமக்கு நமது ஆசாராங்களில் பலம் குன்றவும், அரசாங்கங்கள் நமக்கு விரோத மாக பிரவர்த்திக்கவும் இடமளித்து விட்டது.

ஆதலால் இப்போது நமது மதாசாரவிஷய மாக நடை. அரசாங்கங்களை எதிர்பார்ப்பது பயனற்றதாகும். நாமே சீர் நிருத்தம் செய்து கொள்வதே நலம்.

நமது மதாசாரங்களில் சிரத்தையுள்ளவர் களையும் தெரியாதவர்களையும் நடை ஆசாரா ங்களை போதித்து அவர்களை நல்வழியில் கொண்டுவர வேண்டும்.

தர்ம சாஸ்திரங்களில் வெவ்வேறு அபிப் பிராயம் ஏற்பட்டால் வித்வான்கள் ஸ்ரீ மடாதிபதிற்கு அறிவித்து ஸன்னிதானத்தில் நிர்மானித்தபடியே நடக்க வேண்டும்.

பத்திரிகைகளில் பல அபிப்பிராயங்களை எழுதுவதால் பயனுமில்லை. பரிகாசத்துக்கு இடமாகும். கோயில் குளம் வகைகளில் நமதாசாரவிரோதமாக அதிக்ரமம் ஏற்பட் டால் நாம் விலகியிருத்தலே நல்லது. முற் காலத்தில் அரசர்கள் பிராமண விவகாரம் செய்வதற்கிடம் பயபக்தி இவைகளுடன் விளங்கினர். இப்போது இக்குணங்களில் லர்களையல் நாம் நடை விஷயங்களில் அவர்களிடத்து முறையிட்டு யாதபயன். அவரவர்கள் கிருஹங்களில் ஞானிகளும் விக்காரிகளை அமைத்து வழி படுவதற்கு அவகாசமில்லையா? பொதுக் கோவிலில் உபவித்தர்களை மோக்ஷமுண்டு.

ஆதலால் இனியாவது நாம் ஜாக்கிரதை யுடன் அடியிற்கண்ட முறைகளை அனுஷ் டிக்க முயன்று வரவேண்டும்.

உயர்வு—தாழ்வு

(ஸ்ரீ M. S. சுப்பிரமணி அய்யர், சென்னை)

பால் வேண்டாத பூனை உண்டா? பணத் தை விரும்பாத ராஜா உண்டா? மேன்மை வேண்டாத மனிதன் தான் உண்டா? இல்லை. மேன்மைக்கு வழிதேடுவர் எத்தனை பேயர்?

உயிர் என்றால் யாருக்கும் வெல்லம். உயி ரை விட, மனமார ஒருவனும் தணியான். உயிர் இருக்கும் வரையில் உடம்புக்கு ஒரு மகிமை. உயிர் போய்விட்டால் சிறுமைதான். எனவே உயிரினும் சிறந்த பொருள் இல்லை என்பர். உயிரினும் சிறந்த பொருள், உயிருக் கே உயிரான பொருள், ஒன்றுளது. அது பாது?

"பெண்ணே! என் கண்ணே! கேகயன் மகளே! என் கண் வேண்டுமா? தருகிறேன் அல்லது என் உயிர் வேண்டுமா? தருகிறேன்" என்றான். ஏன்? உயிரினும் சிறந்த—உயிருக்கு உயிரான— பொருளைக் காப்பாற்ற! அப் பொருள் எது? ஒழுக்கம் என்கிறார் திருவள் ளுவர். தர்மம் என்பர் வடநூலார். ஒழுக்க மே தர்மம்! தர்மமே ஒழுக்கம்!

உயர்வும் திருவும் தகவும் பிறவும் பெற்றி ருக்தான் தரியோதனன். இறக்தாரை எழுப் புதற்குரிய மந்திரத்தையும் பெற்றிருந்தான். ஆனலும் என்ன? அவனோ ஒழுக்கம் குன்றி னான்; ஒழுக்கம் குன்றினன்; அவனைகொண் டான். மேன்மையெல்லாம் வீணாயிற்று. வேறு சான்று வேண்டுமோ?

உயிரினும் சிறந்த ஒழுக்கம், யாரிடமும் சிறந்த தர்மம் குறைவதால், குலவளம் கொள் ளவிப்புக் கொள்கின்றது. ஆதலின், மக்கள் மடிகின்றனர். ஒழுக்கம் ஒங்கின், தர்மம் தலைதூக்கின், தாணி தலை சிறக்கும். அத்த கைய ஒழுக்கத்தைக் கைவிடாதிருக்கக் கங்க ணம் பூணுவார் எத்தனைபேர்? கான்தோறும் அன்னரின் தொகை பெருகுமா? பதில் வேண்டும். வந்தேமாதரம்.

(கபிரைட்)

மன்னர்குடி

"அர்ச்சகர்கள் ஆட்சேபம்"

3—8—39 மாலை மன்னர்குடி ஸ்ரீராஜ கோபாலஸ்வாமி திருக்கோயிலில் அர்ச் சகர்கள் ஒரு விஞ்ஞாபனத்தில் கையெழுத் திட்டு ஆலய நிர்வாக அதிகாரிக்கு அனுப் பியுள்ளார்கள். அதில் "ஆதிராவிடர்கள் ஆலயங்களில் பிரவேசிப்பதைத் தாங்கள் எதிர்ப்பதாயும் அந்த இயக்கத்திற்கு எள்ளள வும் ஆதரவுகாட்ட முடியாதென்றும்", குறிப் பிட்டிருக்கிறார்கள்.

ஸனாதனிகள் தினசரி மாலையில் விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தைக் கூறிக்கொண்டு பொது விடங்களில் ஊர்வலமாய் வருகின் றனர்.

மன்னர்குடியில் பொதுமக்கள் யாவரும் ஆலயப்பிரவேசத்தை வன்மையாகக் கண்டித்து வருகிறார்கள். (கு. நி)

The Premier English Weekly Devotde to the cause of Sanatana Dharma.

"Dharmarajya"

(Official organ of the Dharma Sevaka Sabha).

Patron Founder & Spiritual Director:
H. H. Sri Sankaracharya, Puri.

Widely circulated in India, Burma & Ceylon.

Best Medium for Advertisement

Annual Subscrption Rs. 5.

Apply to:—
The Manager, "DHARMARAJYA'
Chandi Chowk, Delhi.

(21528)

மதுரை

வைதிக ஸமாஜம்

"உபயம் நிறுத்தப்பட்டது"

மதுரை வைதிக ஸமாஜம் வைதிகர்களால் பிறி வருஷமும் ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள் ஆடி உத்ஸவத்தில் கல்யாண மண்டபத்தில் நிருக்கண்ணைத்து பிரதி தினமும் அம்பாளுக்கு அலங்கார நீராஜனங்கள் கடத்தி வேத பாராயணங்களும் கடத்துவது வழக்கம்.

இவ்வருஷம் 8-7-39ல் ஆலயப்பிரவேச அஸம்பாவிதம் கடந்து விட்டபடியால் மேற்படி கைங்கரியங்கள் கடத்தலில்லை. தற்காலம் மதுரை அம்மன் சன்னதி தெரு ஸ்ரீ சிருங்கேரி ஆசார்யாள் மடத்தில் ஆடிமீ 12உ சுக்ல வாரம் முதல் ஸாமூஹ வைதிக்கர்களால் மஹா ருத்ரம் ஆரம்பிக்கப்பட்டு 19உ சுக்ரவாரத்தன்று தசாம்ச ஹோமம் கடந்தது. ஹோம தினத்தன்று வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்க அத்யக்ஷர் ராவ்சாஹேப் ஸ்ரீ என். நடேசய்யர், மதுரை அட்வகேட் ஸ்ரீ என். எஸ். விசுவநாதய்யர் இன்னும் பல பிமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீ வெ. மகாதேவ தீக்ஷிதர் ஆசாரியமும், காளீபார்கோவில் ஸ்ரீ காளீசுவர தீக்ஷிதர் பிரும்மத்வமும் வஹித்து கடத்தினார்கள். ஸ்ரீ காளீசுவர தீக்ஷிதர் அவர்களால் ருத்ராத்யாயிக்ள ஸிலிக்குகளுக்கு நாதார்யம் செல்லி இதிலிருந்தே நமக்குஸகல அரிஷ்டமும் நிவர்த்தியாகி அம்பாள் திருபை சீக்கிரம் ஏற்படும் என்று அழகாக உபன்யஸித்தார்.

பிறகு நமது ஸனாதன தர்ம தேதாவான ஸ்ரீ நடேசய்யர் கண்ணப்ப நாயனார், பத்மபாதர் முதலியவர்களுடைய பக்தியை விளக்கி எல்லரும்ஸ்ரத்தா பக்நிபூர்வகமாகச் செய்வதற்கு உத்ஸாஹமூண்டு பண்ணினர்.

பிறகு ஷே மடத்தில் ஆசார்யாளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ விசுவேசுவர மகாலிங்கத்துக்கு ஷே மஹாருத்ரம் ஆரம்பித்தது முதல் பிரதிதினமும் விசேஷ அபிஷேகாதிகள் கடந்து வருவது போல் அன்று மிகவும் விசேஷமாக கடந்தது. ஸ்நிரிகளும் புருஷர்களும் கூட்டமாக வந்திருந்தார்கள். எல்லோருக்கும்பிரஸாதம்விநியோகித்தவுடன் ஸ்ரீ மகாதேவ தீக்ஷிதர் திருஹத்தில் வந்திருந்த பிரம்மஜ்ஞைத்மர்களுக்கு ஸ்தர்ப்பணை கடந்தது. ஷே ஸமாஜத்தாரால் அநி ருத்நிர மாகவே கடத்த தீர்மானித்து இண்டாவது ம்ஹா ருத்நிரமும் முடிந்த ஆடி மீ 28உ பானுவாரம் நசமச்ச ஹோமமும் கடைபெற்றது. ருத்ரம் மூன்றுவதாக ஆரம்பிக்கப் பட்டது. பிரதிதினமும் இரவு மணி முதல் ஸஹஸ்ர நாமசஹ ஜபங்களும் நடைபெற்ற வருகிறது.

8-7-39 அஸம்பாவிதம் கடந்தது முதல் நாளது வரையில் மதுரையிலுள்ள ஆஸ்திக பிராம்மண பிராம்மண அல்லாதார்களும் கோவிலுக்குள் சென்று தரிசனம் செய்வதில்லை. ஸ்நீரிகள் விசேஷமாக அடியோடு நிவ்ரத்தி பிரதக்ஷணம் செய்வதையும் நிறுத்திவிட்டார்கள்.

(ஒ. நி.)

மேலூர்

மேலூர் திருவாதவூரில் ஒரு மஹாபெருங் கூட்டம் கூடிற்று. ஸ்ரீமான்கள் என். ஆர். திருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஜீ. ஏ. விஸ்வ நாத சாஸ்நிரிகள், சத்ய வேல் பிள்ளை முதலியவர்கள் ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்துப் பேஜினர்கள்.

சிவபுரம்

தீண்டாதார் ஆலயப்பிரவேசக் கண்டனம்.

கும்பகோணத்திற்கருகாமையிலுள்ள சிவபுரத்தில் ஆகஸ்டு மீ 13உ ஞாயிற்றுகிழமை மாலை 3 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் கடைபெற்றது. அக்கூட்டத்திற்கு இலக்துரை ஸ்ரீ வெங்காஜடேச சர்மா தலைமை வஹித்தார்.

தலேவர் ஆலயப்பிரவேசம் அதிஹி என்றும், அதனல் அநேக கஷ்டங்கள் இந்தமதத்திற்கு ஏற்படுமென்றும், சாஸ்நிரங்களில் ஒவ்வொரு வர்ணத்தாருக்குத் தக்கபடி ஆசார அனுஷ்டானங்கள் கூறி இருக்கிறது என்றும், ஹரி ஜனங்களுக்கும் உத்ஸவ காலங்களில் வீதியில் ஸ்வாமி தர்சனம் செய்ய தற்கதியடைய வழி இருக்கிறதென்றும், ஹரி ஜனங்களின் ஆலயப்பிரவேசம் அனுசிதம் என்றும் விளக்கினர். பிறகு ஸ்ரீ என். நடராஜய்யர் பேசுகையில் கமது ஹித்து மத அதிஷ்டானங்களை விட்டு கழுவி ஹிந்துக்கள் நடப்பதால் தான் பிராஹ்மண்யம் உலகத்தில் கூட தசை அடைந்திருக்கிற தென்றும், இனியாகிலும் ஹிந்துக்கள் ரெத்தையுடன் அவர்களது அதிஷ்டானங்களைச் சரிவரச் செய்து கொண்டு ஹிந்துமத தர்மத்தை பழைய ஸ்திதிக்கு கொண்டு வரவேண்டும் என்று அநேக ளைகே நிருஷ்டாந்தங்களோடு விரிவாகப் பேசித் தான் முழுமனதுடன் ஹரிஜன ஆலயப்பிரவேசத்தைக் கண்டிப்பதாகக் கூறினர். ஸ்ரீ ஸ்வாமிநாதஸிவசாரியார் ஆலயங்கள் ஆகம முறைப்படி தான் கட்டப்பட்ட தென்றும், பூஜை செய்யப்படுகிற தென்றும், ஆகமங்களில் இன்னின்ன வர்ணத்தார், இன்னின்ன இடம் வரையில் தான் ஆலயங்களில் போகலாம் என்றும் இதற்கு மாறுக நடந்தால் பிராயச்சித்தம்,சம்ப்ரோக்ஷணம் முதலிய கர்மாக்கள் செய்யவேண்டுமென்றும், செய்யாமல் இருந்தால் ராஜாக்களுக்கும் தேசத்திற்கும் கேடு விளையும் என்றும் சாஸ்நிரங்களில் சொல்லி இருப்பதாகவும், இப்பவும் சில முக்கிய ஆலயங்களில் ஸ்வாமி வீதிபுறப்பு கோவிலுக்கு வந்தவுடன் "சண்டாள பிராயச்சித்தாபிஷேகம்" என்ற சுவாமி சுத்திக்காக ஓர் கர்மா நடத்தப்படுகிறதென்றும், மிஸ்டாமாய் ஆலயப்பிரவேசம் அதற்காக எற்படுத்தப்பட்ட சட்டம் முதலியவைகளை எதிர்ப்பதாகவும் கூறினர். பெரது ஜனங்கள் எகமனதாக ஆமோதித்தனர். தலேவர் முடிவுரையுடன் கூட்டம் மாலே ஐந்துமணிக்கு இனிது முடிந்தது.

(க.கி.)

ஸ்ரீ சங்காசார்யார் ஸ்வாமிகளுக்கு பிக்ஷை

ஞாயிற்றுக்கிழமை 13—8—39உ கும்பகோணம் ஸ்ரீமடத்தில் ஸ்ரீ சங்காசாரிய ஸ்வாமிகள் அவர்களுக்கு சரதுர்மாஸ்யபிக்ஷையை கும்பகோணம் சப் ஜட்ஜ் ஸ்ரீ காருபண ஸ்வாமி அய்யர் நடத்தி வைத்தார். ஆயிரக் கணக்கான பிராம்மணருக்கு போஜனம் மடத்தில் நடந்தது.

அன்றைய தினம், காலே 7 மணிக்கு கும்பகோணம் கைலாஸி காயக்கன் தெரு ஜப்பகத் தம்மாள் இரஹத்தில் பாத பூஜையும், பகல் 12 மணிக்கு ஸ்ரீமடத்தில் கும்பகோணம் தபால் ஆபீஸ் குமாஸ்தா அவர்களால் நடத்தப்பட்ட பாத பூஜையும், பிறகு 2 மணிக்கு டபீர் நடுத்தெரு ஆடிட்டர் நடேசய்யர் பாத பூஜையும் பேமணிக்கு காமாக்ஷி ஜோலியர் தெரு கடிச்சம்பாடி மிராசுதார் ஸ்ரீ வெங்கட்டராமய்யர் பாத பூஜையும் நடத்தினர்கள். ஸ்ரீமடத்தில் ஸ்ரீ ஆச்சார்யாள் முன்பாக நடந்த பாத பூஜையை ஏராளமான ஆஸ்திக மகா ஜனங்கள் ஸ்நிரீ புருஷர்கள் பரம சக்தோஷத்துடன் பார்த்து ஆனந்தம் அடைந்தது மிகவும் போற்றத் தக்கது.

(க.கி)

ஸர்வேஜனு: ஸுகினோபவந்து!

கட்டணமில்லே! அனேவர்க்கும் பரிசு!

கட்டுரைப்போட்டி.

1. கடவுள். 2. என் வாழ்க்கையின் லக்ஷயம். (100-க்கு மேல் 500 வார்த்தைகள் வரை.) எழுதியவர் வயதைக் குறித்தும் இவ்விடப் பட்டணம்கொலையுதும் வரவேண்டும்.

1-2-39-ல் எமது ஆபீஸில் சேரவேண்டும்.

1939-ல் S. S. L. C. பெற்றவர்க்கும் இவ்வருஷம் VI பாரம் வாசிப்பவருக்கும் 1 அணு தயாற்லே உடனே யனுப்பிஜல்

தோத்நிரத்நிரட்டு இனும்!

இனும் பிரசங்கள்! அச்சடித்தல் இனும்!

ஸர்வஹித ஸ்வதிர்யமண்டலம்,
9 தண்ணீர்ப்பந்தல் ஸ்டோர்,
தெப்பக்குளம் போஸ்ட், நிருச்சி.

உங்கள் நாக்கை ஏமாற்றுகிறீர்கள்

சாதாரணமாக மணத்திற்காகத் தயாரிக்கப்படும் பெருங்காயம் யாதொன்றுக்கும் பிரயோசனப்படுவதில்லை. உங்கள் நாக்கை ஏமாற்றுகிறது. புத்தி சாலிகள் தங்கள் உணவுப் பொருள்களை வாங்குவதில் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். அவர்கள் ஸயண்டிபிக் T. T. பெருங்காயத்தையே கேட்கிறார்கள். ஏனென்றால் அது நல்ல சரக்கு என்று அவர்களுக்குத் தெரியும். பதினாறு வருஷ ஆராய்ச்சியின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஸயண்டிபிக் T. T. பெருங்காயம் 20-20% அயத் சத்தினுல் காப்பாற்றப் படுகிறது. அதற்கு நறமணமும் நற்சுவையும் உண்டு.

ருசிகரமான சாப்பாட்டிற்கும் ஜீரணத்தை சுலபமாக்கவும் பரிசுக் கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

ஒரு பவுண்டு ரூ. 1—14—0



Printed by S. Kalyanasundaram, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikacharlar, and S. Kalyanasundaram.

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. ஸர்மா)

ஸ்ரீமதாசார்ய கருணை!! ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளது ஆக்ஞை, பெரும்பாலும் ஒவ்வோர் சனி ஞாயிறிலும் ஒவ்வோர் ஊர் சென்று ஆலயப்பிரவேசத்தைக் கண்டிக்கும் படியாக அடியேனுக்குக்கிடைத்த கடிப்பதில் ஆங்காங்குள்ள உணர்ச்சியை யோசிக்கில் கலம். தஞ்சையில் ஓர் பிரபல வக்கீல் பஞ் சபருமுப்பரித்து பேசியவர் ஸ்ரீகுருகடாக்ஷம் பட்டபின் தலே ழோக மாறி தர்மத்திற் குப் பிடிவாதமாக உழைக்கிறார்.

இளைஞர் உத்ஸாஹம்!! தஞ்சையில் ஸ்ரீ கங்தேச சர்மா என்பவர் பல யுவர் களது ஸஹாயத்தைக்கொண்டு பிருஹதீச்வர் ஆலயக் தவிர மற்ற ஆலயங்களில் பஞ்சமர் புகர வண்ணம் காக்கிறார். ஆஸ்திகர் ஸபை என பேலிப்பெயர் கொண்டு ஸ்நிரிகர் ஸபை கட்டத்துவதையும், ஆஸ்திகர் ஸபையில் கலகம் செய்வதையும் மக்நிரிக்கு தந்தி அடித்த நிறு த்தினர்கள்.

ஸ்ரீ பூவராஹர் முயற்சி!! தஞ்சையில் பஞ் சமருக்கு பரிந்துரைக்கும் ஷேயர் அடி யேனே அவர் வீட்டிற்கு வரும்படி கார் அனுப்பினர். தனி மனிதன் எனும் ஹோதா விலேயே பஞ்சமர் நிறைந்த அங்கு வர உசித மில்லே. ஸ்ரீ மடத்தினுதாவில் வர்த அடியே னங்குவர ஸர்வதா உசிதமில்லே. இங்கு வந்த எதையும் தெரிந்து போகலாமென கூறி னேன். வரவில்லே.

தயவு ஸிஷ்மிகள்! சாஸ்திரிஜி ஸ்ரீமிஸ் டரி மதி ஸுபீஸான முதலியார் தன்னை ஏகம்பர் கோவில் டிரஸ்டியாக நியமித்தால் பஞ்சமரை உள்ளே விடுவதாகக் கூறி கலெக் டரிடம் விண்ணப்பித்திருக்கிறார். அவரே ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோவிலில் கடந்த ஸபையைக் கலைக்க முயற்சித்துப் போலீ ஸால் வெளிப்படுத்தப் பட்டார். இது தான் மிலிடரி வேலே.

ஜாதி துரோஹிகள்! ஓர் பிராமணர் காஞ் சியில் தன்மை வஹிக்க ஓர் பஞ்சமர் பிராமண குல ஸ்நிரீகளே கேவலமாக நிந்தித்த வாயில் வந்தபடி பிராமண நிந்தை செய்தார். இதை மறக்காமலும் தடுக்காமலும் பலிர் கூறுமலி ருந்த காஞ்சி பிராமணர் மாத்மல்ல! இதர் களையும் புண் படுத்துகிறது! கோடாலிக் காம்புகளா?

அதிகாரதுர்விநியோகம்!! காஞ்சி கர ஸபையார் பஞ்சம ஆலயப்பிரவேசத்திற்கு கர ஸபை வண்டி ஆள்கள் முதலிய எல்லாவற்றையும் உபயோகப் படுத்துகின் றனர். இப்பாபேட்டும் ஓர் அப்ராமண வீதி பிலே ஸபை நடத்த முடியாமல் ஓடினர். மறபடி போலீஸ் பக்தோபஸ்துடன் நடத்த முயல்கின்றனர். அதர்மம். அந்யாயம்.

திருசெந்தூரில் தீமை!! சென்ற வெள்ளிக் கிழமை பூஜை ஒழுங்காக நடக்கமலும் பெண் மக்கள் ஆலயம் செல்ல முடியாமலும் பாபிகள் ஸெர்ச்சி செய்தனர். இவை உலக க்ஷேமத் திற்கல்ல!!

திருச்சி ஜில்லாவில் ஆலயப்பிரவேச எதிர்ப்புப் பிரசாரம்

பலவிடங்களில் கண்டனக் கூட்டங்கள்

தீண்டாதார் ஆலயப்பிரவேச இயக் கத்தை எதிர்த்தும், சட்டசபைகளில் நிறை வேற்றப்பட்ட ஆலயப்பிரவேச ஆதரவு, தொடாதொழிச் சட்டத்தைக் கண்டித்தும் தென்னூர் "தர்ம ஸபையினர்" திருச்சி ஜில்லாவெங்கும் விசேஷமாகப் பிரசாரம் செய்துவருகின்றனர்.

திருச்சி ஜில்லாவின் பலபாகங்களில் சென்றவாரம் பல கூட்டங்கள் கடைபெற் றன. ஒவ்வொரு கூட்டங்களிலும் எல்லா வகுப்பினர்களும ஏராளமாக விஜயம் செய் திருந்தார்கள். இக்கப் பிரசாரத்தினுல் பொது ஜனங்கள் விழிப்புற்றிருப்பது குறிப் பிடத்தக்கது. ஒவ்வொரு கூட்டங்களிலும் பொதுஜனங்கள் உத்ஸாஹத்துடன் கலந்து கொண்டார்கள். ஆலயப்பிரவேச இயக் கத்தையும் சட்டத்தையும் கண்டித்து செய் யப்பட்டன. ஆலயப்பிரவேசத்தை எதிர்த்து சாஸ்நிர முறையிலும் ராஜீய முறையிலும் பொது ஜனங்களுக்குத் தெரியும்படி உபந் யாஸங்களும் செய்யப்பட்டன. ஒவ்வொரு கூட்டத்திலும் கணக்கு கூடாமல் ஒத் தழைத்தது குறிப்பிடத் தக்கது. ஸபையின் நிர்வாஹிகள் பிரசாரத்தை மிகுந்த சிரத் தையுடன் கடத்தியது கொண்டாடத் தக்கது. நிர்வாஹஸ்தர்கள் ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்காசாரிய ஸ்வாமிகளுடைய அநுக்ரஹத்தை முன் னிட்டுக் கொண்டே பிரசாரம் செய்தனர். ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுடைய ஆக்ஞையை யும் அநுக்ரஹத்தையும் பெற்றுக்கொண்டு ஸ்ரீ அக்னிஹோத்ரம் ராமசாஸ்த்ரிகாசாரியார் நாட்டு நாராயண ராவ், ஸ்ரீ நாகராஜய்யர் பல கூட்டங்களில் பேஜினர்கள்.

ஒவ்வொரு கூட்டங்களிலும் ஆலயப்பிர வேசஅதமஜி சட்டத்திற்கு அதமஜியாளிக் களாகதென்றும் மே. த வைஸ்ராயை வேண் டிக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

Legislation is Coercion

Malaviyaji repudiates Gandhiji's Pledge Theory

Pandit Malaviya in his letter to Gandhiji dated 8th February 1933 says— "I hold that this (proviso to Bombay resolution of 30th September 1932) rules out Satyagraha or fasting to have the temples opened..... I also hold that this rules out, even more clearly, any attempt to seek the help of the legislature to secure such entry into temples. I have carefully read Mr. Ranga Iyer's Bill..... I have also read all that you have written about it, and your appeal to Hindus to see that it is passed as speedily as possible.....This attitude of yours seems to be inconsistent with the letter and spirit of the proviso to the Bombay resolution of 30th September, and it has caused me very great pain."

ஸ்ரீ ஆதி சங்கராசார்யரும் தீண்டாமையும்

மனீஷா பஞ்சகத்தின் உண்மை

தீண்டாதார்களின் ஆலயப்பிரவேச இயக் கம் பரவி வரும் இக்காலத்தில் மனீஷா பஞ் சகத்தின் தாத்பர்யத்தை அறிந்து கொள்ள பலர் விரும்புவதால் அடியில் கண்டபடி பிரசு ரிக்கப்படுகிறது.

ஸ்ரீ ஆதி சங்காசார்ய ஸ்வாமிகள் காசி க்ஷேத்நிரத்நில் மாத்பான்திக ஸ்நாகம் செய்து பிக்ஷைக்குப்போகும் சமயத்தில் இருவருடைய ஞாக நிலேயை பரீக்ஷிப்பதற்காக ஒரு தினம் ஸ்ரீ விச்வேச்வர் சண்டாள ரூபி யாக எதிரில் தோன்றினர். அப்பொழுது அத்த சண்டாளனே தூர விலகிப்போ என்று ஸ்ரீ ஆசார்யாள் சொல்ல, சண்டாள ரூபியான பகவான் இரண்டு சரீரமும் ஒரே அன்னத்தி னுல் ஏற்பட்டதால் அலைகளுக்கு வித்யாஸ மில்லே என்றும், ஒரே ஆத்மாவானது கங்கா ஜலத்திலும், சண்டாளன் வீட்டு ஜலத்திலும் தோன்றுகிற சூரியபிரதிபிம்பம் போலவும், தங்கக்குடத்திலும் மண்குடத்திலும் இருக் கும் ஆகாசத்தைப் போலவும் தாழ்வு உயர்வு இல்லாமல் ஸமமாக விளங்குவதால் எவ்விதம் விலகிப்போ என்று ஏன்சொல்லுவாய் என்று ஆக்ஞேபிக்கவே, ஸ்ரீ ஆசாரியாள் அத்த சண் டாளனுடைய ஞான பரிபாகத்தின் உயர்ந்த நிலேயை உபநிஷத்துக்கள் அத்ர பிதா அபிதா பவதி மாதா அமாதாஎன்று ஆரம்பித்த சாண்டா ளோவாஹாஸ: புல்கஸோவுல்கஸ: என்றகு றிற அவ்வித உயர்ந்த நிலேயை அடைந்த சண்டாளன் என்று உலகுள்ளதனைக்கும்போற் கும் அவ்வித நிலேயை ஜாமத்வஸ்துஸுஷுப்தி ஸுஷு ப்தரா என்று ஆரம்பித்து ஐந்து ஸ்லோகங்க ளால், ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளிலும் ப்ரம்மா முதற் கொண்டு எறும்பு வரையிலுள்ள சரீரங்களி லும் எக்த ஞான ரூபியான ஆத்மா ஸ்பஷ்ட மாக விளங்குகிறதோ அதே ஆத்மா தான் நான் என்ற நிச்சயமான அநுபவம் த்ருட மாக உள்ளவன், அவன் சண்டாளனுகிருந் தாலும் ப்ராமணனுக இருந்தாலும் அவன் எனக்கு குருவாகிறான் என்பது என்னு டைய எண்ணம் என்று தெரிவிக்கிறார். ஆகையால் உயர்ந்த ஞான நிலேயை அடைந் தவர்கள் யாராயிருந்தாலும் பதஹுமானிக்க தகுந்தவர்கள் என்று ஆசாரியருடைய அபிப் ப்ராயம் ஏற்படுவதால் பாமர்களிடம் இருக் கும் ஸம்ஸ்நிர்யமான ஏற்றத்தாழ்வு போய் விடும் என்று ஏற்பட்டு விடாது. ஆகையால் தீண்டாதார் ஆலயப் பிரவேசத்திற்கு மனீஷா பஞ்சகத்தை ஆதாரமாகக் கொள்ளு கிறவர்கள் ஏமாற்றத்தை அடைவார்கள்.

தென்னூர்

தென்னூர் பிள்ளையார்கோவிலில் 10-8-39 மாலே பொதுக்கூட்டம் கடைபெற்றது. பல பிரபலஸ்தர்களும் பொது ஜனங்களும் ஏரள மாக விஜயம் செய்திருந்தனர். அட்வகேட் ஸ்ரீ ஜயராமய்யர் தலேமை வஹித்து ஸனாதன தர்மத்திற்கு ஏற்பட்டுள்ள உபத்ரவங்களே விளக்கிச் சட்டத்தை எதிர்ப்பதைப் பற்றியும் பேஜினர். ஸ்ரீ ராமசாஸ்த்ரிகாசாரியார் ஆல யப்பிரவேசம் அனுசிதமென்பதையும் இது ராஜீயசூழ்ச்சி என்பதையும் விளக்கிப் பேஜி னர். மாஜி தாஸில்தார் ஸ்ரீ ராமகேஷ்ண அய்ய ரும் "நமது கடமை" என்பதைப் பற்றி

ஆலயப்பிரவேச அவசரச்சட்டம்

நாடெங்கும் கண்டிக்கப்பட்டது

தமிழ்நாட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களின் நடவடிக்கைகள்

சென்னை ராஜாங்க சபை தேர்தல்.

ஸனாதனிகளின் பிரதிநிதி நிற்கிறார்

சென்னை ராஜாங்க சபையின் தென்னற்காடு பிரதிநிதியான ஸ்ரீமான் R. ஸ்ரீனிவாசய்யங்கார் சமீபத்தில் காலமானார். அவருடைய ஸ்தானத்துக்கு விரைவில் தேர்தல் நடைபெறும். 14—8—39ஆ ஜில்லா கலெக்டர் ஸ்ரீ V. N. குட்வா, ஐ. ஸி. எஸ். இடம் காங்கிரஸ் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, சுயேச்சை கட்சி சார்பாக அபேக்ஷகர்கள் தேர்தல் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தார்கள்.

ஸனாதனிகளின் பிரதிநிதியாக ஸ்ரீ வி. ஸ்ரீனிவாச சாரியார் தேர்தல் நியமனப் பத்திரத்தை கலெக்டரிடம் தாக்கல் செய்தது குறிப்பிடத்தக்கது.

நாகப்பட்டணம்

"ஆலயப்பிரவேச கண்டனம்"

13—8—39ஆ ஆஸ்திக மகா கூட்டத்தில் ஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரிகள் அக்ராசனத்தில் ஆலயப்பிரவேசம் செய்துவைப்பதற்காக காங்கிரஸ் கக்ஷியாரால் செய்யப்படும் கிளர்ச்சிகள், ஆகமசாஸ்திரங்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் சிஷ்டாசாரங்களுக்கும் விரோதமென்றும், நடு நிலையில் இராமல் ஒரு கக்ஷியில் இறங்கி வேலைசெய்யும் மந்திரிகளின் கடவடிக்கைகளைக் கண்டித்தும் மதுரையில் ஒருவருக்கும் தெரியாமல் ஆலயப்பிரவேசம் செய்துவைத்தும், அதே விஷயமாக ஸ்ரீ அழகர் கோவிலிலும் கடத்திவைத்த நிர்வாக அதிகாரிகளின் கடவடிக்கைகளைக் கண்டித்தும், மதுரையில் சனாதனிகளால் பலமாக செய்யப்படும் கிளர்ச்சிகளை ஆதரித்தும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்களைப் பிரேரேபித்துப் பேசியதில் ஸ்ரீ P. S. சிவராமய்யரவர்கள் தீர்மானங்களில் சொல்லப்பட்ட விஷயங்களை விஸ்தாரமாக எடுத்துப் பேசி ஆகம சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட சட்டத்திட்டங்களை அனுசரித்தே ஆலய வழிபாடு நடத்தப்படவேண்டியதால் ஆலயப்பிரவேசத்திற்குப் பிரசக்தியே இடையாதென்று சொன்னார்.

தீர்மானங்களை ஆமோதித்துப் பேசியதில் ஸ்ரீ N. சாம்பசிவ அய்யர் "சண்டாளர்கள் என்ற வகுப்பானது வெகு நீண்டகாலமாக இருந்து வரும் ஸ்திதியில் அவர்களை எப்படி சண்டாளர்களென்று சொல்லுவதென்று கேம்பதில் அர்த்த மில்லையென்றும் இவ்விதம் மதசம்பந்தமான விஷயங்களில் எந்த ராஜாங்கத்திலும் ஒரு கக்ஷியில் இறங்கி வேலை செய்வதை பார்த்ததில்லையென்றும் மதுரை ஆலய நிர்வாக அதிகாரி அழகர் கோவில் அதிகாரி நடவடிக்கைகளை மீகவும் கண்டித்துப் பேசினார்கள்"

தஞ்சை

சென்ற சனிக்கிழமை 6மணிக்கு கரமாகூடி அம்மன் கோவில் டிரஸ்டி ஸ்ரீவெங்கிட்டராமய்யர் தலைமையில் மூவாயிரம் ஜனக்கூட்டத்தில் ஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா பேசினார். ஞாயிறு காலை 8மணிக்கு ஸௌராஷ்டர்கள் ஸபையில் ஷெ. பண்டிதர் வெகு உருக்கமாய் பேசினார். ஞாயர் மாலை ஒய். எம் ஐ. ஹாலில் எண்ணிறக்க ஜனங்கள் கூட மழையையும் லக்ஷ்யம் செய்யாமல், காங்கிரஸை அழிக்கவே இந்த பரபத்திலீடுப்பட்டனர். இப்பொழுதேனும் திருத்திக் கொள்ளலாமென மிக உருக்கமாகப் பேசினார். வக்கீல் ஸ்ரீ கோதண்டராமய்யங்கார் தலைமை பூண்டு உபன்யாஸங்களை ஆமோதித்துப் பேசினர்.

காஞ்சி

11ஆ இரவு 9 மணிக்கு ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயத்தில் ஓர் பெருங்கூட்டம் கூடிற்று. ஸ்ரீ அண்ணங்காசாரிஸ்வாமி தலைமை வஹித்தார். சென்னை ஸ்ரீஸோமதேவ சர்மா பேசினர். ஓரிருவர் சபையை கலைக்க முயன்று பயன் படாமல் சென்றார்கள். தலைவருவரைக்குப் பிறகு ஸபை கலைந்தது.

1ஆ மாலை 3 மணிக்கு ஸ்ரீவிஷ்ணு காஞ்சியில் ஓர் மகாநாடுகூட ஸ்ரீ அநந்தசாரி புத்தூர் மடாதிபதிகள் தலைமை வஹிக்க ஸ்ரீ ஸோம தேவசர்மா இரண்டு மணி பேசினர். மற்றும் பலபண்டிதர்கள் பேச ஸபை 9 மணிக்குக் கலைந்தது.

(க. வி. நி.)

திருவையார்

திருவையார் புஷ்யமண்டப படித்தறையில் வக்கீல் ஸ்ரீ V. சுப்பமண்ய அய்யர் தலைமையில் தீண்டாதார் ஆலயபிரவேச கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 1500 ஜனங்கள் வந்திருந்தார்கள்.

பாஷ்ய பாவஞ்ஞ ஸ்ரீ V. S. வெங்கட்ராம சாஸ்திரிகள், ஹிந்து மதத்தின் அடிப்படையான தத்வங்களை விளக்கி, வேதத்தில் பல இடங்களில் தீண்டாமைக்கு ஆதாரமிருப்பதை எடுத்துக் காட்டினர். மேலும் அவர் பேசுகையில் ஸ்ரீ காந்தி, ராஜகோபலாச்சாரியார் இவர்கள் தங்களுக்கு மத நூல்களில் பேச பயிற்சி கிடையாது என்று பல சந்தர்ப்பங்களில் ஒப்புக்கொண்டிருப்பதை விவரித்து, காங்கிரஸ் தலைவர்கள் மத சீர்திருத்தத்தைக் பாடுபடுவதாக சொல்லிக்கொள்வதற்கு உரிமையில்லை என்று நிரூபித்தார்.

பிறகு ஸ்ரீ நாட்டார் சிங்கம் ஆலயபிரவேச பிரசார வியாஜத்தால் சென்னை பிரதம மந்திரி செய்துவரும் சுயநலமான காரியங்களை விவரித்தார்.

அப்பால் ஹிந்து வேதாந்த உபாத்தியாயர் ஸ்ரீ S. V. சுப்பமண்ய சாஸ்திரிகளும், கும்பகோணம் ஸ்ரீ R. நடராஜன். "காங்கிரஸ்காரர்களின் ஜனநாயக விரோதமான பொய் பிரசாரங்களை தெளிவு படுத்தி, காங்கிரஸ் எதேச்சாதிகாரத்திலிருந்து ஹிந்து மத தர்மத்தை ரக்ஷிப்பதற்காக, ஹிந்துக்கள் யாவரும் ஒருங்குசேர்ந்து போராட்டத்திற்கு தயாராகவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

அக்ராஸனர் முடிவுரைக்குப் பிறகு இரவு 9½ மணிக்கு கூட்டம் முடிவுபெற்றது.

(ஒரு விசேஷ நிருபர்.)

விருத்தாசலம்

10—8—1939 காலை 7 மணிக்கு இக்கர் பழமலை நாதர் கோவில் முன் மண்டபத்தில் வக்கீல் ஸ்ரீ B. ஞ்ஞிராவ் தலைமையில் ஹிந்துக்களின் பொதுக்கூட்டம் ஒன்று நடந்தது. ஏராளமாய் ஜனங்கள் வந்திருந்தார்கள். மடி கோவில் அர்ச்சகர் ஸாம்பமூர்த்தி சிவாசாரியார். சென்னை சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட ஆலயப்பிரவேச சட்டம் ஆலய வழிபாடு, ஆகம முறைகளுக்கு விரோதமானது என்று ஆகம ஆதாரங்களுடன் விளக்கினர்

பிறகு ஜவுளிக்கடை ஸ்ரீ R. ஸாம்பமூர்த்தி அய்யர் மதுரையில் நடந்த ஆலயபிரவேசம் முதலிய அநீதிகளை கண்டிக்கும் பல தீர்மானங்களை பிரேரேபித்தார்.

குப்பகோணம் ஸ்ரீ R. நடராஜன் தீர்மானங்களை ஆதரித்துப்பேசுகையில் "காங்கிரஸ் சபையும் சட்ட சபைகளும் மதவிஷயங்களில் பிரவேசிக்க உரிமை கிடையாதென்றும், காங்கிரஸில் ஜனநாயகம் மறைந்து எதேச்சாதிகாரம் வலுத்து வருவதாயும், காங்கிரஸ்காரர்கள் தலைவர் உள்பட உண்மையைமறைத்து, அஹிம்ஸை ஸத்யம் இவைகளுக்கு மாறாக, பலாத்காரத்தால் பொய் பிரசாரங்களின் மூலமாக ஹிந்து மதத்திற்கு துரோகம் செய்வதாயும், ஹிந்துக்கள் அவர்களது மாயவலையில் சிக்காமல், காங்கிரஸ் அங்கத்தினர் பதவிகளை ராஜீநாமா செய்து விடும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

பிறகு அக்ராஸனர் முடிவுரையுடன் இரவு 9 மணிக்கு கூட்டம் கலைந்தது. கூட்டத்தில் நகர காங்கிரஸ்காரர்கள் உள்பட சுமார் 1500 பேர் விஜயம் செய்திருந்தனர். (க நி.)

ஸ்ரீமத் ராமாயண கதாகாலக்ஷேபம்

நிகழும் பிரமாதி-ஐப் ஆடி-மீ 17-ந் தேதி (2—8—39) புதன்கிழமை முதல் புதுக்கோட்டை டவுன் சத்திரம் தகரக்கொட்டகையில் பிரஹ்மாண்டார் கோவில் வேதமூர்த்தி ஸ்ரீ பாகவதகௌஸ்துபம் கோபாலபாகவதர் "ஸ்ரீமத் ராமாயணத்தை" பக்கவாத்தியங்களுடன் கதா காலக்ஷேபமாக ஒரு தினம் விட்டு மறு தினம் மாலை 6-30 மணி முதல் 9 மணி வரையில் நடத்தி வருகிறார்.

ராஜிநாமா

மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில் தேவஸ்தான ரூப்பிரண்டென்டும், பொக்கிஷதாருமான ஸ்ரீ வி. முக்தீஸ்வரபிரசாத் 12—8—39ஆ ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்துத் தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்.

கண்டனக் கூட்டங்கள்

[ஆர்யதர்மத்தில் பிரசுரிக்கவேண்டி தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்து ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்தவர்த செய்திகள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

ஆசிரியர் ஆ. த]

ஆஸ்திகர்களே!
"ஆர்யதர்மம்"
பத்திரிகையை
ஆதரிக்க வேண்டாமா?
ஆண்டு சந்தா ரூ. 3.
மாதிரிப் பிரதி இலவம்.


3.1298.


24-8-1929

1062

REGD No.M. 2913. ARYADHARMAM TAMIL WEEKLY. Estd. 1915

215296

ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விபரம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்யஃ பரிபாலயந்தாம் ந்யாய்யேன மார்கேண மஹீம் மஹீசாஃ ।
கோப்ராஹ்மணேப்யஃ சுபமஸ்து நித்யம் லோகாஸ்ஸமஸ்தாஸ்ஸுகினோ பவந்து ॥

பு-25 | கும்பகோணம் பிரமாதி-ஹு ஆவணி-மீ 8உ 1939-ஹு ஆகஸ்டு-மீ 24உ | வ-34

"நீங்கள் விரும்பிய எதையும் செய்ய வல்லவர்"

காங்கிரஸில் இருக்கும் ஊழல்கள்

"கதர் நிபந்தனையினால் மிகுந்த பொய்யும் கபடத்தன்மையும் ஏற்பட்டிருக்கின்றன"

மகாத்மாகாந்திக்குக் காங்கிரஸ்காரர்கள் கேள்விகள்

"என் இஷ்டப்படி நடந்திருந்தால் காங்கிரஸ் சிறிய ஸ்தாபனமாக இருந்திருக்கும்".....காந்திஜீ

மகாத்மா காந்திஜீயை சென்ற வாரம் இரண்டு காங்கிரஸ்காரர்கள் பேட்டி கண்டு பேசினார்கள். அவர்களில் ஒருவர் மகாத்மாஜீயைப் பார்த்துக் கேட்டதாவது :—

"தாங்கள் விரும்பிய எதையும் செய்ய வல்லவர்கள் என்பது மத்ய மாகாணத்திலுள்ள எங்களுக்குத்தெரியும். தாங்கள் இஷ்டப்பட்டால் மந்திரி சபையை நீக்க முடியும். தாங்கள் விரும்புகின்றவற்றை அவர்கள் செய்யும்படி தங்களால் செய்ய முடியும்."

காங்கிரஸ் ஆட்சியில் ?

மற்றொரு காங்கிரஸ்காரர் மகாத்மாஜீயிடம் பின் வருமாறு கூறினர் :—

"தாங்கள் தான் காங்கிரஸ் கார்யக்கமிட்டியாவீர்கள். தற்போது ஏற்பட்டுள்ள ஒழுங்கினங்களுக்கு தாங்கள் தான் ஜவாப்தாரி என்று ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் தங்களைக் குறைகூறுகிறார்கள். தாங்கள் தான் எங்களுக்கு ஒழுக்க பலமே சிறந்த பலமென்பதைக் காட்டியிருக்கிறீர்கள். தற்போதுள்ள முறை சைத்தான் தன்மை வாய்ந்ததென்று எங்களுக்குத் தாங்கள் தான் போதித்தீர்கள். காங்கிரஸ் ஆளும்போது சைத்தான்ய முறைக்கு இடமிராதென்றும், வாழ்க்கையின் சகல துறைகளிலும் தூய்மை காணப்படுமென்றும் தாங்கள் எங்களுக்குப் போதித்தீர்கள். ஆனால், தற்போது அதற்கு நேர்மாறான நிலைமை ஏற்பட்டிருப்பதை நாங்கள் காண்கிறோம். பல மாகாணங்களிலும் காங்கிரஸ் ஆட்சி நடத்துகிறது. இன்னும் லஞ்சம் வாங்குதல் முதலிய ஒழுங்கீனங்கள் மிகுந்து காணப்படுகின்றன. காங்கிரஸ்காரர்கள் தங்களுள் சச்சரவு செய்கின்றனர். இது நிலைமை முன்னிலும் கெட்டுப்போய் விட்டதைத் நிட்டமாகக் காட்டுகிறது. சைத்தான் ஆராதனை முறை இன்னும் போகவில்லை. தாங்கள் எண்ணிக்கை பலத்தை நம்புவதில்லை. உண்மையான நல்ல காங்கிரஸ்காரர்கள் சிலர் இருந்தால்கூட அவர்கள் தங்களது ஒழுக்க பலத்தைக்கொண்டு தேசத்தார் அனைவருடையவும் பிரதிநிதியாக இருக்கக் கூடுமென்றும், உண்மையான ஜனராயகத்தை ஏற்படுத்தமுடியுமென்றும் தாங்கள் அடிக்கடி கூறியிருக்கிறீர்கள். தன்மைக்குப் பதிலாக அளவே பிரதானமென்ற கோஷம், எங்கும் கேட்கிறது. சமீபத்தில் செய்த நிருத்தங்கள் சற்றும் பிரயோசனமுள்ளவை அல்ல. அவை அதிகரித்துவரும் ஒழுக்க ஹீனத்தைப் போக்க வல்லதாக இல்லை. இவை காங்கிரஸ் சமாளிக்க முடியாத அளவை ஆகிவருவதைக் குறைக்க முடியவில்லை. தங்களிஷ்டப்படி காரியக் கமிட்டி நடக்குமாறு தங்களால் செய்ய முடியாதென்று தாங்கள் கூறினால் அதை எங்களுக்கும் தெரியட்டும். தற்போதுள்ள நிலையில் தாங்கள் சர்வ வல்லமை வாய்ந்தவர்களென்று நாங்கள் நம்புகிறோம். இதனால் தாங்கள் நிலைமை மேலும் அதிகமாகக் கேவலமடைய அனுமதிப்பதைக் குறித்து நாங்கள் ஆச்சர்யப்படுகிறோம். தங்களுடைய கதர் விதியின் கதியைக் கவனியுங்கள். காங்கிரஸில் கபடத்தன்மை மிகுந்து காணப்படுவதற்கு அதுவே ஜவாப்தாரியாகும். கதரில் நம்பிக்கைக் கொண்டவர்கள் மிகச் சொற்பம். அவர்கள் அதை வெறும் வெளிவேஷத்திற்காகவே உபயோகிக்கின்றனர்.

"என் தனியே விட்டுவிடக்கூடாது?"

இதனால் கதர் பொய்க்கும். அதைவிடக் கேவலமான தன்மைகளுக்கும் சின்னமாக விளங்குகிறது. தேசத்தை ஒழுக்கத்-தறையில் உச்சஸ்திதியை அடையும்படி செய்த தாங்கள் தற்போது அதை அத்தறையில் தாழ்ந்த நிலையை மீண்டும் அடையும்படி செய்துவருகிறீர்கள். தற்போதுள்ளதோஷமிலேயே காரியங்கள் நடந்துவந்தால் காங்கிரஸ் சிறிது காலத்தில் எள்ளி நகையாடத் தகுந்த ஸ்தாபனமாக ஆகும். தங்களால் காங்கிரஸை சீர்திருத்தமுடியாவிட்டால் என் தாங்கள் அதனைத் தனியே இருக்கும்படி விட்டுவிடக்கூடாது என்று நான் கேட்கிறேன்."

இவைப்பற்றி மகாத்மாஜீ பின்வருமாறு ஹரிஜன் பத்திரிகையில் எழுதியிருக்கிறார் :—

இந்த 2-வது காங்கிரஸ்காரர் பிரக்யாதி பெற்ற காங்கிரஸ்காரராவார். அவர் காங்கிரஸ் நிர்மாணிகருமாவார். அவர் மிக்க உணர்ச்சியுடன் பேசினார். நான் அவருக்கு அளித்த பதிலின் சாரத்தை இப்பத்திரிகையில் வெளியிடுவதாக வாக்களித்தேன். அதன்படி அதனைக் கீழே வெளியிடுகிறேன் :—

"நான் அறியேன்"

"மத்தியமாகாணமந்திரிகள்விஷயத்திலோ அன்றி கார்யக் கமிட்டியின் விஷயத்திலோ

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க).

"எங்களுக்குத் தொட்டுரிமை பலம் இருக்கிறது"

காங்கிரசுக்கு இனி ஸ்திரிகளின் ஆதரவில்லை

"எப்பாடுபட்டாவது ஆலயப்பிரவேசத்தை எதிர்த்துப் போராடுவோம்"

சென்னை ஆஸ்திக மாதர் மகாநாடு

அட்வகேட் ஸ்ரீமதி ஜானகியின் தலைமையுரை

வைஸ்ராயுக்கு ஸ்திரிகளின் மகஜர்

சென்னை நகர் நிருவல்விகேனி தவனேற்ற மண்டபத்தில் சென்னை ஆஸ்திக மாதர் மகாநாடு 17-8-39 இரவு 8 மணிக்குக் கூடிற்று. சென்னையின் பல்வேறு பாகங்களிலிருந்து ஸ்திரிகள் ஏராளமாய் குழுமியிருந்தார்கள். இம்மாநிலியான கூட்டத்தை கண்டதுமில்லை, கேட்டதுமில்லை என்று ஒரு நிபுணரின் கருத்தை கூறினர். இரண்டாயிரம் ஸ்திரீகள் வந்திருந்தார்கள்.

சென்னை ஹைகோர்ட்ட் சரித்தையில் முதல் முதல் ஸ்திரி அட்வகேட்டாகப் பதிவு செய்து கொள்ளப்பட்ட ஸ்ரீமதி எம். எ. ஜானகி பீ, எ., பீ. எல். தலைமை வகித்தார்.

ஸ்ரீமதிகள் வை. மு. பட்டம்மாள், (மிஸஸ் காகேஸ்வாய்யர்) வி. டி. ரங்கராயதி அம்மாள், சரஸ்வதி அம்மாள், புதுக்கோட்டை சீதம்மாள் (ஏ. செங்கமாமி அய்யங்கார், சட்டசபை மெம்பர் சகோதரி) ஸ்ரீமதி ஆண்டாளம்மாள், லக்ஷ்மி அம்மாள் (மிஸஸ் ராகவய்யங்கார், ரால்சகேப்) முதலிய வர்கள் மகாநாட்டில் பேசினர்கள். மிஸஸ் காகேஸ்வாய்யர் சமூஸ்திருத மேற்கோட் பாடகனுடன் பிரசங்கம் செய்தது குறிப்பிடத்தக்கது.

தலைவர் கூறியதாவது:—

"டிரஸ்டிகள் தமது சொந்த ஹோதாவில் ஒன்றும் செய்ய முடியாது. பொதுஜன அபிப்பிராயத்தை அவர்கள் அறியவேண்டும். பொது ஜனங்களாகிய நமக்கு எல்ல சக்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. நமது அபிப்பிராயத்தை வெளியிடவேண்டும். ராடெங்கும் ஸ்திரிகள் கூட்டங்கள் கூட்டவேண்டும். புருஷர்கள் பலகாரணங்களுக்காக கவர்ன்மெண்டாருக்குக் கட்டுப்பட்டிருக்கிறார்கள்.

புருஷர்கள் அதனாலேயே தங்களது சொந்த அபிப்பிராயத்தை வெளியிட முடியாமல் இருக்கிறார்கள். ஸ்திரிகளாகிய நாம் புருஷர்களைப் பற்றி சட்டை செய்யாமல் இதில் எதிர்த்து வேலை செய்யவேண்டியது அவசியம் என்று கூறினர்".

"புராதன சாஸ்திரங்களிலும், ஆசாரியர்களாலும், பெரியோர்களாலும் கூறப்பட்ட தர்மத்தைப் பின் பற்றுவதா? அல்லது புதிதாகத் தங்கள் யுக்திகளைக் கொண்டு சில் ராஜீய காரணங்களுக்காக மதமென்று சொல்வதைப் பின்பற்றுவதா? மேனாட்டுக் கல்வி வழக்கப்பழக்கங்களில் ஈடுபட்டு பிராசீன மதத்தில் பழக்கமோ நம்பிக்கையோ இல்லாதவர்கள் சொல்லுவதைக் கேட்பதென்றால் ஹிந்து மதமே அழிந்து விடுமென்றும், ராஜாங்கத்தார் மத விஷயங்களில் தலையிட கூடாதென்றக் கண்டிப்பாகக் கூற வேண்டுமென்றும்" ஸ்ரீமதி கி. டி. ரங்கநாயகி அம்மாள் கூறினர்.

"ஸநாதனிகளின் ஓட்டுகளைப் பெற்று அதிகாரத்துக்கு வந்த காங்கிரஸ்காரர் தங்கள் அதிகாரத்தை தஸ்பிரயோகம் செய்கின்றனர். காங்கிரசுக்குப் பொதுஜன ஆதரவும் ஸ்திரிகள் ஆதரவும் இல்லை என்று" ஸ்ரீமதி சரஸ்வதி அம்மாள் கூறினர்.

"ஸ்திரிகளுக்கும் ஓட்டுரிமை பலிருப்பதால் இனி தங்களுக்குட்டுபட்ட கடக்கர காங்கிரஸ் கட்சியை ஸ்திரிகள் ஆதரிக்க அவசியமில்லாமல் போய் விடுமென்று, ஸ்ரீமதி காகேஸ்வாய்யர் (பட்டம்மாள்) தெரித்தார்.

நிறைவேறியத் தீர்மானங்கள்

ஆலயப் பிரவேசப்பாதுகாப்புச் சட்டத்தையும், ஆலயப் பிரவேசத்திற்காக அரசாங்கத்தார் அனுஷ்டிக்கும் முறைகளையும் கண்டிப்பதாக ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

ஆலயப் பாதுகாப்பு மசோதாவுக்கு மே. த. இராஜாஜிக்கி அங்கோரம் அளிக்கக் கூடாதென்று கேட்டுக் கொள்வதாக மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஸ்திரீகள் ஆலயப் பிரவேசத்தை எதிர்ப்பதாகவும், மசோதாவை ஆக்ஷேப்பிப்பதாகவும் கூறி ஒரு மகஜரைத் தயாரித்து மே. த. வைசிராயுக்கு அனுப்ப முடிவு செய்திருக்கிறார்கள். இந்த மகஜரில் ஆயிரக்கணக்கில் ஸ்திரீகள் கையெழுத்திட்டுள்ளார்கள்.

வந்தனோபசாரம் கூறியபின் மாகாநாடு இனிது முடிவுபெற்றது.

(ஒ. நி.)

திருச்சி ஜில்லாவில் ஆலயப்பிரவேச எதிர்ப்புப் பிசாரம்.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

திருச்சி

திருச்சி ஸ்ரீ நாகநாதஸ்வாமி கோவிலில் இரவு 7 மணிக்கு ஒரு பெரிய கூட்டம் கடை பெற்றது. பல வகுப்பைச் சேர்ந்த பொது ஜனங்கள் நிரளாகக்கூடியிருந்தார்கள். ராவ் சாகேப் திருஷ்ணமூர்த்தியர், அட்வகேட் தலைமை வகித்தார். தலைவர் ஆலயப்பிரவேச விஷயத்தில் நிதானகாட்டும் அரிசனத்தையை கண்டித்தும் பிரபலஸ்தர்கள் சிலர் ஆலயப்பிரவேச அவசாத்தில் ஆதரவு காட்டுவதில் வருத்தம் தெரிவித்தும் பேசினர். ஸ்ரீ ராமானுஜ நாதாசாரியார் ஆலயப்பிரவேச இயக்கம் மூலம் ஹிந்து மத அஸ்திவாரமே தாக்கப்படுகிறதென்பதையும் மதத்தையும் தெய்வத்தையும் காப்பாற்றத்தயாராக வேண்டுமென்றும் கூறினர்.

உறையூர்

உறையூர் பஞ்சவர்ண ஸ்வாமி கோவிலில் 11-8-39 ஒரு கூட்டம் கடைபெறவிருந்தது. ஆனல் டிரஸ்டி கூட்டங்கள் எதுவும் கோவிலில் போடக்கூடாதென்று விளம்பரப்படுத்தி இருந்ததால் கோவிலையடுத்துள்ள வீட்டு வாசலில் கூட்டம் நடைபெற்றது. பிராமணரல்லாத ஆஸ்திகர்கள் ஏராளமாய் விஜயம் செய்திருந்தனர். கூட்டத்திற்கு மாஜி ஜில்லா போர்டு என்ஜினீர் ராவ்பகதூர் ஸ்ரீ சரம் பசிவ சாஸ்திரிகள் தலைமை வகித்தார்.

ஆலயப்பிரவேசம் ஆஸ்திகர்களுடைய உணர்ச்சிக்கு எதிரானதென்று தலைவர் குறிப்பிட்டார், ஸ்ரீ சமாஜாஜதாதாசாரியார், ஸ்ரீநாட் ஸ்ராயணராவ், ஆலயப்பிரவேசமும் அது விஷயமாக சட்டம் செய்ததைப்பற்றியும் விளக்கிப் பேசினர்கள்.

ஆங்கரை

ஆங்கரை காயத்ரீமண்டபத்தில் 18-9-39ல் மாலே 6-மணிக்கு ஒரு பெருங் கூட்டம் கடைபெற்றது. கூட்டத்திற்கு பஞ்சாயத் கோர்ட்டு தலைவர் தலைமை வகித்த ஆலயப் பிரவேசத்தை எதிர்த்துப்பேசினர். வைதீய விசாரத்யுர்வேதாசார்ய திருச்சி ஸ்ரீ நடாஜ சாஸ்திரிகள் ஆஸ்திகர்கள் ஒற்றுமையுடன் பலமாக பிசாரம் செய்து தர்மத்தை காப்பாற்ற முயற்சிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். நாட் நாராயண ராவ் ஸ்ரீ ராமானுஜதாதாசாரியார் ஆலயப் பிரவேசத்தை எதிர்த்துப் பேசினர்.

லால்குடி

13—8—39 இரவு லால்குடி ஸ்ரீ ஸப்த ரிஷிஸ்வர கோயிலில் ஆஸ்திகர்கள் கூட்டம் கடைபெற்றது. கோயில் டிரஸ்டி ஸ்ரீமான் மகச்சிவராயசெட்டியார் தலைமை வகித்தார். ஆஸ்திகர்களுடைய உணர்ச்சியை ஆலயப் பிரவேசம் புகுத்துவதிலிருந்தென்று கூறிய தன் ஆலயப்பிரவேசம் செய்ய நினைப் பவர்கள் கோவிலில் நிறத்தையுற்றவர்க ளென்றும், அதற்கு உதாரணமாக பூவாளூர் கோவிலில் ஆலயப்பிரவேசம் நடந்த பிறகு கோவில் ஆசாரியார் கிடையாதென்றும், கோவில் நிறக்து கிடக்கிறதென்றும், மூலஸ்தானத்திலிருந்த உத்சவ விக்ரஹம் ஒழே கிடக்கிறதென்றும் ஆகவே சீர்த்திரு த்தக்காரர்கள் சொல்படி நடந்தால் கோவில் கள் அநியாயமாக நாசமாய் போய் விடு மென்றும் கூறினர். நாட்டாராணாவ், ராமானுஜதாதாசாரியார் கண்டித்து பேசினர்கள். (ஒ.நி.)

நாகப்பட்டினத்தில்

அத்வைதஸபா உபன்யாவங்கள்

பிரதி வருஷமும் கும்பகோணம் அத்வைத சபையாரால், நாகப்பட்டினத்தில் நடத்தப் பட்டு வரும் உபன்யாசங்கள் இவ்வருஷம் ஹிந்து மதாபிமான சங்கத்தின் ஆதரவில் அத்வைத சபா பண்டிதர் சாஸ்திர ரத்ன காம் ஸ்ரீ நிருவாதி வித்வனதசாஸ்திரிகளவர் களால் ஸ்ரீ சட்டனாத ஸ்வாமி கோயிலில் சென்ற 4—8—39 சுக்காவாரம் ஆரம்பம் செய்யப்பட்டு சான்கு தினங்கள் வெகு விமரிசையாக நடைபெற்றன.

முதல் நாள் ஸ்ரீ சாஸ்திரிகள் "வேதாத்ய யனமும் அதனுல் அடைய கூடிய பலனும்" என்ற விஷயத்தைப் பற்றி உபன்யஸித்ததில், வேதத்தை அதிகாரமுள்ள ஒவ்வொரு வரும் அத்யயனம் செய்ய வேண்டியது அத்யாவச்யமென்றும், வேதத்தில் சொல்லப் பட்டத விஷயம் ஒன்றுமே இல்லையென்றும், நம்முடைய புத்தி யுக்திகளினல் அறிய முடியாத விஷயங்களை விவரிப்பதே வேதத்தின் முக்யமான நோக்கமென்றும் சாமான்ய விஷயங்களும் பல இடங்களில் வேதத்தில் உச்சரிப்பதின் மூல்யமாய் வெளியிடப்பட்டிருக்கிறதென்றும், வேதத் தை அத்யயனம் செய்த ருக்கே ஸ்ரீமான் என்ற பெயர் பொருத்தமாகுமென்றும், பிரபு ஸ்ம்ஹிதமானதால் வேதத்தில் சொல்ல பட்டிருக்கும் விஷயங்களுக்கு காரணம் கேள்பதற்கில்லையென்றும், வேதத்தில் சொல்லப்பட்ட தர்மங்களே யஜமானுடைய உத்தரவென்று நிஷ்காம்யமாக அனுஷ் டானம் செய்தால் அதுவே பரம ரியேஸ் ஸுக்கு காரணமாகுமென்றும், குழந்தை களுக்கு எது ஹிதமென்பது எப்படி அவை களுக்குத் தெரியாதோ அது தாயாருக்கே தான் தெரியுமோ அத்தக் தாயார் செய்வது சில சமயங்களில் பார்வைக்கு குழந்தை களுக்குப் பிடிக்காததாக இருந்தாலும் பிறகு அது குழந்தைக்கு எவ்விதம் நன்மை யை உண்டு பண்ணுமோ அவ்விதமேதான் வேதத்தில் சொல்லப்பட்ட விஷயங்களென் றும், வேதாத்யனம் குறையுபட்டுப் போன தால் தான் அதர்மங்கள் விருத்தியடைந்தும் சமிஸ்கார குறைவு ஏற்பட்டு இருப்பதாக வும், வேதத்தில் ஏகதேசமாவது பிரஜினம் ஒவ்வொருவரும் அத்யயனம் செய்யப் படவேண்டுமென்று" சொன்னர்கள்.

இரண்டாவது தினம் "ஸ்திரீ தர்மம்" என்ற விஷயத்தைப் பற்றிப் பேசியதில் தன்னுடைய பர்த்தாவின் தர்ம ஆசாரத் தில் ஈடுபடுவதே ஸ்திரீகளுடைய முக்யமான கடமை யென்றும், ஹிந்து சமூகத்தில் விவாகமானது தர்மத்தை பரிபாலனம் செய் வதற்காகவே ஏற்பட்ட ஸம்ஸ்காரமென் றும், முக்யமாக ஆங்கில பள்ளிக்கூடங் களில் பெண்களை படிக்க அனுப்புவதே பரம அனர்த்தத்திற்கு காரணமாக நேருகிறதென் றும் பெண்களுக்கு கர்ஹஸ்த்ய தர்மங்களை நடத்துவதற்கும் பக்குவத்தை அபிவிருத்தி செய்வதற்கான படிப்பே அதிகுணமான தென்றும், ஆங்கில பள்ளிக்கூடங்களுக்கும் சினிமாவிற்கும் பெண்களை அனுப்புவதை உடனே நிறுத்தவேண்டுமென்றும் விவர மும் முக்ய ஸ்ம்ஸ்காரமானதால் அதில் நான்கு நாட்களாவது ஒளபாசனஞ் சர்மாக்களை நடத்தி ஸாயம்காலம் செய்து கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசினர்.

மூன்றாவது தினம் "ஜாதிஸங்கர பரிஹாரம்" என்ற விஷயத்தைப்பற்றிப் பேசியதில் உலகம் சரிவர நடக்க வேண்டுமானல் கட்டுப்பாடும் வியவஸ்தையும் அத்யாவச்ய மென்றும் சாத்திரங்கள் செய்யும் தர்மமானது முன் பரம்பரையையும் சேருகிறதென்றும் தக்க சரிபாக இருக்கவேண்டுமானல் ஸ்திரீ களும் ஸ்திரீ தர்மங்களும் சரிவரக்ஷிக்கப் பட வேண்டுமென்றும் மனதின் சக்தியே ஸமஸ் காரங்களின் முக்யமான நோக்கமென்றும் மனதின் சக்தியைப் பொருத்தே பாவனை கள் ஏற்படுகிறதென்றும் தேகம் சுத்தமாக இல்லாத வரையில் மனிதனுடைய சுத்தி ஏற்பட முடியாதென்றும் அதே மாதிரி சுத்தி ஸஸ்நியாக இருந்தால் அர்ச்சா மூர்த்திகளில் ஸான்னித்யம் அதிகரிக்கு மென்றும் அதை அனுசரித்தே ஆகம சாஸ் திரங்களில் சண்டாளர்களே ஆலயங்களில் பிரவேசம் செய்ய இடம் கொடுக்கவில்லை யென்றும் ஆலயப்பிரவேச சம்பந்தமாக காங்கிரஸ் கக்ஷியால் பிரசாரங்களில் சொல்லப்படும் கக்ஷிகள் பூரவும் சாஸ்திரங் களில் ரஹஸ்யமான அர்த்தங்களே சரிவர தெரிந்துக் கொள்ளாததால் தான் சொல்லப் படுகின்றனவென்றும் சொல்லி ஆலயப் பிரவேசம் அவச்யமென்று பிசாரம் செய் பவர்களால் ஸ்ரீமத் பகவத் தை மனுஷ்ய பஞ்சகம், முதலிய கிரந்தங்களை தார்த்தம் செய்து ஜனங்களே மோகப்படுத்துவதைக் கண்டித்து அவைகளின் நிஜமான தாத்பர் யங்களை எடுத்து அழகாக உபன்யஸித்தார்.

கடைசி தினம் "ஆத்மா அழிவில்லாது" என்ற விஷயமாகப் பேசியதில் ஆத்மா விஜு டைய ஸ்வரூபம் எவ்விதமென்பதை நிரு பணம் செய்தும் தேகாதம வாதம் முதலிய அபிப்பிராயங்களைக் கண்டித்தும் நமது அனு பவித்திலுள்ள ஸ்வப்ன சஷுப்தி அவஸ்தை களை உதாகரித்துப் பேசி ஆத்மா ஒன்றே எக்காலத்திலும் அழிவில்லாமல் இருப்ப தென்பதை அழகாக எடுத்து சாட்டினர்.

அத்வைத சபையாருக்கும் ஸ்ரீ சாஸ்திரி களுக்கும் வந்தனோபசாரங்கள் கூறப்பட அத்வைத சபையை மேலும் ஆதரிக்கவேண் டியது அத்யாவச்யமென்று கேட்டுக் கொள்ளப்பட்டு சபை இனிது முடிவு பெற்றது. (க. வி. கி.)

(1-ம் பக்க தொடர்ச்சி.)

கள் சர்வலல்லமையுள்ளவனில்லை. மந்திரி கள் செய்யும் காரியங்களை நான் அறியேன்.

"என் இஷ்டப்படி நடக்கவில்லை."

உதாரணமாக எனது இஷ்டப்படி நடந்திருந்தால் காங்கிரஸ் எவ்வளவோ சிறப்ன்தர பனமாக இருந்திருக்கும். எனது இஷ்டப் படியுள்ள காங்கிரஸில் இல தெரிந்தெடுக்கப் பட்ட ஜமீந்தர்களே இருக்கிருப்பார்கள். தேசத்தார் தங்களுக்கிஷ்டமானபோது அவர்களை நீக்க இயலும். ஆனல் அவர்கள் தேசத்தார் முன்பு ஜூர் செய்யும் வேலைத் திட்டமானது தெளிவாக தேசமக்களின் கோடிக்கணக்கானவர்களது ஒத்துழைப்பை வலுவில் பெறக்கூடியதாகஇருக்கும். ஆனல், இத்தகைய ஏற்பாடு மிக்க அதிதமானதென் றும், ஜனநாயகத் தன்மையற்றதென்றும் காங்கிரஸ்காரர்கள் கருதுகிறார்கள்.

"பொய்யும் கபடத்தன்மையும்."

கதர் நிபக்ஷையால் மிகுந்த பொய்யும் கபடத்தன்மையும் ஏற்பட்டிருக்கிற தென்ப தை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். எனது இஷ்டப்படி வோட்டர் லிஸ்ட் இந்த விஷயம் தெரிந்தவர்களுக்கு முன்பே எடுபட்டுப் போயிருக்கும். நான் காங்கிரஸை விட்டு விலகியபோதே இந்த விஷயை நீக்க முயற்சி செய்தேன். ஆனல் பன்முறை அத்தகைய முயற்சியைச் செய்தும் என் முயற்சி பலிக்கவில்லை. காங் கிரஸ்காரர்கள் அத்தப் பிரிவை நீக்க வேண்டு மென்பதைக் காதுகொடுத்தும் கேட்க மாட் டார்களென்ற வாதிக்கப்பட்டிருக்கிறது."

செய்தித்திரட்டு

முன்னேற்றக் கட்சி (பார்வர்டு பிளாக்) க்கு நாடெங்கும் பலத்த ஆரவு ஆயிக் கணக்கில் அங்கத்தினர்கள் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீ சுபாஷ் சந்திர போசுக்கு எங்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் காட்டி வருகிறார்கள். ஸ்ரீபோஷ் கட்சிக்குத் தென்னிந்தியாவில் எங்கும் போதரவு காட்டி வருவது குறிப்பிடத் தக்கது.

* * *

"கவர்ன்மெண்டில் வேலை செய்கிறவர்கள் 10 வருஷ சர்விஸுக்குப் பிறகு தாமாகவே விலகினல் அவர்களுக்குப் பென்ஷன் கொடுத்து விடலாம். இதனல் படித்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு ஒரு சாதனம் ஏற்படும்" என்ற பிரேரேணையை 28—8—39உ பம்பாய் சட்ட சபையில் ஒரு அங்கத்தினர் கொண்டு வருவாராம்.

* * *

வங்க முடி சூடா மன்னன் ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் அவர்களை காங்கிரஸிலிருந்து மூன்றாண்டுகளுக்குத் தள்ளி வைத்த அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபையின் காரியக் கமிட்டியின் போக்கை இந்தியாவின் ஜன பாகங்களிலுள்ள தலைவர்கள் வன்மை யாகக் கண்டித்து வருகிறார்கள். மாஜி காங் கிரஸ் தலைவர் சேலம் ஸ்ரீ சி. விஜயராகவாசாரி யார் கூட காங்கிரஸ் போக்கைக் கண்டித்திருக்கிறார்.

* * *

கும்பகோணத்திலிருந்து ஒரு மகஜர் சென்னைக்குப் போயிற்று. "கும்பகோணம் ராஜாங்கக் கல்லூரியை யார் எடுக்கப் போகிறார்கள். ஒருவரும் எடுக்கப் போவதில்லை," என்று கல்வி மந்திரி வர்தி அதற்குப் பதில் எழுதியிருக்கிறார்.

* * *

ஹிந்துக்களை ஒருங்கு சேர்க்கவேண்டி சென்னையில் ஹிந்து மகா சபையின் ஸ்தல ஒன்று சென்ற வாரம் நிறுவப்பட்டிருக் கிறது. அதற்குத் தலைவர் ஸ்ரீ பி. வாதாராஜலு நாயடு.

* * *

புகையிலை வரி 1—8—39 தேதி முதல் அமுலுக்கு வந்திருக்கிறது. 6—8—39 தேதிக்குள் 70 ஆயிரம் புகையிலை வியாபாரிகள் ரிஜிஸ்ட்ரேஷனுக்காக மனுச் செய்து கொண் டிருக்கிறார்களாம்.

புத்தூர்

11—8—39 இரவு 8 மணிக்கு புத்தூர் பாட சாலைக்கெதிரில் ஆஸ்திகர்கள் ஏராளமாய் கூடினர்கள். கூட்டத்திற்கு அட்வகேட் ஸ்ரீ எம். எஸ். வரதராஜய்யர் தலைமை வஹித்து ஆலயப்பிரவேச சட்டத்தைக் கண்டித்து விரிவாகப் பேசினர். கோவிலைப் பரிபாலிக்க ஏற்பட்டவர்கள் கோவிலுக்கட்டின மூல்புரு ஷனின் எண்ணத்திற்கு விரோதமாகத் தீண் டாதார்களை ஆலயத்தில் விடுவது அக்ர மகார்யம் என்பதை குறிப்பிட்டார். ஸ்ரீ ராமா நுஜதாதாசாரியர் ஸ்ரீ நாட் நாராயண ராவ் ஆலயப்பிரவேச முயற்சியை கண்டித்து பேசினர்கள்.

வரகாநேரி

12—8—39 வாகாநேரி ஸ்ரீ சுப்பிரமண்ய ஸ்வாமி ஆலயத்தில் கூட்டம் நடைபெற்றது. டிரஸ்டி உள்பட பிராம்மணரல்லாத ஆஸ்திக ஹிந்துக்கள் பலர் வந்திருந்தனர். கூட்டத்திற்கு ஸ்ரீ கர்தனாபிள்ளை தலைமை வஹித்தார். பிறகு ஸ்ரீமான்கள் நாட் நாராயணராவ், அக்நிஹோத்ரம் ராமானுஜதாதாசாரியார், ஸ்ரீ நாகாஜய்யா ஸ்திருத்தத்தை எதிர்த்துபேசினர்கள்.

ஆலயப்பிரவேசக் கண்டனம்

ஸ்ரீ வில்லிப்புத்தூரில் கூட்டம்

தலைவர்கள் சொற்பொழிவு

மதுரை ஆகஸ்டு 21உ

17உ மாலை 7-30 மணிக்கு ஸ்ரீவில்லிப் புத்தூர் ஸ்ரீ ஆண்டாள் வன்னநியின் முன்னர் கடற்கோதிய ஆலயப்பிரவேசக் கண்டன கூட்டத்திற்கு அகில இந்திய வர்ணச்ரம சங்கத்தலைவர் ஸ்ரீ ராவ்சாகேப் என். கடேசய்யர் தலைமை வஹித்தார்.

பல தலைவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

தலைவர் ஸ்ரீ கடேசய்யர் இவ்வூர் பண்டரீஸ் கட்டிடத்திலிருந்து மேளவாத்தியங்களுடனும் வேதகோஷங்களுடனும் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார். ஊர்வலம், கூட்டம் நடக்குமிடத்துக்கு வந்ததும் வெங்கடசுப்பய்யரால் ஸ்தோத்ரப்படல்கள் பாடப்பட்ட பின் ராவ்சாகேப் கடேசய்யர் தலைமையின் கீழ் கூட்டம் ஆரம்பித்தது.

5000க்கு மேற்பட்ட நிரளான ஜனங்கள் கூடியிருந்தனர். ஒலிபரப்பும் கருவி அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ கடேசய்யர் தலைமையுரையில் "இத்தக்க ளுக்கு பிரமாணமாகக்கொள்ளவேண்டியவை வேதம் முதலிய வித்யஸ்தானம் 18 உள்ள தென்றும் அதற்குப் பல மதாசாரியர்கள் பர்ஷ்யம் முதலிய வியாக்யானம் செய்திருக்கின் றனரனும் அவர்கள் தற்காலம் நடப்பது போனறவைகளை ஆதரித்து ஒரு வார்த்தை கூடச்சொல்லவில்லை. ஆனல் இப்பொழுது ஸ்ரீ ஏ. ரெங்கசாமி அய்யங்கார் சட்ட சபையிலேயே தனக்கு மற்ற ஸ்ரஸ்திரங்களுடனே தெரி யாதனனும் கார்த்திருத்திரங்களே தனக்கு சான்ற மென்றும் சொல்லுகிறார். அத்துடன் "பிரதம மந்திரி அதை பலாக்கா ரமாகவும், திருட்டுத்தனமாகவும் நம்மீது வற்புறுத்துகிறார் என்றும், இதைக் கண்டிப் பதாகவும் சொல்லி 1917 வரை காங்கிரஸ் மத விஷயங்களில் தலையிடாமல் இருந்து பின்னல் காந்திஜி தலைமையில் மதி கெட்டு மதத்தில் தலையிட்டு தற்போது ஸர்த் விகம் என்ற கொள்கையை விட்டு பலாக்கா ரத்தினனும் மதத்தை நாசம் செய்ய துணிந் தவிட்டார்கள் என்றும் பிரதம மந்திரி ரக ஸியமாக ஆலயப்பிரவேசத்தை ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்பாடுசெய்துவிட்டுப் பின் அது நடந்த பின் தனக்கு ஒன்றும் தெரியா ததுபோல் பசாங்கு செய்து தனக்கு அப் போது தான் விஷயம், தெரிவதால் தான் ஆனத்தப்பைந்யம் பிடித்த ஆடுவதாகக் கூறியதை எடுத்துக்காட்டி, ஆனல் அவர் திருட்டுத்தனமாக இதை நடத்தி விட்டு நட க்த பின் அதிகாரப்பைந்யம் பிடித்து ஆடு கிறார் என்றும் உரைத்தார். இதற்கு ருஜு ஜூலை-மீ 30உ ஸநாதன வாலண்டியர்கள் வைகையாற்று மைய மண்டபத்தில் காலி களால் தாக்கப்பட்டு மூர்ச்சையாய் டக்கும் போது பிரதம மந்திரி "இவர்கள் செத்து விட் டார்களா! என்று கேட்டதே போது மென் றும் கூறினர்.

மஹர ஜனங்களின் சார்பாக வைசிராய் அவர்களிடத்தக்கு தூது கோஷ்டி போவதற் கான ஏற்பாடுகளில் இவ்வூர் ஜனங்கள் மனப் பூர்வமான பங்கெடுத்துக்கொள்ள வேண்டு மென்று" கேட்டுக்கொண்டார்.

பின் ஸ்ரீ சத்தியவேலு பிள்ளை மதுரை கோ வில்கள் ரகியமாக நிறுத்தி விடப்பட்டதற்கு ருசு இப்பொழுது தான் கொஞ்சம் கொஞ்ச மாக வெளியரி வருகிற தென்றும் பேப்பர் கள் முதலில் வரவேற்புடன் ஆலயப்பிரவேச மென்று எழுதின. பின் அது ரகஸியமாக நடந்த ருசுக்களை வெளியிடத் தயங்குகின் றன. ஆனல் மதருஸ்மெயில், சேசமித்திரன் பேப்பர் வரிப்பவர்களுக்கு விபரம் தெரிய வரும் என்றார். இச்சமயம் (வக்தேமாதரம் என்று சிலர் சத்தமிட்டனர். போலீசார் தலியிட்டு காலிகளை வெருட்டினர்) பின்னர், பேசுகையில் சாத்வீகமென்றதோல்போர்த்த காங்கிரஸ்புலி நிருட்டுத்தனமாகமதம் என்ற பசுவை கொல்ல எத்தனித்த விட்டது. ஈசு வரபலம் கமகிருப்பதால் இதைக் கொல்ல முடியாது.

மதத்தைக் காக்க உடல் பொருள் ஆவி எல்லாம் தத்தம் செய்ய எல்லோரும் தயா ராக இருக்கவேண்டும் காங்கிரஸ் தன்னிடம் ஆயுதம் இல்லாத போது அஹிம்சை சத்தி யம் என்று பேசி சமயம் வந்து அதிகாரம் என்ற ஆயுதம் கைக்கு வந்தபின் ஹிம்சை யையும் அஸத்தியத்தையும் கைக்கொண் டது என்றும் காந்தி அஹிம் சை வீரர்களின் ஆயுதமென்கிறார். ஸ். ஆர். அஹிம்சை கோழைகளின் ஆயுத மென ரூபிக்கிறார். தென்னிந்தியாவிலிருக்கும் 1000க் கணக்கான கோவில்களில் ஒரு கல்லாவது திருப்பணி செய்யாத இவர்கள் அவைகளைப் பாழாக்க முன் வருவது தகாத என்றும் தற்போது ஹரிஜனங்களுக்கு வேண்டியது உணவு உடை முதலியன. கோவில் பிரவே சத்தால் உணவு உடை கிடைக்காதா காங்கிரஸ் ஆகி வந்தபின் எக்கு பார்த்தா லும் பஞ்சம் மிருக்கிறபதற்கு சென்னை கவர்ன்மெண்டார் வரிவஜா செய்ய முடியாத தற்கு சென்ற சட்ட சனயில் கூறிய கார னங்களும், கேற்று பம்பாய் கவர்ன்மெண் டர் பேட்டிருக்கும் பஞ்ச நிவரண அவ சரச் சட்டமும் ருசு என்றும், இதனலேயே அவர்கள் செய்வதுகடவுள் சம்மதமில்லை பம் பாய் மாகாணத்தில் பசியால் தற்கொலையும் நடக்கிறது. கோயில்பிரவேசத்தால் ஒற் றுமை குறைத்து கலகமும்பூசலுமே உண்டா கும். சில சமயம் மத விஷயங்களில் இரத்தம் சிந்தவும் ஏற்பட்டு விடும். இவர்கள் இதில் பி வேகித்திருப்பது ஜனங்களின் கோக்கத்தை வேறு எதிர்ப்பு விஷயங்களிலிருந்து இதில் திருப்பி தங்கள் வேலியை சுலபமாக்கிக் கொள்ளவே என்றும் ஆதனல் அவர்கள் பாடு இன்னும் அதிக கஷ்டமவதை ஈக்ஷிம் பார்ப்பார்கள். இப்பொழுதே பிரதம மந்திரி அதிக வேலையுடன் பத்திரிகைகளில் தனக்கு எதிரான விஷயங்களைப் பிசுரிக்க ஒட்டாமல் தடுக்க மிருத்த பிரயாசையை தானே கேரில் எடுத்துக்கொள்ளும்படி ஏற்பட்டு விட்டது. ஆதலால் பொதுஜன உணர்ச்சியை மதித்து சட்டத்தை வாபிஸ் வாங்கி விச்சார்ஜி செய்து கொள்ளவும் என்று கூறி முடித்தார்.

மாஜி சட்ட சபை அங்கத்தினரும் பிரபல தலைவருமான ஸ்ரீ கே. ராம அய்யங்கார் பேசியதாவது. "ஜூன் 13-ம் தேதி கான்பாலிற்குப் பின் மி. ஜின்னா, டி. எஸ். எஸ். ஆர்., எச். ஆர். இ பி. பிரஸிடென்ட், டிரஸ்டி ஆர். எஸ் நாயடு அழகர் கோவில் டிரஸ்டி முதலியோர் சேர்த்து பேசி ரகியமாகவே பிரவேசம் நடத்தப்பட்டது. டி. எஸ். எஸ். ஆர். மந்திரியானவுடன் ஜஸ்டிஸ் கக்ஷியைச் சேர்ந்த ஸ்ரீகொண்டப்பா தனக்கு இணங்கி வருவாரோ என்ற சந்தேகத்துடன் எச். ஆர். இ. பி. யையே ஒழித்து விடுவதாக பயமுறுத்தி னர். பின் வயிற்றுக் கொடுமையால் ஸ்ரீ கொண்டப்பா இணங்கியவுடன் அவர் மூலம் கோயில்களில் தன் கையாட்களையும் இண ங்கி வருபவர்களையும் இ. டி. அதிகாரிகளாய் நியமித்து தங்கள் கோக்கத்தை இலேசாக ரகஸியமாக நடத்திக் கொண்டார். முதலில் ஸ்ரீ நாயடு பயந்தேயிருந்தார். பின் இவர்கள் ஒரு வரத்தில் சட்டம் செய்வதாக வாக்குறுதி செய்தபின் தணிந்து, ஆனல் பய த்து கொண்டே இதை நிறைவேற்றினர். இவர்கள் வேதம் சாஸ்திரம் என ஏதேதோ சொல்லுகிறார்கள். ஆனல் கோயில் நிர்மா ணம் ஆகமத்திலுள்ளது. "ஆகம நியமப் படி கட்டப்பட்ட கோவில் வேண்டும்; அதில் சொல்லப்பட்ட கட்டுப்பாடும் மாத்தி ரம் வேண்டாம்" என்றல் ஆகமமென்ற குழந்தையின் ஆலய நிர்மாணமென்ற தலை யை மட்டும் விருப்பி மற்ற "கட்டுரைகள்" என்ற சரீரத்திலிருந்து துண்டித்து குழந்தை யை கொலை செய்வதற்கு ஒப்பாகும். காந்தி சத்தியத்தையும் அஹிம்சையையும் வளர்த்த குமார பர்வம் வருமுன்பே ஸ். ஆர். வசம் ஒப்புவித்தார். ஸ். ஆர். அவைகளை ரகஸிய மாகவே கொன்று விட்டார். அவைகளின் தத்தை கார்நியர் கவனிப்பார். தென்னிந் தியாவில் கதகளில்லாத கோவில்களெல்லாம் நிறத்து விடப்பட்டதாக எண்ணிக்கை காட்டி னிருக்கள். தஞ்சாவூர், மதுரைக் கோவில்கள் பய்முறுத்தல்களால் நிறக்கப்பட்டது; கிற லேறு ஆகம நிர்மாண கோவில்கள் நிறக்கப் பட்டேயில்லை. இது பிரசாதரவ் பேச்சில் தெரிய வரும். அவர் பேச்சுகளில் ஆக்ஷே பணை இருக்கிறதென்று ஸ். ஆர். பத்திரிகை ஆபீஸுக்குப் போய் தடுக்கிறார். அதனே இதற்கு ருசு. ஸமீபத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டி, மதுரை வைதீகர்கள் சம்மதத்திற்கு மெச்சி தீர்மானம் செய்திருக்கிறது. மது ரை வைதீகர்கள் சம்மதிக்கவில்லை என்ற அடியில் கண்ட தீர்மானத்தைப் பிரேரேபித் தார்."

ஸ்ரீ ஜி. ஏ. விஸ்வநாத சாஸ்திரி தீர்மானத் தை ஆமோதித்தார். "காந்தியே காங்கிரஸில் ஜாழல் மலிந்திருப்பதாக ஒப் புக்கொள்ளுகிறார். ஆனல் ஸ். ஆர். அதிக ஜாழரானவர் என அறியார். ரகஸ்ய பயமு றுத்தல் மூலம் நடந்த ஆலயப்பிரவேச மூலம் ஸ். ஆர். தான் ஜாழலில் முதன்மையானவர். தன் கொள்கைகளுக்கு முதல் எதிரி என காந்தி அதிர்ந்து கொள்ளட்டும். காந்தி தன் ராஜீய காரணங்களுக்காக, ஸ். ஆர். ஹரிஜன ஆலயப்பிரவேசத்தை ஆரம்பித்திருப்பதற்காக ஸ். ஆர். யும் அவர் நிறமையையும் ஒப்புக் கொண்டு பாராட்டுகிறார். அப்படியானல் சா ப்பாட்டிற்கு இல்லையானல் சாப்பாட்டிற்கு சம்பாதிக்கும் உபத்திரவத்திலிருந்து விடுபடு வதற்காக உயிரையே மாய்த்துக் கொள்வதற் கொப்பாகும். இது பயித்தியக்காரத்தனம். தென்னிந்தியர்கள் எல்லோரும் காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானத்தை எதிர்க்க வேண்டும்."

தீர்மானம் ஏக மனதாக நிறைவேறியது. பின் திருவாழி ராமாநுஜ அய்யங்காரால் வந் தனோசாரம் கூறப்பட்டு கூட்டம் இனித கலைந்தது.

(ஒரு நிருபர்.)

ஸ்ரீராகவேந்த்ரா

சரிதாமிர்தஸாரஸங்கிரஹம்

சீர்காழி ப்ரம்மஸ்ரீ ரா. சுப்பராமய்யரால் எழுதப்பட்டது.

சரித்திரம் தமிழிலும் சோத்திரம் ஸம்ஸ்கிருதத்திலும் உள்ள புத்தகம் விலை அணா 0—8—0

டை. தமிழ் சரித்திரம் மட்டில் புத் தகம் விலை அணா 0—5—0

ஸமஸ்கிருதம் ஸ்தோத்திரங்கள் மட்டில் புத்தகம் விலை அணா 0—5—0

கிடைக்குமிடம்: ஜனரத்ன அச்சுக்கூடம் கும்பகோணம்.

ராஜதானிமுழுவதும் எதிர்ப்பு

ஆலயப்பிரவேசத்திற்கு ஆட்சேபனை

பலவிடங்களில் மாபெருங் கூட்டங்கள்

திருவேடகம்

வஸந்தனிகள் மகாநாடு

மதுரை ஜில்லா சோழவந்தானுக்கடுத்த திருவேடகம் ரிமமத்தில் 12—8—39 ஞா திருவேடகம் மகாநாடு கூடிற்று.

ஸ்ரீ நரசிம்மய்யங்கார் தலைமை வஹித்தார். சுமார் 1000 ஜனங்கள் கூடியிருந்தார்கள். ஸ்ரீசக்திவேல்பிள்ளை (சுதர்மம்எடிட்டர்) வடு ஆர் வித்வான் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார், ஸ்ரீ ரு. சாமி ரூஜு, ஸ்ரீ ஸகேச்வர சர்மா ஸ்ரீ ஏ. விச்வநாத சாஸ்திரிகள் ஆலயப்பிரவேச விஷயமாக சொற்பொழிவு ஆற்றினர்கள்.

"காங்கிரஸ்காரர்கள் நம்மிடம் என்னமோ பெரிய காரியங்களை சாதிக்கப் போவதாக சொல்லி ஏமாற்றி ஜனங்களிடம் ஓட்டுரிமை பெற்று அதிகாரங்களை வஹித்துக்கொண்டு தேர்தல் கலத்தில் கொடுத்த வாக்குறுதியை கிறவேற்றுமுன் இருப்பதோடு ஹிந்துகளுக் குயிர்போன்ற மதத்தில்தலையிட்டுத் தொன்று தொட்டு வந்த வழக்கங்களைச்சட்டமூலம்மாறு தல் செய்து கம்முடைய ஜனஸமூகத்தின் மனதைப் புண்படுத்தவதுடன் தற்போது 8-7-39 முதல் நம்முடைய வழிபாடுகளுக்கு முக்கிய ஆதாரமாய் இருக்கிற தேவஸ்தலங்க களில் தீண்டாதார்களை பலாத்காரமாய் பி வேசிக்கச்செய்து ஆலயங்களை அசுத்தப்படு த்தி தெய்வ சான்னித்தியம் இல்லாமல் செய்து பழாக்கியது பெரிய அதீயாயமென்கிறதென் றும், ஆலயங்களை எல்லோருக்கும் பாத்திய மென்று காங்கிரஸ்காரர்கள்சொல்லுகிறார்கள். அது மிகவும் தவறு. ஆலயங்கள் ஒருவருக் கும் பாத்தியமில்லை. கடவுளுக்குத்தான் பா த்யம். அதில் வழிபடுகிறவிஷயத்தில் இக்கு களில் ஒரு சிலரான சவர்ணர்களுக்குதான் யோக்யதை உண்டு. அவர்கள் கோவி லுக்கு வெளியே நின்று விமானங்களையும் கோபுரங்களையும் தரிசிக்கவும் ஸ்வாமி பவனி வரும்போது ரதோத்சவ காலங்களிலும் விசேஷமான பணிவிடை செய்து தரிசிக்க பாத்யமுண்டு என்று" கூறினர்கள்.

நிறைவேறிய தீர்மானங்கள்

இந்த மகாநாடு "மதுரையில் நடந்த ஆலயப்பிரவேச சம்பவத்தை வன்மையாய் கண்டிக்கிறதாகவும், ஜன நாயக ஆட்சியி லுள்ள காங்கிரஸ் கவர்ன்மெண்டார் பொது ஜனங்களுக்கு விரோதமாக தலையிடாமல் இருக்கும்படி கேட்டுக் கொள்ளுவதாகவும், மே. த. விக்டோரியா மகாராணியார் ஏற்படு த்திய சட்டத்திற்கு முரணன முறையில் சட் டம் செய்யக்கூடாதென்று மே. த. வைஸ்ரா யையும் கவர்னையும் வேண்டிக்கொள்வதா யும், அகில இந்திய வர்ணச்ரம சுயராஜ்ய சங் கத்துக்கு பொது மக்கள் பெருளுதவி செய் யவேண்டுமாயும், தீண்டாதார் ஆலயப்பிர வேசநிர்ப்புயிக்கத்தை நடத்திவரும் ராவ் சாஹிப் ஸ்ரீ கடேசய்யர், ஸ்ரீ கே. ஆர் வெங்க டாசமய்யர் மற்றும் உள்ள ஆன்றோர் அன்பர் களையும் ஈடுபட்டு உழைக்கும் தொண்டர்களை யும் பாராட்டுவதாகவும்" தீர்மானங்கள் நிறை வேறின.

ஆழ்வார் திருநகரி

"யாதவர்கள் கண்டனம்"

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ உடையார் கோயில் வாசல் முன் ஸ்ரீமத் எம்பெருமானுடம் ஸ்ரீயர்ஸ்வாமிகள் தலைமையில் 16—8—39 மாலை பிரும்மாண்டமான ஜனசனப் பொதுக் கூட் டம் கடைபெற்றது. வாளமான ஸ்திரீகள் வந்திருந்தனர். திருமழிசை ஆதீன ம் ஸ்வாமிகளும் மற்றும் இலையவல்லி ஸ்ரீ சடகோபசாரியார், ஸ்ரீ வைகுண்டம் நாத் தாசரியார் ஆத்தான் ஸ்ரீ வெங்கடாசரி யார் முதலிய ஆசார்ய புருஷ ஸ்வாமிகள ரும் தீண்டாதார் கோயில் பிரவேசத்திர்ச்சி யைக் கண்டித்த உருக்கமாக உபன்யாஸம் செய்யப்பட்டன.

அம்பலம் லக்ஷ்மணக் கோனர் இத்த விஷமக் கிளர்ச்சியை எதிர்க்கவேண்டிய யாத வர்கள் எவ்வித நியாயம் செய்பவும் தயார ாயிருப்பதாய்க் கூறியது குறிப்பிடத்தக்கது.

தீண்டாதார் ஆலயப்பிரவேசக் கிளர்ச்சியை யும் சட்டத்தையும் ஒழிக்க யாவரும் எல்லா விதி நியாயமும் செய்ய வேண்டுமெனவும் குடந்தை ந. அர்ச்சக பட்டர சாரியார்கள் நீதிமார்க எதிர்த்து ஒற்றுமையர்ய நிறபதை யும் மதுரை ஸ்ரீமீனக்ஷிகோயில்ருப்ரண்டண்டு ஸ்ரீ வி. எம். பரசாத், ஸ்ரனதன தர்மிகள் வருத்தத்தை உணர்ந்து தமது வேலையை ராஜீனாமா செய்ததையும் பாராட்டி மற்றவூர் கோயில் கைங்கர்ய ஜோலியாளர்களும் இம் மாநிபாக உறநியுடனிருக்க வேண்டுமென் றும், கனம் கவர்னர் ஜனரல் அதிகாமன்றர் களின் பாதுகாப்புச் சட்டத்தை ஒப்புக்கொள் ளாமல் நிராகரிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானங்களும் நிறைவேற் றப்பட்டன. 10-30 மணிக்கு கூட்டம் முடிந் தது. கோயில் நிர்வாஹ ருபீஸரும் கூட்டத்துக்கு வந்திருந்தார்.

வைஸ்ராய்க்குத் தந்தி

ஆழ்வார்திருநகர் ஜனதன. தர்ம சபா சார் பாக மே. த. ராஜப்பிரதிநிதிக்கு; "சென்னை ஆலயப்பிரவேச அதிக்கப் பிரதிகரப் பு மசோதாவை அங்கீகரம் செய்யக்கூடா தென்றும் இது விஷயமாய் வரும் ஜனதனி னதைக் கோஷ்டியை ஆதரிப்பதாகவும், இம் மசோதா சட்டமானல் காட்டில் நிம்மதியிர தனவும் கண்டு 14—8—39ல், தந்தி கொடு க்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கண்க்கான ஆன் கிக பக்தர்கள், கோயிலில் விசேஷ பாத்ய முள்ளவர்கள், சனதனத் தலைவர்கள் பாவ ரும் கையொப்பமிட்டு ஓர் மகஜரும் ரிஜிஸ்டர் மூலம் அனுப்பியிருக்கின்றனர்.

ஸ்ரீவைகுண்டம் தகரின் பிரபல வக்கீல்களும் பிரசுதார்களும் கோயில் அர்ச்சககைங்கர்ய காரியஸ்தர்களுமாக 1500பேர்கையொப்பம் கொண்ட ஆலயப்பிரவேச எதிர்ப்பு மகஜர் 14—8—39 மே. த. கைசராய்க்கு அனுப் பப்பட்டிருக்கிறது. மேற்படி மகஜரில் ஜாதாருக்கு மேற்பட்ட பெண் பாலர்களும் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

திப்பிராஜபுரம்

ஸ்ரீ ப்ரும்ம வித்யா ஸபா

19—8—39உ நாகப்பட்டணம் பிரபல வக்கீ லும், ஷெரியர் ஹிந்துமதாபிமானச் சங்கத் தலைவரும், பரம ஆஸ்திகருமான ஸ்ரீமான் என். சாம்பசிவய்யர் பி. ஏ. பி. எல் ஸாஸ்தன தர்மத்தைப்பற்றியும் ஆலயப்பிரவேச அவசரக் கோலத்தைப்பற்றியும் உபன்யாஸம் செய் தார்.

"ஸ்ரீ ப்ரும்ம வித்யா ஸ்வரூபிணியான சாக்ஷாத் பாராசக்தியான மீனாக்ஷி யைக் குறித்த ஸ்தோத்ரத்தைச்சொல்லி நியாகம் செய்து கொண்டு ஸாஸ்தன தர்மத்துக்கு அடிப்படையான ஸ்ரீதர்மம் இப்பொழுது கூனதசைக்கு வரிருப்பதாலும் அதை இப் பொழுது க்ஷேத்திரம் என்ற பெற முறையிலும், வெளிக்குக்கட்டாயம் பெட்டியில் வைத்து பூட்டி பத்தோபஸ்டன் அனுபவிக்கவேண் டிய நிலைக்கு என்ற முறையிலும் நாம் ரக்ஷிக்கவேண்டியது எப்படி ஆவச்யகமென் றும், வர்ணச்ரம தர்மத்தைப்பற்றிச் சொல் லுகையில், புருஷார்த்தங்களை அடைய வதற்கு வேண்டுமென்றும், கர்ம பக்தி ஜாநாஸ்யத்தின் தத்வத்தையும், ஆவச் யகத்தைப் பற்றியும், ஸோபானக்ரமமாக பக்தியின் பாகரஸ்டையான ஞநைகயம் லபிக்குமென்றும், எக்தக் காரணத்தினலும் (சாஸ்திர நிருஷ்டேன கர்மனை) பலாபேக்ஷி யனியில் செய்தே நீரவேண்டுமென்றும், இத்த சுத்தியான ஞானம் இட்டுங்கல் கர்மா தானு கர்மம் விட்டு விடுமென்றும், இது தான் ஸ்ரீ மத் பகவத் கீதையின் ஸாரமென்று "யங்கர ஜயதே காமம் காமாத் க்ரோத:" என்னும் ச்லோகத்தைச் சொல்லி பிறகு எத் னங்களின் பெருமையையும் தெளிவு படுத் நிவிட்டு, ஆலயப்பிரவேசத்துக்கு ஆசேப மாகாரணம் சொல்லுகையில், இவ்வளகாலம் மாக கம்மவர்களால் உனனத ஸ்திதியை அடையப்பெற்றிருக்கிற காங்கிரஸின் சார் பாக கமத சகோதரர்கள் ஆசார்யாளின் ஆக் ஞ்யானத்தை அதின் உள் கருத்துத்தெரிந்து கொள்ளாமலும் "கச்ச கச்சேதி" என்றிருக் கிற பூர்வபரத்தையிட்டுப்பிதற்றுவதையும் ச்ருதி, ஸ்மிருதி, யுக்தி இதகளுக்கு ஒவ்வ வில்லை என்ற கண் மூடித்தனமாகப் பேசுவ தைக் கண்டித்தும், கும்பகோணம் ஸ்ரீ பரமா சார்யாளிடம் தான் பேசிக்கொண்டிருக்கு பொழுது ஈச்வரனே வழிபடுவதற்கு மூர்த்தி கேஷத்திரம், தீர்த்தம் முதலியவைகளில் முத லவதான மூர்த்திக்கு அபசாபம் வந்திருகி றதென்றும், பகவானே ஆராதிக்க வேண்டு மென்றும், வருத்தத்துடன் தெரிவித்த விப ரத்தை ஸதஸ்யர்களுக்குச்சொல்லியும்," உபன் யாஸத்தை முடித்துக்கொண்டார். வக்தனே பசாரத்துடன் ஸபை முடிந்தது.

ஆடுதுறை பெருமாள் கோயில் லக்ஷ்மிகாந்த சர்மா அவர்களால் சென்ற 20 நாட்களாக நடத்தப்பட்டு வரும் ஸ்ரீமத் வால்மீகி ராமா யணத்தில் "ஸ்ரீராம பட்டாபிஷேகம் (23-8-39) நிங்கட்டுமுமை இனித நடந்தேறியது (ந. நி)

8 பக்கம் தொடர்ச்சி

ளமாய்ப் பணம் தருவதாகக் கூறினர்களாம் கடையில் நிருகெல்வேலியில் ஒரு குக்கிரா மத்திற்குச்சென்று யாரையாவது அழைத்து வரலாமா என்று போசித்து வருகிறார்க ளாம்.

உள்ளூரில் ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவு இருப்பதாக அட்டஹாஸம்செய்த காங்கரஸ் காரர்களுக்கு ஆட்கள் கிடைக்காமல் என்ன போய்விட்டது?

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஹ ஆவணி-மீ 8உ

பிரதம மந்திரியின் விஜேதப்பேச்சு

ஆலயப்பிரவேச விஷயமாக நமது பிரதம மந்திரியின் பேச்சுக்கள் மிக்க விநோதமாயிருக்கின்றன. தாம் செய்த பெரிய அநீதிக்கு அவர் ஆதரவு தேடிக்கொள்ளும் வழி மிக வேடிக்கையாயிருக்கிறது.

சிறியதோ, பெரியதோ, உண்மைபோ, உண்மையற்றதோ என்பதைக்கூட கவனியாமல், பல விசித்திரவர்த்தைகளால் பொது ஜனங்களை தர்மிம் விஷயஸ் [illegible] சிபதில் ஸமரஸ்யம் காட்டி வருகிறார். அன்று சட்டஸபையில் புனு ஒப்பந்தத்தைக்காட்டி அவர் சாதனை செய்ததை வெகு துணிச்சற் கார்ய்மே. பெரிய பொறுப்புள்ள பதவி வஹிப்பவரும், ஜனங்களுக்கு வழிகாட்டியாயும், விளங்கும் தலிவரான கனம் மந்திரி புனு ஒப்பந்தம் போன்ற அபாண்டங்களைக்காட்டி சட்டம் செய்ய விரும்பினது எவ்வளவு கேர்மை? அந்த ஒப்பந்தமானது சட்ட மூலமாக ஆலயப்பிரவேசம் செய்து கொடுக்க ஹிந்து ஸமூஹத்தினரனைவரையும் கட்டுப்படுத்தி விட்டதாக வல்லவோ கனம் ஆசாரியர் வாயடி அடித்தார்? ஆயினும் அவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஸ்ரீமான் மாளவியாஜீஸ்டிஷ்ட் மாகக்கூறியுள்ள அபிப்பிராயத்தை கமது பத்திரிகையில் இன்னொரு பத்தியில் காணலாம். இதிலிருந்து கனம் ஆசாரியரின் கூற்றின் ரஸயை யாவரும் ஸுலபமாக அறியக்கூடும். மாளவியாஜி போன்று வேறு பல தலிவர்களும் புனு ஒப்பந்த ஸந்தர்ப்பத்தையும், அது கட்டுப்படுத்தக் கூடியதல்ல வென்பதையும் தெளிவு படுத்தியிருக்கிறார்கள்.

ஸ்ரீமான் ஆசார்யரின் விநோதப் பேச்சு விஷயத்தைக்கு, அவர் சில நினங்களுக்கு முன் கோயம்புத்தூரில் பேசியிருப்பதும் ஓர் உதாஹரணமாகும். மிஸ் மேயோ என்ற ஒரு காடேரி ஸ்திரீயின் வார்த்தைகளை கூசாமல் தமக்கு உதவியாகக்கொண்டுபேசியிருக்கிறார். ஆலயப்பிரவேச மசோதாவுக்கு அங்கீகாரம் விளக்கக் கூடாதென்ற லக்ஷக்கணக்கான ஜனங்கள் மஹஜரில் கையெழுத்திட்டு வருவதைக் கண்டு கனம் ஆசாரியரின் மனம் மருண்டு விட்டதாகத் தெரிகிறது. அதைக் குறை கூறுவதற்காக, மறந்துபோன மீஸ் மேயோவின் ஆபரணக் கூற்றுக்களை ஆதரிக்க முன் வந்திருக்கிறார்.

தீண்டாமை விலக்கை எதிர்த்து மஹஜரில் கையெழுத்திடுவதின் மூலம் மிஸ் மேயோவின் கூற்றை ஹிந்துக்கள் ஸ்திரப்படுத்துவதாகும் என்று கனம் ஆசாரியார் கண்ணீர் விடுகிறார். தமது சொந்த புத்தியைப் பறி கொடுத்துவிட்டு, பிறர் புத்தியை இரவல் வாங்கிக்கொண்டு, தமது சமூகத்தை பழிக்கும் சீர்திருத்த வாதிகளின் ஆபாஸக் கூற்றுக்களே மிஸ் மேயோ திருப்பிச் சொன்னது. மிஸ் மேயோ என்ற காடேரி ஸ்திரீ ஹிந்து தர்மங்களைப்பற்றிப் பேச என்ன அர்ஹதையுள்ளவள்? அவள் வார்த்தைக்கு எள்ளளவும் மதிப்புண்டா? கனம் ஆசாரியார் போன்றவர்களுக்குமிஸ் மேயோ பெரிய ஞானியாகவும் குருவாகவும் தோன்றலாம். ஹிந்து தர்மத்தில் பிறந்து வளரும் கோடிக் கணக்கான ஹிந்துக்கள் மிஸ் மேயோவின் கூற்றை ஒரு தரும்பளவு கூட மதிக்கவில்லை. மிஸ் மேயோவுக்கு முகமலர்ச்சி உண்டாவதற்காக அவ்யவஸ்தைக்காரர்கள் ஆதிரித்துடன் சாரதாச் சட்டத்தை நிறை வேற்றி வைத்தார்கள். இப்போழுதும் அவளுக்குப் பணிந்து, ஆலயப்பிரவேசம் வேண்டுமென்கிறார்கள். மிஸ் மேயோவின் வார்த்தையை வேத வாக்காகக் கொள்ளும்படியான அவ்வளவு சீர்கேடான நிலைமைக்கு சீர்திருத்தக்காரர்கள் வருவார்களென்று ஒருவரும் எண்ணவில்லை.

கோயம்புத்தூரில் ஸ்ரீமான் ஆசார்யர்கூறிய மற்றொரு உண்மையற்ற கூற்றையும் மறுக்க வேண்டியது அவச்யம். திருவாங்கூர் ஆலயப்பிரவேசத்தின்போது ஒரு மடாதிபதியும் அதை ஆக்ஷேபிக்கவில்லையென்று ஆசாரியர் கூசாமல் சொல்லுகிறார். இது உண்மையற்ற தாகும். ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்வாமிகளும் ஸ்ரீ கும்பகோணம் ஆசார்ய ஸ்வாமிகளும் தமது பக்ஷத்தை [illegible] வெளியிட்டதை கனம் ஆசாரியர் அறியார் போலும்! அதைப்போலவே மற்ற மடாதிபதிகளும் பஹிரங்கமாகக் கண்டனம் செய்திருக்கிறார்கள். கனம் ஆசாரியர் என்ன உத்தேசத்தால் இப்படி பேசினாரோ தெரியவில்லை.

தீண்டாமையை விஷப்பாம்பு என்று ஸ்ரீ ஆசாரியர் உவமை கூறுகிறார். இது அவருடைய பிரமமேயல்லது உண்மையல்ல. உண்மையில் தீண்டாமை என்பது ஒரு பழுதையே. பழுதையைப் பாம்பென்று பரமார்கள் ஸ்தேஹிப்பது உலக இயற்கை. எவ்வளவோ வருஷகாலமாக இந்தத் தீண்டாமை என்ற பழுதை இருந்துவருகிறது. இதுவரையில் ஒருவரையும் அது கடிக்கவில்லை. ஒருவரும் அதனால் இறக்கவில்லை. ஆதலால், அது பாம்பல்லவென்பது தெளிவு. அது பாம்பாயிருந்தாலும் ஒருவரையும் இதுவரையில் அது தீண்டவில்லை. வீட்டிலுள்ள எல்லாருடனும் பாஸ்பாம் கேசமூறையில் பழகிவருகிறது. கனம் ஆசாரியர் போன்றவர்கள் அதற்கு விஷமூட்டிக் கடிக்கத் தூண்டினாலும் அது உடன்படாது.

கனம் ஆசாரியர் தீண்டாதாரை விஷப் பாம்புக்கொப்பிட்டு வர்ணிப்பதை அச் சமூஹத்தினர் வெறுப்புடன் நிந்திப்பார்கள். ஆயினும் ஹிந்து மதமும் ஸமூஹமும் அவர்களை ஹிந்து சமூகமிலிய சரீரத்தில் ஒன்றுபட்டு இணைத்துள்ள ஓர் அங்கமாகவே மதித்துவருகிறார்கள். அது மற்ற அவயவங்களைப்போல் சரீரதாரணத்திற்கு அவியமான அங்கம். அதைப்பிரித்து பேதப்படுத்திவிட ஸ்ரீமான் ஆசாரியர் போன்றவர்கள் செய்யும் முயற்சி ஒருக்காலும் பலிக்கப்போவதில்லை.

குடந்தையில் ஸநாதந வீரர்களின் முழக்கம்

பிரம்மாண்டமான கூட்டம்

ஸ்ரீ நடேசய்யர், ஸ்ரீ பிரசாத்ராவ் சொற்பொழிவுகள்

ஆகஸ்ட்மீ 20உ மாலை ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோபுர. வாசலில் பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் நடந்தது மூவாயிரம் ஜனங்கள் வரையில் கூடியிருந்தனர். கமது தலிவரின் வருகையை உத்தேசித்து தெரு அலங்கரிக்கப் பட்டிருந்தது.

ஸ்ரீராமாநுஜதாதாசாரியரின் பிரேரேபணையின் மேல் ஸ்ரீ எம். கே. வைத்யநாதய்யர் அவர்கள் தலிமை வஹித்து, "கமது தலிவர் பிரம்மஸ்ரீ நடேசய்யர், ஸ்ரீபிரசாதராவ் ஆகியோரைப் பற்றிய விவங்களைக் கூறி குடந்தையினர் அவர்கள் கூறும் உண்மை விவரங்களைக் கேட்கும் பக்யம் கிடைத்திருப்பதாயும், அமைநியாயிருந்து கேட்க வேணுமென்றும்" சொன்னார்.

பின்பு பலத்த காகோஷத்தினிடையே கமது தலிவர் ராவ்ஸாஹிப் பிரம்மஸ்ரீ நடேசய்யர் அவர்கள் எழுந்து பேசத்தொடங்கி ஆலயப்பிரவேச முதலாக இன்று வரையில் காங்கிரஸ்காரர்கள் செய்துள்ள சூழ்ச்சிகளையும் அநீதிகளையும் எற்கனவே வெளியிட்டிருக்கிறபடி விவரமாக எடுத்துக் கூறினார்கள்.

வைகைபாற்றில் பிரதம மந்திரி முன்னிலையில் காங்கிரஸ்காரர்கள் செய்த கொடுமையை ஸ்ரீ நடேசய்யர் எடுத்துக் கூறும்போது ஒவ்வொருவருக்கும் பெரும் கடுக்கமும் ஆத்திரமும் உண்டாயிது. கடைசியாக ஆஸ்திகர்கள் யாவரும் ஒற்றுமையுடன் தின் பலமாயிருந்து இந்த அக்கிரமச்சட்டத்தை நிவர்த்திக்க உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மீனக்ஷி கோவில் தேவஸ்தான ரூப்பிரண்டெண்ட் வேலைபாஜீராமாசெய்த ஸ்ரீமான் பிரஸாதாராவ் தெலுங்கில் பேசியதை ஸ்ரீமான் நாராயணாவ் தமிழில் மொழிபெயர்த்துக் கூறினர். ஸ்ரீ பிரஸாத ராவ் பேசுகையில், நிர்வாகஅதிகாரிஸ்ரீ ஆர்.எஸ். நாயுடுவும், ஸ்ரீஎ. வைத்யாதய்யரும் தமக்குக்கூடத் தெரிவிக்காமல் கோவில் பிரவேசசூழ்ச்சிகள் நடத்திய விதத்தையும் இக்க அக்கிரமம் தாங்கமல் தாம் ராஜீநாமா செய்ய நேர்ந்ததையும், மீனக்ஷி கோவிலில் இப்போது ஆஸ்திகர்கள் ஒருவரும் வருவதில்லையென்றும் விவரமாகக் கூறினர்.

(இருடைய பிரசங்கம் முழுவிவரமும் அடுத்தவாரம் பிரசுரிக்கப்படும்)

பிறகு சென்னை அட்வகேட் ஸ்ரீமான் கே. பாலஸுப்பிரமண்ய அய்யர் அவர்கள் பேசுகையில் பிரஜைகளின் நீண்ட காலப் பழக்க வழக்கங்களில் ஸர்க்கார் பிரவேசிப்பது நியாயமில்லையென்றும் ஆலயங்கள் நம் தேசத்தின் நாகரீகத்திற்கு அரிய பொக்கிஷமென்றும் அவைகளைக் கெடுத்துவிடக்கூடாதென்றும் சொன்னர்.

பிறகு மைலாப்பூர் அட்வகேட் எஸ். ராஜகோபாலாச்சாரியரும், மதுரை ஸ்ரீ ஜி. ஏ. விஸ்வநாத சாஸ்திரிகளும் காங்கிரஸ் மந்திரி ஸபைச்செய்கைகளை பலமாகக் கண்டித்துப் பேசினர்கள். தலிவர் முடிவுரையில் சட்ட ஸபையிலுள்ள கமது பிரதிநிதிகள் ஆலயப் பிரவேச விஷயமாக என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களென்று வோட்டர்களாகிய நாம் அறிந்துகொள்ள முடியவில்லை

பென்றும், அவர்கள் கஷிக் கட்டுப்பாட்டிற்கு அடங்கி வர்த்திறவரமல் இருந்தவரு வதாயும், ஜனாதாய ஆகிபில் எதிர் கஷி வதங்களைக் கேட்பது, முக்யமான ராஜ்ய நீதியாகுமென்றும், பிரிட்டிஷ் பார்லிமெண்டின்சரித்திரத்தை எடுத்தக்கூறியும் காங்கிரஸ் மந்திரிகள் எதிர்கஷி அபிப்பிராயத்தை மதிக்காமல் யதேச்சாதிகாரமாக நடப்பது ஜனாதாய முறையல்லவென்றும் கூறினர்.

பிறகு ஸ்ரீ ராமாநுஜதாதாசாரியரால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு இரவு 10 மணிக்குக் கூட்டம் அமைதியாகக் கலைந்தது. பேரீஸார் பந்தோபஸ்து செய்திருந்தார்கள். (ஒ. கி.)

கார்யக் கமிட்டியின் கண்மூடித்தனம்!

ஆலயப்பிரவேசத்தை ஆதரிப்பதா?

குடந்தையில் கண்டனம்

வார்தாவில் கூடிய காங்கிரஸ் கார்யக் கமிட்டியானது மதுரை ஆலயப்பிரவேசத்தை ஆதரித்தும் மந்திரிகளின் செய்கையை ஆமோதித்தும் செய்த தீர்மானத்தைக் கண்டிப்பதற்காக கும்பகோணம் ஆஸ்திக ஹிந்துக்களின் பொதுக்கூட்டமொன்று 16உ மாலை ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோபுர வாசலில் கூடைபெற்றது. ஆயிரம் பேருக்கு அதிகமாக ஜனங்கள் வந்திருந்ததுடன் ஸ்வராஜ்யம் இரண்டாம் பக்ஷமாகினென் பம்மஸ்ரீ சேங்காலிபுரம் வைத்யநாத சாஸ்திரிகள் தலைமைவஹித்துக் கூட்டத்தின் கோக்கத்தைக் கூறி காங்கிரஸ் மந்திரி ஸபை மதவிஷயத்தில் பிரவேசித்துக் கொடுமை செய்வதை பலமாகக் கண்டித்தார்.

அட்வகேட் ஸ்ரீமான் எம். கே. வைத்தினாதய்யாவர்கள் காங்கிரஸ் கார்யக்கமிட்டி செய்துள்ள ஆலயப்பிரவேச ஆதரவுத் தீர்மானத்தைக் கண்டித்து ஓர் தீர்மானத்தை பிரேரேபித்துப் பேசினர்.

"மதுரை உண்மை நிலைமையை அறியாமலும் ஸனாதன தலிவர்கள் சொல்லுவதை கம்பரமாலும், தம் பிழியுள்ளவர்களின் வார்த்தையையே நம்பி காந்திஜியும், கார்யக் கமிட்டியும் செய்துள்ள தீர்மானம் ஆக்ஷேபகரமென்றும், அது ஒரு தலிப்பக்ஷமான தென்றும் ஸ்ரீமான் அய்யர் கூறினர். தீர்மானத்தை ஆதரித்தும் ஆமோதித்தும், ஸ்ரீமான்களான நாராயணாவ், சிருமணி சுப்பிரமண்ய சாஸ்திரிகள், வரகூர் வெங்கடராம சாஸ்திரிகள் முதலியவர்கள் பேசினர்கள். தீர்மானம் பலத்த காகோஷத்தினிடையே நிறைவேற்றியது. மதுரை மீனக்ஷிகோவில் ரூப்பிரண்டெண்ட் பதவியை ராஜீநாமா செய்து, நிருட்டித்தை ஆலயபிரவேசச் சூழ்ச்சிகளை வெளிப்படுத்திய ஸ்ரீமான் பிரஸாதாராவ் அவர்களுக்கு வந்தனமளிப்பதாகஒர்தீர்மானத்தை ஸ்ரீமான் ராமாநுஜ தாத்தாதாசாரியர் பிரேரேபித்து விஸ்தாரமாகப் பேசினர். தீர்மானம் நிறைவேறிய பின்பு ஸ்ரீமான் நாராயணாவ் தலைவருக்கு வந்தனம் கூறினர். 9 மணிக்குக் கூட்டம் அமைதியாக முடிவுபெற்றது. (ஒ. கி.)

Superfluous Bodies ?

Dr. Pattabhi Sitaramayya, at the Co-operative Committee Meeting at Madras on 19-8-39 expressed the view that Municipal Councils on the whole secured to be superfluous bodies. They merely added to corruption. It would be possible to carry on local administration with a paid official assisted by an Advisory Council of suitable persons.

திருவிடமருதூரில் கண்டனம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை 6½ மணிக்கு திருவிடமருதூர் ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமி ஆலயத்தில் ஆஸ்திகஹிந்துக்களின் பொதுக் கூட்டமொன்று ஆலயப்பிரவேச இயக்கத்தைக் கண்டிக்கக்கூடியது.

வக்கீல் பாஷ்ய பரவஸ்து பிரம்மஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகள் கூட்டத்தில் தலைமை வஹித்தார்கள். பிரமணர்லாதார் உள்பட ஏராளமாகப் பொது ஜனங்கள் கூடியிருந்தனர். திருவாவடுதுரை மடத்தைச் சேர்ந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ கட்டளைத்தம்பிரான் முதலியவர்களும் விஜயமாகியிருந்தனர்.

குடந்தை அக்நிஹோத்ரம் ஸ்ரீ கேசவால தேசிகசாரியர் பேசுகையில் காங்கிரஸின் ஆதி சரித்திரத்தை எடுத்துக் காட்டினர்.

காங்கிரஸ் பிரஜைகளின் மத விஷயத்தில் பிரவேசிப்பதில்லையென்ற நியமம் ஆதியில் ஏற்பட்டிருந்ததாயும், பிறகு காந்திஜி காங்கிரஸில் பிரவேசித்த பிறகு அந்த நியமம் மாறியிட்டதையும், காந்தி மதம் என்ற புதிய மதம் ஒன்று தேசத்தில் தோன்றி பிரிப்பதாயும், அதை நிறைவேற்றிக் கொள்ளவே காந்திஜி முயற்சிப்பதாயும், ஸ்வராஜ்யம் இரண்டாம் பக்ஷமாகினென் பதையும் விளக்கினர்.

Legislation is Coercion

Malaviyaji repudiates Gandhiji's Pledge Theory

Pandit Malaviya in his letter to Gandhiji dated 8th February 1933 says :— "I hold that this proviso to Bombay resolution of 30th September 1932 rules out Satyagraha or fasting to have the temples open ..... I also hold that this rules out, even more clearly, any attempt to seek the help of the legislature to secure such entry into temples. I have carefully read Mr. Ranga Iyer's Bill..... I have also read all that you have written about it, and your appeal to Hindus to see that it is passed as speedily as possible.....This attitude of yours seems to be inconsistent with the letter and spirit of the proviso to the Bombay resolution of 30th September, and it has caused me very great pain."

[Harijan 18—2—33, p. 6.]

பிறகு நிண்டிவனம் ஸ்ரீ சுக்தேச சர்மா பேசுகையில் மத விஷயத்தில் காங்கிரஸ் பிரவேசத்தை பலமாகக் கண்டித்தார்.

சிறுகமணி ஸ்ரீ ஸுப்பிரமண்ய சாஸ்திரிகள் பேசுகையில் கால நிலைமையை அநுசரித்து காம் சில தர்மங்களை சரிவர நடத்த முடியாமல் போகிறோம் என்பதை ஒரு கண் பொட்டையிருந்தால் மற்றொரு கண்ணையும் நாசமாக்கிக் கொள்ளும் மூட காரியத்திற்கு ஒப்பானதென்றும் சொன்னர்.

சேங்காலிபுரம் ஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் பேசுகையில் ஆலயங்களை ஸம்ரக்ஷிப்பது சிவனடியார்களின் கடமையாகுமென்றும் ஆகம விதி மீறுதல் ஆலயங்களை அவர்கள் காப்பாற்றிதேசத்துக்குக்ஷேமத்தைச்செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீமான் தேசிகரும், கவிராயரும் பேசினர்கள். பிறகு கார்யக்கமிட்டியின் நீர்மானத்தைக்கண்டித்தும் அத்தகைகுதி மெம்பராயிய அம்மாபேட்டை ஸ்ரீ வெங்கட்டாசலய்யரை ராஜீநாமா செய்ய வற்புறுத்தியும், வேறு சில முக்கிய விஷயங்களைப் பற்றியும் நீர்மானங்கள் அக்ரோஸனுடன் பிரேரேபிக்க ஏகோபித்து அலை நிறைவேறின.

பண்டிட் வி. கே. சுப்ரமண்ய சாஸ்திரிகளால் யாவருக்கும் உபசார வார்த்தை கூறப்பட்டு இரவு 9 மணிக்கு ஸபை கலைந்தது. கூட்டம் ஆரம்பிக்குமுன் பஜனை கோஷ்டி யொன்று முக்கிய தெருக்கள் வழியாக ஊர் வலமாகவந்து கோவிலை அடைந்தது. நாற்புறக் கணக்கான ஜனங்கள் அத்துடன் வந்தார்கள். (ஒ.கி.)

குடந்தை வக்கீல்களின் ஆக்ஷேபம்

மகஜர் அனுப்புகிறார்கள்

"ஆலயப்பிரவேச அவசரச் சட்டத்தையும், ஆலயப்பிரவேசப் பாதகரப்புச் சட்டத்தையும், மதுரை ஸ்ரீ மீனட்சிஅம்மன் கோவிலிலும், தென்னட்டில் இதர கோவில்களிலும் தீண்டாதார் பிரவேசத்தையும் வன்மையாகக்கண்டிப்பதாக" கும்பகோணம் அட்வகேட்கள், வக்கீல்கள், பிளீடர்கள் யாவரும் ஒருங்கு சேர்ந்து ஆட்சேபித் திருப்பது குறிப்பிடத்க்கது.

ஒரு மகஜர் தயாரித்து அதில் வக்கீல்கள் யாவரும் கையெழுத்திட்டிருக்கிறர்கள். மகஜரில் சுமார் 80 பேர்கள் கையெழுத்திட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளுக்கு ஸ்ரீகள் பிக்ஷை

8—8—39உ செவ்வாய்க்கிழமையன்று ஸ்ரீ சங்கராசாரியர் ஸ்வாமிகள் அவர்களுக்கு ஸ்ரீகள் பொதுவில் அதிக விமர்சையாகவும் பெருநிட்டமாகவும் பிக்ஷை கடத்தி வைத்தார்கள், வக்கீல் ஸ்ரீ எ. ஜி சங்கரய்யர் அவர்கள் மனைவி வரலக்ஷ்மி அம்மாளின் முயற்சி பாராட்டத்தக்கது.

(ஒரு நிருபர்.)

கண்டனக் கூட்டங்கள்

சென்னை, தஞ்சை, நிருக்கோட்டியூர், காஞ்சி, ஸ்ரீ ரங்கம், ராமேஸ்வரம், முதலிய விடங்களில் ஆலயப்பிரவேசக்கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. விவரம் பிறகு

கும்பகோணம் அத்வைத ஸபை

வித்வத்ஸம்பாவனை வைபவம்

கும்பகோணம் அத்வைத ஸபையின் ஆதரவில் நடந்துவரும் வித்வத்ஸபையானது இவ்வருஷம் வெகு சிறப்பாக ஸ்ரீ மடத்தில் ஸ்ரீமத் ஆசார்யஸ்வாமிகளின் அநுக்ரஹத்தை முன்னிட்டு நடக்து ஞாயற்றுக்கிழமையோடு பூர்த்தியடைந்தது. பற்பல ஜில்லாக்களிலிருந்து அத்வைத வேதாந்த பண்டிதர்கள் வெருபேர் விஜயம் செய்திருந்தார்கள். சாஸ்திரரத்னகர, திருவாஜி பிரம்மஶ்ரீ விச்வநாத சாஸ்திரிகள், வாகூர் பாஷ்யபாவஞ்ஞ பிரம்மஶ்ரீ வெங்கட்ராம சாஸ்திரிகள், மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸ்பால் பிரம்மஶ்ரீ ராமசாஸ்திர தீக்ஷிதர், ஆகியவர்கள் ஸபாத்யக்ஷர்களாயிருந்து பரீக்ஷைகளை நடத்தினர். எப்போதும்போல் வாசிக, லேகன பரீக்ஷைகளும் வசுயசார்த்தங்களும் நடைபெற்றன. அத்வைத விஷயத்தைப் பற்றியும் வர்ணச்ரமதர்மங்களைப் பற்றியும் ஒவ்வொரு தினங்களிலும் மாலை 5 மணிக்குப் பண்டிதர்கள் பிரசங்கர் செய்தனர். இரவு 7 மணிக்கு ஸபா பரிக்ஷா தகாரிகளின் பிரசங்கம் நடைபெற்றது. ஏராளமான ஆஸ்திகஸ்தர்கள் ரீபுருஷர்கள் வந்திருந்து ரவணம் செய்தார்கள்.

ஸ்ரீமத் ஆசார்யஸ்வாமிகளும் அடிக்கடி ஸபைக்குவந்து அநுக்ரஹித்து வந்தார்கள். 19உ ஞாயற்றுக் கிழமையன்று காலை 8 மணிக்கு ஸ்ரீ மடத்தில் வித்வத் ஸம்பாவனை நடந்தேறியது. அச்சமயம் ஜகத்குரு ஸ்ரீமத் ஆச்சார்யஸ்வாமிகள் எழுந்தருளியிருந்து அநுக்ரஹபூர்வகமாக ஸம்பாவனைகளை நடத்தி வைத்தார்கள். உள்ளூரிலுள்ள அதிகாரிகள் வந்திருந்ததுடன் வெளியூரிலிருந்தும் ராவ்ஸாஹிப் ஸ்ரீ என் நடேசய்யர் மதுரை, கோபாலஸுப்ரமண்யஅய்யர் சென்னை, ஸ்ரீமான் குன்னம் சுப்ரமண்யய்யர் திருக்கருகாவூர் ஸ்ரீமான் சுப்பய்யர், ஸ்ரீமான் ஆர். ஸ்ரீநிவாஸய்யர், திருச்சி, ஸ்ரீமான் என். ஸாம்பசிவ அய்யர். ராகப்பட்டணம், முடிகொண்டான், ராமய்யர், மேதா அண்ட் ஸன்ஸ் ரங்கராதமேதா, முதலான அநேககனவான்களும்வந்திருந்தனர். மஹாமஹோபாத்யாயபண்டிதராஜ ஸ்ரீ கிருஷ்ண மாசாரியார் முதலானவைவ்ண பண்டிதர்களும் பலர்வந்திருந்தனர்.

அத்வைத ஸபை கார்யதர்சி ஸ்ரீமான் எம். கே. வைத்யராதய்யவர்கள் ஆரம்பத்தில் பேசுகையில், அத்வைத ஸபையின் நிரவ்ய சக்தியைப் பற்றிக் குறிப்பிட்டு, வருல்கள் சரிவர ஏற்படாதகால் வருமானம் குறைந்து விட்டதாயும், ஆயினும் கமிட்டியார் வித்வத் ஸம்பாவனையைக் குறைக்க விரும்பவில்லை யென்றும் சொல்லி, ஸபையின்நிரவ்ய சக்தி அதிகரிக்க யாவரும் உதவி செய்யவேண்டு மென்று கேட்டுக் கொண்டார். ஜகத்குரு ஸ்ரீமத் ஆசாரியஸ்வாமிகள் இவ்வருஷ ஸம் பாவனைத் தொகை மொத்தத்தில் பாகியாக இய 500 ரூபாய்களை ஸ்ரீ மடத்திலிருந்து கொடுத்த உதவ நிருவுள்ளம் பற்றியிருப் பதையும் வெளியிட்டார். இத்தடன் ஒவ்வொரு பண்டிதருக்கும் ஸ்ரீ மடத்திலிருந்து சால்வையும் கொடுக்கப்பட்டது. சுமார் 80 பண்டிதர்களுக்கு ஸம்பாவனை செய்யப்பட்டது. 20பேர்களுக்கு ஜோடிசால்வைகொடுக் கப்பட்டது.

ஆஸ்திக சிகாமணியாகிய ஸ்ரீமான் திருக் கருகாவூர் சுப்பய்யர் அவர்கள், ஸபைக்கு வந்திருக்கும் ஆஹிதாக்னிகளுக்கு தனியாக ஸம்பாவனை செய்தார். அத்தலம்பாவனை யுடன் ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளும்அநுக்ரஹித்த நிரவியமும் தாவளிகளும் ஆஹிதாக்னி களுக்குக் கொடுக்கப்பட்டன. கடைசியாக் கார்யதரிசி ஸ்ரீமான் எம்.கே: வைத்தியராதய்யர்அவர்கள், ஸ்ரீமத் ஆசார்யஸ்வாமிகள் இவ்வருஷம் செய்த விசேஷ அநுக்ரஹத்திற்கு வந்தனம் தெரி வித்துவிட்டு பண்டிதர்களுக்கும், மற்ற உப காரிகளுக்கும் நமது நிருதக்ஞதையைத் தெரிவித்தார். வெளியூர், உள்ளூர் லௌகிக பிரமுகர்கள் யாவருக்கும் ஸ்ரீ ஸ்வாமிகளால் மந்திரக்ஷதைப் பிரஸாதம் அநுக்ரஹிக்கப் பட்டவுடன் ஸபை மங்களகாமாகப் பூர்த்தி யாகியது. ஸபையை கன்ற நடத்திவைத்த கமிட்டி மெம்பர்களுடையவும், முக்யமாக கார்யதரிசி ஸ்ரீமான் எம். கே. வைத்யராதய் யவர்களுடையவும் சிரத்தையாலும் பாராட்டப்பட்டது.

தர்மஜ்ஞ, நிருஹ்யஜ்ஞ, பரீக்ஷை

மேற்படி பரீக்ஷையை, பிரம்மஶ்ரீகளான விச்வநாத சாஸ்திரிகள், வாகூர் வெங்கடராம சாஸ்திரிகள், போலகம் சுக்ரி சாஸ்திரிகள் ஆகியவர்கள் பரீக்ஷாதிகாரிகளாக இருந்து நடத்தினர்கள். புதுக்கோட்டை, ஸ்ரீமான் பஞ்சாபகேச சாஸ்திரிகளும். கல்லிடைக் குறிச்சி ஸ்ரீ காசி கனபாடிகளும் பரீக்ஷை யில் தேறினர். மேற்படி இருவருக்கும் மேற் பட்டங்கள் பயிப்பட்ட சால்வைகளும், தர்மஜ்ஞருக்கு ஒரு தங்கமோதிரமும் ஸ்ரீமத் ஆசார்யஸ்வாமிகளால் அளிக்கப்பட்டன.

"வித்வத்கவி" பட்டம்

சென்ற ஞாயிற்றுக் கிழமை அத்வைத ஸபை ஸம்பாவனை கார்யம் ஆரம்பிக்கும் முன்பாக மஹாமஹோபாத்யாய, பண்டித ராஜ ஸ்ரீ உ. வே. ஆர். கி. கிருஷ்ணமாசாரி யர் அவர்களால், ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளைப்பற்றி எழுதப் பட்டிருந்த வழ்த்து கலோகங்கள் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் படித்துக்கொடுக்கப்பட்டன. அச் சமயம் அநேக பண்டிதர்களும் பொது ஜனங்களும் கூடியிருந்தனர். கலோகங்கள் மிக்க ரஸமாயும் கம்பீரமான நடையில் மிருந்த அழகான அர்த்த புஷ்டியுள்ளவர்ண னைபுடன் அமைந்திருந்ததை ஸ்ரீமத் ஆசார்ய ஸ்வாமிகள் அபினந்தனம் செய்ததுடன் அங்கு கூடியிருந்த வித்வான்களும் மனமார மெச்சினர்கள். அச்சமயம் ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியர் அவர்களை "வித்வத் கவி" என்று திருவாய் மலர்த்து கூறினர் கள்.

இந்த "வித்வகவி" என்ற வார்த்தையை ஸ்ரீ கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமிக்கு ஸ்ரீ ஆச் சார்யாளால் கொடுக்கப்பட்ட ஒரு பட்ட மாகக் கருதவேண்டுமென்றும் அந்தப் பட் டத்தை அவர் இனிமேல் உபயோகித்துக் கொள்ளவேண்டுமென்றும் திருவாஜி பிரம்ம ஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள் ஸ்ரீமத் ஆச்சார் யஸ்வாமிகளின் அநுக்ரஹமும், நியமனமும் பெற்று ஸபையில் தெரிவித்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணமாசாரியருக்கு ஸ்ரீ ஸ்வாமிகளால் ஜோடி சால்வையும் மந்திராக்ஷதையும் அதற் ஷிக்கப்பட்டது.

தமக்கு வற்கனவே கிடைத்துள்ள பட் டங்களோடு ஸ்ரீமத் ஆசார்யஸ்வாமிகளால் வித்வான்கள் மத்தியில் அநுக்ரஹிக்கப்பட்ட "வித்வத் கவி" என்ற பட்டமே மிகுந்த சிறப்பு வாய்ந்ததென்றும், மஹிமை பொருந் நியதென்றும் தம்மைப் புனிதமாக்குவ தென்றும், ஸ்ரீ கிருஷ்ணமாசாரியஸ்வாமி கூறி தமது கன்றியை வெளியிட்டார்.

(ஒரு நிருபர்.)

தஞ்சாவூர்

காங்கிரஸ் வாதியும் கண்டிக்கிறார்

முஸ்லீம்களின் மத விஷயத்தில் தலையிடமுடியுமா?

வக்கீல் ஸ்ரீராதாகிருஷ்ணய்யர் தலைமையின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் கேற்று மாலை ஸ்ரீ வெங்கடேச பெருமாள் கோவில் முன்பாக கடைபெற்றது. அப்போது மகாத்மா காந்தி யுடன் கண்டி உப்பு சத்யாக்ரஹம் கோஷ் டியில் கலந்துகொண்ட காரி காங்கிரஸ் வாதி ஸ்ரீ பிரேதாராத அருண் பிரசங்கம் செய் தார். ஸ்ரீ அருண் ஹிக்கியில் பேசினார், தமி ழில் வக்கீல் ஸ்ரீ ராமராதய்யர் மொழி பெயர் த்தார். "கான் ஒரு தீவிர காங்கிரஸ் வாதி. உப்பு சத்யாக்ரஹத்தில் தண்டனையடைக் தேன். சென்னையில் பிரதம மந்திரி வேண் டுமென்று சொல்லும் சமூகத்திற்குச் சமூக சீர்திருத்தங்களைப் பலவந்தமாகக் கொண்டு வருகிறார். ஹரிஜனங்களுக்கு இப்போது வேண்டியது வயிற்றிற்கு ஆகாரமும் உடுக்க உடையும் தான். முஸ்லீம்களைப்பாருங்கள். அவர்களின் சங்கியை குறைவாக இருந்தா லும், தங்கள் மதத்தில் ஒற்றுமை ஏற்பட்டி ருக்கிறது. அதனால் ஜனப் ஜின்னு இந்தியா வை இரண்டாகப் பிரித்த முஸ்லீம்களுக்கு சரிபாதி கொடுப்பதாக மரச் தட்டுகிறார். அவர்கள் ஒற்றுமைதான் காரணம். முஸ்லீம் மத விஷயங்களிலும் சட்டங்களிலும் பிரவே சிக்க யோஜிப்பதற்கு இந்த ஒற்றுமை தான் காரணம்.

வட இந்தியாவில் எங்கும் கான் சுற்றுப்பிர யாணம் செய்து ஹரிஜனமகம், கர்மம் இரண்டு க்கும் புத்தியி அளிக்கும் விஷயமாய் விவர நிக்கிறேன்.

ஹரிஜன ஆலயப்பிரவேச விஷயமாக சட் டங்கள் செய்வது மிகவும் ஆட்சேபிக்கத்தக் கது. அவ்விதம் செய்தது ஹிந்து சமூகத் தின் சுதந்திரத்தில் பலமாக பிரவேசித்த தாகும். கான் பார்த்த வரையில் ஜனங்கள் இதற்கு எதிராகவே இருக்கிறார்கள். ஹரி ஜனங்கள் கமக்கு எதிரிகளல்ல. அவர்களும் ஹிந்துக்கள் தான். ஆனல் அவர்களைக் கோ விலுக்குள் விடுவது முக்கியமல்ல. அவர்களே முன்னேற்றமடையும்படிச் செய்வது தான் உசிதம். கோவிலுக்குள் அனுமதிப்பது சாஸ் திரவிரோதம். ஹரிஜனங்களும் அதை வேண் டமாட்டார்கள்.

(ஒரு நிருபர்)

"ஆட்கள் கிடைக்க வில்லை"!

ஊரூராய் தேடுகின்றார்கள்

மதுரை ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் நிருக் கோவிலில் ஆவணி மூலம் உற்சவம் வருஷா வருஷம் கன்கு கடந்து வந்தது. இந்த வரு ஷம் அக்மமாய் தீண்டாதார்கள் கோவிலில் தழைந்து விட்டதால் உத்ஸவம் கன்கு கடை பெறவில்லை.

வருஷா வருஷம் போல் வேதபாராயணக் கோஷ்டியார் மதுரை கோவிலுக்கு ஆவணி மூலம் உத்ஸவத்தில் கலந்து கொள்ளவில்லை.

இந்த வருஷம் வேதபாராயண கோஷ்டி களுக்கு ராளமாய் பணம் தருவதாகக்கூறி ஆசை வார்த்தை காட்டியும் ஒருவரும் சிக்க வில்லை. பல இடங்களுக்குச் சென்று ஆட்க ளைத்தேடுகிறார்கள். ஒருவரும் வாவில்லை. ஸ்ரீ ரங்கத்தில் ஒரு வேதபாட்சாலை உபாத்தியா யரை மதுரைக்கு வரும்படி கூறினர்கள். ரா

(தொடர்ச்சி 5 பக்கம் பார்க்க)

கர்மா

(ஸ்ரீமான் S. வைதீஸ்வர அய்யர், கல்கத்தா)

நிராகரணங்களால் நிணைப்பது, பேசுவது, செய்வது கர்மா. வல்தக்களில் அழுக்கும் புழுதியும் சேர்வது போல் கர்மா ஒருவனி டம் வளர்ந்து கொண்டே இருக்கிறது. வளர் வது மாத்திரமின்றி விதவிதமாத்தால் பலன் கொடுப்பது போல் கர்மா பலனையும் கொடுக் கிறது. நிழல் மனிதனைத் தொடர்வது போ லும், பசு மந்தையில் புகுந்த கன்றுகள் அத னதன் தாய்களை அடைவது போலும், கர்ம பலன் செய்தவனைத் தொடர்கிறது. ஒருவன் ஒவ்வொரு காளும் சம்பாதிக்கும் பொருளை பாங்கியில் போடுகிறான். மாதக்கடைசியில் அந்த மாதச்செலவிற்கு வேண்டிய ஒரு சிறு பகம் பாங்கியிலிருந்து எடுக்கிறான். பாங்கி யில் மூலதனம் திருத்தியாகிறது. இதே மா திரி கர்மாவும். நினம் சம்பாதிப்பது ஆகாம்ய கர்மா. ஒரு ஜன்மாவில் செலவிற்கு எடுத்துக் கொள்வது ப்ராப்தகர்மா. பாங்கியிலிருப் பது ஸஞ்சித கர்மா. நினசரி வரும்படியை செலவிற்கு எடுத்துக்கொள்ளாதிருப்பதுபோல் ஆகாம்ய கர்மா இந்த ஜன்மாவில் பலனைக் கொடுக்கிறதில்லை. அதாவது செலவாகி அனு பவிக்கப்படுகிறதில்லை. உடனே பலனைக்காண தாலேயே ஜனங்களுக்கு கம்பிக்கை இருக் கிறதில்லை. காணப்படாததால் அநிருஷ்டம் என்ற பெயர் வந்தது. செலர் அநிருஷ்டம் என்பது இல்லை, முயற்சிதான் காரணம் என் கிறார்கள். அந்த முயற்சிக்கும் பூர்வ ஜன்ம வாஸனை அதாவது முயற்சி செய்ய வேண்டு மென்ற தீவிர எண்ணமே காரணமாகிறது. கம்முடைய அநுபவத்திலேயே எண்ணம் மாத்திரம் இருப்பதும் முயற்சிசெய்யாதிருப் பதும் அறியலாகும். திடீரென எதிர்பார்ர அத்பவச்யமான செல ஏற்பட்டால் அந்த தினசரி வரும்படியை உபயோகப்படுத்திக் கொள்வதுபோல இந்த ஜன்மாவில் செய்யும் கடுமையான தபோ, கொடிய பாவமோ உடனே பலிக்கிறது, உண்டு.

ஒருஜன்மத்தில் அதற்கேற்பட்டப்ராப்தத் தை (முடிவதும் அனுபவிக்கிறான். ப்ராப்த மென்பது பல்லிலிருந்து விடப்பட்ட அம்பு போன்றது. அதை வாபிஸ் வாங்க முடியாது. அதற்குள்ள வேகத்தைக்குறைக்க முடியாது. வேகமுள்ள வரையில் அது போகத்தான் போகும். அதேமாதிரி ப்ராப்தத்தின் அனு பவத்தை முடியும் வரையில் விலக்க முடி யாது. அந்த ஜன்மத்தில் ஸஞ்சிதத்தைத் தொடுவதே இல்லை. இறந்த பின் தனம் வர் சுக்குப் போவது போல் அது அவனுடைய அடுத்தஜன்மாவிற்கு மூலதனமாகிறது. ஜன் மமில்லாத முக்தன் விஷயத்தில் ஸஞ்சிதம் கஸித்துப்போகிறது. பாவமெல்லாம் அனுப வித்தான பிறகே ஒருவன் முக்தனாகிறானு லால் அவனுடைய ஸஞ்சிதம் ஆகாம்யம் எல்லாம் புண்ய பலனைக்கொடுப்பதா யிருக்கி றது. அது அவனுடைய கடைசி ஜன்ம இஷ்டமித்ர பந்துக்களுக்குப்போகிறது. தன மென்ற உபாதானம் பணக்காரர்களுக்குத் தானே பொருந்துமென்றால் ஏழையானலும் கர்மா என்னும் நிதிக்குக் குறைவில்லை.

கர்மா என்றும், பலன் என்றும் சொல்லிச் சொல்லி முயற்சியில்லாமலும் ஸ்வதந்திர உரிமைகள் இல்லாமலும் ஹிந்துக்கள் கெட் டழிந்து விட்டார்கள் என்ற பலர் முறை யிடுகிறார்கள். அவர்கள் தப்பர்த்தம் செய் திருக்கள். ஸ்வதந்திரம் என்பது என்ன? உரிமை என்பது என்ன? இந்திய விஷயங் களில் மனம் செல்லாது. ஆத்மஸ்வரூபத்தில் அடக்குவது ஸ்வதந்திரம். தான் எனது என்று போராடுவதெல்லாம் பரதந்திரம். மூவுலகையும் ஜயித்தவனும் அவன் தன் மனத்திற்கும், உலகபோகங்களுக்கும் அடிமையே, உரிமை என்பது மனிதனு டைய விவேகம். ஸம்ஸாரபந்தத்தில் மூழ்குவது உரிமையாகாது. இந்த விவேகத் திற்கும் ஆத்ம லபத்திற்குமே முயற்சி வேண்டும். இக்க ன் முயற்சி மத சாஸ்திரங்களில் விதிவிலக்குகளால் கட்டப் பட்டிருக்கிறது. சில தலமுறைகளாக விபரீத முயற்சிகளே செய்யப்பட்டும் எண்ணப்பட்டும் வருவதால் சீர்திருத்தக் கொள்கைகளும் விபரீதமாயிருக்கின்றன. உலகிலுள்ள தக்கங்களே கடவுளாலும் கிவர்த்தி செய்ய முடியவில்லை.

தீண்டாமை, சண்டை, பகி, விபரிதி என் பவைஎலில் ஒவ்வொரு மூலியிலும் இருப்ப னேன். இவு இருப்பனேன், இரவையும் பக லாக்கக் கூடுமானல் தக்கங்களையும் கிவர்த்தி செய்யலாகும். பஞ்சமர்களே விடாமல் பூட் டப்பட்ட கதவு பிராம்மணர்களே(சம்பாவோஷ ணத்திற்கு) விடாமல் பூட்டப்படுகிறது. ஜர்மனியில் பஞ்சமர்கள் பூதர்கள். பிரிட் டனில் பஞ்சமர்கள் கம்யூனிஸ்ட்ஸ். சென்னை ஸர்க்கார் ஸர்வீஸில் பஞ்சமர்கள் பிராம்மணர் கள். காங்கிரஸில் பஞ்சமர் சுபர்ஷ் போஸ். விஞ்ஞான கலாசலையில் பஞ்சமர் ஸர் ஸி. வி. ராமன். உலகத்தாரின் முக்ய நோக்கம் சுகம். அதற்குக் கட்டுப்பாடுகள் அவசியம். ஆத்ம சுகத்திற்கு இந்திரியக் கட்டுப்பாடு வேண்டும். ராஜ்யஸுகத்திற்கும், நிபாகம் அமைதி முதலிய கட்டுப்பாடுகள் வேண்டும். உரிமை என்ற கலகமூட்டுவதும், ஹிம்ஸை செய்வதும், ராஜ்ய நஷ்டத்திற்குக் காரணங் கள். போலி உரிமைகளின்றி கடமைகளி லிருந்து அவரவர் தொழில் செவ்வனே செய்து வருவதே, ஒரு மனிதனுக்கும், ஒரு குடும்பத்திற்கும், ஒரு ராஜ்யத்திற்கும் சுகத்தைக்கொடுப்பது. உரிமைகள் உண் ரலில் கடமைகள் குறையும் என்பது நிணம்ம். இது நிற்க.

செடிக்கு நீர்பாய்ச்சுவது ஒரு கர்மா. புஷ்பமோ, காயோ, பழமோ கிடைப்பது அதன் பலன். செடியின் வேரை அறுப்பது ஒரு கர்மா. செடியே பட்டுப்போவது அதன் பலன். ஒன்ற ன்மை: புண்யம். பலன் இன்பம். மற்றது தீமை. பாவம். பலன் துன்பம். கமது சாஸ்திரங்கள் சொல் வது இவ்வளவே, இதை அறிவுள்ள அனு வயமா? சொல்வது முட்டாள்தனமா!

கர்மாக்கள் கல்லவை கெட்டவை என்ப தையும் அவற்றின் பலாபலன்களையும் அறியவிட்டால் மனிதப்பிறவி பிரயோஜன மற்றதாகும். பசு பக்ஷிகளுப்போல் மனி தனும் ஜீவனமொன்றையே செய்வதாயிருந் தால் மனமும் புத்தியும் அவுவியமாகும். இந்த ஜீவன விஷயத்திலும் மரக்கறியைக் கூட ஹிம்ஸையின்றி உபயோகப்படுத்த கிறவன் விவேகி. சில கர்மாக்களின் பலன் கள் ஜன்மக்க கூடியதாயிருக்கின்றன. சில இல்லை. ஜன்மக்க கூடியவைகளிலும் சில எல்லோருடைய புத்திக்கும் புலப்பட க் கூடியதாயில்லை.

வீடுகட்ட எஞ்ஜினீயரை நாடுகிறோம். வியாதிக்கு டாக்டரை நாடுகிறோம். அவர்கள் வேலைகளில் கம்முடைய யோசனைகளை வெளி யிட்டால் அவர்களுக்கு வரும் கோபத் திற்கு அளவில்லை. "நீர் பேசாதிரும்" என்று கண்டிப்பாய்ச் சொல்லுகிறார்கள். நாம் உடனே மன்னிப்பு கேட்க வேண்டியதாயிரு க்கிறது. கமது சாஸ்திரங்களும் சில்ப வைத்ய சாஸ்திரங்கள் போன்றவையே. அதில் தேர் ச்சியடைந்தவர்களே அதைப் பற்றிப் பேச அதிகாரமுள்ளவர்கள். மனம் புத்திக்கு எட் டாத கர்ம பலன்களையும் கமது முன்னோர் கள் அறிவார்கள். அறிந்த விதி விலக்குகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். எவ்விதம் அறிந் தார்கள் என்ற சந்தேகம் வேண்டாம். விய காணம், தர்க்கம், கணிதம், வான சாஸ்திரம் முதலானவைகள் ஒரு கருவியுமில்லாத அவர்களுக்குத் தெரிந்ததற்கு மேல் அதிபற். புதமான கருவிகளுள்ள இக்காலத்தில் அறி யப்படவில்லை என்பதே அத்தாக்ஷி. இந்தத் தண்டவாளம் இந்த சுமை தாங்கும். இந்த மருந்து இதைக்குணப்படுத்தும் என்று நிபு ணர்கள் சொல்வதை கம்புவது போல விஞ் ஞானகாரம் கம்பி அவ்வாறு கடந்தால் விநாயனை பெறவேமென்பது நிண்ணம். கம்பாமலும், கம்பிக்கையோடு கடக்காமலும் பேசுவதில் குணமில்லை.

பயிர் செய்து பலனை அடைவது போல மனிதன் தனது பூர்ணசக்தியையும் உப யோகப்படுத்தி மனித ஜன்மத்தின் பிரயோ ஜனத்தை அடைவதற்காகவே கர்மாவையும் அதன் பலனையும் கமதுமுன்னோர்கள் அதி மாய் வற்புறுத்தியிருக்கிறார்கள். பூர்ண சுய ராஜ்யத்திற்கு வேறு மார்க்கமில்லை.

(காபிரைட்)

ஸ்ரீகாமகோடி பீடமும் நமது கடமையும்

(ஸ்ரீ ஏ. ஜி. சங்கரய்யர், அட்வகேட், கும்பகோணம்.)

அதர்மம் எங்கும் பரவிற்கும் இக்காலில் கூட ஜனக்களுக்கு ஆஸ்திக புத்தி குறைய வில்லையென்பதை அவதாரபுருஷாளாய் விளங் கும் கமது ஆச்சாரியாளிடத்திலும் ஸ்ரீ மடத் தினிடத்திலும் எல்லோருக்குமிருக்கிற பக்தி விசேஷத்திலிருந்து கன்றாய் வெளியாகிறது. அதேடு கர்முடைய கடமையை கன்றாய் செலுத்துகிறோமா என்று கவனித்தால் அதில் கவனிக்கவேண்டிய சில விஷயங் களுண்டு.

விவாகம் முதலான எல்லா சுப காரியங் களில் ஆச்சார்ய ஸம்பாவனை செய்கி றோம். அது வெகு காலத்திற்கு முந்தி ஏற் படுத்திய சில்லரை அணக்களாயிருக்கிறதே வொழிய மற்ற விஷயங்களில் அதேக ஆபி ரூபா செலவழித்தும் அத்தச் சிலவுக்குத் தகு தாரப்போல் முழுரூபாய்களாய் ஸம்பாவனை கடத்துவது வெகு சிலர் தான். அந்த வழக் கத்தை நாம் அடியோடு மாற்றி நாம் செலவு செய்கிறதற்குத் தக்கபடியும், சக்திக்குத் தக்கபடியும் ஸ்ரீ மடத்தின் கைங்கர்யமும் அனுக்ரஹமும் எல்லாவற்றிற்கும் மேலானது என்று எண்ணி தக்கபடி ஸம்பாவனை செய் வது நம்முடைய கடமை.

மேலும் முக்யமாய் அத்த ஸம்பாவனை மட த்தின் அதிகாரிகள் வசம் சேர்ந்ததலென் றும் சொம்ப கவனிக்கவேண்டும். அதேகத் தகைகள் அப்படிச் சோமல் சில மனுஷ்யர் கள் இடுப்பிலேயே இருந்துவிடுகிறது என்பது நிச்சயம். ஆகையால் நிருஹஸ்தர்களே மனி ஆட்டிமூலமாவோ தருத்தம்பிப்பையாவோ வர்கள் மூல்யமாகவோ சேர்ப்பிக்கவேண்டும். ஸ்ரீமடத்தின் மூல்யமாய் அநேகவிதமான தர் மங்கள் நடத்துவருகின்றன. இத்தப் பீடத்தி னலும் இதர பீடங்களாலுங்தான் இக்காலத் தில் ஜனங்களுக்கு ஆஸ்திக புத்தியும், தர்ம சிந்தனையும் ஏற்பட்டுவருகிறது. மடத்தின் மூல்யமாய் செய்துவரும் தர்மங்களுக்கு பக் தியுள்ள ஜனங்களும் சிஷ்யகோடிகளும் மன தில் மட்டில் சிரத்தையை நிறுத்தாமல் செய் கையிலும் காட்டிப் பொருள் கொடுத்தும் மடத்துக்கு ஏற்படும் கவுரவம் தங்களுக்கு கன்மை என்று எண்ணி கம்முடைய சொந்த காரியங்களில் கமக்கு இருக்கும் ஊக்கம் கமக்குப் பொதுவாயிருக்கும் மடத்திலும் பாராட்டவேண்டும்.

பயங்கர ஆட்சி

(ஸ்ரீ வி. வி. இராமன், திருச்சி.)

சமீபத்தில் மதுரையில் ஹரிஜன ஆலயப் பிரவேசம், காங்கிரஸ் அரசாங்கத்தினுடைய பயங்கர ஆட்சியின் துவக்கமாகும்.

அதில் இந்திய காங்கிரஸின் சித்தாந்தங்களே (விதி) சென்னை ராஜதானியிலுள்ள காங்கிரஸை சேர்த்தவர்கள், சின்ன பின்னமாக்கி விட்டார்கள். சில வருஷங்களாக காங்கிரஸ் சுயராஜ்யம் மடையவேண்டிய துரைகளில் முன்னேறி வந்ததை கண்பித்து வந்தது. ஆனல் இப்பொழுதுள்ள பயங்கர ஆட்சியின் காரணமாக காங்கிரஸ் படுகுழியில் வீழ்ந்து விட்டது. இனிமேல் இந்த படுகுழியிலிருந்து காங்கிரஸ், தேசியையோ ஜனங்களுடைய ஆதரவையோ அல்லது மதிப்பையோ அடையமுடியாது. நாம் இதுவரையிலும் எப்பொழுது நமக்கு சுய ஆட்சி கிடைக்குமென்று மூச்சுவிடாமல் ஒவ்வொரு நிமிஷங்களையும் எண்ணிக்கொண்டிருந்தோம். ஆனல் நம் மனக்கோட்டை இடிந்து விட்டது.

இப்பொழுது மதுரையில் நடக்கும் கலவரங்களைக் கூர்ந்து கவனித்தால் காங்கிரஸ்ஸுடைய அட்டூழியத்தையும், ஹிம்ஸைதன்மையும், குணமும் நன்றாகத்தெரிகின்றது. இதிலிருந்து காங்கிரஸிலுள்ளவர்கள் ஓர் நியதிக்கு கட்டுப்பட்டு நடக்கமாட்டார்களென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது.

மதுரை அட்வகேட் ஸ்ரீ கே. ஆர். வெங்கட்டராமய்யர் தலைமையின் கீழ் (பல வருஷங்களாக காங்கிரஸில் சேர்ந்து மகத்தான வேலைகள் செய்தவர்) மதுரையில் "ஸனதனிகள்" மாபெருங்கூட்டம் மடைபெற்றது. அப்பொழுது எதிர்கக்ஷியிலுள்ளவர்கள் ஹரிஜன சேவா சங்கத் தலைவரான ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர் முன்னிலையில் மகா பிஸ்தாக்களே வீசி எறிந்தார்கள். பலத்த அடி. ரத்த காயங்கள் அதேகருக்கு ஏற்பட்டது. இந்த அக்கிரமங்களைத் தடுப்பதற்கு போலீஸ்காரர் ஒருவராவது அங்குக் காணப்படவில்லை. போலீஸ் பொதுவாகப் பந்தோபஸ்து செய்யவேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆனல், இவ்விடத்தில் சட்டம் மறைந்து விட்டது. இச் செய்கைகளால் காங்கிரஸ்ஸிலுள்ளவர்கள் மனது குளிர்ந்துவிட்டதா? அவர்களுக்கு இது திருப்திதானு? அவர்கள் ஒரு நிமிஷமாவது தங்களுடைய கடமைகளையும் கொள்கைகளையும் அனுசரித்து நடக்கிறோமாவென்று நினைத்தார்களா? வெறிபிடித்து இவர்கள் தீண்டாதாருக்கு ஆலயங்களைத் திறந்துவிட வேண்டுமென்று அலைகிறார்கள். இவர்கள் தாங்கள் செய்வது தர்மத்திற்கு விரோதமா அல்லது மனசாட்சிக்காவது நியாயமாவென்றகூட யோசிக்காமல் கண் மூடித்தனமாகக் கெட்டு அலைகிறார்கள். இவர்களுக்கு முன்னல் இவர்கள் போகும் வழியில் ஓர் படுகுழியிருக்கும் மென்பது தெரியவில்லை.

மதுரையில் நடந்த அட்டூழியங்களை அரசாங்கம் கவனிக்காமலிருந்தது ஒவ்வொரு வருக்கும் மன வருத்தம் உண்டாக்கியது. இதுவுமல்லாமல் காங்கிரஸினுல் போஷிக்கபடும் பத்திரிகை நிருபர்கள் தங்களுடைய பத்திரிகைகளுக்கு இல்லாததும், பொல்லாததுமான கட்டுக்கதைகளை அனுப்பிவிடுகிறார்கள். இதனுல் ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விடுமா? ஜனங்கள் அந்தகாரத்தில் இல்லை. சுய அறிவோடுதான் இருக்கிறார்கள். காங்கிரஸ் பசப்பு வார்த்தைகளால் ஜனங்கள் ஏமாறி விட மாட்டார்கள்.

சமீபத்தில் பிரதம மந்திரி நிருச்சிக்கு விஜயம் செய்தபோது தன்னுடைய நீண்ட பிரசங்கத்தில் ஹரிஜன ஆலயபிரவேசம் ஓர் அவசியமும், அவசரமுமான காரியம் என்றும் சொன்னர். அங்கு கூடியிருந்த ஜனங்களே இதற்காக ஒத்துழைக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டார். ஆனல் அந்த கூட்டத்தில் ஓர் ஆக்ஷேபவாவது இதற்கு இணங்கவில்லை என்று நிதர்சனமாகக் கூறலாம்.

ஆலயப்பிரவேச மகோதர ஜனங்களுடைய நம்பிக்கையினுலும், கைதாக்கிவிடுவதினுலும் தான் கொண்டுவரவேண்டுமேயொழிய, மற்ற எவ்வழியிலுமில்லை என்று சொன்னர். ஆனல் அவர் முதல் முதல் ஆலயத்திற்குள் ஹரிஜனங்கள் நுழைவது மதுரை கோவில் தான் என்று சொல்லவில்லை. அவர் கூட்டத்தில் கேட்டுக்கொண்ட பிரகாரம் ஜனங்கள் ஆதாவு கொடுத்ததின் பேரிலாவது அல்லது சட்டம் வந்த பிறகாவது அமுலுக்கு கொண்டுவரவில்லை.

நிடிசென்று ஒருவருக்கும் தெரியாமலும், சொல்லாமலும் கோவிலுக்குள் ஹரிஜனங்கள் நுழையலாம் என்ற தன்னுடைய பூர்ண அதிகாரத்தினுல் மதுரையிலுள்ள தர்மகர்த்தாவுக்கும், வைத்தினுதய்யருக்கும் ரகசியமாக வற்பாடு செய்தார். அதன்படியே எல்லாம் நடந்தே ஒழிய, ஜனங்களுடைய ஆசையினுலாவது, ஆதாவினுலாவது கருணையினாலது நடக்கவில்லை.

இதிலிருந்து பிரதம மந்திரி தன்னுடைய நேமங்களிலிருந்து தவறிவிட்டார். அவர் நினைத்தபடி ஒன்றும் நடக்காது. "எண்ணியபடி எதவும் நடக்காது எது மவன்செயல் மனப்பால் குடிக்காதே".....நான் ஜனங்களுடைய மூட பழக்க வழக்கங்களையும், அறியாமையையும் சூர்யனைக் கண்ட பனிபோல் அடித்துத் தூறத்திவிடுவேன். அதற்காகான் இந்த மேடையின் மேல் நிற்கிறேனென்று கதறுகிறார். ஆனல் அவர்செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பின் பாகத்தில் தோல்வி அடைந்து வருகிறார். (உதாரணமாக கேரள தேசத்து ஆலயப்பிரவேசச்சட்டம் ஒன்று.)

வெளிநாட்டு அரசாங்கத்தையும், நம்முடைய இந்திய அரசாங்கத்தையும் சீர்தூக்கிப் பார்த்தால், அவைகள், மதசம்பந்தமாக உள்ள விஷயங்களில் தலையிடுவது கிடையாது.

நம்முடைய தேசமானது ஆங்கில அரசாங்கத்திற்குக் மேல்வந்தவுடன், அப்பொழுதிருந்த மாட்சிமை தங்கிய விக்டோரியா மஹாராணியார் இந்தியாவில் மதசம்பந்தமாக ஆங்கில அரசாங்கம் தலையிடாது என்று வாக்குறுதி கொடுத்தது எல்லோருக்கும் தெரிந்ததே? இவைகள் ஆங்கில அரசாங்கத்தின் கண்ணில் படவில்லையா? அப்படியிருந்தால் ஏன் இப்பொழுது மவுனமாக இருந்து வருகிறது?

இந்தியர்களாகிய நாம் நம்முடைய மதஸம்பந்தமான விஷயங்களில் ஒருவரும் தலையிடக்கூடாதென்று திரும்புகிறோம். பழைய பழக்க வழக்கங்களை திருத்த ஒருவரும் முன் வரவேண்டிய அவசிய மில்லை.

காங்கிரஸ்காரர்கள் மத சம்பந்தமான விஷயத்தில் தலை இட்டதற்கும், ஆங்கிலேயர்களுக்கு இன்னல் உண்டாக்கினதற்கும் தகுந்த பரிகாரம் ஓர் சமயம் தேடவேண்டி வரும்.

"கல்யாண வரி"

புனு முனிசிபாலிட்டியார் "கல்யாண வரி" என்ற ஒரு புதிய வரியை ஏற்படுத்திருக்கிறார்கள். புனு நகரில் நடக்கும் ஒவ்வொரு விவாசத்திற்கும் ஒரு ரூபாய் வரி செலுத்த வேண்டுமாம்.

ஸாமோபாகர்மம்

கும்பகோணம் ஸ்ரீ மடத்துப் பஞ்சாங்க கணிதர் ஸ்ரீ டி. எஸ். விசுவநாத சிரௌதிகள் எழுதுவதாவது :—

இவ்வருஷத்தில் ஆவணிமாதம் 29—30 (1939 செப்டம்பர் 14-15) தேதிகளில் பாத்பத சுத்த ஹஸ்தநக்ஷத்ரம் வியாபிக்கின்றது. முதல் நாள் காழிகை 19-41-க்கு தொடங்கி மறுநாள் காழிகை 13-40 உடன் ஹஸ்த நக்ஷத்ரம் முடிகிறது. முதல் நாள் அபரான்ஹ ஏகதேச வியாப்தியும், மறுநாள் அபரான்ஹ வியாப்தியின்மையுமாகிறது. ஆகவே, (அபரான்ஹ பூர்ணவியாப்தி முதல் நாள் இல்லாத போன காரணத்தால்) உபாகர்மாவை (உதயர்கி ஸங்கவார்த்தம் முடிவுக்கு மேல் ஹஸ்தம் உள்ள) மறுநாளிலேயே (15—9—1939 வெள்ளிக்கிழமை) ஸாமஉபாகர்மாவைச் செய்யவேண்டும்; என்னுடைய பஞ்சாங்கத்தில் கைத்தலறுதலாக முதல் நாளே போடப்பட்டிருக்கிறது. இதைக் கவனித்து மறுநாளிலேயே செய்யும்படி கோருகிறேன்.

செய்தித் திரட்டு

தென்னப்பிரிகாவில் கஷ்டப்படும் இந்தியர்களின் உதவிக்காக மே. த. பீகாளீர் மகாராஜா 100 பவுன்கள் கன்கொடை அளித்திருக்கிறார்.

* * *

இந்திய அரசியல் சட்டத்திலுள்ள வகுப்புத் தீர்ப்பை எதிர்க்க 18—8—39 சென்னையில் ஒரு மாபெருங்கூட்டம் நடந்தது. வகுப்புத் தீர்ப்புக்குக் காங்கிரஸே காரணம் என்றும், ஹிந்துக்களின் கலன்களைக் காங்கிரஸ் காப்பாற்றும் என்று நம்ப முடியாது என்றும் ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் கூறினர்.

* * *

சிந்து மாகாணத்தில் மழையே பெய்யவில்லை. இதற்காக எல்லோரும் வர்ண பகவானை நினசரி பிரார்த்தித்து வந்தார்கள். எல்லா வகுப்பினர்களும் ஒருங்கு சேர்ந்து தொழுதார்கள். அரசாங்கமும் ஒரு நாள் தொழுகைக்கு விடுமுறை அளித்தார்கள். மறு நாள் மழை பெய்தது.

* * *

மத்ய ராஜாங்க சட்ட சபையையும் பகிஷ்கரிக்கும்படி காங்கிரஸ் தலைவர் சுற்றறிக்கை 18—8—39உ அனுப்பிபிருக்கிறார்.

* * *

பண்டித ஜவஹர்லால்நேரு 22—8—39உ இங்கிலாந்திலிருந்து சைனுவுக்கு ஆகாயக் கப்பல் மூலம் சைனுவுக்குச் செல்லுகிறார். அங்கு ஒரு மாதம் தங்குவார்.

* * *

22—8—39உ மே. த. வைசிராயை சமஸ்தானாதிபதிகள் சந்திக்க முடிவு செய்துள்ளார்கள். திருத்தி அமைக்கப்பட்ட சமஷ்டிப் பிரதேச சாஸன சபை சம்பந்தமாக அச்சமயம் விவாதிக்கப்படுமாம்.

* * *

பம்பாய் பிரபல பாரிஸ்டரும் தேசத் தலைவருமான ஸ்ரீ கே. எப். நரிமானும் மற்றும் 11 பேர்கள் மீது காங்கிரஸ் கமிட்டி ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. அதற்கு ஸ்ரீ நரிமன் "வருத்தம் தெரிவிக்க முடியாது" என்று கூறி விட்டார்கள்.

* * *

சென்னை சட்ட சபையில் ஸ்ரீமதி அம்மண்ண ராஜா என்றவர் "தேவதாசிகள் மசோதா" ஒன்றை கொண்டு வந்திருக்கிறார்.

* * *

சந்தோடவெறி

(ஸ்ரீ ப. ரே. திருமலை அய்யங்கார், சென்னை)

நிருக்குறளினும் அரிய நூலில்லை. நிருவள்ளுவ நாயனரினும் பெரியாரில்லை. இவரது தமிழ்மறை உலகெங்கும் எல்லாராலும் போற்றப் பெற்றவருகிறது. அறியாமை, அறிவுடைமை என்பனவற்றைக் குறித்து ஒரு நீங்குறளில் கூறுகிறார், அதனை கன்கு உனரல் வேண்டும். அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதமை. அவ்வஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவர்தொழில். எண்ணுவ செய்து நின்றல். அஞ்சாமை எண்ணித் தகிர்தலே அஞ்சுதல். அவ்வஞ்சுதல் காரியமல்ல வென்று இகழ்ச்சிசெய்யப்படாது. பாவம், பழி, கேடுமுதலியன அஞ்சப்படுவன. பாவமுதலியவற்றைத் தாராத காரியங்களை அஞ்சாத செய்யவேண்டும். அவற்றைத் தருங்காரியங்களைச் செய்வதற்கு அஞ்ச வேண்டும். அஞ்சாமை நிண்மை. அதை கலக்கா நிலைமை. ஈண்டு எடுத்துக் காட்டப்பட்ட குறளாவது :—"அஞ்சுவதஞ்சாமை பேதமை; அஞ்சுவது, அஞ்சல் அறிவர் தொழில்". அறிவாவது கல்லதனலுமுதியதன் நீமையும் உள்ளவாறுணர்தல் என்பர் நச்சினர்க்கினியர். இவர் மதுரைவாசி, என்பது குறிக்கொள்க. அஞ்சுவதோறும் அறனே, செய்யத்தகாத காரியங்களாவன:-பெரிய முயற்சிபுடையனவும், செய்தாற் பயனில்லாதனவும், அப்பயன் சிறிதாயினவும், ஐயமாயினவும், பின்னே தயரம் விளைப் பனவுமென்னும் இவையாம். செய்யத்தக்க காரியங்கள் இவற்றிற்கு மாறுபிருப்பன. எனவே அறிவர் தொழில் இன்னது என்பது வெள்ளிடை மலை. அத்தணர் தற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல். அந்தணர்க்கு உரித்தாகிய வேதமும் அவ்வேதத்தில் சொல்லப்பட்ட அறமும், ஆகிய இரண்டும் நிலைபெறதற்கு அரசனல் செலுத்தப்படுகின்ற செங்கோலேகாரணமாகிற்கும். கொடுங்கோன் மன்னர் வாழ நாட்டிற் கடும்புலிவாழும் காடுகன்று. கோனிலைநிரிந்திடிற் கோணிலை நிரியும். கோணிலை நிரிந்திடின் மாரிவறங்கூறும். மாரி வறங்கூரின் மன்னுயிரில்லை. "கோணிலை நிரிந்த நாழி குறைபடப் பல்கண் மிஞ்சி, நீணிலமாரியின்றி வினவு. ஃகிப்சியூரீடிப் பூண்முலை மகளிர் பெற்பிற் கற்பழிக் தறங் கண்மாறி, பரணே பிவ்வுலகுகேடா மாசுகோல் கோடி னென்றான்" என்பது ஓவக திருமணி. நீதி தப்பிய அரசனது நாட்டில் பருவமழை பெய்வதில்லை என்பது பொய்யா மொழி.

முற்கூறியவற்றைச் சற்று நிதானித்துப் பார்க்கின் தற்போது அடைபெற்று வருவது கொடுங்கோன்மையே யன்றிப் பிறிதில்லை என்பது கூறுமலே விளங்கும். ஒருவராலும் செய்தற்கரிய காரியத்தைச் செய்து முடித்து விட்டதாயும், அதனல் தனக்குச் "சந்தோட வெறி" பிடித்திருப்பதாயும் ஒருவர் பறை சாற்றுவதும், அதனை அவரது அபிமானிகள் போற்றி வளர்ப்பதும், இனிச் செய்ய வேண்டிய பெரிய காரியமே இல்லை என்ற அக்கேட்டிலினர் ஊரூராய்த் திரிந்து உழல்வதும் கவனிக்கமிடத்து இக் நன்னுட்டில் இன்று சான்றோரில்லையோ என அயல் நாட்டு நன்மக்கள் கருத இடமுண்டு. வெறி உண்டவது சகஜமே, அதனை விளக்குவாரில்லாவிடின் அதனல் அல்லலுண்டாகும். அதனை விலக்குவதற்குபாயந்தேடுவோரே கல்றிஞர்.

சந்தக்கள் மனுநீதி கலங்கியுள்ளது. அல்லற்பட்டு ஆற்றுவது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை ஞானிகள் அருள்வாக்கு என்றும் பொய்காதது.

மதுரையம்பதியின் பழம் பெருமை பரிபாடலிற் கண்டு மகிழவேண்டுவது. தருமிக்குப் பொற்கிழியளித்ததும், பட்டர் பிரானுக்கு கிழி வழங்கியதும் அம்மாநகர். நிருவாலவாயுடையானை சுந்தரனும், கூடலழகனும், கன்னழகனும் மெய்க்கடவுளர். ஆங்கு நீண்டாதரை ஆலயத்துட்புகுந்தி அவற்றின் தூய்மையைக் கெடுத்தவர்களின் மனோநிலை மக்கள் கொண்டாடற்குரியதன்று. தரும சிந்தனையுள்ள ஒவ்வொருவனும் இவ்வரிதினையைக் கண்டித்தே நீவேண்டும். சரித்திர நிகழ்ச்சிகள் மாறி மாறி வரும் என்பர் தேசசரித்திர நிபுணர்கள். புராணங்களில் லங் கட்டுக்கதைகளென்போர் நற்போது நடந்திவரும் கொடுஞ்செயல்களை என்னென்றறைப்பார்! தரும வம்பை மீறிய இராணியனும், இராவணனும் இறந்தனர் என்பது பொய்யுரையே. அவர்கள் மாறி மாறிப் பிறக்க மாட்டார்களோ? மீபீதம் என்பதற்கு வேறு நிருட்டார்த்தமும் வேண்டுமோ? பைத்தியக்கார டாக்டர்க் என்ற மதுரைப் பரதி பெற்ற வினுவிருபவனே மிக்க அறிவாளி என்ற இவர்கள் செய்கை காட்டிவிடவில்லையா? அன்று மிலேச்சர்களால் கஷ்டமடைந்த நம் ஆரிய நாடு இன்று நம்மவர்களாலேயே கலிபப்படுகின்றது. இன்றைக்கு எழுநூறு ஆண்டுக்கு முன் இத்தேவாலயக் கட்டு வக்த பெருமியாகியே இன்று வேறு மாநிரியில் வந்துள்ளதை என்பது தெற்றெனத் தெரியவில்லையா? அவர் புறப்பகைஞர்; கொன்னீக்காரர்; கேவலம் கோயில்களிலுள்ள செல்வத்தை அபகரிப்புதற்காக அடி அட்டூழியங்களியற்றினர், ஆனல் சாத நாளுகள் உயிரிழந்தனர் என்பது சரித்திரம் நன்கு தெரிவிக்கவில்லையா? அச்சமயம் அபிநின்றவும் அருளிய மகான்களிருந்த காட்டைக் காப்பாற்றவில்லையா? இப்பொழுது அச்சத்தியில் வந்தவீர் ஓடி அளித்தனரா? கள்ளர்களுமா உறங்குகின்றனர்? அஸஹாய சூரனுய் விளங்கி மங்காப் புகழ் பெறற்குரிய நம் நடேசய்யர் நீடூழி வாழ்க. காதுஷ்ணியான எல்லையற்ற சேனைமுக அரக்கர் ராகுவீன் ஒருவனே நின்றழித்தமையை நினைக. சுதர்மமிழந்து சுயராஜ்யம் பெறுவது யிரிழந்த உடலே ஒக்கும். வருணச்ரமதெறிகளைக் காத்தலிலேயே நன்னெக்குடைய தமிழ் நூல்களில் இவ்வடிதீர காரியத்தக்குப் பெருஞ்சான்றுகள் உளவென்றாப்பார் கேவலம் வஞ்சகர்களே. சந்தோடவெறியில் களித்தாடும் நன்றி கேடர் கூடிய சிக்கிரம் நன்னிலை பெறுமாறு அமலன் அருள்புரிவானுக.

ஆரியர்காள்! இப்பொழுது வந்துள்ளது புதிதல்ல. நெடுநாட்களாக அதற்கென்றே உழைத்தவர் வெற்றியுற்றதுபோல் பகட்டு இன்றனர். சத்தியத்தான் நிலை நிற்கும். அறத்தான் வெல்லும். பாவந்தோற்கும். ஒன்றுக்கும் நாம் வினசப்படவேண்டாம். இனியும் உறங்கேன்மின். விழிமின். எழுமின் ஒன்று சேர்மின் இனத்தவையே நானேன் மின்பகையனை அறிமின். உண்மையைக் கைப்பிடிமின். சலியேன்மின். தலைவரைப்போற்றுமின். உற்சாகமூட்டுமின். நியாதத்தைக் கொண்மின். தீவிரப்பிரசாரத்தை இனியாவது இடைவிடாது செய்மின். எடுத்துக்கொண்ட சத்காரியம் கைகூடும். தொன்னெறியாம் சத்காரியம் நன்னெறியில் நின்று வாழ்மின். வெற்றி நம்மதே. சமயம் வாய்த்தழி இவற்றை மற வேன்மின். எஞ்ஞான்றும் நிண்மையை விடாது சுதர்மத்தை நிலைநாட்டமுற்படுமின்.

இவ்வருஷத்திய காயத்ரீ ஜபம்

சென்னையிலிருந்து ஸ்ரீநிருஷ்ணதாஸ என்பவர் நமக்கு நிடி விஷயமாக ஓர் கடிதம் எழுதியிருக்கிறார். இடமில்லாமையால் அது பிரசுரிக்கப் படவில்லை.

அக்கடிதத்தில் அந்த ஸ்வாமி குறிப்பிட்டுள்ள விஷயங்களாவன :—

"இவ்வருஷம் ஆடிமீ 15உ யில் உபகர்மாவும் மறுநாள் காயத்ரீ ஜபமும் செய்யும்படி ஸ்ரீ அஹோபில மடாதிபதி நிர்ணயம் தோழப்பர் ஸ்வாமி பிரதாய விருத்தமென்றும் 15உ உபகர்மாவை அதிமானத்தில் செய்தது எப்படிப் போனும் மறுநாள் காயத்ரீ ஜபத்தைச் செய்தது பிரமாண விருத்தமென்றும் ஸங்கில் ஸ்வகத : என்றபடி ஆடியில் 15உ யே இரண்டையும் ஒரே தினத்தில் செய்ய வேண்டியது நியாய மென்றும், மேலும், அதிமானத்தில் காயத்ரீ ஜபத்தை அதுஷ்டிக்கும்படி விதி யில்லாத வரையில் அதை சுத்த மாஸத்தில் தான் செய்ய வேண்டுமென்றும், ஸ்மார்தர் சாத்தூர்வாசன சரவணி ஆவணிமாதத்தில் தான் வருகிறதென்றும், காயத்ரீ ஜபத்தியில் காணப்படும் "சரவண்யம்" என்பதற்கு சரவணமாத மென்கிற அர்த்தமில்லை யென்றும், அதச்சவனயுக்த பௌர்ணமீ பரமென்றும், ஆடிமாதம் செய்தவர்கள் ராத்ரிவ்யாப்தபௌர்ணமியுள்ள ஆடி 14உ உபவாஸமிருந்து 15உ யே காயத்ரீ ஜபத்தையும் செய்திருக்கவேண்டுமென்றும், ஆதலால் மித்யாதீத பிராயச்சித்தமான காயத்ரீ ஜபத்தை அகலத்தில் செய்தவர்கள் மறுபடி ஆவ காலத்தில் செய்யவே தோழப்பர் அபிப்பிராய பணம் செய்கிறார்."

செய்தித் திரட்

கொழும்புவில் ஒரு யானைக்கு [illegible] த்து விட்டது. பாகனை இழுத்துப் [illegible] காலால் மிதித்துத் தலைவைக் கொ[illegible] பாகன் அதனுடன் விடவில்லை. பாகனு[illegible] ஒரு கையையும் தின்று விட்டது. [illegible] மாமிஸ பக்ஷிணியர்!

* * *

இந்தியா சட்ட சபையைக் காங்கிரஸ் கா[illegible]யக் கமிட்டியின் நீர்மானப்படிக் காங்கிரஸ் அங்கத்தினர்கள் பகிஷ்கரிக்க முடிவுசெய்து விட்டார்கள். பொதுக் கணக்குக் கமிட்டிக் கூட்டத்தில் காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்ளவில்லை.

* * *

சென்னை நகரில் ஜெர்மன்யர் 61. அமெரிக்கர்33. இத்தாலியர்32. ஜப்பானியர்17 பிரஞ்சுக்காரர் 14. டேனிஷ்காரர் 2. ஸ்விஸ்காரர் 8. பெல்ஜியர் 5. டச்சுக்காரர் 9. கிரேக்கர் 2. போர்த்துகிஸியர் 2. ஸ்வீடிஷ்காரர் 1. யூகோஸ்லேவியர் 3. ருஷ்யர் 2. ஸ்லோவக்யர் 1. ஹங்கேரியர் 2. ஆகமொத்தம் 192 அக்ஸிய தேசத்தினர் சென்னை நகரில் இருக்கிறார்களாம்.

* * *

பிரிட்டிஷ் இந்தியாவில் 15,000 அபின் கடைகள் இருக்கின்றன. அபின் வியாபாரத்தில் சர்க்காருக்கு வருஷத்தில் 1,63,00,000 பவுன்கள் வருமானம் வருகிறது.

21596

மார்சலியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச் சமயத்திலும் வெகுதுரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது.

அமிர்தாஞ்சனம்

செய்தித் திரட்டு

மே. தா. ஹைதராபாத் நிஜாம் தனது 54 வது ஜன்ம தினத்தை ஒட்டி ஹைதராபாத் ஆர்ய சமாஜ் சத்யாக்ரஹிகளுக்குப் பொது மன்னிப்பு அளித்து அவர்களை விடுவித்து விடும்படி உத்திரவிட்டிருக்கிறார்.

* * *

ஐக்கிய மாகாண சர்க்கார் பிரதம மந்திரி கனம் பந்த் முஸ்லீம்களின் கோரிக்கையை ஏற்காததால் அவருக்கு அவமதிப்பு ஏற்படும் வண்ணம் கான்பூர் முஸ்லீம்கள் பிரதம மந்திரியின் கொடும்பாவியை எரித்தார்கள்.

* * *

ன வரங்கவேண்டிய ஐக்கிய ரங்கத்தார் அரை லட்சம் தித்திருக்கிறார்கள்.

* * *

காந்தியின் அடுத்த பிறந்த த் அவருக்குப் பரிசளிக்க டாக்டர் ராதாகிருஷ்ணன் ஒரு புஸ்தகப் வருகிறார். இதில் அமெரிக்கர கனம் ரூஸ்வல்ட், லார்டு ஜெட், லார்டு இர்வின் முதலியவர்கள் ரைகள் எழுதியுள்ளார்கள்.

* * *

சென்னை மாகாணத்தின் பிரதம கோடிஸ்வராகக் கருதப்பட்ட ஜனப் கலீலி ஹிராஜி 15—8—39உ காலமானர். இவருக்கு 77 வயது. இவர் பர்மியாவிலிருந்து சென்னைக்கு 50 வருஷங்களுக்கு முன் வந்தவர். சுய உழைப்பால் முன்னுக்கு வந்தவர். சென்னை நகரில் மட்டும் இவருக்கு ஏராளமாய் கட்டிடங்கள் உண்டு. லக்ஷக்கணக்கில் வாடகை வாங்கியவர் இவர் ஒருவர்தான்.

* * *

வடமேற்கு எல்லைப்புறமாகாண காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் தினப்படி அலவன்ஸை உயர்த்திக்கொண்டிருக்கிறார்கள். தினசரி 4 ரூபாயாக இருந்தது. இனி 6 ரூபாயாகி விடும். பிரயாண அலவன்ஸை மைலுக்கு இரண்டணாவாக இருந்ததை மூன்றணாவாக உயர்த்தி விட்டார்கள். இதுதான் காங்கிரஸ் ஏழைபால் காட்டும் அன்பு! வர்பணத்திலா கொம்மாளம் என்கிறார் ஒரு சோஷலிஸ்ட்.

* * *

இந்தியாவில் அரிசி உற்பத்தி 26,737,000 டன்கள். வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு 1,281,697 டன்கள் அரிசி இவ்வருஷம் வந்திருக்கிறது. இந்தியாவில் வருஷாவருஷம் ரூ 277 66 கோடிபெறுமான அரிசி உற்பத்தியாகிறது. சென்னை மாகாணத்தில் மட்டும் 4,057,250 டன்கள் உற்பத்தியாகிறதாம்.

* * *

இலங்கையில் இனி ஒருவருக்கும் வேலை கிடைக்காது. வேலைக்காக இலங்கையில் குடியேறுபவர்கள் சர்க்காரிடமிருந்து அனுமதிச்சீட்டு பெற்று வரவேண்டும். இதற்காக ஒரு மசோதா ராஜாங்க சபையில் கொண்டு வரப்பட்டியிருக்கிறது.

* * *

எதிப்திலுள்ள பிரிட்டிஷ் தற்காப்புப் படைகளை வலுப்படுத்த வேண்டி இந்தியாவிலிருந்து 6000 இந்தியத் துருப்புகள் கெய்ரோவுக்குப் போயிருக்கின்றன.

* * *

மைசூர் சமஸ்தானத்தில் சிறிது காலம் அடக்குமுறை அடங்கியிருந்தது. 15-8-39 தேதி முதல் அடக்குமுறை தாண்டவமாடி வருகிறது. மைசூர் காங்கிரஸ் தலைவர் உள்பட பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

* * *

சென்னை புது கவர்னர் மே. தா. காப்டன் ஆர்தர் ஹோப் 17—11—39 பதவி ஏற்றுக் கொள்ளுவாராம்.

* * *

உங்கள் நாக்கை ஏமாற்றுகிறீர்கள்

சாதாரணமாக மணத்திற்காகத் தயாரிக்கப்படும் பெருங்காயம் யாதொன்றும் பிரயோசனப்படுவதில்லை. உங்கள் நாக்கை ஏமாற்றுகிறது. புத்திசாலிகள் தங்கள் உணவுப் பொருள்களை சுவைப்பதில் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். அவர்கள் ஸயண்டிபிக் T. T. பெருங்காயத்தையே கேட்கிறார்கள். ஏனென்றால் அது நல்ல சரக்கு என்று அவர்களுக்குத் தெரியும். பதினைது வருஷ ஆராய்ச்சியின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஸயண்டிப்க் T. T. பெருங்காயம் 20-20% அதிக சக்தியுள் காப்பாற்றப் படுகிறது. அதற்கு நறுமணமும் நற்சுவையும் உண்டு.

ருசிகரமான சாப்பாட்டிற்கும் ஜீரணத்தை சுலபமாக்கவும் பரிசுக் கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

ஒரு பவுண்டு ரூ. 1—14—0

ஸயன்டிபிக் T. T. பெருங்காயம்

The Premier English Weekly Devoted to the cause of Sanatana Dharma.

"Dharmarajya"

(Official organ of the Dharma Sevaka Sabha).

Patron Founder & Spiritual Director: H. H. Sri Sankaracharya, of Puri.

Widely circulated in India, Burma & Ceylon.

Best Medium for Advertisement

Annual Subscription Rs. 3.

Apply to:—

The Manager, "DHARMARAJYA" Chandi Chowk, Delhi.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

"பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்ஷேபமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிரமாணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது.

விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்)

கிடைக்குமிடம்:—

பப்ளிஷர்,
தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை:
அல்லதஜனர்தன அச்சுக்கூடம்,
கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.





29 SEP 1939
MADRAS
215297

REGD No. M. 291 ARYADHARMAM Estd. 1915
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு-2½ | கும்பகோணம் பிரமாதி-ஐ ஆவணி-மீ 15உ 1939 ஐ ஆகஸ்டு-மீ 31உ | வ-35

மதுரைமாநகரில் போலீஸ் தடியடி தர்பார்

ஸனாதனிகள் மூர்க்கமாய் தாக்கப்பட்டார்கள்

வக்கில் சோமசுந்தரமய்யருக்கு விலாவில் அடி

தொண்டர் விஸ்வநாதன் அடிபட்டு ஆஸ்பத்திரியிலிருக்கிறார்

ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யர் அறிக்கை

"டெப்டி சூபரெண்டெண்டே ஸநாதனிகளை
அடித்தும், உதைத்தும் வேட்டையாடினர்....."

திருப்பரங்குன்றத்திலிருந்து ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமியை மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவிலுக்கு 25—8—39 காலை 8-மணிக்கு பிட்டு உத்ஸவசம்பந்தமாய் எழுந்தருளச் செய்யப்பட்டது.

ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமியை பல்லக்கில் வைக்கும்போது ஸனாதனிகள் கீழே உட்கார்ந்து கொண்டு ஸத்பாக்ரஹம் செய்தார்கள்.

சம்பவத்தின் பொழுது அங்கு ஜில்லா போலீஸ் சூபரின்டண்டு ஸ்ரீ ஜே. தேவஸஹாயத்தின் தலைமையில் ஒரு போலீஸ்படை இருந்தது.

போலீஸார் ஓடிவந்து ஸனாதனத் தொண்டர்களை அப்புறப்படுத்திவிட்டுப் பல்லக்கில் ஸ்வாமியை எழுந்தருளச் செய்தார்கள்.

ஸ்வாமி ஸன்னிதித் தெருவுக்கு வந்ததும் மீண்டும் ஸனாதனிகள் தடை செய்தார்கள். இச்சமயம் ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யரும், மற்றும் பல ஸனாதனப் பிரமுகர்களும் ஸ்வாமி புறப்படக் கூடாது என்று தடை செய்யவே, மீண்டும் போலீஸார் சூழ்க்கிட்டு, அவர்களை விலக்கினர்கள். போலீஸார் ஸனாதனிகளை ஒரு பக்கமாக நிறுத்தவிடவே, ஸ்வாமி புறப்பட்டுச் சென்றது.

ஸ்வாமி மதுரைக்கு வந்து சேர்ந்தது. ஊர் வலத்தின் முன்புடிரஸ்டி ஸ்ரீ ஆர். எஸ். கரபுட மதுரை நகர பரிபாலன சபை தலைவர் ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமன், மதுரை ஜில்லா போலீஸ் சூபரண்டெண்டு ஸ்ரீ தேவ சகாயம் சென்றார்கள். ஏராளமாய் போலீஸ் காரர்களும் சென்றார்கள்.

ஸத்பாக்ரஹம் செய்தத் தொண்டர்கள் பலருக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீ விஸ்வநாதன் என்ற தொண்டருக்குப் பலத்த காயம். போலீஸார் குறுக்கிட்டதால் ஸ்ரீ என். நடேசய்யருக்குச் சொல்லத்தவிட்டிருக்கிறது. அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தலைவர் ஸ்ரீ என். நடேசய்யருக்கும் காயம் ஏற்பட்டதைக் கேட்டு மதுரை நகரவாஸிகள் ஆத்திரங்கொண்டிருக்கிறார்கள்.

அமைதியாக ஸத்பாக்ரஹம் செய்தவர்கள் பலர் காரத்துக்குட் படுத்தப்பட்டார்களென்று மே. த. வைரோய், மே. த. கவர்னர், கனம் பிரதம மந்திரி ஸ்ரீ ராஜகோபாலாசாரியாருக்குத் தந்திகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

மதுரையில் இச்சம்பவம் பரபரப்பை உண்டாக்கி இருக்கிறது.

"போலீஸ் தடியடி கண்டனம்"

திருப்பரங்குன்றத்தில் 25—8—39 ஸநாதனிகள் ஸத்பாக்ரஹம் செய்த பொழுது போலீஸார் நிரபராதிகளான ஸநாதனித் தொண்டர்களைத் தாக்கினதைக் கண்டிக்க 26—8—39 மாலை மதுரை ஸ்ரீ ஸனாதனதர்ம வித்யாலயத்தில் ஒரு மாபெரும் கூட்டம் கூடிற்று.

ஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் பி.ஏ., பி. எல்., அட்வகேட் அக்ராஸனம் வகித்தார்.

ஸ்ரீமான்கள் சக்திவேலு பிள்ளை, வக்கீல் காராடனஸ்வாமி சாஸ்திரிகள், சேஷய்யர், முதலியவர்கள் கூட்டத்தில் பேசினார்கள்.

கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறை வேறியது.

(தொடர்ச்சி 4 பக்கம் பார்க்க)

பூவாளூர் ஆலயப்பிரவேச நாடகம்

ஸம்புரோக்ஷணம் நடந்துவிட்டது

பூஜகர் கூறும் விவரம்.

மதுரையில் நடந்த ஆலயப்பிரவேசத்தை தொடர்ந்து மற்றும் பலவிடங்களில் ஆலயப் பிரவேசம் நடந்ததாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருக்கிறது. ஆனல், ஆங்காங்கு விசாரித்த அளவில் பல விஷயங்கள் நாடகம் போல் நடந்தென்றும், ஸம்புரோக்ஷணம் நடந்துவிட்டதென்றும் அறிகிறோம்.

பூர்தல்லியில் ஆலயப்பிரவேசம் நடந்தமும் பிறகு இது விஷயமாக மெ இராமத்தில் குழப்பமேற்பட ஆரம்பிக்கவே ஹரிஜன ஆலயப்பிரவேசக்காரர்களே பணம் கொடுத்து ஸம்புரோக்ஷணம் செய்து விட்டார்கள். அதற்குப் பிறகு அங்கு ஹரிஜனங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இந்த விஷயம் ஹரிஜனத் தலைவரான ஸ்ரீ எம். சி. ராஜா மூலமாகவே வெளியாகி இருக்கிறது.

சென்ற வாரம் திருச்சி ஜில்லா இராமத்தில் நடந்த மண்டலராபிஷேகத்திற்கு முதல் நாள் உபன்யாஸம் செய்ய நான் சென்றிருந்தேன். பிறகு பூவாளூர் சென்று இராம ப்ரமுகர்களான ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரமய்யர் முதலிய வர்களை சந்தித்தேன். கோவில் பூஜை செய்பவரைக் கண்டு பேசினேன். அதன் மூலம் கிழ்க்கண்ட விஷயங்கள் வெளியாயின :—

"பூவாளூரில் ஆலயப்பிரவேசம் நடந்த கோவிலில் பூஜைசெய்யும் பையனுக்கு வயது 16. லால்குடி பள்ளிக்கூடத்தில் அவன் படிக்கிறான். அந்தப் பள்ளிக்கூடத்திலேயே லால்குடி ஹரிஜன விடுதி வார்டன் ஸ்ரீ டி. எஸ். அனந்தராயணய்யர் ஆசிரியராக இருக்கிறார். ஆலயப்பிரவேசம் நடந்த தினம் லீவு எடுத்துக்கொள்ளும்படி டார்டி சொன்னாராம். பார்த்ஸாரதி என்ற பெயருள்ள அச்சிறுவன் டார்டியிடம் இராம ஜனங்கள் ஆலயப்பிரவேசத்திற்கு விரோதமாகவிருப்பதால் தான் ஸம்மதிக்க முடியாதென்று கூறினான். தான் சிறுவன். ஹரிஜன ஆலயப்பிரவேச விஷயமாக சாஸ்திர விஷயம் சொல்ல முடியாதபோனலும் மனஸ்ஸுக்கு விரோதமாக இருப்பதாகவும் இதனல் ஆபத்து ஏற்படுமென்று பயமாக இருப்பதாகவும் தெரிவித்தான். ஒன்றும் ஏற்படாதென்று சிறுவனுக்கு தைரியம் சொன்னார்கள். பிறகு ஹரிஜனங்கள் கோவில் கர்ப்பக்ருஹ மண்டபத்திற்கு வெளியில் நிறுத்தப்பட்டார்கள். மெ பையன் ஹரிஜனங்களுக்கு கேர்ல் பிரஸாதம் கொடுக்க மறுத்து விட்டான். அதனல் ப்ரஸாதத்தை ஹரிஜனங்களுக்கு வேறு ஒருவரே வழங்கினர். அப்பொழுது ஹரிஜனங்களுடன் கூடவந்த ஸ்ரீ டி. வி. சாமிநாத சாஸ்திரியும், ஸ்ரீ என். ஹரஸ்யமும் "பயப்படாமல் செய். தைரியம் உத்யோகம் ஸம்பாதித்துக் கொடுக்கிறோம் என்று அபயப்ரதானம் பண்ணினர்களாம். கோயிலுக்கு அடுத்தாற்போல் உள்ள மீனாக்ஷி ஸுந்தரமய்யர் உள்பட யாருக்கும் தெரியாமல் ஆலயப்பிரவேச விஷயம் ரஹஸ்யமாக வைக்கப்பட்டிருந்தது. அன்று இவரும் மறுநாளும் கோவில் பூஜை நடைபெறவில்லை. பிறகு அயர்லிருந்து வேறு பூஜகர் வந்து ஸம்புரோக்ஷணம் நடந்தது.

இராம ஜனங்கள் நீண்டநாள் கோவில் பிரவேசத்துக்குச் சாதகமாக இருந்த டார்டியை கண்டிக்கப் பொதுக்கூட்டம் நடத்தினர்கள். டார்டியும் வந்திருந்தார். அவர் சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்த விட்டு ஆலயப்பிரவேச ப்ராயச்சித்தமாக ஸம்புரோக்ஷணம் நடத்து விட்டதென்று சமாதானம் கூறினர். இனி ஹரிஜனங்களை ஆலயத்தில் அனுமதிக்கவில்லை என்றும் உறுதி கூறினர்.

பிறகு ஒரு சமயம் சட்ட சபை மெம்பர் ஸ்ரீ மருதை என்ற ஹரிஜனரும், ஆசிரியர் ஸ்ரீ அனந்தராயணய்யர், ஸ்ரீ கடேசய்யர் இவர்கள் தலைமையில் ஹரிஜன பஜனகோஷ்டி வந்தது. அப்போது கோவில் கதவு பூட்டப்பட்டிருந்தது. வெகுநாழி வரை கதவு திறக்கப்படவில்லை. ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரமய்யர் வந்திருந்தவர்களிடம் "ஏற்கனவே திருட்டுத்தனமாக ஆலயப்பிரவேசம் நடந்து விட்டது. பிறகு இராம ஜனங்கள் எல்லோரும் கூடி டிரஸ்டியைக்கண்டிக்கவே, அவர் ஸம்புரோக்ஷணம் செய்து விட்டார். ஆகவே, இனி நாங்கள் அனுமதிக்க முடியாது" என்று கூறினர். இதற்கு ஸ்ரீ மருதை மீனாக்ஷிசுந்தரமய்யரிடம் "பொது ஜனங்கள் எல்லோரும் ஆலயப்பிரவேசத்திற்கு ஸாதகமாக இருப்பதாகவே எங்களிடம் கூறப்பட்டது. அதனல் நாங்கள் வந்தோம். தங்கள் போன்ற அபிப்பிராயமுள்ளவர்கள் பெரும் பான்மையாக விரோதமாக இருப்பதால் நாங்கள் கோவிலுக்குள் செல்லப்போவதில்லை", என்று பதில் கூறினர். ஸ்ரீ அநந்தராயணய்யர் என்பவர் மட்டும் கதவைத்திறக்கடிரஸ்டியை நிர்ப்பந்தப்படுத்தினர். ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரமய்யர் இதைப்பலமாக கண்டித்தார்.

ஹரிஜனங்கள் நழைவதை டார்டியும் விரும்பவில்லை. எனவே, வந்தவர்கள் திரும்பி விட்டார்கள். இராம ஜனங்கள் இப்பொழுது கோவிலுக்குப் போவதை நிறுத்திவிட்டார்கள். ஒரு நாள் மூல மிம்மம் மூலஸ்தானத்திலிருந்து பிடுங்கப்பட்டு மேழே டெக்கத்து. இப்பொழுது பிம்பத்தை மூலஸ்தானத்தில் வைத்து லிமண்ட் பூசி இருக்கிறார்கள். அதற்காக ஸம்புரோக்ஷணை நடைபெற்றது.

கோவில் பூஜை செய்த பையன் ஆலயப்பிரவேச விஷயத்தில் தான் கலந்துகொண்டதைப்பற்றி வருத்தத்தை தெரிவித்திருக்கிறான். அவன் சிறுவன். அவன் பாடசாலையில் வசித்துக்கொண்டு பூஜையும் செய்து இதைக்கொண்டு தன் வீட்டிலுள்ள வர்களை ரக்ஷிக்க வேண்டிய நிலைமையில் உள்ளவன். அப்பையன் பல விஷயங்களினல் ஏமாற்றப்பட்டிருக்கிறான். இராம ஜனங்கள் எல்லோரும் விசேஷ கொநிப்பு கொண்டிருக்கிறார்கள். பூஜை செய்யும் பையன் இப்பொழுது டக்க முடியாத நிலையிலிருக்கிறான். காலில் இரண்டு மூன்று தடவை ஃப்ரேஷன் டடந்திருக்கிறது. மிகவும் கஷ்டப்படுகிறான். ஹரிஜன ஆலயப்பிரவேசம் நடந்த தினத்திலிருந்து தனக்குத் தேகஸ்திதி சரியாக இல்லை யென்று அவன் கூறி 'இது தெய்வ சாபமே' என்று அப் பையன் சொன்னான்.

பூவாளூரில் ஆலயப்பிரவேசம் வெற்றி கரமாய் நடந்தது என்றுசாங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள். பத்து பேர் முன்னிலையில் வந்து பேசுகிறார்கள். அங்கு நடந்த உண்மை களை அந்தக்காங்கிரஸ் கூட்டத்தினர் அறியார் போலும். இம்மாதிரி தான் ஒவ்வொரு ஊரிலும் ஆலயப்பிரவேசம் நடந்திருக்கிறது என்று ஊகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அக்னிஹோத்ரம்
ராமானுஜ தாதாச்சாரியார்.

புதுக்கோட்டை,

A. ஸ்ரீனிவாஸராகவய்யங்கார் பிரசுகள்.			
ஸ்ரீ சுக்தபாஷ்யம்	1	8	0
பதினேரு சில்லரை ரஹஸ்யங்கள் ஸாஸராரம் முதலியன	2	12	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட், கும்பகோணம்.

தைவ ஸ்வாதந்தர்யம் வந்து விட்டது

(ஸ்ரீ எஸ். கணேசய்யர், மைலாப்பூர்)

ஆலயங்களில் விலக்கப்பட்டவர்கள் பிரவேசிப்பதால் லிங்க, பிம்ப, யந்திரங்களிலிருக்கும் மூர்த்தி விசேஷமானது அசுசி ஏற்பட்டதால் அவ்விடத்தை விட்டுக் கிளம்பி, தபஸ்விகள், யோகப்பியிகள் உபாஸகர்கள் இவர்களுடைய தஹராகாசத்தை யடையக்கூடிய காலமானதால் சாது ஜனங்களுக்கு இந்தயுகத்தில் இந்த சமயத்தில் தைவீகசக்தி, அனுக்ரஹ சக்தி முதலியவைகள் ஏற்படக்கூடிய சமயம். ஆகையால் ஒவ்வொருவரும் பிரயாசப்படக்கூடிய வரையில் தப, யோக, ஜப, ஹோம, தானதிகள் செய்து வந்தால் மூர்த்திகள் இவர்களுடைய ஹிருதயத்தை ஸ்தானமாக அடையுமென்பது பெரியோர்களின் அபிப்பிராயம். ஆதியில் ஆலயங்கள் ஏற்படுவதற்கு அவரவர்களுடைய சக்திக்குத் தக்கபடி மூர்த்திகள் விசேஷங்கள் ஸாந்நித்யமாயிருக்கின. காலக்ரமத்தில் அவர்கள் முக்தியடையும் போது இந்தக்கலியுகத்தில் தைவோபாசகர்கள் குறைந்து விடுமென்று தெரிந்த, தங்களிடம் ஸாந்நித்யமாயிருக்கும் சிவ விஷ்ணு முதலிய சமஸ்த மூர்த்திகளையும் ஆங்காங்கு லிங்க பிம்ப யந்திரங்களில் ஆவாஹனம் செய்து, இடத்திற்குத் தக்கபடி பூஜாவிதானங்களையும் ஏற்பாடு செய்து அனுக்ரஹம் செய்திருக்கிறார்கள். இது சமயம் மேல்படி கார்யங்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிற படியால் மஹாத்மாக்களுடைய ஹிருதயத்தில் தேவதைகளானது தங்கி மறுபடியும் பாபரூபம் ஒழிந்த பிறகு முன்போலவே மூர்த்திகளிடம் பிரவேசித்து லோகத்திற்கு க்ஷேமத்தைச் செய்து கொண்டு வரும்.

இந்தக்கலியுகமானது எல்லா யுகங்களைக் காட்டிலும் பாபயுகமானதும் "கலிஸ்ஸாது" என்ற வாக்கியப்படி, நம்ம சித்தத்தில் தேவதைகள் வசிக்கவேண்டியகாலம் ஏற்பட்டிருக்கிறபடியால், ஆலயங்களில் தேவதா ஸாந்நித்யம் குறைவுபடுவதைப்பற்றி விசாரப்படாமல் ஒவ்வொரு ஆஸ்திகரும் ஈச்வராராதனம் செய்து காயத்ரீயாதி உபாஸனையோடு தேவதா ஸாந்நித்யத்தை யடைத்து சாபநாஸ்திரஹத்தோடு வேத வேதாந்தாதி சாஸ்திரங்களையும் பிராமண தர்மத்தையும் விருத்தி செய்து கொண்டு மேல்மேலும் க்ஷேமத்தையடைய வேண்டியதற்கு சர்வேச்வரனே ப்ரார்த்திப் போமாக!

பிரும்மஸ்ரீ அருட்கவி ந. சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

ஸ்ரீ ரகு விமர்சனம்.	0	12	0
ஸ்ரீ குரு விமர்சனம்.	0	5	0
வரிவஸ்யா ரஹஸ்யம்	1	0	0
ஸ்ரீ லலிதாத்ரிசதி பாஷ்யம்	1	0	0
ஸ்ரீவித்யாபரப்ரபத்தி	2	0	0

நிவான்பகதூர் ராமநுஜாசாரியார் அவர்கள் எழுதியது.

நிருவாய்மொழி (3 வால்யூம்)	7	8	0
தோர்த்தசங்கிரப் பாட்டுகள்	0	6	0
ஸ்ரீமத் தோபாஷ்யம் (3 வால்யூம்)	3	0	0
யதீந்த்ரமத தீபிகை.	4	0	0
ராமாயணசாரம் (பைண்ட்)	1	8	0
ஷே (ரப்பர்)	1	4	0
சித்ரா ராமாயணம் (பூஜையில் இருக்கக்கூடியது).	1	0	0
ராமாயணஸாரம்,(ரப்பர்),சித்ரா ராமாயணம், இரண்டும் சேர்ந்து.	2	0	0

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

ஆலயப்பிரவேசத்துக்கு எங்கும் ஆதேஷணை

நாடெங்கும் நடந்த கூட்டங்களின் நடவடிக்கை விபரம்

ஸ்ரீரங்கம்

"மாதர் கூட்டம்"

உத்தரவிதி ஸ்ரீ ஹயக்ரீவ மந்திரத்தில் 18—8—39 இரவு ஆஸ்திக ஸ்திரீகள் கூட்டம் கடைபெற்றது. ஸ்ரீமதி ஜானகி, நாராயண அய்யங்கார் அக்ராஸனம் வஹித்தார். ஆலயப்பிரவேசத்தையும் சாரதா சட்டத்தையும் கண்டித்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

ஸ்ரீசங்கர குருகுலம்:- ஸ்ரீ சங்கர குருகுலத்தில் ஸனதனிகள் பொதுக்கூட்டம் கடைபெற்றது. குன்னக்குடி ஸ்ரீ விராம அய்யர், ஸ்ரீ டி. கே. பாலசுப்ரமண்ய அய்யர் ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்துப் பேசினர்கள்.

ஸ்ரீ ரங்கத்தில் பெரிய கூட்டம்

ஸ்ரீ ரங்காராவ் டாக்கீஸில் 19-8-39 காலை 9-30 மணிக்கு ஸ்ரீவான்பஹதூர் ஸ்ரீ ராகவ அய்யங்கார் அக்ராஸனத்தில் பிரம்மாண்டமான ஸனதனிகளின் கூட்டம் கடைபெற்றது. மதுரை அட்வகேட் ஸ்ரீ K. R. வெங்கட்டராமய்யர் ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்துப் பேசுகையில் மதுரை ஸம்பவத்தை விளக்கி பிறகு மற்ற தலைவர்களுடைய தஹராகாசத்தை யடையக் கூடிய காலமானதால் சாது ஜனங்களுக்கு இந்தயுகத்தில் இந்த சமயத்தில் தைவீகசக்தி, அனுக்ரஹ சக்தி முதலியவைகள் ஏற்படக்கூடிய சமயம். ஆகையால் ஒவ்வொருவரும் பிரயாசப்படக்கூடிய வரையில் தப, யோக, ஜப, ஹோம, தானதிகள் செய்து வந்தால் மூர்த்திகள் இவர்களுடைய ஹிருதயத்தை ஸ்தானமாக அடையுமென்பது பெரியோர்களின் அபிப்பிராயம். ஆதியில் ஆலயங்கள் ஏற்படுவதற்கு அவரவர்களுடைய சக்திக்குத் தக்கபடி மூர்த்திகள் விசேஷங்கள் ஸாந்நித்யமாயிருக்கின. காலக்ரமத்தில் அவர்கள் முக்தியடையும் போது இந்தக்கலியுகத்தில் தைவோபாசகர்கள் குறைந்து விடுமென்று தெரிந்த, தங்களிடம் ஸாந்நித்யமாயிருக்கும் சிவ விஷ்ணு முதலிய சமஸ்த மூர்த்திகளையும் ஆங்காங்கு லிங்க பிம்ப யந்திரங்களில் ஆவாஹனம் செய்து, இடத்திற்குத் தக்கபடி பூஜாவிதானங்களையும் ஏற்பாடு செய்து அனுக்ரஹம் செய்திருக்கிறார்கள். இது சமயம் மேல்படி கார்யங்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிற படியால் மஹாத்மாக்களுடைய ஹிருதயத்தில் தேவதைகளானது தங்கி மறுபடியும் பாபரூபம் ஒழிந்த பிறகு முன்போலவே மூர்த்திகளிடம் பிரவேசித்து லோகத்திற்கு க்ஷேமத்தைச் செய்து கொண்டு வரும்.

இந்தக்கலியுகமானது எல்லா யுகங்களைக் காட்டிலும் பாபயுகமானதும் "கலிஸ்ஸாது" என்ற வாக்கியப்படி, நம்ம சித்தத்தில் தேவதைகள் வசிக்கவேண்டியகாலம் ஏற்பட்டிருக்கிறபடியால், ஆலயங்களில் தேவதா ஸாந்நித்யம் குறைவுபடுவதைப்பற்றி விசாரப்படாமல் ஒவ்வொரு ஆஸ்திகரும் ஈச்வராராதனம் செய்து காயத்ரீயாதி உபாஸனையோடு தேவதா ஸாந்நித்யத்தை யடைத்து சாபநாஸ்திரஹத்தோடு வேத வேதாந்தாதி சாஸ்திரங்களையும் பிராமண தர்மத்தையும் விருத்தி செய்து கொண்டு மேல்மேலும் க்ஷேமத்தையடைய வேண்டியதற்கு சர்வேச்வரனே ப்ரார்த்திப் போமாக!

இராமேஸ்வரம்

இராமேச்வரத்தில் வழக்கம்போல் ஆடிப்பூர உத்ஸவம் ஆரம்பமாகி மிகவும் சிறப்பாய் நடக்கிறது.

"காங்கிரஸ்காரர் தூண்டினர்"

14-8-39 அமாவாசையட்சத்திருகளன்று நாடார்கள் பள்ளர் பறையர் முதலிய தீண்டாதார்கள் ஆலயப்பிரவேசம் செய்யும் நோக்கத்துடன் முயற்சி செய்தார்கள். இவ்வித அசம்பாவிதம் ஏற்படக் கூடுமென்று கருதி ஜாதி ஹிந்துக்கள் ஒன்று கூடி ஒவ்வொரு கோபுரவாயலில் காவல் புரிந்து வந்தார்கள். இதனல் தீண்டாதார் சூழ்ச்சி பயனற்றதாகி விட்டது. பள்ளர் பறையர் வகுப்பார் மிக அமைதியுடனும் பணிவுடனும் தங்களுக்கு கோவிலில் புருகவேண்டுமென்ற நோக்கமே இடையாதென்றும், எங்கள் சேரியில் வந்த வெள்ளைக்குல்லா தரித்த சிலர் எங்களை அடிக்கடி கோயிலுக்குள் போக வேண்டுமென்றும் அவ்விதம் இல்லையேல் உங்கள குடிசைகளை நாசம் செய்வோமென வும் மிரட்டினர்கள். நாங்கள் என்ன செய்வோம். எங்கள் கஷ்டத்தை யாரிடம் முறையிடுவோம். என்று கண்ணும் கண்ணீருமாகக் கதறினர்கள். நாங்கள் இனி என்ன நிர்ப்பந்தம் ஏற்படினும் ஆலயப் பிரவேசமென்னும் கொடிய சூழ்ச்சியில் அகப்படமாட்டோமென்று உறுதி கூறி வெளியில் நின்று கொண்டே தரிசனம் செய்தார்கள். நாடார்கள் மட்டிலும் ஆசேபனை செய்தார்கள். கடையில் தேவன்மார்களும் சேர்வை வகுப்பினரும் மற்றுமுள்ள ஜாதி ஹிந்துக்களும் நிர்விசாரமாக வருவதைக் கண்டு மிகவிப்போய் விட்டார்கள்.

வந்தவழி திரும்பினர்

மதுரை ஸ்ரீ எ. வைத்தினநய்யர் மனைவி ஸ்ரீ அலைன்ட்சம்மாள் 14-8-39 இரவு இவ்வூர் வந்துசேர்ந்தார். இத்தகவலறிந்த சகலஜாதி ஹிந்துக்களும் விசேஷ பாபரப்பை அடைந்தனர். கோவில் வாசலில் கூட்டம் கூட்டமாக ஜனங்கள் நின்று கொண்டிருந்தனர். அம்மனை கோவிலுக்குள் விடக்கூடாதென்று ஆரவாரம் செய்தார்கள். இச்சுட்டத்தைக் கண்ணுற்ற ஸ்ரீ அகிலாண்டத்தம்மாள் அன்றிரவு வந்தவழி திரும்பினர். (ஒ. நி.)

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சர்மா)

கடவாரை கவனிக்கவும்! நமது நற்காலத்தால் ஸாதக ப்ரதிநிதி ஒருவர் நிற்கிறார். இவர் ஜய சர்ம ஜயமாகும். எல்லா நகேவர்களும் அங்கு கவனம் செலுத்தவேண்டும். ஓட்டர்களுக்கு தேசிய ஸபையின் நீமையை விளக்க வேண்டும்.

ஒர் பக்தரின் ஆக்ரஹம்! தேசிய ஸபைக்கு நமது ஆசேபத்தைக் காட்ட இதே தக்க வழியென ஓர் பக்தர் சென்னையில் கதர் தணிகளைச் சேர்த்து நெருப்பு வைத்தார். இவர் செயல் சிலருக்குப் பிடிக்காவிடினும் இவர் மத பக்தி மெச்சத் தக்கதே!

உடனே விலகுக! மதாபிமானமுள்ள ஒவ்வொருவரும் காங்கிரவின் அங்கத்தினர் பதவியிலிருந்து பெருவாரியாக விலகிமதத்தைக் கெடுக்கும் ஸபையில் ஓர் க்ஷணமுமிருக்கலாகாதென்று கூறி உடனே விலக வேண்டும்! வர்ணச்ரம ஸ்வாராஜ்ய ஸங்கத்தில் சேரவேண்டும்.

பலே! தீரா! வருக! வருக!! மதுரை ஆலய அதிகாரி ஒருவர் அத்த அக்ரமத்தை சபியாமல் வேலையை விட்டு வெளியே வந்தார். ராஜாஜி முதல் வஞ்சகமாக செய்த சபியாலோசனையை விலக்குகிறார். கம்மை பெய்யுனென்ற காங்கிரஸ் பட்டினியிடப்பாரா? வேலை விட்டவருக்கு காம் சிறிதாவது சம்பளக் தருவதாயின் பலரின்வனம் வெளி வருவர்!

அசட்டு ஸமாதானம்! ராஜாஜி திருட்டுத் தனமாக சண்டாளர் ஆலயத்தில் நுழைந்ததை ஆடம்பரமின்மை என்கிறார். இவ்வனமே ஆடம்பரமின்றி உள்ளே நுழையும் கள்வனை என் சிக்ஷிக்கிறார்.

சென்னை-காஞ்சி பெண்கள்! ஆலயப்பிரவேச பாபத்தைக்கண்டும் மனம்பொங்கி பல இடங்களில் பெண்மாதர் தங்களே கண்டனக் கூட்டம் கூடியது போல மெ இண்டிடங்களிலும் ஸ்திரீகள் கூடி தங்களது சக்தியும் ஆசேபத்தையும் தெரிவித்துக் கொண்டனர், குல ஸ்திரீகள் கண்ணீர் கூடியழுவாள்.

காங்கிரஸ் எதிர்ப்பு வாரம்! சென்ற ஒரு வாரமாக சென்னையில் பல பேட்டைகளில் காங்கிரவின் நீமையை விளக்கி பலர் பல கூட்டம் கூடி அட்டஹாஸம் செய்கின்றனர். எங்கும் போலீஸ் கடமாட்டம் அதிகமாயிருக்கிறது.

நல்ல பிரசாரமே தேவை! தஞ்சை பிரபல வக்கீல் ஒர் பிரசாரருக்கு எழுதிய கடிதத்தில் தங்கள் உபந்யாஸம் இன்னும் தஞ்சையில் கீங்காரம் செய்கிறது. ஒருவராம் தங்களிங்கு வந்த உபன்யாஸஞ் செய்தால் பிருஹதீச்வர ஸ்வாமி ஆலயத்திற்கு ஸம்ப்ரோக்ஷணம்நடக்கும் என தஞ்சை கருத்தை வெளியிட்டார்.

கண்டனக் கூட்டம்! ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவ சர்மா தலைமையில் ஓர் கூட்டம் ஸ்ரீமடத்தில் சனிக்கிழமை கடைபெற்றது. பலர் பேசினர்கள். ஸ்ரீமான் கடேசய்யரையும்

(தொடர்ச்சி 3 பக்கம்.)

மதுரைமாநகரில் போலீஸ் தடியடி தர்பார்

(1 பக்கம் தொடர்ச்சி)

"மதுரையில் கூடிய இந்த மாபெருங் கூட்டம், திருப்பரங்குன்றத்தில் ஸனாதனிகள் சத்யாக்ரஹம் செய்த பொழுது, போலீஸார் நிராயுதபாணிகளான ஸனாதனிகளை தடியினால் அடித்தும், பூட்ஸ் காலால் உதைத்தும் செய்த மூர்க்கத்தனமான செய்கையை அழுத்தமாகக் கண்டிக்கிறது.

"சென்னை சர்க்காரை இந்த சம்பவத்தைப்பற்றி ஒரு பகிரங்க விசாரணை எடுத்துக் கொள்ளும்படிக் கேட்டுக் கொள்ளுகிறது.....

தீர்மானங்களை ஸ்ரீ மான் வக்கீல் கி. ஆர். வெங்கட்டாரமய்யர் பிரேரேபித்தார். ஸ்ரீமான் சேஷய்யர் ஆமோதித்தார். ஸ்ரீமான் மேல்மங்கலம் ராஜாமணி அய்யர் ஆதரித்தார்.

கரகோஷத்தினிடையில் தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறை வேறியது.

மதுரைமாகாணெங்கும் போலீஸார் ஸனாதனிகளின் மீது கூட தடிதடிப் பிரயோகம் செய்துவிட்டதைக் கண்டித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீ நடேசய்யர் அறிக்கை

அகில இந்திய வர்ணாச்ரமஸ்வராஜ்ய சங்கத்தலைவர் ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யர் திருப்பரங்குன்றத்தில் நடந்த சம்பவத்தை விவரமாக விவரித்திருக்கிறார். அதில் அவர் கூறுவதாவது:—

"தவறான தந்தி"

"திருப்பரங்குன்றத்தில் நடந்த ஸனாதனிகளின் சத்யாக்ரஹத்தைப்பற்றி கனம் பிரதம மந்திரிக்குத் தகவல் தந்தி மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தந்தியில் தவருகப் பல விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அந்தத் தந்தியின் வாசகம் ஹிந்துப் பத்திரிகையிலும், மெயில் பத்திரிகையிலும் 26-8-39 உ வெளிவந்திருக்கிறது.

"நடந்த விஷயங்கள்"

இங்கு நடந்த விஷயங்களை வெளியிட விரும்புகிறேன். சத்யாக்ரஹம் செய்த பொழுது ஏராளமாய் ஜனங்கள் இருந்தார்கள். பல்லக்கில் ஸ்வாமி எழுந்தருளச்செய்யும் பொழுது 20 ஸனாதனிகள் குறுக்கே விழுந்து பாதையை மறித்தார்கள். இந்த இருபது ஸனாதனிகளில் ஒருவர் மதுரையைச் சேர்ந்தவர்கள். மீதி பதினேந்து நபர்களும் திருப்பரங்குன்றத்தையும் அதன் சுற்று கிராமங்களையும் சேர்ந்தவர்கள். இந்த இருபது நபர்களில் எட்டு பேர் பிராமணர்கள். பாக்கி 12 பேர்களும் பிராமணரல்லாதார். இந்த இருபது ஸனாதனிகளும் அப்படியே கீழே குறுக்கேபடுத்துக்கொண்டு விட்டார்கள். இம்மாதிரி அவர்கள் மும்முறை செய்தார்கள்.

"தடியடி ஆரம்பம்"

தடியடி ஆரம்பித்தது. தடியடியுடன் பிரம்படியும் நடந்தது.

12 ஸனாதனிகளை மிருகத்தனமாய் தடிகளால் அடித்தார்கள். பிரம்பினாலும் வீசினார்கள்.

"உதைக்கப்பட்டார்கள்"

மதுரை அட்வகேட் ஸ்ரீ ஆர். கணபதி அய்யர் குமாரனும் மற்றும் இரண்டு பேர்களும் காலினால் உதைக்கப்பட்டார்கள்.

"பல இடங்களில் படுகாயம்"

இந்த இருபது ஸனாதனிகளை பல முறை அடித்தார்கள். சிலருக்கு மும்முறை அடி. பலருக்கு காலில்தது முறை அடி. சிலருக்குப் பின்புறத்திலும், சிலருக்கு முன் பக்கத்திலும் அடி. சிலருக்கு விலாவில், சிலருக்கு மார்பில் அடி.

"விஸ்வநாதனுக்குப் படுகாயம்"

விஸ்வநாதன் என்ற தொண்டரை போலீஸார் தடியினால் அடித்துப் படுகாயப்படுத்தினார்கள். அவர் மூர்ச்சித்துப்போனார். அவரைப் போலீஸார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றார்கள்.

"டேப்டியின் வேட்டை"

மதுரை ஜில்லா போலீஸ் டேப்டி சூபரண்டெண்டு தான் எல்லோரையும் அடித்தும் உதைத்தும் செய்தார். அவர் ஒருவரே தான் ஸனாதனிகளை உதைத்து வேட்டையாடினர். ஸனாதனிகளை மூர்க்கத்தனமாய் போலீஸார் அப்புறப்படுத்தினார்கள்.

"ஸ்ரீ நடேசய்யருக்குச்சிராய்ப்பு ஏற்பட்டது"

மதுரை ராவ்சாஹிப் ஸ்ரீ என். நடேசய்யர் பல்லக்கின் சமீபத்தில் நின்று கொண்டிருந்தார்.

"போலீஸ் ஜில்லா சூபரண்டெண்டு என் முன்னால் தன் கைகளை நீட்டி வளைத்துக் கொண்டு நின்றார். மற்றொரு போலீஸ் அதிகாரி என்னைப் பின் பக்கம் தள்ளினர். வலது கைமணிக்கட்டில் எனக்குச் சிராய்ப்பு ஏற்பட்டது."

"வக்கீலுக்கு விலாவில் காயம்"

வக்கீல் ஸ்ரீ சோமசுந்தர சர்மாதிரிகள் பி.ஏ.பி. எல். அவர்களுக்கு விலாவில் தடியடி விழுந்து காயம் ஏற்பட்டது.

நான் கூறியது என்ன?

நான் போலீஸ் சூபரின்டெண்டிடம், "தீண்டாதார் பிரவேசத்தினால் நீட்டுப்பற்ற மதுரை ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் கோவிலுக்கு ஸ்ரீ சுப்பிரமணியஸ்வாமியை எடுத்துச் செல்லக் கூடாதென்றும், வழக்கப்பழக்கங்களுக்கும் சாஸ்திரத்துக்கும் விரோதமாய் நடக்கும் ஆலய நிர்வாக அதிகாரிகளுக்கு சாதகமாயிருக்கக் கூடாதென்றும், ஜனவலம் மேல் கொண்டு செல்லாமல் தடுத்து அமைதி நிலை நிறுவவேண்டி போலீஸார் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும்" கூறினேன்.

"எனக்கு உத்திரவு அப்படி இருக்கிறது"

"ஸ்வாமி ஜனவலத்தைத் தடுப்பவர்களை விலக்குவதற்கு உத்திரவு எனக்கு இருக்கிறது." என்று சூபரின்டெண்டு கூறினர்.

போலீஸ் படைகள்

35 போலீஸார்கள், 2 இன்ஸ்பெக்டர்கள், 2 சப்-இன்ஸ்பெக்டர்கள் 1 சார்ஜண்டு கொண்ட படை அங்கு இருந்தது. சூபரின்டெண்டும், டெப்டியும் மேற்பார்வை பார்த்துக்கொண்டிருந்தார்கள். நான் மோட்டரிலிருந்து இறங்கியவுடன், படையை இரு பிரிவுகளாகப் பிரித்து ஜனவலத்துடன் தொட்ர்ந்து செல்லும்படி உத்திரவிட்டார்கள்.

ஸனாதனிகளின் மீது குற்றச்சாட்டு?

வெகு தூரத்திலிருந்துகொண்டு (புனலிலிருந்து) சென்னை பிரதம மந்திரி கனம் ஸ்ரீ. ராஜகோபாலசாரியார் ஸனாதனிகள் தந்திரங்கள் செய்வதாகக் கூறினார். ஸனாதனிகள் ஒருபொழுதும் தந்திரங்கள் செய்யவில்லை. தங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவே முயன்று வருகிறார்கள். ஸனாதனிகள் எந்தப் பள்ளிக்கூடத்திலும் போய் யுத்திகளையும் ஜாலங்களையும் கற்றுவரவில்லை. அவர்கள் கிரபாதிகள். உலகில் கனம் ராஜகோபாலசாரியார் ஒருவர் தான் ஸனாதனிகள் மீது குற்றம் சாட்டுகிறார்.

"ஸனாதனிகள் இந்த மாதிரியுக்திகளை செய்தால் சனாதன தர்மத்தின் கிறுக்கு சம்பிரதாயங்களும், ஹரிஜனங்கள் தங்களுக்கு அருமையாகக் கொண்டுள்ளவையும் குலைந்து போக வேண்டுமென்பதையும் அவர்கள் உணரவேண்டும்" என்று கூறும் அவரது அறிக்கை நிறம்பவும் வியக்கத்தக்கதாய் இருக்கிறது."

ஆழ்வார் திருநகரி

ஆலயப்ரவேச எதிர்ப்பு

காரியக்கமிட்டித் தீர்மானம் கண்டிக்கப்பட்டது

ஆழ்வார் திருநகர் ஸனாதனதர்மசபா ஆதரவில் ஸ்ரீமத் ஆத்ரான் வடக்குத் திருமாளிகை ஜீயர் ஸ்வாமிகள் அலைமையில் பிரும்மாண்டமான இரண்டு பொதுக்கூட்டம் கடை பெற்றது. முதல் நாள் கூட்டத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் மதுரை ஆலயப்பிரவேச அதிகார நடவடிக்கையை வைதீகர்கள் கூட விரும்தாத நடத்தியதாகக் குற்றம்சாட்டி பாராட்டியுள்ளதைக் கண்டித்து இரண்டாவதில் ஸ்ரீ சடகோபாசாரியார் ஸ்வாமியால் ஸமர்ப்பிக்கப்பட்டது. மற்றொரு தீர்மானம் ஆத்ரான் ஸ்ரீ வெங்கடாசார்ய ஸ்வாமி பிரசங்கிக்கையில் கனம் பிரதம மந்திரி வைதீகர் மனம் மாறவேண்டுமெனச் சொல்லி வருகிறார். மூன்யுகத்தில் தஷ்டர்களும் தங்களிஷ்டம்போல் நடக்க மனம் மாறுதலடைய வேண்டுமெனவே உரையையும் அர்த்தமாய் ஹிம்சிக்கத்தொடங்கினர்கள். கடைசியில் அவர்கள் கோரமான முடிவையே அடைந்தார்கள். — ராக்ஷஸர்கள் யாகங்களை அழிக்க முன் வந்தது போல் தெய்வ சான்னித்யத்தை ஒழிக்க சில முன் வருவது மிகவும் மோசமாகும். இத்தகைய விஷ மக்கிளர்ச்சி பலமல் தடுக்க உரவரும் ஒற்றுமையாய் உழைக்க வேண்டும் என்ப தாயும் மற்றும் பலவிதமாகவும் மிகமணீய மாக சொற்பொழிவு நிகழ்த்தினர். 24-8-39 வியாழனன்றிரவு ஹரிஜனங்களுடன் சில் ஆலயப்பிரவேசம் செய்ய போவதாக பிரஸ்தாபமாகவே தேவஸ்தான ஸ்தலத்தார்களும் மற்ற முக்யஸ்தர்களும் கோயில் வாசல்முன் கூடிவிட்டனரெனவும் கலவரமில்லாமல் கலைக்க வேண்டி போலீஸாரும் விஜயமாயினரெனவும் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ நன்மை தருவார் கோவிலில்

பரபரப்பு

24—8—39 காலை மதுரை ஸ்ரீ நன்மை தருவார் கோவில் வாசலில் ஒரு காவிதரிஸநிறை நின்றுகொண்டிருந்தார். உடனே கோவிலில் பரபரப்பு காணப்பட்டது. கோவில் கதவுகள் மூடப்பட்டன.

ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் "காப்பு" உத்ஸவத்தை முன்னிட்டு இந்தக் கோவிலுக்கு அம்மணி அழைத்துவருவது வழக்கம். ஆனால் இந்த சம்பவத்தினால் ஸ்ரீ அம்மன் அழைக்கப்படுவதற்கு தரமதம் சேரிட்டது. ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் வந்து சென்றதும் கோவிலுக்கு சம்ரோக்ஷணம் செய்யப்பட்டதென்றும், பின்னர் நான் வழக்க பூஜைகள் நடத்தனவென்றும் கோவில் அதிகாரிகள் கூறுகிறார்கள்.

(க.மி.)

AN OPEN LETTER ON TEMPLE ENTRY.

To

THE MEMBERS OF THE LEGISLATIVE ASSEMBLY AND COUNCIL, MADRAS.

Ladies & Gentlemen,

Once before I approached you with an appeal on a purely temporal concern. You turned it down choosing to rest your oars on the infallibility of your Prime [better known as Parable's] Minister. You now realise, I suppose, the folly and un wisdom of your choice. Out of two hundred crores of estimated burden on the land, the utmost that is claimed for the Agricultural Debt Relief Act is that about a couple of crores have been lifted; but at what cost? On the official rate of interest, it covers but a sixth of the accretion to the annual interest. And of these two crores, how much would have been witten off as unrealisable by the creditors themselves without the operation of the Act? But that is not all. Agricultural credit has departed from the land and sales have replaced mortgages. If only you had heeded to my appeal and considered my proposal to issue bonds—but then Dr. Pattabi Sitaramiah, who suffers from a constitutional incapacity to see anything wrong in a Congress Government and everything wrong in its critics, has stepped into the breach and now wants to raise a loan of forty crores? Surely, he knows that there are speculators enough in the financial world to underwrite the loan. Have you read the closing pages of Bernard Shaw's old play, 'The Press Cuttings? There the Orderly asks, 'Wot price me general? Wont you celebrate your engagement by the doin semethin for me? Maynt I be promoted to be a sergeant?' for which the General replies: 'You are too utterly incompetent to discharge the duties of a sergoant; You are only fit to be a Leieutenant. I shall recommend you for a commission. If men not duly qualified to be sergeants are holding by your suffrages the post of lieutenants in the hierarchy of Congress statesmen, you can have nothing better than Agricultural Debt Relief Act and the economic distress of the ryot cannot but sink him deeper and deeper in the mire.

Permit me to approach you as represent ing forty-five millions of human beings this time on a matter touching their conscience, and fundamentally affecting the freedom of religious beliefs and freedom of association for common worship, vouchsafed to us from time immemorial, preserved despite insufferable persecutions and guaranteed by the good Queen Victoria, now so shockingly outraged and traduced by Congress gangsters and unbelievers. All of us who have respect for tradition and usage, for the words of our Gurus and the commands of our religious heads, the memories of pious benefactors and the ordinance of our scriptures, must hang their heads in sheer shame, at least in private if not in the platform, that at the bidding of a handful of Brahmin betrayers the holy shrine of Sri Meenakshi should have been invaded, desecrated and defiled as part of a political game. My blood boiled in my veins when I read that the first shrine which was the object of impious wrath was that ancient shrine dedicated to the chief leiutenant of the Devi worship; and I wondered whether in the Kali age the ancient monsters, Sumbha and Nisumbha, reincarnated themselves in the bodies of Dr. Rajan's "divine man", Sri Rajagopalachariar, and his equally divine brother, the medico-saint, Dr. Rajan himself, to wreak their vengeance upon her. There is a singular malignity in the choice of a shrine held in holy reverence by the followers of the Siva cult as against their ancient foes, the followers of the Vishnu cult. It is no argument to say that some Vaishnavite temples have been subsequently dealt with equal irreligious zeal. It is enough that the first blow was aimed secretly, clandestinely and deceitfully under the acquiesence of the Vaishnavite head of the Congress Government and the Vaishnavite Minister in charge of Religious Endowments on a Saiva temple of ancient fame.

Ladies and gentlemen, we Hindus have been a conservative people in matters of our religious faiths and worship, till some of us fell under the glamour of Mr Gandhi, a Mahatma by courtesy and now by a G. O. in at least one Congress province. We have still our religious heads, the Saivites, the Vaishnavites, the Madhwas and all. Even in our excessive individualistic rationalism we hold in reverence the edicts of these Acharyas and look up to them for our spiritual salvation. If an innovation is to be made in time-honoured usages and customs in spiritual matters, one would naturally expect a lead to come from them; at least their approval would have been a matter of ordinary courtesy and decency. On the contrary, the considered verdict of the holy head of the Saivites, Sri Sankaracharya of Kamakotipeetam at Kumbakonam, is against the entry of the prohibited classes beyond certain prescribed places in the temples. Sri Sankaracharya's knowledge in Agamic lore would be admitted by you to be no less than that of Sri Rajagopalachari and Dr. Soundararajan; though his authority is avowedly less in breaking laws and polluting temples. Men of piety and learning, who are not professional politicians or pursuers of cheap popularity, hold opinions which may not be in accordance with those of the criminal lawyer who has found his vantage ground in office to enforce his heresies and of the doctor whose knife has failed to feel the human soul in the numerous operations he has held out in a composite society consisting of all shades of believers and unbelievers one is entitled to expect mutual respect and regard for honest differences of opinion; one does not expect except in a dark age the forcing of one's opinions on others at the point of the bayonet. You can do anything with a bayonet, said Cavour, except sit on on it. It is open to a political party in power, even as Nudism and Mormanism are prevalent in some parts of the civilised world, to declare that it shall be lawful for a brother to marry his sister; and it may be open to a Congress Government to ordain that no caste male shall enter any Hindu temple nor any caste female who is not in her monthly period. Temples may be reduced to be the haunts of only Karma and Jathi Chandalas; but if there are men who are opposed to these highly enlightened notions. I suppose the needs of democracy require that their conservative notions should be respected and their age-long traditions preserved.

But Gandhism is a creed definiely opposed to such tolernce. The great Mahatma would not rest in peace if the slightest wish of his is not respected and implicitly obeyed. And if his honoured *sambandhi* does not anticipate his wish and seek to fulfil it, who else will? The country is now afflictedby a two-fold curse, Gandhi and his liege the Congress, aclose corporation of Gandhiistes, even asthe tomb of Tukenhaman had its curse. Because the eldest born of the Mahatma has taken too fondly to spirituous liquors as he has to goat's milk, orange juice and Vichy water, the whole country must go dry; and his henchmen must at whatever sacrifice to the country give effect to immediate total prohibition. Because Mr. Gandhi wants to checkmate the efforts of missionaries to improve the economic condition of the scheduled castes, himself being too incompetent to do it, public mind must be diverted from the temporal to the spiritual plane. Some of you have been in the public life of the country even longer than Mr. Gandhi and his principal associates, and whoever has heard of a real yearning from the scheduled castes to make an in road into caste temples. In which aspect of the deity have they expressed a wish to worship? Have they or have they not been content with their own hereditary places of worship, their village deities to whom they give their offerings? If not, is there any difficulty felt in building temples setting up such dieties as they prefer and endowing them out of the opulence of Congress oratory? If I were in a less serious mood, I would suggest the setting up in every *Cheri* a temple for the Mahatma seated on the left and on the right by his two devout followers, Sri Rajagopalachari and Sri Rajan. They would form an excellent triad. And as the Hindu Gods are a little amorous and bigamous to boot, the Mahatma would also be supported by the unknown lady for whose companionship he developed a sudden longing in his seventieth year, both as an example and as a warning. The Mahatma's two lieutenants being widowers, there may be some difficulty in their case; but they can be easily persuaded to make the sacrifice of entering into companion marriages with Harijan ladies for the sole purpose of installation as divinities in the temples. I would further suggest that the images of the triads with their Upa-Devatas, the spiritualised members of the Harijan Sevak Sangh, may be made removable so that while camping near a *Cheri* they may instal themselves in place of the stone images and receive the offerings of a grateful body of worshippers direct. Of what avail to the prohibited classes the stone idols who have failed to protect themselves from the ravages of the faithless? The living gods can give them all temporal benefits? What know we of spiritual benefits accruing from idol worship in public temples?

That is the ugliest part which your official spokesmen are playing in the name of Dharma on people highly sensitive to any attack on their accepted religious conceptions. Nobody can say anything against the activities of these missionaries of reform if they succeeded even as their forefathers did by persuation and example. The great religious reformers in the past never invoked the aid of the State or the powers of the police to force their injunctions on the mass, but looked to the accumulation of their spiritual lore for the success of their efforts. The poverty of such spiritual gifts in their modern counterparts is now sought to be made good by the ephemeral influence of the vote and the power the vote has given for a purely temporal purpose in the high-sounding name 0f the purification of religion. Untoucability is entirely a socialproblem and it can be removed, as it slowly being removed by a growing consciousness among the scheduled class for a better life and among the caste Hindus for a life of less exclusiveness and greater tolerance. It is being removed in our official lives, in our schools and colleges, in our public places of business, trade and commerce. But it has as little to do with forcing the prohibited class into the temples erected for the exclusive spiritual use of the caste Hindus as forcing the orthodox Vaishnavites to worship in a Saiva temple. And if a Congress Government connives at such a practice it cannot be acquitted not only of deliberately violating the Dharma it pretens to uphold, but the customary law of the land it is bound in all conscience to vindicate. The task of respecting the laws of the State is indeed difficult to a party whose creed is violation of every law which does not appeal to the moral conscience of a Mahatma. Ever since the days of the Salt Satyagraha Congressmen have ceased to look upon law-breaking as a sin; and even to-day they profess to hold power only to 'break' the Government of India Act of 1935, which is still the law of the land. This temperamental weaknes, it was expected would be soberated by the responsibilities of office. There is a homely English proverb which says 'wash a dog and home a dog, it is still but a dog.' It is not surprising that your Ministers should have brought forward a bill to indemnify—what a prostitution of the world!—those who have deliberately broken the law in Madura and elsewhere. Any law of the land against which the Mahatmic inner voice raisers a cry can be safely defied in a Congress Government, which by the oath of office it has taken, it is bound to maintain and preserve unless repealed, and an Act of Indemnity for conscious wrong-doing will come to the succour of the offender with the help of a helpless Legislature and and an accommodating Governor or Viceroy.

I wonder, ladies and gentlemen, if Janus has any sense of humour. If some impassioned youths shout anti-Hindi slogans in some street-corner without in the slightest manner disturbing public peace or the quiet of ministerial parable-hunting, a considerate magistrate gives him six months' hard labour and the 'divine man' considers the Punishment not severe. If the ignorant rustic cannot easily go off his taste for fermented liquor as the Ministers do on their election pledges, he is punished with equal severity by the clerical magistrates upon whom the Prime Minister chiefly relies for the enforcement of statutory offences. But if the law of the land is violently broken by public servants and if they commit conjoint offences against religion and the Penal Code a suit or a prosecution cannot lie except with the sanction of the Provincial Government. Does the Prime Minister seriously think that it is not a device to put an embargo on them? Does he expect anybody to believe that a Provincial Government which has put into the mouth of the Governor the unfortunate expression—'vexatious suits'—when there is only a single suit and a single prosecution in respect of a matter which has stirred every ardent Hindu soul, will be impartial enough to accord the necessary sanction? If so, why not he exempt from the operation of the Act of Indemnity the pending cases in Madura? We have hitherto held on act of indemnity as proper and justfiable in the case of a public servant who has committed an error bona fide or caused an injury to avert serious injurien to the State Legislation of the kind you are now called upon to approve to screen deliberate offenders who have no justifiable ground for their violating the law is, I suppose, a new technique of legislative satyagraha as evolved by the Mahatma, since his ignominous rout in his contest with Darbar Viravalla, evolved for the benefit of your Ministers for the removal of a social evil. The less said about the 'good faith' of these transgressors of law and their accomplices, high and low, the better; there can be no good faith in a conscious and deliberate act done with due abvertance to the consequences.

Ladies and gentlemen, I am not a Sanatanist, though I have been described so by the "Mail"; I have been a humble social reformer for forty years. But my reforming zeal is not made to order to placate a Mahatma; nor can it yield to my religious principles. I believe, it may be wrongly, but certainly firmly, that all men are not equal in the eye of God—the God who made a water-carrier an Amir of Afghaniston in our own life-time, has made a Rajagopalachary a Prime Minister, a Dr. Rajan his chief lieutenant, and the rest of us "bugs" and "musquitoes". But I believe even more strongly that our ancients who wrote the shastras and organised the rituals are greater men than the religious reformers of to-day the little water-carriers of the Congress — and they said rightly that certain spirtuial influence s

(Continued on 3 Page).

ஆலயப்பிரவேசத்துக்கு எங்கும் ஆதரவு

நாடெங்கும் நடந்த கூட்டங்களின் நடவடிக்கை விபரம்

மிஸ் மேயோவிடம் நடுக்கமா?

ஸ்ரீ. ஆர். பேச்சுக் கண்டனம்
குடந்தையில் கூட்டம்

இந்த மாகாண பிரதம மந்திரியான ஸ்ரீமான் C. R. கோயமுத்தூர் ஜில்லா மேயோ மஹாஜனங்களின் மகஜரைப் பற்றிக் குறை சொல்லியும் வேறு பலவும் பேசியுள்ள உண்மையற்ற விஷயங்களைக் கண்டிப்பதற்காக ஆகஸ்ட்-மீ 23உ மாலை 7மணிக்கு குடந்தை டபீர் தெருவில் ஆஸ்திக ஹிந்துக்களின் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. ஏகப் பொது ஜனங்கள் ஏராளமாக வந்திருந்தனர்.

தர்மிக ஹிந்து, பக்தாக்ரேசரான ஸ்ரீமான் டி. கே. ஜகன்னாதாசாரியர் கூட்டத்தில் கலைமை வஹித்த காங்கிரஸ் சர்க்காரின்போக்கைக் கண்டித்து, நமது தர்மத்தை ரக்ஷிக்க வேண்டிய தவச்யமென்று கூறினர்.

அக்நிஹோத்ரம் ஸ்ரீதாதாசாரிய ஸ்வாமிகள் பேசுகையில், ஹிந்து மதத்திற்கு அடிப்படையான பிரமாணங்களாகிய, சுருதி, ஆகமம், ஸ்மிருதி, முதலியவைகளின் மஹிமையைக்கூறி, அவைகளின் கட்டளைப்படியே ஆஸ்திக ஹிந்துக்கள் நடக்க வேண்டுமென்றும், தாங்தோன்றியாக தர்மத்தைப்பற்றிப் பேசக்கூடாதென்றும் வைதிக மதத்தில், "எனது அபிப்பிராயம்" என்று எதையும் பேசக்கூடாதென்றும், தேவஸ்தானங்களில் சண்டாளர்கள் நுழைவதால் ஸாங்கித்யம் போய்விடுமென்று ஆகமங்கள் கூறுவதையும் பல தத்வங்களை நிரூபணம் செய்து பேசினர்.

பிறகு ஸ்ரீ கோபாலதேசிகாசாரியர் பேசுகையில் கோயமுத்தூரில் ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் பேசிய ஒவ்வொன்றையும் எடுத்து பலமாகக்கண்டித்தார். முக்யமாக மிஸ் மேயோவை ஞாபகப்படுத்தி அவளுடைய பரிஹாஸத்திற்கு அஞ்சி ஹிந்து மதத்தைச் சீர்திருத்தவேண்டுமென்ற பிரதம மந்திரியின் புத்திப் பேச்சையும், விஷப்பாம்பு உவமையும் பரிஹஸித்துப்பேசினர்.

தலைவரின் முடிவுரைக்குப்பின் ஸ்ரீ ராகவாசாரியார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது.

சென்னை ஓர் கண்டனக் கூட்டம்

சென்னை அமாகலா விலாஸினீ ஸபை, வைதிக வைகஸ ஸபை மத்ரப் ரார்த்ய ப்ரமாண ஸபை இவைகளினுதாவில் 2உ ஸ்ரீமடத்தில் ஓர் கூட்டம் கூடிற்று. ஸ்ரீயுத திருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் தலைமை வஹித்தார். பிரும ஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் ராஜாஜி ஓர் ஹிட்லர். அவரது ஆஸி மிகக் கோரமான அக்ரமமான ஆஸி! அதர்மமான ஆஸி! பேலீஸார் நமது தலைவரை அடித்தது, தொண்டரை ஹிம்ஸித்தது. இவர்களே மாத்மல்லி தர்மத்தையே அடித்ததாகும். இந்த அடி ஒவ்வோர் ஹிந்துவின் மேலும் படும். அடிதடியால் ஸ்தாபனத்தால் எத்தனை நாள் அக்ரமம் செய்ய முடியும்? ஹிரண்யன் ப்ரஹ்லாதனை அடித்தான். ஹரி மித்தான். முடிவில் தர்மமே ஜயித்தது! அடிக்கு ரமஞ்சலாகாது!

ஸரை சத்மகம் தடிக்கிறது! பல பக்தர் கண்ணீர் விட்டனர். அர்த்தமில்லாத அதிகார மதத்தால் நிமிர்கொண்டு பேசும் பேச்சு பயன்படாது! காங்ரெஸை அழிக்கவே ஸரதக்களை நிமிஷிக்கிறார்

இதனுடன் சேர்ந்த வெள்ளையரும் அதர்மத்திலிறங்குவது அரிது! என அழுத்தமாகக் கண்டித்துப் பேசினர். மற்றும் பல பண்டிதர் பேச வைச்ராயுக்கு அந்த சட்டத்திற்கு சம்மதி அளிக்காதிருக்க தந்தி கொடுக்கப்பட்டது.

ஏண்பது வயதிற்கு மேலான அதிகவல் பாள் ஸ்ரீமான் ஸ்ரீ காரயணஜ்வர ஐவர்கள் இதைக் கேட்டு மனக்தாளமல் ப்ரயோப வேசம் செய்து உடலே விடுவதாகக் கூறினர்கள். இதைக் கண்ட ஸிஷ்யர்கள் அவரை வணங்கி வேண்டாமென்று தடுக்க ஸுமார் மண்ய யந்தம் பேரட்டு இந்த அதர்மம் அழியும் படிப்ரார்தனம் 12 ஆயிரம் ஜபம் செய்கிறார்கள். (மது நிருபர்.)

ஸ்ரீ வில்லிப்புத்தூர் "ஸ்ரீர்கள் வத்யாக்ரஹம்"

21-8-39ல் ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் கோயிலின் முன்பாக 300 ஸ்திரீகள் மேல் கூடி ஸ்தலத்திலுள்ள பக்தர்களையும் கோயிலுக்குள் சென்று தரிசனம் செய்ய அனுமதிக்க மறுத்தச் சத்யாக்ரஹம் செய்தார்கள். சில வைஷ்ணவப்பெரியோர்களும் இக்கூட்டத்தில் இருந்தார்கள்.

ஸ்ரீ ஆண்டாள் கோயிலின் நிர்வாக அதிகாரி ஆலயத்தின் நகைகளைப் பரிவையிடப் போவதாகச் சிப்பந்திகளுக்கு அறிவித் திருந்ததாகத் தெரிகிறது. மந்திரி கனம் லி. ஜே. வார்க்கி நிறுத்திய மிஷன் ஸ்கூல் கினத்துக்குத் தலைமை வஹிக்க வந்திருந்தார். அவருக்கு ஆலய நிர்வாக அதிகாரிகள் வழக்கமான கோயில் மரியாதைகள் செய்தனர். மதுரை ஸ்ரீ மீனாக்ஷி கோயில் நிர்வாக அதிகாரி ஸ்ரீ ஆண்டாள் கோயில் நிர்வாக அதிகாரிக்கு வேத பாராயண கோஷ்டியை அனுப்பும்படி கேட்டிருந்தார். அதன்படி கோஷ்டி அனுப்பப்பட்டது இதன் காரணமாக ஸ்ரீ வில்லிபுத்தூர் வைதிக பிரிவாரிடையே சந்தேகமும் பயமும் ஏற்பட்டது.

கோயில் நகைகளைப் பார்வையிடுவதைச் சொல்லிக் கொண்டு ஹரிஜனங்களைக் கோயிலுக்குள் அழைத்து வரும்வரை அதிகாரி முன்கிருப்பதாக வைதீகர்கள் கருதினர்கள். ஆகவே மந்திரியுட்பட எல்லோரையும் ஆலயத்துள் விடாமல் தடுக்கக்கருதி முதல் கோயில் வாசலில் ஆலயப் பிரவேசத்தை எதிர்ப்பவர்கள் தீவிர உட்கார்க்கொண்டார்கள். ஸ்திரீகள் சத்தியாக்கிரஹஞ் செய்வதைப் பலர் பார்த்தார்கள். இம்மாதிரி தடை செய்யப்படுவதைக் கண்ட நிர்வாக அதிகாரி கூட்டத்தைக் கலைக்கப் போலீஸ் உதவியை நாடினர். ஸ்திரீகள் இரவு 11-மணிக்குக் கலைந்து போனார்கள். ஹரிஜனங்கள் கோயிலில் போகாமல் பார்த்துக் கொள்ள தினசரி கோயிலைப் பாதுகாக்க ஸ்திரிகள் முடிவு செய்துவிட்டார்கள். (கு. நி.)

சிவாச்சாரியார் பட்டாச்சாரியார்களின் ஆலயப்பிரவேசக் கண்டனக்கூட்டம்

28—8—39 பரபனைசம தாலுக்கா வருணபுரி க்ஷேத்ரத்தில் பகல் 2 மணிக்கு ஓர் கூட்டம் கூடைபெற்றது. அதேக சிவாச்சாரியார்கள் அதேக ஆஸ்திகர்களும் விஜயம் செய்தனர். இந்த தாலுக்கா திருக்கருகாவூர் ஸாதனத்தலிவராகிய பிரும்மஸ்ரீ டி. எல். சுப்பையர் அக்ராஸனம் வஹித்தார். வருணபுரி க்ஷேத்ர கிராம மானேஜரும் ஆலய மானேஜரும் பொண்ணய்யபாவிசாரியாரும் மாலிபோட்டு ஜய கோஷத்துடன் வரவேற்றனர். ஸ்ரீ டி. எல். சுப்பையர் வர்ணாச்ரம தர்மாசாரங்களை சாஸ்திர பிரமாணமாக சொற்பவும் ஊருக்காக வர்ணித்து ஆலய அர்ச்சகர்களே ஆலயங்களில் சாஸ்திர விருத்தம் ஏற்படாமலும் பிரார்த்தித்து ஆராய்ந்துபடியாகவும் ஆலய பிரவேசச்சட்டத்தை ஆத்திரத்துடன் கண்டித்தும் விரிவாகப் பேசிமுடித்தார். பிறகு மிட்டூர் கிருஷ்ணமூர்த்தி சிவாச்சாரியார் பேசுகையில், ஆகம சாஸ்திர பிரமாணங்களை விவரித்து ஆலயங்களில் இன்ன ஜாதியார் இத பரியந்தம்தான் வரலாம் என்றும் பஞ்சமர்களுக்கு கோபுர தரிசனமும் ரதோத்ஸவ தரிசனமும்தான் சாஸ்திர ரீதியாக ஏற்பட்டது என்றும் பேசி முடித்தார். பிறகு திருப்பத்தூர்தி கோபால பட்டாசாரியார் வைகாநஸ ஆகம சாஸ்திரத்தை விவரித்தும் சாஸ்திர பிரமாணங்களை நம்பவேண்டியதே அவஸ்யம் என்றும் புராதன சாஸ்திரப்படி இயற்றிய ஆலயங்களை நம்புபோது புராதன சாஸ்திரத்தையும் நம்ப வேண்டியது அவஸ்யம் என்றும் புதிய வழக்கம் தவறு என்றும் பேசி முடித்தார்.

ஸ்ரீ வெங்கடாசலம் பிள்ளை அதிகாரவன்மையும் ஆலயப்புகுத்தலும் அநீதம் என்றும் கண்டித்துப் பேசினர். கடைசியாக மதுரை ராவ்ஸாஹிப் ஸ்ரீமான் என். நடேசய்யர் ஸ்ரீ கே. ஆர். வெங்கட்ராமய்யர் ஸ்ரீமான் பிளாதலுவு முதலியவர்களைப் பாராட்டியும் ஆலயப்பிரவேசத் தொடரு தொழிச்சட்டத்தைக் கண்டித்துப் பேசப்பட்டது. வந்தனபேனசாரத்துடன் மாலை 6 மணிக்கு கூட்டம் கலைந்தது. (ஒ. நி.)

ஸ்ரீ ராம பட்டாபிஷேக மஹோத்ஸவப் பத்திரிகை.

நிகழும் பிரமாதி ஆவணி மீ 25உ (10—9—39) ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு பிரஹ்மஸ்ரீ கோவில் பிரும்மஸ்ரீ கோபால பாகவதர் அவர்களால் நடத்தி வரும் ஸ்ரீமத் ராமாயண லீரியலில் கடைசி 25-வது பாகம். ஸ்ரீ ராம பட்டாபிஷேகம். என்னும் சரித்திரத்தை நடத்த ஸ்ரீ ராகவ ஸிருலபயை முன்னிட்டு நிச்சயித்திருப்பதால் சகல பக்தர்களும் தவறாமல் விஜயம் செய்து ஸ்ரீ பாகவதர்களுக்கும் தங்கள் தங்களாலியன்றவரை பொருளுதவியும் செய்து ஸ்ரீராமப் பிரசாதமடைய வேணுமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

N. B. 9-9-39 சனிக்கிழமை பரதவாஜாச்ரமகமனம்.

10-9-39 ஞாயறு. ஸ்ரீராம பட்டாபிஷேகம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-வரு ஆவணி-மீ 22உ

வைஸ்ராயின் தவறு.

சென்னை ஆலயப்பிரவேசப் பாதுகாப்பு மசோதாவுக்கு கனம் வைஸ்ராய் அவர்கள் ஸம்மதியளித்து விட்டதைபற்றித் கேடிக் கணக்கான ஆஸ்திக ஹிந்துக்கள் வருத்துவார்கள். சென்னையிலுள்ள இரண்டு சட்டசபைகளில் நிறைவேறியதும், காங்கிரஸ் மந்திரிகளின் பயமுறுத்தலுடன் கூடியதும், காந்திஜியின் அநுக்ரஹத்துடன் கூடியதுமான அந்த மசோதாவுக்கு வைஸ்ராய் அங்கோமனிக்காமல் மறுத்து விடுவரென்று எண்ணி ஒருவரும் ஏமாந்து விடவில்லை. ஆலயப்பிரவேச அவசரச்சட்டத்திற்கு அவர் அநுமதியளித்தவல்லவர்? ஆயினும் இந்திய பிரஜைகளின் உரிமையை காப்பவரான ராஜப்பிரதிநிதி என்ற முறையில் அவர் தமது கடமையைச் செலுத்தி ஏதாவது நியாயம் வழங்க மாட்டாராவென்றே ஆஸ்திக ஹிந்து ஜனங்கள் அவரிடம் முறையிட்டுக் கொண்டார்கள். பொருளாதாரப் புரட்சிகரமான கடன் நிவாரண மசோதா போன்றவைகளுக்கு அவர் ஸம்மதியளித்திருகையில் இந்த மதப் புரட்சி மசோதாவுக்கும். அந்த கதியே ஏற்படுமென்பதை நாம் எதிர்பார்த்ததே. கனம் வைஸ்ராய் அவர்களின் மனஸ்ஸாக்ஷியானது இந்த மசோதாவை ஒப்புக் கொள்ளாததாயிருப்பினும், பெரிய ராஜீய தெருக்கடிகளுக்குப் பயந்து அவர் இப்படி நடக்கவேண்டி வந்ததுபோலும்! வைஸ்ராய் அங்கீகாரமளிக்க மறுத்தால் ராஜாஜி சர்க்காரை செல்வதாகப் பயமுறுத்தவார். காந்திஜி அதை ஆதரிப்பார். மாகாண சுய ஆஸ்திநிதி அதை ஆதரிப்பார். மாகாண சுய ஆஸ்தியை கன்ற நடத்திக் சேர்த்திபெற விரும்பி காங்கிரலுக்கு அநேக உறுதிமொழிகளை அளித்துள்ள வைஸ்ராய் இந்த விஷயத்தில் தெருக்கடியை உண்டுபண்ணிக் கொள்ள விரும்பாதது ஸஹஜமேயாகும். ஆயினும் அவர் காங்கிரஸுக்குப் பயந்து பிரஜைகளின் நியாயமான உரிமைகளையும், இந்திய கவர்மெண்டாரின் கொள்கையையும் விட்டுக் கொடுத்து விட்டது அசோபகரமானது.

மாகாணவய ஆஸ்தியில் மத விஷயமாகச் சரியான பாதுகாப்பு இல்லாகையால் இந்திய கவர்மெண்டார் இதில் சிரத்தை யெடுத்துக்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டியது அவசியமில்லையா? விக்டோரியா மஹாராணியாரின் உறுதிமொழியைக் காப்பாற்றவேண்டியது அவருடைய கடமையல்லவா? கடைசி அடைக்கலமாகக் கருதப்படும் வைஸ்ராய் அவர்களே இதில் உதாஸீனம் வஹித்தால், மேலே உள்ளவர்கள் செய்யும் அநீதிக்குப் பரிஹாரம் கிடைப்பதெப்படி? இத்தகைய நிர்கதியான நிலைமையில் பிரஜைகளை விட்டுவைப்பது தர்மமா?

மேலும் ஆலயப்பிரவேச விஷயமாக இந்திய கவர்ன்மென்டார் ஏற்கனவே கொண்டிருக்கும் உறுதியான கொள்கையையும் கனம் வைஸ்ராய் விட்டுக்கொடுத்து விட்டார் இதுவும் வருத்தக்கூடியது 1934-ம-ஜூ ஆகஸ்ட் மாதம் 23உ யன்று இந்திய சட்ட சபையில் ரங்கய்யர் ஆலயப்பிரவேச மசோதாவை எதிர்த்துப் பேசியபோது ஹோம் மெம்பர் கனம் ஸர்ஹென்ரிஹெய்க் இந்திய கவர்ன்மெண்டின் அபிப்பிராயத்தைப் பற்றிக்கூறியதாவது :—

"ஆலயப்பிரவேச மசோதா விஷயமாக கவர்ன்மெண்டார், நிச்சயமற்றதாகவோ, தயக்கமாகவோ உள்ள மனோபாவத்தைக்கொண்டிருக்கவில்லை..... இப்போது கிடைத்துள்ள அபிப்பிராயங்களில் பெரும்பான்மையானவை மசோதாவை எதிர்ப்பதாகவே இருக்கிறது..... ஸர்க்கார் தங்கள் பிரஜைகளுக்குச் செய்யவேண்டிய கடமையை உத்தேசித்து இந்த மசோதாவை எதிர்க்க நிச்சயம் செய்திருக்கிறார்கள். ஆழ்ந்த கொள்கைகளை முன்னிட்டே எதிர்க்க முன் வந்தோம் தீண்டாதார் கோவிலில் நுழையலாமா, கூடாதா என்பதை அந்தந்த இடத்திலுள்ள ஜனங்கள் மட்டும் முடிவு செய்யக்கூடாது.

இந்த மசோதாவினால் தனிப்பட்ட சபர் உரிமைகள் வெகுவாக பாதிக்கப்படும். கோவில்களுக்கு மான்யம் விட்டவர்களின் மனஸாக்குப்பிடிக்காதது. மிக்க ஜனநாயக தன்மை வாய்ந்தாத கவர்மெண்டிலும், ஜனங்களின் சொத்து உரிமைகளையும், மனே உணர்ச்சிகளையும்இப்படி அலட்சியம் செய்யமுடியாது.

இம்மாதிரியும், வேறு வழியிலும் இந்திய கவர்ண்மெண்டர் தெளிவாயும், உறுதியாயும் தங்களுடைய எதிர்ப்புக் கொள்கையை வெளியிட்டிருக்கிறார்கள், அதை இப்போது புறக்கணிக்க என்ன ஸ்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது? மாகாண ஜனங்களின் மனபோக்கு மாறி விட்டதாக கனம் வைஸ்ராய் அறிந்து கொண்டாரா? அப்படியின்றி காங்கிரஸ் மந்திரிகள் கூறும் உண்மையற்ற தகவல்களை ஆதாரமாகக் கொண்டு பிரஜைகளின் மதஸ்வதந்திரத்தை அலக்ஷ்யம் செய்வது நியாயமாயில்லை.

இச்சமயம் ஆஸ்திக்கள் மனச் சோர்வு அடையாமல் தங்கள் பிரசாரத்தை தீவிரமாக நடத்தவேண்டும். இந்திய கவர்மெண்டார், அவ்வப்போது நடக்கும் மாகாண கவர்ன்மெண்டுகளின் நிருப்தி செய்ய விரும்பி நடப்பது சாதாரண விஷயம். காலம் மாறும் போது இவ்விஷயத்திலும் மாறுதல் ஏற்பட்டகூடும், ஆதலால் இடையில் ஏற்படும் விக்ன்களைக் கவனியாது நமது லக்ஷ்யத்தை நோக்கி நடத்துவது அவஸ்யமாகும்.

எலெக்ஷன் முடிவும் வி. ஆர். போலி நியாயமும்

(நமது ராஜீய நிருபர்).

தென்னற்காடு ஜில்லா எலெக்ஷனில் காங்கிரஸ் அபேக்ஷகர் வெற்றியடைந்ததைக் குறித்து கனம் ப்ரதம மந்திரி அவர்கள் ஸமாக ஓர் அறிக்கையை வெளிட்டுத் தமது குதர்க்கத்தை நிலை நிறுத்த முயற்சிக்கிறார். இந்த எலெக்ஷனில் 618 பேர் வோட்டு போட்டிருக்கிறார்கள், இதில் 303 ஒட்டுக்கள் மட்டுமே காங்கிரஸுக்குக் கிடைத்திருக்கிறது. பாக்கி 315 வோட்டுகள் காங்கிரஸுக்கு எதிரான கக்ஷிகளுக்குக் கிடைத்திருக்கின்றன. இதிலிருந்து வோட்டர்களில் பெரும்பாலானவர்கள் காங்கிரஸை ஆதரிக்கவில்லை யென்பது விசதமாகிறது காங்கிரஸ் அபேக்ஷகர் சட்டப்படி சட்ட சபையில் உட்கார அதிகாரம் பெற்று விட்டதாகக்கூறலாமாயினும் ஜனாதிக முறைப்படி அவர் பெரும்பாலான வோட்டர்களின் ப்ரதிநிதியாகமாட்டார். 303 பேர்களுக்கே அவர் ப்ரதிநிதியாவர், இந்த நிலைமையில் காங்கிரஸ் பெருமையடித்துக்கொள்ள எவ்விதநியாயமுமில்லை, மாற்றுக்கு மாறு வோட்டர்கள் தங்களை ஆதரிப்பதாக ஏற்கனவே எலெக்ஷன்களில் பேசி வந்த காங்கிரஸ், இந்த எலெக்ஷனில் 100-க்கு 50 வீதம் ஓட்டைபெறவேண்டியதற்கே பகீத ப்ரயத்னம் செய்து திண்டாட நேரிட்டதை காங்கிரஸ் தலைவர்கள் கவனிக்கவேண்டாமா? காங்கிரஸ்காரர் தங்களுக்கே ஏகதேச உரிமையாக பாவித்து வந்த எலெக்ஷன் விஷயத்தில் மற்ற கக்ஷியாரும் புகுந்து நிலைமையை மாற்றியதும், பொதுஜன அபிப்பிராயத்தைக் கூடியவரையில் திருப்பியதும், இந்த எலெக்ஷனில் முக்கிய விஷயம். மந்திரிகள் முதல், ராமாதிகாரிகள் வரையில் எல்லா சக்திகளும் வேலை செய்தும்கூட காங்கிரஸுக்கு, வோட்டர்களின் மெஜாரிடி அபிப்பிராயம் கிடைக்கவில்லை. இந்தப் பெரிய ஜனத்தை உணர்ந்த கனம் ப்ரதம மந்திரி உடனே ஆதரவு செய்துகொள்ள அறிக்கை வெளியிடுகிறார். இந்த எலெக்ஷனில் தாம் முக்யப் ப்ரச்னையாகக் குறிப்பிட்ட ஆலயப் ப்ரவேசம் போன்ற கொள்கைகளே தேசம் ஆதரிப்பதாக வெளியாகிவிட்டதென்று அவர் பறைடிக்கிறார். காங்கிரஸ் தூதர்களும் இதை வைத்துக்கொண்டு தள்ளிக் கூத்தாடுவார்களென்பது தெரிந்த விஷயமே ஆயினும் பொதுஜனங்கள் இதில் ஏமாறக் கூடாது. காங்கிரஸுக்கு வோட்போட்டவர்கள் 303 பேர்தான். அது ஏதோ ஒரு ஜில்லா வைப்பற்றிய முடிவு. இந்திய முழுவதும், அல்லது சென்னைமாகாணம் முழுவதுமுள்ள கோடிக்கணக்கான ஹிந்துக்களுக்கு இந்த 303 பேர்கள்தான் ப்ரதிநிதிகளா? இந்த 300 பேர்களுடைய ஆதாவை வைத்துக்கொண்டு பெரிய மதப்புரட்சி செய்யத் தமக்கு அதிகாரமேற்பட்டுவிட்டதாகக் கூறுவது பாமர்களை ஏமாற்றுவதேயாகும். ராஜீய அறிவுள்ளவர்கள் இதை ஏற்கமாட்டார்கள்.

மேலும் இதை எலெக்ஷன் முடிவைக்கொண்டு ஆலயப்பிரவேச விஷயத்தில் ஜனஅபிப்பிராய நிர்ணயம் ஏற்பட்டுவிட்டதாக நிர்ணக்கக்கூடாதென்று கனம் ஆசாரியரே ஒப்புக்கொண்டிருக்கிறார். ஸெப்டம்பர் 3உ யன்று சென்னை கோகலே ஹாலில் கனம் ப்ரதம மந்திரி இவ்விஷயமாகக்கூறி பிரப்பதைமத்யன்தர்கள் இச்சமயம் கவனிக்கவேண்டியதவசியம்.

"இந்த எலெக்ஷனில் காங்கிரஸ் தோற்றாலும் கூட ஆலயப்பிரவேச விஷயத்தின் நியாயம் போய்விடாது. மதவிலக்கு வேண்டாமென்ற ஒரு அபேக்ஷகர் ஒரு எலெக்ஷனில் வெற்றியடைந்தால் அதனால் மதவிலக்கின் நியாயம் குறைந்து விடாது"

என்று பேசியிருக்கிறார். ஆகையால் எலெக்ஷன் மூலம் வெளியாகும் பொது ஜன அபிப்பிராயம் முடிவானதல்லவென்று தெளிவாக

கூறுகிறார். இப்போது காங்கிரஸ் தோல்வியடைந்திருந்தால் இக்கக்கூலியையே அவர் பேசியிருப்பாரல்லவா?

அப்படியிருக்க இப்போது எலெக்ஷன் முடிவு மூலம் ஆலயப்பிரவேச ஆதரவு கிடைத்து விட்டதாகக் கூறுவது முன்பின் விரோதமாயிருக்கிறது, ஜயித்தால் ஒரு நியாயம், தோற்றால் ஒரு நியாயமா? ஆகையால் ப்ரதம மந்திரியின் கூற்றுப்படியே இந்த எலெக்ஷனில் ஆலயப்பிரவேச ஆதரவு கிடைத்து விட்டதாகக் கூற முடியாது.

ஒரு தொகுதியில் வெகு சிறிய ஸங்கியுள்ள வோட்டர்களின் முடிவைக்கொண்டு பெரிய ப்ரச்னைகளில் முடிவு கூறுவது ராஜீய அறிவாளிகள் ஏற்கக் கூடியதல்ல. சென்ற எலெக்ஷனில் காங்கிரஸ் சில தொகுதிகளில் தோல்வியடைந்தது, இதைக் கொண்டு தேசம் காங்கிரஸை ஆதரிக்கவில்லை யென்பதனம் மந்திரி முடிவுகூறத் தயாராயிருப்பாரா? சென்ன கார்ப்பரேஷன் எலெக்ஷனில் காங்கிரஸ் பல இடங்களில் தோல்வியடையவில்லையா? அதைக்கொண்டு ஜனங்கள் காங்கிரஸை ஆதரிக்கவில்லை யென்று ஏற்படுமானால் மந்திரிகள் ஏன் ராஜிகமா செய்யவில்லை?

இந்த எலெக்ஷனில் ஆஸ்திக்களின் சார்பாக நின்ற அபேக்ஷகர் வெற்றியடையாதற்கு இயற்கையான பலகாரணங்கள் உண்டு அவர்களுக்கு ப்ரசார பலம் மிகக் குறைவு கற்ற ஸர்க்கார் ஊழியர்களும், ஜில்லா போர்டு தலைவர்கள் போன்றவர்களும் ஓட்டர்களிடம் தங்கள் செல்வாக்கை உபயோகித்திருக்கிறார்கள். ஒரு கக்ஷியானது ஸர்க்கார் அதிகாரப்பதவியிலிருக்கும் போது அதை எலெக்ஷனில் வெல்லுவது ஸாமான்ய ப்ரஜை யென்ற ஹோதாவில் எலெக்ஷன் கடந்தினல் அப்போது ஜனங்கள் பயமின்றியும், தாக்ஷண்யமின்றியும் வோட் கதந்தரத்தை உபயோகிப்பார்கள். ஜஸ்டிஸ் கக்ஷி நிர்வாக காலத்தில், ஜில்லா போர்ட், முனிஸிபாலிடி சட்ட ஸபை முதலிய ஸபைகளில் கங்கிரஸ்காரர் தலைகாட்ட முடியவில்லை, எங்கும் அவர்களுக்கு தோல்வியே ஏற்பட்டு வந்தது. தங்களுடைய அதிகாரச் செருக்கை உபயோகித்து வந்தவர் வெற்றி பெருவதை காங்கிரஸ்காரர்கள் அப்போது குறை சொன்னார்கள். இப்போதோ வேறு மாதிரியாகப் பேசுகிறார்கள்.

மேலும் பெரிய பத்திரிகைகள் காங்கிரஸை ஆதரிக்கும்படி தூண்டின. ஜஸ்டிஸ் ஆதிக்கம் வந்துவிடுமென்று ஸ்ரீ ஸ்யமூர்த்தி பயமுறுத்தினர். ஸைகிளில் ஜஸ்டிஸுடன் சேர்ந்த விட்டதாகப் பழி கூறப்பட்டது. மேலும் செட்டியார், ப்ரம்மணர் போன்ற வகுப்புவாத முறையில் வோட்டுப்போட்டிருந்தாலும் காங்கிரஸ் வெற்றி யேற்படுமென்று ஸாதாரண ஜனங்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆயினும் ஜனங்களுடைய புத்திப் போக்கை மாற்றி, காங்கிரஸின் ஆதிக்கமே அவர்கள் உணரச்செய்யவேண்டும் என்பதே ஆஸ்திக்களின் நோக்கம். அது பெரும்பாலும் நிறைவேறியிருக்கிறது இன்று காங்கிரஸ்காரர்களுக்கும் பாதி ஜோரு குறைந்து விட்டது. அடுத்த எலெக்ஷனில் அது இன்னும் குறைந்து படிப்படியாக அவர்கள் பெரும் தோல்வியடையும் காலம் வரும்.

மாயவரத்தில் கண்டனக் கூட்டம்

ராவ்ஸாஹிப் ஸ்ரீ நடேசய்யர் வி ஜயம்.

5உ செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு மாயவரத்தைக் சேர்ந்த திருவழுந்தூர் கோவில் வாசலில் ஆஸ்திக்களின் கூட்டமொன்று ஆலயப்பிரவேசத்தைக் கண்டிக்க கூடியது. பொதுஜனங்கள் ஏராளமாகக் கூடியிருந்ததுடன் அநேக ப்ரமுகர்களும் வந்திருந்தனர்.

ஸ்ரீமான் ராவ்ஸாஹிப் ரத்னம்பிள்ளையவர்களைத் தலைமை வஹிக்கும்படி ஸ்ரீமான் ஸுப்ரமண்ய அய்யர் ப்ரேரேபிக்க, குன்னம ஸ்ரீ ஸுப்ரமண்யர் அமோதிக்க ஸ்ரீமான் பிள்ளையவர்கள் தலைமை தாங்கி காங்கிரஸ்காரின் ஆலயப்பிரவேசக் கொள்கையைப் பலமாகக் கண்டித்துப் பேசினார். பிறகு மதுரை ராவ்ஸாஹிப், ப்ரம்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்கள் மதுரை ஸம்பவங்களைப்பற்றி விபரமாகக்கூற யாவரும் ஸத்யாக்ரஹத்திற்குத் தயாராக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார் (அந்த ப்ரஸங்கத்திலுள்ள பல விசேஷங்களைத் தனியாக ப்ரசுரிப்போம்.)

பிறகு, மஹாமஹோபாத்யாய, வித்வத் கவி, ஸ்ரீ கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி பேசுகையில் காங்கிக்கு ஸஸ்கிருத பாஷையோ, மதமோ தெரியாதென்பதைப் பற்றி கும்பகோணத்தில் சில வருஷங்களுக்கு முன் நடந்த சர்ச்சையைக் குறிப்பிட்டுப் பேசினார்.

ஸ்ரீமான் அக்னிஹோத்ரம். ராமாஜுல தாதாசரியர் ஸ்ரீமான் பூங்காவூர் வெங்கிட ராமய்யர் ஆகியவர்கள் பிறகு பேசினார்கள்.

தீர்வரின் முடிவுரைக்குப் பிறகு வந்தேஸாரத்துடன் கூட்டம் கலைந்தது.

கூட்டம் ஆரம்பிக்குமுன், மந்திரி கனம் டாக்டர் ராஜன் அவிடம் வந்து கோவிலில் ஸ்வாமி தர்சனம் செய்து விட்டு ஆலயப் ப்ரவேச விஷயமாகவர் நிலைமையை தெரிந்து சென்றார்.

WEEK BY WEEK.

C.R, would turn Sanatanists-topsyturvy If he knew Sanskrit Speaking and Sanskrit Association of Pachayappas College on 22—8—39, Premier C. Rajagopalachariar says:—

* * *

"If he had been as good a Sanskrit scholar as the Sanatanists were he could have turned Sanatanists topsyturvy, as he was not. he could not fight them in their own ground, and they were at an advantage."

(*Mail Report.*)

* * *

"Had he only been a Sanskrit scholar he might have been able to turn all Sanatanists topsyturvy, (laughter) but now the Sanatanists had the advantage."

(*"Hindu report."*)

* * *

"Rigorous" Congress law :

"The Congress law is in no way less rigorous than the law of any State."

(*Dr. Pattabi at Chittoor, 24th Aug.*)

* * *

Congress, sole Custodian :

"As the Congress was the custodian of labour interests, it could not agree to allow the claims of others to be regarded as champions of Labour."

Resolution of Premiers, Poona, 26th Aug

* * *

Voting by Faith :

"During the last elections the people voted for the Congress on account of faith. During the next elections, they (Congress) cannot expect the same amount of faith among the people."

Minister Varkey, at Ambasamudram, on 24th Aug.

* * *

Temple Entry to Implement Wardha Scheme :

"Temple Entry was not so much a religious revolution as a social revolution. This social revolution was aimed at by the Wardha Scheme, in that the latter wanted to teach all castes and communities through a basic craft."

Min. Varkey, Ambasamudram, 24th Aug.

* * *

Right to Free Life :

Lord Halifax said in the Lords (Aug. 24,) "The life of nations depends upon mutual respect for one another's rights and reasonable confidence that *they can each live their life in their own way*, provided they do not interfere with their neighbours' right to do the same."

It is precisely this 'free life' which the Congress Governments are denying to the several communities of India.

* * *

The Most Hated Man :

The Madras Premier said at Poona on Aug. 27, "He was the most hated man in Southern India to-day.

ஸ்ரீ தர்மஸம்வர்த்தினி ப்ராம்மண ஸபா பெரியகுளம்

1938ஜூன்மத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்ட மேற்படி ஸபையினது வருஷாந்திர கொண்டாட்டம் ஸ்ரவணநின்று தன்று (29—8—39) தற்காலம் ஸபையிருக்கிற கட்டடத்தில் கடைபெற்றது. அகேகம் ப்ராம்மணர்கள் விஜயம் செய்திருந்தார்கள். பகவத்ப்ரார்த்தனம் சொன்னவுடன் ஸ்ரீ காகபூஷணய்யரவர்கள் (கார்யதரிசி) வருஷாந்திர ரிபோர்ட்டையும் வரவு செலவுகணக்கையும் விபரமாகப் படித்துக் காட்டினார். ரிபோர்ட்டுக்கள் மெம்பர்களால் அங்கீகாரம் செய்யப்பட்டது. சந்தாவருமானது நிருப்திகரமாயிருக்க பேதிலும் இன்னம் 100க்கு சுமார் 20% பாக்கியிருக்கிறது. 15—9—39க்குள் பாக்கிதாரர்கள் தங்கள் சந்தா தாகை செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஸ்ரீ சுக்தாராஜ சர்மா அவர்கள் "வேதம் என்பது என்ன" என்ற விஷயத்தைப் பற்றியும் ப்ரம்மஸ்ரீ மகாலிங்க சாஸ்திரிகள் "தக்கலைப் ப்ராம்மணர்களின் கடமை" என்பதைப்பற்றியும் வெகு விசேஷமாக உபன்யாஸம் செய்தார்கள். காரியதரிசி

தாம்ரபர்ணி ஹிரண்ய ஸுருக்கம்

'ப்ராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விலக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆதாரகண்டனங்களையும் சாஸ்திரமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு ப்ராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. ப்ரத்யேகம்) கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,
தர்மசாஸ்திரச் சுருக்கம்,
மீழவிடையல், திருச்சிரை.

ஆலயப்பிரவேச எதிர்ப்பு

திருச்செந்தூர் வஞ்சனை வலை!

26—8—39-ல் ஸ்ரீ முருகானந்த சங்கீத திருப்புகழ் சபாவில் ஷே. ஸனாதன ஸபை மகா சபை மீட்டிங் ஸ்ரீ கு. நிருவாரியர் அவர்கள் தலைமையில் கடைபெற்றது. ஷே கூட்டத்திற்கு (1000) ஜனங்கள் கூடியிருந்தார்கள். அதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன :—

தீர்மானங்கள்

இந்த ஸபையானது மதுரையில் ரகஸ்ய முறையில் கடந்த ஹரிஜன ஆலயப்பிரவேசத்தை பலமாக கண்டிக்கிறது. மேலும் சமீபத்தில் சென்னை சட்ட சபைகளில் நிறைவேற்ற ஆலயப்பிரவேசப் பாதுகாப்புச் சட்டத்தை பலமாக எதிர்ப்பதுடன் மாஷிமை தங்கிய வைஸ்ராய் பிரபு அவர்கள் இச்சட்டத்தை அங்கீகாரம் செய்யக் கூடாதென்றும் தாழ்மையாய் கேட்டுக் கொள்கிறது.

இச்சபை நமது ஊரில் கடைகி சுக்கிரவாரதன்று ஹரிஜனங்கள் ஒழுங்கினமாகவும் பலாத்காரமாகவும் ஆலயப்பிரவேசத்தை நடத்த முயற்சித்ததை பலமாகக் கண்டிக்கிறது.

இச்சபை ஸனாதன தர்ம பிரதி நிதிகளான ரூவ்சாகேப் ஸ்ரீ என். ஷடேசய்யர் ஸ்ரீ கே. ஆர். வெங்கடராமய்யர் மகத்தான வேலைகளை மிகவும் பாராட்டுகிறது. அவர்கள் ஆலயப் பிரவேச எதிர்ப்பு விஷயமாக விடா முயற்சியுடன் கடத்தி வரும் எதிர்ப்பு இயக்கம் வெற்றிபெற வேண்டுமென்று ஸ்ரீ ஷண்முக காதனை பிரார்த்திக்கிறது.

இச்சபை திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி கோவில் நிர்வாக அதிகாரி ஸ்ரீ ஜி. கே. பகவதி அவர்களிடம் இவ்வூரில் ஹரிஜன ஆலயப்பிரவேசத்திற்கு எதிர்ப்பு இருக்கிறதென்றும் தாழ்மையாக தெரிவித்துக் கொள்கிறது.

இத்துடன் பெரியோர்களாலும் தலைவர் அவர்களாலும் ஸனாதன தர்ம விஷயங்களைப் பற்றி உபயோகிக்கப்பட்டது. வந்தனோபசாரத்துடன் சபை கலைந்தது.

(ஒ. நி.)

திருநெல்வேலி வக்கீல்களின் ஆக்ஷேபம்

தீண்டாதார் ஆலயப்பிரவேசச் சட்ட விஷயமாக வக்கீல்கள் தங்கள் அபிப்பிராயத்தை தெரியப்படுத்தவேண்டுமென்று மதுரை அட்வகேட் ஸ்ரீமான் கே. ஆர். வெங்கடராமய்ய ரவர்கள் விடுத்த அறிக்கையை அனுசரித்து திருநெல்வேலியிலிருக்கும் இதுவரை ஸ்ரீமான்கள ஸ. பி. ஜகந்நாத ராவ், என். ராம ஸுப்பய்யர், ஏ. கே. ஸுந்தரமய்யர், (ஸ்ரீங்கேரி ஸ்ரீமடம் தர்மாதிகாரி) டி. ஆர். கணபதி ராமய்யர், ஸாது கணபதி பந்துலு, டி. எஸ். மீனாக்ஷி ஸுந்தரமய்யர் (ஸ்ரீ வரதராஜஸ்வாமி பெருமாள் கோவில் தர்மகர்த்தா,) டி. ஆர். கண்ணபிரான் பிள்ளை, வி. வி. ஸ்ரீனிவாஸ சாரியார், ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை, வி. எம். கல்யாண ஸுந்தரம் பிள்ளை, எம். கே. முத்தய்ய பிள்ளை, ஆர். ஸாம்பஸிவ அய்யர், ஜே. ஈசுவர பூர்த்தி பிள்ளை, கே. ரங்காச்சாரியார் முதலான 67 வக்கீல்கள் தங்கள் ஷே சட்டத்தை முறறிலும் ஆக்ஷேபிப்பதாக எழுத்து மூலம் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

விருத்தாசலம்

1939ஹூ ஆகஸ்ட்மீ 30ஒ விருத்தாசலத்திலுள்ள ஸ்ரீ விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தான ஸ்ரீ தர்மபரிபாலகர்கள் அவர்களுக்கும் ஷே தேவஸ்தான ஸ்ரீ எக்ஸிகியூடிவ் ஆபீசர் அவர்களுக்கும் ஒரு மகஜர் அனுப்பி இருக்கிறார்கள். அதில் 650 பேர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

ஸ்ரீ விருத்தகிரீஸ்வரர் ஆலயத்திற்குள் நீண்டகாலமாகவே பெருவாரியான பொதுஜனங்களுக்கும் சம்மதம் இல்லை. ஆதலாலும் இது விஷயமாக 10—8—39-ல் ஷே ஆலயமும் மண்டபத்தில் எங்களால் கூட்டப்பட்ட ஆண்கிகர்களின் பொதுக்கூட்டத்தில் தீண்டாதாரர்களை ஆலயத்திற்குள் பிரவேசிக்க அனுமதிப்பது பலமாக ஆக்ஷேபிக்கப் பட்டிருப்பதாலும் தாங்கள் கருணைகூர்ந்து ஷே விஷயம் அனுமதி கொடுக்காமல் தர்மத்தை நிலைநாட்டி எங்களுக்கு உற்சாகத்தை ஊட்டி எங்கள் கோரிக்கையை பூர்த்தி செய்தும் அன்னிகத்திற்கு தங்கள் பலத்த ஆதரவுகொடுத்து உதவவேணுமாய் மிகு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்," என்று மகஜரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(ஒ. நி.)

வேம்பத்தூர்

ஸ்ரீ நாராயணச்சாமம்.

இவ்வாச்சமத்தின் சார்பாக மதுரை ஆலயப்பிரவேச மறுப்பிற்கோர் சதானக் கூட்டம் ஒன்று ஆவணிமீ 13ஒ சுந்தர ராஜப்பெருமாள் சந்நிதியிலுள்ள ஸ்ரீ எஸ். ராமமணிமுத்தையரவர்கள் இங்காகக் கொட்டகையில் கடைபெற்றது. அவ்வமயம் திருவெவ்வேளி ஜில்லா வல்லகாடு ஜாமம் சாஸ்திராதனம் லெ. நாராயண சாஸ்திரியாரவர்கள் ஸ்லோகம வித்தார். அப்பொழுது வாளாமரைப் பொதுஜனங்களும் ஸ்திரீகளும் கூடியிருந்தார்கள்.

மதுரையில் ஆலயப்பிரவேசம் ஆரம்பித்த காலம் தொடங்கி நாள்து தேதிவரை நடந்த அட்டழியங்களையும், சூழ்ச்சிகளையும், தமிழ் பித்வான் பி. ம. ஹோரம்பையரவர்கள் மிகத் தெளிவாகவெடுத்துக் கூறினர்.

பிறகு தலைவர் முடிவுரையில் ஒருவனுடைய தேகத்திலே செய்துக்கொள்ளவேண்டிய பல காரியங்களில் இன்னின்ன அவயவங்களின்ன இன்ன காரியங்களைத்தான் செய்யவேண்டுமென்ற நியமத்தை யனுசரித்து செய்துவருதலும் எல்லாவயவங்களும் எப்படி பிரியமின்னவைகளோ அதுபோல ஒரே ஸ்ரீமானகஷுக்காக வேற்பட்ட தெய்வங்களில் சத்வமயமான பெருமாள் முதலிய தெய்வங்களும் ராஜஸமயமான சன்தா அம்மன் முதலிய தெய்வங்களும் தமஸ்மயமான மாடன், கருப்பன் முதலிய தெய்வங்களும் அவ்வக்குணங்களுக்குத் தருநியுள்ளவர்களாராதிக்து வருவதும் ஒரே கிராமத்தின் கேஷமத்திற்கிருப்பது பற்றி எல்லோரும் கிராமத்தின் அங்கத் தவர்களாகவே கருதப்படுகிறார்கள். அப்படி இருப்பினும் அவரவர்கள் செய்யவேண்டிய காரியங்களைத் தவிர வேறு காரியங்களிற் புகுவது எப்படி தவருகுமோ, அவ்வாறே ஆலயப்பிரவேசம் நியமித்திருக்கும் ஆலயங்களில் இன்ன வர்ணத்தார்கள் தான் பிரவேசிக்கலாம் என்ற சட்டத்தை மீறியும், பிரவேசிக்க விருப்பமில்லாதவர்களைப் பலாத்காரமாய்ப் பிரவேசிக்கவேண்டுமென்று முன்னிட்டும் பிரவேசம் செய்து வைப்பது நியமிஞ்சிய தவருகுமென்று இச்சாதன தர்மம் பண்டைக் காலந் தொட்டுத்தழைத்துவரும் அறுகக்காரடென்பதை யாவருக்கெரித்துக் கொள்ளவேண்டியதென்று முடிவுரை கூறினார்.

மே. த. வைஸ்ராயவர்களை ஆலயப்பிரவேசச்சட்டத்திற்கு அனுமதியளிக்கக் கூடாதெனக் கேட்டுக் கொள்ளவேண்டுமென்ற தோர் தீர்மானத்துடன் கூட்டமினிது நிறைவேறியது.

(ஒ. நி.)

கும்பகோணம்

ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலய சங்கம்

முதல் வருஷ பூர்த்தி விழா

30—8—39ஒ புதனிழமை மாலை 4 மணிக்கு செட்டியார் குளம் கீழ்க்கரையிலுள்ள முனிஸிபல் பாடசாலையில் சங்கத்தில் முதல் திருவிழா ஸகர சபைத் தலைவர் ஸ்ரீமான் டாக்டர் எம். வி. ஸியராஜய்யர் தலைமையில் நடைபெற்றது. முதலில் கடவுள் வணக்கம் ஆனபிறகு சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் டி. வி. நாகராஜ சாஸ்திரிகள் தலைவருக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தார். பிறகு சங்கத்தின் வருஷாந்திர அறிக்கை படிக்கப்பட்டது.

ஸ்ரீ டி. எஸ். பஞ்சாபகேசய்யர் "சங்கீதத்தின் மேன்மையைப்" பற்றியும் ஸ்ரீ நெருநாத சாஸ்திரிகள் வேதம் என்பதைப்பற்றியும் உபன்யாஸித்தார்கள்.

தலைவர் தன்னுடைய பிரசங்கத்தில் "சங்கமானது சென்ற வருஷத்தில் செய்த காரியங்களைப் பாராட்டியும் ஹரிஜனாபிவிருத்தியும் சங்கீதத்தைப்பற்றியும் விளக்கமாகச் சொல்லி சங்கத்தின் கடமையையும் வற்புறுத்தி ஒவ்வொருவரும் ஹரிஜனாபிவிருத்தியும் சங்கீதத்தையும் அவசியம் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

பிறகு தலைவரால் சங்கத்திற்கு 1939—40 நிர்வாகக் கமிட்டி தேர்தல் நடத்தப்பட்டது. ஸ்ரீமான் சாமிநாதய்யர் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. சுக்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டு காரியதரிசியரவர்கள் வந்தனோபசாரம் கூறப்பட்டு வைபவம் முடிவுற்றது.

நாங்கூனேரி யூனியன் போர்டு

தலைவர் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

நாங்கூனேரி பஞ்சாயத்து போர்ட் கூட்டம் 25—8—39-ல் போர்டின் தலைவரால் கூட்டப்பட்டது. தலைவர் தீண்டாதாரை இவ்வூர் வரனமாமலைப் பெருமாள் கோவிலும் சுற்றுப்புறமுள்ள எல்லாக் கோவில்களும் அனுமதிக்க வேண்டுமென்று தர்மகர்த்தர்களை கேட்டுக்கொள்ள வேண்டுமென்று கொண்டு வந்த தீர்மானமானது ஆமோதிக்க ஒருவரும் முன்வராததால் நிராகரித்ததாக ரிபோர்டு செய்யப்பட்டது. தீண்டாதார்களான இரண்டு மெம்பர் கூட்டத்துக்கு வரவில்லை. முஸ்லீம்கள் மெம்பர் ஒருவர் நிலைமை வகித்தார்.

(ஒ. நி.)

வாலோசனை உபாக்யானம்.

7—9—39 வியாழக்கிழமை, இரவு 7 மணிக்கு, பிரம்மஸ்ரீ பட்டல் வெங்கட்டரும சாஸ்திரிகளால் கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள் முன்னிலையிலேயே நடைபெறும். அது முதல் ஒரு வாரத்தில் டாக்கி மூன்று கதைகளும் ஸ்ரீ நிதாராம பட்டாபிஷேகமும் நடைபெறும்.

'அனைவரும் வருக'

பக்தர்கள்.

(Continued from 2nd Page)

continue to abide in images set up and worshipped according to the injunction they have laid down for the construction and maintenance of temples only so long as they are obeyed. It may be a mad belief, but it is shared by millions of my countrymen less gifted than the divinities that preside in ministerial offices robed in authority by the fickleness of electoral Dame Fortune. In all mercy, I pray of them to let us, unregenerates, to chew our weakness, our blind beliefs and start on some concrete scheme for the spiritual uplift of the prohibited classes. Your Prime Minister always asks his critics for constructive propsoals whenever his ill-considered measures are attacked. May I trouble you with a proposal? Let the Congress Government start a Harijan Sevak Fund of ten crores by borrowing from the open market. The interest charge will be only thirty lakhs, a flea bite compared with the fifteen crores a Congress economist has promised from the sales tax, or not a great part of the crore and a quarter which the Prime Minister hopes to realise from it. The general public would be glad to earmark the thirty-lakhs, if the ten crores is spent during the remaining life-time of the Congress Government in the exclusive reclamation of the *Cheris* and in the building of such temples as the prohibited classes may require and at such places as they may point out. Has the Congress Govenment the courage, the imagination and strength of purpose to do it? Or is it only after war—against religion, war against property and war against every prejudice which the less gifted hold dear?

The proposal, I submit, is not a chimerical one nor made in spite. I have been for over a decade urging a heavy programme of constructive work by public loans and through the press and my publications have suggested an outlay of five hundred crores for the whole country. The need for economic uplift of the Harijans, which has now taken a violent form by the activities of Congressmen in fruitless endavour to throw open caste temples, can now be appropriately served by a special fund devoted to their amelioration, temporal and spiritual. The proposal has doubtless advantages which even the blind can see. It will vindicate the self respect of Harijans who do not care to be made pawns in the political game of parties by being tools of pseudo-Brahmins out to destroy Hinduism. By placing the state-constructed Harijan temples under the management of Harijan leaders, the growth of religious consciousness, which, for all that may be said, is lacking in them, stands to be fostered. It is possible that they can even make their temples more tempting abodes of the gods then the caste Hindu ones. And it will relieve the tension largely manufactured by the political Brahmin between the caste and non-caste Hindus; for do what congressmen will, temple entry for Harijans will leave behind a feeling of religious bitterness, animosity and hatred wherever it may be possible, which it will take years to erase. And it will never succeed in the villages. nor in the towns for long, My proposal is a test, a crucial test, whether the Harijans are really anxious for temple-worship and whether the Congress really cares to help the Harijans by catering to their temporal and spiritual wants. If they do not take kindly to it, it will be further evidence of the fact that the temple-entry programme is only a political stunt calculated to foment mischief where peace has reigned hitherto; and justify the stigma that where the congressman sets his foot there peace will never abide.

ஆலயப்பிரவேச அவஸர சட்டம்

அட்வகேட்களின் ஆட்சேபணை

சென்னை ராஜதானியிலிருக்கும் வக்கீல்களின் மகஜர்கள்

சென்னை ஹைகோர்ட்டில் சன்னது பெற்ற அட்வகேட்டுகளும், பிளீடர்களும், வக்கீல்களும் ஆலயப்பிரவேசப் பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டித்துத் தங்களது ஆட்சேபணைய அதிகாரிகளுக்கு அனுப்பி இருக்கிறார்கள். சென்னை ராஜதானி முழுவதிலும் இருக்கும் வக்கீல்களில் பலர்மகஜர் தயாரித்து அனுப்பி இருப்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட இடங்களிலிருந்து இதுவரை ஆட்சேபணைகள் வந்திருக்கின்றன. இன்னும் பல ஆட்சேபணைகள் வரும். (இட நில்லாதகால், சுருக்கமாய் விரித்திருக்கிறோம் :—

சித்தூர் 1; பட்டுக்கோட்டை 1; திருத்தினைப்பூண்டி 1; தேவக்கோட்டை 1; சூன்டூர் 2; குடிவாடா 2; நரசப்பட்டிணம் 8; பீர்காழி 10; விழுப்புரம் 12; பெனுகொண்டா 12; ராசோல் 12; மேனூர் 15; நாசபட்டே 17; மானுமதுரை 17; திவகங்கை 19; அரியலூர் 20: நின்டுக்கல் 24; கடப்பை 26; திருவண்ணாமலை 31; பெல்லாரி 37; செங்கல்பட்டு 50; தஞ்சாவூர் 62; கும்பகோணம் 121;

.....மேலே கண்ட இடங்களில் இருக்கும் வக்கீல்கள் தங்களுடைய ஆட்சேபணைகளை தக்கி மூலம் அனுப்பி இருக்கிறார்கள். (ஒரு விசேஷ நிருபர்.)

"வைதனிகளைப் பாதுகாப்பேன்"

ஈரோடு ஸ்ரீ ராமசாமி நாய்க்கர் பரிவு

"முகமதிய மதத்தை முகமதியர்களும், கிருஸ்துவ மதத்தை கிருஸ்துவர்களும் எவ்விதம் பாதுகாத்து வருகிறார்களோ அதேவிதம் பாதுகாத்து வருகிறார்களோ அதே மாதிரி ஸனாதனிகள் தங்கள் ஸாதனதர்மத்தை பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறார்கள். ஸாதன பிராமணர்களிடம் எனக்கு அதிக கம்பிக்கையுண்டு. ஆனால் சமூக முன்னேற்றத்திற்காக உழைக்கும் பிராமணர்களிடம் எனக்கு நம்பிக்கை யிடையாது. ஸாதனிகளின் தற்கால நிலைமையைக் குறித்து நான் வருத்தமடைகிறேன். அவர்களை நான் பாதுகாப்பேன்".....என்று நிகிழ்ச்சியத்தில் கூடின ஒரு மாபெரும் கூட்டத்தில் ஈரோடு ஸ்ரீ ராமசாமி காய்க்கர் (ஜஸ்டிஸ் கட்சி தலைவர்) கூறினர்.

தீண்டாதார்களுக்கு ஸ்ரீ ரெங்கநாதர் கோவில் திறக்கப்படக்கூடாது

வடநாட்டு ஆஸ்திகர்களின் மகஜர்

ஒரு லக்ஷம் கையெழுத்து

சிலகாலமாக ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ ரெங்கநாதர் கோவில் ஹரிஜனங்களுக்கு திறந்துவிட முயற்சி நடைபெற்றுவருவதாக பொதுஜனங்களிடையே ஒரு வதந்தி உலவி வருகிறது. இது சம்மந்தமாக கோவில் தேவஸ்தான நிர்வாக அதிகாரியான திரு. எஸ். ராஜகோபால் ஐயரு அவர்களை சென்ற 15-8-39ல் தேதி பேட்டி கண்டு பேசினேன். நிர்வாக அதிகாரி அவர்கள் பொது ஜனங்களிடமிருந்து வரும் வதந்திக்கு ஆதாரமில்லை என்றும், வடதேசங்களிலிருந்து ஸ்ரீ ரெங்கத்தில் ஹரிஜனங்களை அனுமதிக்கக்கூடாது என்று மகஜர் வந்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

அவர் மேலும் கூறியதாவது 'பூலோக வைகுண்டமென்று அழைக்கப்படும் ஸ்ரீ ரெங்கநாதர் கோவிலுக்கு வடதேசஜனங்கள் ஏராளமானவர்கள் விஜயம் செய்கிறார்கள். அவர்களில் பலர் அதே உபயங்கள் செய்பவர்கள் வழக்கத்திற்கு விரோதமாக ஹரிஜனங்கள் கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டுவர்களானால் உபயம் செய்கிறவர்கள் நிறுத்தி விடுவார்கள். அதனால் கோவிலுக்கு நஷ்டம். கோவிலுக்கு பக்தியுடன் வருபவர்களும் நின்று விடுவார்கள். நாசிக், தீர்க்கை, பண்டர்பூர், சத்தாரா பிட்டி, பர்வாடா, கோலாப்பூர், இக்தூர் முதலிய ஊர்களிலிருந்து சுமார் ஒரு லட்சம் பேர்கள் கையெழுத்திட்டு ஹரிஜனங்களை அனுமதிக்கக்கூடாதென ஒரு மகஜர் அனுப்பி யிருக்கிறார்கள்" என்று கூறினர். மகஜர் விஷயமாக நிர்வாக அதிகாரி ஆலோசனை செய்து வருவதாகத் தெரிகிறது. அவர் பேசியதிலிருந்து கவனிப்போமானால் ஸ்ரீ ரெங்கநாதர் கோவிலில் ஹரிஜன பிரவேச அனுமதி ஜனங்கள் கூறுவதுபோல் சமீபத்தில் வற்படுமென்று நினைப்பதற்கில்லை.

(சிவாழி)

தஞ்சையில்

கண்டனக் கூட்டங்கள்

தஞ்சை மேற்கு வீதியிலுள்ள ஹநுமார் கோவிலில் நன்று ஆலயப்பிரவேசத் தடை கண்டிக்க ஓர் பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாஜீ ஸ்பாஜிஸ்ட்ரேட் ஸ்ரீமான் வெங்காஸாமிராவ் அவர்கள் அக்ராஸனம் வஹித்தார்.

ஸ்ரீமான் நடராஜய்யர், ஸ்ரீ காகாஜய்யர முதலியவர்கள் கார்யக்கமிட்டி ஆலயப் பிரவேசத்தை பலமாகக் கண்டித்துப் பேசினார்கள்.

"யுவக்" பத்திராதிபரான காசி ஸ்ரீமான் அருணும் வெகு தீவ்ரமாகப் பேசினர்.

ஸ்ரீ வெங்கடேச்வரப் பெருமாள் கோவிலில் ஸ்ரீமான் வக்கீல் ராகவிருஷ்ணய்யர் அவர்களுடை தலைமையில் பெரிய பொதுக்கூட்டமொன்றும் நடைபெற்றது.

ஸ்ரீமான் பி. என். ராகாரஜய்யர பேசுகையில் மீனாக்ஷி கோவில் ஸம்பவங்களையும், காங்ரஸ் மந்திரிகளின் பலாத்காரச் செய்கைகளையும் பலாரக் கண்டித்தார். வாலண்டியர்களும் பணமும் அவச்யமென்று சொன்னார்.

வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

215298

மார்ச்சளியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச் சமயத்திலும் வெகுதுரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது.

அமிர்தாஞ்சனம்

மதிப்புரை.

ஸ்ருக்தரா பாகவதம்.

மேற்கண்ட பெயருள்ள ஸம்ஸ்கிருத புஸ்தகமொன்று நமது விமர்சனத்திற்கு வந்திருக்கிறது. இதில் மதத்தினரால் மிகவும் புனிதமானதாகக் கொண்டாடப்படும் ஸ்ரீ பாகவதம் என்ற புராணக் கிரந்தத்திலுள்ள விஷயங்களே 118 சுலோகங்களில் சுருக்கி இதில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த சுலோகங்கள் "ஸ்ருக்தரா" வ்ருத்தத்தில் அமைக்கப்பட்டிருப்பதால் இதற்கு மேற்கண்ட பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இக்காலங்களில் புராணங்களில் வெகு விஸ்தாரமாக வர்ணிக்கப்படும் கதாஸந்தர்ப்பங்களே அதேகர் ஆலஸ்யத்திலும், வேறு கார்ய நிர்பந்தங்களாலும் படிப்பதில்லை. பண்டிதர்களில் வெகு பேர்களுக்கு புராண கதைகளில் பரிசயம் கிடையாதென்பது மிகையாகாது. இதற்குக் காரணம் அவை மிகவும் விரிவாக இருப்பதே.

கதா ஸந்தர்ப்பங்களைச் சுருக்கமாக வெளியிட்டால் யாவரும் அதை அதிக ஸ்ரமமின்றி அறிந்துகொள்ளமுடியும். இதைக் கருதியே குடந்தை ஸ்ரீராமமந்திரம் அத்வைத பாடசாலை உபாத்தியாயர், வித்வான் பிரம்ம ஸ்ரீ ஆங்கரைரங்க ஸ்வாமி சாஸ்திரிகள் (சிரோமணி) இப் புஸ்தகத்தை இயற்றியிருக்கிறார். சுலோகங்கள் லலிதமான நடையில், அழகான இணைப்புடன் கூருயிருப்பதுடன் கதா ஸந்தர்ப்பங்களே விடாமல் சுருக்கமாக வெளியிடக் கூடியவையாயுமிருக்கின்றன. பாகவதத்தில் மிகக் கடினமாயுள்ள விடயங்களும் இந்த சுலோகங்களில் லகுவாக பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றன. பிரம்மஸ்ரீ சாஸ்திரியாரின், காவ்யாலங்காராதி பாண்டித்யத்தையும், சாஸ்திர பாண்டித்யத்தையும் அறிந்தவர்களுக்கு இந்த சுலோகங்களின் அழகிய அமைப்பைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை.

ஜகத்குரு ஸ்ரீமத் ஆசார்யஸ்வாமிகள், வித்யாவாசஸ்பதி மஹாமஹோபாத்யாய, குப்புஸ்வாமி சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய பண்டிதராஜ, கிருஷ்ணமாசாரியர், அத்வைதஸபா பண்டார், சாஸ்திரரத்னாகரம் விச்வநாதசாஸ்திரிகள் முதலிய பெரியோர்கள் இப் புஸ்தகத்தை மெச்சியிருப்பதிலிருந்தே இதன் தன்மையை அறியக்கூடும். பிரம்மஸ்ரீ சாஸ்திரியாரின், பாராட்டத்தக்க இம் முயற்சியை ஆதரிப்பதற் கறிகுறியாக யாவரும் இதை வாங்கிப் படிப்பதவசியமாகும்.

பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு பாகவத கதையை எளிதாக போதிக்க இப் புஸ்தகம் பயன்படக்கூடுமாதலால் வித்யை இலாகா அதிகாரிகள் இதைக் கவனிப்பார்களென்று நம்புகிறோம்.

இதன் விலை அணா நான்கு. ஆசிரியரிடம் விலைக்குக் கிடைக்கும்.

The Premier English Weekly Devoted to the cause of Sanatana Dharma.

"Dharmarajya"

(Official organ of the Dharma Sevaka Sabha).

Patron Founder & Spiritual Director:
H. H. Sri Sankaracharya, of Puri.
Widely circulated in
India, Burma & Ceylon.
Best Medium for Advertisement
Annual Subscription Rs. 5.

Apply to:—
The Manager, "DHARMARAJYA"
Chandi Chowk, Delhi.

அறிவிப்பு.

மேல தஞ்சாவூர் அபிஷியல் ரிசீவர் கோர்ட் தஞ்சாவூர்.

I. A. $\frac{40}{39}$ in I. P. $\frac{37}{29}$

R. கணேசய்யர் வகையரு. } மனுதார்.

மேற்கண்ட விஷயத்தில், இறந்த ராமஸாமி அய்யருக்கு அவிபக்த குமாரர்கள் R. கணேசய்யர் வகையறுவை வாரிஸாக சேர்த்துக்கொள்ள ஆக்ஷேபணை யாருக்கேனும் இருந்தால் அவர்கள் மேலதஞ்சாவூர் அபிஷியல் ரிசீவர் கோர்ட்டில் 9—9—39உ பகல் 3மணிக்கு வந்து தெரிவித்துக்கொள்ளவும்.

இப்படிக்கு,
R. கணேசய்யர் வகையறு.

Mr. T. R. கணபதிராமய்யர் பிரசுரங்கள்.

பாகவதம் காலிகோபைண்டு	2	0	0
ராயல்	1	8	0
இங்கிலீஷ்	2	0	0
7, 8, 9ஸ்கந்தங்களில் தமிழில்	0	8	0

கிடைக்குமிடம் ஜனார்த்தன அச்சுக்கூடம், கும்பகோணம்.

உங்கள் நாக்கை ஏமாற்றாதீர்கள்

சாதாரணமாக மனத்திற்காகத் தயாரிக்கப்படும் பெருங்காயம் யாதொன்றுக்கும் பிரயோசனப்படுவதில்லை. உங்கள் நாக்கை ஏமாற்றுகிறது. புத்திசாலிகள் தங்கள் உணவுப் பொருள்களை வாங்குவதில் ஜாக்கிரதையாயிருப்பார்கள். அவர்கள் ஸ்பெஷலாக T. T. பெருங்காயத்தையே கேட்பார்கள். ஏனென்றால் அது நல்ல சரக்கு என்று அவர்களுக்குத் தெரியும். பதினைந்து வருஷ அநுபவத்தின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஸ்பெஷலாக T. T. பெருங்காயம் 20-20% அதிக சக்தியுள் காப்பாற்றப்படுகிறது. அதற்கு நறுமணமும் நற்சுவையும் உண்டு.

ருசிகரமான சாப்பாட்டிற்கும் ஜீரணத்தை சுலபமாக்கவும் பரிசுக் கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

ஒரு பவுண்டு ரூ. 1—14—0

ஸ்பெஷல்
T. T.
பிஸ்கி பெருங்காயம்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.


9152.99


14-9-1939
24
4
37

1586

OFFICE OF THE REGISTRAR OF NEWS
29 SEP 1939

21529

587

REGD. No. M. 2918 MADHARYADHARMAM Estd. 1915
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விபரம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஐ ஆவணி-மீ 29உ 1939 ஹ செப்டம்பர்-மீ உ 14 | ஸ-37

காங்கிரஸ்காரியக் கமிட்டிக்குத் தந்தி

"ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாதஸ்வாமி கோவிலில் நீண்டாதார் அழைத்து விடுவார்களோ என்று கருதி ஸ்திரீகள் உள்பட அகேக ஆயிர ஜனங்கள் கோவிலில் கூடியிருந்தார்கள். 9—9—39உ மாலை மந்திரி கனம் டாக்டர் ராஜன் கோவிலுக்கு விஜயம் செய்தார். ஸ்திரீகள் அனைவரும் டாக்டர் ராஜன் பாதங்களில் விழுந்து ஆலயத்திற்குத் தீண்டாதார்களை அழைத்துச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். போலீஸார் பலாத்காரமாய் ஸ்திரீகளை விலக்க முயன்றார்கள். போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்து ஸ்திரீகள் பலரை காயப் படுத்தினர்கள். இதனால் முப்பது ஸ்திரீகளுக்குக் காயங்கள் ஏறபட்டிருக்கின்றன. நால்வருக்கு மண்டையில் அடி. ஒரு ஸ்திரீக்கு பிரக்ஞை வரவில்லை. 19 ஸ்திரீகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்."

இந்த ஸம்பவத்தைப்பற்றி ஸ்ரீரங்கம் ஸ்ரீ சங்கராசார்ய குருகுல தர்மாதிகாரியான ஸ்ரீ டி. கே. பாலசுப்ரமணிய அய்யர் பி. ஏ. வர்த்தாவில் கூடியிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு 12-9-39உ ஒரு தந்தியை அனுப்பி இருக்கிறார். அத்தந்தியில் "ஹரிஜன மத தேவாலயங்களின் மந்திரி கனம் டாக்டர் ராஜன் சனிக்கிழமை ஸ்ரீ ரங்கநாதஸ்வாமி கோவிலுக்கு வந்தார். 6000 பக்தர்கள் அவர் பாதத்தில் விழுந்து ஹரிஜன்களை ஆலயதில் அழைத்துக் செல்ல வேண்டாமென்று கேட்டுக்கொண்டார்கள். மூன்று முறை கனம் ராஜன் உத்தரவினால் போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தார்கள். இதனால் 30 ஸ்திரீகள் காயமடைந்தார்கள். கால்வருக்கு மண்டைகளில் பலத்த காயம். ஒரு ஸ்திரீக்கு பிரக்ஞை வரவில்லை. ஒன்பது ஆடவர்களும், 19 ஸ்திரீகளும் கைது செய்திருக்கிறார்கள்."

The following Telegram has been sent to the working Committee of the Indian National Congress at Wardha by Mr.T.K.Balasubramanya Iyer B. A., Dharmadhikari, Sankaragurukalam, Srirangam:—

"Dr. Rajan Minister Religions Endowments visited Srirangam Ranganatha Temple saturday last. Five thousand Devotees prostrated prayed not allow Harijans police lathi charged Thrice the crowd under Rajan's orders About thirty ladies sustained injuries. Four seriously on heads. One lady still unconscious, Nine men nineteen ladies so far Arrested."

வானமாமலை "வித்வான்" பட்டம் ரத்து

நாங்கூனேரி ஸ்ரீ வானமாமலை தோதாதரி மடம் ஆஸ்தான வித்வானைச் சொல்லப் பட்டு வந்த, தெற்கிருப்பேரை, அபிவவ கலா மேகம் பண்டிட் ஸ்ரீ. அனந்தகிருஷ்ண ய்யங்கார் ஹரிஜன ஆலயப்பிரவேசத்தை ஆகரித்துப் பேசி வந்ததாயும், ஆதரிப்பு பாடல்கள் இயற்றியுள்ளதாயும் ப்ரஸ்தாப மானதன் பேரில் இவ்விஷயம் மடாதிபதி ஜீயர் ஸ்வாமிகளுக்கும் தகவல் தெரிக்க மட வித்வான் ஆள் மூலம் எச்சரித்ததாயும், அதிக்ரமரகவே ஸ்ரீ வானமாமலை மடம் ஆஸ்தான வித்வான் என்ற பட்டத்தை உபயோகிப்பது கூடாதென மடாதிபதி ஸ்வாமிகள் பண்டிதர்க்கு அறிவித்து "வித்வான்" பட்டத்தை ரத்து செய்து விட்டார். (க. கி.)

தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

ஸ்ரீ வைகுண்டம் பஞ்சாயத்துப் போர்டில் "மதுரை ஆலயப்பிரவேசத்தைப் பாராட்டியும் அதை யநுசரித்து ஸ்ரீ வைகுண்டபதி ஆலயத்தில் கடத்தமாறு கோயில் நிர்வாக அதிகாரியை கேட்டுக்கொள்வதாக" ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தீர்மானம் ஒழுங்கல்லவென ஜஸ்டிஸ் அப்துல் ரஹீம் ஆக்ஷேபணை செய்யத் தீர்மானம் நிறை வேறுமல் போய்விட்டது.

ஆள்வார்திருநகரி "காங்கிரஸ்காரர்களுக்குத் தடையுத்தரவு"

தீண்டாதார் ஆலயப்பிரவேச அதிக்ரம பாதுகாப்பு மசோதாவுக்கு கனம் ராஜபிதி நிதியும் அனுமதி கொடுத்து விட்டாராயினும் கடைங்குமுள்ள தர்மீக மகாஜனங்களின் கொதிப்பும் எதிர்ப்பும் முன்னிலும் பலமாகவேயிருந்து வருகிறது.

திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி கோயில் ஆவணி மகோத்ஸவத்தில் ஆலயப் பிரவேச தகராறுண்டாகுமோ வென்ற பிதி காரணமாய் ரிஸர்வ் போலீஸ் படை வரவழைக்கப்பட்டிருப்பதுடன் தூத்துக்குடி சப்-கலெக்டர் மிஸ்டர் ஜார்ச்ஸன் முகாம் செய்திருக்கிறார். திருசெந்தூர் தாலுகா காங்கிரஸ் உதவி காரியதரிசி ஸ்ரீ கே. டி. கோஸல்ராம், ஸ்ரீ வைகுண்டம் வக்கீல் ஸ்ரீ எஸ். டி. ஆதித்தன் தூத்துக்குடி ஸ்ரீ எ, ஆர். எ. எஸ். துரைசாமி எம், எல். எ. முதலிய பல தடார்கள் மீது திருச்செந்தூர் தேவஸ்தான நிர்வாக ஆபிஸர் ஸ்ரீபகவதிக் கவுண்டர் சப்-கலெக்டரிடம் தடையுத்தரவு கேட்டு மனுக்கொடுத்திருப்பதாய்த் தெரிகிறது. திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ எம். வி. வீரவாகுபிள்ளையுடன் தடார் கண்பர்கள் ஹரிஜனங்களும் தடார்களும் கோயில் பிரவேச விஷயமாய் ஆத்திரப் படாமலும் அமைதியாய் பொறுத்திருக்கு மாறு வேண்டியும் பலயிடங்களிலும் பிரசாரம் செய்வதாயும் தெரிகிறது.

தென்திருப்பேரை ஜாரில் ஆலயப்பிரவேச எதிர்ப்பு மகஜரில் கையெழுத்திடுவேரிடம் ஓர் காங்கிரஸ் வாதி காவித்தனமாய் தடத்த கொண்டதன் மேல் ஒழுங்காயிருக்க எச்சரிக்கை செய்து அனுப்பப்பட்டது. (ஒ. கி.)

"ஆசிரியர்களும் அரசியலும்" கனம் வர்க்கியின் விளக்கம்.

சென்னை சர்க்கார் கல்வி அமைச்சர் கனம். கி. ஜே. வர்க்கி 24—8—39 அம் பசமுத்திரம் ஆசிரியர் கூட்டத்தில் பேசினர். அரசியலிலும், தேர்தலிலும் ஆசிரியர்கள் கலந்து கொள்ளக்கூடாதென்று அரசாங்கத்தார் விடுத்த உத்தரவைப்பற்றிப் பிரஸ்தாபித்தபொழுது அவர் கூறியதாவது :—

(தொடர்ச்சி 2 பக்கம்)

(1 பக்கம் தொடர்ச்சி.)

"இது வரையில் இருந்த உரிமைகளே பறிக்கப்பட்டு விட்டதாக ஆசிரியர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (ஆசியர்கள் அரசியல் சமூகஸ்தாபனங்களில் கலக்து கொள்ளும் உரிமைகள்) இந்த வாதம் பலனற்ற வாதமாகும். மதுவிலக்குத் நிட்டத்தில் இது வரையில் குடிக்கவிருந்த உரிமையைச் சர்க்கார் பறித்து விட்டார்கள் என்று கூறினால் அது எப்படி இருக்குமோ அது போல இவ்வாதமும் இருக்கிறது ''..... என்று குறிப்பிட்டார்.

மன்னார்குடியில் நடந்த ஹரிஜனங்களின் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்

சென்னை சர்க்கார் இயற்றிய ஆலயப் பிரவேசச் சட்டத்தை இக்கூட்டம் அழுத்தமாகக் கண்டிக்கிறது.

மதுரை, திருப்பரங்குன்றம் முதலிய விடங்களில் சாத்விகமாக ஸத்யாக்ரஹம் செய்த ஸனாதனிகளை ப்ரம்பு தடி இவைகளைக்கொண்டு ரத்தம் சிந்தும் வரை அடித்துத் துன்புறுத்தியதை இக்கூட்டம் மிகவும் வன்மையுடன் கண்டிக்கிறது.

எவ்வித அபராயத்திலும் மனம் தளராமல் மதத்திற்க்காக ஊக்கத்துடன்பாடுபட்டுவரும் ராவ் ஸாஹேப் ஸ்ரீ என். நடேசய்யர் முதலிய ஸனாதனித் தலைவர்களுக்கு இக்கூட்டம் தமது மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகிறது.

மதத்திற்கு ஆபத்தான இச்சமயத்தில் மிகுந்த ஊக்கத்துடன் மதத்தை காப்பாற்ற வெளிவரவேண்டுமென்றத எல்லாமதசாரியர்களையும் இக்கூட்டம் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறது.

டாக்டர் ராஜனுக்கு ஹரிஜனங்களின் கடிதம்.

ஆலயப்பிரவேச விஷயமாக ஸனாதனிகளுடன் கலந்துபேச வேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுவது இன்று காலை இவ்வூர் டாக்டர் ஸ்ரீ முத்துகிருஷ்ண அய்யார் மூலம் சுற்றுகடிதம் எங்களுக்கும் இன்னும் சிலருக்கும் அனுப்பப்பட்டது. நாங்கள் தங்களைப்பார்த்துப் பேசத் தீர்மானிக்கு முன் ஆலயப்பிரவேச விஷயமாகத் தாங்கள் பேறுகூட்டத்தில் பேசப்போவதாக வெளிவந்த தகவல் பிரகாரத்தை நாங்கள் காண நேர்ந்தது.

இதிலிருந்து நாங்கள் உங்களைக்கலந்து பேசி அதன மூலம் தங்களுடைய அபிப்பிராயத்தை மாற்ற முடியாது என்கிற நிர்மானம் எங்களுக்கு ஏற்பட்டதாலும் நம்மிருவர்களுடைய ஸம்பாஷணையினால் யாதொருபலனும் ஏற்படுமென்கிற நம்பிக்கை இல்லாததாலும் நாங்கள் அங்குவரக் கூடாததாகவிருக்கிற தென்பதை மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களுக்கு இஷ்டமிருப்பின் —தாங்கள் அனுமதித்தால் தங்கள் பேசும் பொதுக் கூட்டத்திலேயே எங்களில் யாராவது ஒருவர் எங்கள் அபிப்பிராயத்தை அமைதியுடன் எடுத்துரைக்கத்தயாராக இருக்கிறோம். அதுமறியுடன் தங்களுடைய மேலான பதிலை எதிர்பார்க்கிறோம்.

மன்னார்குடி

ஹரிஜனங்களின் கேள்விக்கு பதில் இல்லை.

6—9—39 காலை டாக்டர் ராஜன் அவர்கள் இவ்வூருக்கு விஜயம் செய்வதாயும் அது சமயம் ஸனாதனிகளைக் காண அவர் விரும்புவதாயும் 4-30 மணிக்கு அவரைக் காண வரவேண்டுமென்றும் ஓர் சுற்றறிக்கை டாக்டர் பி. வி. முத்துகிருஷ்ணய்யரால் ஸனாதனிகளுக்கு அனுப்பப்பட்டது. அதை பற்றி ஸனாதனிகள் ஒன்றுகூடி யோசித்துக் கொண்டிருக்கும் போதே ஷெட்மந்திரி பெதுக்கூட்டத்தில் ஆலயப்பிரவேச விஷயமாக பேசப்போவதாக கேட்டீஸ். வெளிவந்திருப்பதால் ஸனாதனிகள் பொதுக்கூட்டத்திலேயே தங்களுக்கு பேச அவகாசம் அளிக்கவேண்டுமென்றும் தனிப்பட்ட இடத்தில் கலந்து பேசுவதால் யாதொரு பலனும் ஏற்படாதென்றும் தீர்மானித்து தமது அபிப்பிராயத்தை தெரிவிக்கும வகையில் ஓர் கடிதத்தை டாக்டர் ராஜனுக்குஎழுதிக் கொண்டார்கள் (இதன் விபரம் மற்றொரு பத்தியில் காண்க) இரவு 7-30 மணி வரையதொரு பதிலும் கிடைக்கவில்லை. பிறகு பொதுக்கூட்டத்தில் டாக்டர் ராஜன் பேசுவதற்கு முன் ஸ்ரீ பூவராக அய்யங்கார் ஸ்ரீ வேதாந்தம் பிள்ளை முதலியோர் பேசினார்கள். கூட்டத்தில் காலஎல்லத்திலிருந்தும் கூச்சல்களும்கேள்விகளும்கிளம்பிக்கொண்டிருந்தன. ஸனாதனிகள் 12 கேள்விகள் அடங்கிய ஓர் கடிதத்தையும் ஸ்ரீ பூவராக அய்யங்கார் 14-2-37 குடந்தை ஸனாதனிகளுக்குக் கொடுத்தவாக்குறுதியின் நகலையும் அச்சிட்டு டாக்டர் ராஜன் உள்பட கூட்டத்தில் எல்லாரிடமும் கொடுத்தார்கள். ஸ்ரீ வேதாந்தியும் பிள்ளை பேசி முடித்தபுடன் குருசிஷ்யர்களான ஸ்ரீராமபத்ராசாரியார் தங்களுக்குப் பேசுவதற்கு ½ மணி அவகாசமாவது கொடுக்கவேண்டுமென்று கேட்டதற்கு கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்த காகாகாங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீராமய்ய பிள்ளைகண்டிப்பாய் முடியாதென்று சொல்லி விட்டார்.

உடனே கூட்டத்தில் குழப்பமும் கூச்சலும் அதிகரித்தன. அதன்பேரில் ஸனாதனிகள் தங்கள் கண்டனத்தை தெரிவிக்கும் பொருட்டு உடனேயே கூட்டத்தை விட்டு வெளியேறி அதற்கடுத்தாற்போல் ஒருஇடத்தில் பெரிய கூட்டத்தை கூட்டினார்கள்.

கூட்டத்திற்கு ஸ்திரிகள் உள்பட சுமார் 500 பேர்கள் வந்திருந்தார்கள். கூட்டத்திற்கு இக்கர் முதல் தெரு வேதபாடசாலை உபாத்யாயர் வடுவூர் கனபாடி ராமிமாசாரி கலைமை வகித்தார். குருசிஷ்யர்கள் ஸ்ரீ ராமபத்ராசாரியார் காங்கிஸ் வாதிகளின் வாதங்களை பலமாக பலவிதத்தில் கண்டித்து மிகுந்த உணர்ச்சியுடன் பேசினார். தலைமை வகித்த ஸ்ரீ ராலிமாசாரியார் தமது முகமுடிவுகளில் தருத்த மேற்கோளுடன் காங்கிரஸ் வாதிகளின் செய்கைகளைக் கண்டித்துப் பேசினார்.

முடிவில் 5 தீர்மானங்கள் தலைவரால் பிரேரேபிக்கப்பட்டு கூட்டத்தில் ஏகோபித்தத் தீர்மானிக்கப்பட்டது. கூட்ட ஆரம்பத்தில் சில காலிகள் கல் எறிந்தும் கூச்சல் போட்டும் கூட்டத்தைக் கலைக்க முயன்றனர். உடனே போலீஸார் தோன்றிக் காலிகளை விரட்டி கூட்டத்தை அமைதியாக நடத்தி வைத்தனர். கூட்டம் சுமார் 3 மணி நேரம் நடந்தது.

(கு. மி)

அறிக்கை

[ஐரோப்பா யுத்தம் நடந்து வருவதால் காங்கிரஸில் உயர்த்த விட்டது, என வே "ஆர்யதர்மம்" பக்கங்களை குறைத்திருக்கிறோம். தேவையான பிரிகளே அச்சிடப்படும். சந்தாதாரர்களாய் சேர்ந்தால் ஆர்ய தர்மம் சரிவர கிடைக்கும்.

[மானேஜர். ஆ. த.]

ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமிக்கு வந்தார்ச்சனை

ஸ்ரீ ஆருவமுதன் ஸ்ரீ கோமளவல்லித் தாயாருக்கும் ஸ்ரீமுகஸ்ரீ முதல் பகுதான்ய வருஷம் வரையில் 22,01,000 வந்தார்ச்சனைகள் நடைபெற்றன. இவ்வருஷம் ஷெ அர்ச்சனை புரட்டாசி மீ 1உ முதல் 28உ கடைசி சனிக்கிழமை வரையில் அதிவிமரிசையாக ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமிக்கும் ஸ்ரீ கோமளவல்லித் தாயாருக்கும் கடத்தப் போகிறது. ஆஸ்திக அன்பர்கள் கைங்கர்யத்தை நடத்தும் ஸ்ரீநிவாசப்பட்டாசாரியாருடன் ஒத்துழைத்து வந்தார்ச்சனையை கன்குடத்த உதவி செய்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒ.நி.)

"No." to Teachers.

The Hon'ble C. J. Varkey, Minister for Education, speaking at Ambasamudram on 24—8—39 is reported to have said:- (Hindu Report) "It is said that the teachers are deprived of a right they have been enjoying so long, (the right to take part in politics and electional activities). There is no force at all in this argument. It is tantamount to a drinker saying, by the policy of prohibition the Goverment is depriving me of a right to drink. I have been enjoying it so long.

* * *

Hasty Legislation.

"The (Congress) Government found that delay after the publication of a bill to the growth of opposition while on the other hand if they got the measure through quickly the opposition would subside and the Act could be worked out successfully". (Minister Gopala Reddy at Mangalore on 1—9—39.)

* * *

Instigation by Minister

"He was sorry that no demand was made for Temple entry" said Minister Mr. Gopala Reddy, replying to the address of Harijans at Mangalore on 3—9—39.

* * *

Untouchability imposed by Congress

"While untouchability in one sphere was sought to be removed, political untochability was being imposed, and Congress entry has become more difficult than Temple entry"

(Mr. S. Srinivasa Iyengar at Bose's Reception meeting at Madras on 3—9—39.)

* * *

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

"பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரித்தும், வைத்தியாதாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சுருக்கமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்.) கிடைக்குமிடம்:— பட்டிஸ்,

தர்மசாஸ்திரச் சுருக்கம்,

கீழவிடையல், திருச்சிரை;

காங்கிரஸ்காரர்களின் அபாண்டமான புளுகு!

மத்தர பிரயோகம் செய்வதாக ஹரிஜனங்கள் மீது அடாத பழி!

நாடார்களுள் பிளவு!

பிரம்மஸ்ரீ என். நடேசய்யர் பிரஸங்க விவரம்

செப்டம்பர் மீ 5உ செவ்வாய்க்கிழமை மாயவரம் நிருவழுந்தூர் கோவில் வாசலில் கடைபெற்ற அஸ்திகர்களின் பொதுக்கூட்டத்தில் மதுரை ராவ்சாஹிப் ஸ்ரீமான் நடேசய்யரவர்கள், மதுரையில் காங்கிரஸ்காரர்கள் கட்டுப்பாடகச் செய்து வரும் அக்கிரமக்களை விவரித்துப் பேசினார். அச்சமயம் ஸ்ரீ நடேசய்யர் பேசியதின் ஸாரம்சமவது:—

"மதுரையில் காங்கிரஸ்காரர்கள் செய்துவரும் பொய்ப்பிசாரங்களுக்கும், அக்கிரமங்களுக்கும் அளவில்லை. அவைகளில் பெரும்பான்மையானவிஷயங்கள் பத்திரிகைகளில் வெளிவருவதில்லை. ஆகையால் பொதுஜனங்கள் அவைகளை அறியமுடியவில்லை. பத்திரிகைகளில் வெளிவராத பல அநிசம்பவங்கள் அங்கே நடக்கின்றன. ஒரு உதாரணம் கூறுகிறேன்.

மீனாக்ஷி கோவிலில் ஆலயப்பிரவேசம் செய்வித்த கோவிலதர்த்தமாகிய ஏ.வைத்யநாதய்யர் முதலிய சிலர் மீது ஸனாதனிகள் கோபம் கொண்டு அவர்களுக்கு அபாயம் விளவிப்பதற்காக சூன்யம் வைக்கும் சேரக்கத்துடன் சம்சானத்தில் அபிசார மந்திர பிரயோகம் செய்வதாக ஓர் பொய்க்கதையை பொறுப்புள்ள காங்கிரஸ் தலைவர்களே கட்டிவிட்டனர். இதனால் ஊரில் பரபரப்பும், கலியும் ஏற்பட்டது. எங்கும் இதே பேச்சாகி விட்டது.

மதுரையிலுள்ள மயானத்தில், இண்டு மஹமளி மந்திர வாதிகளுடைய உதவியைக் கொண்டு தினமும் இரவு 12 மணிக்கு சூன்ய மந்திரப் பிரயோகம் நடப்பதாயும், காளை (ஸ்ரீ நடேசய்யர்) அதற்கு கர்த்தாவாக இருந்து நடத்துவதாயும், தேவதைக்கு பலியிட்டவாடு, கோழிகளின் தலைகளும், கள்ளு சாராயம் புட்டிகளும் மயானத்தில் அந்த சூன்ய பிரயோகத்தின்போது உபயோகிக்கப்பட்டதாயும், வேறு பல அபாத பொய் கதையும் காங்கிரஸ் தலைவர்களே பரப்பி வந்தனர்.

ஒரு நாள் இரவு 12 மணிக்கு நான் அங்கு கொண்டிருக்கும்போது ஸ்ரீமான் ஏ. வைத்யநாதய்யர் ஒரு மனிதன் மூலமாக ஓர் கடிதத்தை எனக்கு அனுப்பினர். என் வீட்டுக் கதவைத் தட்டி ராத்திரி அநாதில் என்னை எழுப்பி அந்தக் கடிதத்தை அந்த மனிதன் கொடுத்தான். அக்கடிதத்தில் ஏ. வைத்யநாதய்யரைக் கொல்லுவதற்காக மயானத்தில் சூன்ய மந்திர பிரயோகம் நடப்பது உண்மையாவென்றும், அதில் தங்கள் (நடேசய்யர்) ஸம்பந்தப்பட்டிருப்பது உண்மையவென்றும் வைத்யநாதய்யர் கேட்டிருந்தார். பாதி ராத்திரியில் இந்தக் கடிதத்தை நான் படித்து மிகுந்த ஆச்சர்யமும் துக்கமும் அடைந்தேன். காங்கிரஸ்காரர்கள் எந்த அக்கிரமத்திற்கும் துணிந்து கிற்பதை உணர்ந்தேன். ஆயினும் அந்தக் கடிதத்திற்கு ஒரு பதிலும் நான் எழுதவில்லை.

இக்கப் பொய்க் கதையை அவர்கள் போலீசுக்கு எழுதி என்னை பயமுறுத்த ஏற்பாடு செய்தனர்.

காலதீ ஜப தினத்தன்று நான் ஜபம் செய்ய ஆரம்பிக்குமுன் இண்டு போலீஸார் என் வீட்டிற்கு வந்து என்னை விசாரணை செய்தார்கள். மயானத்தில் மந்திர பிரயோகம் நடக்கும் அபாண்ட புளுகைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாதென்றும் இது வெறும் பொய்க் கற்பனையென்றும் போலீஸாரிடம் நான் தக்க ஆதாரங்களுடன் சொன்னதைக் கேட்டு போலீஸார் நிருப்தியடைந்து மந்திர பிரயோகக் கதை வெறும் பொய் என்றும் கம்பக் கூடியதல்லவென்றும் மேல் அதிகாரிகளுக்கு ரிபோர்ட் செய்து விட்டனர்.

இதனால் ஏமாற்றமடைந்த காங்கிரஸ் தலைவர்கள் வேறு புதிய புளுகு ஒன்றை ஸ்ருஷ்டித்தனர். ஒரு வீட்டிற்குள் இண்டு மீனியாளி மந்திரவாதிகளை அடைத்து காங்கள் பூட்டி வைத்திருப்பதாயும், அவ்விருவர்களும் வெளியே வரமுடியாமல் தவித்துக் கூச்சலிடுவதாயும் மதுரை முனிஸிபல் கௌன்ஸிலரும், லக்ஷுமாகிய ஒரு காங்கிரஸ்காரர்கள் போலீஸாரிடம் புகார் கொடுத்தார். இதன் மேல் போலீஸார் அந்த வீட்டைச் சோதனை போடவந்தார்கள். அந்த வீட்டு வாசல்முன் லக்ஷுமாக ஜனங்கள்வரையில் கூடிவிட்டனர். உள்ளே அடைபட்டிருப்பதாக கூறப்பட்ட இண்டு மனிதர்களும் வெளியில் கூட்டத்திலேயே இருப்பதாகப் போலீஸாருக்குத் தெரிவிக்கப் பட்டது. ஆயினும் போலீஸார், பூட்டியிருந்த அந்த வீட்டைத் திறந்து கொண்டு உள்ளே சென்று ஒவ்வொரு அறையிலும் சோதனை செய்தனர். ஒருவரும் அங்கு இல்லை. மனுதார் விருப்பப்படி மச்சு, களஞ்சியம், இணை, கக்கூஸ் முதலிய விடங்களைக்கூட போலீஸார் சோதித்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாக பூஜை அறையைச்சோதிக்க வேண்டுமென்றும், அங்கு கோழி குருதித்தலைகளும், கள்ளுப்புட்டிகளுமிருப்பதாகச்சொல்லப்படவே அதையும் போலீஸார் சோதித்தனர். அதனும் பொய்யென்று தெளிவாகியது. கடைசியாகப் போலீஸார் இதெலாம் பொய் என்று கண்டுகொண்டு மனுதாரைப்பலமாகக் கோபித்துக் கண்டித்தனர். பொறுப்புள்ள ஒருகனவான் இத்தமாதிரி பொய்களிளருஷ்டித்துப் போலீஸாரை வீணாக சிரமப்படுத்துவதும் பொய் பாப்பி அமைதிக்குப்பதகம் செய்வதுமிக்க அக்மமென்ற அந்த கூட்டத்திலேயே போலீஸார் கண்டித்துவிட்டுச் சென்றனர். இந்த நாடகம் இத்துடன் முடிவு பெற்றது கடையாக உண்மைவெளிவந்தது. இண்டுபேருக்கு 5C ரூ வீதம் கூலிகொடுத்து மை பொய்களை பரப்பும்படி. இரு காங்கிரஸ் தலைவர்கள் ஏற்பாடு செய்ததாக உண்மை ஜனங்களுக்குத் தெரிந்து விட்டது.

திருப்பரங்குன்றத்து ஸ்வாமி மதுரையிலிருந்து திரும்பும் போது காங்கள் வெகு பலமாக ஸத்யாக்ரஹம் செய்ய ஏற்பாடு செய்திருந்தோம். அதைத் தடுப்பதற்காவும் தென்றைகாடு ஜில்லா எலெக்ஷன் உதவிக்கு என்னைப் போக விடாமல் தடுக்கவும் மேற்க்கண்ட பொய்யான பிசாரம் நடத்தப்பட்டதென்று எனக்கு பிறகு தெரியவந்தது.

"பலாத்காரத்தைத் தடுத்தேன்"

மதுரையில் ஆலயப்பிரவேசத்தைத் தடுப்பதற்காக பலாத்காரத்தையும், ஹிம்சையையும் கைகொள்ள அனேகர் முயற்சித்தனர். இதற்கு அதமநி தரும்படி ஸனாதன தலைவர்களை அவர்கள் கேட்டனர். ஆனால் நமது தலைவர்கள் அதற்கு அனுமதிகொடுக்க மறுத்ததுடன் பலாத்காரத்தில் இறங்கும் ஸனாதனிகளாயிருந்தாலும் அவர்களை கைது செய்யப் போலீஸாருக்கு நாங்கள் உதவி செய்ய கேஸ் நடத்தும்படி செய்வோமென்று கண்டிப்பாகச் சொல்லி விட்டோம். இது ஹிந்து, மெயில் முதலிய பத்திரிகை நிருபர்களுக்கும் நன்கு தெரிந்த விஷயம். அப்படியிருந்தும் அந்த விஷயம் பத்திரிகைகளில் வெளிவரவில்லை. இன்று மதுரையில் ரத்தம் சிந்தாமல் ஸமாதானம் நிலவுவதற்கு ஸாதனத் தலைவர்களே காரணமென்பதை ஸர்க்கார் கூட நன்கு அறிவார்கள்.

பஞ்சமருடன் சேர நாடார்களின் வெட்கம்

25 ஆயிரம் ரூ மான்யத்தைத்திருப்பிக்கொடு!

மேற்கொண்டு ஸ்ரீ நடேசய்யர் பேசுகையில் சொன்னதாவது :—

மீனாக்ஷி கோவிலில் ஆலயப் பிரவேசம் செய்து வைப்பதற்காக நாடார் ஸமூகத்தினர் தங்கள் மஹமை பண்டுக் தொகையிலிருந்து ரூ 25 ஆயிரம் ஹரிஜன ஸேவா சங்கத்தின் வசம் கொடுத்ததாகத் தெரிகிறது.

ஆயினும் நாடார்களுள் இப்போது பெரிய பிளவு ஏற்பட்டிருக்கிறது. நாடார்களில் வெகு பேர் தங்களைப் பஞ்சமர்களுக்கு ஸமமான நிலையில் வைத்த அவர்களுடன் சேர்ந்து ஆலயக்தொழுவது அவமானமென்றும், ஜாதி ஹிந்துக்கள் ப்ரமாணம்பட பதிஷ்டிக்கித்துவிட்ட கோவிலில், தாங்களும், பஞ்சமரும் மட்டும் போவது தங்கள் ஸ்வயமரியாதைக்கும் ஜாதிகௌரவத்திற்கும் ஏற்ற தாயில்லையென்றும் வாதிப்பதுடன் அவர்கள் கோவிலுக்குப் போவதிலும் சித்தகொள்ளவில்லை. வேறு சில் தற்காலிகமாகப் பஞ்சமருடன் சேர்ந்த போனாலும், காலக்கிரமத்தில் தங்கள் நிலைமை ஸ்திரப்பட்டவுடன் பஞ்சமரை விலக்க முயற்சிக்கலாமென்று கினைப்பதாகத்தெரிகிறது. எப்படியும் மஹமைப் பணம் பொதுவாகையால் அதிலிருக்கு 25 ஆயிரம் கொடுத்தது தவறென்றும், இதைத்திருப்பி வாங்கிவிடவேண்டுமென்றும் கிளர்ச்சியாரம்பித்து விட்டது. இதன் பலனாக் கோர்ட்டில் கேஸ் தாக்கல் செய்யப்படுமென்றும் ப்ரஸ்தாபமிருக்கிறது. எப்படியும் நாடார்கள் இப்போது பச்சாத்தாபம் ஏற்பட்டிருப்பது நிச்சயம். இத்தகைய முக்யவிஷயங்களெல்லாம் பத்திரிகைகளில் வெளிவருவதில்லை.' 'என்று கூறினர்

Mammoth Meeting at Kumbakonam. Protest against Temple Entry

A largely attended public meeting was held at Dhabir Ghat on Monday the 11 th Sept. 1939 at 7 P. M. Brahmasri Tata desika Tatachariar presided. The following resolutions were passed unanimously:—

I. This meeting strongly condemns the Police lathi charge on orthodox women at Srirangam on the 9th instant, and deeply deplores that such ugly happenings should have been allowed to take place in the presence of Minister Dr. Rajan. This meeting further demands that an impartial committee should be immediately appointed for enquiring into and reporting about the said incidents.

II. This meeting calls public attention to the recent speech of Minister Gopala Reddy at Mangalore expressing sorrow that the Harijans did not demand Temple-Entry, which proves the Sanatanists contention that the temple-entry movement is not spontaneous but artificial and engineered.

III. This meeting strongly condemns the open and coercive propaganda carried by the Congress Ministers and especially Dr. Rajan for achieving Temple Entry as being unjust and improper and in contravention of the professed methods and motives of the Temple-Entry Act.

IV. This meeting declares that the result of the South-Arcot bye election cannot in any way be decisive of the question whether the Temple Entry movement is just or right, and the Premier himself has emphatically affirmed this position only two days before the Election date.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஆவணிமீ 29உ

டிரஸ்டிகளிடம் துஷ்பிரசாரம்?

சென்னை ஆலயப்பிரவேசப் பாதுகாப்புச் சட்டத்திற்கு வைஸ்ராய் அனுமதியும் வாங்கப்பட்டு விட்டது. இந்த பலத்தையைத் தாங் கொண்டு மந்திரி கனம் ராஜன் டிரஸ்டிகளையும் பூஜகர்களையும் கண்டுபேசி ஸரிப்படுத்த ஓர் சுற்றுப்பிரயாணத்தை கடத்தி வருகிறார். இதுவரையில் கிடைத்துள்ள தகவல் களிலிருந்து கனம் மந்திரி டிரஸ்டிகளைத் தூண்டி விட்டு ஆலயப்பிரவேசத்தை நிறைவேற்றி வைக்க முற்பட்டிருப்பதாகவே தெரிகிறது. அவர் போகு மிடங்களில் டிரஸ்டிகளை ஸந்தித்துப் பேசுகையில் "சட்டத்திற்கு வைஸ்ராய் அதமதி கிடைத்து விட்டதாயும், இனி ஆலயப் பிரவேசத்திற்குத் தடை கிடையா தென்றும், எத்த முறையில் அதைச் செய்ய வைக்கலா மென்றே இப்போது யோஜனையென்றும், ஆகம சாஸ்திரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லையென்றும்" வேறு பல மாதிரியாகவும் கனம் ராஜன் சொல்லி வருவதாகத் தெரிகிறது. பொறுப்புவாய்ந்த மந்திரி யொருவர் இம்மாதிரி பிரசாரம் செய்வது நீதிவரம்புகளும், சட்ட நியமத்திற்கும் ஏற்றதாயில்லை. அதிலும் முக்யமாக பிறிந்த ஆலயப்பிரவேச் சட்டத்தின் நோக்கத்திற்கும் முற்றிலும் முரண்பட்டதாயிருக்கிறது. கனம் ராஜன் தேவஸ்தான இலாகா மந்திரியாயிருப்பவர். தேவாலய டிரஸ்டிகள் அவருடைய சோனை. ஆகிய்த்திற்கு உட்பட்டவர்களல்ல. அப்படியிருக்கும் கனம் மந்திரி டிரஸ்டிகளைக் கண்டு பேசவோ, தனிவிட வோ முன் வந்திருப்பது அவருடைய செல்வாக்கை தஷ்பிரயோகம் செய்வதாயிருக் கிறதுடன் அவருடைய அதிகார எல்லையை மீறுவதாயு மிருக்கிறது.

இப்பொழுது நிறைவேற்றப் பட்டுள்ள சட்டப்படி கோமுகமாக ஆலயப்பிரவேசம் செய்ய இடமில்லை, டிரஸ்டிகளோ, பூஜகர்களோ ஸம்மதித்தாலல்லது ஆலயப்பிரவேசம் நடத்த முடியாது. அதற்குப் பொதுஜன அபிப்பிராயமும் ஸாதகமாயிருக்க வேண்டும். இவ்வளவு நிபந்தனைக் கிடையில் ஆலயப்பிரவேசம் நடப்பது சிம ஸாத்யமாயிருக்குங். ஆனேக இடங்களில் ஆலயப் பிரவேசமே ஏற்படாமலும் போய் விடலாம். ஆதலால், இந்த சௌகர்யத்தை அறிந்த மந்திரிகள், பொதுஜன அபிப்பிராய மிருப்பதாகச் சொல்லும் படியும், ஆலயப்பிரவேசத்திற்கு அதமதிக்கும்படியும் குறுக்கு வழியில் டிரஸ்டிகளை நிர்ப்பந்திக்க முற்பட்டிருக்கிறதாக நினைக்க வேண்டி யிருக்கிறது. இது நீதிமுறையா? சட்டத்திற்கு ஏற்றதா? அல்காங்குள்ள டிரஸ்டிகள் பொதுஜன அபிப்பிராய மறிந்த நிலைக் கேற்றபடி நடத்து கொள்ளும்படி விட்டு விடுவதல்லவோ நியாய முறை? டிரஸ்டிகளுடைய உரிமைகளில் மந்திரி பிரவேசித்து நிர்ப்பந்தமாக அவர்களைத் தமது வசமாக்கிக் கொள்ள முயற்சிப்பது எவ்வளவு அநீதி? இதைவிட கேர்முகமாய் ஆலயப்பிரவேசத்தை விதிக்கும் சட்டமொன்றை இயற்றி விடலாமே? அதை விட்டு, தாங்கள் நியாயமாயும், நிஷ்பக்ஷபாதமாயும் நடந்து கொள்ளுவது போல் ஏன் பாசாங்கு செய்ய வேணும்?

சென்னை அஸம்பிளியிலும், கௌன்ஸிலும் கனம் பிரதம மந்திரி கூறிய அபிப்பிராயங்களும் உறுதிகளும் காற்றுவாக்கில் விடப்படுமென்ற பொது ஜனங்கள் நினைத்திருக்கமாட்டார்கள். ஆகஸ்ட்மீ 4உ சட்ட சபையில் கனம் பிரதம மந்திரி பின்வருமாறு பேசியிருக்கிறார்:—

"ஸ்தல அபிப்பிராயம் விரோதமாயிருந்தால் ஆலயங்களை திறந்து விட வேண்டுமென்று சொல்லவில்லை.
இந்த மகோதாவைக்கொண்டே ஆலய பிரவேசத்தை தடுத்நிவிட முடியாது. கோவில் வேலை நடக்கவேண்டும். அர்ச்சகர்கள் தங்கள் தொழிலைச் செய்ய வேண்டும். டிரஸ்டியும் தமது வேலையைச்செய்யவேண்டும். ஆலயப்ரவேசம் வேண்டுமென்றால் பொதுஜன அபிப்பிராயத்தை அறிய்ப் பல கருவிகள் உபயோகிக்கப்படலாம்.
இப்படிதான் சொல்லுவதால் பொதுஜன அபிப்பிராயம் விரோதமாயிருக்கும் ஸ்தலங்களிலும் ஆலயப்பிரவேசம் நடத்தவேண்டு மென்று தான் சொல்லுவதாக நினைத்துக்கொள்ளக் கூடாது"

மேலும் ராஜாங்க சபையில் ஸர் பன்னீர்செல்வம் நிருப்பதி கமிஷனர் அங்கு ஆலயப்பிரவேசம் நடத்தி லைக்க முடியாதென்று சொல்லிவிட்டதைப் பற்றி பிரதம மந்திரியிடம் பிஸ்தாபித்தபோது கனம் ஆசாரியார் பதில் கூறியிருப்பதாவது;—

"நாங்கள் அதிகாத்திலிருப்பதால் மட்டும் ஆலயப்பிரவேசம் நடத்த விடாதென்பதும், எங்களால் உத்நிரவிட்டு நடத்தவிடாதென்பதும், நிருப்பதி உத்நியினுல் தெரிந்துகொள்ளக்கூடியது"

இவ்வாறு மிகத்தெளிவாக கனம் பிரதம மந்திரி, கூறியிருக்கிறார். இவிரிருந்து பொதுஜன அபிப்பிராயம் வாங்கப்பட வேணுமென் பதும், அது விரோதமாயிருக்குமிடங்களில் ஆலயப்பிரவேசம் நடத்தக் கூடாதென்பதும், இவ்விஷயத்தில் டிரஸ்டிகளுக்கே அதிக அதிகாரமிருப்பதாயும் அந்த அதிகாத்தில்லவர்கள் மென்டார் குறுக்கிட மாட்டார்களென் பதும் வெகு தெளிவாக இருக்கிறதே! இப்படியிருக்க கனம் ராஜன் அங்காங்கு டிரஸ்டிகளிடம் "இனி ஆலயப்பிரவேசம் கடாதென்ற வாதத்திற்கு இடமில்லையென்றும், அதை எத்த முறையில் செய்வதென்ற விஷயமே யோஜிக்கப்படவேண்டு" மென்றும் சொல்லுவது நீதியா! டிரஸ்டிகள் அங்காங்கு பொதுஜன அபிப்பிராயம் அறிந்து அதன்படியல்லவோ நடக்கவேண்டும். பொதுஜன அபிப்பிராயம் விரோதமாயிருக்குமிடங்களில் ஆலயப்பிரவேசம் நடத்தென்று கனம் பிரதமமந்திரி கூறினாரே! இதை எப்படி அறிவது? இதைபதிற்கொள்ள டிரஸ்டிகளுக்கு உரிமையும், கடமையும் இருக்கிறதாகவே சட்டத்தின் கருத்தென்று ஏற்படுகிறது. இவைகளை உத்தேசித்தல்லவோ மிட்டு உடனேயே தம்மிஷ்டப்படி செய்யும் படி டிரஸ்டிகளை ஏற்புறுத்தலை வாக்குறுதியை மீறுவதாகிறதே!

கனம் ராஜன் டிரஸ்டிகளிடமும், பொதுக் கூட்டங்களிலும் வெளியிட்ட அபிப்பிராயம் உண்மையாயிருந்தால், கவர்ன்மெண்டார் இப்போது பயமுறுத்தல் மூலம் ஆலயப்பிரவேசத்தை சரித்துக் கொள்ள நினைப்பதாகவே பொது ஜனங்கள் நினைக்கிறது. ஆலயப்பிரவேச சட்டத்தை எதிர்ப்பது இனி குற்ற மாகுமென்றும், தண்டனைக்கு இடமாகுமென்றும் கனம் ராஜன் பேசிவருவதாகப்படிக்கிறோம். இதன்கருத்து என்ன வென்று எமக்குக் தெரியவில்லை. இம்மாதிரி டிரஸ்டிகளிடமும் பொது ஜனங் களிடமும் பேசினால் உண்மை நிலைமையை அறியாத பலர் குழப்பமடைந்து மந்திரிகளுக்கு கலபமாக இணங்கிவிடவேண்டி வருமல்லவா?

இம்மாதிரி வரம்பு மீறி மந்திரி தமது அதிகாரத்தை உபயோகிப்பதைப் பொது ஜனங்கள் ஆக்ஷேபிக்க வேணும். வைஸ்ராய் முதல் எல்லா அதிகாரிகளும், தங்கள் வசத்திலிருக்கும் பெருமையைக் கொண்டு எத்த அக்ரமத்தையும் ஜரித்தக் கொள்ளலா மென்றும், கேள்விமுறை இடையாதென்றும் தினைத்து நிற்கும் மந்திரிகளிடம் நியாயம் இடைக்குமென்று நாம் எதிர்பார்ப்பதற் கில்லை. ஆயினும், தன் மநிப்பும், தைர்யமும் உள்ள டிரஸ்டிகளெவரும் மந்திரிகளின் மிறட்டலுக்குச் சட்டப்படி பயப்படவேண்டியதில்லையென்பதை மறக்கக் கூடாது.

ஸ்ரீரங்கம் கோவில் அமளி
(5-ம் பக்கம் தொடர்ச்சி)

அடிக்கும் ஸமயம் எப்பொழுதும் அநியாயம் அநியாயம் என்ற கூச்சல் இளம் பிற்று. அடிபட்டு ரத்தம் சிந்தும் ஸமயத் திலேகூட ஸ்ரீரங்கா! ரங்கநாதா! என்று உச்சரித்துக்கொண்டேஇருந்தார்கள். போலீஸ்காரர்கள் நடுவிடமவும் பயங்கரமான அழுகை குரல்கள் எழும்பிக்கொண்டிருந்தன. அடிக்குப் பயந்தவர்கள் அங்குமிங்கும் இலிபிடித்து ஓடிக் கொண்டிருந்தார்கள்.

இவ்வித குழப்பம் 2 மணி ஸாவகாசம் கூட்டத்தை தாக்கி தாக்கி அடித்த காரணமிகவும் கோரமான தா. இவ்வளவு அக்ரமங்கள் நடந்த பொழுதும் ஜனங்கள் தங்களதொறுமையை இழக்கவில்லை மிகவும் சாந்தமாகவே கடைசிவரை அஹிம்ஸையுடன் இருந்தார்கள்.

ஸ்ரீராஜன் கூட்டத்திற்கு ரிளைவ் போலீஸ் படையும் ஸ்தானாத போலீஸ்காரர்களும் போலீஸ் அதிகாரிகளும் பந்தோபஸ்துக்காக நின்றார்கள். கூட்டத்தில் சுமார் 500 ஜனங்கள் மனக்கொதிப்புடன் இருந்தவர்தார்கள். ஸ்ரீராஜன் கூட்டத்திற்குமேல்புமாக ஆஸ்திக்ர்கள்கூட்டம் வந்தது. கேவலில் இருந்த ஆபிக்கணக்கான ஜனங்கள் அங்கு கூடியிருந்தார்கள். கூட்டம் இரண்டுமணி நடந்தது. இக்கூட்டம் நடந்தஇடம்வழியாக ஸ்ரீராஜன் போலீஸ் ரிளைவ்போலீஸ், ஸார்ஜண்டு இவர்கள் புடைசூழ காரில்சென்றார். ஆஸ்திக்கர்கள் சுமார் 5000 இருக்கும். இரண்டு பக்கங்களிலிருந்தும்கொண்டு வெட்கம்! வெட்கம்! என்று கத்தினார்கள் ஸ்ரீராஜன் கூட்டம் முடிந்ததும் அங்கிருந்து வந்த காங்கிரஸ்காரர்கள் ஆஸ்திக்கர்கள் கூட்டத்தின் மீது மண்ணையும் கல்லையும் வாரி இறைத்தார்கள். கூட்டம் அமைதியை இழக்கமல் இருந்தது. அடிபட்ட ஸ்திரீகளில் ஸ்ரீரங்கத்தம்மாள் முதலியவர்கள் கோமாகக் கடந்த தடியடி பிரயோகத்தை வர்ணித்தார்கள். அந்த ஸ்திரீ படுத்த படுக்கையில் இருக்கிறார்கள் கா முடியவில்லை.

ஸ்திரிகள் சுமார் 5 காட்களாக கோவில் வாசலில் பராவாக இருந்து வருகிறார்கள். அவரவர்கள் தங்கள்தங்கள் உரைச்சியையே அவ்வ வெளியிட்டார்கள். அவர்களை ளைப்பி வேலை செய்யக்கூடிய ஸ்தாபனம் ஒன் றும் ஸ்ரீரங்கத்தில் இல்லை.

ஸ்ரீரங்கம் கோவிலில் அமளி.

டாக்டர் ராஜன் வந்தபோது நடந்த விபரம்.

பல ஸ்திரீகள் காயமுற்றனர்.

(நமது நிருபர்)

ஒரு வராகாலமாகவே ஸ்ரீரங்கத்தில் பலத்த காரமாக ஆலயப்பிரவேசம் நடக்கப் போவதாக பெரும் வதந்தி உலவி வந்தது. அதற்குத் தகுந்தாப்போல் நீண்டதார் சில ர் பலத்தகாரமாக ஆலயத்தில் நுழைய முயற்சித்ததும் தடுக்கப்பட்டது. இதனுல் ஆஸ்திக ஸ்திரீகள் ராளமாக பிரதி தினமும் கோவிலே காத்து வந்தார்கள். இக்கிலையில் மந்திரி கனம் ராஜன் 9—9—39-ல் ஸ்ரீரங்கம் ரங்கநாதன் கோவிலுக்கு வரப்போவதாகவும், கூட நீண்டதாரையும் கூட்டிக்கொண்டும் வரப் போவதாகவும் வதந்தியும் உலாவியது. கனம் ராஜன் குடைத்த முதலிய இடங்களில் டிரஸ்டிகளையும் கோவில் ஸ்பந்திகளையும் கூட்டி ஆலயப்பிரவேசத்தை உடத்தியே நீர வேண்டுமென்று வற்புறுத்தியதும் எல்லோருக்கும் தெரிந்த ரஹஸ்யம். இதனுல் நீண்டதார் பிரவேசத்தை எதிர்ப்பதற்காகவும் தங்களு டைய எதிர்ப்பை கனம் ராஜனிடம் தெரிவிப் பதற்காகவும் 9-9-39-ல் ரங்கநாதன் ஆலயத் தில் ஸ்திரீகள் கூடினார்கள். அன்று காலை 10 மணிக்கு மந்திரி வரப்போவதாக வதந்தி இருக்தகால் காலையிலேயே ராளமான ஸ்திரீ கள் கோவிலில் கூடி விட்டார்கள். 10½ மணிக்கு மந்திரி வரவில்லை.

ஆனாலும் ஸ்திரீகள் அந்த இடத்தை விட்டு அசையவில்லை. ராகே 4½ மணிக்கு மந்திரி வரப்போகிறார் என்ற வெளியிடப்பட்டது. எல்லா ஸ்திரீகளும் அதவரை அங்கேயே உட்கார்ந்திருந்தனர். காழி ஆக ஆகூட்டம் அதிகரித்து விட்டது. மாலை 4 மணிக்கு சுமார் 2000 ஸ்திரீக்கு மேல் ஆர்ய பட்டாள் வாசல் முன் பக்கத்தில் கூடி விட்டார்கள். அவ்வவ்வு ஸ்திரீகளும் ஸ்ரீரங்கராதனின் பாதுகை செய்துகொண்டு மிகவும் சாந்தமான முறையில் இருந்தார்கள். எக்விஸ்யூடிவ் ஆபீஸர் இந்நிலையில் அங்கு வந்த ஸ்திரீகள் உட்கார்ந் திருப்பதைபார்த்தார். அவர்கள் மந்திரி வரும் ஸமயம் அவருக்கு வழிவிட வேண்டுமாதலால் கடுவில் இடத்தை விட்டு விட்டு ஸ்திரீகள் உட்கார வேண்டுமென்று சொன்னார். அவ்விதமே ஸ்திரீகளும் கடுவில் வழிவிட்டு விட்டு உட்கார்ந்து இருந்தார்கள். ஆனால் சற்று கோகழித்து மிஸ். ஆபீஸே ஸ்திரீகளிடம் வந்து மந்திரி வந்து விட்டார். நீங்கள் இங்கு இருக்கக்கூடாது. கலைந்து விடவேண்டும் என்றும் கூறினர். உடனே ஸ்திரீகள் தங்கள் தங்கள் எதிர்ப்பை மந்திரிக்கு சாந்தமாக தெரிவிக்கவே கூடியிருப்பதால் கலைந்தேலண்டிய அவசியமில்லை என்று கூறிவிட்டார்கள்.

எக்ஸிக்யூடிவ் ஆபீஸர் எப்படியும் மந்திரி வரும் பொழுது நீங்கள் இங்கு இருக்கக்கூடாதென்ற வற்புறுத்தினர். அப்படியும் ஸ்திரீகள் இடத்தைவிட்டு அகலவில்லை. இச்த சமயம் கூட்டத்தில் இருந்த ஒருவர் மந்திரி போலீஸோடு வந்து ஆலயப்பிரவேசத்தை தடத்திவிடப்போகிறார். இந்த பொம்மலாட்டகளால் என்ன செய்யமுடியுமென்ற உக்கத்தினர். இதை அனுஸரித்து முதல் தடவையாக ஸ்திரீகள் இருக்கும் இடத்திற்கு 10 போலீஸார்கள் வந்தார்கள். இதனுல் கூட இருந்த ஸ்திரீகள் போலீஸ் பாதுகாப்புடன் ஆலயப்பிரவேசத்தை தடத்திவிடப்போகிறார் களோ என்று ஸ்தேஹித்து ஸ்வாகாரதம் புரிய நிர்மானித்த விட்டார்கள். 5 மணி சுமாருக்கு டாக்டர் ராஜனும் வந்தார். அவருடன் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர், டிப்டி சூப்ரண்டெண்ட் அதிகப்படியாக இன்னும் 15 போலீஸ்காரர்கள் இவர்கள் வந்து விட்டார்கள். இந்த ஸமயம் கூட்டத்திலிருந்த ஒரு ஸ்திரீக்கு ஆவேசம் பிறந்தது. அவள் மூர்ச்சை போய் கீழே விழுந்து விட்டாள். இதனுல் ஸ்திரீகளிடம் விசேஷ பரபரப்பு ஏற்பட்டது. மூர்ச்சை போட்டு விழுந்த ஸ்திரீகளை போலீஸ்காரர்கள் கவனிக்கவில்லை. பல மான கரயம் பட்ட ஸ்திரீகளை அங்கு வந்துள்ள ஆஸ்திக்கரே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள்.

யாது காரணம் பற்றியோ ஆஸ்பத்திரிக்குப் போனவர்கள் ஆரம்பித்தில் மட்டும் கொடுக்கப்பட்டு நிருப்பப்பட்டார்கள். இதற்கு பிறகும் ஸ்திரீகள் தீவரமாக ஸ்வாகாரதம் செய்யப் படுத்திக் கொண்டார்கள். இக்த ஸமயம் ஸ்ரீராஜனுடன்வந்த கே. வி.எஸ். அய்யங்கார் கோவில் உள்ளே போய் விட்டார். ஸ்ரீராஜன் அவர்களும் வெகுநேரமாகியிட்ட தால் இரண்டாவது ஸ்தாபகரிக்கிறதாக் காண்டி உள்ளேபோய்விட்டார், அவருடனேயே ஸ்ரீ காரர்களும் சென்றார்கள். ஸ்வாமி தர்சனமா னவுடன் ஸ்ரீராஜன் உள்ளே போய் உட் கார்ந்து விட்டார்.

வெகு காழி கழித்து கனம் ராஜன் வெளியில் வந்கிட்டார். இந்த ஸமயம் ஒரு ரிளர்வ் போலீஸ் வாரியும் டிஸ்டிரிக்ட் ஸுப்ரண்டெண்டும்வந்துசேர்ந்தார்கள். இவர்கள் வந்த பிறகும் ஸ்வாகாரதம் செய்வதில் பின் வாங்கவில்லை. மந்திரியை ரங்கநாதன் கோவில் பின்புறம் பரமபத வாசல் வழியாக வெளியேற்ற முயற்சி நடக்கது.

இந்த கதவு, வருஷத்திற்கு ஒரு தடவை தான் திறக்கப்படுவது வழக்கம். ஆனாலும் மந்திரிக்காக அதை திறக்க முயற்சி நடக்கது. ஆனால் இக்கவல் தெரிய வரவே ஸ்திரீகளில் பலர் அங்கும் கூடி விட்டார்கள். இதனுல் அந்த முயற்சி கைவிடப்பட்டது. ஸ்ரீராஜன் வசலில் நின்றுகொண்டிருக்கும் ஸமயத்திலேயே, டி ஸர்ச் போலீஸ்காரர் ஸ்திரீகளைக் கலைக்க முற்பட்டார்கள். காலாலும், கையாலும் ஸ்திரீகள் தாக்கப்பட்டார்கள். கடைசியாக, ஸ்திரீகளை கைது செய்வதற்காக, உட்கார்ந்து கொண்டிருக்க ஸ்திரீகளை சங்கிலியால் பிணைத்தார்கள். தடிகளாலும், கை கால்களாலும் ஸ்திரீகளைக் கொப்பு முற்பட்டார்கள். ஸ்திரீ ஸத்யாக்ரஹிகளை கைது செய்து அழைத்துப் போகப்பட்டார்கள். ஸத்யாக்ரஹம் செய்தவர்களும் அடிபட்டவர்களுமாக 19ஸ்திரீகளைப்போலீஸ் கைது செய்திருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட 9 புருஷர்களில் வயோதி தாஸர ராதுரை ஆனந்தாரவ், ரமய்யா பின்னே சேஷாத்ரி இவர்கள் முக்யமானவர்கள்.

ஸ்ரீராஜன் பிறகு கூட்டத்தில் பேசினார். கூட்டத்தில் ஸத்யாக்ரஹம் செய்த ஸ்திரீகளை தாமாருகளுவித்ததுடன்போலீஸ் பந்தோபஸ்துடன் ஆலயப்பிரவேசம் செய்யப்போவதாக பல்முறுத்தினர். பிரிட்டிஷ்கவர்மெண்ட் யுத்தத்தில் இறங்கியிருப்பதால்னைனிகளின் கூக்குரலை அவர்கள் கேட்கமாட்டார்களென்றும், இக்த சமயம் னைனிகளை ஒரு கை பார்த்துவிடுவதாகவும் கூறினர். போலீஸ் தடியடியை ஆரம்பக்கணக்கான ஜனங்கள் கேரில்பார்த்துக்கொண்டிருந்தனர். ஸ்திரீகளை

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

கோவில் டிரஸ்டிகளை நிர்ப்பந்திக்கிறார்

"ஆகமத்தைப்பற்றிக் கவலையில்லையாம்"

தொடந்தையில் டாக்டர் ராஜன் பிரசாரம்

ஸெப்டம்பர் 1உ யன்று கனம் டாக்டர் ராஜன் கும்பகோணத்திற்கு வந்திருந்தார். அவருடன் ஸ்ரீமான் முத்துரங்க முதலியாரும்வந்தார். பல அனுவல்களில் அவர் கலக்து கொண்டார்.

முக்யமாக ஆலயப்பிரவேச விஷயத்தைப் பற்றியே அவர் எங்கும் பேசினர்.

7உ மாலை பிரயாணிகள் பங்களாவில் இவ்வூர் பிரதான கோவில் டிரஸ்டிகள் அதேகர் டாக்டர் ராஜனை ஸந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி அதேக டிரஸ்டிகளும், குருக்கள்களும் அவரிடம் சென்றிருந்தனர். பட்டசாரியர்கள் ஒருவரும் வரவில்லையாம்.

டிரஸ்டிகளோடுபார்த்து கனம் ராஜன் சுருக்கமாக ஓர் பிரஸங்கம் செய்து தீண்டாதாரை கோவிலுள் விடும்படி வற்புறுத்தினாராம்.

தீண்டாமை விலக்கென்பது 20 வருஷமாக பிரசாரம் செய்யப்படுவதாயும், அது புதிதல்ல வென்றும், நிடீரென்று செய்வதாக குறைசொல்ல நியாயமில்லையென்றும், இனி மேல் காத்திருக்க முடியாதென்றும், பாத சுகப்புச்சட்டம் இரு ஸபைகளிலும் நிறை வேறி வைஸ்ராய் அநுமதியையும் பெற்று விட்டதென்றும், தென்னற்காடு எலெக்ஷனி லிருந்து பொதுஜன ஆதரவு இருப்பதும் வெளியாகிவிட்டதாயும், ஆகம சாஸ்திரங்கள் என்ன சொல்லுகின்றன வென்பது தமக்கு தெரியதென்றும், அது எப்படி இருக்தாலும் ஆலயப்பிரவேசம் நடக்க வேண்டியதே தானென்றும், கோவில் உபயங்களும், ஏற்கனவே வந்து கொண்டிருக்த ஸேவார்த்திகளும் குறையாமல் பார்த்துக் கொள்ளுவ தோடு தீண்டாதார் பிரவேசம் நடக்கவேண்டு மென்றும் சொன்னாராம்.

முக்யமாக ஆகம சாஸ்திர விஷயைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லையென் றும் மந்திரி கூறி விட்டதால் டிரஸ்டிகள் திகைத்து வேறு சில அஸைகர்யங்களை வெளியிட்டார்கள். சிலர் பக்ஷ காலம் வர வில்லையென்றனர். வேறு சிலர் எதிர்ப்பு அதிகமாயிருப்பதாகக் கூறினர்கள். கோவில் உபயங்கள், நின்று விடுமென்றும், அதனால் பெரிய பாதகமேற்படுமென்றும் சிலர் எடுத்துக் காட்டினர்.

கடைசியாக மந்திரி பேசுகையில் அவஸரப் பட்டு உடனே ஆலயப்பிரவேசம் செய்ய வேண்டுமென்று தாம் சொல்ல வில்லையென் றும், பழைய உபாயங்களும், பழைய வே வசர்த்திகளும் எப்போதும்போல் இருக்கும் படி செய்தால் அல்லது தீண்டாதார் மட்டும் பிரவேசிப்பதில் பலனில்லையென்றும், ஆகை யால் அந்த வழியில் டிரஸ்டிகள் முயற்சிக்க வேண்டுமென்றும், இஷ்டமில்லாமலோ, விரோதமாகவோ இருக்கும் டிரஸ்டிகளைத் தாம் கவனித்துக் கொள்ளுவதாயும் கூறினாராம்.

கடைசியாக டிரஸ்டிகள் எவ்வித முடிவும் கூறாமல் கலைந்து போய் விட்டனர். காந்தி பார்க் கூட்டத்திலும் கனம் ராஜன் இதே விஷயத்தை விஸ்தாரமாகப் பேசினர்.

மற்றொரு கூட்டம்

10உ ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு குடந்தை ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவில் ஸன்னிதி தெருவில் மீண்டும் ஆஸ்திகர்களின் கூட்டம் கடைபெற்றது. மழைத்தூரல் ஏற்பட்டதால் டிஸ்டிக்டின் அனுமதி பெற்ற கோலிஜுக்குள் கடைபெறவேண்டிய தாயிற்று.

பொது ஜனங்கள் ஏராளமாகக்கூடியிருந்தனர்.

அக்னிஹோத்ரம் ஸ்ரீ கோபாலதேசிக சாரியார் தலைமை வஹித்துக் கூட்டத்தின் நோக்கத்தைக் கூறி, எதிர் கக்ஷியார் மீண்டும் கலவரம் செய்யக்கூடாதென்று எச்சரித்தார்.

அக்னிஹோத்ரம் ஸ்ரீராமானுஜதாதாசாரியர் பேசுகையில் ஸ்ரீரங்கத்தில் ஸாதிக்கமான முறையில் நடத்திகொண்ட ஸ்நிதீகளின் மீது மந்திரி கனம் ராஜன் முன்னிலையிலேயே வெகு குரூரமாகத்தடியடிப் பிரயோகம் செய் யப்பட்ட விவரத்தைச்சொன்னர். வைஸ்ராய் அனுமதி, எலெக்ஷன் முடிவு, காங்கிரஸ் பொய் பிரசாரம் ஆயிவைகளுக்குத் தக்க முறையில் பதிலளித்தார்.

பிறகு ஸ்ரீ ராமணாவ் பேசுகையிலும் ஸ்ரீரங்கம் ஸம்பவங்களைக்குறிப்பிட்டு, ஸ்நிதி களே நமது இயக்கத்துக்கு வெற்றி வாங்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீமான் கடாஜய்யர் பேசுகையில் காங் கிரஸ் ஸ்தாபனம் ஹரிஜன முழுஹத்திற்குச் செய்து வரும் நீமைகளைத் தலைவர்களின். வார்த்தைகளைக் கொண்டே ருஜு செய்து பேசினர்.

ஸ்ரீமான். ப. ஸ்ரீனிவாஸாசவாசாரியர் ஸ்ரோமணி, திருபாணழ்வார் சரித்திரத்தை யும் பாசுரங்களை எடுத்துச் சொல்லி அவை ஆலயப்பிரவேசத்திற்கு ஆதாரமல்லவென்று அதற்கு விபரீதமாகவே இருப்பதாயும் நிரூ பித்து வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஸ்ரீ கம்மாழ்வார் போன்றவர்களை எவ்வகையில் ஆசாரியராகக் கொண்டாடுகிறோமென்ற உண்மையையும் விளக்கி, ஸ்ரீமான் முத்து ரங்க முதலியார் தமது சொந்த கோவில் களில் ஏன் ஆலயப்பிரவேசம் செய்ய வைக்க வில்லை என்ற கேட்டார்!

ஸ்ரீமான் நிண்டிவனம் ஸுந்தரேச சர்மா ஸ்ரீசுந்தனர் சரித்திர உண்மையைத் தக்கப் படி விளக்கி அவர் சரித்நிரமானது ஆலயப் பிரவேசத்திற்கு அதகலல்லமென்பதை நிரூபணம் செய்தார்.

ஸ்ரீமான் ஸாரதாசாரியர் காங்கிரஸ் அநியைக் கண்டித்துச்சிறிது பேசினர். தலை வரின் முடிவுரைக்குப்பிறகு வர்தனேபசாரத் துடன் கூட்டம் கலைந்தது. (க நி.)

டபீர் படித்துரையில் ஆஸ்திகர் கூட்டம்

ஸ்ரீரங்கம் தடியடிக் கண்டனம்

ஸெப்டம்பர் மீ 11உ நிக்கிழமை மாலை 7 மணிக்கு குடந்தை டபீர் படித்துரை யில், ஸ்ரீரங்கம் தடியடி ஸம்பவத்தைக் கண்டி க்க ஆஸ்திகர்களின் பொதுக் கூட்டமொன் று கடைபெற்றது. அதேக ஜனங்கள் கூடியிருந்ததுடன் ஸ்நிதீகளும், ப்ராமணர்கள் ஸாதார்களும் அதேகர் வந்திருந்தனர்.

ஸ்ரீமான் அக்னிஹோத்ரம் தாதாசாரிய ஸ்வாமிகள் அக்ரஸனம் வஹித்து வைதீக மதத்தின் சிறப்பையும், ராஜ்ய நிர்வாக தர்மம் களைப்பற்றி வேதங்களில் கூறப்பட்டிருப்ப தைச் சொல்லி, ஆலயப்பிரவேச அக்நிமத் தைக் கண்டித்தார். மதுரை வித்வான் ப்ரம்ம ஸ்ரீ எம். என். ஸுப்ரமண்ய சாஸ்திரிகள் கமது மதத்தின் மஹிமைகளை விளக்கித்துப் பேசி, காங்கிரஸ்காரர்களும், காந்திஜியும் கமது மதத்தை அழிக்க முன் வந்திருப்பதைப் பல மாகக் கண்டித்தார்.

பிறகு அக்நிஹோத்ரம் ஸ்ரீ கோபால தேசிகாசாரியார் பேசுகையில், ஆலயப்பிர வேச மஸோதாவுக்கு வைஸ்ராய் அனுமதி கொடுக்க வேண்டி வந்த நிர்ப்பந்தத்தைப் பற்றியும், தென்னற்காடு எலெக்ஷனில் காங் கிரஸுக்கு எதிரான அபிப்பிராயமே வெளியாகி இருக்கிறதென்றும், ஜஸ்டிஸ் கக்ஷியைவிட காங்கிரஸில் மத கப் பிக்கையற்றவர்களும் மத விரோதிகளும், ப்ரம்மணத்வேஷிகளும் மிக வும் அதிகமாயிருப்பதாக நிரூபித்து ஸனாதனி கள் ஜஸ்டிஸுடன் சேர்ந்துவிட்டதாக காங் கிரஸ்காரர் கூச்சலிடுவதில் அர்த்தமில்லை யென்றும் விளக்கிக் கூறினர்.

பிறகு அட்வகேட் ஸ்ரீமான் ஜி. வி. வெங் கடாசலய்யாவர்களால் "ஸ்ரீரங்கம் ஸ்நிதீகள் மீது தடியடி பிரயோகம் செய்யப்பட்ட தைக் கண்டித்தும், அந்த ஸ்நிதீகளைப் பார ட்டியும், தென்னற்காடு எலெக்ஷனிலிருந்த ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவு ஏற்பட்டு விட்டதாக மந்திரிகள் பிரசாரம் செய்வதை ஆக்ஷேபித்தும், டாக்டர் ராஜன் அங்காங்கு டிரஸ்டிகளை ஆலயப்பிரவேசத்திற்குத் தூண்டி விட்டு பயமாயும் பயமாயும் அவர்களிடையில் திருப்பிரசாரம் செய்வதைக் கண்டித்தும், மங் களூரில் கனம் கோபால் செட்டி தீண்டாதார ரை "ஏன் ஆலயப்பிரவேசம் வேண்டுமென் றும் கீங்கள் கேட்கவில்லை" என்றுசொன்ன திலிருந்து தீண்டாதார் ஆலயப்பிரவேசத் தை வேண்டி இல்லையென்பது ஸ்நிரூபிப்பட் விட்டதாயும் சில நீர்மானங்களை" ஸபையில் பிரேரேபித்துப் பேசினர்.

ஸ்ரீமான்கள் நாராயணராவ் ராமானுஜ தாசாரியர் ஆகியவர்களால் ஆமோதிக்கப் பட்டும், ஆதரிக்கப்பட்டும் நீர்மானங்கள் கிறைவேறின.

(நீர்மானங்களின் முழு விவரம் இன்று இங்கிலீஷில் வேறு பத்தியில் பிரசுரிக்கப்பட் டிருக்கிறது.)

பிறகு அக்ராஸனநிபதிக்கும் மற்றவர்களு க்கும் ஸ்ரீமான் கடாஜ அய்யரால் வர்தனேப சாரங்கள் கூறப்பட்டுக் கூட்டம் அமைதி யாக முடிவு பெற்றது. (க. நி.)

"ஆலயங்களை அழிக்கும் மந்திரிகளே ராஜிநாமா செய்க"

திருவிடமருதூரில் கனம் ராஜனுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

"தீண்டாதாரை அழைத்து வருகீரோ ?"

6உ புதன்பெமை மாலை டாக்டர் ராஜன் அமதி பரிவாங்களுடன் திருவிடமரு தூருக்கு வந்தார். ஸ்ரீலஸ்ரீ பண்டார ஸன் னிதிகளை ஸந்தித்த ஆலயப்பிரவேச விஷய மாக அபிப்பிராயம் கேட்டார். பொதுஜன அபிப்பிராயமும், சாஸ்திர விதியும் எப்படி யென்று அதற்கு அதன்படி நடப்பதாக பண்டார ஸன்னிதிகள் கூறியதாகத் தெரி கிறது.

பிறகு கனம் ராஜன் ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமி கோவில் தர்சனத்திற்குச் சென்றார். வழி யெடுக எதிர் ஆர்ப்பாட்டங்கள் வெகு பல மாயிருந்தன. ஆபிரக்கணக்கான மக்கள்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க).

குடந்தை ஆஸ்திகர்களின் பொதுக்கூட்டம்

காங்கிரஸ் பொய் பிரசாரத்திற்கு பதில்

காங்கிரஸ்காரர்களின் சாணி உருண்டை வீச்சு!

ஸெப்டம்பர் மீ 9உ சனிக்கிழமை மாலை கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோவில் ஸன்னிதிதெருவில் ஆஸ்திக மகா ஜனங்களின் பொதுக்கூட்டமொன்று கடை பெற்றது. ஜனக்கூட்டம் வெகு பெரிதாயி ருந்தது. ஏராளமாக ஸ்நிதீகளும் கூடியிருந்த னர்.

மதுரை வித்வான் ப்ரம்மஸ்ரீ எம். என். ஸுப்ரமண்ய சாஸ்திரிகள் கூட்டத்தில் தலை மை வஹித்து கூட்டத்தின் நோக்கத்தைக் கூறி, ஹிந்து மதத்தின் சிறப்பைப் பற்றி அழகாக யாவர் மனதிலும் பதியும்படி எடுத் துக்கூறினர்.

பிறகு அக்னிஹோத்ரம் ஸ்ரீ கோபாலதேசி காசாரியார் பேசுகையில், தென்னற்காடு எலெக்ஷன் முடிவினும், வைஸ்ராய் அநும நியாலும், ஆலயப்பிரவேசத்திற்கு தேசத் ஆதரவு கிடைத்து விட்டதாக காங்கிரஸ் வாதி கள் பொய் பிரசாரம் செய்த ஜனங்களை ஏமாற்றி வருவதை வெகு பமாகக் கண்டித் துப்பேசினர். வைஸ்ராய் அனுமதியோ, எலெக்ஷன் முடிவோ, ஆலயப்பிரவேசத்திற் குச்சாதகமாகி விடாதென்பதை பல ஆதாரங் களுடன் எடுத்துரைத்தார். மேலும் கனம் ராஜன் கோவில் டிரஸ்டிகளை நிர்பந்திப்பதை யும் ஆக்ஷேபித்துப்பேசினர்.

இச்சமயம் காங்கிரஸ்காரர்கள் சாணி உருண்டைகளை வீசி யெற்நினர். தலைவர் ஆஸனத்தில் அவை விழ்ந்தன. கற்களும் விழுந்தன. போலீஸார் சிலரைப்பிடித்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனர்கள்.

கூட்டத்தில் வேண்டுமென்றே புகைச் சுருட்டுப் பிடித்து விஷமம் செய்ய முன் வந்த காங்கிரஸ் காலிகளும் அப்புறப்படுத்தப் பட்டபின் கூட்டம் அமைதியாக நடந்தது.

ஸ்ரீமான் நடாஜ அய்யர் பேசுகையில் இத்தகையை விஷயங்களுக்கு ஒருவரும் பயப்படமாட்டார்களென்றும், எதிர் கக்ஷி னர் காந்தி ஸிஷ்யர்களாயிருந்தால் அமைதி யாக ஒதுங்கி விடுவதே நியாயமென்று சொல்லிவிட்டு, காங்கிரஸானது ஹிந்து மதத் திற்குச் செய்துள்ள நீமைகளை ஒவ்வொன் றாக நிரூபணம் செய்தார்.

நிண்டிவனம் ஸ்ரீ ஸுந்தரேச சர்மா பேசு கையில், சாணியை ஹிந்துக்கள் பரிசுத்த நிவியமாக பாவிப்பதால் எதிரிகள் அதை நமக்கு காணிக்கையாக கொடுத்தார்களென் றும், மதுரை கோவில் இந்த சாணியைக் கொண்டே பரிசுத்தமாக்க வேண்டுமென்று அவர்களுடைய கருத்துப் போலிருக்கிற தென்றும், ஹிந்துகள் பரிசுத்தமாக தரிக்கும் விபூதியும் இந்த சாணியிலிருந்தே உண்டான தாயும் சொல்லி கிட்டு, தென்னற்காடு ஜில்லா எலெக்ஷனில் ரெட்டி வகுப்பாரின் ஸக்தேத்நினாலும், வேறு இயற்கையான காரணங்களாலுமே காங்கிரஸ் வெற்றி யடைந்த தென்பதை குறிப்பிட்டார்.

ஸ்ரீமான் நாகராஜய்யர இங்கிலீஷில் பேசு கையில் காங்கிரஸ் ஸபையும், காந்திஜியும் ஹிந்து ஸமூஹத்தின் ராஜீய, மத சமூக விஷயங்களில் அலக்ஷியமாயிருக்துவருவதைக் குறிப்பிட்டார்.

கூலிவரின் முடிவுரைக்குப் பிறகு வர்தனே பசாரத்துடன் கூட்டம் அமைதியாகக் கலைக் தது.

சில நிறவர்கள் ஏதோ கேள்வி கேட்க முன் வந்ததற்கு இக்கூட்டத்தில் அதற்கு அவசரம் இடையதென்று தலைவர் கூறவே அவர்கள் போய்விட்டார்கள்.

படித்தவர்களின் திண்டாட்டம்.

(ஸ்ரீ V. பஞ்சாபகேசய்யர், சேங்காலிபுரம்.)

இக்காப் பிரிவினை தற்காலம் உலகம் முழு வதையும் பாதித்து வருகிறது. புராதன காலங்களில் கம் தேசத்தில் இவ்விபத்தை பரிகரிக்கவேண்டி பழைய அரசர்கள் கஷ்டப் பட்டதாகத் தெரியவில்லை; படிப்பு ஒரு விபத்தாய் முடிவது பெரிய விபரீதமல்லவா? இதன் காரணத்தை அதிகாதத்திலுள்ளவர் களும், தற்காலப் படிப்புக்குக் காரணமா யுள்ளவர்களும், சிந்தித்துப் பரிக்கவேண் டும்.

சென்ற வெள்ளிக்கிழமை 25—8—39ல் பம்பாயில் கடந்த ஒரு சம்பவம் செவ்வாய் கிழமை ஹிந்துவில் பிரசுரமாயிருக்கிறது. அது பின்வருமாறு :—

"ஒரு படிக்க வேலையில்லாதவன் பம்பாய் ப் பிரிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் முன் ஒரு மனுக்கொடுத்தான். அதில் தன்பேரில் தயவு செய்து ஜெயிலுக்குபபவேண்டு மென்று கண்டிருந்தது. தனக்காகவும் தன் னோபோன்ற மற்ற நூறு பெயர்களுக்காக வும் இந்த மனுக்கொடுத்ததாகச் சொன் னான். தற்காலம் ஜீவனம் செய்ய முடிய வில்லையென்றும் ஜெயிலில் இலவசமாய் வாசஸ்தானமும், ஆகாரமும், வஸ்திரமும், கிடைப்பதால்தன் பேரில் தயை கூர்ந்து நியாயாதிபதி ஜெயிலுக்குபபவேண்டு மென்று விண்ணப்பித்துக்கொண்டான். மாஜிஸ்ட்ரேட் ஏதாவது குற்றம் செய்திருந் தாலொழிய அவன் கேட்டுக்கொண்டபடி செய்யமுடியாதென்று சொல்லிவிட்டார்."

இதன் முடிவு என்ன ஆகுமென்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். உண்மையாய் அந்த மனிதன் ஜெயில் வாசத்தை விரும் பியவனாயிருந்தால், மாஜிஸ்ட்ரேட்டின் உத் நியைபனுசரித்து ஏதாவது காரியம் செய்ய மாட்டானென்று எப்படி கம்பமுடியும்? கமினப் படிப்பு முறைக்கு இது கருக்த நிருஷ்டாந்தமாகும்.

கம து புராதனர்கள் ஐரோப்பியர்கள் மந்நிரி அக்காலத்தில் படிக்காமலில்லை. ஒவ் வொரு மனிதனும் கட்டாயம் விதியப் பியாசம் செய்ய வேண்டுமென்று விதிக்கப் பட்டு அம்மாதிரியே அகேகமாய் கடந்நி ருப்பதாய்த் தெரிகிறது. அவர்கள் படித்த முறையால்தான் அச்சுக்களும் காந்தங் களுமில்லாமலேயே வேதங்களும் சாஸ்தி ரங்களும் இதுவரை நமக்குக் கிடைத்திருக் கிறது. ஆனல் அந்தக்காலங்களில் இப்படிப் பட்ட "நிண்டாட்டங்கள்" இல்லாமலிருக்க இப்போது மாத்நிரம் வருவானேன்! இதைத் தான் யோசிக்கவேண்டும்.

கமது புராதன வித்தைகளை "படிப்பு" என்று சொன்னல் இப்போதைய வித்தியாப் யாசத்தை சரியான முறையில் "அழிப்பு" என்றுதான் சொல்லவேண்டும். அல்லது பிழைக்க வழி கற்றுக்கொடுப்பது என்று வேண்டுமானலும் சொல்லலாம். "வித்தியை" என்று சொல்வது தகாது. ஏனெனில் வித் தியை உண்மையில் தக்கத்தைப் போக் கடிக்கவேண்டும். தற்காலப்படிப்போ அக் கத்தையுண்டுபண்ணி விடுகிறது. குமான்ய வேலை கிடைக்காவிட்டால் ஜீவிக்கமுடிய வில்லை. கிடைப்பதைக்கொண்டு காலட் சேபம் செய்ய வழி தெரியவில்லை. கமது புராதனப் படிப்பே பாபபேட்டையற்ற ஜீவிப்பையே முக்கிய நோக்கமாகக் கொண் டது. இதர நாடுகள் வருங்காலங்களில் ஆதரவுன் நம்மை உதவக்கூடியது. என்ன வித்தியாசம் பாருங்கள்!

இன்னும் நற்காலத்திலும் பார்க்கலாம். ஆங்கியை எல்லாமும் இன்னும் கடன் வாங் கியும் சிலவழித்து ஆங்கிலக் கல்வி கற்று இந்த நாடுகளையெல்லாம் வாவழைத்துக் கொள்ளாமல், வேண்டுமென்றே அல்லது ஆங்கிலப் படிப்புக்கு சில செய்ய முடியாத தாலோ, பழைய முறையில் வேதங்களையும் சமஸ்கிருத பாஷையையும் கற்றவர்கள் இப் படி சொல்லுகையில்லை. படிப்புக் காக கடன் வாங்கவுமில்லை. வேலையில்லா மல் நிண்டாடவுமில்லை. தற்கொலைகள்செய்து கொள்ளவேண்டுமென்றுமுபற்சிக்கவுமில்லை. ஒன்றுமில்லாவிடினும் யோக்கியமாய் காலட் சேபம் செய்து வந்தார்கள்.

ஏது படிப்பு என்பதை யோசித்து அக்க வழியில் பெரும்பாலோர் போயிருந்தால் இப் போது கமது மதத்திற்கு வந்திருக்கும் ஆபத் தக்கள் ஒன்றுமே வந்திராது. இப்படிப் பட்ட நிண்டாட்டங்களொன்றும் சேர்க் நிராது. ஆகையால் வாப்போரும் தினமுறை யிலாவது இன்னும் அதிக அனர்த்தங்கள் சோவண்ணமும் இவ்வளவு யுகங்களாய் கப் பற்றப்பட்டு வந்திருக்கும் கமது வேதங் மும் சாஸ்நிரங்களும் அழியாவண்ணமும் பெரியவர்கள் முயற்சிக்க வேண்டும்.

WEEK BY WEEK.

Deficit Budget in 90% of District Boards.

90% of District Boards had defecit budget, but went on increasing the Number of schools, not to satisfying educational needs of the locality, but to give employment to favourites. (Minister Varkey, at Trichinopoly on August 27 th)

* * *

Very Akward

Minister Gopal Reddi at Mangalore on 1—8—39 said, he found that complaints against non-Congress Presidents of Panchayat Boards were sent to him by Congress men with the seal of the District Congress Committee. He found it very akward to forward such complaints to the Head of the Departments.

* * *

Why Gandhiji Does not Oppose Share Gambling.

* * * "If I led any agitation against the share gambling, I should be in danger of losing some of my willing and regular donors.

* * * If I incited people against the races and the infernal gamble that goes on there, all the high personages from the Viceroy downward would be up in arms against me, * * If I led a raging campaign against the Cinemas I should lose caste among educationists and reformers.

* * If I began to organise picketting in respect of them I should lose caste, lose my Mahatmaship and even lose my head." (Gandhiji in 'Harijan', 26—8—39.)

Gandhi's Extraordinary Methods

Mr. M.S. Aney, the President of the fourth session of the All India Anti Communal Award Conference expressed the hope that this pact would open the eyes of all Indians to the dangers incidental to the extraordinary methods to which Mr. Gandhi now and then resorted at the bidding of his "Inner Voice."

* * *

215279

கோயிலும் மதமும்

(திருஅடிகளாசிரியன்)

இப்பொழுது நாட்டைச்சீர்திருத்தற்கென்றும், மக்களே மூட நம்பிக்கையிலிருந்துதட்டியெழுப்புவதற்கென்றும், அடிமைத்தளையிலிருந்து விடச்செய்வதற்கென்றும் நம் நாட்டில் எப்படிபல கட்சிகள் தோன்றியிருக்கின்றனவோ; அதே போலத்தான் நாட்டைசீர்திருத்தற்கும், மக்களே அறிவுடையவர்களாக்குதற்கும் மதங்கள் தோன்றின.

ஒவ்வொரு கட்சிக்காரர்களும் கதர், இராட்டினம், மூவர்ணக்கொடி முதலான பல குறிகளைக் கொண்டதற்போலத்தான்; ஒவ்வொரு மத வாதிகளும், விபூதி உருத்திராக்கம் முதலிய பல குறிகளைக் கொள்வராயினர்.

ஒவ்வொரு கட்சிகளுக்கும் கழகங்கள், சங்கங்கள், காரியாலயங்கள் முதலிய இடங்கள் ஏற்பட்டதற் போலத்தான்; ஒவ்வொரு மதத்திற்கும் மடங்களும், கோயில்களும் ஏற்பட்டுள்ளன.

ஒவ்வொரு கட்சியிலும் சக்தாதார்களென்றும், காரியதரிசி என்றும், தலைவர்களென்றும், பிரசாரகர்களென்றும் இருப்பது போற்றான்; ஒவ்வொரு மதத்திலும் பக்தர்களும், மடாதிபதிகளும், புரோகிதர்களும் இருக்கின்றார்கள்.

ஒவ்வொரு கட்சியிலும் சந்தாவென்றும், கன்சொடையென்றும், பணம் வாங்குவது போலத்தான்; ஒவ்வொரு மதத்தில் காணிக்கையென்றும் தானமென்றும் பொருள் வாங்கப்படுகிறது.

ஒவ்வொரு கட்சிக்கும் கொள்கைகளை விரித்தும், பெருமைப்படுத்தியும் நூல்கள் எழுதுவிப்பதைப் போலத்தான்; ஒவ்வொரு மதத்திற்கும் கொள்கைகளை விரித்தும் பெருமை படுத்தியும் நூல்கள் எழுதப் பட்டுள்ளன.

ஒவ்வொரு கட்சிகளும் தங்களுக்குள் சண்டையிட்டு எப்படி நாட்டை வேற்றுமைப்படுத்தி அழிக்கின்றதோ அதுபோலத்தான்; ஒவ்வொரு மதத்திற்கும் கொள்கைகளை விரித்தும் பெருமை படுத்தியும் நூல்கள் எழுதப் பட்டுள்ளன.

ஆகவே,மக்களின் உயிர் நலத்திற்கு மிகவும் உறுதியக்கின்ற மதங்களையும் கோயில்களையும் கட்சியில் சேருபட்ட எந்த அறிவுடைமக்களும் குறை கூறுவரென்றும்; அங்ஙனங் குறை கூறுகின்றவன் மக்களறிவுபடாத விலங்குணர்ச்சியுடையவனென்றும் நாம் அறிவுறுத்துகிறோம்.

உண்மையும் ஒழுக்கமும் மருத அரசியல் தலைவர்களுக்கு என்றுகூறவேண்டுகட்சி உடல் நலனைப் பாதுகாக்கும்; மதம் உயிர் நலனைப் பாதுகாக்கும். நல்ல கட்சியும் நல்ல மதமும் மக்களுக்கு மிகப் பயன் படுவனவாம், எனவே நீங்கள் மதவொழுக்கங்களைப் பாதிக்கும்படி சட்டம் இயற்றலாகாது. மதங்களுக்குஅணுக இருப்பது ஆலயங்களே. இவ்வாலயங்களை முற்காலத்திருந்த அரசர்கள், அவ்வல் மதாபிமானிகளிடமும் மடாதிபதிகளிடமும் ஒப்பித்திருந்தார்கள். அதனாலே அந்தந்த மதவொழுக்கங்கள் அவ்வவ்வாலயங்களில் விளங்கப்பட்டு மதவொழுக்கங்கள் பரவி வந்தன. அதற்கு மாறாக இப்பொழுது கோயில்களை அரசியல் நிர்வாகத்திற் சேர்த்தும் ஆங்கிலப் பட்டதாரிகளைத் தலைவர்களாக்கியும் வைத்தால் மதவொழுக்கம் கெடுவதல்லாமற் பெருகுமோ? அப்படியல்ல. மதாபிமானிகளும் மடாதிபதிகளும் நிர்வாகத்தைச் சரியாய் நடத்தவில்லை. அதனால் தான் அரசியலார் பிரவேசித்து நிர்

காளையார்கோவில்

"ஆலயப்பாதுகாப்புச் சட்டம் கண்டிக்கப்பட்டது"

காளையார்கோவில் என்கிற நிவ்ய க்ஷேத்திரத்தில் சொர்ணகாளீஸ்வர ஸந்நிதானத்தில் உள்ள ஆகம சன்நிதிப்பாடசாலையில் ஸநாதன தர்ம பரிபாலனத்தை முன்னிட்டு "ஸ்ரீ லக்ஷ்மிவாசகசபை" ஆங்கில ஜனங்களால் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிறது.

அவ்வமயம் ஸ்ரீ காளீஸ்வர தீக்ஷிதர் "யோக க்ஷேம ப்ரபாலனம்" என்னும் விஜயத்தையும், மதுரையில் கடந்த நிண்டாதார் ஆலயப்பிரவேச அரிஜனைக் கண்டித்தும் ஆலயப்பிரவேச பாதுகாப்புச் சட்டத்தையும் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றது.

வாகத்தை ஒழுங்குபடுத்துகின்றார்களென்றால், அந்தோ! அரசியல் நிர்வாகத்திலுள்ள பல ஆலயங்கள் எவ்வளவோ ஒழுங்கை மாய்க் கெடுகின்றனவே. இந்த ஒழுங்கினைத் திற்குக் கேள்வி முறையில்லையோ?

அறஞ்செழிக்கவெண்ணும் அரசியல் தலைவர்களே! கேளுங்கள்! பழய காலத்தில் அரசர்களெல்லாம் ஆலயங்களுக்கும் பொருளுதவி புரிந்தார்களேயொழிய ஆலயச்சொத்தை அரசியலில் சேர்க்க விரும்பவில்லை. நீங்கள் தான் மதாபிமானிகளாதும், மடாதிபதிகளாதும் நிறைந்த முறையில் கடக்கின்ற ஆலயங்களை அரசியலிற் சேர்க்க விழைகின்றீர்கள். அதனால் எங்கள் மத மன்றோ கெடும்? சைவாகமங்களாதும் வைஷ்ணவாகமங்களாதும் பூஜை நடக்கும் ஆலயங்களில், இந்த மதஸ்தரோ அல்லது எம். ஏ. பி. ஏ. படித்த பட்டதாரிகளோ தலைவராக வந்தால் அவ்வாலய பரிபாலனமும் மதவொழுக்கமும் எப்படி நடக்கும்? இவைகளை யெல்லாம் நடுநிலையும் அறமும் தவறுதலெஞ்சால் நினைத்து எங்கள் கோயில்களையும் மதத்தையும் தெய்வ வண்ணஞ்சீர்கள்.

"ஆலயங்களை அழிக்கும் மந்திரிகள் ராஜிநாமா செய்க"

(6ம் பக்கம் தொடர்ச்சி)

கூடி "ஆலயங்களை அழிக்க வந்த மந்திரிஸபை ராஜிநாமா செய்க" என்று அச்சிட்ட அட்டைகளை நூற்றுக்கணக்கில் தூக்கிக்கொண்டு காங்கிரஸுக்கு எதிரான கோஷங்களைச் செய்தனர். டாக்டர் ராஜன் அக்கூட்டத்தை ஸமாளிக்க முடியவில்லை.

கோபுர வாசலில் ஆயிரக்கணக்கானவர்கள் கனம் ராஜனைச் சூழ்ந்துகொண்டு "தங்களுடன் நீண்டாதாரையும் கோவிலில் அழைத்துக்கொண்டு போகப் போகிறீர்களா" என்றும் அப்படியானால் தங்களை கோவிலுள் விடமாட்டோமென்றும் கோஷம் செய்தனர்.

தாமும், ஸ்ரீ முத்தையாக்க முதலியாரும், ஸ்ரீ அமமாபேட்டை வெங்கட்டாமய்யரும் தவிர வேறு யாரும் தம்முடன் வரவில்லையென்றும், நீண்டாதார் ஒருவரையும் தாம் அழைத்துவரவில்லையென்றும் கனம் மந்திரி உறுதிகூறிய பின் உள்ளே அனுமதிக்கப்பட்டார். மறுபடி அவர் வெளியே வரும்போது பலமான எதிர்ப்பாட்டம் நடந்தது.

"மந்திரி ஸபை ஒழிக" "ஆலயப்பிரவேசம் அழிக" என்ற பலத்த கோஷங்களுக்கிடையில் கனம் மந்திரி மறைந்து சென்றார். எதிர் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு கனம் ராஜன் மனக்கலக்கமடைந்ததாகத் தெரிகிறது.

The Premier English Weekly Devoted to the cause of Sanatana Dharma.
"Dharmarajya"
(Official organ of the Dharma Sevaka Sabha).
Patron Founder & Spiritual Director:
H. H. Sri Sankaracharya, of Puri.
Widely circulated in
India, Burma & Ceylon.
Best Medium for Advertisement
Annual Subscription Rs. 5.
Apply to:—
The Manager, "DHARMARAJYA"
Chandi Chowk, Delhi.

உங்கள் நாக்கை ஏமாற்றுகிறீர்கள்

சாதாரணமாக மணத்திற்காகத் தயாரிக்கப்படும் பெருங்காயம் யதொன்றுக்கும் பிரயோசனப்படுவதில்லை. உங்கள் நாக்கை ஏமாற்றுகிறது. புத்திசாலிகள் தங்கள் உணவுப் பொருள்களை வாங்குவதில் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். அவர்கள் ஸ்யண்டிபிக் T. T. பெருங்காயத்தையே கேட்கிறார்கள். ஏனென்றால் அது சுத்த சரக்கு என்று அவர்களுக்குத் தெரியும். பதினாறு வருஷ ஆராய்ச்சியின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஸ்யண்டிபிக் T. T. பெருங்காயம் 20-20% அயத் சத்தினால் சுத்தப்பாற்றப் படுகிறது. அதற்கு நறுமணமும் சுவையும் உண்டு.

ருசிகரமான சாப்பாட்டிற்கும் ஜீரணத்தை சுலபமாக்கவும்
பரிசுக் கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

ஒரு பவுண்டு ரூ. 1—14—0

ஸயன்டிபிக்
டி. டி
மிஸ்கி பெருங்காயம்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.


4
24
38
21-9-1939

21530

1987 1521 215300 519

REGD No.M. 2913. ARYADHARMAM Estd. 1915
TAMIL WEEKLY.

29 SEP 1939 MADRAS

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்யஃ பரிபாலயந்தாம் ந்யாய்யேன மார்கேண மஹீம் மஹீசாஃ।
கோப்ராஹ்மணேப்யஃ சுபமஸ்து நித்யம் லோகாஸ்ஸமஸ்தாஸ்ஸுகினோ பவந்து ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்

பு-24 | கும்பகோணம் பிரமாதிஸ்ரு புரட்டாசி-மீ 5உ 1939 ஸ்ரு செப்டம்பர்-மீ உ21 | வ-38

"காங்கிரஸ் தலைவர்கள் அன்று கூறியதென்ன இன்றுசெய்வதென்ன"?

காங்கிரஸ் வாதிகளுக்கு வேண்டுகோள்.

ஒரு காங்கிரஸ்வாதி எழுதுவது:—

"விபரபார முறையில் வந்த ஆங்கிலர் இத்தேசத்திலுள்ள சிறு ராஜ்யங்களை அபகரிக்க, 1878-ம்ஸ்ரு கதேசப் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுச் சட்டம் இயற்றி, நம் உரிமைகளைப் பறிமுதல்செய்ய, ராடெங்கும் பஞ்சம் உலவ, அதைச் சிறிதும் கவனியாமல் டெல்லி தர்பார் விசேஷமாக நடத்தப்பட நம் தேச மக்களின் மனதில் புதிய உணர்ச்சி தோன்ற ஹூயும், தாதாபாய் போன்ற மேதாவிகள் தீவிரமாக வேலைசெய்ய 1885-ம்ஸ்ரு டிசம்பர்-மீ 28உ பம்பாயில் நம் ராஜீய சபை உதயமாயிற்று. அந்த மேதாவிகள் தீர்க்கதரிசனச் செய்த காங்கிரஸானது நம் தேசத்து பார்லிமெண்டாகவேண்டுமென்ற உத்தேசித்து வளர்த்துள்ள கொள்கையை ஒவ்வொரு உண்மை காங்கிரஸ் வாதியும் மனத்திலிருத்தி நடத்துகொள்ள வேண்டும். 2-வது காங்கிரஸில் ஆசார சீர்திருத்தம் கொண்டுவந்ததும் அதன் அக்ராஸனரான தாதாபாய் நவரோஜி சொன்னதாவது "இது ராஜீய சபை. நம் ராஜீய உரிமைகளை ராஜாங்கத்தாரிடம் வற்புறுத்தக் கூடினோம். ஆசார சீர்திருத்தம் செய்யக் கூடவில்லை. நாம் இவற்றைப் புறக்கணிப்பதாகக் குறைகூறுவீராயின் காமன்ஸ் சபையார் கணிதசாஸ்திர வேதாந்த சாஸ்திரங்களின் சூக்ஷ்ம விசாரணை நடத்தவில்லையென்று குறைகூறுவதை ஒக்கும். மேலும் இங்கு மகமதியரும், கிரிஸ்துவரும், ஆங்கிலரும், பார்ஸியரும், சீக்கியரும் மற்ற வகுப்பாரும் சேர்ந்த இந்த சபையில் தனித்தனி வகுப்பின் ஆசாரத் திருத்தங்களை வகிப்பது பொருந்தாது. இந்த ராஜீய சபை தேச முழுமைக்கும் பொதுவான விவகாரங்களை மட்டும் கவனிக்கும்.

இந்த அரிய கொள்கையையே பின்வந்த காங்கிரஸ் மேதாவிகளும் வற்புறுத்தியிருக்கின்றனர். இதுவே கடையெசுக 1931-ம்ஸ்ரு கராச்சி காங்கிரஸ் 15-வது தீர்மானத்திலும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு எக்கக் காங்கிரஸிலும் அக்கக் கொள்கை மாற்றப்படவில்லை. ஆதலால் மத விஷயங்களில் காங்கிரஸோ, ராஜாங்கமோ தலையிவேதில்லை என்ற கொள்கையே (Policy) ஊர்ஜிதத்திலிருந்துவருகிறது. எவ்வளவு பெரிய ஸ்தானம் வகித்தாலும் எந்த காங்கிரஸ் கமிட்டியும் அதற்கு மாறுகட்டக்க அதிகாரமில்லை.

2. தவிர சென்ற எலெக்ஷன் அறிக்கையிலும் அது சம்மந்தமான கூட்டங்களிலும், நம் ராஜீயத் தலைவரும் இந்தக் கொள்கையை வற்புறுத்தி வாக்குறுதியும் கொடுத்திருக்கிறார்கள். அவைகளில் முக்யமான சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறேன்.

(a) மதராஸ் சட்டசபை எலெக்ஷன் சம்மந்தமாய் கனம் பிரதம மந்திரியார் கும்பகோணம் வக்கீல் சங்கத்தில் சொல்லியதாவது, "காங்கள் சட்டசபைக்குப் போக உத்தேசித்திருப்பது சமஷ்டியை எதிர்ப்பதற்காகத்தான். ஆலயப்பிரவேச இயக்கத்திற்காக அல்ல. வரப்போகும் சட்டசபையில் ஆலயப்பிரவேச விஷயமாக எவ்வித சட்டமும் கொண்டுவரப்போவதில்லை." எங்கள் கக்ஷியில் யாராவது அத்தச் சட்டம் கொண்டுவந்தால் நான் அப்பொழுது பொதுஜன வாக்காளர்களைக் கலந்துகொண்டுதான் நடப்பேன்."

(b) கனம் மதஸ்தாபன மந்திரி டாக்டர் ராஜன் குடந்தையில் 1934-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் பேசியது. "சட்டசபையில் தீண்டாமை விலக்கு, ஆலயப்பிரவேச மசோதாக்கள் வந்தால் அவைகளை நான் நிச்சயமாக எதிர்ப்பேன்.

(c) ஸ்ரீமான் புலாபாய் தேசாய் (இந்திய சட்டசபை காங்கிரஸ் கக்ஷித் தலைவர்) மதராஸ் பீச் மீட்டிங்கில் சொல்லியது. "எப்பொழுதுமே மத விஷயங்களில் காங்கிரஸ் நடுநிலைமை வகிக்கும். சட்டசபைகளில் இதுபோன்ற விஷயங்களில் கக்ஷிக் கட்டுப்படில்லாமல் அவரவர் தனித்தனியாகவே நடந்துகொள்ளும்படி விட்டுவிடுவதே வழக்கம். ஆலயப்பிரவேச பிரச்னையிலும் இந்த வழியே அனுசரிக்கப்படும்."

(d) ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி (இந்திய சட்டசபை காங்கிரஸ்கக்ஷி உபத்தலைவர்) 21—10—1934ல் சொல்லியது:—"மத விஷயம், மத சமூக விஷயம் இவைகள் சம்பந்தமாய் சட்டசபையில் சட்டம் கொண்டுவந்து நிர்ப்பந்திப்பதை எதிர்ப்பேன். என் மனச்சாக்ஷியைப் பறிகொடுக்கவும், என் அபிப்பிராயத்தை வெளியிடத் தயங்கவும் மாட்டேன் என்பது என் முன் நடத்தையிலிருந்து தலங்கும். காராச்சி காங்கிரஸ் தீர்மானத்துக்கு முரணாக காங்கிரஸ் எந்த ஆக்ஞையும் செய்யாது என்று நம்புகிறேன்."

(e) 1934-ம் வருஷம் ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்ட காங்கிரஸ் எலெக்ஷன் அறிக்கையில், "ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய மதக் கொள்கைகளைக் கப்பாற்றிக் கொள்ளவேண்டிய உரிமையை காங்கிரஸ் ஒப்புக்கொள்கிறது" என்று கண்டிக்கிறது.

(f) ஸ்ரீ. சரோஜினிதேவியும் சென்னை ராஜீய மகாநாட்டில் தலைமைவகித்த சமயம் சொல்லியிருப்பது, ஒவ்வொருவரும் ஊன்றி கவனிக்கத்தக்கது. "தீண்டாதார் முன்னேற்றத்திற்காக சட்டம் இயற்றுவதில் பயனில்லை. உயர் ஜாதியாரின் மனமாற்றமே முக்யம். திருவாங்கூரில் ஆலயப் பிரவேச உரிமை அளிக்கப்பட்டது. அது என்னவாயிற்று? உயர் ஜாதியாரின் மனம் மாறிவிட்டதா? ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனின் மனம் மாறும் வகையில் ஆலயப் பிரவேசாதி சட்டத்தால் அபாயம் ஏற்படுமே அல்லது நன்மை விளையாது."

(g) டாக்டர் ரவீந்த்ரநாததாகூர் பம்பாய் பத்திரிகை நிருபரிடம் சொன்னதாவது, "தீண்டாமை விலக்கு வேலையைச் சட்ட மூலமாக நிர்ப்பந்தமான முறையில் செய்யக் கூடாது. அப்படிச் செய்வது மிகவும் பிசகு. பிரசாரத்தினால் பொதுஜன அபிப்பிராயம் மாறும்படி செய்யவதே நியாயம். அதுவே சாஸ்வதமான பலனை அளிக்கும்." மேலே கண்டவர்கள் எல்லோரும் ஸனாதனியல்ல. காங்கிரஸின் தலைவர்கள்.

(h) 1937, 1938-ம் வருஷங்களில்கூட மெம்பர்கள் சேர்த்தகாலத்தில் இக்தக் கொள்கையையே அனுசரிப்பதாக கூறப்பட்டிருக்கிறது.

3. தவிர பூனா ஒப்பந்தத்தை ராஜாஜீ இந்த விஷயத்திற்குப் பெரிய ஆதாரமாகப் பேசியிருக்கிறார். அந்த நாடகத்தின் போது

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

ஆலயப்பிரவேசத்துக்கு எங்கும் எதிர்ப்பு.

நாட்டில் நடந்த கூட்டங்களின் நடவடிக்கை விபரங்கள்

இராமேஸ்வரம்

"காங்கிரஸ்காரர்களின் பதவிவேட்டை"

இராமேச்வரம் அகில ஜாதி இந்துக்கள் அடங்கிய பெருங் கூட்டமொன்று 9-9-39 மாலை மேலரத வீதியில் மே. த. வைஸ்ராய் அவர்கள் ஹிண்டாதார் ஆலயப்பிரவேச சட்டத்திற்கு ஆதாவளித்ததைக் கண்டிப்பதற்காக ஸ்ரீ K. N. சுப்பிரமண்ய சாஸ்திரிகளின் தலைமையில் கூடைபெற்றது.

தலைவர் முன்னுரையில் சுவராகரீகத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஆங்காங்கு கூட்டங்களில் பேசுவதையும் முன்னுக்குப் பின் விரோதமாக சமயத்திற்கேற்றவாறு தாருமாராகப் பேசி மக்களை ஏமாற்றி வருவதை எடுத்துக் கூறினர். பிறகு ஸ்ரீ விரேந்திரநாத் அருண் என்பவர் ஹிந்தியில் உபன்யாசித்தார். பிரசங்கத்தை ஸ்ரீ பக்ஷிபர்வத ராஜ சாஸ்திரிகள் தமிழில் மொழி பெயர்த்தார். "ஹிண்டாதார் ஆலயப்பிரவேசத்தை விரும்பவில்லை. ஆனல் மந்திரி பதவி ஏற்று ஆங்காங்கு வாவேற்புப் பத்திரம் முதலிய வெளி ஆர்ப்பாட்டத்தில் மோகங் கொண்டு தங்கள் மந்திரி பதவியை மீண்டும் தாங்களே கைப்பற்றிக் கொள்ளவேண்டு மென்ற போராசையின் காரணமாக ஓட்டு பலம் சம்பாதிக்க ஹிண்டாதார்களையும், அதன் மூலம் மற்றவர்களையும் படுகுழியில் தள்ளி மத தர்மத்தை குலைத்துப் பலவழியிலும் உலகத்தைப் பாழாக்கி வருகிறார்கள். இவர்களுக்கு ஏற்றவாறு மே. த. கவர்னரும், மே. த. வைஸ்ராய் உடன்தையாயிருப்பது மிகவும் அநீதியேயாகும். நீங்கள் ஆண்மையுடனும் நீதத்துடனும் முன் வந்து ஹிண்டாதார் ஆலயத்தில் புகுராவண்ணம் சத்யாக்கிரகம் செய்ய வேண்டுமென்று கூறினர்.

காங்கிரஸ்காரர்களும் முஸல்மான்களும் இருந்தவர்களும் நிம்மிய இம்மாபெரும் கூட்டத்தில் குழப்பம் முதலிய அசுத்தப்பம் எதுவும் நேரிடாமலிருந்தது ரோம்பவும் குறிப்பிடத் தக்கது.

பிறகு தலைவர் ஆலயப்பிரவேச விஷயமாய் உண்டாகும் கேடுகளை விளக்கி அதை எவ்விதத்திலும் எதிர்த்துப் போராட வேண்டியது ஒவ்வொரு ஹிந்துக்களின் முதல் கடமை என்று கூறினர்.

நிறைவேறியத் தீர்மானங்கள்

"சென்னை ராஜாங்கத்தால் சாஸ்திர முறைக்கும் அனுகாலம் தொட்டு வரை முறையில் இருந்துவரும் முறைக்கு முற்றிலும் விரோதமாகச் செய்யப்பட்ட ஹிண்டாதார் ஆலயப் பிரவேசச் சட்டத்திற்குச் சம்மதம் தர்க்கூடாதென்று மஹஜர் மூலமும் தந்தி மூலமும் லக்ஷக்கணக்கான ஜாதி ஹிந்துக்கள் மே. த. வைஸ்ராய் அவர்களை வேண்டிக்கொண்டும், நிதியும் லக்ஷ்யம் செய்யாமல் ஹை சட்டத்திற்கு ஆதாவளித்தது மிக விசனிக் கூடியதும், வெறுக்கக் கூடியதுமன்னியில் பொறுப்பற்ற குணத்தையே வெளியாக்குகிறதென்று நீர்மானிக்கிறது.

வைசிராயின் செயலில் இந்திய மந்திரிக்கு தெரிவித்துக்கொள்வதுடன் மா. த. மஹாராணியின் மத விஷயத்தில் தலையிடக் கூடாது என்ற பிரகடனத்தை வைசிராய் மீறி மதத்தைப் பாழாக்கும் சட்டங்களுக்கு சம்மதித்து காங்கிரஸிற்கு ஆதாவளிப்பதையும், ஜாதி ஹிந்துக்களின் மனம் புண்படச் செய்து வருவதை தெரிவித்துக் கொள்வதுடன் ஹை சட்டத்தையும், சாராசாட்டம் முதலிய மத சம்மந்தமான எல்லா சட்டங்களையும் ரத்து செய்யும்படியும் இனி சட்ட சபைகளில் மதசம்பந்தமான சட்டங்களைக் கொண்டு வரக்கூடா தென்று உத்திர விட வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்ளுகிறது.

மதுரை முதலிய தேவஸ்தானங்களில் தீண்டாதார் ஆலயப்பிரவேசம் செய்ததைப் பற்றி வருத்துவதுடன் அதை எதிர்த்துப் போராடுவதற்கும் சத்யாக்கிரகம் செய்வதற்கும் தொண்டர் படை சேர்ப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது", என்ற தீர்மானங்கள் கூட்டத்தில் ஏக மனதாக நிறைவேறியது.

(ஒ. நி.)

சென்னைமாநகர்

ஆலயப்பிரவேசக் கண்டனம்.

10—9—39 காலை முத்யாலுப் பேட்டை பலஜக்காரத்தெரு ராமானுஜம் கலாசாலையில் ஆலயப்பிரவேச அநீதியைக் கண்டித்து ஓர் பெருங்கூட்டம் கூடிற்று. மார்ஜி பேஸ்ட் மாஸ்டர் ஸ்ரீ முத்துகுமாரசாமி செட்டியார் தலைமை வகித்தார். ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா கூட்டத்தில் பேசினர்.

ஸ்ரீ சர்மா அங்கு அதிகமாகக்கூடிய பெண்மக்களையும் அப்பிரசாம்மணர்களையும் கண்டு ஸந்தோஷிப்பதாகக் கூறிச் சில அரிய உபாயங்களைக் கூறினர். "நமக்கு தைவ பலம் மநுஷ்ய பலமிரண்டும் குறைவாக இருக்கிறது. தைவ பலம் கூடிவர ஒவ்வோர் வைதீக ஆலயங்களிலும் ஓர் மண்டலம் மஹன்யாஸ புரஸ்சரமாக ஏகாதசருத்ராபிஷேகமும் லக்ஷார்ச்சனையும் விஷ்ணு ஸஹஸ்ரநாமம் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் இவைகளைப் பாராயணம் செய்யவேண்டும். கோவில்லாத இடங்களில் அதிருத்ரம் ஸகர்ஹ சாந்தி முதலியவைகளைச் செய்யவேண்டும். மனுஷ்ய பலம் விருத்தியாக, நமது தலைவர்கள் ஸ்ரீமான்களான ராவ்ஸாஹிப் நடேசய்யர், வி.வி. ஸினிவாசய்யங்கார், கே. வெங்கட்டராமய்யர், த. கு. ராமஸ்வாமி அய்யர், சதுர்ப்புதாஸ் ஆகியவர்களை ஒவ்வோர் சனி ஞாயிர்களிலும் ஒவ்வோர் ஜில்லாவில் ப்ரசாரர்களுடன் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டும்.

காங்கிரஸிலிருந்து விலகும்படி தூண்டுதல்.

ஸ்ரீ இ. வ. ஸ்வாமிய சங்கமிலாதவிடத்தில் ஹை ஸபையின் ஹிந்து ஸபையை ஸ்தாபித்து அங்கத்தினர்களைத் நிரட்டல், ஸத்யாக்ரஹம் செய்ய சாரணர்களைச் சேர்த்தல்.

காங்கிரஸின் அதர்மத்தை விளக்கி தூண்டுப் பிரசாரம் செய்தல்.

ஆலயத்தின் நிறப்பை விளக்கித் தண்டுபிரசுரம் வெளியிடுதல்.

வேதஸ்திரநிர்ணயாணங்களைச் சுருக்கமாக தமிழர்த்தத்துடன் வெளியிடுதல்",

என்று இரண்டு மணி பேச, மற்றும் பலர் அதை ஆமோதிக்க வந்தனோபசாரத்துடன் ஸபை கலைந்தது. (ஒரு விசேஷ நிருபர்.)

மதுரை

ஆஸ்திக மாதர் மகாநாடு

"லக்ஷக்கணக்கான ஸனாதனிகளுடைய ஆக்ஷேபனைகளைக் கவனியாமலும் மாஷிமை தங்கிய இந்திய சக்ரவர்த்தினி விக்டோரிய மஹாராணி அவர்களுடைய சாஸனத்தை அசட்டை செய்தும் சென்னை சட்ட சபைகளில் நிறைவேற்றப்பட்ட ஆலயப்பிரவேச சட்டத்துக்கு அனுமதி ககாடுக்காமலிருக்கும்படி தந்திகள் மூலமாயும், அதேக ஸபைகளின் தீர்மானங்கள் மூலமாயும் ஸனாதனிகள் பிறர்த்தித்துக் கொண்டிருந்தும், அவைகளைக் கொஞ்ச மேனும் மதியாமலும் தூது கோஷ்டி மூலமாயும் மற்ற விதமாயும் ஸனாதனிகள் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்துக் கொள்ளும்படி அனுமதி கொடுக்க வேணுமாய் மே. த. வைஸ்ராய் அவர்களை ஸனாதனிகள் கேட்டுக்கொண்டும் அதற்கு இணங்காமல் மே. த. வைஸ்ராய் அவர்கள் யாதொரு காரணம் பற்றியோ ஹை சட்டத்துக்கு அனுமதி கொடுத்திருப்பது பற்றி மதுரை மாநகர் ஹிந்து மாதர்கள் கூட்டம் பலமாக ஆக்ஷேபித்துக் கண்டிக்கிறது", என்ற தீர்மானத்தை ஸ்ரீ பாலாதி அம்மாள் பிரேரணை செய்தார். ஸ்ரீ சேஷம்மாள் ஆமோதித்தார். ஸ்ரீ ஜானகி அம்மாள் ஆதரித்தார். ஏகமனதாய் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தலைவர் ஸ்ரீமதி வி. மீனாக்ஷி அம்மாள் ஸ்ரீமதிகள் தர்மாம்பாள் அம்மாள், லக்ஷ்மிஅம்மாள் முதலிய பலரும் இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்கள்.

மேற்படி தீர்மானம் மதுரையில் கூடிய ஹிந்து மாதர்களின் மாபெருங் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்டது. கூட்டத்திற்கு ஸ்ரீ வி. மீனாக்ஷி அம்மாள் தலைமை வகித்தார்.

(ஒ. நி.)

ஆத்தங்குடி—குன்னக்குடி

13—9—39, 15-9-39 இரவு 7 மணிக்கு ஷை ஊர்களில் முறையே ஸ்ரீ கனேச கன பாடிகள், ஸ்ரீ சாமினத குருக்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டங்களில் "9-9-39 இரவில் ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாத ஆலயத்தில் சாத்வீக சத்யாகரஹம் செய்ய நேர்ந்த ஸநாதன தர்ம பெண்மணிகள் போலீஸாரால் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டதையும் தேசிய பத்திரிகை என சொல்லிக்கொள்ளும் பத்திரிகைகள் சில விஷயங்களைத் திரித்துக் கூறுவதையும், காங்கிரஸ்காரர்கள் உண்மை மை மழுப்பி வருவதையும், பலமாகக் கண்டித்து, பக்ஷபாதமற்ற விசாரணையை நிருவி ஸ்ரீரங்கப் சம்பவத்தை விசாரித்து நியாயம் வழங்க வேண்டு மெனக் கவர்ன்மெண்டை வேண்டிக்கொள்வதாகத் தீர்மானங்கள்" நிறைவேற்றப் பட்டன.

ஸ்ரீமான்கள் கு.வீர. கநிசேசன்செட்டியார், தி.ப. ஜெகதீசய்யர், மணவாளய்யங்கார், நிருவேங்கடமய்யங்கார், சுப்பிரமணிய சாஸ்திரிகள் முதலானோர் தீர்மானங்களைக் குறித்து விளக்கிப் பேசினர்கள்.

(ஒ.கி.)

"சம்மதிதரமுடியாது"

16—9—39, 17—9—39-ல் கனம் மந்திரி ராஜன் குன்னக்குடி நிருக்கோஷ்டியூர் விஜயம் செய்தபோது ஆத்தங்குடி சனாதன தர்ம மஹா சபையார், நாட்டார்கள், உள்ளூர் மஹா ஜனங்கள் (ஸ்திரிகள் உள்பட) முதலானவர்கள் அவர்யமான சந்தர்ப்பம் கேரிட்டால் கேரிடையான சாத்வீக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வை யூர் ஆலயங்களில் எச்சரிக்கையாக இருந்தார்கள்.

நெல்லை ஆலயப்பிரவேசம்

ஸ்திரீகளின் சத்யாக்கிரகம்

ஆன்றிக ஸ்திரீகளின் தூதக் கோஷ்டியொன்று ஸ்ரீ மதி நிருக்குமணி அம்மாள் தலைமையில் கலெக்டர் ஸ்ரீ டி. பால்கர ராவ் ஐ. ஸி. எஸ்ஸிடம் சென்று நெல்லையில் ஸ்ரீ நெல்லையப்பர் கோவிலில் ஹரிஜனங்கள் பிரவேசிப்பதை பெரும்பாலோர் ஆதரிப்பதாகக் கூறுவதாகவும், ஒரு வர அவகாசம் கொடுத்தால் ஆலயப்பிரவேசத்தை எதிர்க்கும் 15,000 ஸ்திரீகளின் கையொப்பத்தை விக்ஞாபன ரூபமாகக் கொடுப்பதாகவும் தெரிவித்துக் கொண்டது. இவ்விஷயத்தை ஓர் மகா நாட்டைக் கூட்டி அதில் ஆலோசனை செய்வதாகக் கலெக்டர் கூறினர்.

12—9—39உ மாலை ஸ்ரீமதி நிருக்குணியம்மாள் தலைமையில் ஆன்றிக ஸ்திரீகளின் கூட்டமொன்று கூடைபெற்றது.

எதிர்ப்பையும் மீறி ஹரிஜனங்கள் ஆலயப் பிரவேசம் செய்தால் கோவில் தவஜஸ்தம்பத்தின் முன்பாக சத்தியாக்கிரகம் செய்வதென்றும், அஹிம்சா முறையில் ஹரிஜனப் பிரவேசத்தைத் தடுப்பதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஒ. நி.)

திருவிடைமருதூர்

திருவிடமருதூர் ஸ்ரீ மகாலிங்க ஸ்வாமி கோயில் சன்னதியில் 29—9—39 தேதி மாலை ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் அக்கிராஸனத்தின் கீழ் ஆன்றிக மகா ஜனங்களின் கூட்டம் கூடிற்று. ஹரிஜன ஆலயப்பிரவேசத்தை கண்டித்தும், ஆகம சாஸ்திரம், மதத்தில் பிரஜைகளுக்கு இருக்க வேண்டிய சுதந்திரம், மதத்தையும் ராஜீயத்தையும் ஒன்று சேர்ப்பதால் ஏற்படக்கூடிய அபாயம், முதலானவைகளை, அக்கிராஸனரும் கார்டு நாராயணாரவ், திண்டிவனம் சுன்றிசேர் சர்மா அவர்களாலும் விஸ்தாரமாய் உபன்யாசம் செய்யப்பட்டது. இத்த ஊரில் மத சுதந்திரச் சங்கம் என்கிற பேர் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அதற்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்தும், ஆலயத்தின் புனிதத் தன்மையையும், புராதன தர்மத்தையும் காப்பாற்றவேண்டுமென்று ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனம் பண்டாரசன்னதியவர்களைக் கேட்டுக்கொள்வதாகவும், ஸ்ரீரங்கத்தில் ஸனாதன ஸ்திரீகளைப் போலீசார் தடியினல் அடித்ததற்கு அனுதாபத்தை தெரிவித்தும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

(ஒ. நி)

திருநெல்வேலி

கண்டனக் கூட்டம்

15—9—38 திருநெல்லை சம்பிரவர்ணி ஆற்றங்கரையிலுள்ள கைலாஸ மண்டபத்தில் ஒரு பிரம்மாண்டமான ஸநாதனிகளின் கூட்டம் கடந்தது.

திருப்பனந்தாள் ஸ்ரீ சச்சிதானந்த ராஜயோகி ஸ்வாமிகள் தலைமை வகித்தார்.

மதுரை நீதி வழக்கறிஞரும் பிரபல ஸநாதனப் பிரமுகருமான ஸ்ரீகே.ஆர். வேங்கட்டராமய்ய ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

(ஒ. நி.)

காளையார் கோவிலில்

"எதிர்ப்புக் கூட்டம்"

14—9—39உ காளையார் கோவில் அ. இ. வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்க மெடி ஆதரவில் கோபுர வாசலின் முன்னிலையில் ஸ்ரீ காளீஸ்வர தீக்ஷிதர் தலைமையில் ஹரிஜன ஆலயப்பிரவேச எதிர்ப்புக் கூட்டம் இரவு 7 மணிக்கு நடத்தது. அவ்வயம் கும்பகோணம் ஸ்ரீ சக்திவேல் பின்னே ஹரிஜனங்கள் ஆலயப்பிரவேசத்தை எதிர்த்தும், மதுரை மீனாக்ஷி அம்மன் கோவிலில் நடந்த அநீதியான ஹரிஜன ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்தும், விசாரித்தும் அறிக்த விஷயங்களை விவரமாகக் கூறினர். (சென்றவாரம் ஆர்யதர்மம் விவரப்படி).

பிறகு, தென்னாற்காடு எலெக்ஷனைப்பற்றி பேசுகையில், ஸனாதனிகள் ஒரு ராஜீய நிட்டத்துடன் ராஜீய ஸைபாக அமையவில்லை யென்றும், எலெக்ஷனில் போட்டியிடும் ஆற்றல் அவர்களுக்கு எற்படவில்லை. மற்ற விஷயங்களைப் பிரஸ்தாபிக்காமல் ஆலயப்பிரவேசம் ஒன்றை மட்டும் பந்தயமாக வைத்து எலெக்ஷன் நடத்தினால் ஸநாதனிகள் ஜயம் பெறுவது நிச்சயமென்றும், காங்கிரஜி பெயரையும், ஸ்திரிகளின் செல்வாக்கையும் கொண்டு அடையும் வெற்றி அர்த்தமற்ற தென்றும் கூறினர்.

வேறு பல முக்ய விஷயங்களைப் பற்றி விஸ்தாரமாகப் பேசியபின் கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

ஸ்ரீ வில்லிபுத்தூரில்

ஸ்திரீகள் வத்யாக்ரகம்

"ஆலயப்பிரவேசச் சட்டத்தை ரத்து செய்க"

பட்டர்கள்-ஸ்தானிகர்கள் ஆட்சேபனை

சுகாதார மந்திரி கனம் டாக்டர் டி. எஸ். ராஜன் 13—9—39 இங்கு வந்தார். ஹரிஜனங்கள் ஸ்ரீ ஆண்டாள் கோயிலுக்குள் பிரவேசித்த விடுவார்களோவென்றஞ்சி நூற்றுக்கணக்கான ஸ்திரீகள் கோயில் சன்னதி முன்பு சத்தியாக்கிரகம் செய்வதற்காகக் கூடியிருந்தார்கள்.

கோயில் ஸ்தானீகர்களும் பட்டர்களும் மந்திரியைப் பேட்டி கண்டு ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்து விடும்படிகேட்டுக் கொண்டார்கள். அவர்கள் பொதுஜன வாக்கு எடுக்கும்படியும் மந்திரிக்கு யோசனை சொன்னார்கள்.

கோவிலுக்குச் சென்ற பிறகு மந்திரி பொதுக் கூட்டத்தில் பேசினர். கூட்டத்தில் அடிக்கடி தொந்தரவுகள் ஏற்பட்டன சில கற்களும் விழுந்தன. (ஒ. நி.)

பழனியில் எதிர்ப்புக் கூட்டம்

15—9—39 மாலை பழனியில் மாபெருங் கூட்டம் கடந்தது. ஸ்ரீ கே. ஆர். அனந்த நாராயணய்யர் தலைமை வகித்தார்.

ஸ்ரீ வி. என். பிரசாத் ராவ் ஆலயப்பிரவேச சட்டத்தைப் பற்றி விவரமாக எடுத்துக் கூறினர். ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேறின.

ஒ. நி.

அத்வைத ஸபை

கும்பகோணம்.

குப்பகோணம் அத்வைத ஸபை கவுன்லிலர் நிருவாணைக்காவல் ஸ்ரீ ஜகத்குரு வித்யாசங்கரானத்தில் பண்டித ஸ்தானத்தை வஹித்து வரும் பேரகம் பிரும்மஸ்ரீ ஸ்ரீ ராமா சாஸ்திரிகள் அவர்களை, ஸபையின் ஸ்தானகாலது பரிஷ்காரகாரியாக நியமிக்கப் பட்டிருக்கிறது. (ஒ. நி.)

ஸ்ரீரங்கத்தில் தடியடி!

குடந்தையில் கண்டனம்

குடந்தை ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோபுரவாசலில் ஆன்றிக்கர்களின் பொதுக் கூட்டமொன்று கூடியது. ஏராளமாக ஜனங்கள் வந்திருந்ததுடன் டவுன் காங்கிரஸ் கமிட்டித் தலைவர், காரியதர்சி, மெம்பர்கள் உள்பட காங்கிரஸ்காரர்களும் வந்திருந்தனர். சேந்தமங்கலம் ஸ்ரீ ஸ்வாமிகள் தலைமை வகித்தார்.

ஸ்ரீமான் ராமானுஜ தாதாசாரியர் ஸ்ரீரங்கம் ஸம்பவத்தைப்பற்றித் தாம் கேரிலும், விசாரித்தும் அறிக்த விஷயங்களை விவரமாகக் கூறினர். (சென்றவாரம் ஆர்யதர்மம் விவரப்படி).

பிறகு, தென்னாற்காடு எலெக்ஷனைப்பற்றி பேசுகையில், ஸனாதனிகள் ஒரு ராஜீய நிட்டத்துடன் ராஜீய ஸைபாக அமையவில்லை யென்றும், எலெக்ஷனில் போட்டியிடும் ஆற்றல் அவர்களுக்கு எற்படவில்லை. மற்ற விஷயங்களைப் பிரஸ்தாபிக்காமல் ஆலயப்பிரவேசம் ஒன்றை மட்டும் பந்தயமாக வைத்து எலெக்ஷன் நடத்தினால் ஸநாதனிகள் ஜயம் பெறுவது நிச்சயமென்றும், காங்கிரஜி பெயரையும், ஸ்திரிகளின் செல்வாக்கையும் கொண்டு அடையும் வெற்றி அர்த்தமற்ற தென்றும் கூறினர்.

வேறு பல முக்ய விஷயங்களைப் பற்றி விஸ்தாரமாகப் பேசியபின் கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

டிரஸ்டிகளே நிர்ப்பந்திப்பதா?

டாக்டர் ராஜன் பயமுறுதல்!

குடந்தையில் கண்டனம்.

சனிக்கிழமையன்று டபீர் படித்தரையில் சேங்காலிபுரம் அட்வகேட் பிரம்மஸ்ரீ ஸ்ரீனிவாஸ அய்யாவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கடைபெற்றது. தலைவர் மிகத் தீவ்ரமாக காங்கிரஸ் மந்திரிகளின் செய்கையைக் கண்டித்துப் பேசினர்.

டாக்டர் ராஜன் தமது சுற்றுப்பிரயாணத்தில் டிரஸ்டிகளையும், பட்டர்களையும் அழைத்து நிர்ப்பந்தப் படுத்துவதையும், பொதுக் கூட்டங்களில் பயமுறுத்திப் பேசி வருவதையும் கண்டித்தும், ஸநாதனிகள் தனிக் கோவில் கட்டிக்கொள்ளட்டுமென்று ஸ்ரீ வில்லிபுத்தூரில் பேசியதைக் கண்டித்தும் ஸ்ரீ மஹாலிங்கய்யரவர்களால் தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டு, பாகவதமும் ஸ்ரீமான் வெங்கடாசலய்யரால் ஆதரிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேறின.

வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிந்தது.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

"பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்.)

கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,

தர்மசாஸ்திரச் சுருக்கம்,

கீழவிடையல், திருச்சிரை.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஸ்ரு புரட்டாசி-மீ 5உ

காங்கிரஸில் ஹிட்லர் முறையில்லையா ?

நிகழும் ஐரோப்பிய யுத்தத்தில் ஸம்பந்தப்பட்டுள்ள ஜேர்மனி பிரிட்டனுக்கு இந்திய மின் உதவியும், ஒத்துழைப்பும் வேண்டுமென்று ராஜப் பிரதிநிதி இந்திய ராஜீயக் கக்ஷித் தலைவர்களையும், காங்கிரஸின் ஸர்வாதிகாரியாக மதிக்கப்படும் காந்திஜியையும் அழைத்துப் பேசினார். ஏற்கனவே காரியக் கமிட்டியானது, யுத்தம் ஸம்பந்தமாக பிரிட்டனுடன் ஒத்துழைக்க முடியாதென ஓர் தீர்மானத்தை நிறைவேற்றி வைத்திருக்கிறது. அதே கொள்கையைக் கடைபிடித்துக் காங்கிரஸ் நிற்பதாயிருந்தால், பிரிடிஷார் தங்களுக்கு யுக்தமான வழியில் போக வேறு மென்பதை காந்திஜியிடம் வைஸ்ராய் சொல்லியிருக்கவேண்டும்.

காங்கிரஸ் ஏழு மாகாணங்களில் ஆக்ஷி நடத்தி வருகையில் யுத்த விஷயமாக அது ஒத்துழைக்க மறுத்தால் உடனே இதில் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டியது பிரிட்டனின் கடமையாகிவிடும். யுத்த விஷயமாக வர்தாவில் நடந்த கார்யக் கமிட்டிக் கூட்டத்திற்கு சீனு சென்றிருந்த வேருஜி ஆசார்யமார்க்கமாகவிரைந்தோடிவந்தார். காங்கிரஸில் தீண்டாதாராக விலக்கப்பட்ட ஸ்ரீ போஸ் வருங்கியழைக்கப்பட்டார். இன்னும் பல கக்ஷியினர் வந்தனர். கூடி யோஜித்தனர். தீர்மானம் உருவாகவில்லை. எவ்வித நிபந்தனையுமின்றி பிரிட்டனுடன் இச் சமயம் ஒத்துழைக்க வேண்டுமென்று காந்திஜி விரும்பினர். ஆயினும் அதற்கு மாறான அபிப்ராயமே ஓங்கியிருந்தது. கடைசியாக ஸர்வதேசப் பிரஸித்தியடைந்த வேருஜியைக் கொண்டு, பேரம் பேசும் முறையில் ஓர் அறிக்கையைக் கார்யக்கமிட்டி வெளியிட்டிருக்கிறது. ஒரு பெரிய பெருக்கடியான ஸந்தர்ப்பத்தில் காங்கிரஸின் ஒத்துழைப்புப் போக்கை அறிய விரும்பிய வைஸ்ராய் அவர்களுக்கு கார்யக்கமிட்டியின் அறிக்கையானது பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும். அளவற்ற ஸோனு பலம் படைத்த பெரிய ஏகாதிபத்யமாக விளங்கும் பிரிட்டனுக்கு யுத்தத்தில் காங்கிரஸின் விருப்பு வெறுப்புகள் எவ்வித ஸாதக பாதகங்களையும் விளைவிக்கக் கூடியனவல்ல. ஆயினும், மரியாதையை உத்தேசித்து வைஸ்ராய் காட்டிய நேசப்பான்மையைக் காங்கிரஸ் உதாஸீனம் செய்தது விவேகமாகாது. ஜனப்பிரதிநிதித்வ யோக்யதையை இழந்து நிற்கும் தற்கால காங்கிரஸின் அபிப்ராயத்தை இந்தியப் பொதுஜனங்களின் அபிப்பிராயமாக ராஜப்பிரதிநிதி நினைக்கமாட்டாரென்பது தெரிந்ததே.

கார்யக் கமிட்டி வெளியிட்டுள்ள அறிக்கையின் நியாயன்யாயங்களைப் பரிசீலிக்க நாம் விரும்பவிடினும் அதிலுள்ள சில விஷயங்களைச் சிறிது கவனிப்பது அவச்யமாகிறது. பிறருடைய ஸொத்துக்களையும், தேசத்தையும் ஹடாத்காரமாக ஆக்ரமிப்பதும், அதற்காக பலாத்காரத்தை உபயோகிப்பதும் மிகவும் வெறுக்கத்தக்க மிருகத்தனமென்பதை ஒருவரும் மறுக்கமாட்டார்கள். எத்தகைய காரணிக் நிறப்புள்ள தேசமும் மேற்கண்ட ஆக்ரமணத்தைச் செய்தால், அது நீதியற்ற தேசமே யென்பதில் ஸடையில்லை. ஆதலால், ஹிட்லரோ, வேறு எவரோ ஆக்ரமிப்பு வேலையில் இறங்கினால், அவர் உலகத்தாரால் வெறுக்கப் படுவரென்பதில் ஸ்க்தேஹமில்லை.

கார்யக் கமிட்டியானது ஆக்ரமணத்தையும் பலாத்காரத்தையும் அதர்மமென்றும் தனது அறிக்கையில் கூறியிருப்பது நியாயமே. அவ்வறிக்கையில், ஹிட்லர் முறை, முஸோலினி முறைகளைக் கண்டித்திருப்பது போல் பிரிட்டனின் "ஏகாதிபத்ய" முறையையும் ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது. ஜன நாயகத்தின் பெயரால் பிரிட்டன் தனது ஏகாதிபத்யத்தைப் பெருக்கிக் கொள்ளும் கோக்கு கொண்டிருப்பதாயும், சென்ற மகாயுத்தத்திற்குப் பிறகு கடக்த உடன்படிக்கைகளும், அபிலீனியர, ஸெகல்லவேகிய, சைனு முதலிய தேசங்கள் விஷயத்தில் பிரிட்டன் காட்டிக்கொண்ட மனோபாவத்தையும், முக்யமாக இந்தியாவில் ஜன ஸம்மதமில்லாமலே பிரிட்டன் தனது ஏகாதிபத்ய முறையை பலாத்காரமாகத் நிணித்து வருவதையும் அந்த அறிக்கை குறிப்பிட்டுக் குற்றங்களைச் சாட்டுகிறது.

அந்த அறிக்கையில் நாம் பிரதிருத்தில் முக்கியமாக கவனிக்க வேண்டிய பாகமாவது :—

"யுத்த பிரதாபத்தையும், பலாத்கார வெறியையும், மனித உணர்ச்சியை அடக்கியாளுவதையும் காங்கிரஸ் கண்டிக்கிறது. காலிகளும், பாஸிஸ்ட் தேசங்களும் பல தடவை பல நாடுகளை ஆக்ரமித்திருப்பதையும், காகரீக முறை கல்ல கோட்பாடு, தர்மம் ஆகியவைகளை அந்த தேசங்கள் காற்றில் வக்கில் பறக்கவிட்டு விட்டதையும் காங்கிரஸ் அழுத்தமாகக் கண்டிக்கிறது."

மேற்கண்ட வாக்யங்களிலுள்ள உயர்ந்த கொள்கைகளை, ஜன நாயகத்திற்காக கண்ணீர் விடும் காங்கிரஸ் இன்று காற்று வாக்கில் பறக்கவிட்டு விட்டதை எடுத்துக்காட்ட வேண்டியது இச்சந்தர்ப்பத்தில் அவசிய மென்று கருதுகிறோம். காலிஸம், பாலிஸம், இம்பீரியலிஸம் போன்றவைகளைக் கண்டிக்கும் காங்கிரஸ்ஸானது பலாத்காரத்தையும் ஆக்ரமணத்தையும் அடிப்படையாகக் கொண்ட காச்தியத்தைக் கொண்டு, மனித உணர்ச்சியை அலக்ஷ்யம் செய்தும், சட்டபலத்தால் அடக்கியும், நாகரீகம், தர்மம் இவைகளை மறந்தும், பலாத்காரம், ஆக்ரமணம் ஆகிய கொடுமைகளை பஹிரங்கமாகச் செய்து வருவதை மறந்து விட்டதுபோலும்? ஒன்றரை நாழி ஆட்சி நடத்தி அதிகாரப் பதவி கிடைத்தவுடனேயே இறுமாப்பு ப்பிடித்த பொது ஜன அபிப்பிராயத்தை உதாஸீனம் செய்த ஸ்வாதிகாரி முறையில் யதேச்சாதிகாரம் செய்ய வில்லையா?

காங்கிரஸ் ஆக்ஷியில் பிரஜைகளுடைய ஸொத்து சுதந்திரங்களுக்கு ஆபத்து நேர்ந்திருக்கிறது. பேச்சு உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது. ஜமீன்தார், நிலச்சுவான்தார்களுடைய சொத்துகள் ஆக்ரமிக்கப்படுகின்றன. சட்டங்களின் ஹத்து ஸர்காரேலேயே மீறப்படுகிறது. நீதிஸ்தலங்களின் ஸ்வாதந்திரியம் பறிக்கப்படுகிறது. பேச்சிலும் காரியத்திலும் பிடிவாதமும் பலாத்காரமும் பாவிக்கிறது. இவ்வளவு அநீதிகளும் ஜனநாயகத்தின் பெயரால் செய்யப்படுகின்றன. முக்யமாக இப்போது நடத்தப்படும் தேவாலய ஆக்ரமணத்தை இச்சமயம் மறக்கக் கூடாது. மந்திரி ராஜன், தேவாலயங்களைத் தாங்கள் ஆக்ரமணம் செய்துகொள்ளப் போவதாயும், ஸனாதனிகள் வேறு கோவில் கட்டிக்கொள்ளலாமென்றும் சொல்லிவிட வில்லையா?

ஹிட்லரும் இப்படித் தான் சொல்லுகிறார். போலண்ட் தமக்கு வேண்டியிருப்பதாயும், அங்கிருப்பவர்கள் வேறு இடம் பார்த்துக் கொண்டு போகலாமென்றும் அவர் சொல்லுகிறார். இந்த நாஸிஸத்திற்கும், காங்கிரஸ் போக்கிற்கும் வித்யாஸமென்ன?

தம்மை "ஹிட்லர்" என்று பலர் அழைப்பதாக கனம் பிரதம மந்திரியே பல தடவைகளில் சொல்லிக் கொண்டிருக்கிறார். பொது ஜன அபிப்பிராயம் அந்த மாதிரி இருப்பதை அவர் அறிந்து கொண்டிருக்கிறார். இத்தகையவர்கள் அபிலீனியாவுக்கும், போலந்திற்கும், கண்ணீர் விடுவதும், பிரிட்டனை ஏகாதிபத்யக்காரர்களென்று ஏசுவும் வாய் உண்டா?

உண்மையில், பாலிஸம், நாஸிஸம், முதலியவை வெளிநாடுகளில் ஒழியவேண்டுவதுடன் நமது நாட்டிலும் எவ்விடத்திலும் தலைகாட்டாமல் ஒழிக்க வேண்டியது அவசியம். மனிதனை மனிதன் தன்பப்படுத்தாமல் உலகத்தில் சமாதானமும், க்ஷேமமும் நிலைக்க வேண்டுமானால், அதற்கு ஒரே சாதனம் தான் உண்டு. தர்மத்தை அடிப்படையாய்க் கொண்டு நடப்பதே அந்த சாதனமாகும்.

குறிப்புகள்

ஸ்ரீரங்கத்தில் பலாத்கார ஸம்பவங்கள்

விசாரணை நடத்தவேண்டும்

மதுரை ஆலயப்பிரவேச ஸம்பவத்திற்கு பிறகு ஆஸ்திக ஸமூகத்தினரின் நிலைமை வெகு கேவலமாகி விட்டது. முதலில் மதுரை வைகை மண்டபத்தில் மந்திரி முன்னிலையிலேயே ஆஸ்திகர்கள் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டுப் பலர் படுகாயமடைந்தனர். அதற்குக் கொடுமையைப்பற்றி நாளது வரையில் எவ்விதக் கேள்வி முறையில்லை. பிறகு நிருப்பரங்குன்றம் ஸ்வாமியை அசுத்தப்படுத்த நடந்த அநீதியைத் தடுக்க ஸாத்விக முறையில்போராடியஆஸ்திகர்கள் போலீஸாரால் தடியடி கொடுத்துத் தடுக்கப்பட்டனர். இந்த அக்ரமத்தைப்பற்றியும் இன்று வரையில் எவ்வித நடவடிக்கையுமெடுத்துக் கொள்ளப்படவில்லை.

மூன்றாவதாக இப்போது ஸ்ரீரங்கத்தில் ஸாத்விக முறையில் நடத்தகொண்ட ஆஸ்திக ஸ்திரீகள் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டதாக சென்னை மெயில் பத்திரிகை மூலமும், நமது நண்பர்கள் மூலமும் தகவல் எட்டுகிறது. இவ்விஷயமாகப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ள தகவல்கள் பூர்ணமாயில்லாமல் அறை குறையாகவும், தெளிவற்றனவாயுமிருக்கின்றன. கேரில் பார்த்தவர்கள் சொல்லும் விவரமோ மிக்க பயங்கரமாயிருக்கின்றது. கனம் ராஜன் அவர்கள் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் ரிபர்ட் போலீஸ் வந்ததைப்பற்றியோ ஸ்திரீகள் மீது தடியடி நடந்ததைப்பற்றியோ, பலர் அதனால் காயமடைந்ததைப்பற்றியோ ஒன்றும் ப்ரஸ்தாபிக்கவில்லை. ஸ்திரீகள் புலரத்காரத்தில் இறங்கியதாக, நீண்டகால சர்க்கார் தோரணையை அநுஸரித்து, இளர்ச்சிக் காரர் மீது குற்றத்தையும் போலீஸர் மீது அபிமானத்தையும் காட்டி அவர் பேசியிருக்கிறார். ஸ்திரீகளும், போலீஸில் சிலரும் காயமுற்றதாகவும் சொல்லப்படுகிறது. அந்த மாதிரி காயம் ஏற்படக் காரணமென்ன? அகே ஸ்திரீகள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று பிறகு வீட்டில் படுக்கையாயிருப்பதாகத் தெரிகிறது.

இந்த விஷயங்களின் உண்மையென்ன? ஆலயப்பிரவேசச் சட்டத்திற்கு வைஸ்ராய் அனுமதி வாங்கப்பட்ட பிறகு காங்கிரஸ் மந்திரிகளின் போக்கு பொது ஜனங்களுக்கு அதிக பிதியை உண்டுபண்ணி வருகிறது. கனம் ராஜன் அங்காங்கு பேசி வருவதே இதற்கு நஜு. ஸாதனிகள் சிமைக்கோ, வைஸ்ராயிடமோ இனிப்போக முடியாதென்றும், காங்கிரஸ் மந்திரிகள் எதைச் செய்தாலும் கேள்வி முறை கிடையாதென்றும் இந்த தோரணையில் தான் நடந்துவருகிறார். ஸ்ரீரங்கம் ஸம்பவங்களும் இதன் உதாரணங்களென்று பொது ஜனங்கள் கலக்கமடைந்திருக்கிறார்கள். ஸாதனிகளை பயமுறுத்தி போலீஸ் உதவியைக்கொண்டு, அவர்களுடைய நியாய பேச்சு ஸ்வதந்திரங்களும் மற்ற உரிமைகளும் அடக்கப்படுமென்பதற்கு அறிகுறிகள் தோன்றுகின்றன.

ஆகையால் இம்மாகாணத்திலுள்ள எல்லா ராஜீயக் கக்ஷிகளும், பிரமுகர்களும் இதில் கவனம் செலுத்துவது அவச்யமாகும். மந்திரிகளும் பக்ஷபாதமற்ற விசாரணைக் கமிட்டியை நியமித்து ஸ்ரீரங்கம் ஸம்பவங்களை விசாரித்து உண்மையை வெளிப்படுத்த வேண்டும். ஸர்க்கார் இதில் தாமதம் செய்தால் அவ்வூர் வாஸிகளான பொது ஜனங்கள் ஒரு விசாரணைக் கமிட்டியை நியமித்து விசாரித்து உண்மைனய வெளிப்படுத்தலாம். ஸ்திரீகள் தடியடிபட்டது உண்மையென்று தெரிகிறது. பத்திரிகை ரிபோர்ட்களால் இது உறுதிப்படுகிறது.

இப்படியிருக்க கனம் மந்திரி ஸி. ஆர். இதில் எவ்விதக் கவலையும் செலுத்தாமல் தூர்க்கக்ஷி பேசுகிறார். ஸ்ரீ சத்யமூர்த்தியும் சிறி விழுகிறார். இதுதான் நீதியா? இது தான் தர்மமா?

ஸ்திரீகளை யாரோ இளப்பிவிடுவதாகப் பழி சொல்லுகிறார்கள். ஸ்திரீகளை இளப்பி விடக்கூடிய ஒரு ஸ்தாபனமோ, பணமோ, ஒன்றும் இடையாதென்பது பிரஸித்தமானது. எவ்வொரு ஸ்திரீயும் தனித்தனியான உணர்ச்சியினல் தூண்டப்பட்டு அங்கு ஒன்று சேர்ந்தார்களென்பதே உண்மை. சிகண்டியை முன்வைத்து யுத்தம் நடத்துவதாக ஸ்ரீ ஸத்யமூர்த்தி கூறுவது வெறும் அபத்தம். சட்டமறுப்பிலும் ஸத்யாக்ரஹத்திலும் கூலிகொடுத்து ஸ்திரீகளை சந்திக்கு இழுத்த காங்கிரஸானது தனது அநுபவத்தைக் கொண்டு நம்மை துஷிக்கிறது. மூன்று வெள்ளை அதிகாரிவர்க்கம் காங்கிரஸ்மீது கூறியவைகளையே இப்போது காங்கிரஸ் அதிகாரி வர்க்கம் ஆஸ்திகர் மீது கூறத் தணிந்து நிற்கிறது.

இதற்கு காங்கிரஸ் தலைவர்களும் மந்திரிகளும் ஸ்கோகப் படலில்லையானால் நாம் என்ன செய்வது? பெரிய அநீதி நடந்திருக்கையில், அதைப்பற்றி ஜனங்கள் கலக்கமடைந்திருக்கையில், ஜனங்களை ஸமாதானப் படுத்தவேண்டியது முறையாயிருக்க, "அப்படித்தான் செய்வேம்" என்ற தோரணையில் இறுமாப்பாகவும், தமாஷாகவும் இருப்பது காங்கிரஸின் அழிவுக்கே காணமாகுமென்பதை அவர்கள் உணராதது வருத்தக்கூடியது.

ஸ்ரீரங்கத்தில் நடந்ததென்ன ?

ஸ்ரீமான் S. K. சர்மா அறிக்கை

திருச்சினுப்பள்ளியில் பிரபல அட்வகேட்டும், "ஹிந்து" "மதராஸ் மெயிலில்" அடிக்கடி தொடர்ந்து கட்டுரைகள் எழுதிவருபவரும், வெனஸ்டேவெரியூ என்ற சஞ்சிகையின் ஆசிரியருமான ஸ்ரீ S. K. சர்மா, பி. எ. பி. எல் இற்கண்ட அறிக்கையைப் பத்திரிக்கைகளுக்கு அனுப்பி இருக்கிறார். (இந்த அறிக்கை 'ஹிந்துவில்' வெளிவக்கிருக்கிறது.) ஸ்ரீ சர்மா ஸனாதனிக் கட்சியைச் சேர்ந்தவரல்ல. காங்கிரஸ்காரருமல்ல. அவர் ஒரு சிறந்த எழுத்தாளர். அவர் அறிக்கையை வாசகர்கள் கவனத்தக்குக் கொண்டுவர விரும்புகிறோம். அவர் கூறுவதாவது :—

"கனம் ராஜன் அறிக்கையை பத்திரிகையில் பார்த்து ஆச்சரியமுற்றேன். ஸனாதனிகள் ஸ்ரீரெங்கத்தில் நடந்த ஸம்பவத்தைக் குறித்து ஒரு அறிக்கைவிடவேண்டும் என்று விரும்பினர்கள். ஆனல் அதை வேண்டாமென்று தடுத்தது நான் தான். ஏனென்றால் ஸம்பவத்தன்று ஸ்ரீரெங்கத்திற்கு நான் அழைத்துச் செல்லப்பட்டதும், அங்கு ஒரு கூட்டம் கூடை செய்யப்பட்டும், அதில் அநேக பெண்களியிருந்ததையும் கண்டேன். எனவே போலீஸார் நடவடிக்கையால் நீதிஸ்தலத்தில் உண்மை வெளியாகிவிடுமென நினைத்தேன். மேலும் தகவல் சப்டிவிஷனல் மாஜிஸ்ரேட்டுக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். இந்த நிலையில் கனம் ராஜனைப் போன்ற ஸ்தானத்திலிருப்பவர்கள் அறிக்கைவிட்டு பொதுஜன அபிப்பிராயத்தை கிளக்க முயற்சிப்பது விரும்பக்கூடியதல்ல எனவே கனம் ராஜன் அவசரப்பட்டு ஒரு அறிக்கையை விடாதிருப்பாரானல் இந்த மறுப்புக்கு அவசியமே யிராதிருக்கலாம்.

நான் ஸ்ரீரங்கத்திற்குச் சென்றதும் ஒரு பெண்ணை கண்டேன். அவளது வீலை எலும்பு முறிந்து டாக்டரால் சிகிச்சை செய்யப்பட்டிருந்தது. இன்னும் எழுந்து உட்காரவோ பேசவோ இயலாத நிலையிருக்கிறார். மற்றொரு ஸ்திரீக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்ததை கண்டேன். இப்பெண் தடியடியால் காயமேற்பட்டதாகக் கூறினர். இன்னொரு பெண் நடக்க இயலாது நகர்ந்து கொண்டேயிருந்தாள். ஒரு பெண்ணின் கணவன் தனது மீண்விக்கு முகம் வீங்கி விட்டதாக அறிவித்தார். மற்றும் பல ஆண் மக்கள் தங்களுக்கு நேர்ந்த காயங்களை என்னிடம் காட்டினர்கள். இவ்வித சம்பவத்திற்குப் பின் கனம் ராஜன் தடியடிப் ப்ரயோகம் நடைபெறவில்லை என்று அறிக்கையில் கூறியிருப்பது உண்மையை மறைப்பதாகும்.

கனம் மந்திரியிடம் பெண்கள் முறையிட்டுக்கொள்கையில் உடனே பத்ர போலீஸார் தடி கொண்டு பெண்களை தாக்கினர். மந்திரி இதை பார்த்துக்கொண்டே உள்ளே சென்றுவிட்டார். மிளகாய் பொடி கோயில் சமையற்கட்டிலிருந்து கொண்டு வரப்பட்டு ஸ்திரீகள் கண்களின் மீதினுர்களென எனக்குத் தகவல் கொடுக்கப்பட்டது".

படுத்தவேண்டியது முறையாயிருக்க, "அப்படித்தான் செய்வேம்" என்ற தோரணையில் இறுமாப்பாகவும், தமாஷாகவும் இருப்பது காங்கிரஸின் அழிவுக்கே காணமாகுமென்பதை அவர்கள் உணராதது வருத்தக்கூடியது.

"மதுரையில் அஹிம்ஸா யுத்தம் தொடங்குவோம்"

குடந்தையில் ஸ்ரீ நடேசய்யர் கர்ஜனை

பெரிய பொதுக்கூட்டம்.

குடந்தை ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவில் கோபுர வாசலில் 18உ நிங்கள் நிழமை மாலை 7-மணிக்கு பிரம்மாண்டமான பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. 2 ஆயிரம் பேர்வரையில் கூடியிருந்தனர். ஸ்திரீகளும் ஏராளமாக வந்திருந்தனர்.

ஸ்ரீமான் எஸ். மஹாலிங்கய்யர் பி. ஏ., பி எல். அவர்கள் அக்ராஸனம் வஹித்தார்.

காஸி "யுவக்" பத்திராசிரியரான ஸ்ரீமான் அருண் ஹிந்தி பாஷையில் வெகு நேர்மையாக ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்துப் பேசினர்.

இவர் பேசுகையில் ஒரு காங்கிரஸ்காரர் சிறிது ஆக்ஷேபம் செய்ததன் மேல் கூட்டத்தில் அமளியேற்பட்டது. ஆக்ஷேபித்தவரை அமைதியாக மேடைக்கு அழைத்து வந்த தலைவர் தமது ஸமீபத்தில் உட்கார வைத்துக்கொண்டார்.

பிறகு ஸ்ரீ வில்லிபுத்தூரைச் சேர்ந்த ஸ்ரீமான் முத்துஸாமித் தேவர் பேசுகையில் காங்கிரஸின் ஆரம்ப கால சரித்திரத்தைக் குறிப்பிட்டு காந்திஜி வந்த பிறகு தான் காங்கிரஸில் மதக் குழப்பம் ஏற்பட்டதென்றும், ராஜீய விஷயத்தில் காந்திஜி தோற்றுவிட்டதாலேயே தீண்டாமை விலக்கில் இறங்கினரென்றும், ஆலயப்பிரவேசத்தால் தீண்டாமை விலகதென்றும், ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் தம் தம், வீடுகளில் தீண்டாதாரைச் சேர்த்துக்கொண்டு தீண்டாமையை விலக்க வேண்டுமென்றும், மதுரையில் ஸத்யாக்ரகம் ஆரம்பிக்க யாவரும் உதவி புரிய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீமான் பிரஸாத ராவ் அவர்களும் ஹிந்து மதத்தின் மஹிமையையும், ஆலயங்களின் மேன்மையையும் கூறி ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்தார்.

பிறகு பிரம்மஸ்ரீ என். நடேசய்யரவர்கள் பேசுகையில், காங்கிரஸ்காரர்கள் மதுர கூட்டங்களில் கலவரம் செய்வதைப் பலமாகக் கண்டித்தார். டாக்டர் ராஜன் நமது ஸ்திரீகளும், வைதிகர்களையும், மடாதிபதிகளையும் பற்றி அங்காங்கு தாஷணமாகப் பேசி வருவதைக் குறிப்பிட்டு அதை பலமாகக் கண்டித்தார்.

மதுரையில் அஹிம்ஸா யுத்தம் நடத்தி, ஸ்ரீ மீனாக்ஷி தேவியை மறு பிரதிஷ்டை செய்ய நிச்சயித்திருப்பதாயும் அதற்கு யாவரும் உதவிபுரிய வேண்டுமென்றும் ஸ்ரீ நடேசய்யர் கேட்டுக்கொண்டார்.

தலைவர் ஸ்ரீமஹாலிங்கய்யர் ஒருவர் கேட்ட நில கேள்விகளுக்குத் தக்க முறையில் பதிலளித்துவிட்டு, படிப்போ, அது பலமோ இல்லாத சிறுவர்கள் இம்மாதிரிக் கேள்விகளைப் பெரியோர்களைக் கேட்பது அவமரியாதையென்றும், சிறு பிள்ளைத்தனமென்றும் இம்மாதிரி சிறுவர்களைத் தூண்டிவிட்டுப் பின்னல் நின்று சிலர் விஷமம் செய்வதை கண்டிக்கத் தக்கதென்றும் புத்திமதி கூறினர். ஸ்ரீமான் நடராஜய்யரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு 9மணிக்கு கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் திருக்கோவில்

ஆலயப்பிரவேசத்துக்குப் பலத்த எதிர்ப்பு

"ஸ்திரீகள் ஸத்யாக்ரஹம் செய்யத்தயார்"

திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் தேவஸ்தானத்தில் பஞ்சமர்களை விடவேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் பிரிவுத்தி செய்ததில் ஏராளமாக கையெழுத்திட்டு ஆக்ஷேபனை மகஜர்கள் அர்மகர்த்தாக்களுக்கு அனுப்பப்பட்டன. தவிரவும் மூன்று தர்மகர்த்தர்களில் ஒருவரான ஸ்ரீ சிவசங்கரன் பிள்ளை என்பவர் பலமாக ஆக்ஷேபித்து வந்தார். இந்த ஸ்திதியில் கோவில் பட்டர்களை ஸ்வாதீனம் செய்துகொண்டு விட்டால் சௌகர்யமாயிருக்குமென்று மதுரைஜில்லா அழகர் கோவிலைப் பரமாகின ராதகிருஷ்ணய்யர் என்பவர் 5ம் தேதிசெவ்வாய்க்கிழமைதினம் திருநெல்வேலிக்கு வந்து மானேஜிங் டிரஸ்டி ராமய்யா முதலியாரையும் கூட வைத்துக்கொண்டு சம்பளம் போடப் போவதாகச்சொல்லி கோவில் பட்டர்களை வரவழைத்து ஆலயப்பிரவேசத்திற்கு அனுமதித்து கையெழுத்தைச் செய்து கொடுத்தால் தான் சம்பளம்போடப்படுமென்றும், மற்ற விதமாகவும் நிர்ப்பந்தம் செய்து சில எளிய பட்டர்கள் இடமும், கோவில் தொழிலாளிகள் இடமும் கையெழுத்து வாங்கிக் கொண்டார். சுமார் 10 பட்டர்கள் கையெழுத்துச் செய்ய மறுத்து விட்டார்கள். அப்படியே கோவில் விதாயக்காரனான நீகிதர்கள் ஐந்து பேர்களும் மறுத்து விட்டார்கள். ஸ்ரீ கனக நீகிதர் என்பவர் எழுத்து மூலமாகவே தன் மறுப்பை தெரிவித்திருக்கிறார். மற்றோருவர் "தீண்டாதார் ஆலயப் பிரவேசம் சாஸ்திர விரோதமாக இருக்க, தங்களதிகாரப் பத்திரத்தைக் கொண்டு நிறை வேற்றிவிட நீங்கள் உத்தேசிக்கிறீர்கள். இதற்கு எங்கள் சம்மதியை கேழ்ப்பானேன்; உங்களிஷ்டப்படி செய்யுங்கள்", என்று வெறுப்புடன் சொல்லிவிட்டுப் போய் விட்டார். அதில் கடைசி வாக்யத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு கோவில் நீகிதர்களுக்கு ஆக்ஷேபனை இல்லைபோல் சிலர்கள் தப்புப் பிரசாரம் செய்து வருவதாயும் தெரிய வருகிறது.

இவ்விதம் கையெழுத்து வாங்கின விஷயம் தெரிந்தவுடன் ஊரில் பரபரப்பு ஏற்பட்டு வியாபாரிகளும், மற்றும் ஆஸ்திகர்களும் எதிர்ப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். புருஷர்கள் தங்கள் தங்கள் சொந்தக் காரியங்களில் ஈடுபட்டு ஆலயப்பிரவேச விஷயத்தில் காட்டிவரும் அக்கரை போதாதென்று, பல ஸ்திரீகளுக்குத் தேர்ன்றி தங்களாகவே தெப்பக்குளத்தெரு சாஸ்தாங் கோவிலில் பிரதி தினம் கூட்டம் கூட ஆரம்பித்தார்கள். அவர்கள் பிரதி நிதியாக சிலர்கள் 11உ திங்கட்கிழமை கலெக்டர் ஸ்ரீமான் பான்ஸர ராவ் காயடி அவர்களை பேட்டி கண்டார்கள். 13உ புதன்கிழமை மந்திரி ஸ்ரீ கனம் ராஜன் ஆலயத்துக்கு வரப் போவதாக இருந்தபடியால் அவர் வருவதற்கு முன் நீண்டாதாரை ஆலயத்தில் புகுத்திவிட்டு கியாதி அடையவேண்டுமென்று சில காங்கிரஸ்காரர்கள் அசலூர்களிலிருந்து சில காடார்களையும் மற்றும் கீழ்ஜாதியாரையும் தருவித்து தயாராக வைத்துக் கொண்டிருப்பதாக 12உ இரவு 11 மணிக்கு தகவல் கிடைத்தது. உடனே இங்கு தற்காலம் வந்திருக்கும் திருவாலங்காடு சுவாமிகளர்களும், ஸ்ரீ எ. எஸ். குத்தாலம் பிள்ளை என்பவரும், ஸ்திரீகளில் சிலர்களும் அன்று இரவே இவ்விஷயத்தை தெருத் தெருவாகத் தெரிவித்தவிட்டு வந்தார்கள். விடியற்காலை 4 மணி சுமாருக்கு கோவிலில் தடை செய்வதற்குச் சித்தமாக அநேக ஸ்திரீகள்வந்தவிட்டார்கள். அவர்கள் மிகவும் அமைதியாக தவஜஸ்தம்பத்திற்கு முன் உட்கார்ந்துகொண்டு விட்டார்கள். 9 மணி சுமாருக்கு கதர் தரித்த சில மனுஷியர்கள் அவ்விடம் வந்து அவர்களை பயமுறுத்தியும் உதாஸீனமாகப் பேசியும் கலவரம் செய்ய ஆரம்பித்தார்கள். அதன் பேரில் ஸ்திரீகளின் சார்பாக உடனே கலெக்டருக்கும், போலீஸ் சூப்பிரண்டெண்ட்டுக்கும் தந்திகள் கொடுக்கப்பட்டன. அவ்வதிகாரிகள் உடனே மத்யானமே புறப்பட்டு வந்து, ஆலயத்தில் நீண்டாதாரை விடலாமென்று சர்க்கார் உத்தரவு இதுவரை எற்படாதநிலை இப்பொழுது அவர்களே விடுகடதாசி தென்றும், அல்லிதம் உத்தரவு கிடைத்தாலும் அவ்வுத்தரவை தண்னிட்டுக் காட்டி அப்புறமே விடவேண்டுமென்றும், மானேஜிங் டிரஸ்டியை எக்சர்த்தவிட்டு, நீண்டாதார் ஆலயப்பிரவேசம் அன்று ஒன்றும் நடக்காதென்று ஸ்திரீகளுக்கு உறுதி சொல்லி அவர்களையும் அவரவர்கள் வீட்டுக்கு அனுப்பினார்கள்.

மறு நாள் மாலை மந்திரி கனம் ராஜன் வரும் சமயம் தங்கள் ஆக்ஷேபனைகளைத் தெரிவிக்க வேண்டுமென்று ஊரிலுள்ள ஆஸ்திக ஸ்திரீபுமான்கள் எல்லாரும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்கள். அந்த ஸமயம் கலவரத்துக்கு இடமன்னியில் கலெக்டர் அவர்களும், போலீஸ் அதிகாரிகளும் செய்திருந்த ஏற்பாடு மெச்சத் தக்கது. கோவிலில் மந்திரி வரும் சமயத்தில் அர்த்த மண்டபத்திலும் மகமண்டபத்திலும் புருஷர்களில் சுமார் 4000 பேர்களும் ஸ்திரீகளில் சுமார் 2300 பேர்களும் கூடியிருந்தார்கள். வியாபாரிகளில் முக்யஸ்தர்களான ஸ்ரீமான்கள் முத்துக்குமாரசாமி பிள்ளை, சங்கரராயண பிள்ளை, மேகலிங்கம் பிள்ளை, ராமகிருஷ்ண பிள்ளை, ராமலிங்கம் பிள்ளை, அழகப் பிள்ளை முதலானவர்களும், வக்கீல்களில் ஸ்ரீமான்கள் ஸதா கணபதி பத்தர், என். முகசுப்பய்யர் முதலானவர்களும் ஸ்ரீமான் டி. என். முத்துஸ்வாமி அய்யர் முதலான பிரமுகர்களும் முக்யமாகயிருந்த கனம் மந்திரி இடம் தங்கள் ஆக்ஷேபனைகளைத் தெரிவித்தார்கள். மந்திரி வருவதற்கு கொஞ்ச நேரத்துக்கு முன்னால் மதுரை அட்வகேட் ஸ்ரீ கே. ஆர். வெங்கிட்டராமய்யர் இவ்வூருக்கு வந்து இந்த சம்பவத்தில் கலந்து கொண்டது மிகவும் அநுகூலமாயிருந்தது. ஸ்திரீகளின் கூட்டத்தில் ஏற்கனவே செய்திருக்கப்பட்ட தீர்மானங்களையே எடுத்து எழுதி ஏராளமாக ஸ்திரீகளிடம் கையெழுத்து வாங்கியிருந்த ஆக்ஷேபனை மகஜரையும் கனம் மந்திரியிடம் கொடுத்தார்கள். மந்திரி இவ்வளவு ஆக்ஷேபனை இருக்கிறதென்பதை கேரில் பார்த்துக்கொண்டே ஆலயத்தில் தரிசனம் செய்துவிட்டுப் போய்விட்டார்.

ஆனாலும் கோவிலுக்கு வெளியில் வேடிக்கை பார்க்கையிருந்த கூட்டத்தை தனக்கு ஓர் ஆதரவாக சொல்லிக்கொண்டும், தன் அதிகாரத்தையே காட்டிக்கொண்டும், ஆஸ்திகர்களின் மனம் புண்படும் படித்தும் வழக்கம் போல் பின்னால் முனுசிபல் மைதானத்தில் உபந்யாஸம் செய்துவிட்டுப் போனார்.

ஊர் மகா ஜனங்களுடைய ஆக்ஷேபனை பலமாகயிருப்பது தெரிந்தே ஸ்ரீ நெல்லையப்பர் கோவில் இப்பொழுது "ரெடிபை" செய்திருப்பதாகத் தெரிகிறது. மந்திரிகள் தங்கள் கையாள் யாரையேனும் எக்ஸிகியூடிவ் ஆபீஸராக நியமித்து அவர் மூலமாக நீண்டாதாரை கோவிலுக்குள் புகுத்திவிட வேண்டும் முயற்சிகள் செய்வார்களென்று பதில் சந்தேகமில்லை. அதற்கு எதிராகநின்று போராடுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளும் நடந்து வருவதாகத் தெரிகிறது. இதுவரை கோவில் அசுத்தப்படாமலிருந்து வருவது ஸ்திரீகளின் முயற்சியினாலேயே என்று நிச்சயமாகச் சொல்லலாம். அநேகம் ஸ்திரீகளின் கூட்டங்களில் பிரமாணர்களைவிட இதர ஜாதியார்களே ஜாஸ்தியிருக்கிறதும் குறிப்பிடத்தக்கது.

மறு நாள் வியாழக்கிழமை இரவு 8 மணி சுமாருக்கு தாம்பிரபர்ணி நதியில் தைப்பூச மண்டபத்தில் திருவாலங்காடு சுவாமிகளாவர்களின் அத்யக்ஷத்தின்கீழ் ஸ்ரீமான் கே. ஆர். வேங்கடராம அய்யர் அவர்கள் ஒரு விரிவான உபன்யாஸம் செய்தார். அதில் தனக்கும் மே. த. வைஸ்ராய் முதலான மேல் அதிகாரிகளுக்கும் கட்டந்தோறும் கடிதப் போக்குவரத்துக்களைப்பற்றி எடுத்துச் சொல்லி, ஆலயங்களை பாழாக்கியதை யுத்தத்தில் காங்கிரஸின் அதரவாளர்களுக்கு ஆசைப்பட்டு வைஸ்ராய் இவ் அக்ரமச் சட்டத்திற்கு அனுமதி கொடுத்த விபரத்தையும் வைஸ்ராயை காந்தி பார்த்தவிட்டு வெளியில் வந்ததும் அவ்வனுமதி ஏற்பட்டதிலிருந்தே உண்மை வெளியாகிறதென்றும் தற்கால நெருக்கடியை உத்தேசித்து வைஸ்ராய் சம்மதித்தவிட்ட போதிலும் சட்டம் செல்லக்கூடியதில்லையென்று வாதம் செய்ய இன்னும் பலவித ஆதாரங்கள் இருப்பதாகவும் எடுத்துக் காட்டினார். இனிமேலாவது மதஸம்ரக்ஷணையில் ஜனங்கள் விசேஷமான ஊக்கத்தை காட்ட வேணுமென்பதை மிகவும் வற்புறுத்திச் சொன்னார். இதே விஷயமாக அக்ராஸனர் சில வார்த்தைகள் சொல்லி 12-30க்கு கூட்டம் முடிவு பெற்றது.

ஸ்ரீ கே. ஆர். வெங்கட்டராமய்யர் மத்யானம் 3 மணிக்கு மேல் புறப்பட்டு திருச்செந்தூர் ஆழ்வார் திருநகரி முதலான இடங்களுக்கு பிரசாரம் செய்வதற்காக போய்விட்டு அன்று ராத்திரியே திரும்பி வந்து மறு நாள் காலையில் கடையம் சங்கர நயினார் கோவில் முதலான இடங்களிலும் பிரசாரம் செய்வதற்காகப் போனார். இந்த வயதில் தன் சரீர ஸ்திதியையும் பணச்சிலவையும் கொஞ்சமேனும் பொருட்படுத்தாது ஊக்கத்துடன் இவர் செய்து வரும் காரியங்கள் மிகவும் பாராட்டத்தக்கவை.

(ஒரு விசேஷ நிரூபர்.)

அறிவிப்பு.

மேலத் தஞ்சாவூர் அபிஷியல் ரிஸீவர் கோர்ட்டு, தஞ்சாவூர்.

I: P. 17 of 29.

I. A. 39 of 39.

S. சாம்பசிவய்யர், — மனுதார்.

மேற்படி மனுதார் தன்னை வார்ஸாக சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மனுக் கொடுத்து, 26—7—39 ல் ஈங்கு போட்டிருப்பதால், ஆக்ஷேபனையுள்ளவர்கள் வந்து தெரிவித்துக்கொள்ளலாம்.

திருவனந்தபுரம் 18—9—39. } எஸ். சாம்பசிவய்யர், மனுதார்.

ஒரு பிசாசத்தின் வரலாறு

(ஸ்ரீ S. வைதீஸ்வரய்யர், கல்கத்தா)

விஷ்ணுதாஸ் ஒரு வங்காளி. வயது 55. அவர் என்னுடன் பல வருஷங்களாக ஒரே ஆபீஸில் வேலை செய்து வருகிறார். ஹௌராவில் அவருக்கு சொந்த வீடு இருக்கிறது. வீட்டில் புஷ்பத்தோட்டம் இருக்கிறது. அல்லது 20 வருஷங்களுக்கு முன் ஒரு புஷ்பச் செடி ("ஜபா" செம்பருத்தி மரம்) வைத்தார். அது புஷ்பிக்க ஆரம்பித்ததும் இயற்கை வரணை இல்லாத மிருக்த சுபாவம் விசுவதுண்டு. அதனுல் எங்கிருந்து வரணை வருகிறதென்று அவர் அறியவில்லை. ஆயினும் 25 வருஷங்களுக்கு முன் இறந்த தன் மூத்த பெண் பூதமாக வீட்டையே சுற்றிக் கொண்டிருப்பதாக நினைத்திருந்தார். 4-வருஷங்களுக்கு முன் அவருடைய பெரிய மருமகளுக்குக்காலில் குத்துவலி கண்டது. அது காலையிலிருக்கும். இரவில் போய்விடும். மருத்துகளில் குணமாகவில்லை. ஜோஸ்யத்தை வீடுசென்றால் யாதொருபத்ரவமும் இல்லை. புருஷன் வீடு வந்தால் குத்தலலியோடு கலி பிடித்தது போல பயமும் வளர்ந்தது. இதை சங்கதோஷ மென்று நிச்சயித்து மந்திரவாதியை அழைத்து வந்து நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய நிரவியங்களைச்சேகரித்தார். பிசாசு உடனே மருமகள் மூலம் பேசலாயிற்று. தான் அந்தச்செடி வைத்ததமுதல் அதிலிருப்பதாகவும் தன் மேல் எச்சில் துப்பிய அபவாதத்திற்காக அந்த மருமகளை கிலித்ததாகவும் சொல்லிற்று. நீ இருப்பதை அறியாமல் செய்த குற்றத்தை மன்னித்து போய்விடு என்று சொல்லவே சம்மதித்தது. ஆனல் செடியினருகில் பூஜை செய்து வஸ்திரமும் ஒருரூபாயும் பிராமணனுக்குக் கொடுக்கச்சொல்லிற்று. எவ்வளவு கேட்டும் தன்னை யார் என்று சொல்லவில்லை. பூஜை யாருக்குச் செய்வது என்று கேட்க தேவதாதேவிக்கு என்றது. ஆகவே விஷ்ணு தாஸ் அதை தேவதாதேவி (மாரியம்மன்) என்றே நிர்ணயித்து வாரந்தோறும் பூஜைகள் நடந்திவருகிறார். மருமகள் சுகமாய் எழுந்து நடக்கவே மந்திரவாதிக்கு வேலையில்லாமற்போய் விட்டது.

சென்ற புரட்டாசி மீ விஷ்ணுதாஸினுடைய சிறிய மருமகளைப் பிசாசு பிடித்துக் கொண்டது. காரணம் அதன்மேல் அபிப்பிராயம்பல் குப்பைகளைக் கொட்டியது. கொட்டிய இடம் செடிக்கு அருகில் இல்லை. செடியே உனக்கு வாஸஸ்தானமாயிருக்க வேறிடத்திற்கு நீ போவானேன். என்ன அதனுடைய வாதங்கள் செய்தது. சண்டை நான்வதுத்தது. பூஜை செய்யும் போது விஷ்ணு தாஸ் மூன்போல மஸ்காரம் செய்யாததும் ஒரு காரணம். பிறகு இன்னொன்றும் நமஸ்காரங்களாலும் அது விலகிற்று. ஒருமகன் அதைப் பூதமென்று பரிஹாஸம் செய்ய சரி, உன்னை வழிக்குக்கொண்டு வருகிறேன் என்று ஓரிரவு அல்ப சங்கைக்கு போனவனை பெரிய ருபத்தைக்காட்டி பயமுறுத்திற்று. சாதாரணமாய் மனுஷ்ய ரூபத்தைக்காட்டி கடமாடுவதுண்டு. இல கட்டளைக்குப் பிறகு திரும்பவும் சிறுமியைப்பிடித்துக்கொண்டது. என் என்று கேட்க "அவளுடைய தோழி அவளைப் பிடித்துக்கொள்ள வந்தாள். நான் காப்பாற்றினேன்" என்றது. பிறகு விசாரித்ததில் அந்த பெயர் கொண்ட தேவதி இறந்துபோனதாகத் தெரிந்தது.

விஷ்ணுதாஸின் பேர்குழந்தை என்னுக்கு உடம்பெல்லாம் சொரிசிறங்கு. மருந்துகளில் தீரவில்லை. மாரியம்மனைக் கேட்கலாமென்று சிறிய மருமகளை கைகால் கழுவி ஒரு ஆஸனத்திலிருத்தி நாற்புறமும் மற்றவர்கள் உட்கார்ந்து அழைத்தார்கள். முதலில் மூர்ச்சை போட்டு விழுந்து பிறகு எழுந்து பேச ஆரம்பித்தது. மருத்துகேட்க சற்று பொறு என்று சொல்லி மௌனமாயிருந்து பிறகு "கையை நிறுத்து பார் மூலிகை இருக்கும். ஏன்னெயில் அரைத்துப்பேட்டால் குணமாகுமென்றது. ஒரே தடவையில் குணமாயிற்று. விஷ்ணுதாஸின் சகோதரன் மனைவி படுத்தபடுக்கையாயிருந்து வியாதியில் அவஸ்தைப்பட்டாள். அவளுக்கு மருந்து கொடுக்க மறந்தது. மிகவும் கெஞ்சிக்கேட்க, பிசாசு— "இந்த வீட்டுக்கு வச்சசொல் கொடுத்திறேன் விஷ்ணு—" அவளால் தானே எழுந்திருப்பது கூட முடியாது. எப்படி வருவாள்." பிசாசு—"தாக்கி நிறுத்தி வை. நான் பிடித்து நடத்தி வருகிறேன்." அவ்விதமே பிசாசு அந்த அம்மாள் நடந்தது. எல்லாருக்கும் ஆச்சர்யமாயிருந்தது. பிறகு மருந்து சாப்பிட்டு சிக்கிரத்தில் குணமடைந்தாள்.

விஷ்ணுதாஸின் பெரிய மருமகள் ஸ்ரீரவை வேதனை அளவற்றமாயிருந்தது. டாக்டர்கள் வந்து ஆஸ்பத்திரி போஞல் தான் பிழைப்பாள் என்றார். தேவி நினைவு வந்து கேட்கவே தான் பிரஸவம் செய்விப்பதாக அபயம் கொடுத்தது. அன்றிரவு சுகப்பிரஸவம். காலையில் பிசாசு, "சமையலறையிலிருந்து உண்டியைப்பூண் நின்று விட்டது. தான் பிரஸவ அறையிலிருந்துவிட்டேன். நீங்கள் ஸுமான்களை மூடி வைப்பதில்லை," என்றது உண்மையாயிருந்தது. அதைப்பொழுதும் வீட்டைக் காவல் காப்பது வழக்கம். ஓரிரவு குழந்தை கட்டிலிலிருந்து விழுந்ததைத் தாங்கி ரவைத்தது. விழுந்தது தாய்க்கு மாத்திரம் தெரியும் பிசாசு சொல்ல ஆச்சர்யமாயிருந்தது. (குழந்தைகளை தேவதைகள் விழாமல் காக்கிறார் என்று முன்னோர் சொல்வதுண்டு.)

இந்த அதிசயங்களை அறிந்தவர்கள் வாசலில் வந்து உட்கார்ந்து தாங்கள் தூரதேசத்தில் வந்த காரியம் என்ன என்றும் பரிஹரிப்பதுண்டு. எல்லாம் உண்மையாயிருக்கும்

ஒரு சமயம் அது சிறுமிக்குள் புகுந்து அவள் புருஷனைப்பார்த்து "நீ ஏன் அந்த கழகத்தில் அவ்வளவு கோமிருக்காய்?. ஆபீஸை விட்டால் வீட்டுக்கு நேரே வரக்கூடாதா?" என்றது. புருஷன்— அதனல் உனக்கென்ன நஷ்டம்? பிசாசு— நஷ்டமா. ; யார் உன்னை நினம் ஆபீஸிலிருந்து வரும் பொழுது கூடவே இருந்து காப்பாற்றுகிறார். நீ கழகத்திலிருக்கும் பொழுது நான் வெளியே காத்திருக்கவேண்டிருந்ததாக்கும்."

4—5 மாதங்களுக்கு முன் அது சிறுமியை எப்பொழுதும் பிடித்துக்கொண்டு மிருந்த தன்பம் விளைவித்தது. இன்சொல் ஒன்றும் பலிக்கவில்லை. மந்திரவாதி வந்தான். அது பிடிபடாமல் ஓடிப்போய் அவன் போன பிறகு வந்தது. அதிகாரசக்தியுள்ள வேறு மந்திரவாதி வந்தான். அவன் இரவில் ஒரு பஞ்சாபி பிசாசைக் கரவல் வைத்து இதைப் பிடிக்க ஏற்பாடு செய்தான். சிறிது பொரியையும் மந்திரித்துக் கொடித்த பிசாசு சிறுமிக்கு வந்ததும் அவள் மேலேயே போட்டுவிட்டால் தப்பி ஓடமுடியாதென்றான். இதனல் சிறுமியைப் பிடித்துக்கொள்ளாமலேயே தூரத்திலிருந்து அவளைப்புயமுறுத்தி ஹிம்ஸிக்கலாயிற்று. (பஞ்சாபி பிசாசின் அங்கம் புள்ளி அடையாளங்கள். அது சொன்னதுபோலவே மந்திரவாதியும் சொன்னான்) பிறகு அது மைதானத்திற்குப் வந்தது. முதலில் பொரியை எறிந்து விட்டால் நல்ல ஸ்வபாவத்துடன் சிறுமி மீது வந்து பேசுவதாகச்சொல்லிற்று. (பிசாசு வெளியே இருப்பதும் பயமுறுத்துவதும் பேசுவதும் சிறுமி தான் உணர்வாள்) விஷ்ணுதாஸ் பொரியை ரகஸ்யமாய் வைக்கும்படி தன்பின்னியிடம் சொன்னர். அவன் வேறுஅறையில் வைக்கப்போவதை பிசாசு சொல்லிற்று. உடனே அவளை கூப்பிட்டுச் சொல்ல அவன் சமயலறையில் வைத்தான். அதையும் பிசாசு சொல்லி "ஆனல் பாதகமில்லை. அசுத்தமான இடத்தில் வைத்த விட்டதால் அதன் மந்திர பலன் போய்விட்டது" என்று சிறுமி மீது வந்தது. அது பேசியதின் சாரம்:—

என் பெயர் களினி. பாண்டார (ஹௌரா சமீபம்) வில் என் தகப்பனர் வீட்டிலிருந்தேன். 25 வருஷங்களுக்கு முன் வியாதியை போக்க ஜிண்டில் விழுந்து இறந்தேன்; என் புருஷன் பெயர் எதிச்சக்ர பண்டரி. என் ஜீவ்சேர்ந்தவர் ஒருவரும் உயிரோடு இல்லை. என்னை தேவதாதேவி என்று நீகிதத்துக்கொண்டதனல் பிசாசு ஆனல் பூஜையை நிறுத்தாதே பூஜை செய்யும் பொழுது செடிக்கு நீராவது தேவியே வருகிறார். நான் விலகிக்கொள்கிறேன். ஆகையால் நீ தேவியை கமஸ்காரம் செய்யவில்லை என்ற கோபம் கொண்டேன். பிசாசுகளில் பல வகுப்புகள் இருக்கின்றன. பல வகுப்புகள்; ஆனால் வேறு வகுப்புகள் குத்திக் கொல்லுகின்றன. அதற்கு பயந்தே உன் வீடு வந்தேன். நான் தப்புவதற்கும் மற்ற பூதங்கள் வாசல் தடுப்பதற்கும் வேண்டிய ஸாதனங்கள் எனக்குத் தெரியும். உன் வீட்டிற்கு வேறு பூதங்கள் ஒன்றும் வராமலிருக்கவும் ரக்ஷணைகள் செய்து விட்டுப் போகிறேன். நீங்கள் கேட்டபடி ரக்ஷைக்கு மூலிகைகளும் கொடுக்கிறேன். அதை தரித்தால் ஒரு தோஷமும் வராது. தனங்கள் என்னல் உண்டாக்க முடியாது. கட்டை முட்டை போன்றவைகள் குறித்து வைத்திருந்தால் அதிகமாகக்கூடும். எனக்குப் பிண்டம் கொடுப்பாரில்லை. மிகவும் துன்பமுற்றிருக்கிறேன். கயையில் பிண்டம் போட்டால் எல்லாரும் கரையேருவது நிண்ணயம். எனக்கு இங்கேயே கங்கையில் பிண்டம் போடு. என்னை உதாரணம் செய். உன் மருமகளை விட்டுப்போய் விடுகிறேன் அவள் சில காலைக்கெல்லாம் சுகமடைவாள்.

இவ்வாறு சமாதானம் செய்து, மந்திரவாதியை அனுப்பிவிட்டு, பிண்டம் போட்டு, மருமகளும் சுகமாயிருக்கிறாள். பிண்டத்திற்கு வேண்டிய நிரவியங்கள் சேகரிக்கும் பொழுது அந்தப் பிசாசு அளவில்லாத சந்தோஷத்தை வெளிக்காட்டிற்று.

இதனல் நாம் அறியக்கூடவை :—

1. தாமர்மண்டத்தால் வரும் கேடு.
2. சொத்தத்தின் பலன்.
3. பூஜைகளின் அவசியமும் தேவைகள் அதை எற்பதும்.
4. எச்சில் முதலிய அனுசாரங்களின்
5. மந்திர சக்தி அதர்க்கம்.
6. ப்ருதிவியினுலுள்ள புலன்கள் பிசாசைப் பார்க்க முடியாமலிருப்பது.
7. ஒருவருடைய எண்ணமுதலானவைகளை அறியக்கூடிய பிசாசின் அபாரசக்தி.
8. தேவதைகள் ஆராதிப்பவரைக் காப்பது.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்
"கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B.A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் சாகாத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

தபால் சிலவு வேறு] [விலை அணு 0—8—0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனர்தன அக்கக்கூடம் லிமிடெட், கும்பகோணம்.

215300

அநவசியமாக ஏன்
அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்தி வை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது.

அமிர்தாஞ்ஜனம்

1-ம் பக்கம் தொடர்ச்சி

ஆஜாயிருந்த பண்டித மாளவ்யா சொல்வதைக் கவனித்தால் ராஜாஜீ கேஸ் விசாரணையன்னியிலேயே தள்ளப்படும். "ரங்கய்யர் மசோதாவையும் பார்த்தேன். தாங்கள் ஜனங்கள் அபிப்பிராயத்திற்கு விடாமலே உடனே பாஸ்செய்ய வேண்டுமென்று சட்ட சபை அங்கத்தினர்களுக்கு எழுதியிருப்பதையும் வாசித்தேன். ஆனால் பம்பாய் தீர்மானத்திற்கு முற்றிலும் விரோதமாக இருப்பதை பற்றி என் மனம் வருத்துகிறது. தங்களிடம் அன்புகொண்டவர்களுக்கும், தங்கள் அபிப்பிராயத்திற்கு மாறுகச் சொல்ல விரும்பாதவர்களுக்கும், அது மனக்கசப்பை உண்டாக்குகிறது. தனிர இப்பொழுது சட்ட சபைகள் அமைக்கப்பட்ட முறையில் மத விஷயங்களிலும் அதிலும் ஆலய நிர்வாக விஷயங்களில் சேர்முகமாகவே மறைமுக மாகவோ அவை தலையிடுவதை பலமாக கண்டிக்கிறேன். மத விஷயங்களில் ஓட்டு எடுப்பது ஒரு விதத்திலும் நியாயமில்லை. அது நிர்ப்பந்தமே தவிர வேறில்லை."

4. மலையாள ஆலயப்பிரவேச சட்டம் கொண்டுவந்த காலத்திலும் மற்ற ஸமயங்களிலும் காந்திஜியும் பிரதம மந்திரியாரும் மற்ற மந்திரியார்களும் "உண்மை பக்தர்களின் அபிப்பிராயத்தை அனுசரித்தே ஆலயப் பிரவேசம் நிர்மானிக்கப்படும்" என்றும் "அந்த அபிப்பிராயத்தை வாக்கெடுத்தே தெரியவேண்டும்" என்றும் கோஷித்திருக்கிறார்கள். சென்ற ஜூன்மாதம் மதுரை ஆலயப்பிரவேச மகாநாட்டிலும் ராஜாஜீயும், கனம் ராஜனும் இதையே தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கத் திடீரென அந்த ஜனநாயக முறையைக் கையிட்டு விரோதமான புதன முறையைக் கையாள காரணமென்ன? வாக்கெடுப்பது சண்டைக்குக் காரணம் ஆகும் என்று சொல்லுகிறார் ராஜாஜீ. அப்படி யைத்துக் கொண்டாலும் அந்த சமயத்தில்தான் ஏதோ சச்சரவு ஏற்படலாம். இப்பொழுது கையாளும் முறை என்றென்றைக்கும் சட்டில் குழப்பம், வகுப்புத்வேஷம், சச்சரவு, ஜனங் மனதில் பீதி, சில சமயங்களில் கல்லெறி, ரத்தச் சிந்தல், இவைகளைக் கிளப்பி வருவது ஒவ்வொருவரும் நிதர்சனமாகப் பார்க்கிறோம். தவிர ஆலயப்பிரவேசத்திற்கு அனுகூலமாய் பெரும்ஜன அபிப்பிராயம் அதிகமாயிருப்பதாக ராஜாஜீ இந்த சட்டத்தின் பூர்வ பீடிகையில் எழுதியிருக்கிறார். இது அவர் சொல்லுக்கும், அனுபவத்திற்கும் கொஞ்சம்கூடப் பொருத்தமில்லையே. சென்ற ஆகஸ்ட்டுமாதம் 3-ம்தேதி சட்ட சபையில் ஆலயப்பிரவேசச் சட்டம் கொண்டுவந்தும், "ஜனங்களின் மனப் பான்மை மாறும் வரை இந்தத் தீருத்தம் செய்யக்கூடாதென்றும் இந்தத் தீருத்தம் ஒருகாலும்டைபெறுக"என்றும் பேசினர். இதற்கும் சட்டத்தின் மேலே கண்ட பூர்வ பீடிகைக்கும் எப்படிப் பொருந்துமென்று தெரியவில்லை.

தவிர ஆகஸ்டு 3உ மகாயிலேயே மதராஸ் காங்கிரஸ் கட்டடத்தில் கூடின கூட்டத்தில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி "வழக்கமாகக் கோவில்களுக்குப் போகும் பக்தர்களின் அபிப்பிராயமே ஆலயப்பிரவேச விஷயத்தில் முடிவான காரியம். சட்டசபை மெஜாரிடி மாத்திரம் வைத்து இதை சாதிக்கக் கூடாது" என்று தெளிவாக சொல்ல கனம் ராஜாஜீ அந்தக் கூட்டத்திலேயே தனக்கும் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கும் இந்த விஷயத்தில் யாதொரு அபிப்பிராயபேதமில்லையென்பதை ஜனங்கள் அறிவார்களென்று தான் நம்புவதாகச் சொன்னர். மேலும் ஆகஸ்டு 21உ தஞ்சாவூர் கூட்டத்தில் கனம் ராஜாஜி "ஆலயப்பிரவேசத்திற்கு முன் குருக்கள், பக்தர்கள் இவர்களின் அனுமதி வேண்டும். பலாத்காரமாகவோ, நிருட்டுத்தனமாகவோ ஆலயப்பிரவேசம் செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டிவரும்" என்றார். ஆகஸ்டு 27உ முதிர் தாலுகா மகாநாட்டிலும் கனம் ராஜன் அப்படியே சொல்லியிருக்கிறார். இவைகளுக்கெல்லாம் மூணாகப் பெரும்பாலோரின் அபிப்பிராயத்தைக் காலால் உதைக்கலாமா? கோவில்களைக் காக்க முன்வந்திருக்கும் ஸ்ரீ ரத்தினங்களை போலீஸ் குடாவால் அடித்து ஆலயப் பிரவேசத்தை சாதிக்கலாமா? ஜனநாயகமா? சத்தியமா? அஹிம்சையா? பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரின் அடக்கு முறையைத் தவிர்க்கப் பாடுபட்டுவரும் நாம் ஆலயப்பிரவேச விஷயத்தில் அதைக் கையாளலாமா? காங்கிரஸுக்கு கண்மையா? தேசத்திற்கு க்ஷேமமா? கோவில்களைப் பாழடையச் செய்வதைத் தடுக்க என்ன பலன்? ஆகலால் நம் மேதாவிகளும், நீர்க்கதர்களும் வரைத்து அனுஷ்டித்துவந்த மத சுதந்திரத்தை அளித்து, தேசத் தலைவர்களின் எலெக்ஷன் வாக்குறுதிகளை ரகஸ்யத்து சத்தியம் அஹிம்சை இவைகளை அனுஷ்டானத்தில் கைக்கொண்டு முன் காங்கிரஸ் பல தடவைகளில் வாபீஸ் வாங்கின மாதிரி தைரியமாய் இந்த ஆலயப்பிரவேச விஷயத்தை வற்புறுத்தாமலிருப்பது உத்தமம். மதுரை உத்தமம். மதுரை சட்ட நிபுணரும் ஸமஸ்தி சேர்ட் ஜட்ஜுமான ஸ்ரீ வரதாச்சாரியார் சென்ற மாதத்தில் மதராஸ் வக்கீல் சங்கத்தில் சென்னமாதிரி மத விஷயங்களை ஆசார்ய புருஷர்களுக்கே, பண்டித பரிஷத்துகளுக்கோ விட்டு விடுவது உசிதம். இதில் கனம் ராஜாஜியே தலையை வலித்திருக்கிறார். அதிலையானும் முன் பல தடவைகளில் செய்த வாக்குறுதிக்கிணங்க ஜனநாயக ஆட்சிக்குப் பொருந்த உண்மை பக்தர்களின் வாக்கெடுத்து இந்த விஷயத்தைத் தீர்மானிக்கும்படியும் அதுவரை இந்த களேபரத்தை நிறுத்தி வைக்கும்படிக்கும் ஒவ்வொரு உண்மை காங்கிரஸ் மெம்பரும் தகுந்த ஏற்பாடுசெய்ய முன்வரவேண்டும். தேசாபிமானிகளே! உண்மை காங்கிரஸ்வாதிகளே! பிடிவாதத்தை விட்டு மேலே கண்ட விஷயங்களை ஊன்றி கவனியுங்கள். மனசாக்ஷியைப் பறிகொடாதேயுங்கள். சுய தர்மத்தை பொழிக்கும் சுயராஜ்யத்தைத் தடுங்கள். மேனாட்டில் உலகிலரும் சுகலம், ஆக்ரமிப்பு, அழித்தல் போன்ற அசுரத் தன்மையை விடுங்கள். நம் தேசத்தாரின் பெரும்பான்மையோரான ஆஸ்திக ஜனங்களின் கொதிப்பையும் பிதியையும் விலக்கி சாந்தியைக் கொடுங்கள். ஐக்கியபத்தியத்தை நிலைநாட்டுங்கள். மனப்பூர்வம்காகவும் வணக்கமாயும் பிரார்த்திக்கிறேன்".

அன்பேசிவம்!
தர்மமே ஜயிக்கும்! ஸத்தியமே ஜயிக்கும்!!

அத்வைத வபை,
கும்பகோணம்.

அய்யுவய்யர்-லெக்ஷ்மிஅம்மாள் அத்வைத வேதாந்த பாடசாலைக்கு லித்யார்த்திகள் தேவை

கும்பகோணம் அத்வை ஸபை ஆதரவில் நடந்து வரும் அய்யுவய்யர்-லெக்ஷ்மி அம்மாள் அத்வைத வேதாந்த பாடசாலையில் வித்யார்த்தியாக சேர விருப்பமுள்ளவர்கள் வேதாந்த சிரோமணி அல்லாமல் வேறு சிரோமணியாகயிருப்பதுடன் நல்ல வயுத்தி உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். வித்யார்த்தியாக சேவிருப்பமுள்ளவர்கள் யோக்யதை, வயது, இவைகளைக்கண்டு கீழ்கண்ட விவரதாருக்கு 28—9—39-க்குள் மனுச் செய்துக்கொள்ளவேண்டும். செக்ரடரி அவர்கள் அபிப்பிராயப்பட்டால் அவரவர்கள் இலவில் கேரிலும் ஆஜராகவேண்டும்.

ராவ் சாகேப் R. ஸ்வாமிநாதய்யர், B.A., L.T.,
G. V. வெங்கட்டராமய்யர், B.A., B.L.
மானேஜர்கள்.
M. K. வைத்யநாதய்யர், B.A. B.L.,
அட்வகேட், & செக்ரடரி,
எக்ஸ்டென்ஷன்,
கும்பகோணம்.
19—9—39.

Printed by S, Kalyanasundram, at the Sri Janardhana Printing Works, Ltd., Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S, Kalyanasundram.



215301
OFFICE OF THE REGISTRAR OF NEWS PAPERS
29 SEP 1939
531

REGD No.M. 2913. ARYADHARMAM Estd. 1915
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्यायेन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விஷ்தம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஆவு புரட்டாசி-மீ 12உ 1939 ஆவு செப்டம்பர்-மீ உ28 | ஆ-39

ஆலயப்பிரவேசக் கண்டனக் கூட்டங்கள்

மன்னார்குடி.

மன்னார்குடியில் ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி கோவில் கோபுர வாசலில் கருடமண்டபத்தின் அருகில் அவ் ஆர் ஆஸ்திகர்களின் கூட்டமொன்று நடைபெற்றதாக எல்லா ஜாதி வகுப்பையும் சேர்ந்த ஹிந்துக்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

வக்கில் ஸ்ரீமான் ராஜகோபால அய்யங்கார் அவர்கள் தலைமை வஹித்து ஆலயப்பிரவேச அதர்ம பிரசாரத்தைக் கண்டித்துப் பேசினார்.

கும்பகோணத்தைச் சேர்ந்த அக்நி ஹோத்ரம் ஸ்ரீ ராமானுஜதாசாரியர் ஸ்ரீமான் நாட்டு நாராயணராவ், நிண்டிவனம் ஸ்ரீ ஸுக்தசேர சர்மா முதலியவர் காங்கிரஸ் மந்திரிகளின் நிர்வாஹத்தையும், ஆலயப்பிரவேசத்தையும் வெகு பலமாகக் கண்டித்துப் பேசினார்கள். முக்கியமாக டாக்டர் ராஜனின் துஷ்பிரசாரத்தையும், ஸ்ரீரங்கம் ஸ்ரீனிவாஸ ஐயங்காருக்கு தடியடி கொடுக்கப்பட்டதையும் விவரித்துக் கூறிக் கண்டனம் செய்தார்கள்.

வந்தேமாதரத்துடன் கூட்டம் கலைந்தது. மறுநாளும் அதே இடத்தில் மற்றொரு பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான்கள் நாராயணராவ், ஸுக்தசேர சர்மா ஆகியவர்கள் ஆலயப்பிரவேசத்தை எதிர்த்துப் பேசினார்கள்.

(ஒரு நிருபர்.)

உப்பிலியப்பன் கோவிலில் கண்டனம்

திருநாகேஸ்வரத்திற்கு அடுத்துள்ள உப்பிலியப்பன் கோவிலில் பிரம்மோத்ஸவம் நடைபெறுவதை முன்னிட்டு அங்கு வந்துள்ள ஸேவார்த்திகளுடையும் உள்ளூர் ஆஸ்திகர்களுடையும் முயற்சியால் ஒரு கண்டனக்கூட்டம் நடந்தது.

ஸ்ரீமான் திருவேங்கடாசாரியர் தலைமை வஹித்தார்.

காசியைச் சேர்ந்த ஸ்ரீமான் வீரேந்திர நாத அருணு ஹிந்தியில் கம்பீரமான பிரசங்கம் செய்து பல யுக்தி நியாயங்களை நிரூபணம் செய்து ஆலயப்பிரவேசத்தைக் கண்டனம் செய்து மந்திரி ஸபையின் போக்கையும் ஆக்ஷேபித்தார்.

ஸ்ரீமான்கள் நாராயணராவ், சர்மா, ரங்காசாரியார் முதலியவர்கள் பேசிய பிறகு டாக்டர் ராஜனின் பிரசாரத்தையும், ஸ்ரீரங்கம் தடியடியையும் கண்டித்துச் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வந்தேமாதரத்துடன் கூட்டம் அமைதியாகக் கலைந்தது. சில கர்ங்கிரஸ் சிறுவர்கள் கூச்சல் போட ஆரம்பித்ததும், அது அடக்கப்பட்டது.

(ஒரு நிருபர்.)

குடந்தையில் கண்டனம்

கும்பகோணம் சோலையப்ப முதலித்தெரு ஆஸ்திக யுவர்களின் முயற்சியால் மேற்படித் தெருவில் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தலைமை வஹிக்க ஒப்புக்கொண்டிருந்த ஸ்ரீமான் எம். கே. வைத்யநாதய்யர் அவர்கள் வேறு அவஸரகாரிய நிமித்தமாக வர முடியாமல் போகவே ஸ்ரீமான் ரகுநாத சாஸ்திரிகள் (சிரோமணி) தலைமை வஹித்துக் கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துரைத்தார்.

பிறகு பலகோல் பிரம்மஸ்ரீ வித்வான் உமாமஹேச்வர சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருத பாஷையில் வெகு தீவிரமாக ஆலயப்பிரவேச இயக்கத்தைக் கண்டித்துப் பேசினார். ஸ்ரீமான் நடராஜ அய்யரால் அது மொழி பெயர்த்துக் கூறப்பட்டது.

பிறகு ஸ்ரீமான்கள் அக்நி ஹோத்ரம் ராமானுஜதாசாரியர், நாராயணராவ், பி. எஸ். நாகராஜய்யர முதலியவர்கள் பேசினார்கள்.

மதுரையில் நடத்த உத்தேசிக்கப்படும் அஹிம்ஸா யுத்தத்திற்கு தொண்டர்களும் பணமும் கொடுத்து உதவ வேண்டுமென்று உபக்ரியாகர்கள் வற்புறுத்தினார்கள். உடனே தையில் ஆஸ்திக யுவர்கள் ஸங்கம் ஸ்தாபித்து தர்ம பிரசாரத்தில் ஈடுபட வேண்டுமென்றும் சொன்னார்கள்.

தலைவரின் முடிவுரைக்குப் பிறகு ஆஸ்திக யுவர் ஒருவரால் உபசார வார்த்தைகள் கூறப்பட்டு 9 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

(ஒ-நி)

தஞ்சையில் கண்டனம்

செப்டம்பர் 25உ ஞாயிற்றுக் கிழமை மாலை 7 மணிக்கு தஞ்சை விண்ணற்றங்கரை ஸ்ரீ நீலமேகப்பெருமாள் ஸ்வாமி ஸன்னதி வாசலில் ஆஸ்திகர்களின் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஸ்ரீ வேதாந்த தேசிகருடைய திருநக்ஷத்திர உபலக்ஷத்தில் மேற்படி கோவிலில் கூடவேண்டும் முன்னிட்டு வெளியூர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் அங்கு வந்திருந்த ஏராளமான ஸ்திரீ புருஷர்கள் இக்கூட்டத்தில் கூடியிருந்தார்கள்.

தஞ்சை பிரபல அட்வகேட் ஸ்ரீமான் டி. கோதண்டராம அய்யங்கார் அவர்கள் தலைமை வஹித்துச் சரித்திரமாகத் தற்கால நிலைமையைப்பற்றி முகவுரை கூறினார்.

பிறகு ஆர்யதர்மம் ஆசிரியர் கும்பகோணம் பிரம்மஸ்ரீ அக்நிஹோத்ரம் கோபால தேசிகாசாரியர் பேசுகையில், மதுரை ஸம்பவங்கள், ஸ்ரீரங்கம் தடியடி, டாக்டர் ராஜனின் துஷ்பிரசாரம் காங்கிரஸின் அஹிம்கை ஆகியவைகளைப் பற்றி விவரமாக நிரூபணம் செய்து காங்கிரஸ் மந்திரிகளின் யதேச்சாதிகார நிர்வாஹத்தை வெகு அழுத்தமாகக் கண்டித்தார்.

நிண்டிவனம் ஸ்ரீ ஸுக்தசேர சர்மா பேசுகையில் பலவித யுக்தி, நியாய உபமானங்களைக் குறிப்பிட்டு காங்கிரஸ் மந்திரி ஸபைச் செய்கைகளைக் கண்டித்து, ஆஸ்திகர்கள் விடாமுயற்சியுடன் தீவிர பிரசாரம் நடத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ராயம்பேட்டை ஸ்ரீமான் தாதாசாரியார் பேசுகையில், தேவாலயங்கள் எல்லா ஜாதி மத வகுப்பாரின் க்ஷேமத்திற்கு ஏற்பட்டதாகையால் பிராமணர்களாதார் ஆலயப்பிரவேச எதிர்ப்பில் அதிகமாக ஈடுபட்டு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

தலைவர் முடிவுரையில், தர்ம விடா முயற்சியுடன் எதிர்ப்பைக் காட்டி வரவேண்டுமென்றும், தர்மமும், ஸத்யமும் கடைசியில் ஜயம் பெறுவது நிச்சயமென்றும் கூறினார்.

ஆலயப்பிரவேச விஷயத்தைக் கண்டித்தும், வைஸ்ராய் அதமந்தியை வாபீஸ்பெற வேண்டியும், மந்திரிகளின் பிரசாரத்தைக் கண்டித்தும் சில தீர்மானங்கள் தலைவரால்

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீரங்கத்தில் நடந்ததென்ன?

"ஹைகோர்ட் ஜட்ஜை நியமித்து விசாரணை நடத்துக"

மே. த. கவர்னருக்கு வேண்டுகோள்.

திருச்சினாப்பள்ளி அட்வகேட் ஸ்ரீ S. K. சர்மா, பீ. ஏ., பீ. எல்., அடியில் கண்ட கடிதத்தை 14—9—39 சென்னை கவர்னர் மே. த. லார்டு எர்ஸ்கின் பிரபுவுக்கு அனுப்பியுள்ளார் :—

மேன்மை தங்கிய பிரபுவே!

"ஸ்ரீரங்கம் கோவிலில் 9—9—39 மாலை ஸ்ரீரங்கம் வானமாமலை மடத்தில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைத் தங்களது கவனத்துக்குக் கொண்டுவரும்படி என்னை ஸ்ரீரங்வாசிகள் கேட்டுக் கொண்டார்கள்.

அந்தப் பொதுக்கூட்டத்திற்கு 200க்கு மேலான ஸ்திரீகளும், 1000க்கு மேலான புருஷர்களும் விஜயம் செய்திருந்தார்கள்—அவர்கள் அனைவரும் ஸ்ரீரங்கவாசிகளாவர்கள்.

அந்தப் பொதுக்கூட்டத்தில் ஸ்திரீகளும், புருஷர்களும் தாங்கள் கோவில் கண்டதைக் கூறினர்கள். மந்திரி கனம் டாக்டர் ராஜனிடம் தங்களது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டுமென்ற விரும்பி கோவிலுக்கு காலையில் வந்த காத்துக்கொண்டிருந்த பல தேவஸ்தான நிர்வாக அதிகாரி தடுத்து வைத்திருந்தார். பாதகாப்பின்றி, நிராயுதபாணிகளாயுமிருந்த ஸ்திரிகளே போலீஸ்காரர்களும், ஸ்ரீரங்க தேவஸ்தான நிர்வாக அதிகாரியும் லத்தியினால் (தடி) அடித்த விஷயங்களே கோவில் பார்த்த ஸ்திரிகளும் புருஷர்களும் தாங்கள

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஹ புரட்டாசி-மீ 12உ

காந்தியாரின் ஆவேசம்!

ஸ்ரீரங்கத்தில் ஸ்திரீகளின் மீது தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டதிலிருந்து காங்கிரஸின் வேஷம் வெளுத்து விட்டது. இத்தத்தலுகுனிய வேண்டிய நிலைமையை மறைப்பதற்காகக் காங்கிரஸ் கும்பல் கட்டுப்பாடான அஸத்யத்தில் இறங்கி தனது குற்றத்தை நிறைக்கவேண்டியதிலிருந்து வக்கு விட்டது. அஹிம்ஸா மூர்த்தியும், ஸத்யஸ்வரூபியுமாக பறையடிக்கப்பட்டு வரும் காந்திஜியின் அநுக்ரஹத்தையும் இந்த அத்ரமத்திற்கு பெற்று விட்டால் அதன் பிறகு யார் வாய் நிறக்க முடியும்? எல்லோரும் அப்படியே அதை ஆதரிக்க வேண்டியது தானே? ஆகவால் ராஜாஜி வார்தா சென்றவுடன் காந்தியாரிடமிருந்து டாக்டர் ராஜன் கூற்றுக்கு ஆதரவு கொடுக்கும்படி அவரைத்தூண்டினர். அதன்மேல் காந்தியார் தமது பழைய பாட்டுக்களுடன் கூடிய ஆவேசம் நிறைந்த அபத்த அறிக்கை யொன்றை வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த அறிக்கையிலிருந்து, காங்கிரஸின் கேவலமான பயங்கொள்ளித்தனமும் அதற்கு காந்தி மஹான் கண்மூடித்தனமாக தலையாட்டிக்கொண்டிருப்பதுமே வெளியாகிறது. ஸ்ரீரங்கம் ஸம்பவத்தைப்பற்றி டாக்டர் ராஜன் வெளியிட்ட அறிக்கையையே தாம் ஆதரிப்பதாயும் மற்றவர்கள் சொல்லுவதைத் தாம் கம்பமுடியவில்லை யென்றும் காந்திஜி கூறுகிறார். காந்திஜியிடமாவது அவரது கோஷ்டியாரிடமாவது நியாயம் கிடைக்குமென்று ஸனதனிகள் எதிர்பார்த்த வர்களல்ல. ஆயினும் ஒரு பெரிய தலைவராக பாவிக்கபடுபவர் அறிக்கை வெளியிடுமுன் ஸ்ரீரங்கம் உண்மைகளை அறிய என்ன முயற்சி எடுத்துக்கொண்டார்? பிரதிவாதிகளையும், ஸாக்ஷிகளையும் கூட விசாரிக்காமல் தன் மனிதன் சொன்னபடியே ஒருதலைப் பக்ஷமான தீர்ப்பை வெளியிடும் காந்திஜியின் போக்கைக்கண்டு உலகம் நகைக்காதா? காங்கிரஸ் கும்பலானது இத்தகைய பக்ஷபாதம் நிறைந்த தலைவரை வைத்துக் கொண்டு தேச தர்மங்களையும், வியவஸ்தைகளையும், நீதியையும், ஸத்யத்தையும் பாழாக்கி வரும் கொடுமையானது வெகு சீக்கிரத்தில் மறைந்தாலல்லது தேசத்திற்கு க்ஷேமமில்லை.

தீண்டாமை ஒழியாமலில் ஹிந்து மதம் தழைந்து விடு மென்று காந்திஜி சபிக்கிறார். இதுவெகுகாலாய பல்லவியாகும். வேதத்தை அடிப்படையாக்கொண்ட ஹிந்து மதம் உண்டான காலம் முதலே தீண்டாமையும் இருந்து வருகிறது. அதனால் ஹிந்து மதம் அழிந்துவிடவில்லை. ஒருகாலும் அழியப் போதமில்லை. காந்திஜியின் சாபமோ ஸ்வப்னமோ பலிக்கப் போவதில்லை. வேதத்தை பிரமாணமாகக்கொண்டதும், ஜாதி பேதத்தை தர்மமாக ஏற்றுக்கொண்டதுமான ஸனதன ஹிந்து மதத்திற்கும், அவ்யவஸ்தையையும், தன்னிச்சையையும் கொண்ட காந்திஜிகும் என்ன ஸம்பந்தமென்று நாம் கேட்க வேண்டி யிருக்கிறது. அதைப்பற்றி பேசவோ, கவனிக்கொள்ளவோ எவ்விதத்திலும் அவர் அதிகாரியல்ல.

டாக்டர் ராஜனுடைய வார்த்தையை தாம் கம்பமலிருக்க முடியவில்லை யென்று காந்தி சொல்லுகிறார். இதுதான் காங்கிரஸ் எத்தத்தின் போக்கா? ஆயிரக்கணக்கான மைலுக்கப்பால் இருக்கு கொண்டு, தன் மேலுள்ள காங்கிரஸ் அதிகாரவர்க்கம் சொல்லும் பொய் தகவல்களை அப்படியே நம்பி சாதிக்கப்புறப்படுவதுதான் "மஹாத்மா"வின் முறையோ? இவரே ஸ்ரீரங்கத்திற்கு நேரில் வந்து ஏன் விசாரணை செய்யலாகாது? காங்கிரஸில் அஸத்யமும், ஹிம்ஸையும், லஞ்சப்பேயும் வேறு பல அக்மங்களும் நிறைந்திருப்பதாகக்குற்றம் சாட்டி அதன் காரணமாக ராஜகுமெம்பராகக் கூட இல்லாமல் விலகிய காந்திஜி, இப்பொழுது அதன் அதிகாரங்களை மறைத்து ஆதரவு காட்ட ஸங்கோசமின்றி முன் வந்திருப்பதும் மன்றி முன் வந்திருப்பதும் மன்திரிகளின் பாட்டுக்கு ஒத்தூதுவதும் மிக்க விசித்தையானது. "ஸனதனிகள் கேவலமான முறையில் நடத்தி கொள்ளுவதாயும், நிராபராதிகளான ஸ்திரீகள் தங்களுக்கு ஸாதகமாக உபயோகித்துக் கொள்வது வெட்க கரமானது, என்றும் காந்திஜி கூறுகிறார். வெள்ளை அதிகாரி வர்க்கத்தை எதிர்த்து இவர் போராடிய காலத்தில் இவர் மீது ஸர்க்கார் சொல்லிய குற்றங்களையே, இப்போது காந்திஜி மறக்காமல் ஸனதனிகள் மீது சுமத்தமுன் வந்தார் போலும்! தேசத்தில் எத்த கார்யத்திலும் ஸ்திரீகள் பங்கெடுத்துக் கொண்டுமுன்னணியில் வர வேண்டு மென்று காங்கிரஸ், பிரசாரம் செய்கிறது.

ஆனால் ஸ்திரீகள் தங்களது உயிர் ஸ்தானமாக மதிக்கும் மத விஷயத்திற்காக முன் வந்துப் பாடுபடுவது மட்டும் பாவமென்று காந்திஜி நினைக்கிறார்! ஸ்ரீரங்கத்தில் ஒவ்வொரு ஸ்திரீயும் தங்களது ஸொந்த உணர்ச்சியினால் தூண்டப்பட்டு ஒன்று சேர்த்தார்களேயல்லாது, பிறருடைய கட்டுப்பாடான தூண்டுதல்கள் அல்லவென்ற உண்மையை காந்திஜி அறிந்தாரானால் தமது வார்த்தைக்கு அவர் வெட்கப்படவேண்டி வரும். சட்டமறுப்பு காலத்திலும் வேறு ஸமயத்திலும் சூல ஸ்திரீகளைக் கூலி கொடுத்து ஏமாற்றிச் சந்நியில் இழுத்த மானம் இழக்கத் தூண்டியதுபோல் ஸ்ரீரங்கத்தில் ஒன்றும் கடைபெறவில்லையே? ஆலயப் பிரவேசத்தை எதிர்த்த தென்னிந்திய ஸ்திரீகள் பெரிய கிளர்ச்சி ஆரம்பித்து விட்டதை காந்திஜிக்கு மிகுந்த கவலையைக் கொடுத்துவிட்டது. ஆலயப்பிரவேசச் சீர்திருத்தம் பலிக்காமல் மண்ணைக் கவ நேரு மென்று அவர் கிலியடைந்துவிட்டார். ஆகவால் ஸனதன ஸ்திரீகளின் த்யாகத்தை அவர் இழிவுபடுத்திப் பேச வேண்டிய நிலைக்கு வந்துவிட்டாரென்று நினைக்க வேண்டியிருக்கிறது. இல்லையேல் அவர் தனக்கொரு நியாயம் பிறருக்கொரு நியாயம் பேச முன்வந்திருக்கமாட்டார்.

இவ்வாறு காந்தி ஸனதனிகள்மீது பாய்ந்து விட்டுத் தமது சீடர்களுக்குச் சில புத்திமதி கூற முன் வந்திருக்கிறார். "எதிரிகளின் ஆத்திரம் காரணமாகச் சீர்திருத்தக்காரர்கள் பலர் தங்கள் உயிரையும் இழக்க நேரிடலாம்" என்று காந்தி எச்சரிக்கிறார். / இதன் அர்த்தம் என்னவென்று விளங்கவில்லை. எதிரிகளான ஸனதனிகள் ஆலயப்பிரவேசக் கிளர்ச்சிக்காரர்களுடைய உயிருக்குக்கூட ஆபத்து விளைப்பார்களென்று இவர் சொல்லுவதாகத் தெரிகிறது. இந்த அஹிம்ஸா மூர்த்தியின் வாயிலிருந்து இத்தகைய குரூரமான வார்த்தை வெளிவந்திருப்பது அவருடைய பெருமைக்கு பங்கம் உண்டாக்கக் கூடியது. தம் சீடர்கள், பரிசுத்தப், சலியா உழைப்பு, மாசற்ற யோக்யதை, எல்லையற்ற தியாகம், ஆகிய நான்கு குணங்களைக் கொண்டு ஆலயப்பிரவேசத்தைச் சாதிக்க வேண்டுமென்று காந்திஜி விரும்புகிறார்.

மேற்கண்ட நான்கு குணங்களும் காங்கிரஸ் கும்பலில் அடியோடு இல்லை யென்பதை காந்திஜியே பலதடவை பஹிரங்கப்படுத்தியிருக்கிறாரே? இன்னும் அதை அவர் நன்கு அறிய விரும்பினால் தென்னிந்தியாவில் மந்திரிகள் உள்பட நடத்தும் ஆலயப்பிரவேசச் சூழ்ச்சிகளில் மேற்கண்ட குணங்கள் வாஸனைக்காவது இருக்கிறதா வென்று பார்க்கட்டும்.

ஹரிஜன ஸேவா ஸங்கத்தின் பணத்தைக் கொண்டும் அதிகாரபலத்தைக் கொண்டும், நிர்பந்த முறையைக் கொண்டும் நடக்கும் ஆலயப்பிரவேசச் சூழ்ச்சியில், பரிசுத்தத்திற்கோ, மாசற்ற யோக்யதைக்கோ, எல்லையற்ற நியாகத்திற்கோ, நிதானவது ஸம்பந்த மிருக்கிறதா வென்பதை காந்தி அறிந்திருந்தால் காந்திஜி மிகவும் வெட்கித் தலகுனிந்து விடுவார் என்பது நிண்ணம். ஆகையால் அவர் பொய்புரைகளை நம்பி அறிக்கை விடுவதை நிறுத்தி ஒருதடவை தென்னிந்தியாவுக்கு வந்தாரானால் இங்கு நடக்கும் பயங்கரச் சூழ்ச்சிகளை அவர் வெகு ஸுலபமாக அறிந்துகொள்ளச் செய்யமுடியும்.

ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள்

ஸ்ரீ ஜனர்தன அச்சுக்கூடத்திற்கு விஜயம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிச்வாளான ஜகத்குரு ஸ்ரீமத் ஆசார்ய ஸ்வாமிகளவர்கள் செவ்வாய்க்கிழமை மாலை 12 மணிக்கு ஸ்ரீமான் எஸ். மஹாலிங்கய்யரவர்கள் திருஹ நிற்கு எழுந்தருளினர்கள். அங்கு பூர்ண கும்பத்துடன் மரியாதை நடத்தது. தூளி பூஜை முதலிய வைபவங்கள் நடந்தன.

அதன் பிறகு ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ ஜனர்தன அச்சுக்கூடத்தாரின் பிரார்த்தனைக்கிணங்கி அவிடம் எழுந்தருளினர்கள். கார்யாலயம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. அச்சுக்கூடம் மானேஜர் ஸ்ரீ கல்யாணஸுந்தரய்யரால் ஸ்ரீஸ்வாமிகளுக்குப் பூர்ணகும்பம் கொடுக்கப்பட்டு மாலையிட்டு உபசாரம் செய்யப்பட்டது. ஆர்யதர்மம் ஆபீஸ் மானேஜரும் மாலையிட்டு உபசாரம் செய்யப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிகள் அச்சுக்கூடத்தின் ஒவ்வொரு பாகத்திற்கும் எழுந்தருளி ஒவ்வொன்றையும் தவனித்தார்கள். அச்சுக்கூடத்தின் விவரங்களையும் கேட்டறிந்து கொண்டார்கள். அரை மணி நேரத்திற்கு அதிகமாக அங்கு தங்கியிருந்து, அச்சுக்கூட சிப்பந்திகளுக்கு மந்திராக்ஷதை விபூதி பிரஸாதங்கள் வழங்கி அநுக்ரஹித்துவிட்டுத்திருப்பிச்சென்றார்கள். அச்சமயம் ஏராளமான கூட்டம் ஸ்வாமிகளை தரிசிக்கத் தெருவில் கூடியிருந்தது.

கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளின் ஸ்ரீமடத்தின் நிர்வாஹம்.

ஹிந்துப் பத்திரிகையின் கூற்றுக்கு ஆதாரமில்லை.

ஓர் மறுப்பு.

25உ திங்களன்று வெளியான சென்னை ஹிந்துப் பத்திரிகையில் ஸ்ரீ கும்பகோடி மடத்தின் நிர்வாக விஷயமாகச் சில ஆதார மற்ற தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி நாம்தக்கவிடங்களில் விசாரித்ததில் மேற்படி பத்திரிகையில் வெளியானவை முற்றிலும் தவறு என்று மறுக்கப்படுகிறது.

மடத்தின் நிர்வாஹத்தில் மாறுதல் ஏற்படப் போவதாயும், யானை, குதிரை முதலியவை விற்கப்படுமென்றும், பரிஜனங்கள், குறைக்கப்படுவார்களென்றும், பிரசம்மண போஜனம் போன்ற கார்யங்கள் நிறுத்தப்படுமென்றும் அந்தப் பத்திரிகை நிருபர் கூறியிருப்பது அடியோடு ஆதாரமற்ற கதையாகும். ஸ்ரீமடத்தின் பெருளாதார விஷயத்தில் தவறாக செலுத்தி ஏதாவது ஏற்பாடு செய்வதில் யோஜனை நடந்திருக்கலாம். ஆனால், அதில் எவ்வித முடிவும் ஏற்பட்டு விட்டதாகக் கூற ஆதாரமில்லை. மேலும் அது பத்திரிகைகளில் வரக்கூடிய அதிகாரம் பெற்ற செய்தியுமல்ல. ஆகவே அந்த நிருபர் தமக்குக் கிடைத்த தப்புத் தகவல்களை ஸ்ரீமடத்தின் நேரான தகவலும் அதிகாரமும் பெறுமல் பத்திரிகையில் வெளியிட்டது அநுசிதமென்றே எங்கும் பேசப்படுகிறது. இதைப் பற்றி ஸ்ரீமடத்திலிருந்தே மறுப்பு வெளி வருமென்று தெரிகிறது.

இந்த விஷயத்தை வெளியிட்ட நிருபர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும் பிரஸ்தாபமிருப்பதாகத் தெரிகிறது.

ஒ. கி.

கோயில் பணங்களைக் கொள்ளையிட யோஜனை!

சென்னையில் 24உ நடந்த ஔவை ஆச்சமத்தின் வர்ஷாந்திரக் கூட்டத்தில், டாக்டர் ஸுப்பராயன் மனைவியான ராதாபாய் அம்மாள் பேசுகையில், கோவில்களுக்காக வைக்கப்பட்டிருக்கும், தர்ம ஸொத்துக்களிலிருந்து ஸமூஹ ஸேவை செய்துவரும் ஸ்தாபனங்களுக்கு ஸர்க்கார் பண உதவி செய்ய வேண்டுமென்று கேட்டார்.

அங்கு வந்திருந்த கோவில் மந்திரி டாக்டர் ராஜன் பதில் சொல்லுகையில் ராதாபாய் அம்மாள் சொன்னதைத் தாம் ஆதரிப்பதாயும், தமக்கும் அதே அபிப்பிராயந்தானென்றும், பொது ஸ்தாபனங்களுக்கு தேவாலயப் பணங்களைக் கொடுப்பது தெய்வ ஸம்மதமாயிருக்குமென்றும் தமக்கும் அப்படிச் செய்வதில் இஷ்டமென்றும் கூறினர்.

இத்தவழியில் மத ஸ்தாபனச் சட்டம் நிறைவேற்றப்படும் போதும்? கேழ்வி முறையாதன்றோ?

காங்கிரஸில் காந்திஜியின் செல்வாக்கு குறைந்து விட்டது.

(நமது ராஜீய நிருபர்)

காங்கிரஸ் காரியக்கமிட்டி, யுத்த விஷயமாக வெளியிட்டுள்ள யாதாஸ்த்தின் போக்கிலிருந்தும், யுத்த ஸப் கமிட்டி நியமனத்திலிருந்தும், காங்கிரஸில் காந்திஜியின் செல்வாக்குகுறைந்து வரும் விஷயம் தெளிவாகிறது. இவ்விஷயமாக காந்திஜி வெளியிட்ட ஒரு அறிக்கையிலிருந்தும் மேற்படி விஷயம் நன்கு வெளியாகிறது. வைஸ்ராய் காந்திஜியை ஸந்தித்துப்பேசியபிறகு காந்திஜி வெளியிட்ட ஒரு அறிக்கையில், யுத்த விஷயமாக காங்கிரஸுக்கும், தமக்கும் அபிப்பிராய பேதமிருப்பதையும், தம் வார்த்தை காங்கிரஸில் எடுபடாதென்று வைஸ்ராயிடம் தாம் சொல்லிவிட்டதையும் வெளியிட்டிருக்கிறார்.

அதன் பிறகு காரியக்கமிட்டியில் காந்திஜி தமது கக்ஷியைச் சேர்ந்தவர்களை அழைத்து, எவ்வித நிபந்தனையுமின்றியும் பிரிட்டனுடன் இச் சமயம் ஒத்துழைக்கவேண்டுமென்று காந்தி வெளியிட்டிருக்கிறார். பேரம் பேசுவதை அவர் விரும்பவில்லை. மேலும் காங்கிரஸினது அஹிம்ஸைக் கொள்கையைக் கடைபிடித்து நிற்பதால் அந்த வழியிலேயே போகவேண்டுமென்பதும் காந்தியின் வாதமாகும். இந்த இரண்டு அம்சங்களும் காரியக்கமிட்டியில் அடியோடுநிராகரிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவு அதாவது ஹிம்ஸையோ பேரமோபேசமல் ஒத்துழைக்க வேண்டுமென்ற காந்தி கொள்கையை கார்யக்கமிட்டி கவனியாமல் பிரிட்டனுக்கு இறங்கிக்கடிதம்போன்ற தோரணியில் ஓர் யாதாஸ்தை வெளியிட்டிருக்கிறது. இது காந்தியின் தோல்வியல்லவா?

அஹிம்ஸை யென்ற பாட்டும் கார்யக்கமிட்டியில் மதிக்கப்படவில்லை. அதாவது எதிராளி கஷ்டதசையிலிருக்கும் போது அவனிடத்தக்குவது ஹிம்ஸையாகுமென்றும், ஆதலால் இச்சமயம் பிரட்டனை நெருக்கக் கூடாதென்றும் காந்திவாதத்தப் பார்த்தார். இதுவும் எடுபடாமல் போகவே, காந்திஜி தமது கொள்கையை கார்யக்கமிட்டி நிராகரித்து விட்டதென்றும், தமக்கு அங்கு செல்வாக்கு இல்லை யென்றும் அறிக்கை விடுத்தார்.

மேலும் அஹிம்ஸையை அதிகம் மதிக்காத நேருஜியின் அபிப்பிராயத்திற்குக் கார்யக்கமிட்டி இணங்கியிருப்பதுடன், அவர்கொள்கையில் கம்பிக்கையிருப்பதற்கு அறிகுறியாக நேருஜி தலைமையிலேயே யுத்த ஸப் கமிட்டியையும் நியமித்து விட்டது.

ஆகவே இது வரையில் அஹிம்ஸை என்ற அத்தமற்ற கொள்கை இருந்து வந்தது இப்போது நிட்சயாகக் காங்கிரஸ் மாற்றி விட்டது. காங்கிரஸ் இவ்விஷயத்தில் இது வரையில் இரண்டுங் கெட்டானாக இருந்தது போக இப்போது நிடமான முடிவுக்கு வந்து விட்டது.

ஆகவே காந்தியத்திற்குச் செல்வாக்குக் குறைந்து விட்டதால் காந்தியக் கக்ஷியாரின் நிலைமை லக்கடம் தான். அவர்கள் காந்திஜியின் தலைமையில் காங்கிரஸிலிருந்து விலகி விட வேண்டியதே நியாயமாயிருக்கும். பாபு ராஜேந்திர பிரஸாத் விலகிப் போவதாக வெளிவந்த வதந்தி மறுக்கப்பட்ட போதிலும் அதில் ஸத்யம் இருக்கிறது.

கமது பிரதமமந்திரி ஸ்ரீ. ஆர். நிலைமை என்ன? காந்தியம் தோற்ற பிறகு இவர் காங்கிரஸிலிருப்பாரா? சட்டைப்பையில் இருந்த ராஜிநாமாக் கடிதத்திற்கு மீண்டும் உயிர் ஏற்படுமா? நிறைமறைவில் நடக்கும் விசேஷங்கள் வெடித்து வெளி வந்தால் நாம் பல அதிசயங்களைக் காணமுடியும்? ஆயினும் கனம் ஆசாரியர் அவசரப்பட்டு ராஜாநாமா செய்து விடுவாரென்று நாம் நினைத்து ஏமாந்து போகக் கூடாது. காந்திஜியின் செல்வாக்குக் குறைவதை எவ்விதம் ஸமாதானப் படுத்திக் கொள்ளுவாரோ பார்ப்போம்.

ராஜிநாமா உண்மையல்ல

இரு ஸனதனிகளின் மறுப்பு

ஸ்ரீரங்கம் ஆலய தர்ம ரக்ஷண ஸபையிலிருந்து, நிவானபதுார் ஸ்ரீ எஸ். ராகவய்யங்கார் அவர்களும், மாஜி போலீஸ் டெப்டி ஸுப்ரண்டெண்ட் ஸ்ரீ நாராயண அய்யங்கார் அவர்களும் ராஜிநாமா செய்து விட்டதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தவறு தென்றும், தாங்கள் ராஜிநாமா செய்யவில்லை யென்று மேடி இரு கனவான்களும் அறிவிப்பதாக தினமணியின் நிருபர் 25உ யன்று வெளியிட்டிருக்கிறார்.

WEEK BY WEEK.

"Mr. Gandhi is a christianised Hindu attempting a religious synthesis of Europe and India."

Mr. Spratt in 'Gandhism—an Analysis.'

* * * *

"Just as Hitler is the disturber of world peace, Mr. Gandhi and his party have been disturbers of India's peace, whatever be the difference in their respective intentions."

'Indian Thinker' 15—9—1939.

தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்

"பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்த்ரத்தின் ஆதாரகண்டங்களையும் சங்ரஹமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரீத்யேகம்) கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,
தர்மசாஸ்த்ரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை;
&
ஸ்ரீ ஜனர்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
கும்பகோணம்.

ஸ்ரீ ஜனர்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.
எல்லாவிதமான அச்சு, பைண்டிங், ரூலிங் முதலிய வேலைகளும் சீக்கிரமாகவும் நயமான சார்ஜும் செய்து கொடுக்கப்படும்.
தமிழ், இங்லீஷ், நாகரி, கிரந்த, எல்லா அக்ஷரங்களிலும் புஸ்தகங்கள் அச்சுப் போடுவதில் விசேஷமாய்ப் பலராலும் ஆதரிக்கப்பெற்றது. வேண்டிய விவரங்களைத் தெரிவிக்க லித்தமாய் இருக்கிறோம்.
மானேஜர்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி).

ரம் செய்தவர்தார்கள். அவர்கள் செய்த வந்த உபசாரங்களைக் கவனித்ததில் நாம் நம் ஸ்வஸ்தானமான காட்டுக்குத் திரும்பிப் போகவேண்டுமென்று சொன்னால் அவர்கள் ம்மதிக்கவே மாட்டார்களென்ற தோன் நிற்று. அதனால் அவர்களுக்கு தெரியா மலே கம்பிகள் முதித்துக்கொண்டு ரகளிய மாகவே வந்துவிட்டேன்".

இப்புலி வாஸ்தலமாகவே தனக்கு மனுஷி யர்கள் மரியாதையுடன் வரவேற்புக்கொடுத் துத் ஸத்காரம் செய்ததாக நினைத்திருக்க லாம். அதேஸ்திதியில் இருக்கப்பட்ட ஒரு மனிதனும் இவ்விதமே நினைக்க ஆரம்பித்து விட்டால் தன் விவேகத்தையிழந்தானென்று சொல்கிறதா? வேண்டுமென்று வாஸ்தவ ஸ்திதியை மறைக்கிறானென்று சொல்கிறதா? ஹிந்துவாகப் பிறந்து, பிராஹ்மணனுகப் பிறந்து, ஸ்ரீ வைஷ்ணவனுகப் பிறந்து ஆல யங்களே பழாக்கவும், ஜாதிக்கட்டுப்படுதலே உலக்கவும், தீண்டப்பட்டிருக்கிற ஒரு அபூர்வ ஜந்துவைப் பார்க்க ஜனங்கள் கூடுவது ஸுற ஜமே. அவ் வேடிக்கை பார்க்கவந்தவர் களெல்லாம் தன்னே வழித்தவர்திருக்கிறார் களென்று நினைத்தால், அவருடைய மௌட் டியமும், வெளியிட்டால் உண்மையில் பற் றற்ற பிடிவாதமுமே வெளியாகிறது. மந்திரி கனம் டாக்டர் ராஜன் திருநெல்வேலி முனிஸிபல் கம்பவுண்டில் செய்ததுபோல் அவரும் மற்ற மந்திரிகளும் ஜெயிலேவது போய் பிரசாரம் செய்யாமலிருப்பார்களா! பொய் வெகுகாள் செல்லாதென்பதை உணர் வார்களா? அதிகாரபலம் அவர்களிடமிருக் கலாம். அதை எல்லாம் தாம்புபோல் பறக்கடிக்க வல்லமையுள்ள மேல் அதிகாரி யான பகவானே நாம் நம்பி வேலே செய்வோ ம்!

ஸ்ரீரங்கம் கோவில் நிர்வாகஸ்தர்கள் மீது வழக்கு

ஸ்ரீரங்கம் மிழ் சித்தி விநியிலிருக்கும் திரு செங்கசாமி அய்யங்கார் மனைவியான ஸ்ரீசெங்கம்மாள் சென்ற 12—9—39 ந்தேதி டவுன் சப் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் இ. பி. கோ. 147, 323-வது செக்ஷன்படி ஸ்ரீரங்கம் கோவில் நிர்வாகஸ்தரான எஸ். ராஜ கோபால் காயுடு, (நிர்வாக ஆபிசர்) திரு. நடராஜ அய்யர் (பேஷ்கார்) ஸ்ரீரெங்கம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஆகியவர்கள் மீது வழக்குத், தொடர்ந்திருக்கிறார். அதன் சுருக்கம் பின் வருமாறு:—

"நானும் மற்றும் சில ஸ்திரீகளும் மந்திரி டாக்டர் ராஜன் ஸ்ரீரங்கநாதர் கோவிலுக்கு சுவாமி தரிசனத்திற்காக வரும்போது ஹரி ஜனங்களே கோவிலுக்குள் அனுமதிக்கக் கூடாதென்று கமஸ்கரித்து பிரார்த்தித்தக் கொண்டேனென்றும், எக்ஸிகியூடிவ் ஆபிச ரும், பேஷ்காரும், போலீஸ் சப் இன்ஸ்பெக் டரும், போலீசாரும் தடியுடன் கூட்டத்தில் புகுந்து தங்களே அடித்தார்களென்றும், அதன் காரணமாக ஸ்ரீரெங்கம்மாளுக்குப் பல மான அடிபட்டு மூர்சையாகி கீழே விழுந்து விட்டாள் என்றும், தங்களே தடிகளால் அடிப்பதை மந்திரி 6 அடி தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தானென்றும், தான் அடி பட்ட உடன் மூர்ச்சையாகி கீழே விழுந்த விட்டதாகவும், எதிரிகளும் போலீஸ்காரர் களும் ஒன்றுசேர்ந்து தங்களே தன்படுத்த வேண்டுமென்று கெட்ட எண்ணங்கொண்டு அனுதாவக யிருந்தவர்களே அடித்தக் காயப் படுத்தினர்களென்றும் குறிப்பிடப்பட்டிருந் தது." (ஹெரல்ட்)

உண்மை விளக்கம்.

ஸ்ரீ ப. ரே. திருமலே அய்யங்கார், சென்னை.

உலகெங்களும் சிறப்பித்தக் காணப் படாத வருணச்சிரம தருமநெறி பாரதகண் டத்தில்தான் உள்ளது. இஃதொன்றே இதன் உயமையில்லாச்சிறப்பு. இங்குப் பிறந்தாலல்லது முக்தியில்லே என்ற சான் றோர் அபிமதம்.

வேதமும் அதன் உபப்பிரமணங்களான இதிஹாஸ புராண ஆகமநூல்களே நமக்குத் தஞ்சம். அவற்றிற் கூறியுள்ள விதிவிலக்கு களே நன்கறிந்து, விதிவன விடுத்து வேண்டு வன கொள்ளல் வேண்டும். மஹரிஷிகளும் ஆசாரியர்களும் அவற்றின் கருத்தை நமக் குத் தெளிவுபடக் கூறித் தங்களுர் அனுட் டான முறையிற் கைக்கொண்டு நடத்தவந் தே தற்போது பெரியோர்கள் முறையாக நடத்திவருகிறார்கள். "மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" "அறமே மறவேல்" "செய்யாதன செயேல்" "நன் மைக்கடைப்பிடி"; "தொன்மை மறவேல்"; "நிருமாலுக்கடிமை செய்"; "தெய்வம் இக ழேல்" முதலியன ருக்நிர்ங்கள்.

ஆலயங்கள் ஆகமத்தால் வந்தவை. எனவே, அங்குள்ள அர்ச்சையின் ஸாந்நித் யம் கண்ணுற் காணமுடியாதாயர் கேவலம் பிரமாணங்களேக் கொண்டே அறியிடவே ண்டியவை. அதிகாரிகள் அதிகாரிகளாகக் கொண்டாடப்படும். இக்காலத்தில் கடப்ப தென்னம் வித்தையே. நீண்டாதார் ஆல யப் பிரவேசத்தால் குடிமுழுகிப் போய்விடு கிறதா என்று கேட்போர் எவ்வளவு தைரிய முள்ளவர்களாக இருக்கவேண்டும். "அஞ்ச வது அஞ்சாமை பேதமை; அஞ்சுவது அஞ் சல் அறிவார் தொழில்" என்ற திருவள்ளுவ நாயனரின் திருக்குறளே இவர்கள் கேட்ட தண்டா? பூணுலே அறுத்து எறிந்தவரும், ஆலயங்களெல்லாம் "விபசார விடுதிகள்" என்று வாய் கூசாது கூறியவரும், தீண்டா மைக் கொடுமை யிருப்பதற்குன் தூகப்பம் உண்டானது என்று பஹிரங்கமாகப் பேசி வரும், சாதாகிகளெல்லாம் பெய்யே பேசு பவர்கள் என்று முழங்குபவரும், வாலிபர் களெல்லாம் விதவைகளேயே விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று உபதேசித் தவரும், தன்னடையே ச்சகவிருத்த பசுக் கன்றைசுட்டுக்கொல்ல உத்திரவளித்தவரும், ஆச்ரமம் என்ற பெயரால் மரியாதையுடைய வன் எண்ணுதற்குங் கூசத்தக்க காரியாதிகள் கடைபெற, அவற்றிற்காகப் பன்முறை உபவாசம் என்ற பெயரால் கடித் தவரும், இப்பொழுது இம் மாகாணத்தில் கடைபெற்றவரும் காடகத்துக்கு ஆதி புருஷர், அவரது சம்பந்தியும், பிரதம பீடரும், தானே கலிகால ரிஷி, மது என்று பறைசாற்றுபவரும், உண்மையில் சாணக்கி யரும் இதனே நன்கு கடைபெறும்படி செய் பவர். இவர் எதற்காக அரசியற் பதவி ஏற்றாரோ அ கு முடிந்து விட்ட து. இனி இவர் எதாவது ஒரு வியாஜத்தை காட்டிநிடீரென தன் பதவியைராஜீ ராமாச் செய்தாலும் செய்வர். ஆலயப்பிரவேச த்தாகச் செல்லப்படும் பிரமுகர்கள் உண் மையில் அதனேஆசரித்தே போந்தார்கள் என்பது உற்று நோக்குவாருக்குப் புலனு காமற் போகாது சத்தியத்தை உனாவேண் டும். உணர்ந்தபடி தைரியமாய்ப் பேச வேண்டும். இதுவே நீதன் செய்கை.

ஸ்ரீமான் கடேசய்யர் போன்றவர்களே உண்மைச் சனாதனிகள். அவரொருவரா லேயே தான் அதர்மம் ஒழிந்து தர்மம் நிலை நிற்கப் போகிறது.

ஆஸ்திக மகாஜனங்களே! இனியும் உறங்காது தீவிர மாக உண்மையை உலகுக்கு விளக்கினுல் வெற்றி நம்முடையதே.

"எங்கள் கோவிலில் அனுமதிக்க முடியாது"

மைலாப்பூர் ஸ்ரீ கபாலீச்வரர் கோவில் தர்மகர்த்தாக்களின் முடிவு.

"அவர்கள் முயற்சி படுதோல்வி அடையும்"

27—9—39 மாலே ஸ்ரீ கபாலீச்வரர் கோவிலுக்கெதிரில் காங்கிரஸ்காரர்கள் ஒரு கூட்டம் போட்டனர்.

ஆஸ்திகர்களான மைலாப்பூர் வாசிகள் ஒருவரும் அந்த கூட்டத்திற்குப் போக வில்லே. நாஸ்திகர்களும் தெய்வபக்தி இல் லாதவர்களும் இந்த மதத்தில் பற்றில்லாத வர்களும் அங்கு கூடியிருந்தனர்.

உடனே கோவிலதிகாரிகள் எச்சரிக்கை பரயிருந்த ஏற்பாடுகளேச் செய்திருந்தனர். மேல் கோபுர வாசல்களே மூடிவிட்டனர். கீழ கோபுர வாசலில் வேண்டிய பந்தோ பஸ்து செய்து, பெரிய கதவைத் தாளிட்டு, சிறிய கதவை மாத்திரம் திறந்துவைத்து, ஒவ்வொருவராகக் கவனித்து உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தனர்.

கோவிலதிகாரிகள் பஞ்சமர்களே கோவி லுக்குள் அனுமதிக்க முடியாதென்று ஸ்தி மாகவே இருக்கின்றனர்.

இந்தக் கூட்டமே காங்கிரஸ்காரர்களின் ஆக்ரஹத்திற்கு ஆரம்பமென்று கூறப்படு கிறது. ஆஸ்திக மகாஜனங்களிடம் இந்தச் சம்பவம் பயபக்தியை உண்டாக்கியிருக்கிறது. மைலாப்பூரில் ஆலயப் பிரவேசத்திற்கு முயற்சிசெய்தல் காங்கிரஸ் தோல்வி அடையவேண்டி வரும் எனச் சொல்லப்பட் டது.

(ஒ. நி)

திருநெல்வேலி

"ஸ்திரீகள் கூட்டம்"

19—9—39 மாலே திருநெல்வேலி சாஸ்தா கோவிலில் ஒரு சாதன ஸ்திரீகளின் பொதுக்கூட்டம் கடைபெற்றது. ஸ்ரீ சசி தாகத்த ராஜயோகி தலேமைவகித்தார். மதுரை ஸ்ரீமதி புவனேஸ்வரியம்மாள் ஆல யப்பிரவேச சட்டத்தை எதிர்த்தும் இது சம்பந்தமாக சென்னே காங்கிரஸ் மந்திரி சபையாரை வெகுவாகத் தாக்கியும் பேசி, நமது மதத்திற்கே ஆபத்தேற்பட்டு விட்ட தென்றும், மதத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் விழித்துக்கொண்டு சரியான முறையில் பாதுகாப்பு வேலேயைத் தவக்கவேண்டு மென்றும் பேசினர். மே. த. ராஜப் பிரதிநிதி சென்னே ஆலயப்பிரவேசச் சட்டத்திற்கு அனுமதி கொடுத்ததைக்கேட்டு வருத்த வதாகவும், யுத்தமுடியும் வரையாவது மேற் படி சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரு வதினின்றும் நிறுத்தவேண்டுமென்று கேட் டுக்கொண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

(ஒ. நி).

ஆஸ்திகர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

(ஸ்ரீ. S. வைத்தீச்வரய்யர், கல்கத்தா)

நாம் செய்யவேண்டிய தென்னவென்ற இரண்டு மாதங்களுக்கு முன் "ஆர்யதர்மத் தில்" எழுதியிருக்தேன். ஸ்ரீ மடாதி பதிகள் இந்த விஷயமாய் லோக க்ஷேமார்த் தத்தை ஆ ஜ ஞ ா பி க்க வேண்டுமென்ற பிரார்த்தித்திருந்தேன். ஆஸ்திகர்களுக்கு ஊக்கமிருந்த அதைத் தெரிவித்த ஸ்ரீ மகா ஸன்னிதானத்தில்முறையிட்டாலன்றி அவர் களாக வலிய வூட்டுவாரென்று எதிர்பார்க் கக்கூடாது. எனவே இவ்வேண்டுகோள்.

ஆஸ்திகர்கள் யாரென்ற "ஆரியதர்ம"த் தில் மூன்றெருவர் விளக்கியிருக்கார். கடவுள் எங்கும் இருப்பதால் ஆராதித்த இடத்தில் விசேஷமாயிருக்கிறர் என்ற பூர்ண நம்பிக்கை உள்ளவர் ஆஸ்திகர், ஆராதிக்கும் இடங்களாவன:— ஆலயங்கள் பூஜாக்ருஹம், அக்நி, ஆசார்யிலமுள்ள பிரம்மணர், பசு, இவைகள்.

கடமை செலுத்தும் போலீஸ்காரனேத் தடித்தால் அரசனே வாயபாகிறர். அதா வது ராஜ ஸாந்நித்யம் போலீஸ் அதிகாரி யிடமிருக்கிறது. ஆனல் அதிகார உடை யில்லாதவனேத் தீண்டினுல் ராஜ ஸாந்நித்யம் இல்லே. இதேமாதிரிதான் ஆசார அதிகாரத் தால் ஆலயம் முதலியவைகளில் இருக்கும் ஸாந்நித்யமும் அந்த ஆசார ஸ்தானத்தால் ஏற்படும் அழிவும்.

ஆசாரமென்னும் அதிகாரம் பிராம்மணர் களிடம் குறைவே உலகங்களில் தெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆலயாதி பூஜைகளே கவனிப்பதில்லே. அக்நியையும் பசுக்களையும் ஆராதிப்பதில்லே. ஹவ்ய காவ்யங்களில் முக்யமான தேக ஆத்ம சுத்தம், மந்த்ர சுத்தம், த்ரவ்ய சுத்தம் பூர்ணமாயிருப்ப தில்லே. அப்பொழுது ஸாந்நித்யமாகும் தேவதைகள் சபிக்கிறர்கள். பூதப்ரேத, யக்ஷ ராக்ஷஸர்கள் ஹவ்யகவ்யங்களே அப கரிக்கிறர்கள். இந்த லோகத்திலும் தேவ லோகத்தில் தர்பிக்கும் ஏற்படுகிறது. அசு ரர்கள் ஸாதக்களே வருத்துகிறர்கள்.

ஒரு மிலேச்ச அதிகாரி நேருக்கு நேர் வந் தால் எவ்வளவே மரியாதைகள் செய்கி றேரும். எப்படும் வ்யாபித்துள்ள கடவுளே ஆராதிக்கும் கர்மானுஷ்டானங்களில் நிரி கரணங்களும் அபசாரங்களேச் செய்கின்றன.

மனம் வீவு வாங்கிக்கொண்டு ஊர் சுற்ற நேறது. வாக்கு உளறுவதோடு வண்டிக மிருப்பதில்லே. காயத்தால் செய்யும் பி கணிய கமஸ்காரங்களில் பாவனேகூட இருப் பதில்லே. ஆஸ்திகராயிருப்பவர், தாம் ஆவ ஹனம் செய்யும் கடவுளுக்கு சித்தையோடு எவ்வளவுமடங்கும் அதிக மரியாதைகள் வேண்டியதவசியம்.

பிராம்மணர்கள் தர்ம க்ஷகர்களாகவும் அக்நிகளாகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறர் கள். அப்படிப்பட்டவர்களே ஸ்ரீகிருஷ்ண னே பூஜிக்கிறர். கலியிலும் ஸாதக்கனரிருக் கும் அக்நிகளே யார் தீண்டவல்லார். அவ யை மிருந்தால் ஸ்ரீ கிருஷ்ணனே முன்னும் பின்னும் மேலும் கீழும் உள்ளும் புறமும் இருந்து காப்பாற்றுவார். இது நிண்ணம்.

பசுவை ஸேவித்து பஞ்சகவ்யத்தைக் கொண்டு ப்ரம்ம கூர்ச்சம் செய்யுங்கள். இந்த ப்ராயச்சித்தம் முடியாதவர் விதிப்படி ஒரு க்ருச்சரம் செய்யுங்கள். பகவுள்ளவர் இல்லாதவருக்கு ஹோமத்ராவ்யம் கொடுத்தது வுங்கள்.

காயத்ரீ, ஸாவித்ரீ, ஸாஸ்வதியே ப்ரம்மம். உத்தமகாலத்தவறுமல் ஸந்த்யோபாஸனே செய்து நிதம் ஸஹஸ்ர காயத்ரீ ஜபம் செய் யுங்கள்.

அக்நிகர்ப்பன் (உண்டாவது) ஸுப்ரமண் யம். இருவேளேயும் தவறுது ஔபாஸனம் செய்யுங்கள்.

ப்ரம்ம யஜ்ஞம் தேவரிஷி பித்ருதர்ப்பணம் செய்யுங்கள். தேவரிஷி பித்ருக்கள் நம்மை எப்பொழுதும் சூழ்ந்துகொண்டேயிருக்கிறர் கள்.

இவைகளின் நிர்விக்ன ஸித்திக்காக ஸ்ரீ ஸ்ரீ ஆசார்யாளேச் சரணமடையுங்கள்.

குருதாஸன்.

திப்பிரஜபுரம்

ஸ்ரீ பிரும்ம வித்யா ஸபா:— 23—9—39 ஸ்நிவாரத்தன்று ஷெ ஸபாவின் ஆதாவில் நிமித்தி, ப்ரும்மஸ்ரீ வெங்கட்டரும சாஸ்திரிக ளவர்களுடைய நிவ்யபல் யாஸம் நடந்தது

கலிகாலத்தினுடைய ப்ரபாவத்தினுல், தன்தன் அபிப்பிராயத்துக்கே ஒருவுத்கர்ஷத் தை ஏற்படுத்திக்கொண்டு சித்தத்திற்கு கைர் மல்யம் வந்து விட்டதாக கோஷம் செய்து கொண்டு மைக்கு பாக்கியாகயிருந்தவரும் கடைமுறையில் இருந்து கொண்டிருக்கிற திஞ்சித் ஸாதன தர்மத்தின் அவலம்பனத் தை வேரோடு பிடுங்க சீர்திருத்தக்காரர்களா கிய நம்மவர்களே யத்னிக்கையில் ஆஸ்திகர் களாகிய நாம் செய்யவேண்டிய தென்ன? சாஸ்திரங்களில் விதித்திருக்கிற ஸ்வதர்மக் களே ஸரிவர செய்து அபுஷ்டித்தாகவேண் டும் என்பது ஒன்று. கர்ம நிபாகத்தினுல் பாபம் லபிக்குமென்பது ஒன்று. கர்ம ஸன் பாஸந்தான் மோக்ஷ ஹேதுகமென்பது ஒன்று; இவைகளேப்போல பலபல ஸ்தோக ங்களுக்கு ஆஸ்பதமாயும், ஸரியான ஆசாரி யனன்றி அதனுடைய வாஸ்தவமான சூக்ஷ் மார்த்தங்களே லகுவில் தானுகவே தெரிந்து கொள்ள முடியக்கூடாதது, சீர்திருத்தக் காரர்கள் ஆதாரமாகக்கொண்ட ஸ்ரீமத் பக வத்கீதையின் பரம லக்ஷியக்தான் என்ன? என்பதைப்பற்றியும்; பகவானிடத்திலிருந்து பிரிக்தவர்களான ஜீவர்கள் ஸ்வயேச்சையாய் மோக்ஷத்தினுல் தன்தன் இந்திரியங்களுக்கு வசப்பட்டு தக்கந்தகாரத்தில் விழுந்தவுடன் கருணைக்கடலான ஈச்வரனே உதவிக்கு அழை க்கிருக்தால், தன்னுல் இயற்றப்பட்ட ஆஸ் ரூபமான நிகம வசஸ்ஸுகளே (வேத சாஸ்திரங்களே) பின் பற்றி அதன்படி நடப் பார்களேயானுல் கஷ்டத்திலிருந்து காப்பாற் றவும் தன்னுடன் மறபடியும் சேர்த்துக் கொள்ளவும் கார்த்துக் கொண்டிருக்கிறர் என்றும், ஆகையால் நாம் வைதிக மார்க்கத் தில் கர்மாநுஷ்டானம், ஆசாரம், சீலம் இது களே கடைபிடித்து கொஞ்சம் கொஞ்சமாக விருத்தி செய்து கொண்டு பகவத்கிருபைக்கு பாத்திரர்களாக வேண்டுமென்றும் அதற்கு ஹாலாஸ்யமகாத்மியத்திலுள்ள பிஷ்டாம்பர ருடைய ஆக்யானத்தை உதாஹரித்துச்சொ ல்லி முடித்தார்.

(ஒ. நி.)

காஞ்சீபுரம்

"ஸ்திரீகள் கூட்டம்"

15—9—39 மாலே சின்ன காஞ்சீபுரம் ஸ்ரீவரதராஜஸ்வாமி ஸ்ரீமடத்தில் ஒரு ப்ரும்மாண் டமான ஸ்திரீகள் கூட்டம் கூடியது.

ஸ்ரீருடம்மாள் ஹரிஜன ஆலயப்பிரவேசத் தைக் கண்டித்துப்பேசினர்.

காஞ்சீபுரம் ஸ்திரீகள் அனைவரும் சத்யாக் ரஹம் செய்யத் தயாராயிருப்பதாகத் தலேவர் கூட்டத்தில் கூறினர். ஒ. நி.

நிரூட பசுபந்த யாகம்.

கும்பகோணம்.

சென்ற வாரம் சனிக்கிழமை கும்பகோணம் அத்வைத ஸபையின் பிர தான பண்டிதரான சாஸ்திரத்னகரம், நிரு வாஹ ஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள், கருப்பூர் அக்நிஹோத்ரத்தில், ஜகத்குரு ஸ்ரீமத் ஆசார்ய ஸ்வாமிகளவர்களின் நியமனத்தையும் அதக் ரஹத்தையும் முன்னிட்டு, "ஆநுனகேதக" சயனத்துடன் கூடிய "நிரூடபசுபந்த" யா கத்தை கன்கு நடத்திஞர்கள். ஸ்ரீ. டி. எல். கப்பய்யர் போன்ற பல ஆஸ்திகர்கள் இதற் காக உபகரித்ததுடன் கேரில் வந்திருந்தும் ஸ்ரீ பக்ஞேச்வரனுடைய ப்ரஸாதத்தைப் பெற்றார்கள். அனேக ஸ்திரிகளும், ஆஹி தாக்னிகளும், ப்ரஸித்த வித்வான்களும் பலர் வந்திருந்தனர். ஸ்ரீ கல்லிச்சேரி ராமகாத ஸ்திரிகள் அத்வர்யுவாக இருந்து ப்ரயோ கங்களே கன்கு நடத்தி வைத்தார்.

யாகம் பூர்த்தியான பிறகு வித்வான் பல கோல், ஸ்ரீ உமாமஹேச்வர சாஸ்திரிகள் வை திக மத சிறப்பைப்பற்றியும் அதற்கு தற் போது ஏற்பட்டுள்ள கஷ்டங்களேப்பற்றியும் ஸம்ஸ்கிருத பாஷையில் ப்ரஸங்கம் செய்து இத்தகைய யாகங்களே அதிகம் பரவச் செய்து வைதிகதர்மத்தை ஸம்ரக்ஷிக்க வேண் டுமென்று ப்ரார்த்தித்தார். ஸ்ரோமணி ஸ்ரீ பால்கிருஷ்ணனுல் ஸம்ஸ்கிருதத்தில் வந்த னுபசாரம் கூறப்பட்டது.

யாகத்தை முன்னிட்டு ப்ராம்மண ஸந்தர் பணமும் விசேஷமாக நடத்தப்பட்டது.

மற்றொரு யாகம்.

அதேஇடத்தில் ஞாயிற்றுக்கிழமை நினம் பருத்தியூர் ஸ்ரீ கோதண்டராம தீக்ஷிதர் குமார் ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதரால், நாஜி கேத சயனத்துடன்கூடிய நிரூட பசுபந்தம் ஸ்ரீ ஆசார்ய்வாமிகளநுக்ரஹத்தால் நடத் தப்பட்டது. ஒரு நிருபர்

தண்டாங்கூரையில் யாகம்.

நடை நிரும்தத்தில் செவ்வாய்க்கிழமை யன்று, ஸகலக்தையாஜிகளான ஸ்ரீ அப்பாத் துரை தீக்ஷிதரவர்கள் ஸ்ரீ ஆசார்யாள் அநுக் ரஹத்தையும், அக்ரஹாரவாஸிகளான ஆஸ்தி கர்களுடைய உதவியையும் கொண்டு 37வது பசுபந்த யாகத்தை வெகு நிறப்பக நடத் தினர்கள். அனேக ஸ்திரிகள் வந்திருந் தனர். கேங்காலியும் ஸ்ரீ அனந்தராம தீக்ஷி தர் உபன்யாஸம் செய்தார்.

ஸ்ரீரங்கம்

'தோண்டர்படைத் திரட்டுக'

17—9—39 காலே ஸ்ரீரங்கம் அம்மா மண் டபம் ஸ்ரீ சங்கர மண்டபத்தில் ஒரு மா பெருங்கூட்டம் கூடிற்று. ஏகமனாய் ஸர தங்கள் விஜயம் செய்திருந்தார்கள். மதுரை ஸ்ரீ N. கடேசய்யர் தலேமை வகித்தார்.

ராவ் ஸாகேப் ஸ்ரீ கடேசய்யர் தமது ப்ர ஸங்கத்தில் 'ஸ்ரீரங்கம் ஸ்திரீகளின் சத்யாக் ரஹத்தைப் பாராட்டினர். பின்னர் ஸடெய் கும் வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் கிளே கள ஸ்தாபிக்க வேண்டுமென்றும், தொண் டர் படை நிட்டி சத்யாக்ரஹம் நடத்த வேண்டுமென்றும் கூறினர்.

மதுரை ஸ்ரீமான்கள் ப்ரசாதாவ், அட்வ கேட், விஸ்வநாத அய்யர், வில்லிபுத்தூர் ஸ்ரீ முத்துஸ்வாமிதேவர், சென்னே ஸ்ரீ தலைசாமி சாஸ்திரிகள் கூட்டத்தில் பேசி னர்கள். (ஒ.க)

21530

539

ஸ்ரீரங்கத்தில் நிர்வாக அதிகாரியின் எதேச்சாதிகாரம்

அதிகாரிகளுக்கு ஸ்ரீனதனிகளின் அவஹரத் தந்தி

ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரெங்கனதர் பெரிய கோவி லுக்குள் சில தினங்களாக ஆலயப்பிரவேச விஷயமாக பெண்களும், ஆண்களும் ஏராள மாக கூடிக்கொண்டு கின்றனர். 21-9-39க் தேதி இவர்கள் ரெங்கவிலாச மண்டபத்தி லும், கருட மண்டபத்திலும் கூட்டம் ஏராள மாக கூடவே, கோவில் நிர்வாக அதி காரியான ராஜகோபால் நாயுடு கூட்டம் போடக்கூடாதென்று சொல்லி எச்சரிக்கை போர்டுகளும் போட்டார்.

மேலாசல், வெள்ளை கோபுரவாசல் கதவு பொதுஜன பாதுகாப்பை முன்னிட்டு 22-ந் தேதி இலமணி நேரம் சாத்தப்பட்டு போர்டு தொங்கவிடப்பட்டிருந்தது. இது விஷய மாக சனாதனிகள் 22-ந் தேதி மாலை சுகா தார மந்திரி, எந்தஸ்தாபன போர்டு பிரசி டெண்டு இன்னும் சிலருக்கும் தந்திகள் கொடுத்தார்கள். மாலை கதவு திறக்கப்பட் டது. இவு 8-30 மணிக்கு போலிஸ் சர்கிள் இன்ஸ்பெக்டர் சப் இன்ஸ்பெக்டர் மற்றும் சில கான்ஸ்டேபிள்களுடன் கோவிலுக்குள் வந்தனர்.

கூட்டத்தினர் முன்பாக நிர்வாக அதி காரி பொதுஜனங்களான சனாதனிகளை பார்த்து ஆலயப்பிரவேச விஷயமாக வீண் ஆர்ப்பாட்டம் வெட்டி கூட்டம் போட வேண்டாம் என்றும், மறைமுகமாய் ஆலய பிரவேசம் நடைபெறுதென்றும், சட்டபூர்வ மாக பஹிரங்கமாய் நடக்குமென்றும், கவலைப் படாமல் எல்லோரும் போகலாம் என்றும் கூறினர். 23—9—39ந் தேதி காலையில் சில சனாதனிகள் கோவிலில் கூடிக்கொண்டிருந் தனர். இது விஷயமாக கோவில் அதிகாரி கள் போலீஸ் மூலம் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போவதாகவும் தெரி கிறது.

23—9—39ந் தேதியன்று சனாதனிக ளெல்லாம் ஆலயப்பிரவேச எதிர்ப்பு தினம் கொண்டாடினர்கள். (ஒ.நி)

ஸ்ரீ வேதாந்த தேசிக பக்த சபா

மதுரையில் எட்டாவது மகாநாடு

"ஆலயப்பிரவேசச் சட்டம் கண்டிக்கப்பட்டது"

ஸ்ரீ வேதாந்த தேசிக பக்த சபாவின் எட் டாவது மகாநாடு மதுரையில் 23—9—39 நடைபெற்றது.

மகாநாட்டுக்கு வாளமாக பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள்.

சென்னை அட்வகேட் ஸ்ரீ ஆர். கேசவ அய்யங்கார் தலைமை வகித்தார்.

தலைவர்களின் பிரசங்கத்தக்குப் பின் கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறை வேறின:—

"மாட்சிமை தங்கிய மன்னர் பிரானிடம் மரியாதை செலுத்தி, யுத்த நெருக்கடியில் பிரிட்டிஷாருக்கு இக்கத் தேசத்திலிருப்ப வர்கள் யாவரும் மதவித்தில் விஸ்வாசத் துடன் உதவிசெய்ய வேண்டுமென்று இம் மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

வழக்கப் பழக்கத்தக்கும், தர்ம சாஸ்திரங் களுக்கும் விரோதமாய் சென்னை சட்டசபை யினால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டி ருக்கிற ஆலயப்பிரவேசப் பாதுகாப்புச் சட் டத்தை இம் மகாநாடு வன்மையாகக் கண் டிக்கிறது.

சட்டசபையில் பிரதம மந்திரி ஆலயப்பி வேச விஷயமாய் கொடுத்திருக்கும் பல பாகங்களில் போலிஸ் உதவியைக் கொண்டு ஆலயப்பிரவேசம் செய்துவிடுவோம் என்று கூறி வருவது சரியான முறை அல்லவென் றும், இதனால் காட்டில் பரபரப்பு ஏற்பட்டு உள்நாட்டுக் கலகம் ஏற்படும் போலிருப்ப தாகவும் இம் மகாநாடு கருதுகிறது.

பொதுமக்கள் விருப்பப்படி சென்னை காங் கிரஸ் மந்திரி சபை கடந்த வரவில்லை என்று அபிப்பிராயப்படுகிறது."

"மே. த. வைசிராயும், மே. த. சென்னை கவர்னரும் உடனே ஒரு அவஸரச் சட்ட மூலம், சென்னை ஆலயப்பிரவேசச் சட்டத் தைத் தற்காலிகமாய் நிறுத்த வேண்டும். மே. த. விக்டோரியா மகாராணியார் பிரகட னத்தில் கூறியபடி மத விஷயங்களில் தலை யிடாமை வகித்து, மத தர்மபரிபாலன போர்ட் இலாகாவை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொள்ள வேண்டுமென்று இம் மகாநாடு அபிப்பிராயப்படுகிறது" என்ற தீர்மானத்தை ஸ்ரீ. கே. ராம ஐயங்கார் பிரே ரேபித்தார். ஸ்ரீ N. நடேசய்யர் ஆமோதித் தார். ஸ்ரீ T. C. ஸ்ரீனிவாசய்யங்கார் பி.ஏ., பி.எல்., எம். எல். வி., ஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ் வாமி ஐயர் ஆதரித்தார்கள்.

தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறி யது.

ஸ்ரீரங்கம்

"உண்ணாவிரதம் அனுஷ்டிக்க"

ஸ்ரீரங்கம் தெற்கு சித்திரவீதியில் 20-9-39 7-30 மணிக்கு வர்ணாஸ்ரம சுயராஜ்ய சங்கத் தின் சார்பாக ஆலயப்பிரவேச எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீரங்கம் சங்கர குருகுலம் ஸ்ரீ டி. கே. பாலசுப்பிரமணியய் யர் தலைமை வகித்தார். தலீவர் ஹரிஜனங் கள் ஸ்ரீரங்கம் கோவிலுக்குள் இன்னும் சில தினங்களில் போகப்போவதாக வதந்தியாக இருப்பதாகவும், இது விஷயமாக போலீஸ் டிப்டி சூப்ரண்டை போய் தான் கண்டு வர் சிதாகவும், ஹரிஜனங்கள் கோவிலுக்கு போ கும் காலத்தில் எல்லோரும் அமைதியாக கோவில் வாசலில் பாதுகாக்க வேண்டுமென் றும், கோவிலுக்குள் நிமசென போகமுடி யாது என்றும், போகவேண்டுமானால் நிர் வாக அதிகாரி மாகாண கவர்ன்மெண்டுக்கு எழுதி உத்திரவில் போகவேண்டு மென்று வரவேண்டு மென்றும், உத்திரவின் பேரில் கார்த்திகை கோட்டை வாசலில் அமர்த்தப் பட்ட ஹரிஜனங்கள் போக்கூடாதென போர்டு எடுபட்டால்தான் போகமுடியுமென் றும், நாம் வாசலில் இருந்து தடுக்க உரிமை இருப்பதாகவும், ஆலயப்பிரவேசம் செய்த பிறகு வழக்கு தொடர்வது சாத்தியமல்ல என்றும் பிரதி கூறி நாளது சனிக்கிழமை தினம் இதில் ஈடுபட்ட அனைவரும் உண்ணா விரதம் இருக்க வேண்டுமென்றும் பேசினர்.

பிறகு ஸ்ரீமான்களான எஸ். கே. முத்து சாமி தேவர், திருச்சி ஜனப்சுல்தான் பக் தாதி நீண்டநேரம் வரை பேசினர்கள். ஆல யப்பிரவேசத்திற்கு சாதக பாதகமாக இருப்ப வர்கள் கைதூக்க வேண்டுமென கேட்க கோவிலுக்குள் ஹரிஜனங்கள் போகக்கூடா தென சுமார் 800 பேர்கள் வரை கைதூக்க கரகோஷம் செய்தனர். கூட்டத்தில் குழுமி இருந்தவர்கள் சனிக்கிழமை தினங்களில் உண்ணாவிரதம் இருப்போம் என உறுதியா கக் கூறினர்கள். இரவு 10 மணிக்கு கூட்டம் முடிவுபெற்றது. (ஒ. நி)

மதுரையில் ஆஸ்திகர்கள் கூட்டம்

ஸ்ரீரங்கம் தடியடி கண்டனம்

மதுரையில் 11-9-39 மாலை ஒரு பிரம் மாண்டமான கூட்டம் நடந்தது. அட்வ கேட் ஸ்ரீ R. கணபதி அய்யர் ஸ்ரீரங்கம் தடி யடியைக் கண்டித்து ஒரு பிரசங்கம் செய் தார். (ஒ.நி.)

மற்றொரு கூட்டம்

மதுரை ஸனாதன தர்ம வித்யாசாலையில் 17—8—39 மாலை 7-மணிக்குக் கூடிற்று.

பெங்களூர் ஸ்ரீகிருஷ்ணபகவதர் தலைமை வகித்தார்.

ஸ்ரீவில்லிபுத்தூர சாஸ்திரிகள், அட்வகேட் ஸ்ரீ R. கணபதி அய்யர் கூட்டத்தில் காங் கிரஸ் மந்திரி சபையைக் கண்டித்துப் பேசி னார்கள். (ஒ.நி.)

பஞ்ச நிவாரணை அறிவிப்பு.

நமது பாரததேச மக்கள் அனைவரும் இப்பிரசுரத்தை முக்கியமாய் கவனிக்கவும்.

நமது தேசத்தில் மழையில்லாக் கொடுமையாலும் தொழிலில்லாக் கஷ்டத்தினாலும் நமது தாய்நாட்டு ஏழை மக்கள் பசியால் வாடித் தவிக்கின்றனர். அதன்பொருட்டு எங்கள் கம்பெனியில் **15—9—39**உ முதல் **15—11—39**உ வரை **T. T.** வண்டியிக் மார்க் பெருங்காய விற்பனையிலிருந்து பவுண்டு 1-க்கு **6** பைசா வீதம் பஞ்ச நிவாரணைக்கு அகில இந்திய காங்கிரஸ் சங்கத்தின் தமிழ்நாட்டு கிளையிடம் பஞ்சம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களுக்கு உதவிசெய்ய அளிக்கப்படும்.

ஆகையால் நமது தேச மக்கள் அனைவரும் எங்கள் ஸைண்டிக் **T. T.** மார்க் பெருங்காயத்தையே அதிகமாக வாங்கி நமது தேச ஏழை மக்களுக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,

ரஷிட் ஜம்ஷெட் சன்ஸ் அண்டு கோ.

Printed by S, Kalyanasundram, at the Sri Janardhana Printing Works, Ltd., Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S, Kalyanasundram.